بسم الله الرحمن الرحيم

# شَرْحُ السُّنَّةِ

لِلْإِمَامِ أَبِي مُحَمَّدٍ الْحَسَنِ بْنِ عَلِيِّ بْنِ خَلَفٍ الْبَرْبَهَارِيِّ رحمه الله

இமாம் பர்பஹாரி رحمه الله அவர்களின்

# ஷர்ஹுஸ் ஸுன்னா

மொழிபெயர்ப்பு | படிப்பினைகள் | அடிக்குறிப்பு

உமர் ஷரீஃப் அப்துஸ் ஸலாம்

DARUL HUDA

## இமாம் பர்பஹாரி رحمه الله அவர்களின்

# கொள்கை விளக்கம்

இஸ்லாமிய மார்க்கத்தில் நேர்வழி பெற்ற கூட்டம் எது, உண்மையான அஹ்லுஸ் ஸுன்னா யார், அவர்களின் கொள்கைகள் என்ன, இஸ்லாமிய கொள்கைகளை எப்படி கையாள்வது, ஆதாரங்களை எப்படி அணுகுவது, உண்மையானவர்களை அடையாளம் காணுவது எப்படி, வழிகேடர்களை பிரித்தறிவது எப்படி? இன்னும் இவைப் போன்ற பல அடிப்படையான கேள்விகளுக்கு சரியான பதில்களையும் தெளிவான வழிகாட்டல்களையும் தன்னுள் கொண்ட கொள்கை விளக்க மூல ஆதார நூல்!

மொழிபெயர்ப்பு | படிப்பினைகள் | அடிக்குறிப்பு

**உமர் ஷரீஃப் அப்துஸ் ஸலாம்**

DARUL HUDA

# ABOUT THIS BOOK


| | | |
|---|---|---|
| NAME OF THE BOOK | : | **ஷர்ஹுஸ் ஸுன்னா** |
| NAME IN ENGLISH | : | **SHARHUS SUNNAH** |
| NAME IN ARABIC | : | شَرْحُ السُّنَّةِ |
| SUBJECT | : | BELIEF OF AHLUS SUNNAH |
| TRANSLATOR | : | **OMAR SHERIFF ABDUS SALAM** |
| LANGUAGE | : | TAMIL |
| DATE OF PUBLICATION | : | JUNE 2021 |
| EDITION | : | 1st |
| TOTAL PAGES | : | 400 |
| COPIES | : | 2000 |
| REF. NO. | : | DH-TML 2070 |
| PRINTED BY | : | PATEL GRAPHICS, CHENNAI - 6. |

**HADIYAH: RS. 160/-**

Published by :

**DARUL HUDA**

QUALITY ISLAMIC BOOK PUBLISHERS

# 211 (102), 1st Floor, Linghi Street, Mannady, Chennai 600001.

Phone : +91 44 25247866, | darulhuda.chennai@gmail.com

Mobile : +91 98401 74121 | www.darulhuda.net

# பொருளடக்கம்


பதிப்புரை | பக்கம் 15

தாருல் ஹுதா அறிமுகம் | பக்கம் 17

ஆசிரியர் அறிமுகம் | பக்கம் 21

நூல் தொடக்கம் | பக்கம் 24

பாடம் 1 | பக்கம் 30

இஸ்லாமும் ஸுன்னாவும் வேறல்ல!

பாடம் 2 | பக்கம் 35

நேர்வழியையும் வழிகேட்டையும் பிரித்தறிவது எப்படி?

பாடம் 3 | பக்கம் 38

பித்அத் ஓர் ஆபத்தானது!

பாடம் 4 | பக்கம் 41

நபித்தோழர்களை அளவுகோலாக எடு!

பாடம் 5 | பக்கம் 43

வழிகேடர்களின் வகை!

பாடம் 6 | பக்கம் 47

பின்பற்றுவதும் நம்புவதும்தான் இஸ்லாம்!

பாடம் 7 | பக்கம் 50

ஸுன்னாவிற்கு முழுமையாக கட்டுப்பட வேண்டும்!

பாடம் 8 | பக்கம் 53

மார்க்கத்தில் கிரேக்க தத்துவம் பேசுவது கூடாது!

பாடம் 9 | பக்கம் 56

அல்லாஹ்வின் விஷயத்தில் தர்க்கம் செய்வது கூடாது!

பாடம் 10 | பக்கம் 59

நாம் அவசியம் நம்பிக்கை கொள்ள வேண்டியவை பற்றிய விளக்கம்!

பாடம் 11 | பக்கம் 65

நபித்தோழர்கள் விஷயத்தில் நாம் பின்பற்ற வேண்டிய வழிகாட்டல்கள்!

பாடம் 12 | பக்கம் 71

ஆட்சியாளர் விஷயத்தில் நாம் பின்பற்ற வேண்டிய வழிகாட்டல்கள்!

பாடம் 13 | பக்கம் 74

காரிஜிய்யாக்கள் விஷயத்தில் நாம் பின்பற்ற வேண்டிய வழிகாட்டல்கள்!

பாடம் 14 | பக்கம் 76

அல்லாஹ்விற்கு மாறுசெய்வது ஒருபோதும் கூடாது!

பாடம் 15 | பக்கம் 77

முஸ்லிம்கள் விஷயத்தில் நாம் பின்பற்ற வேண்டிய வழிகாட்டல்கள்!

பாடம் 16 | பக்கம் 79

பாவத்திற்கு பரிகாரம் உண்டு!

பாடம் 17 | பக்கம் 81

அறியப்பட்ட சட்டங்களை மறுக்காதே!

பாடம் 18 | பக்கம் 83

நயவஞ்சகம்!

பாடம் 19 | பக்கம் 85

உலக வாழ்க்கையின் நோக்கம்

பாடம் 20 | பக்கம் 87
மார்க்க சட்டங்களுக்கு முன் எல்லோரும் சமமே!

பாடம் 21 | பக்கம் 91
ஒருவரை மார்க்கத்தை விட்டு வெளியேற்றுவது

பாடம் 22 | பக்கம் 93
உனக்கு புரியவில்லை என்றாலும் மார்க்கத்தை நம்பு!

பாடம் 23 | பக்கம் 96
உலகில் யாரும் அல்லாஹ்வை பார்க்க முடியாது!

பாடம் 24 | பக்கம் 98
படைப்புகளைப் பற்றி சிந்தனை செய், அல்லாஹ்வைப் பற்றி அல்ல!

பாடம் 25 | பக்கம் 100
எல்லோரும் அல்லாஹ்வின் கட்டளைக்கு கட்டுப்பட்டவர்களே!

பாடம் 26 | பக்கம் 102
அல்லாஹ் அனைத்தையும் அறிந்தவன்!

பாடம் 27 | பக்கம் 106
மார்க்க சட்டங்களை மதித்து நட!

பாடம் 28 | பக்கம் 108
கொலைக் குற்றம் செய்யாதே!

பாடம் 29 | பக்கம் 110
நிரந்தரமும் அழிவும் அல்லாஹ்வின் நாட்டப்படிதான்!

பாடம் 30 | பக்கம் 112
அல்லாஹ் மகா நீதவான்!

பாடம் 31 | பக்கம் 114

கலப்படமில்லா அமல்கள்தான் அல்லாஹ்விடம் கபூல் ஆகும்!

பாடம் 32 | பக்கம் 115

விதியை உறுதியாக நம்பு! அது ஈமானின் உயர் பண்புகளில் உள்ளதாகும்!

பாடம் 33 | பக்கம் 118

ஜனாஸா தொழுகையின் சிறந்த முறை!

பாடம் 34 | பக்கம் 120

அல்லாஹ்வின் மறைவான ஏற்பாடு!

பாடம் 35 | பக்கம் 122

நபியவர்களின் அற்புதம்!

பாடம் 36 | பக்கம் 124

அல்லாஹ்வின் மகத்தான அருள்!

பாடம் 37 | பக்கம் 126

புதிய கருத்துக்களை நம்பாதே!

பாடம் 38 | பக்கம் 127

அல்லாஹ்விற்குதான் முழு அதிகாரம் உண்டு! அவனை யாரும் கேள்வி கேட்க முடியாது!

பாடம் 39 | பக்கம் 130

நபிமொழியை விமர்சிப்பவன் நாத்திக சிந்தனையுடையவன்!

பாடம் 40 | பக்கம் 133

குர்ஆனும் ஸுன்னாவும் ஒன்றில் ஒன்று இணைந்தது!

பாடம் 41 | பக்கம் 135

விதியில் விவாதம் செய்யாதே!

பாடம் 42 | பக்கம் 137

இஸ்ராவும் மிஃராஜும் உண்மையே!

பாடம் 43 | பக்கம் 139

உயிர்களின் தங்குமிடம்

பாடம் 44 | பக்கம் 141

மண்ணறையின் விசாரணை உண்மையே!

பாடம் 45 | பக்கம் 143

எல்லாம் விதியின்படிதான் நடக்கும்!

பாடம் 46 | பக்கம் 145

அல்லாஹ், மூஸா நபியிடம் பேசினான்!

பாடம் 47 | பக்கம் 148

அறிவு அல்லாஹ்வின் படைப்பே! அவன் நாடியவருக்கு நாடிய அளவு அறிவை வழங்குகின்றான்.

பாடம் 48 | பக்கம் 151

அல்லாஹ்வின் செயல்கள் அனைத்தும் நீதமே! அவன் சிலரை சிலரை விட மேன்மைப் படுத்துகின்றான்.

பாடம் 49 | பக்கம் 157

எல்லோருக்கும் நன்மையை நாடு!

பாடம் 50 | பக்கம் 159

அல்லாஹ் அனைத்தையும் அறிந்தவன், மகா ஞானவான்!

பாடம் 51 | பக்கம் 162

சுபசெய்திகள் மூன்று வகை!

பாடம் 52 | பக்கம் 166

அல்லாஹ்வை பார்க்கும் நற்பாக்கியம்!

பாடம் 53 | பக்கம் 170

கிரேக்க தத்துவமும் அதன் பாதிப்புகளும்!

பாடம் 54 | பக்கம் 174

மார்க்கம் கூறியவாறு நரக தண்டனை நிச்சயம் உண்டு!

பாடம் 55 | பக்கம் 176

ஸலாஹ் -தொழுகை ஒரு நிர்ணயிக்கப்பட்ட கட்டாயக் கடமையாகும்!

பாடம் 56 | பக்கம் 179

ஸகாத் நிர்ணயிக்கப்பட்ட கட்டாயக் கடமையாகும்!

பாடம் 57 | பக்கம் 182

ஷஹாதா - சாட்சியம் இன்றி இஸ்லாம் இல்லை!

பாடம் 58 | பக்கம் 183

அல்லாஹ்வின் கூற்றுகளில், மார்க்க சட்டங்களில் மாற்றம் இல்லை!

பாடம் 59 | பக்கம் 186

வர்த்தகம் அனைத்தும் ஆகுமானதே, தடுக்கப்பட்டவை கலந்தாலே தவிர!

பாடம் 60 | பக்கம் 188

ஒவ்வொருவரும் முடிவை குறித்து அச்சத்துடன் இருக்க வேண்டும்!

பாடம் 61 | பக்கம் 190

பாவியாக இருப்பினும் நிராசை அடைய தேவை இல்லை!

பாடம் 62 | பக்கம் 196

நபியவர்களின் முன்னறிவிப்புகள் அனைத்தும் உண்மையே!

பாடம் 63 | பக்கம் 202

தற்காலிக திருமணம் ஆகுமானதல்ல!

பாடம் 64 | பக்கம் 205

சிறப்பிற்குரிய நல்லோரை அறிந்து கொள்!

பாடம் 65 | பக்கம் 210

வழிகேடுகள் எப்படி தோன்றின, நேர்வழியின் அஸ்திவாரம் எது என்பது பற்றி விளக்கம்!

பாடம் 66 | பக்கம் 222

வழிகேடுகளில் விழுபவர்கள் யார்?

பாடம் 67 | பக்கம் 224

அல்லாஹ்வின் நேர்வழிக்கு தகுதியானவர்கள் யார்?

பாடம் 68 | பக்கம் 228

ஆலிம்கள் யார்?

பாடம் 69 | பக்கம் 231

மார்க்க விஷயத்தில் கவனம் தேவை!

பாடம் 70 | பக்கம் 234

உண்மையை அறிவது எப்படி?

பாடம் 71 | பக்கம் 236

நபியவர்களின் ஸுன்னாவும் நபித்தோழர்களின் வழிமுறையும் நமக்கு மார்க்கத்தில் போதுமானதாகும்.

பாடம் 72 | பக்கம் 243

பித்அத்துகளை விட்டு விலகி இருங்கள்!

பாடம் 73 | பக்கம் 246

மார்க்கத்தில் இருப்பதை குறைப்பதும் இல்லாததை கூட்டுவதும் வழிகேடே!

பாடம் 74 | பக்கம் 248

உண்மையை உனக்கு கூறி இருக்கின்றேன்! ஏற்றுக்கொள்!

பாடம் 75 | பக்கம் 254

குழப்பக் காலத்தில் நீ என்ன செய்ய வேண்டும்!

பாடம் 76 | பக்கம் 258

நீ செய்ய வேண்டியதும் செய்யக் கூடாததும்!

பாடம் 77 | பக்கம் 262

நபித்தோழர்கள் விஷயத்தில் கவனமாக இரு!

பாடம் 78 | பக்கம் 266

பிறர் செல்வத்தை ஆசைப்படாதே!

பாடம் 79 | பக்கம் 268

பிறரிடம் யாசிக்காதே! சுயமாக உழைத்து வாழ்!

பாடம் 80 | பக்கம் 270

தொழுகை விஷயத்தில் வழிகாட்டுதல்

பாடம் 81 | பக்கம் 272

நபியவர்களின் இரு மந்திரிகளை மறந்து விடாதே!

பாடம் 82 | பக்கம் 275

மார்க்கத்தின் கடமைகளை, ஒழுக்கங்களை

விட்டுவிடாதே!

பாடம் 83 | பக்கம் 278

குர்ஆனும் ஸுன்னாவும் கூறுகின்ற கல்விதான் உண்மையாகும்.

பாடம் 84 | பக்கம் 282

மார்க்க சட்டங்களை மீறாதே!

பாடம் 85 | பக்கம் 283

நபியின் தோழர்களைக் குறை கூறாதே!

பாடம் 86 | பக்கம் 285

ஹதீஸ்களை ஏற்காதவரின் நிலை!

பாடம் 87 | பக்கம் 290

மன்னர் மார்க்கத்தை மீறினாலும் நீ அவரை எதிர்க்காதே! நல்ல காரியத்தில் அவரை விட்டும் பிரியாதே!

பாடம் 88 | பக்கம் 293

அன்னையர்களை மதி!

பாடம் 89 | பக்கம் 295

ஜமாஅத் தொழுகையை விட்டுவிடாதே!

பாடம் 90 | பக்கம் 297

ஹலாலும் ஹராமும் தெளிவானதாகும்

பாடம் 91 | பக்கம் 301

யார், எந்த கொள்கையை சேர்ந்தவர் என்பதை அவரின் வாதத்திலிருந்தே அறிந்துகொள்!

பாடம் 92 | பக்கம் 307

ஒருவர் யாரை நேசிக்கிறார் என்பதை கவனித்து அவரின் கொள்கையை முடிவு செய்!

பாடம் 93 | பக்கம் 309

இதுவும் நாத்திகம்தான்!

பாடம் 94 | பக்கம் 316

அனாச்சாரங்கள் அனைத்தும் அழிவில் தள்ளுபவையே!

பாடம் 95 | பக்கம் 318

தோழர்களை விமர்சிப்பவரின் உள் நோக்கம்!

பாடம் 96 | பக்கம் 321

பித்அத்வாதியை விட்டு முற்றிலும் விலகி இரு!

பாடம் 97 | பக்கம் 329

மிக கவனமாக இரு!

பாடம் 98 | பக்கம் 332

யாரிடம் கல்வி கற்க போகிறாய் என்று நன்கு சோதித்து அறிந்து கொள்!

பாடம் 99 | பக்கம் 334

கிரேக்க தத்துவமும் தர்க்கமும் விவாதமும் வழிகேடுகளைத்தான் உருவாக்கும்!

பாடம் 100 | பக்கம் 340

ஹதீஸ்களை பற்றிப்பிடி!

பாடம் 101 | பக்கம் 348

ஹதீஸுக்கு எதிராக பேசுவோரிடம் பதில் பேசாதே!

பாடம் 102 | பக்கம் 351

தர்க்கம் செய்வதையும் விவாதம் செய்வதையும் விட்டுவிடு!

பாடம் 103 | பக்கம் 357

வழிகேடுகளை விட்டு விலக இப்னுல் முபாரக்கின் அறிவுரையை ஏற்றுக் கொள்!

பாடம் 104 | பக்கம் 360

இறந்தவர் யாரும் இவ்வுலகிற்கு மீண்டும் வரமாட்டார்!

பாடம் 105 | பக்கம் 362

பிந்திய இரண்டு கலீஃபாக்கள் விஷயத்தில் நேரான வழியை தேர்ந்தெடு!

பாடம் 106 | பக்கம் 364

நபி ﷺ சொர்க்கவாசி என்று வாழ்த்தியவர்களை நீயும் அப்படியே வாழ்த்து!

பாடம் 107 | பக்கம் 366

இந்நூலின் முக்கியத்துவத்தை உணர்வாயாக!

பாடம் 108 | பக்கம் 368

பாவத்தில் யாருக்கும் துணை நிற்காதே!

பாடம் 109 | பக்கம் 371

தவ்பா செய்வதை நிறுத்தி விடாதே!

பாடம் 110 | பக்கம் 379

நபியின் நன்மாராயத்தை ஏற்காதவர் சந்தேகவாதியாவார்!

பாடம் 111 | பக்கம் 382

ஸுன்னாவையும் ஸஹாபாக்களையும் மதித்து நட!

பாடம் 112 | பக்கம் 385

பித்அத்வாதியுடன் சகவாசம் வைக்காதே!

--------------------

# பதிப்புரை

அல்லாஹ்விற்கே எல்லாப் புகழும் நன்றிகளும்! ஸலவாத்தும் ஸலாமும் நமது தூதர் மீதும் மற்றும் அவர்களின் குடும்பத்தார்கள், தோழர்கள் மீதும் நிலவட்டும்.

அஹ்லுஸ் ஸுன்னாவின் தெளிவான, சரியான கொள்கை நூல்களை தமிழ் உலகிற்கு கொண்டு வரவேண்டும் என்ற நோக்கத்தில் இந்நூலை வெளியிடுகின்றோம்.

இன்னும் பெரிய இமாம்களின் நூல்களை தொடர்ந்து வெளியிட அல்லாஹ் உதவி செய்வானாக!

இமாம் பர்பஹாரியின் இந்த நூலை நீண்ட காலத்திற்கு முன்னர் தாருல் ஹுதாவில் சிறப்பு வகுப்பாக மாணவர்களுக்கு நடத்தினோம். பல மாணவர்கள் பயன்பெற்றார்கள். அந்த வகுப்பு Youtube வலைத்தளத்திலும் பரப்பப்பட்டுள்ளது. இன்றுவரை மாணவர்கள் அதன்மூலம் பலன் பெற்று வருகின்றார்கள்.

மேலும், அதை மொழிபெயர்த்து நூலாக வெளியிட அல்லாஹ் இப்போது எங்களுக்கு அருள் புரிந்தான். அல்ஹம்து லில்லாஹ்.

இந்த நூலில் இமாம் கூறுகின்ற குறிப்புகளுக்கு அவற்றை வகைப்படுத்தி நாம் தலைப்புகள் கொடுத்தோம். இன்னும், அந்த குறிப்பு அல்லது குறிப்புகளில் இருந்து நாம் கற்க வேண்டிய படிப்பினைகளை தெளிவுப்படுத்தி இருக்கின்றோம். இது பொதுவான வாசகர்களுக்கு நற்பலன் தரும் என்று ஆதரவு வைக்கின்றோம். இந்நூலில் இடம்பெற்றுள்ள மார்க்க அறிஞர்கள் இன்னும் வழிகெட்ட கொள்கையை சேர்ந்த சிலர் ஆகியோரின் சிறு வரலாறு குறிப்புகளை இன் ஷா அல்லாஹ் அடுத்த பதிப்பில் இணைத்து வெளியிடுவோம். எங்கள் குறைகளை அல்லாஹ் மன்னிப்பானாக! இதில் நன்மைகள் இருந்தால் அவை அல்லாஹ்வின் புறத்திலிருந்துள்ளதாகும்.

இன்று நாம் நமது காலத்தில் சந்திக்கின்ற பல குழப்பங்கள் இமாம்

அவர்களின் காலத்திலும் இருந்திருக்கின்றன. ஆகவே, இந்த நூலை, கொள்கையில் நன்கு தேர்ச்சிபெற்ற ஓர் ஆசிரியரிடம் மாணவர்கள் கற்றுக் கொண்டால் இக்கால குழப்பவாதிகளையும் பித்அத் வாதிகளையும் எப்படி எதிர்கொள்வது என்பது அவர்களுக்கு தெளிவாக தெரிந்து விடும்.

இன்னும் புதிய புதிய சிந்தனைகள், தத்துவங்கள், வழிகேடுகள், அனாச்சாரங்கள் ஆகிய அனைத்தையும் விட்டு தங்களை தற்காத்துக் கொள்வதுடன் மக்களை ஸுன்னாவின் பக்கம் அழைப்பதற்குரிய அழகிய வழிமுறைகளையும் அறிந்துகொள்வார்கள்.

ஆகவே, இந்நூலை நன்கு படியுங்கள்! பரப்புங்கள்! ஸுன்னாவில் நீங்களும் நானும் நிலைத்திருப்பதற்கு அல்லாஹ் அருள் புரிவானாக! ஆமீன்.

அல்லாஹ்வே எங்களை மன்னித்துவிடு! எங்களிடமிருந்து ஏற்றுக் கொள்! நீதான் நன்கு செவியுறுபவன், நன்கறிந்தவன்.

**தாருல் ஹுதாவின் பணியாளர்கள் இன்னும் தாருல் ஹுதாவிற்கு உதவக்கூடிய சகோதர சகோதரிகள் அனைவருக்கும் இவ்வுலக வாழ்க்கையில் அல்லாஹ் தனது ரஹ்மத்தையும் பரக்கத்தையும் ஹிதாயத்தையும் தருவதோடு மறுமையில் அவனது மன்னிப்பையும் சொர்க்கத்தையும் தந்தருள்வானாக! ஆமீன்**.

எங்கள் அழைப்புப் பணி தொடர்ந்து நடை பெற எங்களுக்கு உதவுவாயாக, எங்கள் ரப்பே! உன்னை நம்பி, உன்னையே சார்ந்து, உன் பக்கமே திரும்பி, உன்னிடமே பிரார்த்தித்தவர்களாக இருக்கின்றோம். நீ மகா புகழுக்கும் கீர்த்திக்கும் கண்ணியத்திற்கும் உரியவன். நீதான் எங்கள் இறைவன். உன்னைத்தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாரும் அறவே இல்லை. அல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன்.

தாருல் ஹுதா பணியாளன்

உமர் ஷரீஃப் அப்துஸ் ஸலாம்

# தாருல் ஹுதா
# அறிமுகம்

எல்லாப் புகழும் அகிலங்களின் இறைவன் அல்லாஹ் ஒருவனுக்கே! இறையருளும் ஈடேற்றமும் நபி முஹம்மது அவர்களுக்கும், அவர்களது குடும்பத்தார், தோழர்கள், அவர்களைப் பின்பற்றும் அனைவருக்கும் உண்டாகட்டும்.

இஸ்லாமியச் சகோதர சகோதரிகளே!

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹு

தாருல் ஹுதா அறிமுகத்தின் வாயிலாக உங்களைச் சந்திப்பதில் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறோம். இதில் தாருல் ஹுதாவின் நோக்கத்தையும் அதன் பணிகளையும் விவரிப்பதுடன் அதன் இன்றைய தேவையையும் தங்கள் முன் சமர்ப்பிக்கிறோம்.

அல்லாஹுதஆலா கூறுகிறான் : இறை நம்பிக்கையுடைய ஆண்களும், இறை நம்பிக்கையுடைய பெண்களும் (தங்களுக்குள்) ஒருவருக்கொருவர் உறுதுணையாக இருக்கின்றனர். அவர்கள், (ஒருவர் மற்றவரை) நன்மை செய்யும்படித் தூண்டியும், பாவம் செய்யாது தடுத்தும், தொழுகையைக் கடைப்பிடித்து, (மார்க்க வரி) ஜகாத்து கொடுத்தும் வருவார்கள். அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் கட்டுப்பட்டு நடப்பார்கள். இத்தகையோருக்கு வெகு விரைவில் அல்லாஹ் அருள்புரிவான். (அல்குர்ஆன் 9 : 71)

மேலும், அல்லாஹு தஆலா கூறுகிறான்: (நம்பிக்கையாளர்களே!) உங்களில் ஒரு கூட்டத்தார் மனிதர்களைச் சிறந்ததின் பக்கம்

அழைத்து, நன்மையைச் செய்யும்படி ஏவி, பாவமான காரியங்களில்

இருந்து அவர்களை விலக்கிக் கொண்டும் இருக்கட்டும். இத்தகையவர்கள்தாம் வெற்றியாளர்கள். (அல்குர்ஆன் 3 : 104)

நபி ﷺ அவர்கள் கூறுகிறார்கள்: உங்களில் யாராவது ஒரு தவறைக் கண்டால் அதை தனது கரத்தால் மாற்றட்டும். அது இயலாவிட்டால்

தனது நாவால் மாற்றட்டும். அதுவும் இயலாவிட்டால் உள்ளத்தால் (வெறுத்து விலகி விடட்டும்). இது ஈமானின் குறைந்தபட்ச அளவாகும்.
(ஸஹீஹுல் புகாரி)

மேலும் நபி ﷺ கூறுகிறார்கள்: இறைநம்பிக்கையாளர்கள் தங்களிடையே நேசங்கொள்வதற்கும், கருணை காட்டுவதற்கும், அன்பு செலுத்துவதற்கும் உதாரணம் ஓர் உடலைப் போல! உடலில் ஏதேனும் ஓர் உறுப்பு பாதிக்கப்பட்டால் அனைத்து உறுப்புகளும் காய்ச்சல் மற்றும் தூக்கமின்மையால் முறையிடுகின்றன.
(ஸஹீஹுல் புகாரி)

இன்று நமது சமுதாயத்தில் சிறியோர் முதல் பெரியோர் வரை பெரும்பாலோர் சரியான மார்க்க ஞானத்திற்கும் முறையான வழிகாட்டலுக்கும் அதிகம் தேவையுள்ளவர்களாக இருப்பதைப் பார்க்கிறோம். ஆகவே, மேற்கூறப்பட்ட குர்ஆன் வசனங்கள் மற்றும் நபிமொழிகளுக்கிணங்க சமுதாய சீர்திருத்தப் பணியில் ஈடுபடுவது மார்க்கக் கடமை என்பதை உணர்ந்து, அல்குர்ஆன் மற்றும் நபிவழியின் அடிப்படையில் அந்த உயர்ந்த பணியை நிறைவேற்றி இறைப்பொருத்தத்தை அடைய வேண்டும் என்ற தூய எண்ணத்தில் தொடங்கப்பட்டதுதான் தாருல் ஹுதா.

**பணிகளும் தொண்டுகளும் :**

**அழைத்தல் :**

இதுவே இஸ்லாமின் அடிப்படையாகும். உலகில் இப்பணி இறைத் தூதர்கள் வாயிலாக நிலை நிறுத்தப்பட்டது. இறுதித் தூதர் முஹம்மது ﷺ அவர்களுக்குப் பின் அவர்களுடைய சமுதாயத்தினர் அனைவரின் மீதும் இப்பணி கடமையாக்கப்பட்டது. மேன்மைமிகு குர்ஆனும், சிறப்புமிகு நபி மொழியும் இதன் அவசியத்தை நமக்கு வலியுறுத்துகின்றன. இதற்கிணங்க இயன்ற அளவு அனைத்து வழிகளிலும் மனித சமுதாயத்திற்கு இஸ்லாமை அறிமுகப்படுத்துவதும், அதன் உயர்வுகளை விளங்கச் செய்வதும் தாருல் ஹுதாவின் தலையாயப் பணியாகும்.

**கற்பித்தல் :**

இஸ்லாமை அறிய விரும்பும் சிறுவர்கள், வாலிபர்கள், முதியவர்கள், ஆண்கள், பெண்கள் என அனைவருக்கும் மேன்மைமிகு குர்ஆன், சிறப்புமிகு நபிமொழிகளை அவரவர் தகுதிக்கேற்ப கற்றுத் தருவது தாருல் ஹுதாவின் இரண்டாவது முக்கிய பணியாகும்.

**நூல் வெளியிடுதல் :**

மேன்மைமிகு குர்ஆன், சிறப்புமிகு நபிமொழி இவ்விரண்டையும் அடிப்படையாகக் கொண்டு சமுதாயப் பேரறிஞர்களால் அரபி மொழியில் எழுதப்பட்ட நூல்களை தமிழிலும் ஏனைய உலக மொழிகளிலும் மொழியாக்கம் செய்து, அந்நூற்களைச் சலுகை விலையில் மக்களுக்கு வழங்குவது தாருல் ஹுதாவின் மூன்றாவது சிறப்புப் பணியாகும்.

**உதவுதல் :**

அல்லாஹு தஆலாதான் அனைவரின் தேவைகள் அனைத்தையும் நிறைவேற்றுபவன் ஆவான். மிகப்பெரிய வள்ளலாகிய அல்லாஹ், தன் சார்பாக உலகில் ஏழை, எளியோர், நலிந்தோர் ஆகியோரின் துயர் துடைக்கும் வள்ளல் பெருமக்களுக்கு பெரும் வெகுமதிகளை ஈருலகிலும் வழங்குவதாக வாக்களித்துள்ளான். பிறர் துன்பங்களில் பங்கெடுப்பது, பிறர் தேவைகளை நிறைவேற்ற இயன்றவரை உதவுவது முஸ்லிம்களுடைய அடிப்படைப் பண்புகளாகும். இவ்வுன்னதப் பணிக்காக பைத்துல்மால் (பொது நிதி) ஏற்பாடு செய்து இரக்கச்

சிந்தனையும், மார்க்கப்பற்றும் கொண்ட வள்ளல் பெருமக்களிடமிருந்து கடமையான, உபரியான தர்மங்களைப் பெற்று தேவையுடையோருக்கு உதவுதல் தாருல் ஹுதாவின் நான்காவது பணியாகும்.

மேற்கூறிய பணிகளைத் தவிர, இஸ்லாம் முழுமையாக ஒவ்வொருவரின் வாழ்விலும் வரவேண்டும் என்பதற்காகவும், மனிதச் சமுதாயங்களுக்குள் நல்லுறவும், அன்பும், கருணையும், சமூக புரிந்துணர்வும் ஏற்பட வேண்டும் என்பதற்காகவும் இயன்றவரை

அல்லாஹ்வுக்காக தொண்டாற்ற வேண்டும் என்பது தாருல் ஹுதாவின் குறிக்கோளாகும்.

இப்பணிகள் அனைத்தும் தொய்வின்றி தொடர்ந்து சிறப்பாக, திறம்பட நடைபெறவும், அவற்றை அல்லாஹ் அங்கீகரிக்கவும் தாங்கள் துஆ செய்யும்படி அன்புடன் கேட்டுக் கொள்வதுடன் தங்களால் இயன்றவரை இப்பணிகளில் பங்கு பெறவும் அழைக்கிறோம்.

பேராற்றலுடைய அல்லாஹ்விடமே உதவி தேடுகிறோம்! அவனையே முன்னோக்கி நிற்கிறோம்!!

உங்களால் முடிந்த உதவிகளை அல்லாஹ்வின் பொருத்தம் நாடி தந்துதவுங்கள்.

நன்மையான காரியங்களில் எவற்றை நீங்கள் உங்களுக்காக (மரணம் வருவதற்கு) முன்னதாகவே செய்து கொள்கிறீர்களோ அவற்றை அல்லாஹ்விடத்தில் மிகச் சிறந்ததாகவும், மகத்தான கூலியாகவும் பெறுவீர்கள். (அல்குர்ஆன் 73 : 20)

அல்லாஹ் தங்களுக்கு நற்கூலி வழங்குவானாக!

---------------------

# ஆசிரியர் அறிமுகம்

பேரருளாளன் பேரன்பாளன் அல்லாஹ்வின் பெயரால்

ஆசிரியரின் முழு பெயர் : அபூ முஹம்மது அல்ஹசன் இப்னு அலீ இப்னு **خلف** கலஃப் அல் பர்பஹாரி.

இந்தியாவிலிருந்து கொண்டு வரப்படும் கரம் மசாலா பொருள்களை இவர் வியாபாராம் செய்து வந்ததால் இவருடைய தொழிலுடன் இணைத்து இவரை பர்பஹாரி என்று அழைக்கப்பட்டது.

இவரின் பிறப்பை பற்றி சரியான குறிப்புகள் இல்லை. இவர் ஹிஜ்ரி 329-ல் இறப்பெய்தினார்.

இவர் பக்தாத் நகரில் பிறந்து வளர்ந்தவர் என்று கூறப்படுகின்றது.

இமாம் அஹ்மது இப்னு ஹன்பல் அவர்களின் மூத்த மாணவர்களிடம் இவர் கல்வி பயின்றார்.

அஹ்மது இப்னு முஹம்மது இப்னு அல்ஹஜ்ஜாஜ் அல் மரூஸி, ஸஹ்ல் இப்னு அப்துல்லாஹ் அத் தஸ்தரி, நீதிபதி இஸ்மாயீல் அபூ இஸ்ஹாக் இப்னு இஸ்ஹாக் அல்அஸ்தி ஆகியோர் இவரின் ஆசிரியர்களில் முக்கியமானவர்கள் ஆவர்.

இமாம் இப்னு பத்தா அபூ அப்தில்லாஹ் இப்னு உபைதில்லாஹ் அல் அக்பரி, இமாம் முஹம்மது இப்னு அஹ்மது இப்னு இஸ்மாயீல் அல் பக்தாதி, அஹ்மது இப்னு காமில் இப்னு கலஃப் ஆகியோர் இவரின் மாணவர்களில் முக்கியமானவர்கள் ஆவர்.

தனது நாவாலும் கரத்தாலும் பித்அத்துகளை எதிர்ப்பவராக இருந்ததால் இவருக்கு பகைவர்கள் அதிகம் இருந்தனர்.

இமாம் தஹபி தனது நூல் சியரு அஃலாமின் நுபலாவில் இவரைப் பற்றி இவ்வாறு கூறுகிறார்கள் :

ஹன்பலி மத்ஹபை சேர்ந்த அறிஞர்களின் ஆசிரியராகவும்

முன்னோடியாகவும் இமாமாகவும் பர்பஹாரி திகழ்ந்தார். மார்க்க சட்ட வல்லுனராகவும் சத்தியத்தை வெளிப்படையாக பரப்புகின்றவராகவும் ஹதீஸின் பக்கம் மக்களை அழைப்பவராகவும் அல்லாஹ்வின் விஷயத்தில் பழிப்பவரின் பழிப்பை அஞ்சாதவராகவும் விளங்கினார்.

இன்னும் இவரைப் பற்றி மிக உயர்வாக புகழ்ந்து பல கூற்றுகளையும் நிகழ்வுகளையும் இமாம் தஹபி அவர்கள் மேற்குறிப்பிடப்பட்ட தனது நூலில் கூறி இருக்கின்றார்கள்.

இமாம் இப்னு அபீ யஅலா ﷺ இவரைப் பற்றி குறிப்பிடுகிறார்கள் :

பர்பஹாரி தனது காலத்தில் கல்விமான்களின் தலைவராக, பித்அத்து வாதிகளை தீவிரமாக எதிர்ப்பவராக, சொல்லாலும் செயலாலும் அவர்களை விட்டு விலகியவராக இருந்தார்.

மேலும் நல்ல கல்வி ஞானமுள்ள இமாம்களில் ஒருவராகவும் உஸூல் -அடிப்படைகளை மனனமிட்ட, கல்வியில் நன்கு தேர்ச்சிப் பெற்ற, நம்பத் தகுந்த முஃமின்களில் ஒருவராகவும் இருந்தார்.

மேலும் இப்னு கசீர் ﷺ இவரைப் பற்றி குறிப்பிடுகின்றார் :

இவர் அறிஞர், உலகப்பற்று இல்லாதவர், மார்க்க சட்ட வல்லுனர், ஹன்பலி மத்ஹபை சேர்ந்தவர். இவர், பித்அத்வாதிகள் மற்றும் பெரும் பாவம் செய்பவர்கள் மீது கடுமையானவராக இருந்தார். மிகுந்த மதிப்பு மிக்கவராக எல்லா மக்களாலும் போற்றப்படுபவராக விளங்கினார்.

ஆசிரியர் மீதும், இன்னும் நேர்வழியில் நமக்கு முன்சென்ற எல்லா அறிஞர்கள் மீதும் அல்லாஹ் கருணை காட்டுவானாக! அவர்களை மன்னித்து, தனது ரஹ்மத்தில் வைப்பானாக! ஆமீன்.

--------------------

بِسْمِ ٱللَّهِ ٱلرَّحْمَٰنِ ٱلرَّحِيمِ

﴿اهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيمَ ۝ صِرَاطَ الَّذِينَ أَنْعَمْتَ عَلَيْهِمْ غَيْرِ الْمَغْضُوبِ عَلَيْهِمْ وَلَا الضَّالِّينَ ۝﴾

(அல்லாஹ்வே!) கோபிக்கப்பட்டவர்கள், வழிகெட்டவர்கள் அல்லாத நீ அருள் புரிந்தவர்களுடைய பாதையாகிய நேரான பாதையில் எங்களை நீ நேர்வழி நடத்து!

بِسْمِ ٱللَّهِ ٱلرَّحْمَٰنِ ٱلرَّحِيمِ

الْحَمْدُ لِلّٰهِ الَّذِي هَدَانَا لِلْإِسْلَامِ وَمَنَّ عَلَيْنَا بِهِ وَأَخْرَجَنَا فِي خَيْرِ أُمَّةٍ فَنَسْأَلُهُ التَّوْفِيقَ لِمَا يُحِبُّ وَيَرْضَىٰ وَالْحِفْظَ مِمَّا يَكْرَهُ وَيَسخَطُ

எல்லாப் புகழும் அல்லாஹ்விற்கே! அவன்தான் நமக்கு இஸ்லாமிய மார்க்கத்திற்கு நேர்வழி காட்டினான். அவன் நமக்கு அதன் மூலம் அருள் புரிந்திருக்கின்றான். அவன் நம்மை சிறந்த ஒரு சமுதாயத்தில் வெளியாக்கி இருக்கின்றான். அவன் விரும்பக்கூடிய, திருப்திபடக்கூடிய அமல்களை செய்வதற்கு நல்ல வாய்ப்பையும் அவன் வெறுக்கக்கூடிய, அவன் கோபப்படக்கூடிய செயல்களை விட்டு பாதுகாப்பையும் நாங்கள் அவனிடம் கேட்கிறோம்.

## படிப்பினைகள்

*1. ஒருவர் நேர்வழி பெறுவது அல்லாஹ்வைக் கொண்டுதான்.*

*அல்லாஹுத் தஆலா கூறுகிறான் :*

﴿مَنْ يَهْدِ اللّٰهُ فَهُوَ الْمُهْتَدِ وَمَنْ يُضْلِلْ فَلَنْ تَجِدَ لَهُ وَلِيًّا مُرْشِدًا﴾

*எவனை அல்லாஹ் நேரான வழியில் செலுத்துகிறானோ அவன் நேரான வழியில் சென்றே விடுவான். எவனை அவன் அவனுடைய (பாவத்தின் காரணமாக) தவறான வழியில் விட்டுவிடுகிறானோ அவனுக்கு உதவி செய்பவர்களையும், நேரான வழியை அறிவிப்பவர்களையும் நீர் காண மாட்டீர். (அல்குர்ஆன் 18 : 17)*

*2. அல்லாஹ்வின் மகத்தான அருள் நேர்வழியாகும்.*

*அல்லாஹுத் தஆலா கூறுகிறான் :*

﴿وَلَا تُؤْمِنُوا إِلَّا لِمَنْ تَبِعَ دِينَكُمْ قُلْ إِنَّ الْهُدَىٰ هُدَى اللَّهِ أَنْ يُؤْتَىٰ أَحَدٌ مِثْلَ مَا أُوتِيتُمْ أَوْ يُحَاجُّوكُمْ عِنْدَ رَبِّكُمْ قُلْ إِنَّ الْفَضْلَ بِيَدِ اللَّهِ يُؤْتِيهِ مَنْ يَشَاءُ وَاللَّهُ وَاسِعٌ عَلِيمٌ﴾

*இன்னும் உங்கள் மார்க்கத்தைப் பின்பற்றியவரைத் தவிர (ஒரு முஸ்லிமை நம்பாதீர்கள்), நீங்கள் கொடுக்கப்பட்டது போன்று ஒருவர் கொடுக்கப்படுவார் என்றோ அல்லது (முஸ்லிம்கள்) உங்கள் இறைவனிடம் உங்களோடு தர்க்கிப்பார்கள் என்றோ நம்பாதீர்கள் என்று அவர்கள் (-வேதக்காரரர்களில் ஒரு பிரிவினர்) கூறினர். (நபியே!) கூறுவீராக: நிச்சயமாக நேர்வழி அல்லாஹ்வின் நேர்வழிதான். (நபியே!) கூறுவீராக: நிச்சயமாக அருள் அல்லாஹ்வின் கையில்தான் இருக்கிறது. (அவன்) நாடியவருக்கு அதைக் கொடுக்கிறான். அல்லாஹ் விசாலமானவன், மிக அறிந்தவன். (அல்குர்ஆன் 3 : 73)*

*இந்த வசனத்தில் நேர்வழி என்று இஸ்லாமை அல்லாஹ் கூறுகிறான். பிறகு, அதையே அல்லாஹ் தனது அருள் என்றும் அவன் நாடியவருக்கு அதை கொடுக்கிறான் என்றும் கூறி இருக்கிறான்.*

*3. நேர்வழி கிடைக்கப் பெற்றவர் அல்லாஹ்விற்கு அந்த நேர்வழிக்காக நன்றி செலுத்திக் கொண்டே இருக்க வேண்டும்.*

*அல்லாஹு தஆலா கூறுகிறான் :*

﴿وَاذْكُرُوهُ كَمَا هَدَاكُمْ وَإِنْ كُنْتُمْ مِنْ قَبْلِهِ لَمِنَ الضَّالِّينَ﴾

*அவன் உங்களை நேர்வழிப்படுத்தியதற்காக அவனை நினைவு கூருங்கள். நிச்சயமாக இதற்கு முன்னர் நீங்கள் வழி தவறியவர்களில்தான் இருந்தீர்கள். (அல்குர்ஆன் 2 : 198)*

4. அல்லாஹ்வின் மார்க்கமாகிய இஸ்லாம் மட்டுமே அல்லாஹ்விடம் ஏற்றுக்கொள்ளப்பட்ட நேர்வழியாகும். இஸ்லாமைத் தவிர வேறொன்றில் யாரும் நேர்வழியைத் தேடினால் அவர் வழிகெட்டுப் போவார். அவரின் எந்த நற்கருமங்களையும் அல்லாஹ் அவரிடமிருந்து ஏற்றுக்கொள்ள மாட்டான்.

அல்லாஹு தஆலா கூறுகிறான் :

﴿فَمَنْ يُرِدِ اللّٰهُ أَنْ يَهْدِيَهُ يَشْرَحْ صَدْرَهُ لِلْإِسْلَامِ﴾

அல்லாஹ் எவரை நேர்வழி செலுத்த நாடுகிறானோ அவருடைய நெஞ்சை இஸ்லாமிற்கு விரிவாக்குகிறான்.

(அல்குர்ஆன் 6 : 125)

﴿إِنَّ الدِّينَ عِنْدَ اللّٰهِ الْإِسْلَامُ﴾

நிச்சயமாக அல்லாஹ்விடம் (அங்கீகரிக்கப்பட்ட) மார்க்கம் இஸ்லாம்தான். (அல்குர்ஆன் 3 : 19)

﴿وَمَنْ يَبْتَغِ غَيْرَ الْإِسْلَامِ دِينًا فَلَنْ يُقْبَلَ مِنْهُ
وَهُوَ فِي الْآخِرَةِ مِنَ الْخَاسِرِينَ۝﴾

இஸ்லாமல்லாததை மார்க்கமாக (பின்பற்ற) எவர் விரும்புவாரோ அவரிடமிருந்து (அம்மார்க்கம்) அறவே அங்கீகரிக்கப்படாது. அவர் மறுமையில் நஷ்டவாளிகளில் இருப்பார்.

(அல்குர்ஆன் 3 : 85)

5. உம்மத்துகளில் சிறந்த உம்மத் நமது நபியவர்களின் உம்மத் ஆகும். நாம் இந்த உம்மத்தில் தோன்றி இருப்பதும் அல்லாஹ்வின் பெரும் அருளாகும்.

அல்லாஹு தஆலா கூறுகிறான் :

﴿كُنْتُمْ خَيْرَ أُمَّةٍ أُخْرِجَتْ لِلنَّاسِ﴾

(நம்பிக்கையாளர்களே!) மக்களுக்காக வெளியாக்கப்பட்ட சிறந்த சமுதாயமாக நீங்கள் இருக்கிறீர்கள்.

(அல்குர்ஆன் 3 : 110)

**6.** நேர்வழி கிடைக்கப் பெற்றவர் அல்லாஹ்வின் நெருக்கத்தை பெறுவதில் அதிகம் கவனம் செலுத்த வேண்டும்.

அல்லாஹு தஆலா கூறுகிறான் :

﴿سَابِقُوا إِلَىٰ مَغْفِرَةٍ مِنْ رَبِّكُمْ وَجَنَّةٍ عَرْضُهَا كَعَرْضِ السَّمَاءِ وَالْأَرْضِ أُعِدَّتْ لِلَّذِينَ آمَنُوا بِاللَّهِ وَرُسُلِهِ ذَٰلِكَ فَضْلُ اللَّهِ يُؤْتِيهِ مَنْ يَشَاءُ وَاللَّهُ ذُو الْفَضْلِ الْعَظِيمِ ۝﴾

உங்கள் இறைவனின் மன்னிப்பின் பக்கமும் சொர்க்கத்தின் பக்கமும் முந்துங்கள். அதன் அகலம் வானம், பூமியின் அகலத்தைப் போலாகும். அது அல்லாஹ்வையும் அவனது தூதரையும் நம்பிக்கை கொண்டவர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அது அல்லாஹ்வின் சிறப்பா(ன அருளா)கும். அவன் நாடுகின்றவர்களுக்கு அதை அவன் கொடுக்கின்றான். அல்லாஹ் மகத்தான சிறப்புடையவன் ஆவான். (அல்குர்ஆன் 57 : 21)

**7.** நேர்வழியில் நிலைத்திருப்பதற்காக, அல்லாஹ்விற்கு பிடித்தமானவற்றை செய்வதற்காக, அவனுக்கு வெறுப்பானவற்றை விட்டு விலகி வாழ்வதற்காக எப்போதும் அல்லாஹ்விடம் பிரார்த்தித்துக்கொண்டே இருக்க வேண்டும்.

*8. யார் அல்லாஹ்விடம் எதை விரும்பி வேண்டுவாரோ அவருக்கு அல்லாஹ் அதைக் கொடுப்பான். அல்லாஹ்விடம் நாம் கேட்க வேண்டியவை, மார்க்கமும் நல்லமல்களுக்கான வாய்ப்பும் மறுமையின் நற்பாக்கியங்களும் ஆகும்.*

*9. நபிமார்கள், ரஸூல்மார்கள் எப்போதும் அல்லாஹ்விடம் நல்லமல்களை செய்வதற்கும் மறுமை வெற்றிக்கும் அல்லாஹ்வின் மன்னிப்பு கிடைப்பதற்கும் துஆ செய்தவர்களாக இருந்தார்கள். அவ்வாறே, நல்லோர் அனைவரும் அல்லாஹ்விடம் மறுமை சார்ந்த காரியங்களையும் நேர்வழியையும் அல்லாஹ்வின் அன்பையும் அதிகம் வேண்டிக் கொண்டே இருந்தார்கள்.*

﴿رَبِّ أَوْزِعْنِي أَنْ أَشْكُرَ نِعْمَتَكَ الَّتِي أَنْعَمْتَ عَلَيَّ وَعَلَىٰ وَالِدَيَّ وَأَنْ أَعْمَلَ صَالِحًا تَرْضَاهُ وَأَدْخِلْنِي بِرَحْمَتِكَ فِي عِبَادِكَ الصَّالِحِينَ۝﴾

*என் இறைவா! நீ என் மீதும் என் பெற்றோர் மீதும் அருள்புரிந்த உன் அருளுக்கு நான் நன்றி செலுத்துவதற்கும் நீ மகிழ்ச்சியுறுகின்ற நல்லதை நான் செய்வதற்கும் எனக்கு நீ அகத்தூண்டுதலை (-உள்ளத்தில் உதிப்பை) ஏற்படுத்து! (மனதில் அதற்குண்டான ஆசையையும் உணர்வையும் ஏற்படுத்து.) உன் கருணையால் உன் நல்லடியார்களில் என்னை நுழைத்துவிடு! (அல்குர்ஆன் 27 : 19)*

*இது சுலைமான் ﵇ அவர்கள் கேட்ட துஆ ஆகும். இவ்வாறுதான் எல்லா தூதர்களின் துஆவும் இருந்தது.*

*பார்க்க அல்குர்ஆன் 7 : 23. 71 : 28. 2 : 127-128. 14 : 40-41. 26 : 83-85. 12 : 101.*

*10. அவ்வாறே, நாமும் அல்லாஹ் நமக்கு காட்டிய நேர்வழிக்கு நன்றி செலுத்தி, அந்த நேர்வழியில் நிலைத்திருப்பதற்கும்*

*அதிலிருந்து விலகிவிடாமல் இருப்பதற்கும் அதிகம் துஆ கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும்.*

*அல்லாஹு தஆலா கூறுகிறான் :*

﴿اهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيمَ۝﴾

*(அல்லாஹ்வே!) நேரான பாதையில் எங்களை நேர்வழி நடத்து!*
*(அல்குர்ஆன் 1 : 6)*

﴿رَبَّنَا لَا تُزِغْ قُلُوبَنَا بَعْدَ إِذْ هَدَيْتَنَا وَهَبْ لَنَا
مِنْ لَدُنْكَ رَحْمَةً إِنَّكَ أَنْتَ الْوَهَّابُ۝﴾

*எங்கள் இறைவா! நீ எங்களை நேர்வழி செலுத்திய பின்னர் எங்கள் உள்ளங்களை கோணலாக்கிவிடாதே! உன்னிடமிருந்து கருணையை எங்களுக்கு வழங்கு! நிச்சயமாக நீதான் மாபெரும் கொடை கொடுப்பவன் ஆவாய். (அல்குர்ஆன் 3 : 8)*

.................................

# பாடம் 1

## இஸ்லாமும் ஸுன்னாவும் வேறல்ல!

اعْلَمُوا أَنَّ الْإِسْلَامَ هُوَ السُّنَّةُ وَالسُّنَّةُ هِيَ الْإِسْلَامُ وَلَا يَقُومُ أَحَدُهُمَا إِلَّا بِالْآخَرِ

1. அறிந்துகொள்ளுங்கள்! நிச்சயமாக இஸ்லாம் என்பது ஸுன்னாதான். ஸுன்னாதான் இஸ்லாம் ஆகும். அவை இரண்டில் ஒன்று மற்றொன்று இல்லாமல் நிலைபெறாது.

فَمِنْ السُّنَّةِ لُزُومُ الْـجَمَاعَةِ فَمَنْ رَغِبَ غَيْرَ الْـجَمَاعَةِ وَفَارَقَهَا فَقَدْ خَلَعَ رِبْقَةَ الْإِسْلَامِ مِنْ عُنُقِهِ وَكَانَ ضَالًّا مُضِلا

2. ஜமாஆவை (விட்டுப் பிரியாமல்) சேர்ந்திருப்பது ஸுன்னாவில் உள்ளதாகும். யார் ஜமாஆ அல்லாத வேறொன்றை விரும்புவாரோ (-யார் ஜமாஆவை வெறுப்பாரோ) இன்னும் அதை விட்டுப் பிரிவாரோ அவர் இஸ்லாமின் வளையத்தை தனது கழுத்தில் இருந்து கழட்டி விட்டார். இன்னும் அவர் வழிகெட்டவராகவும் வழிகெடுப்பவராகவும் ஆகிவிட்டார்.

وَالْأَسَاسُ الَّذِي تُبْنَىٰ عَلَيْهِ الْـجَمَاعَةُ وَهُمْ أَصْحَابُ مُحَمَّدٍ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ وَرَحِمَهُمْ أَجْمَعِينَ وَهُمْ أَهْلُ السُّنَّةِ وَالْـجَمَاعَةِ فمَنْ لَمْ يَأْخُذْ عَنْهُمْ فَقَدْ ضَلَّ وَابْتَدَعَ وَكُلُّ بِدْعَةٍ ضَلَالَةٌ وَالضَّلَالَةُ وَأَهْلُهَا فِي النَّارِ

3. “ஜமாஆ” எந்த அடிப்படையின் மீது அமைக்கப்படுகின்றது என்றால் அவர்கள்தான் முஹம்மது ﷺ அவர்களுடைய தோழர்கள் ஆவார்கள். அல்லாஹ் அவர்கள் அனைவர் மீதும் கருணைப் புரிவானாக! அவர்கள்தான் அஹ்லுஸ் ஸுன்னா வல்ஜமாஆ ஆவார்கள். யார் அவர்களிடமிருந்து கல்வி கற்கவில்லையோ (மார்க்கத்தை அவர்களிடமிருந்து பெறவில்லையோ) அவர் வழிகெட்டு விட்டார்; மார்க்கத்தில் புதுமையை செய்துவிட்டார். ஒவ்வொரு புதுமையும் வழிகேடாகும். வழிகேடும் அதை உடையவர்களும் நரகில்தான் (நுழைவார்கள்).

## படிப்பினைகள்

*1, நபியவர்களின் ஸுன்னா இஸ்லாமிய மார்க்கத்தில் மிக முக்கியமானதும் அடிப்படையானதும் ஆகும்.*

*2. ஸுன்னாவை முழுமையாக நம்புவதும் பின்பற்றுவதும் ஈமானின் உயர்ந்த நிலையாகும்.*

*3. இஸ்லாமிலிருந்து ஸுன்னாவை பிரிக்க முடியாது.*

*4. ஸுன்னாவை பின்பற்றுகின்ற நல்லோருக்கு கண்டிப்பாக அல்லாஹ் நேர்வழிகாட்டுவான். அவர்கள் வழிகெட மாட்டார்கள்.*

*5. நபி ﷺ அவர்களுக்கு கீழ்ப்படியுங்கள் என்று வந்திருக்கின்ற அனைத்து வசனங்களும் மார்க்கத்தின் எல்லா விஷயங்களிலும் நபி அவர்களின் ஸஹீஹான ஹதீஸ்களை ஏற்றுக்கொள்வதையும் நம்புவதையும் அவற்றின் படி அமல் செய்வதையும் வலியுறுத்துகின்றன.*

*அல்லாஹு தஆலா கூறுகிறான் :*

﴿قُلْ إِنْ كُنْتُمْ تُحِبُّونَ اللّٰهَ فَاتَّبِعُونِي يُحْبِبْكُمُ اللّٰهُ وَيَغْفِرْ لَكُمْ

ذُنُوبَكُمْ وَاللَّهُ غَفُورٌ رَحِيمٌ ۝ قُلْ أَطِيعُوا اللَّهَ وَالرَّسُولَ فَإِنْ تَوَلَّوْا فَإِنَّ اللَّهَ لَا يُحِبُّ الْكَافِرِينَ ۝﴾

*(நபியே!) கூறுவீராக: நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பவர்களாக இருந்தால் என்னைப் பின்பற்றுங்கள். அல்லாஹ் உங்களை நேசிப்பான். உங்களுக்கு உங்கள் பாவங்களை மன்னிப்பான். அல்லாஹ் மகா மன்னிப்பாளன், மகா கருணையாளன். (நபியே!) கூறுவீராக: அல்லாஹ்விற்கும் தூதருக்கும் கீழ்ப்படியுங்கள். நீங்கள் (புறக்கணித்து) திரும்பினால் நிச்சயமாக அல்லாஹ் நிராகரிப்பாளர்களை நேசிக்கமாட்டான்.*

*(அல்குர்ஆன் 3 : 31, 32)*

﴿فَلَا وَرَبِّكَ لَا يُؤْمِنُونَ حَتَّىٰ يُحَكِّمُوكَ فِيمَا شَجَرَ بَيْنَهُمْ ثُمَّ لَا يَجِدُوا فِي أَنْفُسِهِمْ حَرَجًا مِمَّا قَضَيْتَ وَيُسَلِّمُوا تَسْلِيمًا ۝﴾

*ஆகவே, (உண்மை அவ்வாறு) இல்லை. உம் இறைவன் மீது சத்தியமாக! அவர்களுக்கிடையில் சச்சரவு ஏற்பட்டதில் உம்மை தீர்ப்பாளராக்கி, பிறகு, நீர் தீர்ப்பளித்ததில் தங்கள் உள்ளங்களில் (எத்தகைய) அதிருப்தி காணாமல் முழுமையாக (உமக்கு) பணியும் வரை அவர்கள் நம்பிக்கையாளர்களாக ஆகமாட்டார்கள். (அல்குர்ஆன் 4 : 65)*

﴿قُلْ أَطِيعُوا اللَّهَ وَأَطِيعُوا الرَّسُولَ فَإِنْ تَوَلَّوْا فَإِنَّمَا عَلَيْهِ مَا حُمِّلَ وَعَلَيْكُمْ مَا حُمِّلْتُمْ وَإِنْ تُطِيعُوهُ تَهْتَدُوا وَمَا عَلَى الرَّسُولِ إِلَّا الْبَلَاغُ الْمُبِينُ ۝﴾

*(நபியே) கூறுவீராக! அல்லாஹ்வுக்கு கீழ்ப்படியுங்கள், தூதருக்கு*

*கீழ்ப்படியுங்கள். நீங்கள் விலகிச் சென்றால் அவர் மீது கடமையெல்லாம் அவர் மீது சுமத்தப்பட்டதுதான் (-எடுத்துச் சொல்வதுதான்). உங்கள் மீது கடமையெல்லாம் உங்கள் மீது சுமத்தப்பட்டதுதான் (கீழ்ப்படிவதும் கட்டுப்படுவதும்தான்). நீங்கள் அவருக்கு கீழ்ப்படிந்தால் நீங்கள்தான் நேரான வழியைப் பெறுவீர்கள். தெளிவாக எடுத்துரைப்பதைத் தவிர தூதர் மீது (வேறு எந்தக்) கடமையும் இல்லை. (அல்குர்ஆன் 24 : 54)*

﴿وَأَنْزَلْنَا إِلَيْكَ الذِّكْرَ لِتُبَيِّنَ لِلنَّاسِ مَا نُزِّلَ إِلَيْهِمْ
وَلَعَلَّهُمْ يَتَفَكَّرُونَ۝﴾

*(இந்த) ஞானத்தை (நபியே!) உமக்கு இறக்கினோம். ஏனெனில், அம்மக்களுக்காக இறக்கப்பட்ட (இந்த ஞானத்)தை (நீர்)அவர்களுக்கு தெளிவுபடுத்துவீர், இன்னும் (அந்த ஞானத்தையும் நபியின் கூற்றையும்) அவர்கள் சிந்திக்க வேண்டும்! (அல்குர்ஆன் 16 : 44)*

***6.** ஸுன்னாவை ஏற்பவர் நபியவர்களின் தோழர்களை பின்பற்றுவார்.*

***7.** நபித்தோழர்களை விட்டு விலகுவது மார்க்கத்தை விட்டு விலகுவதாகும்.*

***8.** நபித்தோழர்களை புறக்கணிப்பது வழிகேடாகும்.*

***9.** நபித்தோழர்களை பின்பற்ற தேவை இல்லை என்று மக்களுக்கு போதிப்பவர் மக்களை வழி கெடுப்பவர் ஆவார்.*

***10.** நபித்தோழர்களை அளவுகோலாக எடுக்காதவர் கண்டிப்பாக மார்க்கத்தில் அமல் சார்ந்த அல்லது கொள்கை சார்ந்த பித்அத்துகளை உருவாக்கி விடுவார்.*

அல்லாஹு தஆலா கூறுகிறான் :

﴿وَالسَّابِقُونَ الْأَوَّلُونَ مِنَ الْمُهَاجِرِينَ وَالْأَنْصَارِ وَالَّذِينَ اتَّبَعُوهُمْ بِإِحْسَانٍ رَضِيَ اللَّهُ عَنْهُمْ وَرَضُوا عَنْهُ وَأَعَدَّ لَهُمْ جَنَّاتٍ تَجْرِي تَحْتَهَا الْأَنْهَارُ خَالِدِينَ فِيهَا أَبَدًا ذَٰلِكَ الْفَوْزُ الْعَظِيمُ﴾

முஹாஜிர்களிலும் அன்ஸாரிகளிலும் முதலாமவர்களான முந்தியவர்கள், இன்னும் இவர்களை நல்லறத்தில் பின்பற்றிய(மற்ற)வர்கள் ஆகிய இவர்களைப் பற்றி அல்லாஹ் திருப்தியடைந்தான். இவர்களும் அவனைப் பற்றி திருப்தியடைந்தனர். அவற்றின் கீழ் நதிகள் ஓடும் சொர்க்கங்களை இவர்களுக்கு (அவன்) ஏற்படுத்தினான். அவற்றில் எப்போதும் (அவர்கள்) நிரந்தரமானவர்கள். இதுதான் மகத்தான வெற்றியாகும். (அல்குர்ஆன் 9 : 100)

﴿وَمَنْ يُشَاقِقِ الرَّسُولَ مِنْ بَعْدِ مَا تَبَيَّنَ لَهُ الْهُدَىٰ وَيَتَّبِعْ غَيْرَ سَبِيلِ الْمُؤْمِنِينَ نُوَلِّهِ مَا تَوَلَّىٰ وَنُصْلِهِ جَهَنَّمَ وَسَاءَتْ مَصِيرًا﴾

எவர் தனக்கு நேரான வழி தெளிவானதன் பின்னர் இத்தூதருக்கு முரண்பட்டு நம்பிக்கையாளர்களின் வழி அல்லாததைப் பின்பற்றுவாரோ அவரை அவர் திரும்பியதிலேயே திருப்பிவிடுவோம். இன்னும் அவரை நரகத்தில் எரிப்போம். அது மீளுமிடத்தால் (மிகக்) கெட்டுவிட்டது.

(அல்குர்ஆன் 4 : 115)

..............................

# பாடம் 2

# நேர்வழியையும் வழிகேட்டையும் பிரித்தறிவது எப்படி?

وَقَالَ عُمَرُ بْنُ الْـخَطَّابِ رَضِيَ اللّٰهُ عَنْهُ لَا عُذْرَ لِأَحَدٍ فِي ضَلَالَةٍ رَكِبَهَا حَسِبَهَا هُدًى وَلَا فِي هُدًى تَرَكَهُ حَسِبَهُ ضَلَالَةً فَقَدْ بُيِّنَتْ الْأُمُورُ وَثَبَتَتْ الْـحُجَّةُ وَانْقَطَعَ الْعُذْرُ وَذٰلِكَ أَنَّ السُّنَّةَ وَالْـجَمَاعَةَ قَدْ أَحْكَمَا أَمْرَ الدِّينِ كُلِّهِ وَتَبَيَّنَ لِلنَّاسِ فعَلَى النَّاسِ الْاتِّبَاعُ

4. உமர் இப்னுல் கத்தாப் ﵁ கூறுகிறார்கள்: நேர்வழி என்று நினைத்து, தான் செய்த வழிகேட்டில் ஒருவருக்கும் சாக்குப்போக்கு இல்லை. வழிகேடு என்று நினைத்து தான் விட்டுவிட்ட நேர்வழியிலும் (அவருக்கு எவ்வித) சாக்குப்போக்கும் இல்லை. விஷயங்கள் எல்லாம் தெளிவாக்கப்பட்டு விட்டன. ஆதாரம் ஊர்ஜிதமாகி விட்டது. சாக்குப் போக்குகள் முடிந்துவிட்டன. அதாவது, ஸுன்னாவும் ஜமாஆவும் மார்க்கத்தின் காரியங்கள் அனைத்தையும் உறுதிப்படுத்தி விட்டன. இன்னும் மார்க்கம் மக்களுக்கு தெளிவாக தெரிந்து விட்டது. ஆகவே, மக்கள் மீது கடமை (தெளிவாக இருக்கின்ற மார்க்கத்தை மட்டுமே) பின்பற்றுவதாகும். (புதிதாக உருவாக்கப்பட்ட காரியங்களை அல்ல.)

## படிப்பினைகள்

*1, வழிகேடு, வழிகேடுதான். அதை நியாயப்படுத்த முடியாது.*

*2. நேர்வழி, நேர்வழிதான். அதை அறியாதவர்தான் நஷ்டவாளி.*

*3. மார்க்கத்தைத் தேடி, கற்று, நேர்வழியை அறிந்து,*

அதை உறுதியாக பின்பற்ற வேண்டும்.

4. எல்லா குழப்பங்களுக்கும் ஸுன்னா இன்னும் ஸஹாபாக்களின் வழிமுறையில் தெளிவு உள்ளது.

5. மார்க்கத்தில் எதையும் புதிதாக கூறுவதற்கும் செய்வதற்கும் இடமில்லை.

6. நம்மீது கடமை உறுதி செய்யப்பட்ட மார்க்கத்தை பின்பற்றுவது மட்டும்தான்.

அல்லாஹு தஆலா கூறுகிறான் :

﴿قَدْ تَبَيَّنَ الرُّشْدُ مِنَ الْغَيِّ﴾

வழிகேட்டிலிருந்து சத்தியவழி தெளிவாகி விட்டது. (அல்குர்ஆன் 2 : 256)

﴿وَلَقَدْ جِئْنَاهُمْ بِكِتَابٍ فَصَّلْنَاهُ عَلَىٰ
عِلْمٍ هُدًى وَرَحْمَةً لِقَوْمٍ يُؤْمِنُونَ۝﴾

நாம் அவர்களிடம் திட்டவட்டமாக ஒரு வேதத்தைக் கொண்டுவந்தோம். நம்பிக்கை கொள்கின்ற மக்களுக்கு நேர்வழியாகவும் கருணையாகவும் இருப்பதற்காக (தெளிவாக அதிலுள்ள உண்மையை நாம்) அறிந்து அதை விவரித்தோம். (அல்குர்ஆன் 7 : 52)

﴿أَمْ لَهُمْ شُرَكَاءُ شَرَعُوا لَهُمْ مِنَ الدِّينِ مَا لَمْ يَأْذَنْ بِهِ اللَّهُ وَلَوْلَا
كَلِمَةُ الْفَصْلِ لَقُضِيَ بَيْنَهُمْ وَإِنَّ الظَّالِمِينَ لَهُمْ عَذَابٌ أَلِيمٌ۝﴾

(அல்லாஹ்வின்) மார்க்கத்தில் அல்லாஹ் எதை

*அனுமதிக்கவில்லையோ அதை இவர்களுக்கு சட்டமாக்குகின்ற இணை தெய்வங்களும் இவர்களுக்கு உண்டா? (இவர்களுக்கு தண்டனை மறுமையில்தான் என்ற) தீர்ப்பின் வாக்கு மட்டும் இல்லை என்றால் அவர்களுக்கு மத்தியில் (இவ்வுலகிலேயே) தீர்ப்பளிக்கப்பட்டிருக்கும். நிச்சயமாக அநியாயக்காரர்கள் - அவர்களுக்கு வலி தரக்கூடிய வேதனை உண்டு.*

*(அல்குர்ஆன் 42 : 21)*

*இந்த வசனத்திற்கு தபரி ﵀ இவ்வாறு விளக்கம் கூறுகிறார் :*

**ابْتَدَعُوا لَهُمْ مِنَ الدِّينِ مَا لَمْ يُبِحِ اللّٰهُ لَهُمْ ابْتِدَاعَهُ**

*அவர்கள் மார்க்கத்தில் தங்களுக்காக பல புதுமையான காரியங்களை உருவாக்கிக் கொண்டார்கள். அவ்வாறு புதுமையாக உருவாக்கிக் கொள்வதை அல்லாஹ் அவர்களுக்கு ஆகுமாக்க வில்லை.*

.................................

# பாடம் 3

## பித்அத் ஓர் ஆபத்தானது!

وَاعْلَمْ أَنَّ النَّاسَ لَمْ يَبْتَدِعُوا بِدْعَةً قَطُّ حَتّٰى تَرَكُوا مِنَ السُّنَّةِ مِثْلَهَا فَاحْذَرْ الْـمُحْدَثَاتِ مِنْ الْأُمُورِ فَإِنَّ كُلَّ مُحْدَثَةٍ بِدْعَةٌ وَكُلُّ بِدْعَةٍ ضَلَالَةٌ وَالضَّلَالَةُ وَأَهْلُهَا فِي النَّارِ

6. அறிந்துகொள்: நிச்சயமாக மக்கள் ஒரு பித்அத்தை புதிதாக செய்ய மாட்டார்கள், ஸுன்னாவில் அதுபோன்ற ஒன்றை விட்டே தவிர. (-மக்கள் ஒரு பித்அத்தை புதிதாக செய்தால், ஸுன்னாவில் அதுபோன்ற ஒன்றை கண்டிப்பாக விட்டுவிடுவார்கள்.) ஆகவே, காரியங்களில் புதிதாக உருவாக்கப்பட்டவற்றை விட்டு நீ தவிர்ந்து, எச்சரிக்கையாக இரு! புதிதாக உருவாக்கப்பட்டது எல்லாம் அனாச்சாரம்தான். அனாச்சாரம் எல்லாம் வழிகேடாகும். வழிகேடும் அதை உடையவர்களும் நரகத்தில்தான் (-செல்வார்கள்).

وَاحْذَرْ صِغَارَ الْـمُحْدَثَاتِ مِنْ الْأُمُورِ فَإِنَّ صَغِيرَ الْبِدَعِ يَعُودُ حَتّٰى يَصِيرَ كَبِيرًا وَكَذٰلِكَ كُلُّ بِدْعَةٍ أُحْدِثَتْ فِي هٰذِهِ الْأُمَّةِ كَانَ أَوَّلُـهَا صَغِيرًا يُشْبِهُ الْـحَقَّ فَاغْتَرَّ بِذٰلِكَ مَنْ دَخَلَ فِيهَا ثُمَّ لَمْ يَسْتَطِعْ الْـخُرُوجَ مِنْهَا فَعَظُمَتْ وَصَارَتْ دِينًا يُدَانُ بِهَا فَخَالَفَ الصِّرَاطَ الْـمُسْتَقِيمَ فَخَرَجَ مِنَ الْإِسْلَامِ

7. காரியங்களில் புதிதாக உருவாக்கப்பட்ட சிறிய விஷயங்களையும் தவிர்ந்து இரு! (அவற்றை விட்டு எச்சரிக்கையாக இரு!) சிறிய

அனாச்சாரங்கள் இறுதியில் பெரியதாக ஆகிவிடும். இவ்வாறுதான் இந்த உம்மத்தில் உருவாக்கப்பட்ட ஒவ்வொரு அனாச்சாரமும் அதன் ஆரம்பம் சிறியதாக, சத்தியத்திற்கு ஒப்பானதாக இருந்தது. ஆகவே, அதில் நுழைந்தவர் அதில் மயங்கி விட்டார். பிறகு, அதிலிருந்து அவரால் வெளியேற இயலாமல் ஆகிவிட்டது. பிறகு அந்த பித்அத் பெரியதாக ஆகிவிட்டது. இன்னும் (அவரிடம் அந்த அனாச்சாரம்) பின்பற்றப்படுகின்ற மார்க்கமாகவும் ஆகிவிட்டது. ஆகவே, அந்த மனிதர் நேரான பாதைக்கு மாறுபட்டு இஸ்லாமிலிருந்து வெளியேறி விட்டார்.

## படிப்பினைகள்

*1. பித்அத்துகள் மிகவும் ஆபத்தானவை ஆகும். அவை அல்லாஹ்வும் ரஸூலும் மிகவும் வெறுக்கின்ற செயல்களாகும்.*

*2. அல்லாஹ்வும் ரஸூலும் வழிகாட்டாத ஒன்றை கொள்கைகள், அமல்கள் என எதில் நுழைத்தாலும் அது பித்அத்தாக கருதப்படும்.*

*3. அமல்களில் உள்ள பித்அத்துகளை விட கொள்கையில் உள்ள பித்அத்துகள் மிக மிக மோசமானவை, மிக விரைவாக குஃப்ரில் சேர்த்து விடக்கூடியவை ஆகும்.*

*4. பித்அத்துகளில் சிறியதாக தோன்றுவது நாளை பெரிய பித்அத்தாக - மிகப் பெரிய அனாச்சாரமாக மாறி இஸ்லாமின் தூய்மையை கெடுத்து, முஸ்லிமை நரகப்படுகுழியில் தள்ளி விடும்.*

*5. பித்அத்வாதிகள் ஸுன்னாவைப் பின்பற்ற மாட்டார்கள்.*

*6. பித்அத்துகளில் சிறிது, பெரிது என்று பாகுபாடு இல்லை.*

*7. மது, விபாச்சாரம், திருட்டு போன்ற பெரிய பாவங்களை விட கொள்கை சார்ந்த அல்லது அமல்கள் சார்ந்த*

பித்அத்துகள் மிகக் கொடியவை, மிகத் தீயவை, வெறுக்கப்பட்டவை ஆகும் ஆகவே, எல்லா பித்அத்துகளையும் வெறுத்து அவற்றை விட்டு விலகி இருக்க வேண்டும்.

8. பித்அத்துகள் பார்ப்பதற்கு அழகாக தோன்றினாலும் அவை வழிகேடுகளும் நரகத்தில் தள்ளக்கூடியவையும் ஆகும்.

9. பித்அத்துகள் ஒருபோதும் நேர்வழியாக ஆக முடியாது.

10. பித்அத்துகளை தொடர்ந்து செய்பவர் ஒருநாள் இஸ்லாமை விட்டு வெளியேறி விடலாம்.

................................

# பாடம் 4

## நபித்தோழர்களை அளவுகோலாக எடு!

فانْظُرْ رَحِمَكَ اللهُ كُلَّ مَنْ سَمِعْتَ كَلَامَهُ مِنْ أَهْلِ زَمَانِكَ خَاصَّةً فَلَا تَعْجَلَنَّ وَلَا تَدْخُلَنَّ فِي شَيْءٍ مِنْهُ حَتّٰى تَسْأَلَ وَتَنْظُرَ هَلْ تَكَلَّمَ بِهِ أَصْحَابُ النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ أَوْ أَحَدٌ مِنَ الْعُلَمَاءِ فَإِنْ وَجَدْتَ فِيهِ أَثَرًا عَنْهُمْ فَتَمَسَّكْ بِهِ وَلَا تُجَاوِزْهُ لِشَيْءٍ وَلَا تَخْتَرْ عَلَيْهِ شَيْئًا فَتَسْقُطَ فِي النَّارِ

8. கவனிப்பாயாக! அல்லாஹ் உனக்கு கருணை புரிவானாக! குறிப்பாக உனது காலத்தில் உள்ளவர்களில் யாருடைய பேச்சை நீ செவியுறுவாயோ அப்போது நீ அவசரப்படாதே! அதில் எதிலும் நீ நுழைந்துவிடாதே! (-உடனே அதை ஏற்றுக்கொள்ளாதே!) நீ (அதைப் பற்றி) விசாரிக்கின்றவரை, நபி ﷺ அவர்களின் தோழர்கள் அல்லது அறிஞர்களில் யாரும் இதை பேசியிருக்கின்றார்களா என்று நீ நன்கு பார்க்கின்ற வரை (அதை ஏற்காதே!). ஆக, அது குறித்து அவர்களிடமிருந்து ஒரு செய்தியை நீ பெற்றுக்கொண்டால் அதை பற்றிப்பிடித்துக் கொள்! எந்த ஒரு விஷயத்திற்காகவும் அதை விட்டு தாண்டிவிடாதே! அதன் மீது (-அதைத் தவிர்த்து) வேறு ஒன்றை நீ தேர்ந்தெடுக்காதே! அப்படி நீ செய்தால் நீ நரகத்தில் விழுந்துவிடுவாய்!

### படிப்பினைகள்

*1. நீ யாரை நேர்வழியின் பக்கம் அழைக்கிறாயோ, நீ யாருக்கு கல்வி கற்றுக் கொடுக்கிறாயோ அவர்களுக்காக*

அல்லாஹ்விடம் நல்ல துஆக்களை நீ கேட்க வேண்டும்.

2. மாணவர்கள் மீது கருணையுடன் நடந்து அவர்களுக்கு முன்னாலும் அவர்களுக்கு பின்னாலும் அவர்களின் நேர்வழிக்காக துஆ கேட்க வேண்டும்.

3. ஒருவரின் அழகான, கவர்ச்சியான பயான்களை கேட்டு அவர் கூறுவதெல்லாம் சத்தியமாக இருக்கும் என்று நம்பி விடக் கூடாது.

4. சத்தியத்திற்கு அளவுகோல் தத்துவங்களும் விவாதங்களும் கவர்ச்சியான உரைகளும் அல்ல.

5. சத்தியம் என்பது குர்ஆன், ஸுன்னாவிலிருந்து ஸஹாபாக்கள் புரிந்து பின்பற்றியவை மட்டுமே.

6. ஸஹாபாக்களிடம் எது இஸ்லாமிய கொள்கைகளாக இருந்ததோ அதுவே இறுதி நாள் வரை இஸ்லாமிய கொள்கைகளாக இருக்கும். அவற்றில் யாரும் எதையும் கூட்டவோ குறைக்கவோ முடியாது.

7. மார்க்க விஷயங்களில் தற்கால மக்கள் கூறுவதை ஏற்பதில் அவசரப் படக்கூடாது. மார்க்க விஷயங்களில் மிகுந்த கவனமும் நிதானமும் அதிக அச்சமும் தேவை.

8. நபித்தோழர்கள்தான் குர்ஆன், ஹதீஸை நாம் புரிவதற்கு அளவுகோல் ஆவார்கள்.

9. நபித்தோழர்களுக்கு பிறகு நமக்கு மார்க்கத்தில் வழிகாட்டி தாபியீன்கள் ஆவார்கள்.

10. மார்க்க விஷயங்களில் நபித்தோழர்களிடம் இல்லாத கருத்தை ஏற்பதும் பரப்புவதும் நரகத்திற்குத்தான் வழிவகுக்கும்.

................................

# பாடம் 5

# வழிகேடர்களின் வகை!

وَاعْلَمْ أَنَّ الْـخُرُوجَ مِنْ الطَّرِيقِ عَلَىٰ وَجْهَينِ أَمَّا أَحَدُهُمَا فَرَجُلٌ قَدْ زَلَّ عَنْ الطَّرِيقِ وَهُوَ لَا يُرِيدُ إِلَّا الْـخَيْرَ فَلَا يُقْتَدَىٰ بِزَلَّتِهِ فَإِنَّهُ هَالِكٌ وَآخَرُ عَانَدَ الْـحَقَّ وَخَالَفَ مَنْ كَانَ قَبْلَهُ مِنْ الْـمُتَّقِينَ فَهُوَ ضَالٌّ مُضِلٌّ شَيْطَانٌ مَرِيدٌ فِي هٰذِهِ الْأُمَّةِ حَقِيقٌ عَلَىٰ مَنْ يَعْرِفُهُ أَنْ يُحَذِّرَ النَّاسَ مِنْهُ وَيُبَيِّنَ لِلنَّاسِ قِصَّتَهُ لِئَلَّا يَقَعَ أَحَدٌ فِي بِدْعَتِهِ فَيَهْلِكَ

9. அறிந்துகொள்! நிச்சயமாக (நேரான) பாதையிலிருந்து வெளியேறுவது இருவகையில் உள்ளது. அவற்றில் ஒன்று, ஒருவர் (நேரான) பாதையிலிருந்து சறுக்கிவிட்டார். அவர் நன்மையைத் தவிர வேறு எதையும் நாடவில்லை. ஆகவே, இவர் தடம் புரண்டதின் காரணமாக இவரை பின்பற்ற முடியாது. ஏனெனில், இவர் அழியக்கூடியவர் ஆவார். மற்றொருவர் சத்தியத்தை அறிந்தே அதற்கு முரண்பட்டார். அவருக்கு முன்னர் இருந்த இறையச்சமுடையவர்களுக்கு மாற்றமாக நடந்தார். ஆகவே, அவர் வழிகெட்டவர், வழிகெடுப்பவர், இந்த உம்மத்தில் மிக கெட்ட ஷைத்தான் ஆவார். யார் அவரை அறிவார்களோ அவர் அவரைப் பற்றி மக்களை எச்சரிக்க வேண்டும். அவரின் உண்மை நிலையை மக்களுக்கு விவரிக்க வேண்டும். ஏனெனில், ஒருவரும் அவருடைய பித்அத்தில் -அனாச்சாரத்தில் வீழ்ந்து அழிந்து விடக்கூடாது என்பதற்காக.

## படிப்பினைகள்

*1. ஒருவர் நல்ல எண்ணம் உள்ளவர், பார்ப்பதற்கு நல்லமல்களை செய்கிறார் என்பதற்காக அவரின் சிந்தனைகளும் கொள்கைகளும் சரியாக இருக்கும் என்று கூறிவிட முடியாது, அவற்றை மார்க்க ஆதாரங்களில் உரசிப்பார்க்காமல்.*

*2. பேசுகின்ற பலருக்கும் அதிகம் அமல்கள் செய்கிற அநேகரிடம் சரியான கல்வி ஞானமும் உண்மையான நேர்வழியும் இருக்கும் என்று கூறிவிட முடியாது.*

*3. மார்க்கத்தை முறையாக, தகுந்த ஆசிரியர்களிடம் கற்பதும், ஸஹாபாக்களின் வழிகளை அறிந்து அவற்றை பின்பற்றுவதும் மட்டுமே நேர்வழியாகும். அவ்வாறு செயல்படுபவர் மட்டுமே நேர்வழி பெற்றவர் ஆவார், அவரிடம் கவர்ச்சியான பேச்சுகள் இல்லை என்றாலும் சரி.*

*4. தக்வா என்பது சரியான கல்வியோடும் உண்மையான நேர்வழியோடும் இருக்க வேண்டும். அத்தகைய தக்வாவை அடைந்தவர்கள் ஸஹாபாக்கள் ஆவார்கள். அவர்களின் ஈமானுக்கும் தக்வாவிற்கும் மனத்தூய்மைக்கும் அல்லாஹ் சான்று வழங்கி இருக்கிறான்.*

*அல்லாஹு தஆலா கூறுகிறான் :*

﴿فَأَنْزَلَ اللّٰهُ سَكِينَتَهُ عَلَىٰ رَسُولِهِ وَعَلَى الْمُؤْمِنِينَ وَأَلْزَمَهُمْ كَلِمَةَ التَّقْوَىٰ وَكَانُوا أَحَقَّ بِهَا وَأَهْلَهَا وَكَانَ اللّٰهُ بِكُلِّ شَيْءٍ عَلِيمًا۝﴾

*அல்லாஹ் தனது தூதர் மீதும் நம்பிக்கையாளர்கள் மீதும் தனது சகீனாவை (-தன் புறத்தில் இருந்து நிம்மதியையும் பொறுமையையும் கண்ணியத்தையும்) இறக்கினான். அவர்களுக்கு இறையச்சத்தின் வார்த்தையை அவசியமாக்கினான். (லா இலாஹ இல்லல்லாஹ் என்ற திரு கலிமாவை*

விரும்பி ஏற்கும்படி செய்தான்.) அவர்கள்தான் அதற்கு மிகத்தகுதியுடைவர்களாகவும் அதற்கு சொந்தக்காரரர்களாகவும் (-உரிமை உள்ளவர்களாகவும்) இருந்தார்கள். அல்லாஹ் எல்லாவற்றையும் நன்கறிந்தவனாக இருக்கின்றான். (அல்குர்ஆன் 48 : 26)

﴿مُحَمَّدٌ رَسُولُ اللهِ وَالَّذِينَ مَعَهُ أَشِدَّاءُ عَلَى الْكُفَّارِ رُحَمَاءُ بَيْنَهُمْ
تَرَاهُمْ رُكَّعًا سُجَّدًا يَبْتَغُونَ فَضْلًا مِنَ اللهِ وَرِضْوَانًا سِيمَاهُمْ
فِي وُجُوهِهِمْ مِنْ أَثَرِ السُّجُودِ ذٰلِكَ مَثَلُهُمْ فِي التَّوْرَاةِ وَمَثَلُهُمْ
فِي الْإِنْجِيلِ كَزَرْعٍ أَخْرَجَ شَطْأَهُ فَآزَرَهُ فَاسْتَغْلَظَ فَاسْتَوَىٰ
عَلَىٰ سُوقِهِ يُعْجِبُ الزُّرَّاعَ لِيَغِيظَ بِهِمُ الْكُفَّارَ وَعَدَ اللهُ
الَّذِينَ آمَنُوا وَعَمِلُوا الصَّالِحَاتِ مِنْهُمْ مَغْفِرَةً وَأَجْرًا عَظِيمًا﴾

முஹம்மது அல்லாஹ்வின் தூதர் ஆவார்கள். அவருடன் இருக்கின்றவர்கள் நிராகரிப்பாளர்கள் மீது கடினமானவர்கள், தங்களுக்கு மத்தியில் கருணையாளர்கள் ஆவர். (தொழுகையில்) ருகூஃ செய்தவர்களாக சுஜூது செய்தவர்களாக அவர்களை நீர் காண்பீர். அவர்கள் அல்லாஹ்வின் அருளையும் பொருத்தத்தையும் விரும்புகிறார்கள். அவர்களின் தோற்றம் அவர்களின் முகங்களில் சுஜூ(சிரம் பணிந்து வணங்குவ)தின் அடையாளமாக இருக்கும். இது தவ்ராத்தில் கூறப்பட்ட அவர்களின் தன்மையாகும். இன்ஜீலில் கூறப்பட்ட அவர்களின் தன்மையாவது, (நெல், கோதுமை போன்ற) ஒரு விளைச்சலைப் போலாகும். அது (-அந்த விளைச்சல்) தனது (செடியின்) காம்பை வெளியாக்கியது. இன்னும் அதைப் பலப்படுத்தியது. பிறகு அது தடிப்பமாக ஆனது. தனது தண்டின் மீது அது உயர்ந்து நின்று, விவசாயிகளை கவர்கிறது. (இப்படித்தான் நம்பிக்கையாளர்களை

அல்லாஹ் ஓங்கி உயரச் செய்வான்,) அவர்கள் மூலமாக நிராகரிப்பாளர்களை அவன் ரோஷமூட்டுவதற்காக. நம்பிக்கை கொண்டு நன்மைகளை செய்த அவர்களுக்கு அல்லாஹ் (தனது) மன்னிப்பையும் மகத்தான கூலியையும் வாக்களித்துள்ளான்.

(அல்குர்ஆன் 48 : 29)

5. நேர்வழி எது, வழிகேடு எது என்று தெளிவாகிவிட்டது.

6. எந்த காரணத்தை கூறியும் வழிகேட்டை பின்பற்ற முடியாது.

7. உண்மையை அறிந்த பின்னர் மன முரண்டாக வழிகேட்டை தேர்ந்தெடுப்பது பாவத்தால் மிக கடுமையானதாகும்.

8. வழிகேட்டை பரப்புகின்றவர்கள் மனித ஷைத்தான்கள் ஆவார்கள்.

9. ஸஹாபாக்கள் நேர்வழியில் இருந்தார்கள் என்பதை அறிந்த பின்னரும் அவர்கள் காண்பித்த வழியில் மார்க்கத்தை பின்பற்றாத ஒவ்வொருவரும் மார்க்கத்தில் மிக ஆபத்தானவர்கள். விஷம் எப்படி உயிரைக் கொல்லுமோ அவ்வாறே அவர்களின் வழிகேடான கொள்கைகள் நமது ஈமானை கொன்று விடும்.

10. வழிகேட்டையும் வழிகேடர்களையும் மக்களுக்கு தெளிவுப்படுத்துவது இன்னும் அவர்கள் பற்றி எச்சரிப்பது சத்தியத்தை அறிந்த மார்க்க அறிஞர்களின் கடமையாகும்.

..................................

# பாடம் 6

# பின்பற்றுவதும் நம்புவதும்தான் இஸ்லாம்!

وَاعْلَمْ رَحِمَكَ اللهُ أَنَّهُ لَا يَتِمُّ إِسْلَامُ عَبْدٍ حَتَّى يَكُونَ مُتَّبِعًا مُصَدِّقًا مُسْلِمًا فَمَنْ زَعَمَ أَنَّهُ قَدْ بَقِيَ شَيْءٌ مِنْ أَمْرِ الْإِسْلَامِ لَمْ يَكْفُونَاهُ أَصْحَابُ مُحَمَّدٍ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ فَقَدْ كَذَّبَهُمْ وَكَفَىٰ بِهِ فُرْقَةً وَطَعْنًا عَلَيْهِمْ وَهُوَ مُبْتَدِعٌ ضَالٌّ مُضِلٌّ مُحْدِثٌ فِي الْإِسْلَامِ مَا لَيْسَ فِيهِ

10. அறிந்துகொள்! அல்லாஹ் உனக்கு கருணைப் புரிவானாக! ஓர் அடியானுடைய இஸ்லாம் முழுமை அடையாது, எதுவரை என்றால் அவர் (மார்க்கத்தை) பின்பற்றுபவராக, உண்மைப்படுத்துபவராக, (அல்லாஹ்வுக்கும் தூதருக்கும்) முற்றிலும் பணிந்தவராக ஆகின்றவரை. யார் ஒருவர் இஸ்லாமிய மார்க்க காரியங்களில் ஒன்று மீதமாக இருக்கின்றது; அதை முஹம்மது ﷺ அவர்களுடைய தோழர்கள் நமக்கு போதுமாக்கி வைக்கவில்லை (நபித்தோழர்கள் அதை நமக்கு தெளிவுப்படுத்தவில்லை) என்று கூறுவாரோ அவர் அந்த நபித்தோழர்களை பொய்ப்பித்துவிட்டார். பிரிவினைக்கும் அவர்கள் மீது பழிபோடுவதற்கும் அவரே போதுமானவர். இன்னும் அவர் ஓர் அனாச்சாரக்காரர், வழிகேடர், வழிகெடுப்பவர், இஸ்லாமிய மார்க்கத்தில் அதில் இல்லாததை புதிதாக ஏற்படுத்துபவர் ஆவார்.

## படிப்பினைகள்

*1.* இஸ்லாம் என்பது அல்லாஹ்வின் மார்க்கம்.

*2.* அது சில கட்டுப்பாடுகளையும் அடிப்படைகளையும் உடையது.

*3.* இஸ்லாம் என்பது பிறரை பின்பற்றுவதிலிருந்து வெளியேறி, அல்லாஹ்வின் தூதரை பின்பற்றுவதில் ஐக்கியமாகுவதாகும். பிறர் கூறுவதை நம்புவதை விட்டும் விலகி, அல்லாஹ்வும் நபி ﷺ அவர்களும் கூறுவதை நம்புவதாகும்.

*4.* ஒருவர் ஷஹாதா கூறிவிடுவதால் மட்டும் அல்லது நான் உண்மையான முஸ்லிம் என்று சொல்வதால் மட்டும் அவர் முஸ்லிம் காமில் - முழுமையான முஸ்லிமாக ஆகிவிட முடியாது.

*5.* தஸ்தீக் - அல்லாஹ்வும் ரஸூலும் கூறுவதை உண்மை என்றும் அதுவே நேர்வழி என்றும் ஏற்று, நம்பிக்கைக் கொள்ள வேண்டும். இத்திபா - அல்லாஹ்வின் வேதத்தையும் நபியின் ஸஹீஹான ஸுன்னாவையும் எவ்வித நிபந்தனையும் இன்றி பின்பற்ற வேண்டும். இஸ்லாம் - அல்லாஹ்வுக்கும் ரஸூலுக்கும் முற்றிலும் பணிந்து நடக்க வேண்டும். குர்ஆனுக்கும் ஸஹீஹான ஹதீஸுக்கும் எவ்வித சாக்குபோக்கு கூறாமல் கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.

*6.* நபித்தோழர்களிடம் இல்லாத ஒன்று மார்க்கமாக ஆகவே முடியாது.

*7.* நபித்தோழர்கள் செய்யாததை செய்வதும் அவர்கள் கூறாத கொள்கைகளை ஏற்றுக் கொள்வதும் மிகப் பெரிய வழிகேடாகும், அனாச்சாரமாகும்.

*8. நம்மை விட நபித்தோழர்கள்தான் மார்க்கத்தை சரியாக அறிந்தவர்கள், புரிந்தவர்கள், பின்பற்றியவர்கள் ஆவார்கள்.*

*9. ஆகவே, அவர்களின் வழியில் சென்று மார்க்கத்தை பின்பற்றாத எல்லோரும் பித்அத்வாதிகள் ஆவார்கள், பார்ப்பதற்கு அழகான எத்தனை அமல்களை அவர்கள் செய்தாலும் சரி.*

*10. ஸஹாபாக்கள் அறியாத கருத்தை, கொள்கையை போதிப்பவர் மார்க்கத்தில் பிரிவினையை உண்டாக்கக் கூடியவர் ஆவார். அவர் முஸ்லிம் சமுதாயத்தை பிளவுப் படுத்தக் கூடியவர் ஆவார்.*

.................................

# பாடம் 7

# ஸுன்னாவிற்கு முழுமையாக கட்டுப்பட வேண்டும்!

وَاعْلَمْ رَحِمَكَ اللهُ أَنَّهُ لَيْسَ فِي السُّنَّةِ قِيَاسٌ وَلَا يُضْرَبُ لَهَا الْأَمْثَالُ وَلَا تَتَّبِعْ فِيهَا الْأَهْوَاءَ بَلْ هُوَ التَّصْدِيقُ بِآثَارِ رَسُولِ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ بِلَا كَيْفٍ وَلَا شَرْحٍ لَا يُقَالُ لِمَ وَكَيْفَ؟

11. அறிந்துகொள்! அல்லாஹ் உனக்கு கருணைப் புரிவானாக! நிச்சயமாக ஸுன்னாவில் கியாஸ் (-அறிவால் ஆராய்வது) இல்லை. ஸுன்னாவிற்கு முன்பாக உதாரணங்கள் கூறக்கூடாது. அதில் மன இச்சைகளை பின்பற்றக் கூடாது. மாறாக, ரஸூலுல்லாஹ் ﷺ உடைய ஹதீஸ்களை எப்படி (இது முடியும்?) என்று கேட்காமல்; (நமது அறிவின்படி) விளக்கம் கூறாமல் உண்மைப்படுத்த வேண்டும். (-ஸுன்னாவில் கூறப்பட்டதைக் குறித்து) ஏன், எப்படி என்று (கேள்வி) கேட்கக்கூடாது!

## படிப்பினைகள்

*1. முந்திய காலத்தில் இஸ்லாமிய கொள்கை இன்னும் நம்பிக்கை சார்ந்த விஷயங்களை ஸுன்னா என்று அழைத்தனர்.*

*2. அதற்கு காரணம், நபியவர்களின் ஸுன்னா, குர்ஆனுக்கு விளக்கமாக இருப்பதுடன் அதில் உள்ள கொள்கைக்கு சொல், செயல் ரீதியான தெளிவான விளக்கமாக இருக்கிறது.*

*3. குறிப்பாக கொள்கை சார்ந்த எந்த ஒரு விஷயத்திலும்*

சுய அறிவை பயன்படுத்தவோ, மனித புத்தியில் உதித்த தத்துவங்களை பேசவோ, மனதில் உதித்தவை என்று உளறல்களை பிதற்றவோ அறவே அனுமதி இல்லை.

4. நபியவர்கள் கூறிய ஹதீஸ்களில் இருந்துதான் இஸ்லாமிய கொள்கைகளை எடுக்க வேண்டுமே தவிர, கிரேக்க தத்துவத்திலிருந்தோ, மனித அறிவிலிருந்தோ அல்ல.

5. மார்க்கம் என்பது நம்பிக்கை கொள்வதிலும் பின்பற்றுவதிலும் இருக்கிறது.

6. மனிதனுக்கு அறிவு கொடுக்கப்பட்டதன் நோக்கம் அல்லாஹ் இன்னும் ரஸூல் ﷺ அவர்கள் கூறியதை சிந்தித்து புரிவதற்காக ஆகும்.

7. குர்ஆன் இன்னும் ஸுன்னாவில் முரண்பாடுகளை தேடவோ, அவற்றை குறை காணவோ, வியாக்கியானம் என்ற பெயரில் அவற்றுக்கு மாற்றுக் கருத்து கூறவோ அறிவு கொடுக்கப்பட வில்லை.

அல்லாஹு தஆலா கூறுகிறான் :

﴿وَمَا آتَاكُمُ الرَّسُولُ فَخُذُوهُ وَمَا نَهَاكُمْ عَنْهُ فَانْتَهُوا وَاتَّقُوا اللَّهَ إِنَّ اللَّهَ شَدِيدُ الْعِقَابِ﴾

தூதர் எதை உங்களுக்குக் கொடுத்தாரோ அதைப் பற்றிப் பிடியுங்கள். அவர் எதை உங்களுக்குத் தடுத்தாரோ அதை விட்டும் விலகிவிடுங்கள். அல்லாஹ்வை பயந்து கொள்ளுங்கள்! நிச்சயமாக அல்லாஹ் தண்டிப்பதில் கடுமையானவன் ஆவான் (அல்குர்ஆன் 59 : 7)

﴿إِنَّمَا كَانَ قَوْلَ الْمُؤْمِنِينَ إِذَا دُعُوا إِلَى اللَّهِ وَرَسُولِهِ لِيَحْكُمَ بَيْنَهُمْ أَنْ يَقُولُوا سَمِعْنَا وَأَطَعْنَا وَأُولَٰئِكَ هُمُ الْمُفْلِحُونَ﴾

*நம்பிக்கையாளர்களுடைய கூற்றாக இருப்பதெல்லாம், அவர்கள் அல்லாஹ் இன்னும் அவனது தூதர் பக்கம் அழைக்கப்பட்டால் - அவர் அவர்களுக்கு மத்தியில் தீர்ப்பளிப்பதற்காக - நாங்கள் செவியுற்றோம், கீழ்ப்படிந்தோம் என்று அவர்கள் கூறுவதுதான். அவர்கள்தான் வெற்றியாளர்கள் ஆவர். (அல்குர்ஆன் 24 : 51)*

*8. இவ்வாறு, ஒருவர் தனது அறிவினால் குர்ஆன், ஸுன்னாவின் மீது ஆட்சேபனை செய்தால் அது அவரின் நேரிய அறிவின் வெளிப்பாடு அல்ல. மாறாக, அது அவருடைய அறிவும் சிந்தனையும் கெட்டுவிட்டது என்பதற்கு அடையாளமாகும், ஷைத்தானுக்கு அவனது அறிவு கெட்டது போன்று.*

*9. குறிப்பாக கொள்கை சார்ந்த விஷயங்களில், அல்லாஹ்வின் தன்மைகள் இன்னும் பெயர்கள் விஷயத்தில் நபியவர்களின் ஹதீஸ்களை செவியுறும்போது குதர்க்கம் செய்யக் கூடாது.*

*10. அது எப்படி, அது ஏன், அதற்கு என்ன விளக்கம் என்று கேட்கக் கூடாது. செவியுற்றோம், நம்பிக்கை கொண்டோம் என்றுதான் கூற வேண்டும்.*

..................................

# பாடம் 8

# மார்க்கத்தில் கிரேக்க தத்துவம் பேசுவது கூடாது!

وَالْكَلَامُ وَالْخُصُومَةُ وَالْجِدَالُ وَالْـمِرَاءُ مُحْدَثٌ يَقْدَحُ الشَّكَّ فِي الْقَلْبِ
وَإِنْ أَصَابَ صَاحِبُهُ الْـحَقَّ وَالسُّنَّةَ

12. கிரேக்க தத்துவம் பேசுவதும், வாதம் செய்வதும், தர்க்கம் செய்வதும், குதர்க்கம் செய்வதும் (மார்க்கத்தில்) புதிதாக உருவாக்கப்பட்ட காரியங்களாகும். அவை உள்ளத்தில் சந்தேகத்தை ஏற்படுத்திவிடும். தர்க்கம் செய்பவர் சத்தியத்திற்கும் ஸுன்னாவிற்கும் உட்பட்டு நேரானதை பேசினாலும் சரியே.

## படிப்பினைகள்

*1. குர்ஆனும் ஹதீஸும் உள்ளத்தில் ஒளியையும் உறுதியையும் ஏற்படுத்தும்.*

*2. குர்ஆனுக்கும் ஹதீஸுக்கும் கட்டுப்படுதல் அவசியமாகும். அவற்றை மறுத்து அல்லது திரித்து பேசாமல் இருக்க வேண்டும்.*

*3. தர்க்கமும் கிரேக்க தத்துவமும் இறுதியில் குழப்பத்தையும் சந்தேகங்களையும் உண்டாக்கும்.*

*4. நபித்தோழர்கள் குர்ஆனையும் ஹதீஸையும்தான் அறிந்திருந்தார்கள். கிரேக்க தத்துவங்களை அல்ல.*

*5. நபித்தோழர்கள் குர்ஆனுக்கும் ஹதீஸுக்கும் கட்டுப்படுவதையும் கீழ்ப்படிவதையும் அறிந்திருந்தார்கள்.*

**6.** குர்ஆன், ஸுன்னாவில் தர்க்கம் செய்வதையோ, அல்லது அவற்றை மறுத்துப் பேசுவதையோ, அவற்றை புறக்கணித்து விட்டு, அறிவை முன்னிலைப்படுத்துவதையோ ஸஹாபாக்கள் அறிந்திருக்கவில்லை.

**7.** அல்லாஹ்வின் விஷயத்தில் தர்க்கம் செய்வதும் அவனது தன்மைகளைப் பற்றி வேத அறிவின்றி விவாதம் செய்வதும் அல்லாஹ்வின் வேதத்தில் பழிக்கப்பட்ட செயலாகும்.

அல்லாஹு தஆலா கூறுகிறான் :

﴿وَمِنَ النَّاسِ مَنْ يُجَادِلُ فِي اللّٰهِ بِغَيْرِ عِلْمٍ
وَلَا هُدًى وَلَا كِتَابٍ مُنِيرٍ۝﴾

அல்லாஹ்வின் விஷயத்தில் எவ்வித அறிவுமில்லாமலும் நேர்வழி (-தெளிவான விளக்கம் ஆதாரம்) இல்லாமலும் (அவனுடைய வாதத்தை) வெளிப்படுத்தக்கூடிய (-தெளிவுபடுத்தக்கூடிய இறை)வேதமும் இல்லாமலும் தர்க்கிப்பவர் மனிதர்களில் இருக்கின்றார். (அல்குர்ஆன் 22 : 8)

அல்லாஹு தஆலா கூறுகிறான் :

﴿مَا يُجَادِلُ فِي آيَاتِ اللّٰهِ إِلَّا الَّذِينَ كَفَرُوا﴾

நிராகரித்தவர்களைத் தவிர (வேறு யாரும்) அல்லாஹ்வின் அத்தாட்சிகளில் விவாதம் செய்ய மாட்டார்கள்.
(அல்குர்ஆன் 40 : 4)

**8.** அல்லாஹ்வின் வசனங்களையும் நாம் செவியுறும்போது உடனே நாம் கூற வேண்டியது, ஸமிஃனா வ அதஃனா என்றுதான். அதற்கு மாறாக, தத்துவங்களை வைத்து அவற்றை சரிபார்ப்பதோ, அல்லது அவற்றை மாற்றி, அவை கூறும்

பொருளுக்கு மாற்றமாக வேறு பொருளை கூறுவதோ கூடாது.

அல்லாஹுத் தஆலா கூறுகிறான் :

﴿آمَنَ الرَّسُولُ بِمَا أُنْزِلَ إِلَيْهِ مِنْ رَبِّهِ وَالْمُؤْمِنُونَ كُلٌّ آمَنَ بِاللَّهِ وَمَلَائِكَتِهِ وَكُتُبِهِ وَرُسُلِهِ لَا نُفَرِّقُ بَيْنَ أَحَدٍ مِنْ رُسُلِهِ وَقَالُوا سَمِعْنَا وَأَطَعْنَا غُفْرَانَكَ رَبَّنَا وَإِلَيْكَ الْمَصِيرُ﴾

தூதர் தமது இறைவனிடமிருந்து தமக்கு இறக்கப்பட்டதை நம்பிக்கை கொண்டார், நம்பிக்கையாளர்களும் (நம்பிக்கை கொண்டனர்). எல்லோரும் அல்லாஹ்வையும், அவனுடைய மலக்குகளையும், அவனுடைய வேதங்களையும், அவனுடைய தூதர்களையும் நம்பிக்கை கொண்டார்கள். அவர்கள் கூறினார்கள்: அவனுடைய தூதர்களில் எவருக்கு மத்தியிலும் பிரிவினை காட்டமாட்டோம்; செவியுற்றோம்; கட்டுப்பட்டோம்; எங்கள் இறைவா! உன் மன்னிப்பை(க் கேட்கிறோம்). உன் பக்கமே (எங்கள்) மீளுமிடம் இருக்கிறது. (அல்குர்ஆன் 2 : 285)

9. மார்க்க விஷயங்களில் எந்த ஒன்றையும் குர்ஆன், இன்னும் ஸஹீஹான ஸுன்னாவின் ஆதாரத்தை வைத்தே அணுக வேண்டும். அறிவைக் கொண்டு மார்க்கத்தை அணுகுவது கூடாது.

10. நேர்வழியை அறிவதற்கு அல்லாஹ் இன்னும் ரஸூலுடைய வழிகாட்டுதல் தேவை. நேர்வழியை அறிந்து அதன்படி நடப்பதற்கு அறிவு மட்டும் போதுமென்று இருந்திருந்தால் அல்லாஹ் நபிமார்களை அனுப்பி இருக்க வேண்டிய அவசியமில்லை. இன்னும் வேதங்களை இறக்கி இருக்க வேண்டிய அவசியமில்லை.

................................

# பாடம் 9

## அல்லாஹ்வின் விஷயத்தில் தர்க்கம் செய்வது கூடாது!

وَاعْلَمْ رَحِمَكَ اللهُ أَنَّ الْكَلَامَ فِي الرَّبِّ تَعَالَىٰ مُحْدَثٌ وَهُوَ بِدْعَةٌ وَضَلَالَةٌ وَلَا يُتَكَلَّمُ فِي الرَّبِّ إِلَّا بِمَا وَصَفَ بِهِ نَفْسَهُ عَزَّ وَجَلَّ فِي الْقُرْآنِ وَمَا بَيَّنَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ لِأَصْحَابِهِ فَهُوَ جَلَّ ثَنَاؤُهُ وَاحِدٌ ﴿لَيْسَ كَمِثْلِهِ شَيْءٌ وَهُوَ السَّمِيعُ الْبَصِيرُ﴾

13. அறிந்துகொள்! அல்லாஹ் உனக்கு கருணைப் புரிவானாக! ரப்பு -அல்லாஹ்வின் விஷயத்தில் தத்துவ விவாதம் செய்வது புதிதாக உருவாக்கப்பட்ட செயலாகும். அது ஓர் அனாச்சாரமாகும், வழிகேடாகும். அல்லாஹ் தன்னை எதைக்கொண்டு குர்ஆனில் வர்ணித்தானோ, இன்னும் ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் தங்கள் தோழர்களுக்கு எதை விவரித்தார்களோ அதைக்கொண்டே தவிர அல்லாஹ்வின் விஷயத்தில் பேசக்கூடாது. கம்பீரமான புகழுக்குரிய அவன் ஒருவனாக, தனித்தவனாக இருக்கின்றான்.

அவனைப் போன்று எதுவும் இல்லை. அவன் அனைத்தையும் நன்கு செவியுறுபவன், நன்கு உற்று நோக்குபவன் ஆவான். (அல்குர்ஆன் 42 : 11)

رَبُّنَا أَوَّلٌ بِلَا مَتَىٰ وَآخِرٌ بِلَا مُنْتَهَىٰ يَعْلَمُ السِّرَّ وَأَخْفَىٰ وَعَلَىٰ عَرْشِهِ اسْتَوَىٰ وَعِلْمُهُ بِكُلِّ مَكَانٍ لَا يَخْلُو مِنْ عِلْمِهِ مَكَانٌ

14. நமது ரப்பு முதலாமவன், அவன் எப்போதிலிருந்து இருக்கின்றான்

என்று கேட்கக்கூடாது. அவன் முடிவின்றி இறுதியானவன். அவன் இரகசியத்தையும் அதைவிட மறைவானதையும் அவன் அறிகின்றான். அவன் அர்ஷ் மீது உயர்ந்திருக்கின்றான். அவனுடைய அறிவு எல்லா இடத்திலும் இருக்கின்றது. அவனுடைய அறிவை விட்டு எந்த இடமும் நீங்கிவிட முடியாது.

وَلَا يَقُولُ فِي صِفَاتِ الرَّبِّ كَيْفَ؟ وَلِمَ؟ إِلَّا شَاكٌّ فِي اللهِ تَبَارَكَ وَتَعَالَىٰ

15. ரப்புடைய பண்புகளில் எப்படி, ஏன்? என்று (கேள்வி) கேட்கக் கூடாது. இல்லையென்றால், அவன் அல்லாஹ் تَبَارَكَ وَتَعَالَىٰ உடைய விஷயத்தில் சந்தேகித்தவனாக ஆகிவிடுவான்.

## படிப்பினைகள்

*1. அல்லாஹ் தன்னை அறிமுகப்படுத்த குர்ஆனை இறக்கி, தூதரை அனுப்பினான்.*

*2. அடியார்கள் அல்லாஹ்வை அறிவதற்கு இரண்டு வழிகள்தான் உள்ளன. ஒன்று குர்ஆன், மற்றொன்று ஹதீஸ்.*

*3. ஆகவே, அல்லாஹ்வைப் பற்றி பேசுபவர் குர்ஆன் இன்னும் ஹதீஸில் உள்ளதை மட்டுமே அல்லாஹ்வின் விஷயத்தில் பேச வேண்டும்.*

*4. இன்னும் அல்லாஹ் தன்னைப் பற்றி கூறியதையும் நபி ﷺ அவர்கள் அல்லாஹ்வைப் பற்றி கூறியதையும் மறுக்கவோ, மாற்றவோ, சுயமாக விவரிக்கவோ, ஒப்பிட்டு பேசவோ கூடாது.*

*5. அல்லாஹ், அல்குர்ஆனில் தன்னை வர்ணித்ததிலிருந்தும் நபி ﷺ அவர்கள் அல்லாஹ்வை வர்ணித்ததிலிருந்தும் மட்டுமே நாம் அல்லாஹ்வை வர்ணிக்க வேண்டும்.*

*6. அந்த வர்ணிப்புகளுக்கு மாற்றமாக வர்ணிக்க கூடாது.*

*7.* அவன் தனக்கு இருக்கிறது என்று கூறிய தன்மைகளை அவனை விட்டு நீக்கக் கூடாது.

*8.* அவன் தனக்கு எதை இல்லை என்று கூறினானோ, அவன் எதை தன்னை விட்டும் மறுத்தானோ அதை மட்டுமே நாம் நீக்க வேண்டும், மறுக்க வேண்டும்.

*9.* குர்ஆன், இன்னும் ஸுன்னாவின் ஆதாரங்களில் உள்ளது போன்று அல்லாஹ்வின் தன்மைகளை நாம் வர்ணிக்க வேண்டும். இன்னும், அவ்வாறே நாம் நம்பிக்கை கொள்ள வேண்டும். அதன் பின்னர் அமைதி காக்க வேண்டும். நமது கற்பனையால் ஏதும் விளக்கம் கூறக் கூடாது.

*10.* அந்த தன்மை எப்படி என்றோ, அந்த தன்மை அவனுக்கு இருக்குமா, அந்த தன்மையின் விளக்கம் என்ன என்றோ கேள்வி கேட்கக் கூடாது.

................................

# பாடம் 10

## நாம் அவசியம் நம்பிக்கை கொள்ள வேண்டியவை பற்றிய விளக்கம்!

والْقُرْآنُ كَلَامُ اللهِ وَتَنْزِيلُهُ وَنُورُهُ لَيْسَ بِمَخْلُوقٍ لِأَنَّ الْقُرْآنَ مِنْ اللهِ وَمَا كَانَ مِنْ اللهِ فَلَيسَ بِمَخْلُوقٍ وَهٰكَذَا قَالَ مَالِكُ بْنُ أَنَسٍ وَأَحْمَدُ بْنُ حَنْبَلٍ وَالْفُقَهَاءُ قَبْلَهُمَا وَبَعْدَهُمَا وَالْـمِرَاءُ فِيهِ كُفْرٌ

16. அல்குர்ஆன் அல்லாஹ்வுடைய பேச்சு, அவன் இறக்கிய வேதம், அவனுடைய ஒளி ஆகும். அது படைக்கப்பட்டதல்ல. ஏனெனில், குர்ஆன் அல்லாஹ்வைச் சேர்ந்ததாகும். எது அல்லாஹ்வை சேர்ந்ததாக இருக்கிறதோ அது படைக்கப்பட்டதாக இருக்காது. இவ்வாறுதான், மாலிக் இப்னு அனஸ் ﵀ அவர்களும் அஹ்மது இப்னு ஹன்பல் ﵀ அவர்களும் அந்த இருவருக்கு முன்னர் வாழ்ந்த அறிஞர்களும் அந்த இருவருக்கு பின்னர் வந்த அறிஞர்களும் கூறினார்கள். இதில் தர்க்கம் செய்வது நிராகரிப்பாகும்.

وَالْإِيمَانُ بِالرُّؤْيَةِ يَوْمَ الْقِيَامَةِ يَرَوْنَ اللهَ عَزَّ وَجَلَّ بِأَبْصَارِ رُؤُوسِهِمْ وَهُوَ يُـحَاسِبُهُمْ بِلَا حَاجِبٍ وَلَا تُرْجُمَانٍ

16. மறுமை நாளில் அல்லாஹ்வைப் பார்ப்பதை நம்பிக்கை கொள்ள வேண்டும். முஃமின்கள் அல்லாஹ்வை தங்கள் தலைகளில் உள்ள புறக்கண்களால் பார்ப்பார்கள். அவன் அவர்களிடம் கேள்வி கணக்கு கேட்பான், (அல்லாஹ்விற்கும் அடியார்களுக்கும் நடுவில்) எவ்வித தடுப்பும் இருக்காது. இன்னும் மொழிபெயர்ப்பாளரும் இருக்க மாட்டார்.

وَالْإِيْمَانُ بِالْـمِيزَانِ يَوْمَ الْقِيَامَةِ يُوزَنُ فِيهِ الْـخَيْرُ وَالشَّرُّ لَهُ كِفَّتَانِ وَلِسَانٌ

17. மறுமை நாளில் (அல்லாஹ் நிறுவக்கூடிய) தராசை நம்பிக்கை கொள்ள வேண்டும். அதில் நன்மையும் தீமையும் நிறுக்கப்படும். அதற்கு இரண்டு தட்டுகளும் ஒரு நாவும் இருக்கும்.

وَالْإِيْمَانُ بِعَذَابِ الْقَبْرِ وَمُنْكَرٍ وَنَكِيرٍ

18. கப்ர் -மண்ணறையில் வேதனை, தண்டனை உண்டு என்பதையும்; முன்கர், நகீர் ஆகிய இரு வானவர்களையும் நம்பிக்கை கொள்ள வேண்டும்.

وَالْإِيمَانُ بِـحَوْضِ رَسُولِ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ وَلِكُلِّ نَبِيٍّ حَوْضٌ إِلَّا صَالِحٌ النَّبِيُّ عَلَيْهِ السَّلَامُ فَإِنَّ حَوْضَهُ ضَرْعُ نَاقَتِهِ

19. ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களுடைய நீர் தடாகத்தை நம்பிக்கை கொள்ள வேண்டும். ஒவ்வொரு நபிக்கும் நீர் தடாகம் உண்டு. ஆனால், ஸாலிஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்களைத் தவிர. அவர்களுடைய நீர் தடாகம் அவர்களுடைய (அற்புதமாகிய) ஒட்டகத்தின் மடியாகும்.

والْإِيمَانُ بِشَفَاعَةِ رَسُولِ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ لِلْمُذْنِبِينَ الْـخَاطِئِينَ فِي يَوْمِ الْقِيَامَةِ وَعَلَى الصِّرَاطِ وَيُـخْرِجُهُمْ مِنْ جَوْفِ جَهَنَّمَ وَمَا مِنْ نَبِيٍّ إِلَّا لَهُ شَفَاعَةٌ وَكَذٰلِكَ الصِّدِّيقِينَ وَالشُّهَدَاءِ وَالصَّالِـحِينَ وَلِلّٰهِ بَعْدَ ذٰلِكَ تَفَضُّلٌ كَثِيرٌ فِي مَنْ يَشَاءُ وَالْـخُرُوجُ مِنْ النَّار بَعْدَمَا احْتَرَقُوا وَصَارُوا فَحْمًا

20. பாவம் செய்த குற்றவாளிகளுக்காக மறுமை நாளில் ரஸூலுல்லாஹ் ﷺ உடைய சிபாரிசு உண்டு; இன்னும் சிராத் பாலத்தின் மீதும் (அதில் கடப்பவர்களுக்காகவும்) சிபாரிசு உண்டு என்று நம்பிக்கை கொள்ள வேண்டும். அவர்களை நரகத்தின் நடுப்பகுதியிலிருந்து நபி ﷺ அவர்கள் வெளியேற்றுவார்கள். எந்த ஒரு நபியும் இல்லை அவருக்கு சிபாரிசு (உடைய தகுதி) இருந்தே தவிர. (ஒவ்வொரு நபியும் அல்லாஹ்வின் அனுமதி கொண்டு சிபாரிசு செய்வார்கள்) அவ்வாறே, சித்தீக் -உண்மையாளர்கள், ஷஹீத் -இறைப்பாதையில் உயிர் நீத்த தியாகிகள், ஸாலிஹ் -நல்லவர்கள் ஆகியோரும் சிபாரிசு செய்வார்கள். இதற்கு பின்னரும் அவன் நாடுகின்ற மக்கள் அல்லாஹ்வின் அதிகமான பேருபகாரம் கிடைக்கப்பெறுவார்கள். இன்னும் அவர்கள் (-நரகவாசிகள்) எரிந்து கரிக்கட்டைகளாக மாறிய பின்னர் நரகத்திலிருந்து வெளியேறுவார்கள். இவையனைத்தையும் நம்பிக்கை கொள்ளவேண்டும்.

وَالْإِيمَانُ بِالصِّراطِ عَلَىٰ جَهَنَّمَ يَأْخُذُ الصِّرَاطُ مَنْ شَاءَ اللّٰهُ وَيَـجُوزُ مَنْ شَاءَ اللّٰهُ وَيَسْقُطُ فِي جَهَنَّمَ مَنْ شَاءَ اللّٰهُ وَلَهُمْ أَنْوَارٌ عَلَىٰ قَدْرِ إِيمَانِهِمْ

21. நரகத்தின் மீது அமைக்கப்படுகின்ற பாலத்தை நம்பிக்கை கொள்ள வேண்டும். அல்லாஹ் யாரை நாடுகின்றானோ அவரை அந்த பாலம் பிடித்துக்கொள்ளும். அல்லாஹ் நாடியவர்கள் கடந்துவிடுவார்கள். அல்லாஹ் நாடியவர்கள் நரகத்தில் விழுந்துவிடுவார்கள். அவர்களுக்கு அவர்களின் ஈமானுடைய தகுதிக்கு ஏற்ப (-அந்த பாலத்தின் மீது) ஒளிகள் வெளிப்படும்.

وَالْإِيمَانُ بِالْأَنْبِيَاءِ وَالْـمَلَائِكَةِ

22. நபிமார்களையும் வானவர்களையும் நம்பிக்கை கொள்ள வேண்டும்.

وَالْإِيمَانُ بِأَنَّ الْـجَنَّةَ حَقٌّ وَالنَّارَ حَقٌّ وَأَنَّهُمَا مَـخْلُوقَتَانِ الْـجَنَّةُ فِي السَّمَاءِ السَّابِعَةِ وَسَقْفُهَا الْعَرْشُ وَالنَّارُ تَحْتَ الْأَرْضِ السَّابِعَةِ السُّفْلَىٰ وَهُمَا مَـخْلُوقَتَانِ قَدْ عَلِمَ اللّٰهُ تَعَالَىٰ عَدَدَ أَهْلِ الْـجَنَّةِ وَمَنْ يَدْخُلُهَا وَعَدَدَ أَهْلِ النَّارِ وَمَنْ يَدْخُلُهَا لَا تَفْنِيَانِ أَبَدًا هُمَا مَعَ بَقَاءِ اللّٰهِ تَبَارَكَ وَتَعَالَىٰ أَبَدَ الْآبِدِينَ فِي دَهْرِ الدَّاهِرِينَ

23. நிச்சயமாக சொர்க்கமும் நரகமும் உண்மை; நிச்சயமாக அவை இரண்டும் படைக்கப்பட்டிருக்கின்றன என்று நம்பிக்கை கொள்ள வேண்டும். சொர்க்கம் ஏழாவது வானத்தில் இருக்கின்றது. அதன் முகடு அர்ஷ் ஆகும். நரகம் ஏழாவது பூமிக்கு கீழே இருக்கின்றது. அவை இரண்டும் படைக்கப்பட்டு விட்டன. சொர்க்கவாசிகளின் எண்ணிக்கையையும் அதில் நுழைபவர்களின் எண்ணிக்கையையும் அல்லாஹ் திட்டமாக அறிந்திருக்கின்றான். நரகவாசிகளின் எண்ணிக்கையையும் அதில் நுழைபவர்களின் எண்ணிக்கையும் அல்லாஹ் திட்டமாக அறிந்திருக்கின்றான். அவை இரண்டும் எப்போதும் அழியாது. அல்லாஹ் அவை இரண்டுக்கும் கொடுத்த நிரந்தரத்துடன் அவை இரண்டும் காலமெல்லாம் நிரந்தரமாக இருக்கும்.

وَآدَمُ عَلَيْهِ السَّلَامُ كَانَ فِي الْـجَنَّةِ الْبَاقِيَةِ الْـمَخْلُوقَةِ فَأُخْرِجَ مِنْهَا بَعْدَمَا عَصَى اللّٰهَ عَزَّ وَجَلَّ

24. ஆதம் عليه السلام அவர்கள் படைக்கப்பட்ட நிரந்தரமான சொர்க்கத்தில்தான் இருந்தார். அவர் கண்ணியமும் கம்பீரமும் மிக்க அல்லாஹ்விற்கு மாறுசெய்த பின்னர் அதிலிருந்து வெளியாக்கப்பட்டார்.

وَالْإِيمَانُ بِالْـمَسِيحِ الدَّجَّالِ

25. மசீஹ் அத் தஜ்ஜாலை நம்பிக்கை கொள்ள வேண்டும்.

وَالْإِيمَانُ بِنُزُولِ عِيسَىٰ ابْنِ مَرْيَمَ عَلَيْهِ السَّلَامُ يَنْزِلُ فَيَقْتُلُ الدَّجَّالَ وَيَتَزَوَّجُ وَيُصَلِّي خَلْفَ الْقَائِمِ مِنْ آلِ مُحَمَّدٍ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ وَيَمُوتُ وَيَدْفَنُهُ الْـمُسْلِمُونَ

26. ஈசா இப்னு மர்யம் ﵇ இறங்குவதையும் நம்பிக்கை கொள்ள வேண்டும். அவர் இறங்குவார். தஜ்ஜாலை கொல்வார். அவர் திருமணம் முடிப்பார். முஹம்மது ﷺ அவர்களுடைய குடும்பத்தில் தோன்றக்கூடிய நீதமானவர் பின்னால் நின்று அவர் தொழுகையை நிறைவேற்றுவார். இன்னும் அவர் மரணிப்பார். முஸ்லிம்கள் அவரை நல்லடக்கம் செய்வார்கள்.

وَالْإِيمَانُ بِأَنَّ الْإِيمَانَ قَوْلٌ وَعَمَلٌ وَعَمَلٌ وَقَوْلٌ وَنِيَّةٌ وَإِصَابَةٌ يَزِيدُ وَيَنْقُصُ يَزِيدُ مَا شَاءَ اللهُ وَيَنْقُصُ حَتّٰى لَا يَبْقٰى مِنْهُ شَيْءٌ

27. நிச்சயமாக ஈமான் என்பது சொல்லும் செயலும் ஆகும்; இன்னும் செயலும் சொல்லும் எண்ணமும் செயல்பாடும் ஈமான் ஆகும்; அது கூடும், குறையும்; அல்லாஹ் நாடுகின்ற அளவு அது கூடும், குறையும். அது (ஈமான்) குறைந்து கொண்டே சென்றால், இறுதியாக அதில் எதுவும் மீதமிருக்காது. இவ்வாறுதான் ஈமானுடைய விஷயத்தில் நம்பிக்கை கொள்ள வேண்டும்.

## படிப்பினைகள்

***1.** மார்க்கம் சம்பந்தப்பட்ட எந்த ஒரு விஷயத்தையும் சிறப்பிற்குரிய சான்றோர் - ஸஹாபாக்கள், தாபியீன்கள், அவர்கள் வழிவந்த நல்லவர்கள் கூறியதற்கு மாற்றமாக நாம் நம்பிக்கைக் கொள்ளக் கூடாது, இன்னும் செய்யக் கூடாது.*

***2.** அல்லாஹ்வின் தன்மைகளை படைப்புகளின் தன்மையின் மீது*

மதிப்பிடக் கூடாது. அது ஒன்று அல்லாஹ்வின் தன்மைகளை மறுப்பதற்கு, அல்லது படைப்புகளின் தன்மையோடு ஒப்பிடுவதற்கு, அல்லது அந்த தன்மைகளை மாற்றுவதற்கு வழிவகுக்கும். இவை அனைத்தும் வழிகேடுகளே!

3. மறுமை சம்பந்தப்பட்ட விஷயங்களை உலக விஷயங்களோடு ஒப்பிடக் கூடாது, மதிப்பிடக்கூடாது.

4. உலக நியதிகளை அடிப்படையாக வைத்து மார்க்கம் கூறி இருக்கின்ற மறுமை சம்பந்தப்பட்ட விஷயங்களை மறுக்கக் கூடாது, சந்தேகிக்க கூடாது.

5. அல்லாஹ்வை ரப்பு என்று ஏற்றுக் கொள்வது உண்மை என்றால் அவன் கூறியதையும் அவனது தூதர் கூறியதையும் நம்பிக்கை கொள்ள வேண்டும். இன்னும் அவை உண்மை என ஏற்றுக் கொள்ள வேண்டும்.

6. உலகமும் மறுமையும் அல்லாஹ்வின் படைப்பாகும். அவை இரண்டிலும் அல்லாஹ்வின் ஆட்சியும் அவனது நாட்டமும் கட்டளையும்தான் நிறைவேறும்.

7. ஆகவே, அவன் எதைக் கூறினானோ, அவனது ரஸூல் ﷺ அவர்கள் எதைக் கூறினார்களோ அவை அனைத்தையும் நம்பிக்கைக் கொள்வதுதான் நமக்கு நன்மையும் நேர்வழியும் வெற்றியும் ஆகும்.

8. ஈமான் - நம்பிக்கைக்குப் பின்னர் நல்லமல்கள் மிக முக்கியம். அமல்கள் குறைவது ஈமானை பாதிக்கும். முற்றிலும் அமல்களை விடுவது ஈமானை விட்டே வெளியேற்றி விடும்.

9. படைப்புகளை படைப்பதற்கு முன்பே அவர்களில் யார் சொர்க்கவாசி, யார் நரகவாசி என்பதை அல்லாஹ் அறிந்திருக்கிறான்.

10. அல்லாஹ்வின் அறிவை விட்டு எதுவும் மறைந்தது இல்லை.

................................

# பாடம் 11

## நபித்தோழர்கள் விஷயத்தில் நாம் பின்பற்ற வேண்டிய வழிகாட்டல்கள்!

وَخَيْرُ هٰذِهِ الْأُمَّةِ بَعْدَ وَفَاةِ نَبِيِّهَا أَبُو بَكْرٍ وَعُمَرُ وَعُثْمَانُ هٰكَذَا رُوِيَ لَنَا عَنْ ابْنِ عُمَرَ قَالَ كُنَّا نَقُولُ وَرَسُولُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ بَيْنَ أَظْهُرِنَا إِنَّ خَيْرَ النَّاسِ بَعْدَ رَسُولِ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ أَبُو بَكْرٍ وَعُمَرُ وَعُثْمَانُ وَيَسْمَعُ النَّبِيُّ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ بِذٰلِكَ فَلَا يُنْكِرُهُ

28. இந்த உம்மத்தில் அதனுடைய நபி ﷺ அவர்களின் மரணத்திற்கு பின்னர் சிறந்தவர் அபூ பக்ர் رضي الله عنه, இன்னும் உமர் رضي الله عنه, இன்னும் உஸ்மான் رضي الله عنه ஆவார்கள். இவ்வாறுதான் நமக்கு இப்னு உமர் رضي الله عنه அவர்களிடமிருந்து அறிவிக்கப்பட்டுள்ளது. அவர் கூறினார்: ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் எங்களுக்கு மத்தியில் உயிருடன் இருக்கும்போது நாங்கள் கூறிக்கொண்டிருந்தோம்: “நிச்சயமாக ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களுக்குப் பின்னர் மக்களில் சிறந்தவர் அபூ பக்ர் رضي الله عنه, இன்னும் உமர் رضي الله عنه, இன்னும் உஸ்மான் رضي الله عنه ஆவார்கள். இதை நபி ﷺ அவர்கள் செவியுறுவார்கள். இன்னும் இதை மறுக்க மாட்டார்கள்.

ثُمَّ أَفْضَلُ النَّاسِ بَعْدَ هٰؤُلَاءِ عَلِيٌّ وَطَلْحَةُ وَالزُّبَيْرُ وَسَعْدُ بْنُ أَبِي وَقَّاصٍ وَسَعِيدُ بْنُ زَيْدٍ وَعَبْدُ الرَّحْمٰنِ بْنُ عَوْفٍ وَأَبُو عُبَيْدَةَ

عَامِرُ بْنُ الْـجَرَّاحِ وَكُلُّهُمْ يَصْلَحُ لِلْخِلَافَةِ

இவர்களுக்கு பின்னர் மக்களில் சிறந்தவர்கள் அலீ ﵁, தல்ஹா ﵁, அஸ்ஸுபைர் ﵁, ஸஃஅது இப்னு அபீ வக்காஸ் ﵁, சயீது இப்னு சைத் ﵁, அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ஃப் ﵁, அபூ உபைதா ஆமிர் இப்னுல் ஜர்ராஹ் ﵁ ஆவார்கள். இன்னும் இவர்கள் எல்லோரும் (நபிக்குப் பின்னர்) கிலாஃபத்திற்கு தகுதியானவர்கள் ஆவார்கள்.

ثُمَّ أَفْضَلُ النَّاسِ بَعْدَ هٰؤُلَاءِ أَصْحَابُ رَسُولِ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ الْقَرْنُ الْأَوَّلُ الَّذِي بُعِثَ فِيهِمْ الْـمُهَاجِرُونَ الْأَوَّلُونَ وَالْأَنْصَارُ وَهُمْ مَنْ صَلَّى الْقِبْلَتَيْنِ ثُمَّ أَفْضَلُ النَّاسِ بَعْدَ هٰؤُلَاءِ مَنْ صَحِبَ رَسُولَ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ يَوْمًا أَوْ شَهْرًا أَوْ سَنَةً أَوْ أَقَلَّ مِنْ ذٰلِكَ أَوْ أَكْثَرَ

இவர்களுக்கு பின்னர் மக்களில் சிறந்தவர்கள் ரஸூலுல்லாஹ் ﷺ உடைய தோழர்கள் ஆவார்கள். முதல் தலைமுறையினர். இவர்களில்தான் நபி ﷺ அவர்கள் நபியாக அனுப்பப்பட்டார்கள். இவர்களில்தான் (இஸ்லாமில்) முந்தியவர்களான முஹாஜிர்கள் இன்னும் அன்சாரிகள் இருக்கின்றார்கள். இவர்கள்தான் இரண்டு கிப்லாவையும் முன்னோக்கி தொழுதவர்கள். பிறகு, இவர்களுக்குப் பின்னர் மக்களில் சிறந்தவர்கள் ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களுடன் ஒரு நாள் அல்லது ஒரு மாதம் அல்லது ஒரு வருடம் அல்லது அதைவிட குறைவாக அல்லது அதைவிட அதிகமாக தோழமையில் இருந்தவர்கள் ஆவார்கள்.

تَرَحَّمْ عَلَيْهِ وَتَذَكَّرْ فَضْلَهُ وَتَكُفَّ عَنْ زَلَّتِهِ وَلَا نَذْكُرُ أَحَدًا مِنْهُمْ إِلَّا بِخَيْرٍ لِقَوْلِ رَسُولِ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ إِذَا ذُكِرَ أَصْحَابِي فَأَمْسِكُوا وَقَالَ سُفْيَانُ بْنُ عُيَيْنَةَ: مَنْ نَطَقَ فِي أَصْحَابِ رَسُولِ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ بِكَلِمَةٍ فَهُوَ صَاحِبُ هَوًى

அவர்களுக்காக அல்லாஹ்விடம் கருணை வேண்டி நீ துஆ கேட்க வேண்டும். அவர்களின் சிறப்புகளை நீ (மக்களிடம்) நினைவு கூரவேண்டும். அவர்களின் தவறுகளைப் பற்றி (பேசாமல் உன்னை) நீ தடுத்துக்கொள்ள வேண்டும். அவர்களில் யார் ஒருவரையும் நாம் நன்மையைக் கொண்டே தவிர நினைவு கூர மாட்டோம். ஏனெனில், ரஸூலுல்லாஹ் ﷺ கூறினார்கள் : எனது தோழர்கள் பற்றி (தவறாக) பேசப்பட்டால் நீங்கள் (பேசாமல் நாவை) தடுத்துக் கொள்ளுங்கள்! ஸுஃப்யான் இப்னு உயைனா கூறுகின்றார்: ரஸூலுல்லாஹ் ﷺ உடைய தோழர்கள் விஷயத்தில் தகாத வார்த்தையைக் கொண்டு யார் பேசுவாரோ அவர் ஸாஹிபுல் ஹவா -மன இச்சையை பின்பற்றுபவர் ஆவார்.

وَقَالَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ أَصْحَابِي كَالنُّجُومِ بِأَيِّهِمْ اقْتَدَيْتُمْ اهْتَدَيْتُمْ

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: எனது தோழர்கள் நட்சத்திரங்களை போன்றோர். அவர்களில் யாரை நீங்கள் பின்பற்றினாலும் நேர்வழி பெறுவீர்கள்![1]

1. இது பலவீனமான அறிவிப்பாகும். இதனுடைய கருத்து மற்ற ஸஹீஹான அறிவிப்புகளின் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

## படிப்பினைகள்

1. சான்றோர், சான்றோரை மதித்தது போன்று நாமும் அவர்களை மதிக்க வேண்டும். அவர்கள் தங்களுக்குள் யாரை உயர்த்தினார்களோ அவரை நாமும் உயர்த்த வேண்டும்.

2. நபியவர்கள் தங்கள் தோழர்களை நம்மை விட அதிகம் அறிந்தவர்கள். இன்னும் நபியவர்கள் எதையும் யார் விஷயத்திலும் அல்லாஹ்வின் புறத்திலிருந்து வஹ்யி இல்லாமல் சுயமாக கூற மாட்டார்கள்.

3. ஆகவே, தங்களது தோழர்கள் விஷயத்தில் நபியவர்கள் என்னென்ன சிறப்புகளை கூறினார்களோ அவை அனைத்தும் வஹ்யின் படி கூறியவை ஆகும். ஆகவே, அவற்றை ஏற்பதும் நம்புவதும் அதன்படி தோழர்களை மதிப்பதும் ஈமான் சார்ந்த விஷயங்களாக ஆகிவிடுகின்றன.

4. ஈமானோடு நபியவர்களை காண்பதும் அவர்களது சபையில் கலந்துகொள்வதும் இவ்வுலகில் இணையில்லாத சிறப்பாகும். ஆகவே, அந்த பாக்கியம் பெற்றவர்களுக்கு இணையாக இவ்வுலகில் யாரும் ஆக முடியாது.

5. இன்னும் அவர்களை குறை பேசுகின்ற தகுதியும் யாருக்கும் கிடையாது.

6. யார் தனது இம்மை, மறுமையை நாசமாக்கிக்கொள்ள விரும்புகிறானோ அவன்தான் நபித்தோழர்களை குறைபேசுவான்.

7. நபித்தோழர்கள் நாம் பின்பற்றத் தகுந்தவர்கள், நமக்கு அவர்கள்தான் சிறந்த இமாம்கள் - முன்னோடிகள். அவர்களுக்கு பின்னால் வந்த எந்த இமாமும் அறிஞரும் அவர்களை விட சிறந்தவராக, பின்பற்றத் தகுந்தவராக ஆக முடியாது.

8. நபித்தோழர்களிடம் இல்லாத ஒன்றை மார்க்கமாக எடுத்து யார் செயல்படுவாரோ அவர் ஒருபோதும் நேர்வழியை அடைய முடியாது. அவர் வழிகேட்டில்தான் செல்வார்.

9. நபித்தோழர்களைப் பற்றி பேசும்போதும், அவர்களின் பெயரைக் கூறும்போதும் அவர்களுக்காக நாம் அல்லாஹ்விடம் துஆ கேட்க வேண்டும்.

10. நபித்தோழர்களின் குறைகளை விமர்சிக்கக் கூடாது. அவர்களை தரக்குறைவாக பேசக் கூடாது. ஸஹாபாக்களை மதிப்பு குறைத்து யார் பேசுவார்களோ அவர்கள் பித்அத் வாதிகள், இந்த உம்மத்தில் கேடுகெட்டவர்கள், முந்திய காலத்தில் வாழ்ந்த நயவஞ்சகக் கூட்டத்தின் வழித்தோன்றல்கள் ஆவார்கள். ஸஹாபாக்களின் உயர்வைப் பற்றி பேசுகின்ற பல வசனங்கள் அல்குர்ஆனில் பல இடங்களில் உள்ளன. அவற்றில் சில வசனங்களை முன்பு கூறி இருக்கிறோம். ஸஹாபாக்களில் முஹாஜிர், இன்னும் அன்ஸாரி என்ற இரு வகுப்பாரை குறித்து அல்லாஹ் புகழ்ந்து சொல்கிற இரு வசனங்களை இங்கு பார்ப்போம்.

﴿لِلْفُقَرَاءِ الْمُهَاجِرِينَ الَّذِينَ أُخْرِجُوا مِنْ دِيَارِهِمْ وَأَمْوَالِهِمْ يَبْتَغُونَ فَضْلًا مِنَ اللهِ وَرِضْوَانًا وَيَنْصُرُونَ اللهَ وَرَسُولَهُ أُولَٰئِكَ هُمُ الصَّادِقُونَ ۝ وَالَّذِينَ تَبَوَّءُوا الدَّارَ وَالْإِيمَانَ مِنْ قَبْلِهِمْ يُحِبُّونَ مَنْ هَاجَرَ إِلَيْهِمْ وَلَا يَجِدُونَ فِي صُدُورِهِمْ حَاجَةً مِمَّا أُوتُوا وَيُؤْثِرُونَ عَلَىٰ أَنْفُسِهِمْ وَلَوْ كَانَ بِهِمْ خَصَاصَةٌ وَمَنْ يُوقَ شُحَّ نَفْسِهِ فَأُولَٰئِكَ هُمُ الْمُفْلِحُونَ ۝﴾

(இன்னும் அந்த செல்வங்கள்) தங்கள் இல்லங்களை விட்டும் தங்கள் செல்வங்களை விட்டும் வெளியேற்றப்பட்ட ஏழை முஹாஜிர்களுக்கு கொடுக்கப்பட வேண்டும். அவர்கள் அல்லாஹ்வின் சிறப்பையும் பொருத்தத்தையும் தேடுகிறார்கள். அல்லாஹ்விற்கும் அவனது தூதருக்கும் உதவுகிறார்கள். அவர்கள்தான் உண்மையாளர்கள். (மதீனாவில்) வீடுகளை அமைத்துக் கொண்டவர்கள் இன்னும் அவர்களுக்கு (-முஹாஜிர்களுக்கு) முன்னதாக ஈமானையும் ஏற்றுக்கொண்டவர்கள் தங்களிடம் ஹிஜ்ரா செய்து வந்தவர்களை நேசிக்கின்றார்கள். தங்களுக்கு கொடுக்கப்பட்டவற்றில் தங்கள் நெஞ்சங்களில் (தங்களுக்கு என்று) எந்தத் தேவையையும் அவர்கள் காணமாட்டார்கள். தங்களுக்கு (வறுமையும்) கடுமையான தேவை(யும்) இருந்தாலும் தங்களை விட (முஹாஜிர்களைத்தான்) தேர்ந்தெடுப்பார்கள். (-அவர்களுக்குத்தான் முன்னுரிமை கொடுப்பார்கள்.) யார் தனது உள்ளத்தின் கருமித்தனத்தை விட்டும் பாதுகாக்கப்படுவாரோ அவர்கள்தான் வெற்றியாளர்கள் ஆவார்கள்.

(அல்குர்ஆன் 59 : 7, 8)

.................................

# பாடம் 12

## ஆட்சியாளர் விஷயத்தில் நாம் பின்பற்ற வேண்டிய வழிகாட்டல்கள்!

وَالسَّمْعُ وَالطَّاعَةُ لِلْأَئِمَّةِ فِيمَا يُحِبُّ اللهُ وَيَرْضَىٰ وَمَنْ وَلِيَ الْخِلَافَةَ بِإِجْمَاعِ النَّاسِ عَلَيْهِ وَرِضَاهُمْ بِهِ فَهُوَ أَمِيرُ الْمُؤْمِنِينَ

29. இமாம்களின் (-மன்னர்களின்) கட்டளைக்கு செவிசாய்க்க வேண்டும், (அவர்களுக்கு) கீழ்ப்படிய வேண்டும், அல்லாஹ் விரும்புகின்ற, இன்னும் திருப்திபடுகின்ற விஷயங்களில். யார் மக்களின் ஏகோபித்த முடிவுடனும் அவர்களின் திருப்தியுடனும் கிலாஃபத்திற்காக பொறுப்பேற்றாரோ அவர் அமீருல் முஃமினீன் ஆவார்.

وَلَا يَحِلُّ لِأَحَدٍ أَنْ يَبِيتَ لَيْلَةً وَلَا يَرَىٰ أَنَّ عَلَيْهِ إِمَامًا بَرًّا كَانَ أَوْ فَاجِرًا

30. தன் மீது இமாம் (-மன்னர், ஆட்சியாளர்) இல்லாமல் அல்லது தன் மீது இமாம் இருக்கின்றார் என்று கருதாமல் ஓர் இரவு கூட கழிப்பது எவருக்கும் ஹலால் ஆகுமானதல்ல, அவர் (-அந்த இமாம்) நல்லவராக இருந்தாலும் சரி, அல்லது பாவியாக இருந்தாலும் சரி.

وَالْحَجُّ وَالْغَزْوُ مَعَ الْإِمَامِ مَاضٍ وَصَلَاةُ الْجُمُعَةِ خَلْفَهُمْ جَائِزَةٌ وَيُصَلِّي بَعْدَهَا سِتَّ رَكْعَاتٍ يَفْصِلُ بَيْنَ كُلِّ رَكْعَتَيْنِ هٰكَذَا قَالَ أَحْمَدُ بْنُ حَنْبَلٍ رَحِمَهُ اللهُ

31. இமாமுடன் சேர்ந்து ஹஜ்ஜு செய்வதும் போர் செய்வதும் நடந்து

கொண்டே இருக்க வேண்டும். அவர்களுக்கு பின்னர் ஜுமுஆ தொழுவது நிறைவேறும். ஜுமுஆவிற்கு பின்னர், இரண்டு இரண்டு ரக்அத்துகளாக பிரித்து ஆறு ரக்அத்துக்கள் (சுன்னத்) தொழ வேண்டும். இவ்வாறுதான் அஹ்மது இப்னு ஹன்பல் ﷬ கூறுகிறார்.

وَالْـخِلَافَةُ فِي قُرَيْشٍ إِلَىٰ أَنْ يَنْزِلَ عِيسَىٰ بنُ مَرْيَمَ عَلَيْهِ السَّلَامُ

32. ஈசா இப்னு மர்யம் ﵇ இறங்குகின்ற வரை கிலாஃபத் குறைஷிகளில்தான் இருக்க வேண்டும்.

وَمَنْ خَرَجَ عَلَىٰ إِمَامٍ مِنْ أَئِمَّةِ الْـمُسْلِمِينَ فَهُوَ خَارِجِيٌّ وَقَدْ شَقَّ عَصَا الْـمُسْلِمِينَ وَخَالَفَ الْآثَارَ وَمِيتَتُهُ مِيتَةٌ جَاهِلِيَّةٌ

33. முஸ்லிம்களுடைய ஆட்சியாளர்களில் ஓர் ஆட்சியாளருக்கு எதிராக யார் புரட்சி செய்வாரோ அவர் காரிஜி ஆவார். அவர் முஸ்லிம்களின் ஒற்றுமையை உடைத்துவிட்டார். (முஸ்லிம்களின் பலத்தை உடைத்துவிட்டார்.) ஹதீஸ்களுக்கு மாறுசெய்துவிட்டார். அவருடைய மரணம் ஜாஹிலிய்யா மரணமாக இருக்கும்.

وَلَا يَـحِلُّ قِتَالُ السُّلْطَانِ وَالْـخُرُوجُ عَلَيْهِمْ وَإِنْ جَارُوا وَذٰلِكَ قَوْلُ رَسُولِ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ لِأَبِي ذَرٍّ الْغِفَارِيِّ اصْبِرْ وَإِنْ كَانَ عَبْدًا حَبَشِيًّا وَقَوْلُهُ لِلأَنْصَارِ اصْبِرُوا حَتّٰى تَلْقَوْنِي عَلَى الْـحَوْضِ وَلَيْسَ مِنْ السُّنَّةِ قِتَالُ السُّلْطَانِ فَإِنَّ فِيهِ فَسَادَ الدِّينِ وَالدُّنْيَا

34. மன்னர்களுக்கு எதிராக யுத்தம் செய்வது கூடாது; அவர்களுக்கு (-மன்னர்களுக்கு) எதிராக புரட்சி செய்வது கூடாது, அவர்கள் அநியாயம் செய்தாலும் சரியே. இதற்கு காரணம் என்னவென்றால், ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் அபூ தர் ؓ அவர்களுக்கு கூறினார்கள்: நீ பொறுமையாக இரு! அவர் (-உனது ஆட்சியாளர்)

நீக்ரோ அடிமையாக இருந்தாலும் சரி.[2]

நபி ﷺ அவர்கள் அன்சாரிகளுக்கு கூறினார்கள்: என்னை நீங்கள் நீர் தடாகத்தில் சந்திக்கின்றவரை பொறுமையாக இருங்கள்![3] மன்னரிடம் போர் செய்வது நபிவழியல்ல. நிச்சயமாக அதில் மார்க்கம் மற்றும் உலகம் ஆகிய இரண்டின் சீர்கேடுகள் இருக்கின்றன.

## படிப்பினைகள்

*1 இஸ்லாமிய மார்க்கத்தில் ஆட்சியாளர்கள் கண்ணியத்திற்குரியவர்கள்.*

*2 மார்க்கத்திற்கு முரணற்ற காரியங்களில் அவர்களுக்கு மக்கள் கீழ்ப்படிந்து நடப்பதில்தான் நன்மைகள் உண்டு. ஆட்சியாளருக்கு எதிராக கலகம் செய்வதில் தீமை இருக்கிறது.*

*3. ஆட்சியாளரை விட்டு விலகி இருப்பதும் அவரை எதிர்த்து கலகம் செய்வதும் இஸ்லாமிய மார்க்கத்தில் பெரும் குற்றமாகும்.*

*4. மார்க்கத்தை மீறுவதற்கு யார் கட்டளை இட்டாலும் அவருக்கு நாம் கீழ்ப்படியக் கூடாது*

*5. குறைஷிகளின் சிறப்பில் வேறு யாரும் போட்டிப் போட முடியாது. அது மார்க்கம் அவர்களுக்கு வழங்கிய சிறப்பாகும்.*

*6. இஸ்லாமிய நாட்டில் ஒருவர் வசிப்பவராக இருந்து, அந்த நாட்டு ஆட்சியாளருக்கு அவர் பைஅத் செய்து தரவில்லை என்றால் அது பெரும் பாவமாக, பெரும் குற்றமாக மார்க்கத்தில் கருதப்படும்.*

*7. ஆட்சியை கொடுப்பவனும் அல்லாஹ். ஆட்சியிலிருந்து அகற்றுபவனும் அல்லாஹ் ஆவான்.*

..................................

2. அறிவிப்பாளர் : அபூ தர், நூல் : இப்னு மாஜா, எண் : 2972

3. அறிவிப்பாளர் : அனஸ் ؓ நூல்: புகாரி எண் : 3973

# பாடம் 13

## காரிஜிய்யாக்கள் விஷயத்தில் நாம் பின்பற்ற வேண்டிய வழிகாட்டல்கள்!

وَلَا يَـحِلُّ قِتَالُ الْـخَوَارِجِ إِلَّا إِذَا عَرَضُوا لِلْمُسْلِمِينَ فِي أَنْفُسِهِمْ وَأَمْوَالِهِمْ وَأَهْلِيهِمْ وَلَيْسَ لَهُ إِذَا فَارَقُوهُ أَنْ يَطْلُبَهُمْ وَلَا يُـجَهِّزَ عَلَىٰ جَرِيـحِهِمْ وَلَا يَأْخُذَ فَيْئَهُمْ وَلَا يَقْتُلَ أَسِيرَهُمْ وَلَا يَتَّبِعَ مُدْبِرَهُمْ

35. காரிஜிய்யா பிரிவை சேர்ந்தவர்களிடம் போர் செய்வது கூடாது. அவர்கள் முஸ்லிம்களுக்கு அவர்களின் உயிர்கள், பொருள்கள், இன்னும் குடும்பங்களில் குறுக்கீடு செய்தாலே தவிர. காரிஜிய்யாக்கள் (போர் மைதானத்தை விட்டு) பிரிந்து சென்றால் அவர்களை விரட்டிச் செல்வது மன்னருக்கு அனுமதி இல்லை. இன்னும் (போர் மைதானத்தில்) காயப்பட்டவர்களை கொல்வதில் தீவிரம் காட்ட மாட்டார்; அவர்களின் பொருள்களை கனீமத்தாக எடுக்க மாட்டார்; அவர்களின் கைதிகளை கொல்ல மாட்டார்; அவர்களில் புறமுதுகிட்டு ஓடுபவர்களை பின்தொடர்ந்து செல்ல மாட்டார்.

### படிப்பினைகள்

*1. இஸ்லாமிய மார்க்கத்தில் மனிதர்களின் உடல், பொருள், கண்ணியம் ஆகியவற்றுக்கு முழுமையான பாதுகாப்பு உண்டு.*

*2. ஆனால், ஒருவர் பிறர் மீது எல்லை மீறி விட்டால் அவர் அதற்குரிய தண்டனையை கண்டிப்பாக பெறுவார்.*

*3. ஒருவர் அஹ்லுஸ் ஸுன்னா உடைய கொள்கைக்கு மாறாக இருக்கின்ற காரணத்தினால் அவர் உடனே தண்டனைக்குரியவர்*

என்ற நிலைக்கு வந்துவிட மாட்டார். அது குறித்து முடிவெடுப்பது மன்னர் மற்றும் நீதிபதிகளின் பணியாகும்.

4. யார் பொது மக்களின் உயிர் பொருளுக்கு அச்சுறுத்தலாக ஆகிவிடுவாரோ அவர் மீது மன்னர் கடும் நடவடிக்கை எடுப்பார்.

5. தவறான கொள்கைகளை மக்களுக்கு மத்தியில் பரப்புவதும் அதன் பக்கம் மக்களை அழைப்பதும் அதை ஏற்க தூண்டுவதும் மார்க்கத்தில் பெரும் குற்றமாகும். அதற்குரிய தண்டனையை அந்த தவறுக்கு ஏற்ப மன்னர் அல்லது நீதிபதி முடிவு செய்வார்.

..................................

# பாடம் 14

## அல்லாஹ்விற்கு மாறுசெய்வது ஒருபோதும் கூடாது!

وَاعْلَمْ رَحِمَكَ اللهُ أَنَّهُ لَا طَاعَةَ لِبَشَرٍ فِي مَعْصِيَةِ اللهِ عَزَّ وَجَلَّ

36. அறிந்துகொள்! அல்லாஹ் உனக்கு கருணை காட்டுவானாக! நிச்சயமாக கண்ணியத்திற்கும் கம்பீரத்திற்கும் உரிய அல்லாஹ்விற்கு மாறுசெய்வதில் மனிதர்களில் யாருக்கும் கீழ்ப்படிவது அறவே கூடாது.

### படிப்பினைகள்

*1. முழுமையான கீழ்ப்படிதல் அல்லாஹ்விற்கும் அவனது தூதருக்கும் மட்டும்தான்.*

*2. தூதருக்கு கீழ்ப்படிவது அல்லாஹ்விற்கு கீழ்ப்படிவதாகும். தூதருக்கு மாறுசெய்வது அல்லாஹ்விற்கு மாறு செய்வதாகும்.*

*3. மனிதர்களில் யாராக இருந்தாலும் அவருக்கு கீழ்ப்படிதல் நிபந்தனைக்கு உட்பட்டதாகும். அதாவது, அதில் அல்லாஹ்விற்கு மாறுசெய்தலோ அவனது தூதருக்கு மாறுசெய்தலோ இருக்கக்கூடாது.*

*4. யார் அல்லாஹ் உடைய சட்டத்தை மீறி பிறருக்கு கீழ்ப்படிவாரோ அவர் பெரும் வழிகேட்டில் சென்றுவிட்டார். இத்தகைய குற்றம் மனிதனை ஷிர்க் அல்லது குஃப்ர் வரை கொண்டுபோய் சேர்த்துவிடும்.*

..............................

# பாடம் 15

## முஸ்லிம்கள் விஷயத்தில் நாம் பின்பற்ற வேண்டிய வழிகாட்டல்கள்!

وَمَنْ كَانَ مِنْ أَهْلِ الْإِسْلَامِ فَلَا تَشْهَدْ لَهُ بِعَمَلٍ خَيْرٍ وَلَا شَرٍّ فَإِنَّكَ لَا تَدْرِي بِمَا يُـخْتَمُ لَهُ عِنْدَ الْـمَوْتِ تَرْجُو لَهُ رَحْمَةَ اللهِ وَتَخَافُ عَلَيْهِ ذُنُوبَهُ وَلَا تَدْرِي مَا يَسْبِقُ لَهُ عِنْدَ الْـمَوْتِ إِلَى اللهِ مِنْ النَّدَمِ وَمَا أَحْدَثَ اللهُ فِي ذٰلِكَ الْوَقْتِ إِذَا مَاتَ عَلَى الْإِسْلَامِ تَرْجُو لَهُ رَحْمَةَ اللهِ وَتَخَافُ عَلَيْهِ ذُنُوبَهُ

37. முஸ்லிம்களில் யாருக்கும் நல்லதைக்கொண்டும் சாட்சி கூறாதே! தீயதைக் கொண்டும் சாட்சி கூறாதே! ஏனெனில், மரண நேரத்தில் அவருக்கு எதைக்கொண்டு (அமல்கள்) முடிக்கப்படும் என்று நீ அறிய மாட்டாய்! (-அவருடைய இறுதி முடிவு எப்படி இருக்கும்? என்று நீ அறிய மாட்டாய்). அவருக்காக அல்லாஹ்வின் அருளை நீ ஆதரவு வைக்க வேண்டும். அவர் மீது அவருடைய பாவங்களைப் பற்றியும் நீ பயப்பட வேண்டும். மரண நேரத்தில் அவருக்காக அல்லாஹ்விடம் எது முந்துகிறது, அதாவது (பாவத்தை நினைத்து அவர்) வருந்துவது இன்னும் அந்த நேரத்தில் அல்லாஹ் என்ன செய்கிறான் என்பது ஆகிய இதில் எதையும் நீ அறிய மாட்டாய். அவர் இஸ்லாமுடைய நிலையில் இறந்துவிட்டால் அவருக்காக அல்லாஹ்வின் அருளை நீ ஆதரவு வைக்க வேண்டும்; அவர் மீது அவருடைய பாவங்களைப் பற்றி நீ பயப்பட வேண்டும்.

## படிப்பினைகள்

*1. நமக்கு மார்க்கம் நிர்ணயித்த அளவை மீறி நாம் நடக்கக் கூடாது.*

*2. நாம் பிறர் மீது அவரின் வெளிப்படையான அமலுக்கு ஏற்ப நல்லெண்ணம் வைக்க வேண்டும்.*

*3. ஆனால், அவரின் அமலை வைத்து அவர் சொர்க்க வாசிதான் என்று முடிவு கூறக் கூடாது. மனிதர்களின் உள்ளங்களையும் அவர்களின் இறுதி முடிவையும் அல்லாஹ்தான் அறிந்தவன்.*

*4. பாவம் செய்பவர்களை நாம் பார்த்தால் அவர்களை நாம் தடுக்க வேண்டும், எச்சரிக்க வேண்டும், நல்லுபதேசம் செய்ய வேண்டும். ஆனால், அவரை நரகவாதி என்று முடிவு செய்யக் கூடாது.*

*5. அல்லாஹ்வின் அதிகாரத்திலும் அவனது மறைவான ஞானத்திலும் நாம் எல்லை மீறக் கூடாது.*

*6. ஒருவரை சொர்க்கவாசி என்றோ நரகவாசி என்றோ முடிவு செய்வது அல்லாஹ்வின் அதிகாரம் ஆகும்.*

.................................

# பாடம் 16

# பாவத்திற்கு பரிகாரம் உண்டு!

وَمَا مِنْ ذَنْبٍ إِلَّا وَلِلْعَبْدِ مِنْهُ تَوْبَةٌ

38. எந்த ஒரு பாவமும் இல்லை, அடியானுக்கு அதிலிருந்து தவ்பா செய்வதற்கு வாய்ப்பு இருந்தே தவிர.

## படிப்பினைகள்

*1. நிச்சயமாக அல்லாஹ் அடியார்களின் தவ்பாவை அங்கீகரிப்பவன் ஆவான்.*

*2. மனிதன் அறிந்தோ அறியாமலோ பாவத்தில் வீழ்ந்து விடுகிறான். அவன் தனது தவறுக்காக வருந்தி, இனி அந்த தவறின் பக்கம் செல்ல மாட்டேன் என்று உறுதி எடுத்துக் கொண்டு, அல்லாஹ்வின் பக்கம் முற்றிலும் திரும்பி அவனிடம் மன்னிப்புக் கேட்டால் கண்டிப்பாக அல்லாஹ் அந்த அடியானை மன்னித்து விடுகிறான்.*

*3. எனது பாவத்தை அல்லாஹ் மன்னிக்க மாட்டான் என்று நிராசை அடைவது குஃப்ர் - இறை நிராகரிப்பாகும்.*

*4. அல்லாஹ் ஒருபோதும் தனது அடியார்களை நிராசை அடையச் செய்ய மாட்டான்.*

*5. தவ்பாவின் வாசல் உயிர் தொண்டைக் குழியை அடைகின்ற வரை அல்லது மேற்கிலிருந்து சூரியன் உதிக்கின்ற வரை திறந்திருக்கும்.*

**6.** *மறுமையில் ஷிர்க், குஃப்ர், நிஃபாக் ஆகியவற்றைத் தவிர எல்லா பாவங்களையும் அல்லாஹ் மன்னித்துவிடுவான். ஒன்று, தண்டனைக்குப் பிறகு மன்னிக்கலாம். அல்லது, தண்டனை இன்றி மன்னிக்கலாம். அல்லாஹ் நாடியவர்களை மன்னிப்பான். நாடியவர்களை தண்டிப்பான். அல்லாஹ் நன்கறிந்தவன்.*

*அல்லாஹு தஆலா கூறுகிறான் :*

﴿قُلْ يَا عِبَادِيَ الَّذِينَ أَسْرَفُوا عَلَىٰ أَنْفُسِهِمْ لَا تَقْنَطُوا مِنْ رَحْمَةِ اللَّهِ
إِنَّ اللَّهَ يَغْفِرُ الذُّنُوبَ جَمِيعًا إِنَّهُ هُوَ الْغَفُورُ الرَّحِيمُ۝﴾

*(நபியே!) கூறுவீராக! தங்கள் மீது வரம்புமீறிய என் அடியார்களே! (பாவங்கள் செய்து தங்களுக்குத் தாமே தீங்கிழைத்துக் கொண்டவர்களே!) அல்லாஹ்வின் கருணையில் இருந்து நிராசை ஆகாதீர்கள். நிச்சயமாக அல்லாஹ் எல்லாப் பாவங்களையும் மன்னிப்பான் (அடியான் திருந்தி, மன்னிப்புக் கேட்டுவிட்டால்). நிச்சயமாக அவன் மகா மன்னிப்பாளன், பெரும் கருணையாளன். (அல்குர்ஆன் 39 : 53)*

﴿وَمَنْ يَعْمَلْ سُوءًا أَوْ يَظْلِمْ نَفْسَهُ ثُمَّ يَسْتَغْفِرِ اللَّهَ
يَجِدِ اللَّهَ غَفُورًا رَحِيمًا۝﴾

*எவர், ஒரு தீமையைச் செய்துவிட்டு அல்லது தனக்குத்தானே அநீதி இழைத்து விட்டு, பிறகு (அதிலிருந்து விலகி, கைசேதப்பட்டு) அல்லாஹ்விடம் மன்னிப்புக் கோரினால் அல்லாஹ்வை மகா மன்னிப்பாளனாக பெரும் கருணையாளனாகக் காண்பார். (அல்குர்ஆன் 4 : 53)*

..............................

# பாடம் 17

## அறியப்பட்ட சட்டங்களை மறுக்காதே!

وَالرَّجْمُ حَقٌّ

39. (திருமணத்திற்கு பின்னர் விபச்சாரம் செய்த ஆணையும் பெண்ணையும்) கல்லெறிந்து கொல்ல வேண்டும் என்ற சட்டம் உண்மையாகும் (-உறுதியானதாகும்).

وَالْـمَسْحُ عَلَى الْـخُفَّيْنِ سُنَّةٌ

40. இரு காலுறைகள் மீது மஸ்ஹ் செய்வது நபிவழியாகும்.

وَتَقْصِيرُ الصَّلَاةِ فِي السَّفَرِ سُنَّةٌ

41. பயணத்தில் தொழுகையை சுருக்கி தொழுவது நபிவழியாகும்.

وَالصَّوْمُ فِي السَّفَرِ مَنْ شَاءَ صَامَ وَمَنْ شَاءَ أَفْطَرَ

42. பயணத்தில் நோன்பு வைப்பது, யார் விரும்புகிறாரோ அவர் நோன்பு வைக்கலாம். யார் விரும்புகிறாரோ அவர் நோன்பை விட்டுவிடலாம்.

وَلَا بَأْسَ بِالصَّلَاةِ فِي سَرَاوِيلَ

43. சுர்வால்களில் (-பைஜாமா அணிந்துகொண்டு) தொழுவது தவறில்லை.

### படிப்பினைகள்

*1.* *அல்லாஹ்வும் அவனது தூதரும் கூறிய சட்டங்கள் அனைத்தும்*

*நீதமானவையே! அவற்றில் குறை காண மனிதனுக்கு அறவே அருகதை இல்லை.*

*2. குற்றங்களுக்கு ஏற்ப அதற்குரிய தண்டனைகள் மார்க்கத்தில் அமையப் பெற்றிருக்கும். ஆழ்ந்து சிந்திப்பவர்களுக்கு அவற்றின் தாத்பரியங்கள் புரிய வரும்.*

*3. மனிதனின் சிற்றறிவிற்கு ஏற்ப இறை சட்டம் அமைய வேண்டும் என எதிர்பார்ப்பது மிகப் பெரிய வழிகேடாகும்.*

*4. குற்றங்கள் இல்லாமல் ஆக்க அல்லாஹ்வின் சட்டத்தை விட பொருத்தமான சட்டம் வேறொன்று அறவே இருக்க முடியாது.*

*5. அல்லாஹ்வின் தூதர் எதைக் கூறினார்களோ அது கொள்கை சமந்தப்பட்டதாக இருந்தாலும் சரி, அமல்கள் சம்பந்தப்பட்டதாக இருந்தாலும் சரி, குடும்பவியல் சம்பந்தப்பட்டதாக இருந்தாலும் சரி, பொருளாதாரம் சம்பந்தப்பட்டதாக இருந்தாலும் சரி, குற்றவியல் தண்டனைகள் சம்பந்தப்பட்டதாக இருந்தாலும் சரி அது அல்லாஹ் கூறியது போன்றுதான்.*

*6. ஆகவே, யார் ஒருவர் குர்ஆனில் இருந்தால் ஏற்போம், ஹதீஸில் இருந்தால் அதை பற்றி யோசிப்போம் என்றோ அல்லது அதை மறுப்பதற்கு என்ன காரணங்களை கூறினாலும் அவர் வழிகேடரே!*

*7. ஆகுமானதை உன் மீது தடுத்துக் கொள்ளாதே!*

*8. மார்க்கம் உனக்கு கொடுத்த சலுகையை பயன்படுத்த தயங்காதே!*

--------------------

# பாடம் 18

## நயவஞ்சகம்!

وَالنِّفَاقُ أَنْ تُظْهِرَ الْإِسْلَامَ وَتـُخْفِيَ الْكُفْرَ

44. நிஃபாக் -நயவஞ்சகம் என்பது நீ (வெளிரங்கத்தில்) இஸ்லாமை வெளிப்படுத்தி, குஃப்ர் -நிராகரிப்பை (உள்ளத்தில்) மறைப்பதாகும்.

## படிப்பினைகள்

*1. குஃப்ர் - இறை நிராகரிப்பு, ஷிர்க் - இணைவைத்தல் எவ்வளவு ஆபத்தானதோ அதுபோன்றே நிஃபாக் - நயவஞ்சகமும் மிகவும் ஆபத்தானது.*

*2. நயவஞ்சகம் இரு வகைப்படும். ஒன்று கொள்கை சார்ந்தது. இது ஒரு மனிதனை இஸ்லாமிய மார்க்கத்தை விட்டு வெளியேற்றி விடும். இன்னும் நிரந்தரமாக நரகத்தில் தள்ளிவிடும். கொள்கை சார்ந்த நயவஞ்சகத்தை ஆசிரியர் இங்கு குறிப்பிடுகிறார்கள்.*

*3. இரண்டாவது அமல் சார்ந்த நயவஞ்சகம். அதாவது, பொய் பேசுவது, மோசடி செய்வது, வாக்கை மீறுவது, ஒப்பந்தத்தை மீறுவது இன்னும் இதுபோன்ற செயல்கள் இந்த வகையில் அடங்கும்.*

*4. முனாஃபிக் - நயவஞ்சகர்களைப் பற்றி அல்லாஹ் குர்ஆனின் பல வசனங்களில் நம்மை எச்சரிக்கிறான். அவர்கள் மிகவும் ஆபத்தானவர்கள். நம்மோடு இருந்துகொண்டு நமது எதிரிகளுக்கு உதவி செய்வார்கள். அவர்களைப் பற்றி விரிவாக பல வசனங்களில் கூறப்பட்டிருந்தாலும் தனி ஓர்*

*அத்தியாயத்தையே அவர்களின் குணங்களை விளக்கி அல்லாஹ் இறக்கி இருக்கிறான். அதுதான் அல்முனாஃபிக்கூன் என்ற 63வது அத்தியாயம் ஆகும்.*

*அல்லாஹு தஆலா கூறுகிறான் :*

﴿الْمُنَافِقُونَ وَالْمُنَافِقَاتُ بَعْضُهُمْ مِنْ بَعْضٍ يَأْمُرُونَ بِالْمُنْكَرِ وَيَنْهَوْنَ عَنِ الْمَعْرُوفِ وَيَقْبِضُونَ أَيْدِيَهُمْ نَسُوا اللَّهَ فَنَسِيَهُمْ إِنَّ الْمُنَافِقِينَ هُمُ الْفَاسِقُونَ ○ وَعَدَ اللَّهُ الْمُنَافِقِينَ وَالْمُنَافِقَاتِ وَالْكُفَّارَ نَارَ جَهَنَّمَ خَالِدِينَ فِيهَا هِيَ حَسْبُهُمْ وَلَعَنَهُمُ اللَّهُ وَلَهُمْ عَذَابٌ مُقِيمٌ ○﴾

*நயவஞ்சக ஆண்களும், நயவஞ்சக பெண்களும் அவர்களில் சிலர் சிலரைச் சேர்ந்தவர்களே! அவர்கள் தீமையை ஏவுகின்றனர்; நன்மையை விட்டு தடுக்கின்றனர். தங்கள் கரங்களை மூடிக் கொள்கின்றனர் (கருமித்தனம் செய்கின்றனர்). அவர்கள் அல்லாஹ்வை மறந்தார்கள்; ஆகவே, (அல்லாஹ்வும்) அவர்களை மறந்தான். நிச்சயமாக நயவஞ்சகர்கள்தான் பாவிகள். நயவஞ்சக ஆண்களுக்கும் நயவஞ்சக பெண்களுக்கும் நிராகரிப்பாளர்களுக்கும் நரகத்தின் நெருப்பை அல்லாஹ் வாக்களித்தான். அதில் (அவர்கள்) நிரந்தரமானவர்கள். அதுவே அவர்களுக்குப் போது(மான கூலியாகு)ம். அல்லாஹ் அவர்களைச் சபித்தான். அவர்களுக்கு (அங்கு) நிலையான வேதனையுண்டு. (அல்குர்ஆன் 9 : 67, 68)*

---

# பாடம் 19

## உலக வாழ்க்கையின் நோக்கம்

وَاعْلَمْ بِأَنَّ الدُّنْيَا دَارُ إِيمَانٍ وَإِسْلَامٍ

45. அறிந்துகொள்! நிச்சயமாக உலகம் ஈமான் இன்னும் இஸ்லாம் உடைய இல்லமாகும். (ஒருவர் ஈமானையும் இஸ்லாமையும் சம்பாதிக்க வேண்டிய காலம்தான் இந்த உலக வாழ்க்கை ஆகும்.)

## படிப்பினைகள்

*1. இவ்வுலக வாழ்க்கை அல்லாஹ்வை நாம் வணங்குவதற்காக நமக்கு கொடுக்கப்பட்டுள்ளது.*

*2. அல்லாஹ்வை நம்பிக்கை கொள்வதுடன் அவன் நமக்கு வழிகாட்டிய அனைத்தையும் நம்பிக்கை கொள்ள வேண்டும்.*

*3. நம்பிக்கை கொள்வதுடன் அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் முற்றிலும் கீழ்ப்படிதலும் இருக்க வேண்டும்.*

*4. இந்த உலகத்தில் வாழும்போதே ஈமானையும் இஸ்லாமையும் நாம் நமக்குள் முழுமைப்படுத்த வேண்டும்.*

*5. ஒருவர் அல்லாஹ் இன்னும் அவனது தூதரிடம் கண்ணியம் பெறுவது அவரது ஈமான் இன்னும் இஸ்லாம் உடைய அளவை வைத்துதான்.*

*6. மறுமையின் வெற்றி, ஒருவரிடம் இருக்கும் ஈமான் இன்னும் இஸ்லாமுக்கு ஏற்பவே அமையும்.*

*7. ஈமான், இஸ்லாம் இரண்டும் ஒன்றாகக் கூறப்பட்டால் இரண்டுக்கும் தனித் தனி பொருள் கொடுக்கப்படும். இரண்டும்*

*பிரித்துக் கூறப்பட்டால் ஒன்று மற்றொன்றை எடுத்துக் கொள்ளும்.*

*அல்லாஹு தஆலா கூறுகிறான் :*

﴿وَمَا خَلَقْتُ الْجِنَّ وَالْإِنْسَ إِلَّا لِيَعْبُدُونِ۝﴾

*ஜின்களையும் மனிதர்களையும் அவர்கள் என்னை வணங்குவதற்கே தவிர (வேறு எதற்கும்) நான் படைக்கவில்லை.*
*(அல்குர்ஆன் 51 : 56)*

﴿يَا أَيُّهَا النَّاسُ إِنَّ وَعْدَ اللهِ حَقٌّ فَلَا تَغُرَّنَّكُمُ الْحَيَاةُ الدُّنْيَا
وَلَا يَغُرَّنَّكُمْ بِاللهِ الْغَرُورُ ۝ إِنَّ الشَّيْطَانَ لَكُمْ عَدُوٌّ فَاتَّخِذُوهُ
عَدُوًّا إِنَّمَا يَدْعُو حِزْبَهُ لِيَكُونُوا مِنْ أَصْحَابِ السَّعِيرِ ۝
الَّذِينَ كَفَرُوا لَهُمْ عَذَابٌ شَدِيدٌ وَالَّذِينَ آمَنُوا وَعَمِلُوا
الصَّالِحَاتِ لَهُمْ مَغْفِرَةٌ وَأَجْرٌ كَبِيرٌ۝﴾

*மக்களே! நிச்சயமாக அல்லாஹ்வின் வாக்கு உண்மையானதே! ஆகவே, உலக வாழ்க்கை உங்களை மயக்கிவிட வேண்டாம். ஏமாற்றக்கூடியவனும் (ஷைத்தானும்) அல்லாஹ்வின் விஷயத்தில் உங்களை மயக்கிவிட வேண்டாம். நிச்சயமாக ஷைத்தான் உங்களுக்கு எதிரி ஆவான். ஆகவே, அவனை எதிரியாகவே எடுத்துக்கொள்ளுங்கள்! அவன் தனது கூட்டத்தார்களை (கட்சிக்காரர்களை) அழைப்பதெல்லாம் அவர்கள் கொழுந்துவிட்டெரியும் நரகவாசிகளாக ஆகுவதற்காகத்தான். எவர்கள் நிராகரித்தார்களோ அவர்களுக்கு கடுமையான தண்டனை உண்டு. எவர்கள் நம்பிக்கைகொண்டு, நன்மைகளை செய்தார்களோ அவர்களுக்கு மன்னிப்பும் பெரிய கூலியும் உண்டு.* *(அல்குர்ஆன் 35 : 5-7)*

---------------------

# பாடம் 20

## மார்க்க சட்டங்களுக்கு முன் எல்லோரும் சமமே!

وَأُمَّةُ مُـحَمَّدٍ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ فِيهَا مُؤْمِنُونَ فِي أَحْكَامِهِمْ وَمَوَارِيثِهِمْ وَذَبَائِـحِهِمْ وَالصَّلَاةِ عَلَيْهِمْ

46. முஹம்மது ﷺ அவர்களுடைய உம்மத்தில் உள்ள முஃமின்கள் -நம்பிக்கையாளர்கள் அதில் (-இந்த உலகத்தில்) தங்கள் மீது விதிக்கப்பட்ட சட்டங்களிலும், பரம்பரைச் சொத்துகளிலும், அவர்கள் அறுக்கின்ற பிராணிகளிலும், அவர்கள் மீது ஜனாஸா தொழுகையை நிறைவேற்றுகின்ற விஷயத்திலும் சமமானவர்களாக இருப்பார்கள்.[4]

وَلَا نَشْهَدُ لِأَحَدٍ بِـحَقِيقَةِ الْإِيمَانِ حَتَّى يَأْتِيَ بِـجَمِيعِ شَرَائِعِ الْإِسْلَامِ فَإِنْ قَصَّرَ فِي شَيْءٍ مِنْ ذَلِكَ كَانَ نَاقِصَ الْإِيمَانِ حَتَّى يَتُوبَ وَاعْلَمْ أَنَّ إِيمَانَهُ إِلَى اللهِ تَعَالَى تَامُّ الْإِيمَانِ أَوْ نَاقِصُ الْإِيمَانِ إِلَّا مَا أَظْهَرَ لَكَ مِنْ تَضْيِيعِ شَرَائِعِ الْإِسْلَامِ

47. ஒருவருக்கு ஈமானுடைய உண்மை நிலை கிடைத்துவிட்டதாக நாங்கள் சாட்சி கூறமாட்டோம், அவர் இஸ்லாமிய மார்க்கத்தின் எல்லா சட்டங்களையும் நிறைவேற்றுகின்ற வரை. அவற்றில் ஏதாவது

---

4. நபி ﷺ அவர்களுடைய உம்மத்தில் அவர்களை ஏற்றுக் கொண்டவர்கள் முஃமின்கள் ஆவார்கள். ஆகவே அவர்களுக்கு இடையில் இஸ்லாமிய சட்டங்கள்படிதான் தீர்ப்பு வழங்கப்படும். அவர்களுக்குள் பரம்பரைச் சொத்துகள் பங்கீடு செய்யப்படும். அவர்களில் ஒருவர் அறுத்த பிராணிகளை மற்றவர்கள் உண்பார்கள். அவர்களில் ஒருவர் இறந்து விட்டால் மற்றவர்கள் அவருக்கு ஜனாஸா தொழுகை நடத்துவார்கள்.

ஒன்றில் அவர் குறைசெய்தால் அவர் தவ்பா செய்கின்ற வரை குறைவான ஈமான் உள்ளவராக இருப்பார். இன்னும், அறிந்துகொள்! நிச்சயமாக அவருடைய ஈமான் -(அதாவது) அவர் பரிபூரணமான ஈமான் உள்ளவரா, அல்லது குறைவான ஈமான் உள்ளவரா - (என்ற தீர்ப்பு) அல்லாஹ்வின் பக்கம் இருக்கின்றது. எனினும், அவர் இஸ்லாமிய மார்க்கத்தின் சட்டங்களை வீணாக்கியதில் உனக்கு எந்தளவு வெளிப்படையாக காண்பிப்பாரோ அதை வைத்து அவரை குறைவான ஈமான் உள்ளவர் என்று கூறப்படும்.

**وَالصَّلَاةُ عَلَىٰ مَنْ مَاتَ مِنْ أَهْلِ الْقِبْلَةِ سُنَّةٌ الْـمَرْجُومِ وَالزَّانِي وَالزَّانِيَةِ وَالذِّي يَقْتُلُ نَفْسَهُ وَغَيْرِهِ مِنْ أَهْلِ الْقِبْلَةِ وَالسَّكْرَانِ وَغَيْرِهِ الصَّلَاةُ عَلَيْهِمْ سُنَّةٌ**

48. கிப்லாவை பின்பற்றுபவர்களில் யார் இறந்து விட்டாரோ அவர் மீது ஜனாஸா தொழுகை நடத்துவது ஸுன்னா -நபிவழி ஆகும். கல்லெறிந்து கொல்லப்பட்டவர், விபச்சாரம் செய்த ஆண், விபச்சாரம் செய்த பெண், தற்கொலை செய்தவர் இன்னும் இவர் அல்லாத மற்றவர்கள் உதாரணமாக போதையில் இருப்பவர்கள் (-மது அருந்துபவர்கள்) இன்னும் இவர் அல்லாத மற்றவர்கள், ஆக இவர்கள் அனைவர் மீதும் ஜனாஸா தொழுகை நிறைவேற்றப்படுவது ஸுன்னா நபிவழியாகும்.

## படிப்பினைகள்

*__1.__ இந்த சமுதாயம் நீதம் இன்னும் நேர்மையின் மீது கட்டமைக்கப்பட்டதாகும்.*

*__2.__ இந்த உம்மத்தில் எல்லோரும் மார்க்க சட்டங்களுக்கு முன்னர் சமமாக மதிக்கப்படுவார்கள்.*

*__3.__ மார்க்க சட்டங்களை அமல் படுத்துவதில் ஏழை, செல்வந்தன், பதவியாளர், பாமரர், அறிமுகமானவர், அந்நியர் என்று பாகுபாடு காட்டக் கூடாது.*

4. முஸ்லிம்களில் யார் இறந்துவிட்டாலும் அவரின் வாரிசுகள் அவரின் சொத்துக்கு வாரிசுகளாக ஆவார்கள். அவர்களுக்கு மத்தியில் சொத்து மார்க்க முறைப்படி பங்கு வைக்கப்படும்.

5. முஸ்லிம்களில் யார் அறுத்தாலும் அந்த பிராணியை புசிப்பதில் நமக்கு தயக்கம் தேவை இல்லை.

6. முஸ்லிம்களில் யார் இறந்துவிட்டாலும் அவருக்கு ஜனாஸா தொழுகை நாம் நடத்த வேண்டும்.

7. ஒருவர் இஸ்லாம் மார்க்கம் கூறுகின்ற சட்டங்களையும் ஒழுக்கங்களையும் முடிந்தளவு முழுமையாக பேணி நடக்க வேண்டும். அப்போதுதான் முழுமையான ஈமானை கிடைக்கப் பெறுவார்.

8. மார்க்க சட்டங்களை பேணுவதில் குறை செய்தால் அவரின் ஈமான் குறைந்து விடும். அவர் தவ்பா செய்து அமல்களை சரி செய்துகொண்டால் மீண்டும் முழுமையான ஈமான் கிடைக்கப் பெறுவார்.

9. உள்ளத்தில் உள்ள ஈமானின் நிலையை அல்லாஹ்தான் அறிவான்.

10. ஒருவர் ஈமானால் முழுமையானவர், அல்லது குறைவானவர் என்பதை முடிவு செய்பவன் அல்லாஹ்தான்.

11. இணைவைத்தலைத் தவிர மற்ற எல்லா பாவங்களையும் அல்லாஹ் மன்னித்து விடுவான். ஆகவே, ஷிர்க் செய்யாத நிலையில் ஒருவர் இறந்துவிட்டால் அவர் வேறு எந்த பாவத்தை செய்திருந்தாலும் சரி அவருக்கு முஸ்லிம்கள் ஜனாஸா தொழுகை நடத்த வேண்டும்.

12. இன்னும், சில செயல்கள் உள்ளன. அவற்றை ஒருவர் அறிந்த நிலையில் வேண்டுமென்றே செய்வதால் அவர் முர்தத் -

*மதம் மாறியவராக ஆகிவிடுவார். ஒருவரை மதம் மாறியவராக அறிவிப்பு செய்வது கல்விமான்களின் பணியாகும்.*

***13.*** *ஒருவர் மதம் மாறியவராக மார்க்க அறிஞர்களால் அறிவிக்கப்பட்டுவிட்டால் அவருக்கு ஜனாஸா தொழுகை நடத்தப்படாது.*

---------------------

# பாடம் 21

## ஒருவரை மார்க்கத்தை விட்டு வெளியேற்றுவது

وَلَا يَـخْرُجُ أَحَدٌ مِنْ أَهْلِ الْقِبْلَةِ مِنَ الْإِسْلَامِ حَتّٰى يَرُدَّ آيَةً مِنْ كِتَابِ اللهِ عَزَّ وَجَلَّ أَوْ يَرُدَّ شَيْئًا مِنْ آثَارِ رَسُولِ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ أَوْ يَذْبَحَ لِغَيْرِ اللهِ أَوْ يُصَلِّيَ لِغَيْرِ اللهِ وَإِذَا فَعَلَ شَيْئًا مِنْ ذٰلِكَ فَقَدْ وَجَبَ عَلَيْكَ أَنْ تُـخْرِجَهُ مِنَ الْإِسْلَامِ وَإِذَا لَمْ يَفْعَلْ شَيْئًا مِنْ ذٰلِكَ فَهُوَ مُؤْمِنٌ مُسْلِمٌ بِالْاِسْمِ لَا بِالْـحَقِيقَةِ

49. கிப்லாவை பின்பற்றுபவர்களில் எந்த ஒருவரும் இஸ்லாமை விட்டு வெளியேற மாட்டார், அவர் அல்லாஹ்வின் வேதத்திலிருந்து ஒரு வசனத்தை மறுக்கின்ற வரை; அல்லது, ரஸூலுல்லாஹ் ﷺ உடைய ஹதீஸ்களில் எதையும் மறுக்கின்ற வரை; அல்லது அல்லாஹ் அல்லாதவர்களுக்காக அறுத்துப் பலியிடுகின்ற வரை; அல்லது, அல்லாஹ் அல்லாதவருக்காக தொழுகின்ற வரை (-வழிபாடு செய்கின்ற வரை). இந்த காரியங்களில் எதையும் அவர் செய்தால் அவரை இஸ்லாமிய மார்க்கத்திலிருந்து நீ வெளியேற்றுவது (-அவர் இஸ்லாமிய மார்க்கத்தைவிட்டு வெளியேறி விட்டார் என்று நீ நம்புவது) உன்மீது கடமையாகும். இவற்றில் இருந்து எந்த ஒன்றையும் அவர் செய்யவில்லை என்றால் (ஆனால், மற்ற பெரும் பாவங்களை அவர் செய்தால்) அவர் பெயரளவில் முஃமின் முஸ்லிம் ஆவார், உண்மையில் அல்ல.

## படிப்பினைகள்

*1. ஒருவர் பாவம் செய்வதால் அவரை காஃபிர் என்று முடிவு செய்யக் கூடாது.*

*2. தக்ஃபீர் - ஒருவரை காஃபிர் என்று முடிவு செய்வதற்கு சில நுணுக்கமான அடிப்படைகள் உள்ளன.*

*3. அவை, குர்ஆன் வசனங்களில் ஒன்றை மறுத்தல், அல்லது அதன் மூலம் உறுதியான சட்டத்தை மறுத்தல், ஸஹீஹான ஹதீஸ்களில் ஒன்றை மறுத்தல், மார்க்கத்தில் அறியப்பட்ட உண்மைகளில் ஒன்றை மறுத்தல், ஷிர்க்கான காரியத்தை செய்தல் ஆகும்.*

*4. இவற்றைத் தவிர வேறு ஒரு பாவத்தை செய்தால் அவர் பாவியாக இருப்பார். இஸ்லாமை விட்டு வெளியேறிவிட மாட்டார்.*

*5. மார்க்க அறிஞர்கள் இதற்காக தனி நூல்களை எழுதியுள்ளார்கள். தக்ஃபீர் செய்வது மார்க்கத்தின் மூத்த அறிஞர்கள், சட்ட வல்லுநர்கள் இன்னும் நீதிபதிகளின் பணியாகும். கல்வி அறிவு இல்லாமல் இது விஷயத்தில் பேசுவது மிக ஆபத்தானதாகும்.*

--------------------

# பாடம் 22

## உனக்கு புரியவில்லை என்றாலும் மார்க்கத்தை நம்பு!

وَكُلُّ مَا سَمِعْتَ مِنْ الْآثَارِ مِمَّا لَمْ يَبْلُغْهُ عَقْلُكَ نَحْوُ قَوْلِ رَسُولِ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ قُلُوبُ الْعِبَادِ بَيْنَ إِصْبَعَيْنِ مِنْ أَصَابِعِ الرَّحْمٰنِ عَزَّ وَجَلَّ وَقَوْلِهِ إِنَّ اللّٰهَ تَبَارَكَ وَتَعَالَىٰ يَنْزِلُ إِلَىٰ سَمَاءِ الدُّنْيَا وَيَنْزِلُ يَوْمَ عَرَفَةَ وَيَنْزِلُ يَوْمَ الْقِيَامَةِ وَجَهَنَّمُ لَا يَزَالُ يُطْرَحُ فِيهَا حَتّٰى يَضَعَ عَلَيْهَا قَدَمَهُ جَلَّ ثَنَاؤُهُ وَقَوْلِ اللّٰهِ تَعَالَىٰ لِلْعَبْدِ إِنْ مَشَيْتَ إِلَيَّ هَرْوَلْتُ إِلَيْكَ وَقَوْلِهِ إِنَّ اللّٰهَ تَبَارَكَ وَتَعَالَىٰ يَنْزِلُ يَوْمَ عَرَفَةَ وَقَوْلِهِ خَلَقَ اللّٰهُ آدَمَ عَلَىٰ صُورَتِهِ وَقَوْلِ النَّبِيِّ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ رَأَيْتُ رَبِّي فِي أَحْسَنِ صُوْرَةٍ وَأَشْبَاهُ هٰذِهِ الْأَحَادِيثِ فَعَلَيْكَ بِالتَّسْلِيمِ وَالتَّصْدِيقِ وَالتَّفْوِيضِ لَا تُفَسِّرْ شَيْئًا مِنْ هٰذِهِ بِهَوَاكَ فَإِنَّ الْإِيمَانَ بِهٰذَا وَاجِبٌ فَمَنْ فَسَّرَ شَيْئًا مِنْ هٰذَا بِهَوَاهُ أَوْ رَدَّهُ فَهُوَ جَهْمِيٌّ

50. ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள்: அடியார்களின் உள்ளங்கள் கண்ணியத்திற்கும் கம்பீரத்திற்கும் உரிய ரஹ்மானுடைய விரல்களில் இரு விரல்களுக்கு இடையில் இருக்கின்றன.

மேலும், நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: நிச்சயமாக அருள் நிறைந்த உயர்வுமிக்க அல்லாஹ் முதல் வானத்திற்கு இறங்குகிறான்.

மேலும், அவன் அரஃபா தினத்தன்று இறங்குகிறான். மேலும்,

மறுமைநாளில் அவன் இறங்குவான்.

நரகம் அதில் (பாவிகள்) எறியப்பட்டுக் கொண்டே இருப்பார்கள். இறுதியாக, அதன் மீது கம்பீரமான புகழுடைய அல்லாஹ் தனது பாதத்தை வைப்பான்.

உயர்வுமிக்க அல்லாஹ் அடியானுக்கு கூறுகிறான்: நீ என்னிடம் நடந்து வந்தால் நான் உன்னிடம் ஓடி வருகிறேன்.

மேலும், நபி ﷺ கூறினார்கள்: அல்லாஹ் ஆதமை தனது உருவத்திற்கு ஏற்ப படைத்தான்.

மேலும், நபி ﷺ கூறினார்கள்: நான் எனது இறைவனை மிக அழகான உருவத்தில் பார்த்தேன்.

இன்னும் இவைப் போன்ற உனது அறிவுக்கு எட்டாத நபிமொழிகளை நீ செவியுற்றால் நீ அவற்றை ஒப்புக்கொள்! உண்மைப்படுத்து! (அவற்றின் விளக்கங்களை அல்லாஹ்வின் பக்கம்) ஒப்படைத்துவிடு! இவற்றில் எதையும் உனது மனவிருப்பத்திற்கு ஏற்ப விவரிக்காதே! இவற்றை ஈமான் கொள்வது கட்டாயமாகும். இவற்றில் எதையும் தனது மன விருப்பத்திற்கு ஏற்ப யார் விவரிப்பாரோ அல்லது அதை மறுப்பாரோ அவர் ஜஹ்மி ஆவார்.

## படிப்பினைகள்

*1. ஈமான் உடைய அடிப்படையே அல்லாஹ்வும் ரஸூலும் கூறியதை ஏற்றுக் கொள்வதும் நம்புவதும் ஆகும்.*

*2. அல்லாஹ்வும் ரஸூலும் கூறியதை புரிவதற்கும் விளங்குவதற்கும் அறிவு கொடுக்கப்பட்டது. அதை மறுப்பதற்காக, அல்லது அதில் குதர்க்கம் செய்வதற்காக அல்ல.*

*3. மார்க்க விஷயங்களில் எல்லோருக்கும் எல்லாம் புரிந்துவிட வேண்டும் என்று அவசியமில்லை.*

4. அறிவிலும் கல்வியிலும் மக்கள் பல படித்தரங்கள் உள்ளவர்கள். ஒவ்வொரு கல்விமானுக்கு மேலாக கல்வியாளர் ஒருவர் இருப்பார். இறுதியாக கல்வி அல்லாஹ்விடம் சென்று முடியும்.

5. அல்லாஹ் உண்மையாளன், நபி ﷺ அவர்கள் உண்மையாளர்கள் என்று நாம் அறிந்திருப்பது அவ்விருவரின் கூற்றை நாம் நம்பிக்கை கொள்வதற்கு போதுமானதாகும்.

6. ஆகவே, நபி ﷺ அவர்கள் கூறியதாக சரியான அறிவிப்பு தொடர்வாயிலாக வந்துள்ள அனைத்து ஹதீஸ்களையும் நாம் மனப்பூர்வமாக ஏற்று நம்பிக்கை கொள்ள வேண்டும்.

7. நமக்கு அவற்றின் கருத்துக்கள் புரிந்தால் புரிந்து கொள்ள வேண்டும். இல்லை என்றால் அவற்றை புரிந்தவர்களிடம் நாம் கேட்டு புரிய வேண்டும். அப்படியும் புரியவில்லை என்றால் அதன் இல்மை அறிஞர்களிடமும் அல்லாஹ்விடமும் விட்டு விட வேண்டும்.

8. குறிப்பாக அல்லாஹ்வின் தன்மைகள் சம்பந்தமாக வந்துள்ள ஹதீஸ்களை மன இச்சைக்கு ஏற்ப மறுப்பதும் அல்லது அவற்றுக்கு விளக்கமளிப்பதும் வழிகேடாகும்.

9 அல்லாஹ்வின் தன்மைகளை மறுப்பவர்கள், அதற்கு மாற்று விளக்கங்களை கூறுபவர்களை ஜஹ்மிய்யா என்று கூறப்படும்.

---------------------

# பாடம் 23

# உலகில் யாரும் அல்லாஹ்வை பார்க்க முடியாது!

وَمَنْ زَعَمَ أَنَّهُ يَرَىٰ رَبَّهُ فِي دَارِ الدُّنْيَا فَهُوَ كَافِرٌ بِاللهِ عَزَّ وَجَلَّ

51. எவன், தனது இறைவனை இவ்வுலகில் பார்ப்பேன் என்று பிதற்றுகின்றானோ அவன் கண்ணியத்திற்கும் கம்பீரத்திற்கும் உரிய அல்லாஹ்வை நிராகரிப்பவன் -கா∴பிர் ஆவான்.

## படிப்பினைகள்

*1. அல்லாஹ்வை நபிமார்களும் இவ்வுலகில் பார்க்கவில்லை.*

*2. மூஸா நபியவர்கள் அல்லாஹ்விற்கு மிகவும் பிரியமான நபியாக, ரஸூலாக இருந்தும் அல்லாஹ்விடம் நான் உன்னைக் காண வேண்டும் என்று மன்றாடிய பின்னர் அல்லாஹ் அவனது ஒளியிலிருந்து சிறிதளவை மலைக்கு வெளிப்படுத்த மலை தவிடுபொடியாக ஆகிவிட்டது. அதே இடத்தில் அந்த ஒளியை காண முடியாமல் மூஸா நபி ﵇ மயக்கமுற்றார். பிறகு தெளிவுபெற்று எழுந்தவுடன் முதலாவதாக அல்லாஹ்விடம் தனது இந்த செயலுக்காக வருந்தி மன்னிப்பு கேட்டார்கள். பார்க்க, அல்குர்ஆன் 7 : 143.*

*3. அஹ்லுஸ் ஸுன்னா வல்ஜமாஆவை சேர்ந்த சான்றோர்களில் பெரும்பாலானவர்களின் கருத்து நபியவர்களும் அல்லாஹ்வை இவ்வுலகில் பார்க்கவில்லை என்பதுதான். ஒரு சிலர் இந்த கருத்துக்கு மாறுபடுவது இந்த கருத்தின் உறுதியை பலவீனப்படுத்தி விடாது.*

*4. ஏனைய மதங்களுக்கும் உண்மையான மார்க்கமாகிய இஸ்லாமுக்கும் இடையில் உள்ள முக்கியமான வேறுபாடுகளில் ஒன்று அவர்கள் தங்கள் தெய்வங்களை கண்ணால் இவ்வுலகில் காண முடியும் என்று நம்புவது. ஆனால், இஸ்லாமிய மார்க்கத்தில் அல்லாஹ் அனுப்பிய எந்த நபியும் தான் அல்லாஹ்வை பார்த்ததாகவோ அல்லது இவ்வுலகில் அல்லாஹ்வை பார்க்க முடியும் என்றோ கூறவில்லை. மாறாக நபி ﷺ அவர்கள் கூறினார்கள் :*

**تَعَلَّمُوا أَنَّهُ لَنْ يَرَىٰ أَحَدٌ مِنْكُمْ رَبَّهُ عَزَّ وَجَلَّ حَتَّىٰ يَمُوتَ**

*நன்கறிந்து கொள்ளுங்கள்! நிச்சயமாக உங்களில் யாரும் கண்ணியத்திற்கும் கம்பீரத்திற்கும் உரிய தனது ரப்பை அறவே பார்க்க முடியாது அவர் மரணிக்கின்ற வரை.*

*அறிவிப்பாளர் : உமர் இப்னு ஸாபித் அல் அன்சாரி என்ற தாபியி சில நபித்தோழர்களிடமிருந்து, நூல் : முஸ்லிம், எண் : 5215*

*6. இன்னும், இது குறித்த விரிவான ஹதீஸை ஸஹீஹ் முஸ்லிம் நூலில் ஹதீஸ் எண் 259-ல் பார்க்கலாம்.*

---------------------

# பாடம் 24

## படைப்புகளைப் பற்றி சிந்தனை செய், அல்லாஹ்வைப் பற்றி அல்ல!

وَالْفِكْرَةُ فِي اللهِ تَبَارَكَ وَتَعَالَىٰ بِدْعَةٌ لِقَوْلِ رَسُولِ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ تَفَكَّرُوا فِي الْـخَلْقِ وَلَا تُفَكِّرُوا فِي اللهِ فَإِنَّ الْفِكْرَةَ فِي الرَّبِّ تَقْدَحُ الشَّكَّ فِي الْقَلْبِ

52. அருள்மிக்கவனாகிய, உயர்ந்தவனாகிய அல்லாஹ்வின் விஷயத்தில் சிந்திப்பது பித்ஆ -அனாச்சாரம் ஆகும். ஏனெனில், ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள்: படைப்புகளில் சிந்தியுங்கள்! அல்லாஹ்வின் விஷயத்தில் சிந்திக்காதீர்கள்! ஏனெனில், ரப்பைப் பற்றி (-இறைவனைப் பற்றி) சிந்திப்பது உள்ளத்தில் சந்தேகத்தை கிளப்பிவிடும்.

### படிப்பினைகள்

*1 அல்லாஹ், நமக்கு கொடுத்த அருள்களில் மிக முக்கியமான ஒன்று அறிவு, சிந்திக்கும் ஆற்றல்.*

*2. அல்லாஹ், நமக்கு கொடுத்த அறிவை அழகிய முறையில் பயன்படுத்த வேண்டும்.*

*3. அறிவு என்பது மிக அற்புதமான ஒன்றாக இருந்தாலும் அதற்கு பல திறமைகள் இருந்தாலும் அது அல்லாஹ்வின் படைப்பே!*

*4. ஆகவே, அல்லாஹ், அந்த அறிவுக்கு ஓர் எல்லையை வைத்திருக்கிறான்.*

*5. அந்த எல்லையாவது, அல்லாஹ்வின் படைப்புகளை சிந்தித்து, அல்லாஹ்வின் வல்லமைகளை புரிந்து கொள்வதாகும்.*

*6. அல்லாஹ் எப்படி இருப்பான், அவனது தன்மைகள் எப்படி இருக்கும் என்று சிந்திப்பதற்கு அறிவுக்கு அனுமதி இல்லை.*

*7. யார் ஒருவர் தனக்கு அல்லாஹ் கொடுத்த அறிவைக் கொண்டு அல்லாஹ் அந்த அறிவுக்கு நிர்ணயித்த எல்லையை மீறுவாரோ அவர் இப்லீஸுடைய கூட்டத்தை சேர்ந்தவர் ஆவார்.*

*8. இன்னும், அல்லாஹ்வின் தன்மைகளைப் பற்றி அவை எப்படி இருக்கும் என சிந்திப்பது உள்ளத்தில் நிராகரிப்பின் சந்தேகங்களை உண்டாக்கி விடும்.*

*9. அல்லாஹ்வின் படைப்புகளைப் பற்றி சிந்தித்து அல்லாஹ்வின் அறிவையும் வல்லமையையும் நாம் புரிந்து கொண்டு நமக்குள் ஈமானையும் தக்வாவையும் அதிகரிப்பதற்காக அல்லாஹ் நமக்கு அறிவை கொடுத்தான்.*

*10. இன்னும், மார்க்க கல்விகளை கற்பதற்கும் அல்லாஹ்வின் படைப்புகளை சிந்தித்து அவற்றில் உள்ள நற்பலன்களை அடைவதற்கும் அல்லாஹ் அறிவை கொடுத்தான்.*

---------------------

# பாடம் 25

## எல்லோரும் அல்லாஹ்வின் கட்டளைக்கு கட்டுப்பட்டவர்களே!

وَاعْلَمْ أَنَّ الْـهَوَامَّ وَالسِّبَاعَ وَالدَّوَابَّ كُلَّهَا نَحْوَ الذَّرِّ وَالنَّمْلِ وَالذُّبَابِ
كُلَّهَا مَأْمُورَةٌ لَا يَعْمَلُونَ شَيْئًا إِلَّا بِإِذْنِ اللهِ تَبَارَكَ وَتَعَالَىٰ

53. அறிந்துகொள்! நிச்சயமாக பூச்சிகள், மிருகங்கள், கால்நடைகள், சிற்றெறும்புகள், எறும்புகள் இன்னும் ஈக்கள் போன்ற அனைத்து உயிரினங்களும் ஏவப்பட்டவை -அல்லாஹ்வின் கட்டளைக்கு கட்டுப்பட்டவை ஆகும். அருள்மிக்கவனாகிய, உயர்ந்தவனாகிய அல்லாஹ்வின் அனுமதி கொண்டே தவிர அவை எதையும் செய்யமுடியாது.

### படிப்பினைகள்

*1 அல்லாஹ் ஒருவன்தான் இறைவனும் பிரபஞ்சத்தில் உள்ள சர்வ வஸ்த்துக்களையும் படைப்புகளையும் படைத்தவன் ஆவான்.*

*2 படைப்புகள் அனைத்தும் அவற்றை படைத்த படைப்பாளனாகிய அல்லாஹ்வின் அறிவுக்கும் ஆற்றலுக்கும் கட்டுப்பட்டவை ஆகும்.*

*3 ஒவ்வொரு படைப்பும் அது எதை செய்யும், அது எதை உண்ணும், அதன் முடிவு எப்படி இருக்கும் என அனைத்தும் அல்லாஹ்வின் அறிவின் படியும் அவனது நாட்டப்படியும்தான் நடக்கும்.*

4. எந்த ஒரு சிறிய படைப்பும், பெரிய படைப்பும் அல்லாஹ்வின் ஆற்றலை விட்டு வெளியேற முடியாது.

5. அல்லாஹ், நாடாமல் எந்த படைப்பும் எதையும் செய்ய முடியாது.

6. அல்லாஹ், சர்வ படைப்புகளை படைத்தது மட்டுமல்ல அவை அனைத்தையும் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கின்றான்.

7. படைப்புகள் எங்கிருந்தாலும் அவை அல்லாஹ்வின் அறிவை விட்டும் மறைந்துவிட முடியாது. அவனது ஆற்றலை விட்டும் வெளியேறி விட முடியாது.

8. அல்லாஹ், தனது படைப்புகளை படைத்திருப்பதிலும் அவற்றை தனது ஞானத்தின்படியும் திட்டத்தின்படியும் இயக்குவதிலும் பல தத்துவங்கள் இருக்கும். அவற்றை அல்லாஹ்வைத் தவிர யாரும் அறிய மாட்டார்கள்.

--------------------

# பாடம் 26

## அல்லாஹ் அனைத்தையும் அறிந்தவன்!

وَالْإِيمَانُ بِأَنَّ اللهَ تَبَارَكَ وَتَعَالَىٰ قَدْ عَلِمَ مَا كَانَ مِنْ أَوَّلِ الدَّهْرِ وَمَا لَمْ يَكُنْ وَمَا هُوَ كَائِنٌ أَحْصَاهُ اللهُ وَعَدَّهُ عَدًّا وَمَنْ قَالَ إِنَّهُ لَا يَعْلَمُ مَا كَانَ وَمَا هُوَ كَائِنٌ فَقَدْ كَفَرَ بِاللهِ الْعَظِيمِ

54. நிச்சயமாக அல்லாஹ் ஆரம்ப காலத்திலிருந்து நிகழ்ந்த, இன்னும் நிகழாத, இன்னும் இனிமேல் நிகழக்கூடிய அனைத்தையும் திட்டமாக அறிந்திருக்கின்றான்; அதை அல்லாஹ் மிகத் தெளிவாக துல்லியமாக அறிந்திருக்கின்றான். அவற்றை முற்றிலும் கணக்கிட்டு (-ஒவ்வொன்றையும், தனித்தனியாக) எண்ணி இருக்கின்றான் என்று நம்பிக்கை கொள்ள வேண்டும். நிச்சயமாக (முன்னர்) நிகழ்ந்ததையும் (இனிமேல்) நிகழப் போவதையும் அல்லாஹ் அறியாமல் இருந்தான் என்று யார் கூறுவாரோ அவர் மகத்தான அல்லாஹ்வை நிராகரித்து விட்டார்.

### படிப்பினைகள்

*1. அல்லாஹ் தனது அறிவாலும் ஞானத்தாலும் மிக விசாலமானவன்.*

*2. இந்த பிரபஞ்சத்தில், வானங்களில், பூமியில், ஆகாயத்தில், விண்வெளியில், பூமிக்கு அடியில், அடர்ந்த காடுகளில், ஆழ் கடல்களில், பெரும் சிகரங்களில் என அவனது படைப்புகள் எங்கிருந்த போதும் அவன் அவற்றை அறிகின்றான்.*

*3.* இந்த பிரபஞ்சத்தை அவன் படைத்த நாளிலிருந்து இது நாள் வரை நடந்த அனைத்தும் அவனுக்கு மறைந்தவை அல்ல. இன்னும் அவன் அவற்றை மறக்கவும் மாட்டான். இன்னும் இறுதி நாள் வரை என்ன நடக்கும் என்பதையும் அவன் முன் கூட்டியே அறிவான்.

*4.* இதை யார் ஏற்கவில்லையோ, நம்பவில்லையோ அவர் அல்லாஹ்வை மறுத்தவர் ஆவார்.

*5.*அல்லாஹ்வை மறுப்பது என்பது அல்லாஹ் இல்லை என்று சொல்வது மட்டுமல்ல. அல்லாஹ்வின் தன்மைகளை அவன் வர்ணித்தவாறு ஏற்க மறுப்பதும் அல்லாஹ்வை மறுப்பதாகும். அல்லாஹ் பாதுகாப்பானாக! ஆமீன்.

அல்லாஹு தஆலா தனது இல்மைப் பற்றி கூறுகிறான் :

﴿وَعِنْدَهُ مَفَاتِحُ الْغَيْبِ لَا يَعْلَمُهَا إِلَّا هُوَ وَيَعْلَمُ مَا فِي الْبَرِّ وَالْبَحْرِ وَمَا تَسْقُطُ مِنْ وَرَقَةٍ إِلَّا يَعْلَمُهَا وَلَا حَبَّةٍ فِي ظُلُمَاتِ الْأَرْضِ وَلَا رَطْبٍ وَلَا يَابِسٍ إِلَّا فِي كِتَابٍ مُبِينٍ ۝﴾

மறைவானவற்றின் சாவிகள் அவனிடமே இருக்கின்றன. அவற்றை அவனைத் தவிர (யாரும்) அறியமாட்டார். நிலத்திலும், நீரிலும் உள்ளவற்றை (அவன்) நன்கறிவான். ஓர் இலையும் விழுவதில்லை அதை அவன் அறிந்தே தவிர. பூமியின் (ஆழ்) இருள்களில் உள்ள வித்து, பசுமையானது, உலர்ந்தது ஆகிய எதுவுமில்லை தெளிவான புத்தகத்தில் (குறிக்கப்பட்டு) இருந்தே தவிர. (அல்குர்ஆன் 6 : 59)

﴿وَاعْلَمُوا أَنَّ اللَّهَ بِكُلِّ شَيْءٍ عَلِيمٌ ۝﴾

*நிச்சயமாக அல்லாஹ் எல்லாவற்றையும் நன்கறிந்தவன் என்பதை அறியுங்கள். (அல்குர்ஆன் 2 : 231)*

﴿يَعْلَمُ مَا بَيْنَ أَيْدِيهِمْ وَمَا خَلْفَهُمْ وَلَا يُحِيطُونَ بِشَيْءٍ مِنْ عِلْمِهِ إِلَّا بِمَا شَاءَ﴾

*அவர்களுக்கு முன்னுள்ளதையும் அவர்களுக்குப் பின்னுள்ளதையும் அவன் அறிவான்; அவன் நாடியதைத் தவிர அவனுடைய அறிவிலிருந்து எதையும் அவர்கள் சூழமாட்டார்கள். (அல்குர்ஆன் 2 : 255)*

﴿وَمَا تَكُونُ فِي شَأْنٍ وَمَا تَتْلُوا مِنْهُ مِنْ قُرْآنٍ وَلَا تَعْمَلُونَ مِنْ عَمَلٍ إِلَّا كُنَّا عَلَيْكُمْ شُهُودًا إِذْ تُفِيضُونَ فِيهِ وَمَا يَعْزُبُ عَنْ رَبِّكَ مِنْ مِثْقَالِ ذَرَّةٍ فِي الْأَرْضِ وَلَا فِي السَّمَاءِ وَلَا أَصْغَرَ مِنْ ذَٰلِكَ وَلَا أَكْبَرَ إِلَّا فِي كِتَابٍ مُبِينٍ○﴾

*(நபியே) நீர் எந்த செயலில் இருந்தாலும், (அல்லாஹ்வின் வேதமாகிய) குர்ஆனிலிருந்து நீர் எதை ஓதினாலும், (மக்களே) நீங்கள் எந்த ஒரு செயலை செய்தாலும் நீங்கள் அவற்றில் ஈடுபடும் போது உங்கள் மீது சாட்சிகளாக நாம் இருந்தே தவிர அவற்றை (நீங்கள் செய்யமாட்டீர்கள்). பூமியிலோ வானத்திலோ ஓர் அணுவளவும் (நபியே!) உம் இறைவனை விட்டு மறையாது. இதைவிட சிறிதும் இல்லை பெரிதும் இல்லை (அவனுடைய) தெளிவான பதிவேட்டில் இருந்தே தவிர. (அல்குர்ஆன் 10 : 61)*

﴿أَلَا يَعْلَمُ مَنْ خَلَقَ وَهُوَ اللَّطِيفُ الْخَبِيرُ○﴾

*எவன் படைத்தானோ அவன் அறியமாட்டானா? அவன்தான் மிக நுட்பமானவன், ஆழ்ந்தறிபவன் ஆவான்.*

*(அல்குர்ஆன் 67 : 14)*

﴿لَا يَضِلُّ رَبِّي وَلَا يَنْسَى ۝﴾

*என் இறைவன் தவறு செய்துவிட மாட்டான். இன்னும், மறக்கமாட்டான். (அல்குர்ஆன் 20 : 52)*

﴿وَسِعَ رَبِّي كُلَّ شَيْءٍ عِلْمًا﴾

*என் இறைவனின் அறிவு எல்லாவற்றையும் விட விசாலமானது. (அல்குர்ஆன் 6 : 80)*

*இன்னும் இதுபோன்ற ஏராளாமான வசனங்கள் உள்ளன.*

---------------------

# பாடம் 27

## மார்க்க சட்டங்களை மதித்து நட!

وَلَا نِكَاحَ إِلَّا بِوَلِيٍّ وَشَاهِدَيْ عَدْلٍ وَصَدَاقٍ قَلَّ أَوْ كَثُرَ وَمَنْ لَمْ يَكُنْ لَهُ وَلِيٌّ فَالسُّلْطَانُ وَلِيُّ مَنْ لَا وَلِيَّ لَهُ

55. ஒரு வலீ- பொறுப்பாளர், நீதமான இரு சாட்சிகள், இன்னும் மஹ்ர் தொகை இல்லாமல் நிகாஹ் நிறைவேறாது. மஹ்ர் தொகை குறைவாக இருந்தாலும் சரி, அல்லது அதிகமாக இருந்தாலும் சரி (மஹ்ர் கண்டிப்பாக இருக்க வேண்டும்). யாருக்கு பொறுப்பாளர் இல்லையோ அப்போது அவருக்கு அரசர்தான் பொறுப்பாளராக இருப்பார்.

وَإِذَا طَلَّقَ الرَّجُلُ امْرَأَتَهُ ثَلَاثًا فَقَدْ حَرُمَتْ عَلَيْهِ وَلَا تَحِلُّ لَهُ حَتّٰى تَنْكِحَ زَوْجًا غَيْرَهُ

56. ஒருவர் தனது மனைவியை மூன்று தலாக் செய்துவிட்டால் அந்த மனைவி அவருக்கு ஹராம் -விலக்கப்பட்டவளாக ஆகிவிடுவாள். அவள் அவருக்கு ஹலால் ஆகமாட்டாள், அவள் அவர் அல்லாத வேறு ஒரு கணவரை திருமணம் செய்கின்றவரை.

### படிப்பினைகள்

*1. அல்லாஹ் சட்டத்தால் மகா நீதவான்.*

*2. அவனது சட்டங்கள் அனைத்தும் நீதமானவை ஆகும்.*

*3. அல்லாஹ்வின் சட்டங்கள் அவை வணக்க வழிபாடுகள் சம்பந்தப்பட்டவையாக இருந்தாலும், அல்லது வர்த்தகம் தொடர்புடையதாக இருந்தாலும் அல்லது குடும்பவியல்*

குறித்த சட்டங்களாக இருந்தாலும் அனைத்தும் மனிதர்களின் அனைத்துவிதமான நன்மைகளை முன்வைத்தே மகா ஞானவானாகிய அல்லாஹ்வினால் அருளப்பட்டவை ஆகும்.

**4.** ஆகவே, முஸ்லிம்களில் யாரும் அல்லாஹ்வின் சட்டங்களில் எதையும் மாற்றவோ மறுக்கவோ விமர்சனம் செய்யவோ கூடாது. அவ்வாறு அவர் செய்தால் அவர் இஸ்லாமை விட்டு வெளியேறி விடுவார்.

**5.** நாம் வெளிப்படையான காரியங்களைக் கூட சரியாக அறிய முடியாத பலவீனமானவர்கள். அப்படி இருக்க அல்லாஹ்வின் சட்டங்களில் உள்ள தத்துவங்களையும் ஞானங்களையும் பலன்களையும் நாம் எப்படி சூழ்ந்தறிய முடியும்?

**6.** இன்னும், காலங்கள் எத்தனை அறிவியல் முன்னேற்றங்களை கண்டாலும், மனிதர்களின் கலாச்சாரங்கள் சூழ்நிலைக்கு ஏற்ப எத்தகைய மாற்றங்களை கண்டாலும் அல்லாஹ்வின் சட்டங்களில் எவ்வித மாற்றத்தையும் செய்ய யாருக்கும் அனுமதி இல்லை.

**7.** ஆகவே, அல்லாஹ் ஹலாலாக ஆக்கியது ஹலாலாக இருக்கும் மறுமை நாள் வரை. இன்னும், அல்லாஹ் ஹராமாக ஆக்கியது ஹராமாக இருக்கும் மறுமை நாள் வரை. நிர்ப்பந்தமான நேரங்களில் அல்லாஹ் அனுமதித்திருந்தாலே தவிர.

**8.** இந்த பாடத்தில் கூறப்பட்டுள்ள சட்டங்கள் அனைத்தும் குர்ஆன் வசனங்கள், ஸஹீஹான ஹதீஸ்கள் இன்னும் இஜ்மாஃ - ஏகோபித்த முடிவைக் கொண்டு உறுதி செய்யப்பட்ட சட்டங்கள் ஆகும். ஆகவே, இவற்றை யாராவது மீறினால் அவர் மார்க்க சட்டப்படி தண்டனைக்குரியவர் ஆவார்.

--------------------

# பாடம் 28

## கொலைக் குற்றம் செய்யாதே!

وَلَا يَـحِلُّ دَمُ امْرِئٍ مُسْلِمٍ يَشْهَدُ أَنْ لَا إِلٰهَ إِلَّا اللهُ وَيَشْهَدُ أَنَّ مُـحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ إِلَّا بِإِحْدَىٰ ثَلَاثٍ زَانٍ بَعْدَ إِحْصَانٍ أَوْ مُرْتَدٍّ بَعْدَ إِيمَانٍ أَوْ قَتَلَ نَفْسًا مُؤْمِنَةً بِغَيْرِ حَقٍّ فَيُقْتَلُ بِهِ وَمَا سِوَىٰ ذٰلِكَ فَدَمُ الْـمُسْلِمِ عَلَى الْـمُسْلِمِ حَرَامٌ أَبَدًا حَتّٰى تَقُومَ السَّاعَةُ

57. நிச்சயமாக வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர உண்மையில் வேறு யாரும் அறவே இல்லை என்றும், நிச்சயமாக முஹம்மது ﷺ அவர்கள் அவனுடைய அடியாராகவும் அவனுடைய தூதராகவும் இருக்கின்றார் என்று சாட்சி கூறுகின்ற ஒரு முஸ்லிமான மனிதருடைய உயிர் ஆகுமாகாது (-அவரை கொல்வது கூடாது). அவர் மூன்றில் ஒரு காரியத்தை செய்தாலே தவிர. திருமணத்திற்குப் பின்னர் விபச்சாரம் செய்தவர்; அல்லது ஈமானுக்குப் பின்னர் மதம் மாறியவர்; அல்லது முஃமினான ஒருவரை கொன்றவர். இந்த காரணங்களுக்காக அவர் கொல்லப்படுவார். (இவையல்லாத வேறு காரணங்களுக்காக முஸ்லிமை கொல்லக்கூடாது.) ஏனெனில், முஸ்லிம்கள் மீது முஸ்லிம்களின் இரத்தம் -உயிர் உலக முடிவு நாள் நிகழ்கின்றவரை ஹராம் தடுக்கப்பட்ட புனிதமானதாகும்.

### படிப்பினைகள்

*1. அல்லாஹ்வின் மார்க்கத்தில் உயிர்கள் மிகவும் பாதுகாப்பானவை ஆகும்.*

*2. யாருக்கும் யாருடைய உயிர் மீதும் எல்லை மீறுவது அல்லாஹ்வின் மார்க்கத்தில் குற்றத்தால் மிகவும் கடுமையானதாகும்.*

*3. எந்த உயிரையும் அதற்குரிய சட்டமில்லாமல் கொல்வதற்கு அனுமதி இல்லை.*

*4. தனது மன விருப்பத்திற்கு ஏற்ப பொய் காரணங்களைக் கூறி எந்த உயிரையும் கொல்வது கூடாது.*

*5. அல்லாஹ்வின் மார்க்கத்தில் உயிர்கள், பொருள்கள், மான மரியாதை பாதுகாக்கப்பட வேண்டியவை என்பதால் கலகம் செய்வதையும் கிளர்ச்சி செய்வதையும் அல்லாஹ் நிரந்தரமாக தடுத்திருக்கின்றான்.*

*6. திருமணமானவர் விபச்சாரம் செய்வதும், மார்க்கத்தை விட்டு வெளியேறுவதும் உரிமை இல்லாமல் ஓர் உயிரைக் கொல்வதும் இஸ்லாமில் மரண தண்டனைக்குரிய குற்றங்களாகும்.*

*7. மற்ற எல்லா பெரும் பாவங்களை விட்டு ஒரு முஸ்லிம் விலகி இருப்பதுடன் குறிப்பாக இந்த மூன்று பெரும் பாவங்களை விட்டு விலகி இருத்தல் மிக அவசியமாகும்.*

*8. முஸ்லிம்களில் சிலருக்கு சிலர் மீதுள்ள விரோதம், பகைமை அவரை கொலை செய்யும் அளவிற்கு சென்று விடக்கூடாது.*

*9. முஸ்லிம்கள் தங்கள் பிரச்சினைகளை இஸ்லாமிய சட்டங்களைக் கொண்டும் நீதமான நடுவர்களைக் கொண்டும் தீர்த்துக்கொள்ள வேண்டும்.*

*10. பகைமைகளையும் காழ்ப்புணர்ச்சிகளையும் வளர விடுவது மிகவும் ஆபத்தானது. அது ஒருவரை கொலை வரை இழுத்து சென்றுவிடும். அல்லாஹ் பாதுகாப்பானாக! ஆமீன்.*

---------------------

# பாடம் 29

# நிரந்தரமும் அழிவும் அல்லாஹ்வின் நாட்டப்படிதான்!

وكُلُّ شَيْءٍ مِمَّا أَوْجَبَ اللهُ عَلَيْهِ الْفَنَاءَ يَفْنَىٰ إِلَّا الْـجَنَّةَ وَالنَّارَ
وَالْعَرْشَ وَالْكُرْسِيَّ وَاللَّوْحَ وَالْقَلَمَ وَالصُّورَ لَيْسَ يَفْنَىٰ شَيْءٌ
مِنْ هٰذَا أَبَدًا ثُمَّ يَبْعَثُ اللهُ الْـخَلْقَ عَلَىٰ مَا مَاتُوا عَلَيْهِ يَوْمَ
الْقِيَامَةِ وَيُـحَاسِبُهُمْ بِمَا شَاءَ فَرِيقٌ فِي الْـجَنَّةِ وَفَرِيقٌ فِي السَّعِيرِ
وَيَقُولُ لِسَائِرِ الْـخَلْقِ مِـمَّنْ لَمْ يُـخْلَقْ لِلْبَقَاءِ كُونُوا تُرَابًا

58. அல்லாஹ் எதன் மீது அழிவை கட்டாயமாக்கி விட்டானோ அது அழிந்தே தீரும், சொர்க்கம், நரகம், அர்ஷ், குர்ஸி, லவ்ஹ், கலம், சூர் ஆகியவற்றைத் தவிர. (இவற்றில் எதுவும் ஒருபோதும் அழியாது.) பிறகு, அல்லாஹ் படைப்புகளை அவர்கள் எந்த நிலையில் இறந்தார்களோ அதே நிலையில் மறுமை நாளில் எழுப்புவான். அவர்களிடம் அவன் நாடியபடி கேள்வி கணக்கு கேட்பான். ஒரு பிரிவினர் சொர்க்கத்திற்குச் செல்வார்கள். வேறு ஒரு பிரிவினர் நரகத்திற்குச் செல்வார்கள். நிரந்தரமாக இருப்பதற்காக படைக்கப்படாத மற்ற எல்லா படைப்புகளை நோக்கி, “நீங்கள் மண்ணாக ஆகிவிடுங்கள்” என்று அவன் கூறுவான். (உடனே அவை அனைத்தும் மண்ணாக ஆகிவிடும்.)

## படிப்பினைகள்

*1 அல்லாஹ் படைப்பாளன். நாமோ படைக்கப்பட்டவர்கள். அல்லாஹ்விற்கு ஆரம்பமும் இல்லை, முடிவும் இல்லை.*

2. படைப்புகளுக்கு ஆரம்பமும் முடிவும் உண்டு.

3. அல்லாஹ் தனது படைப்புகளில் சிலவற்றை பொதுவான விதிகளில் இருந்து விதிவிலக்கு அளிக்க உரிமை உள்ளவன். இது அவனது உரிமையும் அதிகாரமும் ஆகும். அதில் தலையிட்டு அல்லாஹ்வை கேள்வி கேட்கவோ அல்லது நமது அறிவுக்கு ஏற்ப நாமாக ஒன்றை முடிவு செய்யவோ நமக்கு அனுமதி இல்லை. அது அல்லாஹ்வின் மீது துணிவு கொள்வதும் அவனது கூற்றை மறுப்பதும் ஆகும்.

4. ஆகவே, அல்லாஹ் எதற்கு அனுமதி அளித்தானோ, எதன் மீது நிரந்தரத்தை எழுதினானோ அவை அனைத்தும் நிரந்தரமாக என்றென்றும் அழியாமல் இருக்கும். அவற்றின் விளக்கத்தை இங்கு இமாம் குறிப்பிட்டுள்ளார்கள்.

5. மறுமையில் இரண்டு இல்லங்கள் மட்டுமே உள்ளன. ஒன்று சொர்க்கம், மற்றொன்று நரகம்.

6. முஃமின்கள் சொர்க்கத்தில் நிரந்தரமாக தங்கிவிடுவார்கள். காஃபிர்கள் நரகத்தில் நிரந்தரமாக தங்கிவிடுவார்கள்.

7. மனிதர்கள், ஜின்கள், மலக்குகள் ஆகியோரைத் தவிர மற்ற எல்லா உயிரினங்களையும் அல்லாஹ் மண்ணாக மாற்றிவிடுவான்.

8. மனிதர்கள் மரணிக்கும்போது எந்த நிலையில் இருந்தார்களோ அதே நிலையில் அவர்கள் எழுப்பப்படுவார்கள்.

9. விசாரணையும் தீர்ப்பும் அல்லாஹ்வின் நாட்டப்படி நடைபெறும். அதில் அல்லாஹ்வின் அனுமதி இன்றி யாரும் சிபாரிசு செய்ய முடியாது.

--------------------

# பாடம் 30

## அல்லாஹ் மகா நீதவான்!

والْإِيمَانُ بِالْقِصَاصِ يَوْمَ الْقِيَامَةِ بَيْنَ الْـخَلْقِ كُلِّهِمْ بَنِي آدَمَ وَالسِّبَاعِ وَالْـهَوَامِّ حَتَّى لِلذَّرَّةِ مِنْ الذَّرَّةِ حَتَّى يَأْخُذَ اللهُ عَزَّ وَجَلَّ لِبَعْضِهِمْ مِنْ بَعْضٍ لِأَهْلِ الْـجَنَّةِ مِنْ أَهْلِ النَّارِ وَأَهْلِ النَّارِ مِنْ أَهْلِ الْـجَنَّةِ وَأَهْلِ الْـجَنَّةِ بَعْضِهِمْ مِنْ بَعْضٍ وَأَهْلِ النَّارِ بَعْضِهِمْ مِنْ بَعْضٍ

59. படைப்புகள் எல்லோருக்கும் மத்தியில் பழிக்குப்பழி வாங்கப்படும் என்பதை நம்பிக்கை கொள்ள வேண்டும். மனிதர்கள், மிருகங்கள், பூச்சிகள் இன்னும் எறும்புக்காக எறும்பிடமிருந்து பழிக்குப்பழி வாங்கப்படும். எந்த அளவுக்கு என்றால் மக்களில் சிலரிடமிருந்து சிலருக்காக, அதாவது, நரகவாசிகளிடமிருந்து சொர்க்கவாசிகளுக்காகவும் சொர்க்கவாசிகளிடமிருந்து நரகவாசிகளுக்காகவும் சொர்க்கவாசிகளில் சிலரிடமிருந்து சிலருக்காகவும் நரகவாசிகளில் சிலரிடமிருந்து சிலருக்காகவும் கண்ணியத்திற்கும் கம்பீரத்திற்கும் உரிய அல்லாஹ் நீதியைப் பெற்றுத் தருவான்.

### படிப்பினைகள்

*1. அல்லாஹு மாலிகு யவ்மித்தீன் - அல்லாஹ் தீர்ப்பு நாளின் அதிபதி ஆவான். ஆகவே, மறுமை அல்லாஹ்வின் தனிப்பட்ட விசேஷமான ஆட்சிக்கு உட்பட்டதாகும்.*

*2. உலகத்தில் நடைப்பெற்ற அனைத்து நிகழ்வுகளுக்கும் செயல்களுக்கும் மறுமையில் அல்லாஹ்விடம் நீதமான நியாயமான தீர்ப்பு உண்டு.*

3. அல்லாஹ்வின் தீர்ப்பில் எள்ளளவும் அநீதி இருக்காது.

மறுமை நாளில்தான் அடியார்கள் தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்காக அநியாயக்காரரர்களிடமிருந்து அல்லாஹ்விடம் நீதத்தை பெறுவார்கள்.

4. மனிதர்கள் மட்டுமல்ல, எல்லா உயிரினங்களும் தங்களுக்கு அநீதி இழைத்தவரிடம் பழிக்குப்பழி வாங்குவார்கள்.

5. ஒருவன் காஃபிராக இருந்து அல்லது பெரும் பாவியாக இருந்து நரகம் சென்றாலும் அவனுக்கு சொர்க்கவாசி ஒருவர் அநீதி இழைத்திருந்தால் அந்த நரகவாசிக்கும் நீதி வாங்கித்தரப்படும்.

6. அதாவது, அவரின் நரக தண்டனை சற்று இலகுவாக்கப்படலாம். அவர் முஃமினாக இருந்தால் அவரின் நரகத்தின் கால அளவு குறைக்கப்படலாம்.

7. அநீதி இழைத்தவர், அநீதி இழைக்கப்பட்டவர் இருவரும் நரகவாசியாக இருந்தால் அநீதி இழைக்கப்பட்டவருக்கு தண்டனை குறைக்கப்பட்டு அந்த தண்டனை அநீதி இழைத்தவருக்கு அதிகப்படுத்தப்படும். இப்படியாக அல்லாஹ் தனது நீதத்தை மறுமையில் நிறைவு செய்வான்.

8. இவ்வுலகில் தமது செல்வாக்கால், பதவியின் ஆணவத்தால், இன்னும் வேறு காரணங்களால் பிறர் மீது தாம் செய்கின்ற அநியாயங்களை யாரும் கேள்வி கேட்க மாட்டார், அல்லது அதற்கான விசாரணை நமக்கு இருக்காது, அல்லது இவை எல்லாம் இவ்வுலகத்தோடு முடிந்துவிடும் என்று யாரும் எண்ணி விட வேண்டாம். நீதவான்களுக்கெல்லாம் நீதவானாகிய அல்லாஹ்வின் பிடியிலிருந்து அநியாயக்காரரர்கள் தப்பிக்க முடியாது. அல்லாஹ்வின் மறுமை விசாரணைக்கு முன்னால் அவர்கள் நின்று பதில் கூறியே ஆகவேண்டும். அந்த அநீதிக்குரிய தண்டனையை அவர்கள் பெற்றே ஆக வேண்டும். அநீதி இழைக்கப்பட்டவர் மன்னித்தாலே தவிர.

---

# பாடம் 31

# கலப்படமில்லா அமல்கள்தான் அல்லாஹ்விடம் கபூல் ஆகும்!

وَإِخْلَاصُ الْعَمَلِ لِلَّهِ

60. எல்லா அமல்களையும் அல்லாஹ்விற்காக மனத்தூய்மையுடன் செய்ய வேண்டும்.

## படிப்பினைகள்

*1. அல்லாஹ் மிகப் பரிசுத்தமானவன். அவன் தனது அடியார்களிடம் கலப்படமற்ற வணக்கத்தையே விரும்புகிறான்.*

*2. வணக்க வழிபாடுகள் அனைத்தையும் அல்லாஹ் ஒருவனுக்கே கலப்பற்ற முறையில் செய்ய வேண்டும். அத்தகைய வணக்க வழிபாடுகள்தான் அல்லாஹ்விடம் அங்கீகரிக்கப்படும்.*

*3. முகஸ்துதியை விரும்பி செய்யப்பட்ட எந்த வணக்கத்தையும் அல்லாஹ் ஏற்க மாட்டான்.*

*4. அடியார்கள் தங்களது சொல், செயல், நம்பிக்கை என மார்க்க விஷயங்கள் அனைத்திலும் அல்லாஹ்வின் திருமுகம் மட்டுமே நாடி செய்ய வேண்டும்.*

*4. அல்லாஹ்வின் பொருத்தம் மட்டும் நாடப்படாத அமல்கள் எவ்வளவு அதிகமாக இருந்தாலும் அவற்றுக்கு மறுமையில் அல்லாஹ்விடம் அறவே நற்கூலி இருக்காது. அத்தகையவர்கள் பெரும் நஷ்டவாளிகளாக இருப்பார்கள்.*

---------------------

## பாடம் 32

# விதியை உறுதியாக நம்பு! அது ஈமானின் உயர் பண்புகளில் உள்ளதாகும்!

وَالرِّضَا بِقَضَاءِ اللهِ وَالصَّبْرُ عَلَىٰ حُكْمِ اللهِ وَالْإِيمَانُ بِمَا قَالَ اللهُ عَزَّ وَجَلَّ وَالْإِيمَانُ بِأَقْدَارِ اللهِ كُلِّهَا خَيْرِهَا وَشَرِّهَا وَحُلْوِهَا وَمُرِّهَا قَدْ عَلِمَ اللهُ مَا الْعِبَادُ عَامِلُونَ وَإِلَىٰ مَا هُمْ صَائِرُونَ لَا يَخْرُجُونَ مِنْ عِلْمِ اللهِ وَلَا يَكُونُ فِي الْأَرْضِيْنَ وَلَا فِي السَّمَاوَاتِ إِلَّا مَا عَلِمَ اللهُ عَزَّ وَجَلَّ وَتَعْلَمُ أَنَّ مَا أَصَابَكَ لَمْ يَكُنْ لِيُخْطِئَكَ وَمَا أَخْطَأَكَ لَمْ يَكُنْ لِيُصِيبَكَ وَلَا خَالِقَ مَعَ اللهِ عَزَّ وَجَلَّ

61. அல்லாஹ்வின் கழா - விதியை பொருந்திக் கொள்ள வேண்டும். அல்லாஹ்வின் தீர்ப்பில் பொறுமையாக இருக்க வேண்டும். கண்ணியமிக்க, கம்பீரத்திற்குரிய அல்லாஹ் கூறியதை நம்பிக்கை கொள்ள வேண்டும். அல்லாஹ்வின் விதிகள் அனைத்தையும் அதன் நன்மை, தீமை, அதன் இனிப்பு, அதன் கசப்பு (அதில் நமக்கு இலகுவாக இருப்பது இன்னும் சிரமமாக இருப்பது) என அனைத்தையும் நம்பிக்கை கொள்ள வேண்டும். அடியார்கள் என்ன அமல் செய்வார்கள் என்பதை அல்லாஹ் திட்டமாக அறிந்திருக்கின்றான். இன்னும் அவர்கள் எதன் பக்கம் மீளுவார்கள் (-அவர்கள் இறுதி முடிவு எப்படி இருக்கும்) என்பதையும் அல்லாஹ் அறிந்திருக்கின்றான். அவர்கள் அல்லாஹ்வின் அறிவைவிட்டு வெளியேற முடியாது. பூமிகளிலோ, வானங்களிலோ கண்ணியத்திற்கும் கம்பீரத்திற்கும் உரிய அல்லாஹ் அறிந்ததைத்

தவிர வேறு ஏதும் நடக்காது. உனக்கு எது நிகழ்ந்ததோ அது உன்னைவிட்டு தவறி இருக்காது; உனக்கு எது தவற வேண்டும் என்று இருந்ததோ அது உனக்கு கிடைத்திருக்காது என்பதை நீ உறுதியாக அறிந்துகொள்ள வேண்டும். கண்ணியத்திற்கும் கம்பீரத்திற்கும் உரிய அல்லாஹ்வுடன் வேறு படைப்பாளன் யாரும் இல்லை.

## படிப்பினைகள்

*1. அடியான் வெறுமென அல்லாஹ்வை நம்பிக்கை கொள்வது மட்டும் ஈமானாக ஆகிவிடாது.*

*2. அல்லாஹ்வையும் அவனது அழகிய பெயர்களையும் பண்புகளையும் செயல்களையும் அடியான் மனப்பூர்வமாக நம்பிக்கை கொள்ள வேண்டும்.*

*3. அல்லாஹ்வைக் கொண்டு அடியான் முழுமையாக திருப்தி கொள்ள வேண்டும்.*

*4. அல்லாஹ்வின் மீது அதிருப்திகொண்ட நிலையில் ஒருவர் இறந்துவிட்டால் அவர் மிகவும் நஷ்டவாளியாக ஆகிவிடுவார்.*

*5. ஈமானின் மிக உயர்ந்த நிலை அல்லாஹ்வின் விதியை முழுமையாக ஏற்றுக் கொள்வதில் இருக்கிறது.*

*6. அடியார்கள் எதை செய்வார்கள் என்பதை அல்லாஹ் முன்கூட்டியே அறிந்திருக்கின்றான். அவன் அறிந்ததை அவன் விதியாக எழுதினான். அவனுடைய அறிவு முழுமையானதாகும். அதில் முரண்பாடுகள், தவறுகள் நடக்காது. அப்படித்தான் அல்லாஹ்வின் விதியில் தவறுகள், குளறுபடிகள் ஏதும் இல்லை.*

*7. அடியான் வணக்க வழிபாட்டிலும் மார்க்க கல்வியிலும் எவ்வளவுதான் உச்சத்தை எட்டினாலும் அவன் அல்லாஹ்வின் விதியை முழுமையாக மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளாத வரை அவன் சொர்க்கவாசியாக ஆக முடியாது.*

8. அடியானின் விதியில் எழுதப்பட்ட எதுவும் அவனை விட்டு தவறி விடாது. விதியில் இல்லாததை அடியான் அடைந்துகொள்ளவும் முடியாது.

9. அல்லாஹ் ஒருவன்தான் படைப்பாளன். அடியார்கள் தங்கள் செயல்களை செய்பவர்கள்தான். அவற்றை படைப்பவர்கள் அல்லர். எந்த ஒன்றும் அல்லாஹ் படைக்காமல் இந்த பிரபஞ்சத்தில் நிகழாது.

10. விதியின் இரகசியங்களை அல்லாஹ் ஒருவன் மட்டுமே அறிந்தவன். விதி, அல்லாஹ்வின் மறைவான ஞானத்தில் உள்ளதாகும். அதை அறிய முயற்சிப்பதும் அது குறித்து சிந்திப்பதும் தர்க்கம் செய்வதும் வழிகேடாகும்.

11. எந்த ஒரு செயலையும் அடியான் விருப்பத்துடன் செய்கிறான். அல்லது அதை விடுகிறான். ஆகவே, அவன் அதற்குரிய நற்கூலியையோ அல்லது தண்டனையையோ பெறுகிறான்.

12. பொதுவாக பாவிகளும் தீயவர்களும் தங்கள் குற்ற செயல்களுக்கும் பாவங்களுக்கும் விதியை காரணம் காட்டுவார்கள். இவ்வாறுதான் முற்கால இணைவைப்பவர்கள், அல்லாஹ் நாடியிருந்தால் நாங்கள் இணைவைத்திருக்க மாட்டோம் என்று கூறினார்கள். (பார்க்க அல்குர்ஆன் 6 : 148) அவர்கள் உண்மையில் அல்லாஹ்வின் மீது அபாண்டமான பழியை சுமத்துகிறார்கள். அல்லாஹ் தங்களுக்கு பாவத்தைத்தான் நாடினான் என்பதை இவர்கள் எப்படி அறிந்தார்கள்? இவர்கள் பாவத்தின் மீது கொண்ட மோகத்தாலும் இவர்களின் வழிகேட்டாலும் பாவத்தை செய்துவிட்டு, பிறகு அல்லாஹ் எங்களுக்கு இதைத்தான் நாடினான் என்று கூறுகிறார்கள். அல்லாஹ் தான் நாடியதை இவர்களுக்கு என்ன வஹ்யி மூலம் அறிவித்தானா? அல்லது இவர்கள்தான் அல்லாஹ்வின் பதிவுப்புத்தகத்தில் எட்டிப்பார்த்தார்களா?

---------------------

# பாடம் 33

## ஜனாஸா தொழுகையின் சிறந்த முறை!

وَالتَّكْبِيرُ عَلَى الْـجَنَائِزِ أَرْبَعٌ وَهُوَ قَوْلُ مَالِكِ بْنِ أَنَسٍ وَسُفْيَانَ الثَّوْرِيِّ وَالْـحَسَنِ بْنِ صَالِحٍ وَأَحْمَدَ بْنِ حَنْبَلٍ وَالْفُقَهَاءِ وَهٰكَذَا قَالَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ

62. ஜனாஸா தொழுகையில் தக்பீர் நான்காகும். இதுதான் மாலிக் இப்னு அனஸ் ﵀, ஸுஃப்யான் சவ்ரி ﵀, அல்ஹசன் இப்னு ஸாலிஹ் ﵀, அஹ்மது இப்னு ஹன்பல் ﵀ இன்னும் மார்க்க சட்ட வல்லுநர்களின் கூற்றாகும். இவ்வாறுதான் ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள்.

### படிப்பினைகள்

*1. அல்லாஹ் உடைய மார்க்கத்தில் வணக்க வழிபாட்டு முறைகள், அமைப்புகள் அனைத்தும் வரையறுக்கப்பட்டவை ஆகும்.*

*2. ஆகவே, அந்த வணக்க வழிபாடுகளில் மாற்றம் செய்யவோ, கூட்டவோ, குறைக்கவோ யாருக்கும் அனுமதி இல்லை.*

*3. இறந்துவிட்ட முஃமினை கண்ணியப்படுத்தும் விதமாகவும் அவருக்கு நன்மையை வேண்டி பிரார்த்திப்பதற்காகவும் விசேஷமான ஒரு தொழுகையை மார்க்கம் நமக்கு வழிகாட்டி இருக்கின்றது. அதை ஸலாத்துல் ஜனாஸா என்று கூறப்படும்.*

*4. இந்த தொழுகை முறையில் வேறு சில சிறிய மாறுபாடுகள் இருந்தாலும் பெரும்பாலான அறிஞர்களிடம்*

ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழுகை முறையை இங்கு இமாம் குறிப்பிடுகின்றார்கள்.

**5.** எந்த ஒரு அமலாக இருந்தாலும் குர்ஆன் இன்னும் ஸஹீஹான ஹதீஸ்களில் அதற்கு ஆதாரம் இல்லை என்றால் அந்த அமல் மறுக்கப்பட வேண்டியதாகும். அதை மார்க்கத்தில் பித்அத் என்று கூறப்படும்.

**6.** ஒரே அமல் பல முறைகளுடன், பல அமைப்புகளுடன் ஸஹீஹான ஹதீஸ்களில் அறிவிக்கப்பட்டிருக்குமேயானால் அந்த அமலை அறிவிக்கப்பட்ட எல்லா முறைகளிலும் செய்யலாம் என்று பொருள். ஆனால், அந்த அறிவிப்புகளில் இறுதியான அறிவுப்பு முந்திய அறிவிப்புகளை மாற்றி இருந்தாலே தவிர. அப்படி மாற்றி இருந்தால் இறுதியாக வந்துள்ள ஹதீஸைக் கொண்டுதான் அமல் செய்ய வேண்டும்.

---------------------

# பாடம் 34

## அல்லாஹ்வின் மறைவான ஏற்பாடு!

وَالْإِيمَانُ بِأَنَّ مَعَ كُلِّ قَطْرَةٍ مَلَكًا يَنْزِلُ مِنْ السَّمَاءِ حَتَّى يَضَعَهَا حَيْثُ أَمَرَهُ اللّٰهُ عَزَّ وَجَلَّ

63. ஒவ்வொரு மழைத்துளியுடன் நிச்சயமாக ஒரு மலக்கு வானத்திலிருந்து இறங்குகிறார். இறுதியாக அவர், கண்ணியத்திற்கும் கம்பீரத்திற்கும் உரியவனான அல்லாஹ் தனக்கு கட்டளையிட்ட இடத்தில் அதை வைக்கிறார் என்பதை நம்பிக்கை கொள்ள வேண்டும்.

### படிப்பினைகள்

*1. வானவர்களையும் அவர்களின் செயல்களையும் அல்லாஹ்தான் மிக அறிந்தவன்.*

*2. வானவர்கள் ஒளியினால் படைக்கப்பட்டவர்கள். மனிதர்களுக்குள்ள பலவீனம் ஏதும் இல்லாமல் அவர்களை அல்லாஹ் படைத்துள்ளான். அவர்களுக்கு உறக்கம், ஊண், குடிப்பு, நோய் நொடி ஏதும் இல்லை.*

*3. வானவர்கள் பிரமாண்டமான படைப்பாவார்கள். அவர்களின் வலிமையும் வேகமும் செயல்பாடும் மனித கற்பனைகளுக்கு அப்பாற்பட்டவை ஆகும்.*

*4. ஆகவே, அவர்கள் குறித்து குர்ஆனிலும் ஸுன்னாவிலும் எப்படி கூறப்பட்டுள்ளதோ அவ்வாறே நாம் அவர்களையும் அவர்களின் தன்மைகளையும் செயல்களையும் நம்பிக்கை கொள்ள வேண்டும். அதில் நமது கற்பனைகளையோ சுய*

அறிவையோ பயன்படுத்தி சந்தேகம் கொள்ளக் கூடாது, இன்னும் மறுக்கக் கூடாது.

**5.** மனிதனின் அறிவு இன்னும் எத்தனையோ விஷயங்களை அறிந்துகொள்ள முடியாமல் பலவீனப்பட்டு நிற்கிறது. அவனது பார்வையும் மிகவும் பலவீனமானது. மனிதன் உருவாக்கிய கருவிகள் பார்ப்பதை மனிதனால் பார்க்க முடியாது. மனிதன் உருவாக்கிய கணினி புரிவதையும் அறிவதையும் மனிதனால் சுயமாக அறிய முடியவில்லை.

**6.** ஒருவர் அல்லாஹ்வை நம்பிக்கை கொண்டது உண்மை என்றால் அவன் கூறிய அனைத்தையும் முழுமையாக நம்பிக்கை கொள்ள வேண்டும். மேலும், அவனது தூதரையும் அந்த தூதர் கூறிய அனைத்தையும் நம்பிக்கை கொள்ள வேண்டும். அல்லாஹ்வின் தூதரை மறுப்பவர் அல்லாஹ்வை மறுத்தவர் ஆவார். தூதரின் ஸஹீஹான கூற்றுகளை மறுப்பவர் தூதரையே மறுத்துவிட்டார். தூதரை மறுப்பவர் இஸ்லாமை விட்டு வெளியேறி விட்டார்.

---------------------

# பாடம் 35

## நபியவர்களின் அற்புதம்!

وَالْإِيمَانُ بِأَنَّ النَّبِيَّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ حِينَ كَلَّمَ أَهْلَ الْقَلِيبِ يَوْمَ بَدْرٍ أَيْ الْـمُشْرِكِينَ كَانُوا يَسْمَعُونَ كَلَامَهُ

64. பத்ர் போர் அன்று கிணற்றில் போடப்பட்ட முஷ்ரிக்குகளிடம் நபி ﷺ அவர்கள் நிச்சயமாக பேசினார்கள்; அந்த முஷ்ரிக்குகள் நபி ﷺ அவர்களின் பேச்சை செவியுற்றார்கள் என்பதை நம்பிக்கை கொள்ள வேண்டும்.

### படிப்பினைகள்

*1. அல்லாஹு தஆலா தனது நபிமார்களை கண்ணியப்படுத்தும் விதமாகவும் அவர்களை உண்மைப்படுத்தும் விதமாகவும் பல அற்புதங்களை அவர்களுக்கு வழங்குவான்.*

*2. முந்திய நபிமார்களுக்கும் அல்லாஹ் பல அற்புதங்களை வழங்கி இருக்கின்றான்.*

*3. நமது நபி ﷺ அவர்களுக்கு அல்லாஹ் பல அற்புதங்களை வழங்கினான்.*

*4. ஸஹீஹான அறிவிப்புகளில் வந்துள்ள அற்புதங்களை நாம் ஈமான் கொள்ள வேண்டும். இதை அரபியில்* معجزة *முஃஜிசா அற்புதம் என்று கூறப்படும்.*

*5. அத்தகைய அற்புதங்களில் ஒன்றுதான் இந்த இடத்தில் ஆசிரியர் கூறி இருக்கின்ற செய்தியும்.*

**6.** அல்லாஹ்வின் ஆற்றலையும் வல்லமையையும் அறிந்தவர் நபிமார்களின் முஃஜிசாவில் சந்தேகிக்க மாட்டார்.

**7.** நபி ﷺ அவர்கள் பத்ரு போரில் கொல்லப்பட்டு கிணற்றில் எறியப்பட்ட சடலங்களை நோக்கி பேசினார்கள். அந்த சடலங்களுக்குள் அல்லாஹ் மீண்டும் உயிரை கொடுத்தான். அவர்கள் நபியின் பேச்சை செவியுறும் அளவு உயிருடன் இருந்தார்கள். இது நபி ﷺ அவர்களுக்கு அல்லாஹ் கொடுத்த அற்புதமாகும். காஃபிர்களின் கைசேதம் அதிகரிக்க வேண்டும் என்பதற்காக அல்லாஹ் இப்படி செய்தான்.

---------------------

# பாடம் 36

# அல்லாஹ்வின் மகத்தான அருள்!

وَالْإِيمَانُ بِأَنَّ الرَّجُلَ إِذَا مَرِضَ يَأْجُرُهُ اللّٰهُ عَلَىٰ مَرَضِهِ

65. ஒரு மனிதர் நோயுற்றால் அவர் நோயுற்றதற்காக அல்லாஹ் அவருக்கு நற்கூலி வழங்குகின்றான் என்று நம்பிக்கை கொள்ள வேண்டும்.

وَالشَّهِيدُ يَأْجُرُه اللّٰهُ عَلَى الْقَتْلِ

66. (போரில் கொல்லப்பட்ட) ஷஹீது, அல்லாஹ் அவருக்கு அவர் கொல்லப்பட்டதற்காக நற்கூலி வழங்குகின்றான் என்றும் நம்பிக்கை கொள்ள வேண்டும்.

## படிப்பினைகள்

*1. தான் படைத்த தனது அடியார்களை அல்லாஹ் எப்படி வேண்டுமானாலும் சோதிப்பான்.*

*2. அல்லாஹ் அடியார்களை சோதிப்பதில் பல நன்மைகள் உள்ளன.*

*3. ஆரோக்கியமும் நோயும் அல்லாஹ்வின் நாட்டப்படிதான்.*

*4. ஓர் அடியான் நோயுறும்போது அவனுக்கு ஏற்படக்கூடிய சிரமங்களை அவன் சகித்துக்கொண்டு பொறுமையாக இருந்தால் அவன் அல்லாஹ்விடம் சிறந்த நற்கூலிகளை பெறுவான்.*

*5. நோயை ஏசுவதோ சபிப்பதோ கூடாது.*

*6. நோய்கள் மனிதனை சுத்தப்படுத்தி விடுகின்றன.*

அவனின் பாவங்களை போக்கி, அவனுக்கு நன்மைகளை அதிகப்படுத்துகின்றன.

7. நபிமார்களுக்கும் நோய்கள் வந்துள்ளன. நல்லவர்களுக்கு ஏற்படக்கூடிய நோய்கள், சிரமங்கள் அனைத்தும் அல்லாஹ்வின் புறத்திலிருந்து அவர்களுக்கு நன்மையாகவே அமையும். அந்த நல்லோரின் மறுமை தகுதிகள் இதன் மூலம் அதிகரிக்கும். பாவங்கள் முற்றிலும் மன்னிக்கப்படும். பாவிகளுக்கு வரக்கூடிய சிரமங்கள், நோய்கள் அவர்களுக்கு அல்லாஹ்வின் புறத்திலிருந்து எச்சரிக்கையாகவும் தண்டனையாகவும் அமையும்.

8. அல்லாஹ்வின் பாதையில் காயமுறுவதும் கொல்லப்படுவதும் மிகப் பெரிய பாக்கியங்களாகும்.

9. அடியான் போரில் சந்திக்கின்ற சிறிய பெரிய சிரமங்கள், இன்னல்கள், துன்பங்கள், வலிகள், காயங்கள் என அனைத்தும் அல்லாஹ்விடம் நன்மைகளாக பதியப்படுகின்றன.

10. இஸ்லாமிய மார்க்கத்தில் ஷஹீதுக்கு மிகப் பெரிய கண்ணியமும் பதவியும் அல்லாஹ்விடம் உண்டு.

11. ஷஹீதுடைய சிறப்புகளை கூறுகின்ற குர்ஆன் வசனங்களும் ஸஹீஹான ஹதீஸ்களும் ஏராளம் உள்ளன.

12. இவ்வுலகில் ஒவ்வொரு முஸ்லிமும் ஆசை வைக்க வேண்டிய ஒன்று, தான் அல்லாஹ்வின் பாதையில் ஷஹீத் ஆக வேண்டும் என்பது.

---------------------

# பாடம் 37

## புதிய கருத்துக்களை நம்பாதே!

وَالْإِيمَانُ بِأَنَّ الْأَطْفَالَ إِذَا أَصَابَهُمْ شَيْءٌ فِي دَارِ الدُّنْيَا يَأْلَمُونَ
وَذٰلِكَ أَنَّ بَكْرَ بْنَ أُخْتِ عَبْدِ الْوَاحِدِ قَالَ لَا يَأْلَمُونَ وَكَذِبَ

67. இவ்வுலகில் குழந்தைகளுக்கு ஏதாவது ஏற்பட்டால் அவர்கள் வலியை உணர்வார்கள் என்று நம்பிக்கை கொள்ள வேண்டும். அவர்கள் வலியை உணர மாட்டார்கள் என்று பக்ர் இப்னு உக்த் அப்துல் வாஹித் என்பவர் கூறுகிறார். இவர் பொய் கூறுகிறார்.

### படிப்பினைகள்

*1. இவ்வுலகத்தில் இன்ப துன்பங்கள், சுக துக்கங்கள், வலிகள் இவை எல்லாம் பொதுவானவை ஆகும்.*

*2. குழந்தைகள், சிறுவர்கள், நல்லவர்கள், பாவிகள் என எல்லோரும் இந்த உலக விதியில் பொதுவானவர்கள்.*

*3. குழந்தைகளுக்கும் அவர்கள் நோயுறும்போது அல்லது காயப்படும்போது வலி ஏற்படும். அவர்கள் அந்த வலியை உணர்வார்கள். அவர்களுக்கு வலிக்காது என்று கூறுவதற்கு மார்க்கத்தில் எந்த ஆதாரமும் இல்லை. அவர்கள் வலியால் அழுவதையும் சிரமப்படுவதையும் நாம் கண்கூடாக பார்க்கிறோம். ஆகவே, அவர்களுக்கு வலிக்காது என்று சொல்வது எதார்த்தத்தை மறுப்பதாகும்.*

*4. நாம் ஒரு கருத்தை கூறுவதற்கு ஒன்று, மார்க்கத்தில் அதற்கு ஆதாரம் இருக்க வேண்டும். அல்லது அது ஒரு பொதுவான விஷயமாக இருந்தால் எதார்த்த உண்மைக்கு முரண்படாமல் இருக்க வேண்டும். இந்த விதிக்கு மாற்றமாக யார் பேசினாலும் சரி அவரின் கூற்று வீண் கற்பனையும் உளறலும் ஆகும்.*

---------------------

# பாடம் 38

## அல்லாஹ்விற்குதான் முழு அதிகாரம் உண்டு! அவனை யாரும் கேள்வி கேட்க முடியாது!

وَاعْلَمْ أَنَّهُ لَا يَدْخُلُ الْـجَنَّةَ أَحَدٌ إِلَّا بِرَحْمَةِ اللهِ وَلَا يُعَذِّبُ اللهُ أَحَدًا إِلَّا بِذُنُوبِهِ بِقَدْرِ ذُنُوبِهِ وَلَوْ عَذَّبَ اللهُ أَهْلَ السَّمَوَاتِ وَأَهْلَ الْأَرْضِينَ بِرَّهُمْ وَفَاجِرَهُمْ عَذَّبهُمْ غَيْرَ ظَالِمٍ لَهُمْ لَا يَـجُوزُ أَنْ يُقَالَ لِلّٰهِ تَبَارَكَ وَتَعَالَىٰ إِنَّهُ ظَالِمٌ وَإِنَّمَا يَظْلِمُ مَنْ يَأْخُذُ مَا لَيْسَ لَهُ وَاللهُ جَلَّ ثَنَاؤُهُ لَهُ الْـخَلْقُ وَالْأَمْرُ وَالْـخَلْقُ خَلْقُهُ وَالدَّارُ دَارُهُ لَا يُسْأَلُ عَمَّا يَفْعَلُ وَهُمْ يُسْأَلُونَ وَلَا يُقَالُ لِمَ وَكَيْفَ لَا يَدْخُلُ أَحَدٌ بَيْنَ اللهِ وَبَيْنَ خَلْقِهِ

68. அறிந்துகொள்! நிச்சயமாக ஒருவரும் சொர்க்கம் நுழையமாட்டார் அல்லாஹ்வின் கருணையைக் கொண்டே தவிர. அல்லாஹ் ஒருவரையும் தண்டிக்க மாட்டான் அவருடைய பாவங்களின் காரணமாகவே தவிர. அவருடைய பாவங்களின் அளவிற்கு ஏற்பவே அவன் அவரை தண்டிப்பான். வானங்களில் உள்ளவர்களையும் பூமிகளில் உள்ளவர்களையும் அவர்களில் உள்ள நல்லவர்களையும் அவர்களில் உள்ள பாவிகளையும் அல்லாஹ் தண்டித்தால் அவன் அவர்களுக்கு அநியாயம் செய்யாமல்தான் அவர்களை தண்டிப்பான். (அவன் அவர்களை தண்டிப்பது அவன் அவர்களின் மீது செய்த அநியாயமாக ஆகாது). அருள்

நிறைந்த, உயர்வுமிக்க அல்லாஹ்வை நோக்கி நிச்சயமாக அவன் அநியாயக்காரன் என்று கூறுவது கூடாது. தனக்கு உரிமை இல்லாத ஒன்றை எடுப்பவன்தான் அநியாயம் செய்தான். மதிப்புமிக்க புகழுடைய அல்லாஹ், அவனுக்கே படைப்புகளும் (அவற்றில்) அதிகாரம் செலுத்துவதும் சொந்தமானவை ஆகும். படைப்புகள் அவனுடைய படைப்புகளாகும். உலகம் அவனுடைய உலகமாகும். (படைப்புகளையும் அவர்கள் வாழக்கூடிய இந்த பிரபஞ்சத்தையும் அல்லாஹ்தான் படைத்தான். எனவே அனைத்தும் அல்லாஹ்விற்கு சொந்தமானவை ஆகும்.) அவன் செய்வதைப் பற்றி அவன் கேள்வி கேட்கப்பட மாட்டான். அவர்கள் (-படைப்புகள்)தான் கேள்வி கேட்கப்படுவார்கள். ஏன், எதற்காக, எப்படி என்று கூறக்கூடாது. அல்லாஹ்விற்கு மத்தியிலும் அவனுடைய படைப்புகளுக்கு மத்தியிலும் ஒருவரும் நுழைய முடியாது.

## படிப்பினைகள்

*1. சொர்க்கம் அல்லாஹ்வின் அருளும் கருணையும் ஆகும்.*

*2. ஆகவே, அல்லாஹ்வின் அருள் பெற்றால்தான் சொர்க்கம் செல்ல முடியும்.*

*3. நன்மை செய்தவர்களை அல்லாஹ் தண்டிக்கமாட்டான்.*

*4. பாவிகளை அல்லாஹ் மன்னிப்பான். அவர்களை தண்டித்தாலும் அவர்களின் பாவங்களின் அளவிற்கே தண்டிப்பான்.*

*5. நல்லவர்களை அல்லாஹ் தண்டித்தாலும் அதை யாரும் குறை கூற முடியாது. காரணம் அவனது படைப்பை அவன் தண்டிக்கிறான். அவனது உரிமையில் அவன்*

செயல்படுகின்றான். அப்படி இருக்க யார் அவனை கேள்வி கேட்க முடியும்?

*6.* அல்லாஹ் மகா ஞானவான். அவன் எல்லோரையும் அவர்களின் தகுதிகளையும் நன்கறிந்தவன். அவன் கொடுத்தாலும் தடுத்தாலும் ஒரு ஞானத்தின் அடிப்படையில்தான் செய்வான்.

7. அவனைத் தவிர வேறு யாரும் அவனது படைப்பில் அதிகாரம் செலுத்த முடியாது.

*8.* பெருமை அடிப்பவர்களை அவன் தாழ்த்திவிடுவான். பணிபவர்களை அவன் உயர்த்திவிடுவான்.

9. ஆட்சியும் அதிகாரமும் அவனுக்குரியவை ஆகும். படைப்புகள் எல்லோரும் அவனது அடிமைகளே! பாவிகளைத்தான் அவன் தண்டிப்பான். நல்லோருக்கு நற்கூலி கொடுப்பான்.

*10.* அல்லாஹ் தனது படைப்புகள் விஷயத்தில் எப்படி நடந்து கொள்கிறான் என்பதில் யாரும் அல்லாஹ்வின் மீது ஆட்சேபனை செய்ய முடியாது. அவன் நாடியவர்களுக்குக் கொடுப்பான். அவன் நாடியவர்களுக்கு தடுப்பான். அவன் நாடியவர்களை உயர்த்துவான். அவன் நாடியவர்களை தாழ்த்துவான்.

---------------------

# பாடம் 39

## நபிமொழியை விமர்சிப்பவன் நாத்திக சிந்தனையுடையவன்!

وَإِذَا سَمِعْتَ الرَّجُلَ يَطْعَنُ عَلَى الْآثَارِ وَلَا يَقْبَلُهَا أَوْ يُنْكِرُ شَيْئًا مِنْ أَخْبَارِ رَسُولِ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ فَاتَّهِمْهُ عَلَى الْإِسلَامِ فَإِنَّه رَجُلٌ رَدِيءُ الْقَوْلِ وَالْـمَذْهَبِ وَإِنَّمَا طَعَنَ عَلَى رَسُولِ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ وَأَصْحَابِهِ لِأَنَّهُ إِنَّمَا عَرَفْنَا اللهَ وَعَرَفْنَا رَسُولَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ وَعَرَفْنَا الْقُرْآنَ وَعَرَفْنَا الْـخَيْرَ وَالشَّرَّ وَالدُّنْيَا وَالْآخِرَةَ بِالْآثَارِ

69. ஒருவர் ஸஹாபாக்களின் கூற்றுகளின் மீது ஆட்சேபனை செய்வதையும் அவற்றை ஏற்காமல் இருப்பதையும் நீ கேள்விப்பட்டால்; அல்லது, ரஸூலுல்லாஹ் ﷺ உடைய செய்திகளில் எதையும் அவர் மறுப்பதை நீ கேள்விப்பட்டால் அவருடைய இஸ்லாமிய நம்பிக்கையில் அவரை நீ சந்தேகப்பட்டுக்கொள்! நிச்சயமாக அவர் கெட்ட கூற்றையும் கெட்ட வழிமுறையையும் உடைய மனிதர் ஆவார்.[5] அவர் ஆட்சேபனை செய்ததெல்லாம் ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் மீதும் அவர்களுடைய தோழர்கள் மீதும்தான். ஏனெனில், நிச்சயமாக நாம் அல்லாஹ்வை அறிந்ததெல்லாம், ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களை அறிந்ததெல்லாம், குர்ஆனை அறிந்ததெல்லாம், நல்லதை, கெட்டதை, உலகத்தை, மறுமையை அறிந்ததெல்லாம் ஹதீஸ்களைக் கொண்டுதான்.

5. அவருடைய கொள்கையும் கெட்டது, அவர் கூறுவதும் கெட்டதாகும்.

## படிப்பினைகள்

1. குர்ஆன் அல்லாஹ்வின் வேதமாகும். ஹதீஸ் நபி ﷺ அவர்களின் கூற்றாகும். நபி ﷺ அவர்கள் அல்லாஹ்வின் மார்க்கத்தில் அல்லாஹ்வின் அனுமதி இன்றி எதையும் பேச மாட்டார்கள்.

2. அல்லாஹ் நபி ﷺ அவர்களுக்கு குர்ஆனையும் அதன் விளக்கத்தையும் கற்றுக் கொடுத்தான்.

3. நபி ﷺ அவர்கள் கூறிய அனைத்தும் அல்லாஹ்வின் வேதத்திற்கு விளக்கமாகும்.

4. ஆகவே, நபி ﷺ அவர்களின் ஸஹீஹான ஹதீஸ்களை ஏற்காதவன், அல்லது அவற்றை தனது சொற்ப அறிவில் உரசிப்பார்த்துவிட்டு அவற்றில் விமர்சனம் செய்பவன், அல்லது ஹதீஸ்களில் சிலவற்றில் குறைக் கூறுபவன் மிகக் கெட்டவனாக இருப்பான். அவனது உள்ளமும் சிந்தனையும் புத்தியும் கெட்டுப்போனதால் அவன் இப்படி பேசுகிறான்.

5. யாரின் உள்ளத்தில் நபி ﷺ அவர்கள் மீதும் அவர்களின் தோழர்கள் மீதும் தப்பான எண்ணம் இருக்குமோ அவன்தான் ஹதீஸ்களை விமர்சனம் செய்யத் துணிவான்.

6. நபி ﷺ அவர்களையும் நபித்தோழர்களையும் மதிப்பவர் அவர்கள் மீது உள்ளத்தில் கண்ணியம் உள்ளவர் ஒருபோதும் ஹதீஸை விட தனது அறிவை முன்னிலைப் படுத்தமாட்டார். தனது அற்ப அறிவையும் சொற்ப அனுபவத்தையும் கொண்டு ஹதீஸை மறுக்க மாட்டார், அல்லது அவற்றை விமர்சனம் செய்ய மாட்டார்.

*7. அல்லாஹ், தனது மார்க்கத்தை அடியார்களுக்கு கற்பிப்பதற்கு நபியை அனுப்பினான். அப்படி இருக்க அந்த நபி ﷺ எப்படி தவறானதை நமக்கு போதிப்பார்கள்.*

*8. நபி ﷺ அவர்களிடமிருந்து மார்க்கத்தை கற்று, புரிந்து, அதை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் சொல்ல அல்லாஹ் ஸஹாபாக்களை தேர்ந்தெடுத்தான். அவர்கள் நபியிடம் மார்க்கத்தை முறையாக கற்று, அதை நிறைவாக பின்பற்றி அல்லாஹ்வின் அன்பையும் பொருத்தத்தையும் பெற்றார்கள். இன்னும் அவர்கள் சொர்க்க வாசிகள் என்று அல்லாஹ் சான்று பகர்ந்தான்.*

*9. ஆகவே, அத்தகைய உத்தமர்கள் நமக்கு மார்க்கத்தை தவறாக கற்றுக் கொடுத்திருப்பார்களா?! அல்லது அல்லாஹ்வும் ரஸூலும் சொல்லாததை இந்த மார்க்கத்தில் அவர்கள் சொல்லி இருப்பார்களா!?*

*10. ஆகவே, ஹதீஸ்களை விமர்சிப்பவர், ஸஹாபாக்கள் சரியாக மார்க்கத்தை புரியவில்லை; அல்லது அவர்கள் கூடுதல், குறைத்தல் செய்துவிட்டார்கள் என்று கூறினால் அவன் அந்த தோழர்களை இந்த மார்க்கத்திற்காக தேர்ந்தெடுத்த அல்லாஹ்வின் மீது குறை சொல்கிறான். அந்த தோழர்களை உருவாக்கிய நபி ﷺ அவர்கள் மீது குறை சொல்கிறான். இத்தகைய மனிதனை விட சொல்லால் வழிமுறையால் கேடு கெட்டவன் வேறு யார் இருக்க முடியும்?*

--------------------

## பாடம் 40

# குர்ஆனும் ஸுன்னாவும் ஒன்றில் ஒன்று இணைந்தது!

وإِنَّ الْقُرْآنَ إِلَى السُّنَّةِ أَحْوَجُ مِنْ السُّنَّةِ إِلَى الْقُرْآنِ

70. இன்னும், நிச்சயமாக ஸுன்னாவின் பக்கம் குர்ஆன் தேவை உள்ளதாக இருக்கின்றது. குர்ஆன் பக்கம் ஸுன்னா தேவையுள்ளதாக இருப்பதை விட.

### படிப்பினைகள்

*1. அல்லாஹ்வின் மார்க்கத்தில் குர்ஆனும் ஸுன்னாவும் வேதமும் நபிவழியும் ஒன்றுக்குள் ஒன்று பின்னி பிணைந்த இரண்டு விஷயங்களாகும்.*

*2. அல்குர்ஆனும் ஸுன்னாவும் இஸ்லாமிய மார்க்கத்தின் இரு முக்கிய அடிப்படைகளாகும்.*

*3. இரண்டில் ஒன்றைக்கொண்டு போதுமாக்கிக் கொள்வேன் என்று யாராவது கூறினால் அவன் கண்டிப்பாக வழிகேட்டில் சென்றுவிடுவான்.*

*4. உபதேசம் பெறுவதற்கும் படிப்பினை பெறுவதற்கும் அல்லாஹ்வை அறிவதற்கும் அல்குர்ஆன் போதுமானது என்பதில் அறவே சந்தேகமில்லை.*

*5. அதே நேரம் அல்லாஹ்வை எப்படி வணங்க வேண்டும், எது ஆகுமானது, எது கூடாது என்ற சட்டங்களை சொல்லாலும் செயலாலும் போதிப்பதற்காக அல்லாஹ் நபி ﷺ அவர்களை*

நமக்கு வழிகாட்டியாக அனுப்பினான். அவர்களை நாம் பின்பற்ற வேண்டும், அவர்களுக்கு கீழ்ப்படிய வேண்டும் என்று அல்லாஹ் நமக்கு அல்குர்ஆனில் கட்டளை இட்டான். இன்னும், நபி ﷺ அவர்கள் கூறியதை ஏற்க வேண்டும், அதை நம்பிக்கை கொள்ள வேண்டும், அதன் படி செயல்பட வேண்டும் என்று நமக்கு கட்டளை இட்டான். அவர்களுக்கு மாறுசெய்வதையும் அவர்களின் வழிகாட்டல்களை புறக்கணிப்பதையும் நம்மீது ஹராமாக்கினான். இன்னும், தூதருக்கு கீழ்ப்படிந்து நடப்பவர்தான் அல்லாஹ்விற்கு கீழ்ப்படிந்தவர் என்று அல்லாஹ் அறிவித்தான்.

**6.** ஆகவே, ஸுன்னா இல்லாமல் ஒருவர் அல்லாஹ்வை வணங்க முடியாது. ஸுன்னா இல்லாமல் ஒருவர் இஸ்லாமை பின்பற்ற முடியாது. ஸுன்னா இல்லாமல் ஒருவர் குர்ஆனை பின்பற்ற முடியாது. குர்ஆனில் உள்ள கட்டளைகளை ஸுன்னாவின் துணை இன்றி ஒருவர் செயல்படுத்த முடியாது.

---------------------

# பாடம் 41

## விதியில் விவாதம் செய்யாதே!

وَالْكَلَامُ وَالْـجِدَالُ وَالْـخُصُومَةُ فِي الْقَدَرِ خَاصَّةً مَنْهِيٌّ عَنْهُ عِنْدَ جَمِيعِ الْفِرَقِ لِأَنَّ الْقَدَرَ سِرُّ اللّٰهِ وَنَهَى الرَّبُّ تَبَارَكَ وَتَعَالَىٰ الْأَنْبِيَاءَ عَنْ الْكَلَامِ فِي الْقَدَرِ وَنَهَىٰ رَسُولُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ عَنْ الْـخُصُومَةِ فِي الْقَدَرِ وَكَرِهَهُ أَصْحَابُ رَسُولِ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ وَالتَّابِعُونَ وَكَرِهَهُ الْعُلَمَاءُ وَأَهْلُ الْوَرْعِ وَنَهَوْا عَنْ الْـجِدَالِ فِي الْقَدَرِ فَعَلَيْكَ بِالتَّسْلِيمِ وَالْإِقْرَارِ وَالْإِيمَانِ وَاعْتِقَادِ مَا قَالَ رَسُولُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ فِي جُمْلَةِ الْأَشْيَاءِ وَتَسْكُتُ عَمَّا سِوَىٰ ذٰلِكَ

71. குறிப்பாக விதியில் கிரேக்க தத்துவம் பேசுவது, தர்க்கம் செய்வது, விவாதம் செய்வது (உம்மத்துடைய) எல்லா பிரிவுகளிடமும் தடுக்கப்பட்டதாகும். ஏனெனில், விதி அல்லாஹ்வின் இரகசியமாகும். அருள் நிறைந்த, உயர்வுமிக்க இறைவன் விதியில் பேசுவதை விட்டும் நபிமார்களை தடுத்தான். விதியில் தர்க்க விவாதம் செய்வதை விட்டும் ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் தடுத்தார்கள். ரஸூலுல்லாஹ் ﷺ உடைய தோழர்கள் இன்னும் அவர்களின் மாணவர்கள் (-தாபியீன்கள்) அதை வெறுத்தார்கள். அறிஞர்களும் பேணுதல் உள்ளவர்களும் இதை வெறுத்தார்கள். விதியில் விவாதம் செய்வதை விட்டும் அவர்கள் (அனைவரும் மக்களை) தடுத்தார்கள். முழுமையாக ஏற்றுக் கொள்வதும் ஒப்புக்கொள்வதும் நம்பிக்கை கொள்வதும் ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறிய அனைத்து விஷயங்களையும் நம்பிக்கை கொள்வதும் உன் மீது கடமையாகும்.

அவை அல்லாத மற்ற எல்லாவற்றையும் பற்றி நீ அமைதியாக வாய்மூடி இருக்க வேண்டும்.

## படிப்பினைகள்

*1. நாமோ அறிவற்றவர்களாக இருந்தோம். இஸ்லாமைக் கொண்டு அல்லாஹ் நமக்கு நல்லறிவை வழங்கினான். நாமோ கெட்டவர்களாக இருந்தோம். குர்ஆனைக் கொண்டும் ஸுன்னாவைக் கொண்டும் அல்லாஹ் நமக்கு நேர்வழி காட்டினான். நல்லது எது கெட்டது எது என்று நாம் அறியாமல் இருந்தோம். அல்லாஹ் நமக்கு நல்லதையும் கெட்டதையும் இந்த மார்க்கத்தைக் கொண்டு புரிய வைத்தான்.*

*2. அல்லாஹ் நமக்கு இந்த நேர்வழி நிறைந்த மார்க்கத்தை கொடுத்தான். மூட நம்பிக்கைகளை நம்புவது, நேரிய அறிவுக்கு முற்றிலும் எதிராக செயல்படுவது, செத்தவற்றை சாப்பிடுவது, இரத்தத்தைக் குடிப்பது, அசிங்கமான, ஆபசாமான நடத்தைகளை புனிதமாக கருதுவது ஆகிய அனைத்தையும் விட்டு அதன் மூலம் அல்லாஹ் நம்மைப் பரிசுத்தப்படுத்தினான்.*

*3. தெளிவான அறிவு கிடைக்கப்பெற்ற பின்னர் அல்லாஹ்வின் வேதத்தின் மீதும் அவனது தூதரின் கூற்றுகள் மீதும் ஆட்சேபனை செய்வது எத்தகைய மகா வழிகேடு!*

*4. விதி அல்லாஹ்வின் பரம ரகசியங்களில் உள்ள ஒன்றாகும். அல்லாஹ், மனிதனுக்கு எல்லா ஞானங்களையும் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. நமக்கு எது தேவையோ அதை மட்டும் அல்லாஹ் நமக்கு கற்பித்தான். அல்லாஹ் நமக்கு எதை கற்பித்தானோ அதை மட்டுமே நாம் அறிய வேண்டும். அல்லாஹ் நமக்கு எதை மறைத்துவிட்டானோ அதை அறியவோ அதைப் பற்றி பேசவோ கூடாது.*

*5. விதி குறித்து பேசாமல், தர்க்கம் செய்யாமல், குதர்க்கம் செய்யாமல் மௌனம் காப்பதே விதிப் பற்றிய ஆழ்ந்த அறிவாகும்.*

---------------------

# பாடம் 42

## இஸ்ராவும் மிஃராஜும் உண்மையே!

وَالْإِيمَانُ بِأَنَّ رَسُولَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ أُسْرِيَ بِهِ إِلَى السَّمَاءِ وَصَارَ إِلَى الْعَرْشِ وَكَلَّمَ اللهَ تَبَارَكَ وَتَعَالَىٰ وَدَخَلَ الْـجَنَّةَ وَاطَّلَعَ إِلَى النَّارِ وَرَأَى الْـمَلَائِكَةَ وَسَمِعَ كَلَامَ اللهِ عَزَّ وَجَلَّ وَنُشِرَتْ لَهُ الْأَنْبِيَاءُ وَرَأَىٰ سُرَادِقَاتِ الْعَرْشِ وَالْكُرْسِيَّ وَجَمِيعَ مَا فِي السَّمَوَاتِ وَمَا فِي الْأَرْضِينَ فِي الْيَقْظَةِ حَمَلَهُ جِبْرِيلُ عَلَى الْبُرَاقِ حَتَّىٰ أَدَارَهُ فِي السَّمَوَاتِ وَفُرِضَتْ لَهُ الصَّلَاةُ فِي تِلْكَ اللَّيْلَةِ وَرَجَعَ إِلَىٰ مَكَّةَ فِي تِلْكَ اللَّيْلَةِ وَذٰلِكَ قَبْلَ الْـهِجْرَةِ

72. நிச்சயமாக ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் வானத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள்; அர்ஷ் வரை அவர்கள் சென்றார்கள்; அருள் நிறைந்த உயர்வுமிக்க அல்லாஹ்விடம் பேசினார்கள்; சொர்க்கத்தில் நுழைந்தார்கள்; நரகத்தை எட்டிப் பார்த்தார்கள்; மலக்குகளை கண்டார்கள்; கண்ணியமும் கம்பீரமும் மிக்க அல்லாஹ்வின் பேச்சை செவியுற்றார்கள்; அவர்களுக்காக நபிமார்கள் எழுப்பப்பட்டார்கள்; அர்ஷ் உடைய கூடாரங்களையும் குர்ஸியையும் வானங்களில் உள்ள எல்லாவற்றையும் பூமியில் உள்ள எல்லாவற்றையும் அவர்கள் விழிப்பில் பார்த்தார்கள். நபி ﷺ அவர்களை வானவர் ஜிப்ரீல் புராக் வாகனத்தில் ஏற்றி சென்றார். இறுதியாக, வானங்களில் அவர் அவர்களை சுற்றிக் காண்பித்தார். அவர்களுக்கு அங்கு அந்த இரவில் தொழுகை கடமையாக்கப்பட்டது. அவர்கள் அதே இரவில் மக்காவிற்கு திரும்பி வந்தார்கள். இது நபி ﷺ அவர்களுக்கு அவர்களுடைய ஹிஜ்ரத்திற்கு முன்னர் நிகழ்ந்ததாகும்.

## படிப்பினைகள்

*1. அல்லாஹு தஆலா, நபி ﷺ அவர்களை ஏனைய நபிமார்கள், ரஸூல்மார்களைவிட சிறப்பித்திருக்கின்றான்.*

*2. ஏனைய நபிமார்களுக்கு கொடுத்த அற்புதங்களை விட மகத்தான அற்புதங்களை அல்லாஹு தஆலா நமது நபி ﷺ அவர்களுக்கு கொடுத்தான்.*

*3. நபி ﷺ அவர்களின் மிக பிரபலமான அற்புதங்களில் ஒன்று அவர்கள் விண்ணுலகம் சென்று சொர்க்கம், நரகம் இன்னும் பல அத்தாட்சிகளையும் கண்டது. அதுபோன்று அல்லாஹ் நாடிய தூரம் அல்லாஹ்விற்கு நெருக்கமாகி அல்லாஹ்விடம் பேசினார்கள். அங்குதான் அவர்களுக்கு அல்லாஹ் தொழுகையை கடமையாக்கினான்.*

*4. முதலில் அல்மஸ்ஜிதுல் அக்ஸா சென்று பிறகு ஏழு வானங்களை தாண்டி சென்று சித்ரத்துல் முன்தஹாவை அடைந்தார்கள்.*

*5. இந்த பயணம் ஒரே ஓர் இரவில் நபியவர்களுக்கு அவர்களின் விழிப்பில் நடைபெற்றது. நபி ﷺ அவர்கள் உடலோடும் உயிரோடும் இந்த பயணம் சென்றார்கள்.*

*6. இதுகுறித்து பல ஸஹீஹான ஹதீஸ்கள் வந்துள்ளன. அவற்றை கற்று சந்தேகமின்றி நம்பிக்கை கொள்ள வேண்டும். மிஃராஜுடைய ஹதீஸ்கள் ஒரு முஃமினின் ஈமானை அதிகப்படுத்தக் கூடியவை ஆகும். இன்னும் மறுமை பயத்தையும் முஸ்லிமுக்கு அதிகப்படுத்தும். அல்லாஹ்வின் வல்லமை மீது உறுதியையும் நபியவர்கள் மீது அன்பையும் கண்ணியத்தையும் அதிகரிக்க செய்யும்.*

*7. அல்லாஹ்வின் வல்லமையை புரியாதவர்கள், மறுமை நம்பிக்கையில் சந்தேகம் உள்ளவர்கள் அல்லது பலவீனமான ஈமான் உள்ளவர்கள்தான் நபி ﷺ அவர்களின் இந்த இஸ்ரா, மிஃராஜ் பயணத்தில் சந்தேகப்படுவார்கள்.*

---

# பாடம் 43

## உயிர்களின் தங்குமிடம்

وَاعْلَمْ أَنَّ أَرْوَاحَ الشُّهَدَاءِ فِي قَنَادِيلَ تَحْتَ الْعَرْشِ تَسْرَحُ فِي الْـجَنَّةِ وَأَرْوَاحَ الْـمُؤْمِنِينَ تَحْتَ الْعَرْشِ وَأَرْوَاحَ الْكُفَّارِ وَالْفُجَّارِ فِي بَرْهُوتٍ وَهِيَ فِي سِجِّينٍ

73. அறிந்துகொள்! நிச்சயமாக ஷஹீதுகள் (போரில் கொல்லப்பட்டவர்கள்) உடைய உயிர்கள் அர்ஷின் கீழே கூண்டுகளில் இருக்கும். அவை சொர்க்கத்தில் சுற்றும். முஃமின்களின் உயிர்கள் அர்ஷுக்கு கீழே இருக்கும். காஃபிர்கள் மற்றும் பாவிகளின் உயிர்கள் பர்ஹூத்தில்[6] இருக்கும். பர்ஹூத் என்பது சிஜ்ஜீனில் இருக்கின்றது.

## படிப்பினைகள்

***1.*** *நல்லவர்கள் வாழும்போது கண்ணியமானவர்கள். அவர்கள் மரணித்த பின்னரும் அல்லாஹ்விடம் கண்ணியமானவர்களாக இருப்பார்கள். பாவிகள் வாழும்போதும் அல்லாஹ்வின் பார்வையில் இழிவானவர்கள். அவர்கள் இறந்த பின்னரும் அல்லாஹ்விடம் இழிவானவர்களாக இருப்பார்கள்.*

***2.*** *நல்லவர்களையும் கெட்டவர்களையும் அல்லாஹ் ஒருபோதும் சமமாக்க மாட்டான். ஆகவே, நல்லவர்கள் இறந்த*

6. பர்ஹூத் என்பது ஏமன் நாட்டில் ஹளர மவ்த் என்ற நகரத்தில் உள்ள ஒரு பெரிய பள்ளத்தாக்கு அல்லது ஆழமான கிணறு என்று சொல்லப்படுகிறது. காஃபிர்கள் மற்றும் முனாஃபிக்குகளுடைய உயிர்கள் அங்கு ஒன்று சேர்க்கப்படுவதாக கூறப்படுகிறது. ஆனால், காஃபிர்கள் மற்றும் முனாஃபிக்குகளுடைய உயிர்கள் சிஜ்ஜீனில் இருக்கிறது என்பதுதான் குர்ஆன், ஸுன்னாவிலிருந்து கிடைத்த உறுதியான செய்தியாகும்.

*பின்னர் கண்ணியமான இடத்தில் அல்லாஹ் அவர்களின் உயிர்களை பாதுகாப்பான். பாவிகளின் உயிர்கள் சிஜ்ஜீன் என்ற இடத்தில் இருக்கும்.*

*3. மரணத்திற்குப் பிறகுள்ள வாழ்க்கையை برزخ பர்சக் என்று கூறப்படும். இது அல்லாஹ்வின் இல்மில் உள்ள ஒரு விஷயமாகும். ஆகவே, குர்ஆனிலும் ஸஹீஹான ஹதீஸ்களிலும் மறைவான செய்திகள் என்னென்ன வந்துள்ளனவோ அவற்றை அப்படியே நாம் நம்பிக்கைக் கொள்ள வேண்டும்.*

*4. நமது கண்ணால் பார்க்க முடியாத பல விஷயங்கள் இந்த உலகத்தில் இருக்கும்போது நமது புறக்கண்களால் பார்க்க இயலாத மறுமை சம்பந்தப்பட்ட விஷயங்களைப் பற்றி நாம் எப்படி வாய்திறக்க முடியும்!?*

---------------------

# பாடம் 44

## மண்ணறையின் விசாரணை உண்மையே!

وَالْإِيمَانُ بِأَنَّ الْـمَيِّتَ يُقْعَدُ فِي قَبْرِهِ وَيُرْسِلُ اللهُ فِيهِ الرُّوحَ حَتَّى يَسْأَلَـهُ مُنْكَرٌ وَنَكِيرٌ عَنْ الْإِيمَانِ وَشَرَائِعِهِ ثُمَّ يُسَلُّ رُوحُهُ بِلَا أَلَمٍ وَيَعْرِفُ الْـمَيِّتُ الزَّائِرَ إِذَا أَتَاهُ وَيَنْعَمُ فِي الْقَبْرِ الْـمُؤْمِنُ وَيُعَذَّبُ الْفَاجِرُ كَيْفَ شَاءَ اللهُ

74. நிச்சயமாக மய்யித் -இறந்தவர் தனது கப்ரில் -மண்ணறையில் உட்கார வைக்கப்படுவார். அல்லாஹ் அவரில் உயிரை (மீண்டும்) அனுப்புவான். இறுதியில் முன்கர், நகீர் ஆகிய இரு வானவர்கள் அவரிடம் ஈமானைப் பற்றியும் அதன் சட்டங்களைப் பற்றியும் கேள்வி கேட்பார்கள். பிறகு, அவருடைய உயிர் வலியின்றி வெளியே எடுக்கப்படும். இறந்தவர் தன்னிடம் வருகின்ற வருகையாளரை அறிவார். அல்லாஹ் நாடிய விதத்தில் முஃமின் கப்ரில் இன்புறுவார். பாவி தண்டிக்கப்படுவான்.

### படிப்பினைகள்

*1. மண்ணறை ஒன்று சொர்க்க பூங்காவாக இருக்கும் அல்லது நரகப் படுகுழியாக இருக்கும்.*

*2. மண்ணறையில் நல்லோரும் தீயோரும் விசாரிக்கப்படுவார்கள்.*

*3. அந்த விசாரணை எப்படி நடைபெறும் என்பது அல்லாஹ்வின் இல்மில் உள்ள விஷயமாகும்.*

*4. நல்லோருக்கு கப்ரில் அல்லாஹ் நாடிய சொர்க்க இன்பங்கள் கொடுக்கப்படும். பாவிகளுக்கு நரக தண்டனை கொடுக்கப்படும்.*

*5. பர்சக் உடைய வாழ்க்கை உண்மையாகும். அது குறித்து அல்லாஹ்வும் ரஸூலும் கூறியது உண்மையாகும். அல்லாஹ்வையும் அவனது நபியையும் உண்மையில் நம்பிக்கை கொண்டவர் கண்டிப்பாக அல்லாஹ்வும் ரஸூலும் கூறியதை முழுமையாக நம்பிக்கை கொள்வார். அதில் அவர் அறவே சந்தேகப்பட மாட்டார்.*

*6. அல்லாஹ் மனிதனுக்கு வழங்கிய பகுத்தறிவு அது சரியான பாதையில் சரியான அடிப்படைகள் படி சிந்தித்தால் கண்டிப்பாக மார்க்கம் கூறி இருக்கின்ற எந்த ஒன்றிலும் முரண்பாட்டை காணாது.*

*7. ஒரு விஷயத்தை கண்கள் பார்க்க வில்லை என்பதை காரணம் கூறி மறுப்பவன் புத்திகெட்டவனாக இருப்பான்.*

*8. மனித அறிவு ஓர் எல்லைக்கு உட்பட்டது, எல்லா உண்மைகளையும் மனித அறிவால் புரிந்து கொள்ள முடியாது, மனிதன் அறியாத பல ஆயிரம் உண்மைகள் இன்னும் உள்ளன என்பதை உண்மையான அறிவாளிகள் புரிந்துகொள்வார்கள்.*

*9. வஹ்யிதான் கல்வியின் எல்லையாகும். அறிவல்ல. அறிவு என்பது வஹ்யிக்கு கட்டுப்பட வேண்டுமே தவிர வஹ்யில் உள்ளதை மறுக்கின்ற உரிமை அல்லது தகுதி அறிவுக்கு அறவே இல்லை.*

*10. குர்ஆனையும் ஸஹீஹான ஸுன்னாவையும் நம்பிக்கை கொள்வதைத் தவிர அறிவுக்கு வேறு வழி இல்லை. அப்படி நம்பிக்கை கொண்டால்தான் அந்த அறிவு நேரிய, சீரிய சரியான அறிவாக இருக்கும். இல்லையென்றால் அந்த அறிவில் தடுமாற்றமும் குழப்பமும் கோளாறும் ஏற்பட்டு விடும்.*

---

# பாடம் 45

## எல்லாம் விதியின்படிதான் நடக்கும்!

وَاعْلَمْ أَنَّ الشَّرَّ وَالْـخَيْرَ بِقَضَاءِ اللهِ وَقَدَرِهِ

75. அறிந்துகொள்! நிச்சயமாக தீமையும் நன்மையும் அல்லாஹ் உடைய தீர்ப்பின் படியும் அவனுடைய விதியின் படியும்தான் நடக்கின்றன.

### படிப்பினைகள்

*1.* *இந்த பிரபஞ்சத்தில் என்ன நடக்கும் என்பதை அல்லாஹ் அவனது லவ்ஹுல் மஹ்ஃபூள் எனும் பதிவு புத்தகத்தில் பதிவு செய்து விட்டான்.*

*2.* *நன்மை தீமை என அனைத்தும் எழுதப்பட்டுவிட்டன.*

*3.* *விதி என்பது அல்லாஹ்வின் அறிவும் அவனது நாட்டமும் ஆகும்.*

*4.* *அல்லாஹ் அனைத்தையும் திட்டமிட்டு முடிவு செய்திருக்கின்றான்.*

*5.* *அவனது திட்டமிடுதலிலும் முடிவிலும் அறவே குறை இல்லை.*

*6.* *நல்லவர்கள் அல்லாஹ்விடம் நல்லதை ஆதரவு வைப்பார்கள். பாவிகள் தங்கள் பாவத்திற்கு விதியை காரணம் காட்டுவார்கள்.*

*7.* *விதி என்பது அல்லாஹ்வின் மறைக்கப்பட்ட ஞானமாகும். அதை அறிய முயற்சிப்பவர் தோல்வியைத்தான் சந்திப்பார்.*

*8. விதி விஷயத்தில் தர்க்கம் செய்வது, விதியில் அதிகம் சிந்திப்பது அதை மறுப்பதின் பக்கம் இழுத்து சென்று விடும். விதியை மறுப்பவர் அல்லாஹ்வை மறுத்துவிட்டார்.*

*9. விதியில் ஆட்சேபனை செய்பவர் அல்லாஹ்வின் அறிவின் மீது ஆட்சேபனை செய்தவர் ஆவார்.*

*10. விதியை குறித்து அல்லாஹ் கூறி இருக்கின்ற இந்த வசனம் நமக்கு போதுமானதாகும்.*

*அல்லாஹு தஆலா கூறுகின்றான் :*

﴿مَا أَصَابَ مِنْ مُصِيبَةٍ فِي الْأَرْضِ وَلَا فِي أَنْفُسِكُمْ إِلَّا فِي كِتَابٍ مِنْ قَبْلِ أَنْ نَبْرَأَهَا إِنَّ ذٰلِكَ عَلَى اللهِ يَسِيرٌ○ لِكَيْلَا تَأْسَوْا عَلَىٰ مَا فَاتَكُمْ وَلَا تَفْرَحُوا بِمَا آتَاكُمْ وَاللهُ لَا يُحِبُّ كُلَّ مُخْتَالٍ فَخُورٍ○﴾

*பூமியிலும் உங்களிலும் ஒரு சோதனை ஏற்படுவதில்லை, நாம் (பூமியில், அல்லது உங்களில்) அதை உருவாக்குவதற்கு முன்னர் அது விதியில் இருந்தே தவிர. நிச்சயமாக இது அல்லாஹ்விற்கு மிக எளிதானதாகும். (இதை நாம் உங்களுக்கு அறிவித்தோம்.) ஏனெனில், உங்களுக்கு தவறிவிட்டதற்காக நீங்கள் துக்கப்படாமல் இருப்பதற்காகவும், அவன் உங்களுக்கு கொடுத்ததைக் கொண்டு நீங்கள் பெருமைப்படாமல் இருப்பதற்காகவும் ஆகும். அல்லாஹ் அகம்பாவக்காரர்கள், பெருமையடிப்பவர்கள் எல்லோரையும் நேசிக்க மாட்டான். (அல்குர்ஆன் 57 : 22, 23)*

---------------------

# பாடம் 46

## அல்லாஹ், மூஸா நபியிடம் பேசினான்!

وَالْإِيمَانُ بِأَنَّ اللهَ تَبَارَكَ وَتَعَالَىٰ هُوَ الَّذِي كَلَّمَ مُوسَىٰ بْنَ عِمْرَانَ يَوْمَ الطُّورِ وَمُوسَىٰ يَسْمَعُ مِنْ اللهِ الْكَلَامَ بِصَوْتٍ وَقَعَ فِي مَسَامِعِهِ مِنْهُ لَا مِنْ غَيْرِهِ فَمَنْ قَالَ غَيْرَ هٰذَا فَقَدْ كَفَرَ بِاللهِ الْعَظِيمِ

76. அருள்நிறைந்த, உயர்வுமிக்க அல்லாஹ், அவன்தான் தூர் தினத்தன்று மூஸா இப்னு இம்ரான் இடம் பேசினான். மூஸா ﵇ அவர்கள் அல்லாஹ்விடமிருந்து பேச்சை சப்தமாக செவியுற்றார்கள். அது அல்லாஹ்விடமிருந்து மூஸா ﵇ அவர்களின் செவிகளில் விழுந்தது. அது வேறு யாரிடமிருந்தும் வரவில்லை. யார் இது அல்லாத (வேறு கருத்)தை கூறுவாரோ அவர் மகத்தான அல்லாஹ்வை நிராகரித்து விட்டார்.

### படிப்பினைகள்

*1. அல்லாஹு தஆலா மிக மிக உயர்ந்தோன் ஆவான். அவன் தனது உள்ளமையால் படைப்புகளை விட்டு விலகி ஏழு வானங்களுக்கு மேல் தனது அர்ஷுக்கு மேல் உயர்ந்திருக்கின்றான்.*

*2. அவனின் உள்ளமையை நாம் கற்பனை செய்ய முடியாது. அவனின் தன்மைகளின் வெளிப்பாடுகளை மட்டுமே நாம் அறிய முடியும்.*

*3. அல்லாஹ்விற்கு அழகிய பெயர்களும் உயர்வான பண்புகளும் மேலான தன்மைகளும் உள்ளன. இன்னும், அல்லாஹ்*

தன்னுடன் இணைத்து தனது செயலாக கூறி இருக்கின்ற அனைத்தும் அவனுக்கு தகுதியான விதத்தில் அவனுக்கு உள்ளன. அல்லாஹ்வின் உள்ளமையை மறுக்க முடியாதது போல் அவனது தன்மையை மறுக்க முடியாது. அவ்வாறே அவனது செயல்களையும் மறுக்க முடியாது. அல்லாஹ்வின் உள்ளமையை ஒப்பிட முடியாதது போல் அல்லாஹ்வின் தன்மைகளையும் செயல்களையும் ஒப்பிட முடியாது. அல்லாஹ்விற்கு உவமை, விளக்கம், அமைப்பு கூற முடியாதது போல் அவனது தன்மைகள் இன்னும் செயல்களுக்கு உவமை, விளக்கம், அமைப்பு கூற முடியாது.

4. யார் ஒருவர் அல்லாஹ் தனக்கு கூறிய பெயரை, அல்லது தன்மையை அல்லது செயலை மாற்றுவாரோ, அல்லது மறுப்பாரோ அல்லது அதற்கு அமைப்பை விவரிப்பாரோ அல்லது உவமை கூறுவாரோ அவர் கண்டிப்பாக வழிகெட்டு விட்டார்.

5. அல்லாஹ் தன்னைப் பற்றி மிக அறிந்தவன். பிறகு, நபி ﷺ அவர்கள் அல்லாஹ்வைப் பற்றி அதிகம் அறிந்தவர்கள். ஆகவே, அல்லாஹ் தன்னை வர்ணித்ததைபோல் இன்னும் அல்லாஹ்வின் தூதர் அவர்கள் அல்லாஹ்வை வர்ணித்தது போல் நாமும் அல்லாஹ்வை வர்ணிக்க வேண்டும்.

6. அல்லாஹ்வின் அழகிய தன்மைகளில் உள்ளதுதான் அவன் பேசக்கூடியவனாக இருப்பது.

7. அவனது பேச்சு படைப்பினங்களின் பேச்சுக்கு ஒப்பானது அல்ல.

8. அல்லாஹ் தனது பேச்சை தன் அடியார்களில் தான் நாடியவர்களுக்கு செவியுற வைக்கின்றான்.

9. அல்லாஹ்வின் பார்த்தல், செவியுறுதல், அறிதல் என்ற

*தன்மைகளை எப்படி நம்பிக்கை கொள்கிறோமோ அவ்வாறே அல்லாஹ்வின் பேசுதல் என்ற தன்மையையும் நம்பிக்கை கொள்ள வேண்டும்.*

***10.*** *அல்லாஹ் எப்படி பேசுவான் என்று குதர்க்கம் செய்யக் கூடாது.*

***11.*** *குர்ஆனின் பல வசனங்களும் ஹதீஸின் பல அறிவிப்புகளும் அல்லாஹ்விற்கு பேச்சு என்ற தன்மையை உறுதி செய்கின்றன. யார் இதை மறுப்பாரோ அவர் அல்லாஹ்வை மறுத்தவர் போலாவார்.*

***12.*** *அல்லாஹ் தனது அடியார்களில் தான் நாடியவர்களிடம் பேசுவான். நபிமார்களிடம் வஹியின் மூலம் அல்லாஹ் பேசினான். நபி மூஸா ﷺ அவர்களிடம் நேரடியாக பேசினான். அல்லாஹ்வின் பேச்சை நபி மூஸா ﷺ அவர்கள் செவியுற்றார்கள்.*

***15.*** *யார் இதை மறுப்பாரோ அவர் இஸ்லாமை விட்டு வெளியேறி விடுவார். அல்லாஹ் பாதுகாப்பானாக! ஆமீன்.*

---------------------

# பாடம் 47

## அறிவு அல்லாஹ்வின் படைப்பே! அவன் நாடியவருக்கு நாடிய அளவு அறிவை வழங்குகின்றான்.

وَالْعَقْلُ مَوْلُودٌ أُعْطِيَ كُلُّ إِنْسَانٍ مِنْ الْعَقْلِ مَا أَرَادَ اللهُ يَتَفَاوَتُونَ فِي الْعُقُولِ مِثْلَ الذَّرَّةِ فِي السَّمَاوَاتِ وَيُطْلَبُ مِنْ كُلِّ إِنْسَانٍ مِنْ الْعِلْمِ عَلَىٰ قَدْرِ مَا أَعْطَاهُ مِنْ الْعَقْلِ وَلَيْسَ الْعَقْلُ بِاكْتِسَابٍ إِنَّمَا هُوَ فَضْلٌ مِنْ اللهِ تَبَارَكَ وَتَعَالَىٰ

77. அறிவு, புத்தி அதுவும் படைக்கப்பட்ட ஒன்றே! ஒவ்வொரு மனிதனும் அறிவிலிருந்து அல்லாஹ் நாடியளவு கொடுக்கப்படுகின்றான். மனிதர்கள் அறிவுகளில் ஏற்றத்தாழ்வு உள்ளவர்களாக இருக்கின்றனர், வானங்களில் உள்ள அணுக்களைப் போல். ஒவ்வொரு மனிதரிடமும் அவர் கல்வி கற்க வேண்டும் என்று கூறப்படும், அவருக்கு அல்லாஹ் கொடுத்திருக்கின்ற அறிவின் அளவிற்கு.[7] அறிவு, புத்தி என்பது தானாக தேடிக்கொள்கின்ற ஒன்றல்ல. நிச்சயமாக அதுவெல்லாம் அருள் நிறைந்த, உயர்வுமிக்க அல்லாஹ்வின் புறத்திலிருந்து கொடுக்கப்படுகின்ற சிறப்பாகும்.

### படிப்பினைகள்

*1. மனிதனுக்கு கிடைத்துள்ள எல்லாம் அல்லாஹ்வின் புறத்திலிருந்துதான். அல்லாஹு தஆலா கூறுகிறான் :*

---

7. மனிதர்களில் ஒவ்வொருவரும் தங்களது அறிவிற்கு ஏற்ப மார்க்கக் கல்வியை கற்க வேண்டும்.

﴿وَمَا بِكُمْ مِنْ نِعْمَةٍ فَمِنَ اللّٰهِ﴾

உங்களிடம் உள்ள எல்லா பாக்கியங்களும் அல்லாஹ்விடமிருந்து உங்களுக்கு கிடைத்தவை ஆகும். (அல்குர்ஆன் 16 : 53)

2. மனிதனுக்கு அல்லாஹு தஆலா அவன் கேட்ட செல்வங்களையும் அவன் கேட்காத செல்வங்களையும் இந்த உலகில் கொடுத்துக்கொண்டே இருக்கின்றான். அல்லாஹு தஆலா கூறுகின்றான் :

﴿وَآتَاكُمْ مِنْ كُلِّ مَا سَأَلْتُمُوهُ وَإِنْ تَعُدُّوا نِعْمَتَ اللّٰهِ
لَا تُحْصُوهَا إِنَّ الْإِنْسَانَ لَظَلُومٌ كَفَّارٌ○﴾

நீங்கள் அவனிடம் கேட்டதிலிருந்தெல்லாம் உங்களுக்கு (தன் அருளை) தந்தவன். அல்லாஹ்வின் அருளை நீங்கள் கணக்கிட்டால் அதை நீங்கள் எண்ண முடியாது! நிச்சயமாக (நம்பிக்கை கொள்ளாத) மனிதன் மகா அநியாயக்காரன், மிக நன்றி கெட்டவன் ஆவான். (அல்குர்ஆன் 14 : 34)

3. மனிதனுக்கு அல்லாஹ்விடமிருந்து கிடைத்துள்ள ஒவ்வொரு அருளும் மிக மதிப்புடையதாகும். அது தங்கம், வெள்ளி, வசதி, ஆட்சி, அதிகாரம், உடல் சுகம், மனைவி, பிள்ளைகள் என எதுவாக இருந்தாலும் சரி. அல்லது இவை அல்லாத வேறொன்றாக இருந்தாலும் சரி. அல்லாஹ் மனிதனுக்கு வழங்கியுள்ள அருள்களில் அறிவு, புத்திக் கூர்மை, நுண்ணறிவு, நேரிய சிந்தனை மிக மிக மதிப்புடையவை ஆகும்.

4. இது அல்லாஹ்வின் புறத்திலிருந்து நேரடியாக கொடுக்கப்படக்கூடிய ஒன்றாகும். அல்லாஹ் யாருக்கு எவ்வளவு நாடுகின்றானோ அந்தளவு அறிவை வழங்குகிறான்.

*இதில் மனிதன் தற்பெருமை பேசுவதற்கு ஒன்றுமில்லை. அவன் அல்லாஹ்விற்கு நன்றி செலுத்தி, அந்த அறிவை நல்ல பாதையில் பயன்படுத்த வேண்டும். தவறான வழிகளில், கெட்ட நோக்கங்களில் பயன்படுத்தக் கூடாது.*

**عَنْ طَاوُسٍ ﵀ أَنَّهُ قَالَ أَدْرَكْتُ نَاسًا مِنْ أَصْحَابِ رَسُولِ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ يَقُولُونَ كُلُّ شَيْءٍ بِقَدَرٍ قَالَ وَسَمِعْتُ عَبْدَ اللّٰهِ بْنَ عُمَرَ يَقُولُ قَالَ رَسُولُ اللَّهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ كُلُّ شَيْءٍ بِقَدَرٍ حَتَّىٰ الْعَجْزِ وَالْكَيْسِ أَوْ الْكَيْسِ وَالْعَجْزِ**

*தாவூஸ் ரஹிமஹுல்லாஹ் கூறுகிறார் : நான் ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களின் தோழர்களில் பல நபர்களை கண்டிருக்கின்றேன். எல்லா காரியங்களும் விதியின் படிதான் என்று அவர்கள் கூறுகிறார்கள். இன்னும் அப்துல்லாஹ் இப்னு உமர் அவர்கள் கூற நான் செவியுற்றேன், ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள் : எல்லாம் விதியின் படிதான் நடக்கின்றன, பலவீனம் இன்னும் புத்திக்கூர்மை உட்பட.*

*அறிவிப்பாளர் : அப்துல்லாஹ் இப்னு உமர், நூல் : முஸ்லிம், எண் : 4799*

---------------------

# பாடம் 48

## அல்லாஹ்வின் செயல்கள் அனைத்தும் நீதமே! அவன் சிலரை சிலரை விட மேன்மைப் படுத்துகின்றான்.

وَاعْلَمْ أَنَّ اللّٰهَ فَضَّلَ الْعِبَادَ بَعْضَهُمْ عَلَىٰ بَعْضٍ فِي الدِّينِ وَالدُّنْيَا عَدْلًا مِنْهُ لَا يُقَالُ جَارَ وَلَا حَابَىٰ فَمَنْ قَالَ إِنَّ فَضْلَ اللّٰهِ عَلَى الْـمُؤْمِنِ وَالْكَافِرِ سَوَاءٌ فَهُوَ صَاحِبُ بِدْعَةٍ بَلْ فَضَّلَ اللّٰهُ الْـمُؤْمِنِينَ عَلَى الْكَافِرِينَ وَالطَّائِعَ عَلَى الْعَاصِي وَالْـمَعْصُومَ عَلَى الْـمَخْذُولِ عَدْلٌ مِنْهُ هُوَ فَضْلُهُ يُعْطِي مَنْ يَشَاءُ وَيَمْنَعُ مَنْ يَشَاءُ

78. அறிந்துகொள்! நிச்சயமாக அல்லாஹ் அடியார்களில் சிலரை சிலரைப் பார்க்கிலும் மார்க்கத்திலும் உலகத்திலும் மேன்மையாக்கி இருக்கின்றான். இது அவன் புறத்திலிருந்து நீதமாக முடிவு செய்யப்பட்ட ஒன்றுதான். அவன் அநீதி இழைத்தான், அல்லது, ஒருவருக்கு சாதகமாக, ஒருவருக்கு பாதகமாக பாகுபாடு காட்டினான் என்று கூறக்கூடாது. நிச்சயமாக முஃமின் மீதும் காஃபிர் மீதும் அல்லாஹ்வின் கிருபை சமமாக உள்ளது என்று யார் கூறுவாரோ அவர் சாஹிபுல் பித்ஆ -நூதனமான கூற்றை கூறுபவர் ஆவார். மாறாக, காஃபிர்களைப் பார்க்கிலும் முஃமின்களை அல்லாஹ் மேன்மையாக்கி வைத்திருக்கின்றான்; பாவியைப் பார்க்கிலும் தனக்கு கீழ்ப்படிந்து நடப்பவரையும், (அல்லாஹ்வின் அருளில் இருந்து) கைவிடப்பட்டவரை பார்க்கிலும் பாவத்தைவிட்டு பாதுகாக்கப்பட்டவரை மேன்மையாக்கி இருக்கின்றான். இது அவன்

புறத்திலிருந்து நீதமானதாகும்.[8] இது அவனுடைய கிருபையாகும். அவன் நாடியவருக்கு அதை கொடுக்கின்றான். அவன் நாடியவருக்கு அதை தடுத்து விடுகின்றான்.

## படிப்பினைகள்

*1. இந்த பிரபஞ்சத்தில் உள்ள அனைத்தும் அல்லாஹ்வின் படைப்புகளும் அல்லாஹ்வின் அடியார்களும் ஆவார்கள்.*

*2. அல்லாஹ் தான் நாடியபடி, தனது ஞானத்தின்படி ஒன்றை படைக்கின்றான்.*

*3. ஒவ்வொரு படைப்பையும் அவனது ஞானத்தின்படி அவன் படைத்து அதற்கு சில தகுதிகளை வழங்குகின்றான்.*

*4. மனித அறிவால் சூழ்ந்தறிய முடியாத தனது ஞானத்தின் அடிப்படையில் அவன் படைப்புகளை படைத்து அவற்றுக்குண்டான தகுதிகளை வழங்குகின்றான்.*

*5. அவனது படைப்பில் எல்லோரும் கொடுப்பினை விஷயத்தில் சமமானவர்கள் அல்ல. அல்லாஹ் தான் நாடியவருக்கு நாடிய அளவு இந்த உலக செல்வத்தை, வசதி வாய்ப்புகளை, சொத்து சுகங்களை வழங்கி சோதிக்கின்றான். இன்னும் அவன் விரும்பியவர்களுக்கு இந்த மார்க்க நற்பாக்கியத்தை கொடுத்து மேன்மைப் படுத்துகின்றான்.*

*அல்லாஹு தஆலா கூறுகின்றான் :*

﴿إِنَّ رَبَّكَ يَبْسُطُ الرِّزْقَ لِمَنْ يَشَاءُ وَيَقْدِرُ
إِنَّهُ كَانَ بِعِبَادِهِ خَبِيرًا بَصِيرًا○﴾

---

8. அல்லாஹ் இவ்வாறு மேன்மைப் படுத்தி இருப்பது அநீதி என்று கூறக்கூடாது. அல்லாஹ்வுடைய ஒவ்வொரு செயலும் நீதமானதுதான். அல்லாஹ்வின் செயல்களுக்குள் இருக்கின்ற உண்மை தத்துவத்தை நம்முடைய வெளிப்படையான பார்வையால் அறிந்து கொள்ள முடியாது.

நிச்சயமாக உம் இறைவன், தான் நாடுகிறவருக்கு வாழ்வாதாரத்தை விரிவாக்குகின்றான்; (தான் நாடுகிறவருக்கு) அளவாக (சுருக்கி)க் கொடுக்கின்றான். நிச்சயமாக அவன், தன் அடியார்களை ஆழ்ந்தறிபவனாக, உற்று நோக்குபவனாக இருக்கின்றான். (அல்குர்ஆன் 17 : 30)

﴿اَللّٰهُ يَبْسُطُ الرِّزْقَ لِمَنْ يَشَاءُ مِنْ عِبَادِهِ وَيَقْدِرُ لَهُ
إِنَّ اللّٰهَ بِكُلِّ شَيْءٍ عَلِيمٌ○﴾

அல்லாஹ்தான் தனது அடியார்களில் தான் நாடியவருக்கு உணவை விசாலமாக்குகின்றான். இன்னும் (தான் நாடுகின்ற) அவருக்கு (அதை) சுருக்குகின்றான். நிச்சயமாக அல்லாஹ் எல்லாவற்றையும் நன்கறிந்தவன். (அல்குர்ஆன் 29 : 62)

﴿قُلْ إِنَّ رَبِّي يَبْسُطُ الرِّزْقَ لِمَنْ يَشَاءُ وَيَقْدِرُ
وَلٰكِنَّ أَكْثَرَ النَّاسِ لَا يَعْلَمُونَ○﴾

(நபியே!) கூறுவீராக! நிச்சயமாக என் இறைவன் அவன் நாடுகின்றவர்களுக்கு வாழ்வாதாரத்தை விசாலமாக தருகின்றான். (நாடுகின்றவர்களுக்கு) சுருக்கி கொடுக்கின்றான். என்றாலும் மக்களில் அதிகமானவர்கள் (இதன் உண்மை தத்துவத்தை) அறியமாட்டார்கள். (அல்குர்ஆன் 34 : 36)

﴿أَوَلَمْ يَعْلَمُوا أَنَّ اللّٰهَ يَبْسُطُ الرِّزْقَ لِمَنْ يَشَاءُ
وَيَقْدِرُ إِنَّ فِي ذٰلِكَ لَآيَاتٍ لِقَوْمٍ يُؤْمِنُونَ○﴾

நிச்சயமாக அல்லாஹ் தான் நாடுகின்றவர்களுக்கு வாழ்வாதாரத்தை விசாலமாகக் கொடுக்கிறான். (தான்

நாடியவர்களுக்கு) சுருக்கமாகக் கொடுக்கிறான் என்பதை அவர்கள் அறியவில்லையா? நிச்சயமாக இதில் நம்பிக்கை கொள்கின்ற மக்களுக்கு பல அத்தாட்சிகள் உள்ளன. (அல்குர்ஆன் 39 : 52)

﴿وَهُوَ الَّذِي جَعَلَكُمْ خَلَائِفَ الْأَرْضِ وَرَفَعَ بَعْضَكُمْ
فَوْقَ بَعْضٍ دَرَجَاتٍ لِيَبْلُوَكُمْ فِي مَا آتَاكُمْ
إِنَّ رَبَّكَ سَرِيعُ الْعِقَابِ وَإِنَّهُ لَغَفُورٌ رَحِيمٌ ۝﴾

அவன்தான் உங்களை பூமியில் (முன் சென்றவர்களின்) வழித்தோன்றல்களாக (பிரதிநிதிகளாக) ஆக்கினான். உங்களுக்கு (அவன்) கொடுத்தவற்றில் உங்களைச் சோதிப்பதற்காக உங்களில் சிலரை சிலருக்கு மேல் பதவிகளில் உயர்த்தினான். நிச்சயமாக உம் இறைவன் தண்டிப்பதில் தீவிரமானவன். இன்னும் நிச்சயமாக அவன்தான் மகா மன்னிப்பாளன், பெரும் கருணையாளன். (அல்குர்ஆன் 6 : 165)

﴿وَاللَّهُ فَضَّلَ بَعْضَكُمْ عَلَىٰ بَعْضٍ فِي الرِّزْقِ﴾

உங்களில் சிலரை சிலரைவிட வாழ்வாதாரத்தில் அல்லாஹ்தான் மேன்மையாக்கினான். (அல்குர்ஆன் 16 ; 71)

இதுபோன்று இன்னும் பல வசனங்கள் உள்ளன.

**6.** உலக செல்வம் கொடுக்கப்பட்டவரை விட மார்க்கமும் தக்வாவும், இறைக் கல்வி ஞானமும் கொடுக்கப்பட்டவர் சிறந்தவர் ஆவார். இவர் அல்லாஹ்வின் விசேஷமான அருளுக்கு உரியவர் ஆவார்.

அல்லாஹு தஆலா கூறுகின்றான் :

﴿وَاللّٰهُ ذُو فَضْلٍ عَلَى الْمُؤْمِنِينَ﴾

*அல்லாஹ் நம்பிக்கையாளர்கள் மீது அருளுடையவன் ஆவான்.*

*(அல்குர்ஆன் 3 : 152)*

﴿ذٰلِكَ فَضْلُ اللّٰهِ يُؤْتِيهِ مَنْ يَشَاءُ وَاللّٰهُ ذُو الْفَضْلِ الْعَظِيمِ﴾

*அது அல்லாஹ்வின் சிறப்பா(ன அருளா)கும். அவன் நாடுகின்றவர்களுக்கு அதை அவன் கொடுக்கின்றான். அல்லாஹ் மகத்தான சிறப்புடையவன் ஆவான்.*

*(அல்குர்ஆன் 57 : 21)*

*7. அல்லாஹ் எதை செய்தாலும் அவனது ஞானத்தின் அடிப்படையில் செய்கிறான். அவன் செய்தது, அவன் கொடுத்தது, அவன் தடுத்தது, அவன் உயர்த்தியது, அவன் தாழ்த்தியது எல்லாம் நீதமாகும். அவற்றில் எவ்வித அநீதியும் இல்லை.*

*8. அடியார்கள் எல்லோரும் அவனது படைப்புகள். அவன் கொடுக்கின்ற அருளும் அவனது அருளாகும். ஆகவே, அவன் தனது அறிவின்படி தான் நாடியதை தான் நாடியவருக்கு தான் நாடிய அளவு கொடுக்கின்றான். இதில் கேள்வி கேட்க, ஆட்சேபனை செய்ய, எதிர்ப்பு தெரிவிக்க யாருக்கும் அறவே உரிமை இல்லை.*

﴿وَلَا تَتَمَنَّوْا مَا فَضَّلَ اللّٰهُ بِهِ بَعْضَكُمْ عَلَىٰ بَعْضٍ﴾

*உங்களில் சிலரை சிலரைவிட அல்லாஹ் மேன்மையாக்கியதை (கண்டு) ஏங்காதீர்கள்.* *(அல்குர்ஆன் 4 :32)*

﴿فَضَّلَ اللّٰهُ الْمُجَاهِدِينَ بِأَمْوَالِهِمْ وَأَنْفُسِهِمْ عَلَى الْقَاعِدِينَ دَرَجَةً﴾

தங்கள் செல்வங்களைக் கொண்டும் தங்கள் உயிர்களைக் கொண்டும் போரிடுபவர்களை (போருக்குச் செல்லாமல்) தங்கியவர்களை விட பதவியால் அல்லாஹ் மேன்மையாக்கினான்.
(அல்குர்ஆன் 4 : 95)

﴿ذٰلِكَ فَضْلُ اللّٰهِ يُؤْتِيهِ مَنْ يَشَاءُ وَاللّٰهُ وَاسِعٌ عَلِيمٌ۝﴾

இது அல்லாஹ்வின் அருள். தான் நாடியவர்களுக்கு அதைத் தருகிறான். அல்லாஹ் விசாலமானவன், நன்கறிந்தவன்.
(அல்குர்ஆன் 5 :54)

---------------------

# பாடம் 49

## எல்லோருக்கும் நன்மையை நாடு!

وَلَا يَـحِلُّ أَنْ تَكْتُمَ النَّصِيحَةَ لِلْمُسْلِمِينَ بِرِّهِمْ وَفَاجِرِهِمْ فِي أَمْرِ الدِّينِ فَمَنْ كَتَمَ فَقَدْ غَشَّ الْـمُسْلِمِينَ وَمَنْ غَشَّ الْـمُسْلِمِينَ فَقَدْ غَشَّ الدِّينَ وَمَنْ غَشَّ الدِّينَ فَقَدْ خَانَ اللهَ وَرَسُولَهُ وَالْـمُؤْمِنِينَ

79. முஸ்லிம்களில் எவருக்கும் அவர்களில் உள்ள நல்லவருக்கும் அவர்களில் உள்ள தீயவருக்கும் மார்க்க விஷயத்தில் நசீஹாவை -நன்மையை நாடுவதை நீ மறைப்பது உனக்கு ஆகுமாகாது. யார் (நன்மையை) மறைப்பாரோ அவர் முஸ்லிம்களுக்கு மோசடி செய்துவிட்டார். யார் முஸ்லிம்களுக்கு மோசடி செய்வாரோ அவர் மார்க்கத்திற்கு மோசடி செய்துவிட்டார். யார் மார்க்கத்திற்கு மோசடி செய்வாரோ அவர் அல்லாஹ்விற்கும் அவனது தூதருக்கும் முஃமின்களுக்கும் துரோகம் செய்துவிட்டார்.

### படிப்பினைகள்

*1. முஸ்லிம் உடைய எந்த செயலும் அவனுடைய மார்க்க வழிகாட்டல் படி அமைந்திருக்க வேண்டும்.*

*2. நமது விருப்பு, இன்னும் வெறுப்பைத் தாண்டி மார்க்கத்தை பின்பற்றுவதில் நாம் கவனமாக இருக்க வேண்டும்.*

*3. எல்லா விஷயங்களிலும் அல்லாஹ்வின் கட்டளைக்கும் நபி ﷺ அவர்களின் ஸுன்னாவிற்கும் முதலிடம் இன்னும் முக்கியத்துவம் தரவேண்டும்.*

*4.* பிறர் நமக்கு கெடுதி செய்தாலும் நாம் அவருக்கு நல்லதையே செய்ய வேண்டும்.

*5.* நாம் நன்மை செய்வதிலும் நல்லதை எடுத்து செய்வதிலும் நல்லதின் பக்கம் வழிகாட்டுவதிலும் பிறர் நலம் பேணுவதிலும் விசாலமான உள்ளத்துடன் செயல்பட வேண்டும்.

*6.* நல்லோர், தீயோர் என்று பாராமல் எல்லோருக்கும் நல்லது செய்து மனிதம் பேணுவது இந்த மார்க்கத்தின் தனித்துவமாகும். இது உண்மை முஸ்லிமின் உயர்ந்த பண்பாகும்.

*7.* தனக்கு ஒரு நல்ல விஷயம் தெரிந்து, பிறகு அது யாருக்கு தேவைப் படுகிறதோ அவருக்கு அதை எடுத்துக் கூறாமல் இருப்பது முஸ்லிம்களுக்கு செய்யும் மோசடியாக கருதப்படும்.

*8.* முஸ்லிம்களுக்கு செய்யப்படும் மோசடி மார்க்கத்திற்கு செய்யும் மோசடியாகும்.

*9.* மார்க்கத்திற்கு மோசடி செய்வது ஈமானை பாதிக்கும் செயலாகும். அது அல்லாஹ்விற்கும் அவனது தூதர் அவர்களுக்கும் செய்யும் துரோகமாக கருதப்படும்.

*10.* எல்லோருக்கும் நன்மையை நாடுபவர் அல்லாஹ்விடமும் அவனது தூதர் அவர்களிடமும் மிக உயர்ந்த கண்ணியத்தையும் பதவியையும் அடைவார்.

*11.* பிறருக்கு கெடுதி செய்வது, துரோகம் செய்வது, வஞ்சகம் செய்வது, பிறருக்கு இன்னல் ஏற்படுவதை விரும்புவது, பிறர் சிரமப்படுவதை கண்டும் காணாமல் இருப்பது, அதை விரும்புவது, சமுதாயத்திற்கு தேவையான உதவிகளை அவை தனக்கு சாத்தியமாக இருந்தும் செய்யாமல் இருப்பது இது மார்க்க குற்றமாக எடுத்துக் கொள்ளப்படும்.

--------------------

# பாடம் 50

## அல்லாஹ் அனைத்தையும் அறிந்தவன், மகா ஞானவான்!

وَاللهُ تَبَارَكَ وَتَعَالَىٰ سَمِيعٌ بَصِيرٌ عَلِيمٌ يَدَاهُ مَبْسُوطَتَانِ قَدْ عَلِمَ اللهُ أَنَّ الْـخَلْقَ يَعْصُونَهُ قَبْلَ أَنْ يَـخْلُقَهُمْ عِلْمُهُ نَافِذٌ فِيهِمْ فَلَمْ يَمْنَعْهُ عِلْمُهُ فِيهِمْ أَنْ هَدَاهُمْ لِلْإِسْلَامِ وَمَنَّ بِهِ عَلَيْهِمْ كَرَمًا وَجُوْدًا وَتَفَضُّلًا فَلَهُ الْـحَمْدُ

80. அருள் நிறைந்த உயர்வுமிக்க அல்லாஹ் நன்கு செவியுறுபவன், உற்று நோக்குபவன், நன்கறிந்தவன் ஆவான். அவனது இரு கரங்களும் விரிந்துள்ளன. திட்டமாக படைப்புகள் தனக்கு மாறு செய்வார்கள் என்பதை அவன் அவர்களை படைப்பதற்கு முன்னரே திட்டமாக அல்லாஹ் அறிந்திருந்தான். அவனது ஞானம் அவர்களில் நிறைவேறியே தீரும். அவன் அவர்களை அறிந்திருந்தது அவன் அவர்களுக்கு இஸ்லாமிய மார்க்கத்தின் பக்கம் நேர்வழி காட்டுவதிலிருந்து அவனை தடுக்கவில்லை. அவன் அவர்கள் மீது இஸ்லாமிய மார்க்கத்தை வழங்கி பேரருள் புரிந்தான். இது அவனது கொடையும் தயாளமும் கிருபையும் ஆகும். ஆகவே, அவனுக்கே எல்லாப் புகழும் உரித்தாகட்டும்.

### படிப்பினைகள்

*1. அல்லாஹ்வின் தன்மைகளையும் பண்புகளையும் செயல்களையும் நாம் சூழ்ந்து அறிய முடியாது.*

2. அல்லாஹ்விற்கு அழகிய பெயர்களும் உயர்வான பண்புகளும் உள்ளன.

3. அல்லாஹ்விற்கு என்று உள்ள அமைப்பை அவனை அன்றி யாரும் அறிய மாட்டார்.

4. அல்லாஹ், தனது அமைப்பில் இருந்து எந்த தன்மையை நமக்கு கூறினானோ அதை நாம் அப்படியே நம்பிக்கை கொள்ள வேண்டும்.

5. நமது குறுகிய அறிவில் அல்லாஹ்வின் அமைப்பின் தன்மைகளை சிந்திக்கக் கூடாது, அவற்றுக்கு உதாரணம் கூறுவதோ, அவற்றை ஒப்பிடுவதோ, அவற்றுக்கு விளக்கம் கூறுவதோ, அவற்றின் பொருளை மாற்றவோ மறுக்கவோ கூடாது.

6. அல்லாஹ்வின் செயல்கள் ஒவ்வொன்றும் அவனது மிக உயர்வான ஞானத்தின்படி திட்டமிடப்பட்டவை ஆகும். அவற்றில் குறைக் காண மனித அறிவுக்கு எந்த தகுதியும் இல்லை.

7. ஒருவருக்கு நேர்வழிகாட்டுவதும் அவரை நேர்வழி நடத்துவதும் அல்லாஹ்வின் விசேஷமான அருளாகும். அதை அவன் யாருக்கு வேண்டுமானாலும் கொடுப்பான்.

8. யார் தனக்கு மாறு செய்வார், யார் தன்னை நிராகரிப்பார் என்று அல்லாஹ் தனது அறிவில் முன்கூட்டியே அறிந்திருக்கிறான்.

9. மனிதர்களின் எந்த செயலும் அல்லாஹ்வின் முந்திய அறிவை விட்டும் நீங்கியது அல்ல.

10. அல்லாஹ்வின் அறிவும் நாட்டமும் அனைத்தையும் மிகைக்கக் கூடியதாகும்.

*11. மனிதனின் எந்த ஒரு செயலும் அவனது விருப்பத்தின்படி நிகழ்வதுடன் அதை முன்கூட்டியே அல்லாஹ் அறிந்திருக்கிறான். இன்னும் அது அல்லாஹ்வின் நாட்டமில்லாமல் நிகழ முடியாது.*

*12. இந்த பிரபஞ்சம் அல்லாஹ்வின் படைப்பாகும். அதில் அல்லாஹ்வின் நாட்டமின்றி, இன்னும் அல்லாஹ் படைக்காமல் எதுவும் நிகழ முடியாது.*

*13. அடியான் தனக்கு கிடைத்த அல்லாஹ்வின் அருளுக்கு நன்றி உள்ளவனாக இருக்க வேண்டும். அது அல்லாஹ்வின் கருணையால் தனக்கு கிடைத்ததாக கருத வேண்டும். அந்த அருளுக்கு தான் தகுதி உள்ளவன், ஆகவே அது எனக்கு கிடைத்ததாக பெருமை, கர்வம் கொள்ளக் கூடாது.*

*14. அல்லாஹ், தனது படைப்புகளுக்கு மத்தியில் தனது நீதத்தின் படி காரியங்களை நடத்துகிறான்.*

*15. படைப்புகள் நாளை மறுமை நாளில் அல்லாஹ்விடம் அவனது அறிவின் மீது குற்றம் சுமத்தாமல் இருக்க வேண்டும் என்பதற்காக அல்லாஹ் இந்த உலகத்தில் எல்லோருக்கும் நேர்வழியை தனது தூதர்கள் இன்னும் வேதங்கள் மூலம் தெளிவுப்படுத்தி விடுகிறான். ஆகவே, யார் மறுக்கிறாரோ அவர் தனது விருப்பப்படி மறுக்கிறார். அதில் அவர் அல்லாஹ்வைக் குறை கூற முடியாது. நாளை மறுமையில் அவர் நரகம் செல்லும்போது எனது நிராகரிப்பின் காரணமாகவே அல்லாஹ் என்னை நரகத்தில் புகுத்தினான், இதில் அல்லாஹ் எனக்கு அநியாயம் செய்ய வில்லை என்பதை அந்த அடியான் அறிந்த நிலையில்தான் நரகம் செல்வான்.*

--------------------

# பாடம் 51

## சுபசெய்திகள் மூன்று வகை!

وَاعْلَمْ أَنَّ الْبَشَارَةَ عِنْدَ الْـمَوْتِ ثَلَاثُ بَشَارَاتٍ يُقَالُ أَبْشِرْ يَا حَبِيبَ اللّٰهِ بِرِضَى اللّٰهِ وَالْـجَنَّةِ وَيُقَالُ أَبْشِرْ يَا عَدُوَّ اللّٰهِ بِغَضَبِ اللّٰهِ وَالنَّارِ وَيُقَالُ أَبْشِرْ يَا عَبْدَ اللّٰهِ بِالْـجَنَّةِ بَعْدَ الْإِسْلَامِ هٰذَا قَوْلُ ابْنِ عَبَّاسٍ ﵄

81. அறிந்துகொள்! மரண நேரத்தில் நற்செய்தி மூன்று நற்செய்திகளாகும். அவருக்கு (-மரணிக்கின்ற மனிதரை நோக்கி) கூறப்படும்: அல்லாஹ்வின் நேசரே! அல்லாஹ்வின் திருப்தி இன்னும் சொர்க்கத்தைக் கொண்டு நற்செய்தி பெற்றுக்கொள்! அல்லது அவருக்கு கூறப்படும்: அல்லாஹ்வின் எதிரியே! அல்லாஹ்வின் கோபம் இன்னும் நரகத்தைக் கொண்டு நற்செய்தி பெற்றுக்கொள்! அல்லது அவருக்கு கூறப்படும்: அல்லாஹ்வின் அடியாரே! இஸ்லாமை ஏற்றதற்கு பின்னர் சொர்க்கத்தைக் கொண்டு நற்செய்தி பெற்றுக்கொள்! இது இப்னு அப்பாஸ் ﵄ அவர்கள் கூறிய கூற்றாகும்.

### படிப்பினைகள்

*இந்த உலகத்தில் மூன்று வகையான மக்கள் இருக்கிறார்கள்.*

*1. அல்லாஹ்வை நம்பிக்கை கொண்ட முஸ்லிம்கள். 2. அல்லாஹ்வின் மார்க்கத்தை அறிந்த பின்னர் அதை நிராகரித்த மக்கள். 3. அல்லாஹ்வின் மார்க்கத்தை அறவே அறியாத, மார்க்கம் சென்று சேராத மக்கள். இந்த மூன்று வகை மக்களின் மரண நேரத்தைப் பற்றி ஆசிரியர் இங்கு குறிப்பிடுகிறார்கள்.*

*அல்லாஹ்வின் மார்க்கத்தை நம்பிக்கை கொண்ட முஸ்லிம்கள்*

*தங்கள் மரண நேரத்தில் சொர்க்கத்தின் சுபச் செய்தியை பெறுவார்கள்.*

*அல்லாஹ்வின் மார்க்கத்தை நிராகரித்தவர்கள் நரகத்தின் சுபச் செய்தியை பெறுவார்கள்.*

*மார்க்கம் சென்று சேராத மக்கள் அல்லாஹ்வின் அறிவில் அவர்கள் விடப்பட்டவர்கள் ஆவார்கள். மறுமையில் அல்லாஹ் அவர்களுக்கு மார்க்கத்தை சேர்ப்பிப்பான். அப்போது அவர்களில் யார் இஸ்லாமை ஏற்றார்களோ அவர்கள் சொர்க்கத்தில் பிரவேசிப்பார்கள். அவர்களில் யார் இஸ்லாமை ஏற்கவில்லையோ அவர்கள் நரகத்தில் தள்ளப்படுவார்கள்.*

*இது குறித்த ஆதாரங்களை வரிசையாக பார்ப்போம்.*

﴿يَا أَيَّتُهَا النَّفْسُ الْمُطْمَئِنَّةُ ○ ارْجِعِي إِلَىٰ رَبِّكِ رَاضِيَةً مَرْضِيَّةً ○﴾

*திருப்தியடைந்த ஆத்மாவே! நீ உன் இறைவன் பக்கம் செல் நீ திருப்தி பெற்றநிலையில், உன் மீது இறைவன் திருப்தி அடைந்த நிலையில்! (அல்குர்ஆன் 89 : 27, 28)*

*இந்த வசனங்கள் நம்பிக்கையாளருக்கு அவர்களின் மரண நேரத்தில் வானவர்கள் மூலமாக அறிவிக்கப்படும் சுபசெய்தி என்று பல விரிவுரையாளர்கள் விளக்கம் கூறி இருப்பதை இமாம் தபரி அவர்கள் பதிவு செய்துள்ளார்கள்.*

﴿إِنَّ الَّذِينَ قَالُوا رَبُّنَا اللَّهُ ثُمَّ اسْتَقَامُوا تَتَنَزَّلُ عَلَيْهِمُ الْمَلَائِكَةُ أَلَّا تَخَافُوا وَلَا تَحْزَنُوا وَأَبْشِرُوا بِالْجَنَّةِ الَّتِي كُنْتُمْ تُوعَدُونَ ○﴾

*எவர்கள் எங்கள் இறைவன் அல்லாஹ்தான் என்று கூறி, (அதன்*

மீது) உறுதியாக நிலைத்துமிருந்தார்களோ அவர்களிடம் நிச்சயமாக மலக்குகள் வந்து (அவர்களை நோக்கி) "நீங்கள் (ஒன்றுக்கும்) பயப்படாதீர்கள்; கவலைப்படாதீர்கள். உங்களுக்கு வாக்களிக்கப்பட்ட சுவனபதியைக் கொண்டு சந்தோஷமடையுங்கள்" என்று கூறுவார்கள்.

(அல்குர்ஆன் 41 : 30)

இதுவும் வானவர்கள் நல்லோருக்கு அவர்களின் மரண நேரத்தில் கூறும் சுப செய்தி என்று விரிவுரையாளர்கள் விளக்கம் கூறுவதாக இமாம் தபரி பதிவு செய்துள்ளார்கள்.

﴿وَلَوْ تَرَىٰ إِذْ يَتَوَفَّى الَّذِينَ كَفَرُوا الْمَلَائِكَةُ يَضْرِبُونَ وُجُوهَهُمْ وَأَدْبَارَهُمْ وَذُوقُوا عَذَابَ الْحَرِيقِ﴾

மலக்குகள் நிராகரிப்பவ(ரின் உயி)ர்களைக் கைப்பற்றும் சமயத்தில், அவர்களின் முகங்களிலும் முதுகுகளிலும் அடித்து (நரகத்திற்கு ஓட்டிச் சென்று), எரிக்கும் (நரக) வேதனையை சுவைத்துப் பாருங்கள் என்று கூறுவதை நீங்கள் பார்க்க வேண்டாமா? (அல்குர்ஆன் 8 : 50)

இந்த வசனம் வானவர்கள் நிராகரிப்பாளர்களை உயிர் கைப்பற்றும் நிலையை விவரிப்பதாக அறிஞர்கள் கூறிய விளக்கத்தை இமாம் தபரி பதிவு செய்துள்ளார்கள்.

﴿مَنِ اهْتَدَىٰ فَإِنَّمَا يَهْتَدِي لِنَفْسِهِ وَمَنْ ضَلَّ فَإِنَّمَا يَضِلُّ عَلَيْهَا وَلَا تَزِرُ وَازِرَةٌ وِزْرَ أُخْرَىٰ وَمَا كُنَّا مُعَذِّبِينَ حَتَّىٰ نَبْعَثَ رَسُولًا﴾

எவன் நேரான வழியில் செல்கிறானோ அவன் தன்னுடைய நன்மைக்காகவே நேரான வழியில் செல்கிறான். எவன்

தவறான வழியில் செல்கிறானோ அவன் (தவறான வழியில் சென்று) தனக்கே தீங்கிழைத்துக் கொள்கிறான். ஒருவனுடைய பாவச்சுமையை மற்றொருவன் சுமக்க மாட்டான். (நம்முடைய யாதொரு) தூதரை அனுப்பாத வரையில் நாம் (எவரையும்) வேதனை செய்வதில்லை. (அல்குர்ஆன் 17 : 15)

அபூ ஹுரைரா ﵁ அவர்கள் கூறுகிறார்கள் : மறுமை நாள் நிகழும்போது அல்லாஹ் تَبَارَكَ وَتَعَالَى நபிமார்களின் இடைப்பட்ட காலத்தில் இறந்தவர்களின் சந்ததிகளையும் புத்தி சுவாதீனம் இல்லாதவர்களையும் செவிடர்களையும் ஊமையர்களையும் இஸ்லாமை புரிந்து கொள்ள முடியாத அளவு முதுமையை அடைந்த பின்னர் இஸ்லாமை பெற்றவர்களையும் அல்லாஹ் ஒன்று சேர்ப்பான். பிறகு அவர்களிடம் ஒரு தூதரை அனுப்பி நரகத்தில் நுழையுங்கள் என்று கூறுவான். எங்களிடம் தூதர் யாரும் வராமல் இருக்க நாங்கள் எப்படி நரகத்தில் நுழைவோம் என்று கூறுவார்கள். அல்லாஹ்வின் மீது ஆணையாக அவர்கள் அதில் நுழைந்திருந்தால் அது அவர்களுக்கு குளுமையாகவும் பாதுகாப்பாகவும் ஆகி இருக்கும். பிறகு அவர்களுக்கு ஒரு தூதரை அனுப்புவான். அவர்களில் யார் யார் தூதருக்கு கீழ்ப்படிவதை அல்லாஹ் நாடுவானோ அவர்கள் தூதருக்கு கீழ்ப்படிவார்கள். பிறகு அபூ ஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு கூறினார்கள் : நீங்கள் விரும்பினால் இந்த வசனத்தை ஓதுங்கள்!

﴿وَمَا كُنَّا مُعَذِّبِينَ حَتَّىٰ نَبْعَثَ رَسُولًا﴾

(நம்முடைய யாதொரு) தூதரை அனுப்பாத வரையில் நாம் (எவரையும்) வேதனை செய்வதில்லை. (அல்குர்ஆன் 17 : 15)

--------------------

# பாடம் 52

## அல்லாஹ்வை பார்க்கும் நற்பாக்கியம்!

وَاعْلَمْ أَنَّ أَوَّلَ مَنْ يَنْظُرُ إِلَى اللهِ تَعَالَىٰ فِي الْـجَنَّةِ الْأَضِرَّاءُ ثُمَّ الرِّجَالُ ثُمَّ النِّسَاءُ بِأَعْيُنِ رُؤُوسِهِمْ كَمَا قَالَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ إِنَّكُمْ سَتَرَوْنَ رَبَّكُمْ كَمَا تَرَوْنَ الْقَمَرَ لَيْلَةَ الْبَدْرِ لَا تُضَامُّونَ فِي رُؤْيَتِهِ وَالْإِيمَانُ بِهٰذَا وَاجِبٌ وَإِنْكَارُهُ كُفْرٌ

82. அறிந்துகொள்! நிச்சயமாக சொர்க்கத்தில் அல்லாஹ்வை பார்ப்பவர்களில் முதலாமவர்கள் (இவ்வுலகில் இருந்த) குருடர்கள். பிறகு, ஆண்கள். பிறகு பெண்கள். இவர்கள் எல்லோரும் தங்கள் தலையில் உள்ள கண்களால் பார்ப்பார்கள். ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள்: “நிச்சயமாக நீங்கள் உங்கள் ரப்பை காண்பீர்கள், பௌர்ணமியன்று நீங்கள் சந்திரனைப் பார்ப்பது போன்று. அவனை பார்ப்பதில் நீங்கள் நெருக்கடிக்கு ஆளாக மாட்டீர்கள்.” இதை நம்பிக்கை கொள்வது கட்டாயமாகும். இதை மறுப்பது குஃப்ர் -இறைநிராகரிப்பாகும்.

### படிப்பினைகள்

*1. சொர்க்க இன்பங்கள் மனிதனின் இவ்வுலக அறிவுக்கு அப்பாற்பட்டவை ஆகும்.*

*2. அங்குள்ள இன்பங்களுக்கு இவ்வுலகத்தில் உவமைகள் கூறுவதோ, அவற்றை விளக்குவதோ முடியாது.*

*3. அல்லாஹ்வும் ரஸூலும் என்ன வர்ணிப்புகள் கூறினார்களோ*

அவை அனைத்தும் உண்மையாகும். அவற்றில் எவ்வித சாத்தியமின்மையும் இல்லை.

4. ஒன்றை நாம் பார்க்கவில்லை என்பதாலும் அல்லது நமது அறிவால் நமக்கு புரிய இயலவில்லை என்பதாலும் அதை மறுப்பது நேரிய அறிவுக்கு முரணாகும்.

5. உண்மையான அறிவின் தத்துவங்களில் ஒன்று நாம் அறியாதவை ஏராளம் உள்ளன.

6. நம்முடைய அறிவினால் புரிய முடியாத அனைத்தும் பொய் என்றோ அல்லது அவை இல்லாதவை என்றோ கூறுவது மடமை ஆகும்.

7. மறுமை என்பது நமது இவ்வுலக புலன்களுக்கு அப்பாற்பட்ட ஓர் உலகமாகும்.

8. மறுமையின் நற்பாக்கியங்களில் மிக முக்கியமானது அடியான் சொர்க்கத்தில் பிரவேசிப்பதாகும்.

9. சொர்க்க இன்பங்களில் மிகப் பெரியது அல்லாஹு தஆலாவைப் பார்ப்பதாகும்.

10. நமது புறக் கண்களைக் கொண்டு அல்லாஹ்வை கண்டிப்பாக சொர்க்கத்தில் பார்ப்போம். இதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

11. யார் முதலில் பார்ப்பார்கள் என்பதை ஆசிரியர் அவர்கள் இங்கு வரிசைப்படுத்தி இருக்கிறார்கள்.

12. அல்லாஹ்வை எப்படி பார்க்க முடியும்? அது சாத்தியமா? என்று கேள்வி கேட்பதும் அல்லாஹ்வை பார்க்க முடியாது, அவனது அருளைப் பார்ப்பதைத்தான் அல்லாஹ்வைப் பார்ப்பது என்று மார்க்கத்தில் கூறப்பட்டுள்ளது என்று கூறுவது குஃப்ர் - இறை நிராகரிப்பாகும்.

*13. குர்ஆனும் ஸஹீஹான ஹதீஸ்களும் ஸஹாபாக்களின் ஒருமித்த கருத்துக்களும் தாபியீன்களின் ஏகோபித்த முடிவுகளும் மறுமையில் நல்லோர் அல்லாஹ்வை பார்ப்பார்கள் என்பதை உறுதி செய்கின்றன.*

*14. மறுமையில் அல்லாஹ்வை பார்க்கும் பாக்கியத்தை இழந்தவர்கள்தான் இவ்வுலகத்தில் அது குறித்து சந்தேகிப்பார்கள், அல்லது மறுப்பார்கள்.*

*15. அல்லாஹ்வை மறுமையில் நல்லோர் சொர்க்கத்தில் எவ்வித சிரமும் இன்றி பார்ப்பார்கள். அங்கு அல்லாஹ்வை பார்ப்பதில் நெருக்கடி ஏதும் இருக்காது.*

*16. சிலர் மடத்தனமான தர்க்க தத்துவங்களை கூறி அல்லாஹ்வை பார்ப்பதை மறுக்கின்றனர். அவை அனைத்தும் அவர்கள் அல்லாஹ்வை பார்ப்பதை படைப்புகளை பார்ப்பதோடு ஒப்பிட்டதால் ஏற்பட்ட புத்தி கோளாறாகும்.*

*17. அல்லாஹ், அவன் சம்பந்தப்பட்ட அனைத்து விஷயங்களிலும் படைப்புகளுக்கு ஒப்பாகுவதை விட்டு பரிசுத்தமானவன் ஆவான்.*

*18. அல்லாஹ் நமது பேச்சை செவியுறுகிறான். அல்லாஹ் நம்மை பார்க்கிறான் என்பதில் நாம் இது எப்படி சாத்தியம் என்று கேள்வி கேட்பதில்லை. அதை எப்படி நாம் நம்பிக்கை கொள்கிறோமோ அப்படியே அல்லாஹ் தன்னை படைப்புகளுக்கு மறுமையில் காண்பிப்பதையும் அவனது பேச்சை செவியுற வைப்பதையும் நாம் நம்பிக்கை கொள்ள வேண்டும்.*

*19. படைப்புகளில் ஒன்றை நாம் பார்ப்பதற்கு உள்ள நிபந்தனைகளை அடிப்படையாக வைத்து அல்லாஹ்வை பார்ப்பது முடியாது என்று மறுப்பது அல்லாஹ்வை*

படைப்புகளுக்கு ஒப்பாக்குவதாகும். ஒப்பாக்கிவிடுதல் என்ற குற்றத்தில் வீழ்ந்து விடக் கூடாது என்பதை காரணமாக கூறி அல்லாஹ்வை பார்ப்பதை மறுப்பவர்கள் அவர்கள் எதிலிருந்து தப்பிக்க நினைத்தார்களோ உண்மையில் அதிலேயே அவர்கள் வீழ்ந்து விட்டார்கள்.

20. அல்லாஹ்வை பார்ப்பதை மறுத்தவர்கள் அல்லாஹ் தனக்கு கூறிய கண்ணியமான தன்மைகளையும் அமைப்பையும் மறுத்துவிட்டனர்.

21. அல்லாஹ்வை பார்ப்பதை மறுத்தவர்கள் அல்லாஹ்வை பரிசுத்தப்படுத்துகிறோம் என்று பிதற்றிக் கொண்டு, தங்கள் கோணலான அறிவை பின்பற்றியதால் பல நூறு உறுதியான மார்க்க ஆதாரங்களை மறுத்துவிட்டனர். இன்னும் இந்த உம்மத்தின் நேர்வழிபெற்ற முதல் சமுதாயத்தினர் எந்த பாதையில் சென்றார்களோ அது அல்லாத வேறு பாதையில் சென்று விட்டனர். இத்தகைய வழிகேடர்களைப் பற்றி அல்குர்ஆனில் அல்லாஹ் இவ்வாறு எச்சரிக்கிறான் :

﴿وَمَنْ يُّشَاقِقِ الرَّسُوْلَ مِنْ بَعْدِ مَا تَبَيَّنَ لَـهُ الْهُدٰى وَ يَـتَّبِعْ غَيْرَ سَبِيْلِ الْمُؤْمِنِيْنَ نُوَلِّه مَا تَوَلّٰى وَنُصْلِهِ جَهَـنَّمَ وَسَآءَتْ مَصِيْرًا﴾

எவனொருவன் நேர்வழி இன்னது என்று தனக்குத் தெளிவான பின்னரும், (அல்லாஹ்வின்) இத்தூதரை விட்டுப் பிரிந்து, முஃமின்கள் செல்லாத வழியில் செல்கின்றானோ, அவனை அவன் செல்லும் (தவறான) வழியிலேயே செல்லவிட்டு நரகத்திலும் அவனை நுழையச் செய்வோம்; அதுவோ, சென்றடையும் இடங்களில் மிகக் கெட்டதாகும்.

(அல்குர்ஆன் 4 : 115)

---------------------

# பாடம் 53

## கிரேக்க தத்துவமும் அதன் பாதிப்புகளும்!

وَاعْلَمْ رَحِمَكَ اللهُ أَنَّهُ مَا كَانَتْ زَنْدَقَةٌ قَطُّ وَلَا كُفْرٌ وَلَا شَكٌّ وَلَا بِدْعَةٌ وَلَا ضَلَالَةٌ وَلَا حِيَرَةٌ فِي الدِّينِ إِلَّا مِنْ الْكَلَامِ وَأَهْلِ الْكَلَامِ وَالْجَدَلِ وَالْمِرَاءِ وَالْخُصُومَةِ وَالْعَجَبُ كَيْفَ يَجْتَرِئُ الرَّجُلُ عَلَى الْمِرَاءِ وَالْخُصُومَةِ وَالْجِدَالِ وَاللهُ تَعَالَى يَقُوْلُ ﴿مَا يُجَادِلُ فِي آيَاتِ اللهِ إِلَّا الَّذِينَ كَفَرُوا﴾ فَعَلَيْكَ بِالتَّسْلِيمِ وَالرِّضَىٰ بِالْآثَارِ وَأَهْلِ الْآثَارِ وَالْكَفِّ وَالسُّكُوتِ

83. அறிந்துகொள்! அல்லாஹ் உன்மீது கருணை காட்டுவானாக! நாத்திகம், இறை நிராகரிப்பு, சந்தேகம், அனாச்சாரம், வழிகேடு, இன்னும் மார்க்கத்தில் குழப்பம் ஏதும் உருவாகவில்லை, தர்க்க விவாதத்தினாலும் தர்க்க வாதிகளாலும் வாதத்தாலும் குதர்க்கத்தாலுமே தவிர.[9] மிக ஆச்சரியமாக இருக்கின்றது! மனிதன் எப்படி தர்க்கம் செய்ய, விவாதம் செய்ய, குதர்க்கம் செய்ய துணிகின்றான்!

உயர்வுமிக்க அல்லாஹ் கூறுகின்றான் : அல்லாஹ்வின் வசனங்களில் தர்க்கம் செய்ய மாட்டார்கள், நிராகரிப்பவர்களைத் தவிர.

(அல்குர்ஆன் 40 : 4)

---

9. மார்க்கத்தில் கூறப்பட்ட ஆதாரங்களை அப்படியே ஏற்றுக் கொள்ளாமல் தங்களின் அறிவிற்கு ஏற்ப அவற்றை மாற்ற நினைத்தவர்கள் செய்த தர்க்கங்களாலும் விவாதங்களாலும்தான் மார்க்க விஷயங்களில் மக்களுக்கு குழப்பமும் சந்தேகமும் ஏற்பட்டன.

ஆகவே, நீ ஹதீஸ்களையும் ஹதீஸை அறிவிப்பவர்களையும் முற்றிலும் ஏற்றுக்கொள்! பொருந்திக்கொள்! பேசாமல் வாய்மூடி, அமைதியாக இரு![10]

## படிப்பினைகள்

*1. அறிவு என்பது அல்லாஹ் மனிதனுக்கு கொடுத்த பெரும் அருட்கொடையாகும்.*

*2. அறிவைக் கொண்டு அல்லாஹ் படைத்த படைப்புகளை சிந்தித்து இவ்வுலகில் மனிதன் தனக்கு பயனுள்ளவற்றை உருவாக்கிக் கொள்ள வேண்டும். அதன் மூலம் அவன் அல்லாஹ்விற்கு நன்றி செலுத்த வேண்டும்.*

*3. இன்னும், இந்த அறிவைக் கொண்டு அல்லாஹ் மனிதனின் நேர்வழிக்காக இறக்கிய வேதத்தை ஓதி புரிந்து அதில் உள்ளதை பின்பற்ற வேண்டும்.*

*4. தூதர்களின் உண்மையையும் வேதத்தின் உண்மையையும் புரிவதற்கு மனிதன் இந்த அறிவைப் பயன்படுத்த வேண்டும்.*

*5. அல்லாஹ், இன்னும் அவனது தூதரின் கூற்றுகளில் முரண்பாடுகளை தேடுவதற்கும் அவற்றை மறுப்பதற்கும் அல்லது அவற்றை மாற்றுவதற்கும் மனிதன் தனது அறிவை உபயோகிக்க கூடாது.*

*6. அறிவு, அடியானை அல்லாஹ்விற்கும் அவனது தூதருக்கும் கீழ்ப்படிய, பணிந்து நடக்க தூண்ட வேண்டும். அல்லாஹ் இன்னும் அவனது தூதர் அவர்களின் கட்டளைகளை மீற தூண்டிவிடக் கூடாது.*

---

10. ஹதீஸ்கள் கூறுவதையும் ஹதீஸ்களை அறிவித்த ஸஹாபாக்கள், தாபியீன்கள் கூறுவதையும் முழுமையாக ஏற்றுக் கொள்ள வேண்டும். அவற்றுக்கு எதிராக பேசக் கூடாது. அவற்றுக்கு எதிரான கருத்துக்களை கூறாமல் வாய்மூடி அமைதியாக இருக்கவேண்டும்.

7. ஷைத்தான் தனது அறிவைக் கொண்டு அல்லாஹ்வின் கட்டளையை மீறினான். அல்லாஹ்விடம் தனது அறிவைக் கொண்டு தத்துவம் பேசினான். ஆகவே, அவன் சபிக்கப்பட்டான்.

8. மலக்குகள் தங்களது அறிவைக் கொண்டு அல்லாஹ்வின் கட்டளையை அப்படியே நம்பி ஏற்று செயல்படுத்தினார்கள். ஆகவே, அவர்கள் அல்லாஹ்வினால் கண்ணியப்படுத்தப்பட்டார்கள்.

9. இல்முல் கலாம் - கிரேக்க தத்துவ கலை வழிகேடுகள் நிறைந்த கல்வியாகும். அதை கற்பவர்களுக்கு அந்த கல்வியை மார்க்கத்தில் சந்தேகத்தையும் நயவஞ்சகத்தையும் நிராகரிப்பையும் கண்டிப்பாக உண்டாக்கி விடும்.

10. அந்த கல்வி அதை கற்பவர்களுக்கு இறைப் பண்புகள் விஷயத்தில் தர்க்கம் செய்வதையும் குதர்க்கம் செய்வதையும் தூண்டுமே தவிர ஈமானை அதிகப்படுத்தாது.

11. கீழ்ப்படிதலும் செவிசாய்த்தலும் அல்லாஹ்வின் வசனத்தை, நபியவர்களின் ஹதீஸை நாம் செவியுறும்போது நமக்கு ஈமானை அதிகப்படுத்தும்.

12. குதர்க்கமும், தர்க்கமும் அல்லாஹ்வின் வசனத்தை, நபியவர்களின் ஹதீஸை ஒருவர் செவியுறும்போது அவருக்கு நிராகரிப்பை அதிகப்படுத்தும்.

13. இந்த மார்க்கத்தில் நாம் பின்பற்ற வேண்டியது குர்ஆனையும் ஹதீஸ்களையும்தான்.

14. இந்த மார்க்கத்தில் நாம் முன்னோடிகளாக எடுத்து பின்பற்ற தகுதியான வழிகாட்டிகள் ஹதீஸ் கலை அறிஞர்கள்தான். அவர்கள் எந்த வழியில் சென்றார்களோ அதுதான் உண்மையான குர்ஆனும் ஸுன்னாவும் உண்மையான இஸ்லாமும் ஆகும்.

*15.* மார்க்க அறிஞர்களுக்கு மத்தியில் கருத்துவேற்றுமை நிகழ்ந்தால் இறுதி முடிவு ஹதீஸ் கலை அறிஞர்கள் கூறுவதுதான். அவர்களைத்தான் நமது மீளுமிடமாக கல்விக்கான சான்றாக ஆக்க வேண்டும். அவர்கள் இந்த உம்மத்தில் நபியின் ஸஹாபாக்களை போன்றவர்கள் ஆவார்கள். அவர்கள் குர்ஆனையும் ஹதீஸையும் ஒருசேர அறிந்தவர்கள். அறிவிப்பின் தரங்களையும் அறிவிப்பாளரின் தகுதிகளையும் அறிந்து உண்மையை பொய்யிலிருந்து நமக்கு தெளிவுப்படுத்தி கொடுப்பவர்கள் ஆவார்கள். ஆகவே, யார் அஹ்லுல் ஹதீஸ் உடைய வழிமுறையை விட்டு விலகி, கிரேக்க தத்துவ கலையை கற்ற அறிஞர்கள் பின்னால் செல்வார்களோ அல்லது மார்க்கத்தில் புதுமையை உண்டாக்கும் கூட்டத்திற்கு பின்னால் செல்வார்களோ அவர்கள் கண்டிப்பாக வழிகேட்டில்தான் செல்வார்கள். அது அவர்களை இஸ்லாமை விட்டு முற்றிலும் வெளியேற்றி விடலாம். அல்லாஹ் பாதுகாப்பானாக! ஆமீன்.

--------------------

# பாடம் 54

## மார்க்கம் கூறியவாறு நரக தண்டனை நிச்சயம் உண்டு!

وَالْإِيمَانُ بِأَنَّ اللهَ تَبَارَكَ وَتَعَالَىٰ يُعَذِّبُ الْـخَلْقَ فِي النَّارِ فِي الْأَغْلَالِ وَالْأَنْكَالِ وَالسَّلَاسِلِ وَالنَّارُ فِي أَجْوَافِهِمْ وَفَوقَهُمْ وَتَـحْتَهُمْ وَذٰلِكَ أَنَّ الْـجَهْمِيَّةَ مِنْهُمْ هِشَامٌ الْفُوطِيُّ قَالَ إِنَّمَا يُعَذِّبُ اللهُ عِنْدَ النَّارِ رَدَّ عَلَى اللهِ وَعَلَىٰ رَسُولِهِ

84. அருள்நிறைந்த, உயர்வுமிக்க அல்லாஹ் படைப்புகளை நரகத்தில் வேதனை செய்வான், அரிகண்டங்கள்[11], கைவிலங்குகள், சங்கிலிகளில் அவர்களை தண்டிப்பான். நெருப்பு அவர்களின் வயிறுகளுக்குள்ளும் அவர்களுக்கு மேலும், அவர்களுக்கு கீழும் இருக்கும். ஜஹ்மிய்யா பிரிவினர், இன்னும் அவர்களில் உள்ள ஹிஷாம் அல் ஃபூத்தி என்பவர் பின்வருமாறு கூறுகின்றார்: "அல்லாஹ் (பாவிகளை) நரக நெருப்பிற்கு அருகில் வைத்து வேதனை செய்வான். (நரக நெருப்பிற்குள் வைத்து அல்ல.)" அல்லாஹ், இன்னும் அவனது தூதரின் கூற்றை இவர்கள் மறுக்கின்றனர். (அதற்கு எதிராக பேசுகின்றனர்.

### படிப்பினைகள்

*1. அல்லாஹ் தனது வேதத்தில் இம்மை, இன்னும் மறுமை குறித்து எதையெல்லாம் கூறினானோ, இன்னும் நபி ﷺ அவர்கள் எதையெல்லாம் கூறினார்களோ அவை அனைத்தும்*

11. கழுத்தில் மாட்டப்படும் ஓர் இரும்பு வட்டம்.

முற்றிலும் உண்மை ஆகும்.

2. அவை கற்பனையோ அல்லது மிகைப்படுத்தப்பட்டவையோ அல்ல.

3. மறுமையின் நிகழ்வுகள், சொர்க்க இன்பங்கள், நரக துன்பங்கள் குறித்து குர்ஆன் இன்னும் ஸுன்னாவில் வந்துள்ள அனைத்தையும் அவற்றின் வெளிப்படையான அறியப்பட்ட அர்த்தங்களில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

4. அவற்றில் விளக்கம் கூறுகிறோம் என்ற பெயரில் அவற்றின் உண்மையை மறுக்கும் விதமாக பேசுவது, அவற்றின் வெளிப்படையான பொருளை திரித்து, வேறு பொருள் கூறுவது, அல்லது அவை உடலுக்கு அல்ல, உயிருக்கு மட்டும் என்று கூறுவது, அல்லது அவை எப்படி சாத்தியம் என்று சந்தேகிப்பது இவை எல்லாம் வழிகேடுகள் ஆகும்.

5. மார்க்கத்தில் உண்மையைக் கொண்டும் பின்பற்றுதலைக் கொண்டும் அறியப்பட்ட ஹதீஸ் கலை அறிஞர்களின் கூற்றுகள் மட்டுமே விளக்கமாக எடுத்துக் கொள்ளப்படும்.

6. அனாச்சாரம், நூதன கொள்கை, கிரேக்க தத்துவம் இன்னும் இதுபோன்ற வழிகேடுகளைக் கொண்டு அறியப்பட்ட நபர்கள் உடைய கருத்துகள் மறுக்கப்பட வேண்டியவை ஆகும்.

---------------------

# பாடம் 55

## ஸலாஹ் தொழுகை ஒரு நிர்ணயிக்கப்பட்ட கட்டாயக் கடமையாகும்!

وَاعْلَمْ أَنَّ صَلَاةَ الْفَرِيضَةِ خَمْسُ صَلَوَاتٍ لَا يُزَادُ فِيهِنَّ وَلَا يُنْقَصُ فِي مَوَاقِيتِهَا وَفِي السَّفَرِ رَكْعَتَانِ إِلَّا الْـمَغْرِبَ فَمَنْ قَالَ أَكْثَرَ مِنْ خَمْسٍ فَقَدْ ابْتَدَعَ وَمَنْ قَالَ أَقَلَّ مِنْ خَمْسٍ فَقَدْ ابْتَدَعَ لَا يَقْبَلُ اللهُ شَيْئًا مِنْهَا إِلَّا لِوَقْتِهَا إِلَّا أَنْ يَكُونَ نِسْيَانًا فَإِنَّهُ مَعْذُورٌ يَأْتِي بِهَا إِذَا ذَكَرَهَا أَوْ يَكُونَ مُسَافِرًا فَيَجْمَعُ بَيْنَ الصَّلَاتَيْنِ إِنْ شَاءَ

85. அறிந்துகொள்! நிச்சயமாக ஃபர்ழான -கட்டாயக் கடமையான தொழுகை ஐந்து தொழுகைகளாகும். அவற்றில் அதிகப்படுத்தக் கூடாது; அவற்றில் குறைப்பதும் கூடாது. அவற்றுடைய நேரங்களில் அவற்றை நிறைவேற்ற வேண்டும். பயணத்தில் மக்ரிபைத் தவிர மற்ற தொழுகைகளை இரண்டு ரக்அத்துகளாக தொழவேண்டும். ஐந்து தொழுகைகளைவிட அதிகமான தொழுகைகள் ஃபர்ழ் என்று யார் கூறுவாரோ அவர் நூதனமான கருத்தைக் கூறுகின்றார். இன்னும், ஐந்து தொழுகைகளைவிட குறைவான தொழுகைகள்தான் ஃபர்ழ் என்று யார் கூறுவாரோ அவர் நூதனமான கருத்தைக் கூறுகின்றார். இந்த தொழுகைகளில் எதையும் அதற்குரிய நேரத்தில் தவிர அல்லாஹ் ஏற்றுக்கொள்ள மாட்டான்.[12] ஆனால், ஒருவர் மறந்துவிட்டால் தவிர. அவர் மன்னிக்கப்படுவார். அவர் அதை

12. ஒவ்வொரு தொழுகையையும் அதற்குரிய நேரத்தில் நிறைவேற்ற வேண்டும்.

நினைவு கூர்ந்தவுடன் அதை நிறைவேற்ற வேண்டும். அல்லது அவர் பயணியாக இருந்தால் இரு தொழுகைகளை அவர் சேர்த்து தொழுவார் அவர் விரும்பினால்.

## படிப்பினைகள்

*1. இஸ்லாமிய மார்க்கத்தின் கட்டாயக் கடமைகளில் மிக மிக முக்கியமானது ஸலாஹ் - தொழுகை ஆகும்.*

*2. குர்ஆனைக் கொண்டும் ஸுன்னாவைக் கொண்டும் இந்த உம்மத்தின் முதல் மற்றும் இரண்டாம் தலைமுறையினரின் ஏகோபித்த முடிவைக் கொண்டும் உறுதி செய்யப்பட்ட ஒரு கடமையாகும் தொழுகை.*

*3. தொழுகையின் அமைப்பு, அதன் ரக்அத்துகள் - பகுதிகள், அதன் எண்ணிக்கை என அனைத்தும் சொல் மற்றும் செயல் சார்ந்த ஆதாரங்களினால் உறுதி செய்யப்பட்டதாகும்.*

*4. இதில் மாற்றம் செய்வது வழிகேடும் நிராகரிப்பும் ஆகும்.*

*5. தொழுகையின் எண்ணிக்கை மற்றும் ரக்அத்துகளில் யாரும் கூட்டவோ குறைக்கவோ முடியாது.*

*6. ஒவ்வொரு தொழுகைக்கும் தனித் தனியான நேரம் வரையறுக்கப்பட்டுள்ளது.*

*7. ஒரு தொழுகையை அதற்கு குறிக்கப்பட்ட நேரத்தில் மட்டுமே தொழவேண்டும்.*

*8. பயணியாக இருந்தால் இரு நேர தொழுகைகளை சேர்த்து தொழ அனுமதியுண்டு.*

*9. மக்ரிபு இன்னும் ஃபஜ்ர் தொழுகைகளைத் தவிர மற்ற தொழுகைகளை பயணிகள் சுருக்கி தொழுவார்கள்.*

*9.* ஒரு நேர தொழுகையை ஒருவர் மறந்துவிட்டாலோ அல்லது தூங்கிவிட்டாலோ அவர் தனக்கு நினைவு வந்தவுடன் அல்லது தூங்கி எழுந்தவுடன் அந்த தொழுகையை நிறைவேற்றி விட வேண்டும்.

*10.* ஒரு சில சூழ்நிலைகளில் உள்ளூரில் இருக்கும்போது நபி ﷺ அவர்கள் இரு நேர தொழுகைகளை சேர்த்து தொழுததாக வந்துள்ளது.

*11.* உள்ளூரில் இருப்பவர் தொழுகைகளை முழுமையாகவும் பயணியாக இருப்பவர் சுருக்கியும் தொழ வேண்டும்.

*12.* ஃபஜ்ரு தொழுகையை வேறு தொழுகையுடன் சேர்த்து தொழ முடியாது.

*13.* பயணிகள் ளுஹ்ரை அஸ்ருடன் அல்லது அஸ்ரை ளுஹ்ருடன் சேர்த்து தொழலாம். மக்ரிபை இஷாவுடன் அல்லது இஷாவை மக்ரிபுடன் சேர்த்து தொழலாம்.

*14.* தொழுகை கடமை என்று அறிந்த பின்னர் ஒருவர் வேண்டுமென்றே தொழுகைகளை விடுவாரேயானால் அவர் மார்க்கத்தை விட்டு வெளியேறி விடுவார் என்று பல ஸஹாபாக்களும் தாபியீன்களும் கூறுகிறார்கள்.

---------------------

# பாடம் 56

## ஸகாத் நிர்ணயிக்கப்பட்ட கட்டாயக் கடமையாகும்!

وَالزَّكَاةُ مِنْ الذَّهَبِ وَالْفِضَّةِ وَالتَّمْرِ وَالْـحُبُوبِ وَالدَّوَابِّ عَلَىٰ مَا قَالَ رَسُولُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ فَإِنْ قَسَمَهَا فَجَائِزٌ وَإِنْ أَعْطَاهَا الْإِمَامَ فَجَائِزٌ

86. தங்கம், வெள்ளி, பேரிச்சம் பழம், தானியங்கள், கால்நடைகள் ஆகியவற்றில் ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறியபடி ஸகாத்தை நிறைவேற்ற வேண்டும். அதை அவரே பங்குவைத்து கொடுத்தால் அதுவும் கூடும். அதை அவர் மன்னரிடம் கொடுத்தால் அதுவும் கூடும்.

### படிப்பினைகள்

*1. ஸகாத் இஸ்லாமிய மார்க்கத்தின் மூன்றாவது முக்கிய கடமையாகும்.*

*2. தொழுகை உடல் சார்ந்த வணக்கமாக இருப்பது போல் ஸகாத் பொருள் சார்ந்த வணக்கமாக இருக்கிறது.*

*3. தொழுகை, இன்னும் ஸகாத் இரண்டும் ஒரு சேர குர்ஆனிலும் ஸுன்னாவிலும் வலியுறுத்தப்பட்டுள்ளன.*

*4. தொழுகையை நிலை நிறுத்துங்கள்! ஸகாத்தை கொடுங்கள் என்பது குர்ஆனில் தொடந்து கூறப்படும் கட்டளையாகும்.*

5. தொழுகை குறித்த மேலதிக விளக்கங்களை ஸுன்னா விவரிப்பதுபோல் ஸகாத் குறித்த மேலதிக விளக்கங்களை ஸுன்னா விவரித்திருக்கிறது.

6. ஸகாத் எப்போது கடமை, யார் மீது கடமை, எந்தெந்த பொருளில் ஸகாத் கடமை, ஸகாத் பெற தகுதியானவர்கள் யார், இப்படியாக அனைத்து விளக்கங்களை ஸுன்னாவிலிருந்து நாம் அடையப் பெறுகிறோம்.

7. நபியின் ஸுன்னாவை ஆதாரமாக ஏற்க மறுப்பவர்களே ஸகாத் விஷயத்தில் சந்தேகம் கொள்வார்கள்; அல்லது அதன் சட்டங்களை மறுப்பார்கள்.

8. நபி ﷺ அவர்களின் மரணத்திற்கு பின்னர் ஸகாத் கொடுக்க மறுத்தவர்களிடம் ஸஹாபாக்கள் யுத்தம் செய்தார்கள். ஆகவே, இஸ்லாமை ஏற்று, ஸகாத் கடமை என்பதை அறிந்த பின்னர், அதை கொடுக்க மறுப்பது அவரை இஸ்லாமை விட்டு வெளியேற்றி விடும் என்பதை அறிய முடிகிறது. ஸகாத் கடமையான பின்னர் அதை ஒருவர் நிறைவேற்றாமல் இருந்தால் அவர் இஸ்லாமை விட்டு வெளியேறி விடுவாரா இல்லையா என்பதில் அறிஞர்களுக்கு மத்தியில் கருத்து வேறுபாடுகள் உள்ளன.

9. ஒருவர் ஸகாத்தை அது கடமை இல்லை என்று முற்றிலும் மறுத்தால் அவர் இஸ்லாமை விட்டு வெளியேறி விடுவார் என்பதில் மாறுபட்ட கருத்தில்லை. இது இஸ்லாமிய எல்லா சட்டங்களுக்கும் பொதுவானதாகும்.

10. ஸகாத் குறித்த மேலதிக சட்டங்களை மார்க்க சட்ட நூல்களில் கற்று அதை முறையாக நிறைவேற்றி வர வேண்டும்.

11. அல்லாஹு தஆலா முஃமின்களின் தன்மைகளை விவரிக்கும்போது இப்படி கூறுகிறான் :

﴿وَالَّذِينَ هُمْ لِلزَّكَاةِ فَاعِلُونَ ○﴾

*அவர்கள் ஜகாத்தும் கொடுத்து வருவார்கள்.*

*(அல்குர்ஆன் 23 : 4)*

﴿وَاَقِيْمُوا الصَّلٰوةَ وَاٰتُوا الزَّكٰوةَ وَاَقْرِضُوا اللّٰهَ قَرْضًا حَسَنًا وَمَا تُقَدِّمُوْا لِاَنْفُسِكُمْ مِّنْ خَيْرٍ تَجِدُوْهُ عِنْدَ اللّٰهِ هُوَ خَيْرًا وَّاَعْظَمَ اَجْرًا وَاسْتَغْفِرُوا اللّٰهَ اِنَّ اللّٰهَ غَفُوْرٌ رَّحِيْمٌ○﴾

*(ஆயினும்) தொழுகையை (தவறவிடாது) சரியாக நிலை நிறுத்துங்கள். இன்னும் ஜகாத்தும் கொடுத்து வாருங்கள். (பொருள் நெருக்கடியில் சிக்கியவர்களுக்கு) அல்லாஹ்வுக்காக அழகான முறையில் கடனும் கொடுங்கள். நன்மையான காரியங்களில் எவைகளை நீங்கள் உங்களுக்காக, (உங்கள் மரணத்திற்கு முன்னதாகவே) செய்து வைத்துக் கொண்டீர்களோ அவைகளையே, மேலான நன்மைகளாகவும் மகத்தான கூலியாகவும் நீங்கள் அல்லாஹ்விடத்தில் காண்பீர்கள். (நம்பிக்கையாளர்களே!) நீங்கள் அல்லாஹ்விடம் மன்னிப்பையும் கோருங்கள். நிச்சயமாக அல்லாஹ் மிக மன்னிப்பவனும், கிருபையுடையவனாகவும் இருக்கின்றான்.*

*(அல்குர்ஆன் 73 : 20)*

---------------------

# பாடம் 57

## ஷஹாதா - சாட்சியம் இன்றி இஸ்லாம் இல்லை!

وَاعْلَمْ أَنَّ أَوَّلَ الْإِسْلَامِ شَهَادَةُ أَنْ لَا إِلٰهَ إِلَّا اللهُ وَأَنَّ مُـحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

87. அறிந்துகொள்! நிச்சயமாக இஸ்லாமிய மார்க்கத்தின் முதல் கடமை, "நிச்சயமாக உண்மையில் வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் அறவே இல்லை, இன்னும் நிச்சயமாக முஹம்மது ﷺ அவனுடைய அடியாரும் தூதரும் ஆவார்" என்று சாட்சி கூறுவதாகும்.

### படிப்பினைகள்

*1. ஒவ்வொன்றுக்கும் ஒரு நுழைவாயில் இருப்பது போன்று இஸ்லாமிய மார்க்கத்தின் நுழைவாயில் ஷஹாதா - சாட்சி பகருதல் ஆகும்.*

*2. அதாவது, நிச்சயமாக அல்லாஹ்வைத் தவிர வணங்கத்தகுதியானவன் உண்மையில் வேறு யாரும் அறவே இல்லை, இன்னும் நிச்சயமாக முஹம்மது அவர்கள் அல்லாஹ்வுடைய அடியாரும் தூதரும் ஆவார் என்று நாம் மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டு வாயால் உறுதி மொழி எடுப்பதை ஷஹாதா - சாட்சி பகருதல் என்று கூறப்படுகிறது.*

*3. ஷஹாதாவின் பொருள், விளக்கம் பற்றி நமது நூல், 'தூய திரு கலிமா' என்பதில் நீங்கள் வாசித்து அறியலாம்.*

--------------------

# பாடம் 58

## அல்லாஹ்வின் கூற்றுகளில், மார்க்க சட்டங்களில் மாற்றம் இல்லை!

وَأَنَّ مَا قَالَ اللهُ كَمَا قَالَ وَلَا خُلْفَ لِمَا قَالَ وَهُوَ عِنْدَ مَا قَالَ

88. இன்னும் அல்லாஹ் எதைக் கூறினானோ அது அவன் கூறியது போன்றுதான். அதில் எவ்வித மாற்றமும் இருக்காது. அது அவன் கூறிய நேரத்தில் நடந்தே தீரும்.

والْإِيمَانُ بالشَّرَائِعِ كُلِّهَا

89. (மார்க்கத்தின்) எல்லா சட்டங்களையும் நம்பிக்கை கொள்ள வேண்டும்.

### படிப்பினைகள்

*1.* *ஒருவர் உண்மை முஃமினாக இருப்பதற்கு அல்லாஹ்வை நம்பிக்கை கொள்கிறேன், நபி ﷺ அவர்களை நம்பிக்கை கொள்கிறேன் என்று உறுதி கூறுவது மட்டும் போதாது.*

*2.* *மாறாக, அவர் அல்லாஹ்விடமிருந்து வந்த செய்திகள், சட்டங்கள், கட்டளைகள் என அனைத்தையும் முழுமையாக சந்தேகப்படாமல் நம்பிக்கை கொள்ள வேண்டும்.*

*3.* *இதற்கு முன்னர் வந்த நபிமார்களையும் அவர்களுக்கு அல்லாஹ் கொடுத்த சட்டங்களையும் நம்பிக்கை கொள்ள வேண்டும்.*

*4.* *குறிப்பாக, நபி முஹம்மது ﷺ அவர்களுக்கு கொடுக்கப்பட்ட*

மார்க்க சட்டங்கள் இறுதியானவை என்றும் அவை மட்டுமே இப்போது பின்பற்ற தகுதியானவை என்றும் நம்பிக்கை கொள்ள வேண்டும்.

5. அல்லாஹ்வும் ரஸூல் அவர்களும் என்னென்ன செய்திகளையும் முன்னறிவிப்புகளையும் கூறினார்களோ அவை அனைத்தும் உண்மை என்றும் கண்டிப்பாக எவ்வித மாற்றமும் இன்றி அவை நிகழும் என்றும் உறுதியாக நம்பிக்கை கொள்ள வேண்டும்.

6. முன்னறிவிப்புகள் ஒவ்வொன்றுக்கும் ஒரு குறிப்பிட்ட நிர்ணயிக்கப்பட்ட நேரம் உண்டு. அதை அல்லாஹ் மிக அறிந்தவன். அந்த நேரத்தில் அது நிகழும்.

7. ஒரு முன்னறிவிப்பு நிகழ்வதில் தாமதம் ஏற்பட்டால் அது நிகழாது என்பது பொருளல்ல.

8. அல்லாஹ்வின் மார்க்க சட்டங்களில் உறுதியான ஆதாரங்களைக் கொண்டு முடிவு செய்யப்பட்ட அனைத்தையும் நம்பிக்கை கொள்வதும் ஏற்று பின்பற்றுவதும் முஸ்லிம்கள் மீது கடமையாகும்.

9. அல்லாஹ்வின் சட்டங்களை மாற்றும் அதிகாரம் யாருக்கும் இல்லை.

10. அறிவியலும் கால சூழ்நிலைகளும் சமூக வளர்ச்சியும் எத்தகைய மாற்றங்களை கண்டாலும் அல்லாஹ்வின் மார்க்க சட்டங்களில் மாற்றத்தை யாரும் ஏற்படுத்த முடியாது.

11. வாரிசுரிமை சட்டங்கள், குற்றவியல் சட்டங்கள் என எந்த சட்டத்தையும் குறை காணுவதோ, அவற்றை மாற்ற நினைப்பதோ, அவற்றை விமர்சனம் செய்வதோ, அவற்றை

பரிகாசம் செய்வதோ ஒருவரை இஸ்லாமை விட்டு வெளியேற்றி விடும்.

*12.* இஸ்லாமிய ஆட்சியாளர்கள் மீது மார்க்க சட்டங்களை மக்களுக்கு மத்தியில் அமல்படுத்துவது கடமையாகும்.

*13.* முஸ்லிம்கள் தாங்களும் மார்க்க சட்டங்களில் உள்ள நன்மைகளையும் பலன்களையும் அறிவதோடு பிற மத மக்களுக்கும் அவற்றைப் பற்றி விளக்கமாக எடுத்து சொல்ல வேண்டும்.

---------------------

# பாடம் 59

## வர்த்தகம் அனைத்தும் ஆகுமானதே, தடுக்கப்பட்டவை கலந்தாலே தவிர!

وَاعْلَمْ أَنَّ الشِّرَاءَ وَالْبَيْعَ مَا بِيعَ فِي أَسْوَاقِ الْـمُسْلِمِينَ حَلَالٌ مَا بِيعَ عَلَىٰ حُكْمِ الْكِتَابِ وَالْإِسْلَامِ وَالسُّنَّةِ مِنْ غَيْرِ أَنْ يَدْخُلَهُ تَغْرِيرٌ أَوْ ظُلْمٌ أَوْ جَوْرٌ أَوْ غَدْرٌ أَوْ خِلَافٌ لِلْقُرْآنِ أَوْ خِلَافٌ لِلْعِلْمِ

90. அறிந்துகொள்! நிச்சயமாக விற்பது, இன்னும் வாங்குவதில் இஸ்லாமிய சட்டமாவது : எது முஸ்லிம்களுடைய கடைவீதிகளில் குர்ஆன், இஸ்லாம், மற்றும் ஸுன்னாவின் சட்டத்தின் அடிப்படையில் விற்கப்படுகின்றதோ (இன்னும் வாங்கப்படுகின்றதோ) அது ஹலால் -அனுமதிக்கப்பட்டதாகும். ஏமாற்றுவது அதில் இருக்கக் கூடாது; அல்லது அநியாயம், பாரபட்சம், மோசடி, வாக்குமீறல், குர்ஆனுக்கு மாற்றமானது, கல்வி அறிவுக்கு முரணானது இருக்கக் கூடாது.[13]

### படிப்பினைகள்

***1.*** *குர்ஆனும் ஸுன்னாவும் நமக்கு எது கூடும், எது கூடாது என்பதை தெளிவுப்படுத்தி விட்டன.*

***2.*** *உறுதியான ஆதாரத்தை வைத்தே ஒன்றை ஹராம் - தடுக்கப்பட்டது, கூடாது என்று முடிவு செய்ய முடியும்.*

***3.*** *வீண் சந்தேகங்களுக்கும் பேணுதல் என்ற பெயரில் வீணான சிரமங்களுக்கும் மார்க்கத்தில் இடமில்லை.*

13. மக்களுக்கு பலனற்றதை அதில் பலன் இருப்பதாக பொய்கூறி, ஏமாற்றி விற்பது கூடாது. இன்னும் அல்லாஹ் மனிதனுக்குக் கொடுத்த நேரிய அறிவின்படி ஆய்வு செய்யும்போது அந்த ஆய்வு ஏற்றுக்கொள்ளாத வர்த்தகம் கூடாது.

*4. முஸ்லிம்கள் செய்கிற தொழில்கள், இன்னும் கொடுக்கல் வாங்கலில் வீணான சந்தேகங்களை புகுத்தி அவற்றை ஒதுக்குவது கூடாது.*

*5. ஹராம் என்று உறுதியான ஆதாரங்கள் முடிவு செய்தவை மட்டுமே ஹராம் ஆகும்.*

*6. மேலும், பிறரை பச்சையாக ஏமாற்றுதல், அல்லது பிறருக்கு நம்பிக்கை துரோகம் செய்தல், அல்லது பிறர் உரிமையில் எல்லை மீறுதல், அல்லது மூட நம்பிக்கையின் படி செயல்படுதல் இவை அனைத்தும் மார்க்கத்தில் அறவே கூடாது.*

---------------------

# பாடம் 60

## ஒவ்வொருவரும் முடிவை குறித்து அச்சத்துடன் இருக்க வேண்டும்!

وَاعْلَمْ رَحِمَكَ اللهُ أَنَّهُ يَنْبَغِي لِلْعَبْدِ أَنْ تَصْحَبَهُ الشَّفَقَةُ أَبَدًا مَا صَحِبَ الدُّنْيَا لِأَنَّهُ لَا يَدْرِي عَلَىٰ مَا يَمُوتُ وَبِمَا يُـخْتَمُ لَهُ وَعَلَىٰ مَا يَلْقَى اللهَ عَزَّ وَجَلَّ وَإِنْ عَمِلَ كُلَّ عَمَلٍ مِنَ الْـخَيْرِ

91. அறிந்துகொள்! அல்லாஹ் உனக்கு கருணை காட்டுவானாக! அடியான் இந்த உலகத்தில் வாழ்கின்ற காலமெல்லாம் அவனுடன் பயமும் சேர்ந்து இருக்க வேண்டும். ஏனெனில், நிச்சயமாக அவன் எந்த நிலையில் மரணிப்பான் என்றும் அவனுடைய முடிவு எதைக் கொண்டு இருக்கும் என்றும் கண்ணியத்திற்கும் கம்பீரத்திற்கும் உரிய அல்லாஹ்வை அவன் எந்த நிலையில் சந்திப்பான் என்றும் அவன் அறிய மாட்டான். அவன் நன்மையான எல்லா அமல்களை செய்தாலும் சரி, அவன் பயந்துகொண்டே இருக்க வேண்டும்.

### படிப்பினைகள்

*1. அல்லாஹ் ஒருவன் மட்டுமே நமது முடிவுகளை அறிந்தவன்.*

*2. யாருடைய முடிவு எப்படி இருக்கும் என்பதை அல்லாஹ்வை அன்றி யாரும் அறிய மாட்டார்.*

*3. நல்லோர் எப்போதும் அல்லாஹ்வை நேசிப்பதுடன், அவன் மீது ஆதரவு வைப்பதுடன் அவனை அதிகம் பயந்தவர்களாகவே இருப்பார்கள்.*

*4. தங்கள் முடிவு ஈமானில் இருக்க வேண்டும் என்று துஆ செய்வதுடன் அது குறித்து எப்போதும் அச்சத்தில் இருப்பார்கள்.*

*5. நாம் மனிதர்களின் வெளிப்படையான அமல்களை வைத்து அவர்கள் மீது நல்லெண்ணம் வைக்க வேண்டும். அதற்கு மேல் ஒருவரை சொர்க்கவாசி என்று அடித்து சொல்வது எல்லை மீறிய செயலாகும். ஆனால், அல்லாஹ்வும் ரஸூல் அவர்களும் அவருக்கு சொர்க்கத்தைக் கொண்டு நற்செய்தி கூறி இருந்தாலே தவிர.*

*6. நாம் இவ்வுலகத்தில் வாழும்போது நமது உள்ளத்தில் பயம் அதிகம் இருக்க வேண்டும். மரண நேரத்தில் ஆதரவு அதிகம் இருக்க வேண்டும் என்று அறிஞர்கள் கூறுவார்கள்.*

*7. நல்லோர் அல்லாஹ்வையும் அவனது தண்டனையையும் பயந்தவர்களாக இருப்பதை அல்குர்ஆன் பின்வருமாறு வர்ணிக்கிறது :*

﴿وَالَّذِيْنَ هُمْ مِّنْ عَذَابِ رَبِّهِمْ مُّشْفِقُوْنَ ۝﴾

*இன்னும் அவர்கள் தங்கள் இறைவனின் வேதனைக்குப் பயந்துகொண்டே இருப்பார்கள். (அல்குர்ஆன் 70 : 27)*

﴿قَالُـوْا اِنَّا كُـنَّا قَبْلُ فِيْۤ اَهْلِنَا مُشْفِقِيْنَ ۝﴾

*இதற்கு முன்னர், நாம் நமது குடும்பத்தாருடன் இருந்தபோது மெய்யாகவே பயந்து கொண்டே இருந்தோம்.*

*(அல்குர்ஆன் 52 : 26)*

﴿وَالَّذِيْنَ يُؤْتُوْنَ مَا اٰتَوْا وَّ قُلُوْبُهُمْ وَجِلَةٌ اَنَّهُمْ اِلٰى رَبِّهِمْ رٰجِعُوْنَ ۝﴾

*இன்னும் அவர்கள் தங்களுக்குச் சாத்தியமான வரையில் தானம் கொடுப்பதுடன் அவர்களுடைய உள்ளங்கள் நிச்சயமாக தங்கள் இறைவனிடம் செல்வோம் என்று பயந்து கொண்டிருப்பார்கள்.*

*(அல்குர்ஆன் 23 : 60)*

---------------------

# பாடம் 61

## பாவியாக இருப்பினும் நிராசை அடைய தேவை இல்லை!

وَيَنْبَغِي لِلرَّجُلِ الْـمُسْرِفِ عَلَىٰ نَفْسِهِ أَنْ لَا يَقْطَعَ رَجَاءَهُ مِنْ اللّٰهِ تَعَالَىٰ عِنْدَ الْـمَوْتِ وَيُـحْسِنَ ظَنَّهُ بِاللّٰهِ تَبَارَكَ وَتَعَالَىٰ وَيَخَافَ ذُنُوبَهُ فَإِنْ رَحِمَهُ اللّٰهُ فَبِفَضْلٍ وَإِنْ عَذَّبَهُ فَبِذَنْبٍ

92. தன் மீது வரம்புமீறிய (அதிகம் பாவம் செய்த) அடியானுக்கு உகந்தது என்னவென்றால் அவன் மரண நேரத்தில் அல்லாஹ்விடமிருந்து தனது ஆதரவை துண்டித்து விடக்கூடாது; அருள் நிறைந்த உயர்வுமிக்க அல்லாஹ்வின் மீது தனது எண்ணத்தை நல்லெண்ணமாக வைக்கட்டும்; தனது பாவங்களை பயப்படவும் செய்யட்டும். அல்லாஹ் அந்த அடியான் மீது கருணை புரிந்தால் அது அவனது கிருபையினால் ஆகும். அல்லாஹ் அவனை வேதனை செய்தால் அது அடியானின் பாவத்தினால் ஆகும்.

### படிப்பினைகள்

*1. அல்லாஹ் மகா மன்னிப்பாளன்,* **غافر الذنب غافر غفار غفور غافر** *இவை எல்லாம் அல்லாஹ்வின் அழகிய பெயர்களில் உள்ளவை ஆகும்.*

*2. அல்லாஹ் தனது அடியார்களை மன்னிக்க விரும்புகிறான். அல்லாஹு தஆலா கூறுகிறான் :*

﴿وَاللّٰهُ يُرِيدُ أَنْ يَتُوبَ عَلَيْكُمْ﴾

அல்லாஹ் உங்களை மன்னிக்க விரும்புகிறான்
(அல்குர்ஆன் 4 : 27.)

3. அடியார்களை அல்லாஹ் எப்போதும் தனது மன்னிப்பின் பக்கம் அழைக்கிறான்.

﴿وَاللّٰهُ يَدْعُو إِلَى الْجَنَّةِ وَالْمَغْفِرَةِ بِإِذْنِهِ﴾

அல்லாஹ் தனது அனுமதி கொண்டு சொர்க்கத்தின் பக்கமும் (தனது) பாவமன்னிப்பின் பக்கமும் (உங்களை) அழைக்கிறான்.
(அல்குர்ஆன் 2 : 221)

4. நாம் எப்போதும் அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு தேடிக்கொண்டிருக்க வேண்டும் என்பது அல்லாஹ்வின் கட்டளையும் நபிமார்களின் வழிகாட்டலும் ஆகும்.

﴿وَأَنِ اسْتَغْفِرُوا رَبَّكُمْ ثُمَّ تُوبُوا إِلَيْهِ﴾

5. இன்னும் உங்கள் இறைவனிடம் பாவமன்னிப்பு தேடுங்கள்! இன்னும் பாவங்களை விட்டு விலகி அவன் பக்கம் திரும்புங்கள்!
(அல்குர்ஆன் 11 : 3)

﴿قُلْ يٰعِبَادِىَ الَّذِيْنَ اَسْرَفُوْا عَلٰٓى اَنْفُسِهِمْ لَا تَقْنَطُوْا مِنْ رَّحْمَةِ اللّٰهِ
اِنَّ اللّٰهَ يَغْفِرُ الذُّنُوْبَ جَمِيْعًا اِنَّه هُوَ الْغَفُوْرُ الرَّحِيْمُ○﴾

(நபியே!) நீங்கள் கூறுங்கள்: "எனது அடியார்களே! (உங்களில்) எவரும் வரம்பு மீறி தமக்குத்தாமே தீங்கிழைத்துக் கொண்டபோதிலும், அல்லாஹ்வின் அருளைப் பற்றி நீங்கள் நம்பிக்கை இழந்துவிட வேண்டாம். (நீங்கள் பாவத்திலிருந்து விலகி, மனம் வருந்தி மன்னிப்பைக் கோரினால்) நிச்சயமாக

அல்லாஹ் (உங்களுடைய) பாவங்கள் அனைத்தையும் மன்னித்துவிடுவான். ஏனென்றால், நிச்சயமாக அவன் மிக்க மன்னிப்பவனும், கிருபை உடையவனாகவும் இருக்கின்றான். (அல்குர்ஆன் 39 : 53)

6. அடியான் எப்போதும் தனது பாவத்தை குறித்து பயந்தவனாக இருக்க வேண்டும். அதே நேரம் அல்லாஹ்வின் மன்னிப்பின் மீது நம்பிக்கை உள்ளவனாகவும் இருக்க வேண்டும்.

7. தனது கடந்த கால பாவத்திற்காக அடியான் எப்போதும் பாவமன்னிப்புத் தேடிக்கொண்டே இருக்க வேண்டும்.

8. அடியான் வருங்காலத்தில் பாவங்களை விட்டு தன்னை அல்லாஹ் பாதுகாக்க வேண்டும் என்றும் அல்லாஹ்விடம் துஆ செய்தவனாக இருக்க வேண்டும்.

9. தான் பாவத்தில் சிக்கிவிடுவோம் என்ற பயமும் வேண்டும். ஆகவே, எப்போதும் பாவங்களை விட்டு அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடிக்கொண்டே இருக்க வேண்டும்.

10. அடியானுக்கு அல்லாஹ்வின் மன்னிப்பு கிடைப்பது அல்லாஹ்வின் அருளாகும். அல்லாஹ் யாரையும் தண்டித்தால் அவரின் பாவத்தின் காரணமாகவே தண்டிக்கிறான். அல்லாஹ் அநியாயக்காரன் இல்லை.

﴿يَغْفِرُ لِمَنْ يَشَاءُ وَيُعَذِّبُ مَنْ يَشَاءُ وَاللهُ غَفُورٌ رَحِيمٌ﴾

அவன் தான் நாடியவர்களை மன்னிக்கிறான். இன்னும் தான் நாடியவர்களை தண்டிக்கிறான். இன்னும் அல்லாஹ் மகா மன்னிப்பாளன், பெரும் கருணையாளன் ஆவான். (3 : 129)

11. அடியானின் இறுதி நேரம் உயிர் பிரிவதற்கு சற்று முன்னர்

*வரை அடியானின் பாவமன்னிப்பு கோருதலை அல்லாஹ் அங்கீகரிக்கிறான்.*

*12. அடியான் அல்லாஹ்விற்கு இணைவைக்காத நிலையில் எத்தகைய பெரும்பாவங்களுடன் அவன் இறந்துவிட்டாலும் நிச்சயமாக அல்லாஹ் அவனை மன்னிப்பான். ஒருவன் இணைவைத்த நிலையில் இறந்துவிட்டால் அல்லாஹ் அவனை மன்னிக்க மாட்டான்.*

*அல்லாஹு தஆலா கூறுகிறான் :*

﴿إِنَّ اللّٰهَ لَا يَغْفِرُ أَنْ يُشْرَكَ بِهِ وَيَغْفِرُ مَا دُونَ ذٰلِكَ لِمَنْ يَشَاءُ
وَمَنْ يُشْرِكْ بِاللّٰهِ فَقَدِ افْتَرَىٰ إِثْمًا عَظِيمًا۝﴾

*நிச்சயமாக அல்லாஹ் தனக்கு இணைவைப்பதை மன்னிக்கவே மாட்டான். இதனைத் தவிர (மற்ற) எதனையும் தான் நாடியவர்களுக்கு மன்னிப்பான். எவர்கள் அல்லாஹ்வுக்கு இணைவைக்கின்றார்களோ அவர்கள் நிச்சயமாக மிகப் பெரும் பாவத்தையே கற்பனை செய்கின்றார்கள் (அல்குர்ஆன் 4 : 48)*

﴿إِنَّ اللّٰهَ لَا يَغْفِرُ أَنْ يُشْرَكَ بِهِ وَيَغْفِرُ مَا دُونَ ذٰلِكَ لِمَنْ يَشَاءُ
وَمَنْ يُشْرِكْ بِاللّٰهِ فَقَدْ ضَلَّ ضَلَالًا بَعِيدًا۝﴾

*நிச்சயமாக அல்லாஹ் தனக்கு இணைவைப்பதை மன்னிக்கவே மாட்டான். இதனை அல்லாத (குற்றத்)தை (அதுவும்) தான் விரும்பியவர்களுக்கே மன்னிப்பான். ஆகவே, எவரேனும் அல்லாஹ்வுக்கு இணை வைத்தால் அவர் வெகுதூரமான வழிகேட்டில்தான் இருக்கின்றார். (அல்குர்ஆன் 4 : 116)*

*13.* *இணைவைப்பவர்கள், இன்னும் நிராகரிப்பாளர்கள், இவர்கள் எந்த மதத்தை சேர்ந்தவர்களாக இருந்தாலும் இவர்களின் நல்லறங்களுக்கு நற்கூலியை இவ்வுலகத்திலேயே அல்லாஹ் கொடுத்து விடுவான். அவர்களுக்கு மறுமையில் எவ்வித பங்கும் இருக்காது. ஆகவே, அவர்கள் தங்கள் நிராகரிப்பின் காரணமாக நிரந்தரமாக நரகத்தில் தங்கிவிடுவார்கள். அவர்களின் இணைவைப்பு, இறை நிராகரிப்புக்கு ஏற்ப அவர்கள் நரகத்தில் தண்டனை அனுபவிப்பார்கள்.*

﴿اِنَّه مَنْ يُّشْرِكْ بِاللّٰهِ فَقَدْ حَرَّمَ اللّٰهُ عَلَيْهِ الْجَـنَّةَ
وَمَاْوٰىهُ النَّارُ وَمَا لِلظّٰلِمِيْنَ مِنْ اَنْصَارٍ○﴾

*எவன் அல்லாஹ்வுக்கு இணை வைக்கின்றானோ அவனுக்கு நிச்சயமாக அல்லாஹ் சுவனபதியைத் தடுத்து விடுகின்றான். அவன் செல்லும் இடம் நரகம்தான். (இத்தகைய) அநியாயக்காரர்களுக்கு (மறுமையில்) உதவி செய்பவர்கள் ஒருவருமில்லை.* *(அல்குர்ஆன் 5 : 72)*

﴿اِنَّ الَّذِيْنَ كَفَرُوْا مِنْ اَهْلِ الْكِتٰبِ وَ الْمُشْرِكِيْنَ
فِىْ نَارِ جَهَنَّمَ خٰلِدِيْنَ فِيْهَا اُولٰئِكَ هُمْ شَرُّ الْبَرِيَّةِ ○﴾

*ஆகவே, வேதத்தையுடையவர்களிலும், இணைவைத்து வணங்குபவர்களிலும், (இந்த நபியின் வரவை எதிர்பார்த்திருந்த வர்களில்) எவர்கள் (அவர்களை) நிராகரிக்கின்றார்களோ அவர்கள் நிச்சயமாக நரகத்தின் நெருப்பில்தான் இருப்பார்கள். அதில், அவர்கள் என்றென்றுமே தங்கிவிடுவார்கள். இத்தகையவர்கள்தாம் படைப்புகளில் மகா கெட்டவர்கள்.* *(அல்குர்ஆன் 98 : 6)*

*14.* *இணைவைத்தல் கலக்காத ஈமானுடன் இறந்தவர் பாவியாக இருந்தாலும் கண்டிப்பாக அவர் சொர்க்கம் செல்வார். அல்லாஹ் தனது விசேஷமான அருளால் அவரை தண்டனை ஏதும் இன்றி மன்னித்து சொர்க்கத்தில் அனுப்பலாம். அல்லது அவரின் பாவங்களுக்கு ஏற்ப அவரை நரகத்தில் தண்டனை செய்துவிட்டு சொர்க்கத்திற்கு அனுப்பலாம்.*

*அல்லாஹு தஆலா கூறுகிறான் :*

﴿اَلَّذِيْنَ اٰمَنُوْا وَلَمْ يَلْبِسُوْا اِيْمَانَهُمْ بِظُلْمٍ
أُولٰئِكَ لَـهُمُ الْاَمْنُ وَهُمْ مُّهْتَدُوْنَ○﴾

*எவர்கள் நம்பிக்கை கொண்டு, தங்கள் நம்பிக்கையுடன் (இணை வைத்தல் என்னும்) யாதொரு அநியாயத்தையும் கலந்துவிடவில்லையோ அவர்களுக்கே நிச்சயமாக பாதுகாப்பு உண்டு. அவர்கள்தான் நேரான வழியிலும் இருக்கின்றனர்.*
*(அல்குர்ஆன் 6 : 82)*

--------------------

# பாடம் 62

## நபியவர்களின் முன்னறிவிப்புகள் அனைத்தும் உண்மையே!

وَالْإِيمَانُ بِأَنَّ اللهَ تَبَارَكَ وَتَعَالَىٰ أَطْلَعَ نَبِيَّهُ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ عَلَىٰ مَا يَكُونُ فِي أُمَّتِهِ إِلَىٰ يَوْمِ الْقِيَامَةِ

93. நிச்சயமாக அருள் நிறைந்த, உயர்வுமிக்க அல்லாஹ் தனது நபி ﷺ அவர்களுக்கு அவர்களது உம்மத்தில் மறுமை நாள் வரை நிகழக்கூடியதை காண்பித்துக் கொடுத்தான் என்று நம்பிக்கை கொள்ள வேண்டும்.

وَاعْلَمْ أَنَّ رَسُولَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ سَتَفْتَرِقُ أُمَّتِي عَلَىٰ ثَلَاثٍ وَسَبْعِينَ فِرْقَةً كُلُّهَا فِي النَّارِ إِلَّا وَاحِدَةً وَهِيَ الْجَمَاعَةُ قِيلَ مَنْ هُمْ يَا رَسُولَ اللهِ؟ قَالَ مَا أَنَا عَلَيْهِ الْيَوْمَ وَأَصْحَابِي

94. அறிந்துகொள்! நிச்சயமாக ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள்: எனது உம்மத்து எழுபத்தி மூன்று பிரிவுகளாக பிரிவார்கள். அவர்கள் எல்லோரும் நரகத்தில் செல்வார்கள் ஒரு பிரிவினரைத் தவிர. அவர்கள்தான் ஜமாஆ. அல்லாஹ்வின் தூதரே! அவர்கள் யார் என்று கேட்கப்பட்டது. நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: அவர்கள், இன்று நானும் எனது தோழர்களும் எதன் மீது இருக்கின்றோமோ அதன் மீதிருப்பவர்கள் ஆவார்கள்.

وَهٰكَذَا كَانَ الدِّينُ إِلَىٰ خِلَافَةِ عُمَرَ بْنِ الْخَطَّابِ وَهٰكَذَا كَانَ فِي زَمَنِ

عُثْمَانَ فَلَمَّا قُتِلَ عُثْمَانُ رَضِيَ اللهُ عَنْهُ جَاءَ الْاِخْتِلَافُ وَالْبِدَعُ وَصَارَ النَّاسُ أَحْزَابًا وَصَارُوا فِرَقًا فَمِنَ النَّاسِ مَنْ ثَبَتَ عَلَى الْـحَقِّ عِنْدَ أَوَّلِ التَّغْيِيرِ وَقَالَ بِهِ وَعَمِلَ بِهِ وَدَعَا النَّاسَ إِلَيْهِ فَكَانَ الْأَمْرُ مُسْتَقِيمًا

இவ்வாறுதான் உமர் இப்னுல் கத்தாப் ﵁ அவர்களின் ஆட்சிவரை மார்க்கம் இருந்தது. உஸ்மான் ﵁ உடைய காலத்திலும் இவ்வாறுதான் இருந்தது. உஸ்மான் ﵁ அவர்கள் கொல்லப்பட்டபோது கருத்து வேறுபாடுகளும் நூதன கருத்துகளும் அனாச்சாரங்களும் உருவாகி விட்டன. மக்கள் பல கோஷ்டிகளாக மாறிவிட்டனர். பல பிரிவுகளாக ஆகிவிட்டனர். மாற்றத்தின் தொடக்கத்தில் இருந்தே மக்களில் பலர் சத்தியத்தின் மீது உறுதியாக இருந்தனர்; அதையே கூறினர்; அதன்படியே செயல்பட்டனர்; மக்களை அதன் பக்கமே அழைத்தனர். ஆகவே, காரியம் (-மார்க்கம்) நேராகவே இருந்தது.

حَتَّىٰ كَانَتْ الطَّبَقَةُ الرَّابِعَةُ فِي خِلَافَةِ بَنِي فُلَانٍ انْقَلَبَ الزَّمَانُ وَتَغَيَّرَ النَّاسُ جِدًّا وَفَشَتْ الْبِدَعُ وَكَثُرَ الدُّعَاةُ إِلَىٰ غَيْرِ سَبِيلِ الْـحَقِّ وَالْـجَمَاعَةِ وَوَقَعَتِ الْـمِحَنُ فِي كُلِّ شَيْءٍ لَمْ يَتَكَلَّمْ بِهِ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ وَلَا أَصْحَابُهُ وَدَعَوْا إِلَى الْفُرْقَةِ

இறுதியாக, இன்னாரின் குடும்பத்துடைய ஆட்சியில் நான்காவது கால மக்கள் வந்தனர். அப்போது காலம் தலைகீழாக புரண்டது; மக்கள் முற்றிலும் மாறிவிட்டனர்; அனாச்சாரங்கள் பரவின; உண்மையான பாதைக்கு மாற்றமானதின் பக்கமும் நபித்தோழர்களின் பாதைக்கு மாற்றமானதின் பக்கமும் அழைப்பவர்கள் அதிகமாகி விட்டனர்;

ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களோ அவர்களின் தோழர்களோ பேசாத விஷயங்கள் ஒவ்வொன்றிலும் சோதனைகள் நிகழ்ந்தன; மக்கள் பிரிவினையின் பக்கம் அழைக்க தொடங்கினர்.

**وَنَهَىٰ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ عَنِ الْفُرْقَةِ وَكَفَّرَ بَعْضُهُمْ بَعْضًا وَكُلٌّ دَعَا إِلَىٰ رَأْيِهِ وَإِلَىٰ تَكْفِيرِ مَنْ خَالَفَهُ فَضَلَّ الْـجُهَّالُ وَالرُّعَاعُ وَمَنْ لَا عِلْمَ لَهُ وَأَطْمَعُوا النَّاسَ فِي شَيْءٍ مِنْ أَمْرِ الدُّنْيَا وَخَوَّفُوهُمْ عِقَابَ الدُّنْيَا فَاتَّبَعَهُمُ الْـخَلْقُ عَلَىٰ خَوْفٍ فِي دُنْيَاهُمْ وَرَغْبَةً فِي دُنْيَاهُمْ**

ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களோ பிரிவினையிலிருந்து தடுத்திருந்தார்கள். அவர்களில் சிலர் சிலரை “கா◌ஃபிர்” என்றனர்; ஒவ்வொரு பிரிவும் தனது கருத்தின் பக்கம் மக்களை அழைத்தனர்; இன்னும் தனது பிரிவுக்கு மாற்றமான கருத்துடையவர்களை கா◌ஃபிர் என்று கூறுவதற்கு (மற்றவர்களை) தூண்டினர். அறியாதவர்களும், சாதாரண மக்களும், கல்வியறிவு இல்லாதவர்களும் வழிகெட்டனர். உலக இன்பங்களில் சிலவற்றில் மக்களுக்கு ஆசை ஊட்டினர்; உலக தண்டனைப் பற்றி அவர்களை அச்சுறுத்தினர். ஆகவே, மக்கள் தங்களது உலக விஷயங்களில் பயந்தும் இன்னும் தங்களது உலக விஷயங்களில் ஆசை பட்டும் அவர்களை (-அதிகாரத்தில் உள்ள வழிகெட்டவர்களை) பின்பற்றினர்.

**فَصَارَتِ السُّنَّةُ وَأَهْلُهَا مَكْتُومِينَ وَظَهَرَتِ الْبِدْعَةُ وَفَشَتْ وَكَفَرُوا مِنْ حَيْثُ لَا يَعْلَمُونَ مِنْ وُجُوهٍ شَتَّىٰ وَوَضَعُوا الْقِيَاسَ وَحَمَلُوا قُدْرَةَ الرَّبِّ وَآيَاتِهِ وَأَحْكَامَهُ وَأَمْرَهُ وَنَهْيَهُ عَلَىٰ عُقُولِهِمْ وَآرَائِهِمْ فَمَا وَافَقَ عُقُولَهُمْ**

قَبِلُوهُ وَمَا لَمْ يُوَافِقْ عُقُولَهُمْ رَدُّوهُ فَصَارَ الْإِسْلَامُ غَرِيبًا وَالسُّنَّةُ غَرِيبَةً وَأَهْلُ السُّنَّةِ غُرَبَاءَ فِي جَوْفِ دِيَارِهِمْ

ஆகவே, ஸுன்னாவும் அதை பின்பற்றியவர்களும் மறைந்து வாழவேண்டியவர்களாக ஆகிவிட்டனர். அனாச்சாரம் வெளிப்படையாக, பகிரங்கமாக, ஓங்கியதாக ஆகிவிட்டது. மக்களுக்கு மத்தியில் முற்றிலும் அது பரவி விட்டது. பல வழிகளில் அவர்கள் அறியாமலேயே அவர்கள் நிராகரிப்பில் சென்றுவிட்டனர். மக்கள் கியாஸ் -அனுமானத்தை ஏற்படுத்தினர்; ரப்புடைய ஆற்றல், அவனுடைய வசனங்கள், அவனது சட்டங்கள், அவனது கட்டளைகள், அவனது விலக்கல்கள் என அனைத்தையும் தங்கள் புத்திகளுக்கு ஏற்ப, தங்களது சுயசிந்தனைகளுக்கு ஏற்ப ஆய்வு செய்தனர். அவர்களின் புத்திகளுக்கு ஒத்து வந்ததை ஏற்றுக்கொண்டனர். எது அவர்களின் புத்திகளுக்கு ஒத்துவரவில்லையோ அதை மறுத்தனர். ஆகவே, இஸ்லாமிய மார்க்கம் அந்நியமாக மாறிவிட்டது; ஸுன்னா -நபிவழி அந்நியமாக மாறிவிட்டது; ஸுன்னாவை பின்பற்றுவோர் தங்கள் நாடுகளுக்குள்ளேயே அந்நியர்களாக ஆகிவிட்டனர்.

## படிப்பினைகள்

*1. அல்லாஹ்வின் தூதர் அவர்கள் அல்லாஹ்வின் அனுமதி இன்றி மார்க்கத்தில் எதையும் கூற மாட்டார்கள்.*

*2. அல்லாஹ்வின் மார்க்கத்தில் அல்லாஹ் விரும்பாததை நபி ﷺ அவர்கள் கூறுவதை விட்டும் அல்லாஹ் நபியவர்களை பாதுகாத்திருக்கிறான்.*

*3. குர்ஆனில் அல்லாஹ் கூறி இருப்பதும் ஸஹீஹான ஹதீஸ்களில் நபி ﷺ அவர்கள் கூறி இருப்பதும் நம்பிக்கை கொள்வதில் சமம்தான்.*

*4. நபி ﷺ அவர்களின் ஹதீஸ்களில், அவர்களின் ஸஹீஹான முன்னறிவிப்புகளில் சந்தேகப்படுவது, அல்லது அவற்றுக்கு மாற்றுப் பொருள் கூறுவது வழிகேடாகும்.*

*5. நபி ﷺ அவர்கள் நடக்கப்போகும் சில நன்மையான காரியங்களையும் முன்னறிவிப்பு செய்தார்கள். சில தீமையான காரியங்களையும் முன்னறிவிப்பு செய்தார்கள்.*

*6. இந்த உம்மத்தில் நபித்தோழர்கள் நமக்கு முன்னோடிகளாக திகழ்கிறார்கள்.*

*7. நபி ﷺ அவர்களின் இறப்புக்குப் பின்னர் உஸ்மான் அவர்கள் கொல்லப்பட்டதிலிருந்து இந்த உம்மத்தில் குழப்பங்கள் உருவாகின. பின்னர் அவை அதிகரித்துக் கொண்டே சென்றன.*

*8. பிறகு, அப்பாஸிய மன்னர்களின் காலத்தில் கிரேக்க தத்துவங்கள் அரபு மொழியில் மொழிபெயர்க்கப்பட்டு இன்னும் குழப்பங்கள் அதிகரித்தன.*

*9. குழப்பவாதிகளின் கொள்கைக்கு ஆட்சியாளர்களின் ஆதரவும் கிடைத்ததால் பாமர மக்கள் விரைவாக குழப்பத்திற்கு ஆளாகினர்.*

*10. உலகாதாயத்தை ஆசைப்பட்டும் ஆட்சியாளர்களின் தண்டனைக்கு பயந்தும் மக்களில் பலர் வழிகேட்டை தேர்ந்தெடுத்தனர்.*

*11. அறிஞர்களில் ஒரு கூட்டமும் அவர்களை பின்பற்றிய சிலரும் நபித்தோழர்களின் அறியப்பட்ட கொள்கையில் உறுதியாக இருந்தனர். குழப்பங்களில் சிக்கி தங்கள் மார்க்கத்தை மாற்றிவிட வில்லை.*

*12. எனினும் உண்மையாளர்கள் குறைவாகவும் மறைவாகவும்*

*இருந்து சத்தியத்தை பரப்பி வந்தனர்.*

*13. வழிகேடர்களோ தங்கள் அறிவை அளவுகோலாக மாற்றி மார்க்கத்தில் விளையாண்டனர்.*

*14. அறிவே ஆதாரம் என்று கூறி மார்க்கத்தின் உறுதியான ஆதாரங்களை சந்தேகித்தனர். இன்னும் யூகங்களின் அடிப்படையில் அவற்றை மறுத்தனர். அல்லது அவற்றுக்கு மாற்றுப் பொருள் கூறி மார்க்கத்தை திரித்தனர்.*

*15. அறியப்பட்ட உண்மைகளுக்கு புதுப்புது அர்த்தங்களை கொடுத்து, புதுமைகள்தான் உண்மைகள் என்று வாதிட்டனர். சிலர், அந்த மார்க்க ஆதாரங்களின் உண்மை விளக்கம் நாங்கள் சொல்வதுதான், ஸஹாபாக்கள் சரியாக அதை புரியவில்லை என்று வாதிட்டனர். இன்னும் சிலரோ ஆதாரங்கள் எதையும் நம்பாமல் அறிவின்படியே எல்லாவற்றையும் முடிவு செய்தனர்.*

*16. அல்லாஹ்வின் வல்லமையை தங்கள் குறுகிய புத்திக்கு உட்படுத்தி, பிறகு அதற்கேற்ப நம்பிக்கை கொண்டார்கள். ஆகவே, அறிவுக்கு எட்டாததை மறுத்துவிட்டார்கள்.*

*17. இந்த சூழ்நிலையில்தான் இஸ்லாமும் ஸுன்னாவும் அந்நியமாக பார்க்கப்பட்டன. ஸுன்னாவை போதிக்கும் அறிஞர்கள் கல்வி கற்பிப்பதிலிருந்தும் மக்களை சந்திப்பதிலிருந்தும் தடுக்கப்பட்டார்கள்.*

--------------------

# பாடம் 63

## தற்காலிக திருமணம் ஆகுமானதல்ல!

وَاعْلَمْ أَنَّ الْـمُتْعَةَ مُتْعَةَ النِّسَاءِ وَالْاِسْتِحْلَالَ حَرَامٌ إِلَىٰ يَوْمِ الْقِيَامَةِ

95. அறிந்துகொள்! பெண்களை குறிப்பிட்ட காலத்திற்காக நிகாஹ் செய்வது, (மூன்று தலாக் விடப்பட்டவளை) ஹலாலாக்கித் தர சொல்வது மறுமை நாள் வரை ஹராம் -தடுக்கப்பட்டதாகும்.

### படிப்பினைகள்

*1. முத்ஆ திருமணம் - அதாவது, ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு குறிப்பிட்ட மஹரை கொடுத்து ஒரு பெண்ணை மணமுடிப்பது முத்ஆ என்று சொல்லப்படும்.*

*1. இது இஸ்லாமில் சில காலம் தற்காலிகமாக அனுமதிக்கப்பட்டு பிறகு நிரந்தரமாக ஹராமாக ஆக்கப்பட்டு விட்டது.*

*3. வலுவான ஆதாரங்கள் இந்த வகை திருமணம் முற்றிலும் இஸ்லாமில் தடை செய்யப்பட்டு விட்டது என்பதை உறுதி செய்கின்றன.*

فَقَالَ يَا أَيُّهَا النَّاسُ إِنِّي قَدْ كُنْتُ أَذِنْتُ لَكُمْ فِي الِاسْتِمْتَاعِ مِنْ النِّسَاءِ وَإِنَّ اللَّهَ قَدْ حَرَّمَ ذٰلِكَ إِلَىٰ يَوْمِ الْقِيَامَةِ فَمَنْ كَانَ عِنْدَهُ مِنْهُنَّ شَيْءٌ فَلْيُخَلِّ سَبِيلَهُ وَلَا تَأْخُذُوا مِمَّا آتَيْتُمُوهُنَّ شَيْئًا

*நபி ﷺ அவர்கள் கூறினார்கள் : மக்களே! பெண்களிடம்*

தற்காலிக திருமணம் மூலம் சுகம் பெற உங்களுக்கு நான் அனுமதி கொடுத்திருந்தேன். நிச்சயமாக அல்லாஹ் அதை கியாம நாள் வரை ஹராம் தடுக்கப்பட்டதாக ஆக்கிவிட்டான். யாரிடம் இந்த வகையில் திருமணம் செய்த பெண் இருப்பாளோ அவர் அவளை விட்டு விடட்டும். அவர்களுக்கு - அந்த பெண்களுக்கு நீங்கள் கொடுத்ததிலிருந்து எதையும் திரும்ப பெறாதீர்கள்.

அறிவிப்பாளர் : சப்ரா அல்ஜுஹ்னி, நூல் : ஸஹீஹ் முஸ்லிம், எண் : 2502

4. ஒருவர் தனது மனைவியை மூன்று முறை தலாக் கூறி விவாகரத்து செய்துவிட்டால் அந்த பெண் அவனுக்கு நிரந்தரமாக ஹராம் ஆகிவிடுகிறாள். அந்த பெண் வேறு திருமணம் செய்து அந்த திருமணத்தில் அவளுக்கு கணவனை விட்டு பிரிவு தலாக் மூலம் அல்லது கணவனின் இறப்பு மூலம் ஏற்பட்டால் அப்போது அவள் திருமணத்தின் மூலம் தனது முதல் கணவனிடம் திரும்ப அனுமதி இருக்கிறது.

5. இதற்கு மாறாக, தனது மனைவியை ஒருவர் மூன்று முறை தலாக் செய்துவிட்டு பிறகு அவளை தனக்கு ஹலால் ஆகுமானவளாக ஆக்குவதற்காக அவளை ஒருத்தருக்கு ஓரிரு நாட்களுக்கு மணம் முடித்து கொடுத்து, பிறகு அவரை இவளுக்கு தலாக் சொல்ல வைத்து, இத்தா முடிந்த உடன் இவளை முதல் கணவர் திருமணம் முடிப்பதை இஸ்திஹ்லால் - ஆகுமாக்கி கொள்ள வழி தேடுதல் என்று கூறப்படும்.

6. இந்த இஸ்திஹ்லால் முறையை நபி ﷺ அவர்கள் சபித்துள்ளார்கள். அப்படி செய்வதால் அந்த பெண் அல்லாஹ்வின் சட்டப்படி அவனுக்கு ஹலால் ஆக மாட்டாள் என்பதையும் நபி ﷺ அவர்கள் தெளிவுப்படுத்தியுள்ளார்கள்.

أَلَا أُخْبِرُكَ بِالتَّيْسِ الْـمُسْتَعَارِ ؟ هُوَ الْمُحِلُّ فلَعَنَ اللّٰهُ الْمُحِلَّ والْمُحَلَّلَ لَهُ

*இரவலாக வாங்கப்படும் காளையை நான் உங்களுக்கு அறிவித்து தரட்டுமா? அவன்தான் முஹல்லில் - ஆகுமாக்கி தருபவன். முஹல்லில் - ஆகுமாக்கி தருபவனையும் முஹல்லல் லஹு - யாருக்காக ஆகுமாக்கி தரப்படுகிறதோ அவனையும் அல்லாஹ் சபிப்பானாக!*

*அறிவிப்பாளர் : உக்பா இப்னு ஆமிர், நூல் : ஸஹீஹுல் ஜாமிஃ, எண் : 2596*

---------------------

# பாடம் 64

## சிறப்பிற்குரிய நல்லோரை அறிந்து கொள்!

وَاعْرِفْ لِبَنِي هَاشِمٍ فَضْلَهُمْ لِقَرَابَتِهِمْ مِنْ رَسُولِ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ وَتَعْرِفَ فَضْلَ قُرَيْشٍ وَالْعَرَبِ وَجَمِيعِ الْأَفْخَاذِ فَاعْرِفْ قَدْرَهُمْ وَحُقُوقَهُمْ فِي الْإِسْلَامِ

96. ஹாஷிம் குடும்பத்தார்களின் சிறப்பை நீ புரிந்துகொள்! ஏனெனில், அவர்கள் ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களுக்கு உறவினர்கள் ஆவார்கள். குறைஷிகள், அரபியர்கள், இன்னும் அரேபிய வம்சத்தின் அனைத்து கிளைகளின் சிறப்பையும் நீ புரிந்துகொள்! அவர்களின் கண்ணியத்தையும் இஸ்லாமிய மார்க்கத்தில் அவர்களுக்குள்ள உரிமைகளையும் நீ புரிந்துகொள்!

وَمَوْلَى الْقَوْمِ مِنْهُمْ وَتَعْرِفُ لِسَائِرِ النَّاسِ حَقَّهُمْ فِي الْإِسْلَامِ وَاعْرِفْ فَضْلَ الْأَنْصَارِ وَوَصِيَّةَ رَسُولِ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ فِيهِمْ وَآلُ الرَّسُولِ فَلَا تَنْسَهُمْ وَاعْرِفْ فَضْلَهُمْ وَكَرَامَتَهُمْ وَجِيرَانُهُ مِنْ أَهْلِ الْـمَدِينَةِ فَاعْرِفْ فَضْلَهُمْ

ஒரு சமுதாயத்தில் உரிமை இடப்பட்ட அடிமைகள் அந்த சமுதாயத்தைச் சேர்ந்தவர்களே![14] மக்கள் அனைவருக்கும்

---

14. ஓர் அடிமை எந்த வம்சத்தைச் சேர்ந்தவர்களால் வாங்கப்படுகிறாரோ பிறகு அவர்களுடனேயே வாழ்கிறாரோ அவர் அந்த வம்சத்தை சேர்ந்தவராகவே ஆவார்.

இஸ்லாமில் அவர்களுக்குரிய உரிமைகளை புரிந்து நடந்துகொள்! அன்சாரிகளின் சிறப்பை புரிந்து நடந்துகொள்! ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களுடைய குடும்பத்தார்களை மறந்து விடாதே! அவர்களின் மேன்மையையும் கண்ணியத்தையும் புரிந்து நடந்துகொள்! இன்னும் நபியின் அண்டை வீட்டார்களான மதீனாவாசிகளின் சிறப்பையும் புரிந்து நடந்துகொள்!

## படிப்பினைகள்

*1. இந்த பாடத்தில் ஆசிரியர் அவர்கள் நபி ﷺ அவர்கள் இன்னும் அவர்களின் குடும்பத்தார், அவர்களின் வம்சத்தார், மற்றும் முஹாஜிர், அன்சாரி ஸஹாபாக்களின் சிறப்புகளை கூறுகிறார்கள்.*

*2. இது குறித்து அவசியமான ஹதீஸ்களை சுருக்கமாக பார்ப்போம்.*

**إِنَّ اللَّهَ خَلَقَ الْخَلْقَ فَجَعَلَنِي فِي خَيْرِهِمْ ثُمَّ جَعَلَهُمْ فِرْقَتَيْنِ فَجَعَلَنِي فِي خَيْرِهِمْ فِرْقَةً ثُمَّ جَعَلَهُمْ قَبَائِلَ فَجَعَلَنِي فِي خَيْرِهِمْ قَبِيلَةً ثُمَّ جَعَلَهُمْ بُيُوتًا فَجَعَلَنِي فِي خَيْرِهِمْ بَيْتًا وَخَيْرِهِمْ نَفْسًا**

*நிச்சயமாக அல்லாஹ் படைப்புகளை படைத்தான். அவர்களில் சிறந்தவர்களில் என்னை அவன் ஆக்கினான். பிறகு அவர்களை இரு பிரிவுகளாக ஆக்கினான். அவர்களில் சிறந்த பிரிவில் அவன் என்னை ஆக்கினான். பிறகு அவர்களை பல கோத்திரங்களாக ஆக்கினான். அவன் என்னை அவர்களில் சிறந்த கோத்திரத்தில் ஆக்கினான். பிறகு அவர்களை பல குடும்பங்களாக ஆக்கினான். அவன் என்னை அவர்களில் குடும்பத்தால் சிறந்தவர்களில், ஆன்மாவால் சிறந்தவர்களில் ஆக்கினான்.*

*அறிவிப்பாளர் : அல்அப்பாஸ் இப்னு அப்தில் முத்தலிப், நூல் : திர்மிதி, ஹதீஸ் எண் : **3607***

عَنْ وَاثِلَةَ بْنَ الْأَسْقَعِ سَمِعْتُ رَسُولَ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ يَقُولُ إِنَّ اللَّهَ اصْطَفَى كِنَانَةَ مِنْ وَلَدِ إِسْمَعِيلَ وَاصْطَفَى قُرَيْشًا مِنْ كِنَانَةَ وَاصْطَفَى مِنْ قُرَيْشٍ بَنِي هَاشِمٍ وَاصْطَفَانِي مِنْ بَنِي هَاشِمٍ

*ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூற நான் செவியுற்றேன் : நிச்சயமாக அல்லாஹ் (நபி) இஸ்மாயீல் عليه السلام அவர்களுடைய சந்ததியில் கினானாவை தேர்ந்தெடுத்தான். கினானாவிலிருந்து குறைஷை தேர்ந்தெடுத்தான். குறைஷிகளில் ஹாஷிமின் குடும்பத்தை தேர்ந்தெடுத்தான். ஹாஷிம் குடும்பத்தில் என்னை தேர்ந்தெடுத்தான்.*

*அறிவிப்பாளர் ; வாசிலா இப்னுல் அஸ்கஃ, நூல் : ஸஹீஹ் முஸ்லிம், எண் : **2276***

***3.** மக்காவிற்கும் மதினாவிற்கும் இடையில் உள்ள கம் என்ற ஒரு நீர் நிலைக்கு அருகில் நபி ﷺ அவர்கள் மக்களுக்கு ஓர் உரை நிகழ்த்தினார்கள். அதில் அவர்கள் அல்லாஹ்வை புகழ்ந்து துதித்துவிட்டு பிறகு, கூறினார்கள் :*

أَمَّا بَعْدُ أَلَا أَيُّهَا النَّاسُ فَإِنَّمَا أَنَا بَشَرٌ يُوشِكُ أَنْ يَأْتِيَ رَسُولُ رَبِّي فَأُجِيبَ وَأَنَا تَارِكٌ فِيكُمْ ثَقَلَيْنِ أَوَّلُهُمَا كِتَابُ اللَّهِ فِيهِ الْهُدَى وَالنُّورُ فَخُذُوا بِكِتَابِ اللَّهِ وَاسْتَمْسِكُوا بِهِ فَحَثَّ عَلَى كِتَابِ اللَّهِ وَرَغَّبَ فِيهِ ثُمَّ قَالَ وَأَهْلُ بَيْتِي أُذَكِّرُكُمُ اللَّهَ فِي أَهْلِ بَيْتِي أُذَكِّرُكُمُ اللَّهَ فِي أَهْلِ بَيْتِي أُذَكِّرُكُمُ اللَّهَ فِي أَهْلِ بَيْتِي

அறிந்துகொள்ளுங்கள் ! மக்களே! நானெல்லாம் ஒரு மனிதன்தான். எனது இறைவனின் தூதர் என்னிடம் விரைவில் வரலாம். நான் அவருக்கு பதிலளித்துவிடுவேன். நான் உங்களுக்கு கனமான இரண்டை விட்டு செல்கிறேன். அவ்விரண்டில் ஒன்று, அல்லாஹ்வின் கிதாப் - வேதமாகும். அதில் நேர்வழியும் வெளிச்சமும் இருக்கிறது. ஆகவே, அல்லாஹ்வின் கிதாபை எடுத்துக் கொள்ளுங்கள்! இன்னும் அதை உறுதியாக பிடித்துக் கொள்ளுங்கள்! இவ்வாறு நபி ﷺ அவர்கள் அல்லாஹ்வின் கிதாபை (வேதத்தை)ப் பற்றி அதிக ஆர்வமும் ஆசையும் ஊட்டினார்கள். பிறகு கூறினார்கள் : எனது குடும்பத்தார், எனது குடும்பத்தார் விஷயத்தில் நான் உங்களுக்கு அல்லாஹ்வை நினைவூட்டுகிறேன். எனது குடும்பத்தார் விஷயத்தில் நான் உங்களுக்கு அல்லாஹ்வை நினைவூட்டுகிறேன். எனது குடும்பத்தார் விஷயத்தில் நான் உங்களுக்கு அல்லாஹ்வை நினைவூட்டுகிறேன்.

அறிவிப்பாளர் : சைத் இப்னு அர்கம், நூல் : ஸஹீஹ் முஸ்லிம், எண் : 2408

**قَالَ النَّبِيُّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ الْأَنْصَارُ لَا يُحِبُّهُمْ إِلَّا مُؤْمِنٌ وَلَا يُبْغِضُهُمْ إِلَّا مُنَافِقٌ فَمَنْ أَحَبَّهُمْ أَحَبَّهُ اللَّهُ وَمَنْ أَبْغَضَهُمْ أَبْغَضَهُ اللَّهُ**

நபி ﷺ அவர்கள் கூறினார்கள் : அன்சாரிகள் அவர்களை முஃமினைத் தவிர மற்றவர் நேசிக்க மாட்டார். அவர்களை முனாஃபிக்கைத் தவிர மற்றவர் வெறுக்க மாட்டார். ஆக, யார் அவர்களை நேசிக்கிறாரோ அவரை அல்லாஹ் நேசிப்பான். யார் அவர்களை வெறுப்பாரோ அவரை அல்லாஹ் வெறுக்கிறான்.

அறிவிப்பாளர் : அல் பரா, நூல் : புகாரி, எண் : 3499

*4. நபி ﷺ அவர்கள் தங்கள் மரணத்திற்கு ஒரு சில நாட்களுக்கு முன்னர் மிம்பரில் ஏறி, அல்லாஹ்வை புகழ்ந்து துதித்துவிட்டு கூறினார்கள் :*

أُوصِيكُمْ بِالْأَنْصَارِ فَإِنَّهُمْ كَرِشِي وَعَيْبَتِي وَقَدْ قَضَوْا الَّذِي عَلَيْهِمْ وَبَقِيَ الَّذِي لَهُمْ فَاقْبَلُوا مِنْ مُحْسِنِهِمْ وَتَجَاوَزُوا عَنْ مُسِيئِهِمْ

*அன்சாரிகள் விஷயத்தில் நான் உங்களை உபதேசிக்கிறேன். நிச்சயமாக அவர்கள் எனது இரகசிய நண்பர்களும் என் நம்பிக்கைக்குரியவர்களும் ஆவார்கள். அவர்கள் மீதுள்ள கடமையை அவர்கள் நிறைவேற்றி விட்டார்கள். அவர்களுக்குள்ள உரிமைகள் மீதமுள்ளன. ஆகவே, அவர்களில் நல்லவரிடமிருந்து (அவர் செய்வதை) ஏற்றுக் கொள்ளுங்கள்! அவர்களில் தப்பு செய்பவர்களை தண்டிக்காமல் மன்னித்துவிடுங்கள்!*

*அறிவிப்பாளர் : அனஸ், நூல் : புகாரி, எண் : 3515*

*இன்னும் அதிகமான விளக்கங்களை ஹதீஸ் நூல்களில் கிதாபுல் மனாகிப் என்ற பகுதியில் காணலாம்.*

--------------------

# பாடம் 65

# வழிகேடுகள் எப்படி தோன்றின, நேர்வழியின் அஸ்திவாரம் எது என்பது பற்றி விளக்கம்!

وَاعْلَمْ رَحِمَكَ اللهُ أَنَّ أَهْلَ الْعِلْمِ لَمْ يَزَالُوا يَرُدُّونَ قَوْلَ الْـجَهْمِيَّةِ حَتّٰى كَانَ فِي خِلَافَةِ بَنِي فُلَانٍ تَكَلَّمَ الرُّوَيْبِضَةُ فِي أَمْرِ الْعَامَّةِ وَطَعَنُوا عَلَىٰ آثَارِ رَسُولِ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ وَأَخَذُوا بِالْقِيَاسِ وَالرَّأْيِ وَكَفَّرُوا مَنْ خَالَفَهُمْ فَدَخَلَ فِي قَوْلِهِمْ الْـجَاهِلُ وَالْـمُغَفَّلُ وَالَّذِي لَا عِلْمَ لَهُ حَتّٰى كَفَرُوا مِنْ حَيْثُ لَا يَعْلَمُونَ فَهَلَكَتْ الْأُمَّةُ مِنْ وُجُوهٍ وَكَفَرَتْ مِنْ وُجُوهٍ وَتَزَنْدَقَتْ مِنْ وُجُوهٍ وَضَلَّتْ مِنْ وُجُوهٍ وَتَفَرَّقَتْ وَابْتَدَعَتْ مِنْ وُجُوهٍ

97. அறிந்துகொள்! அல்லாஹ் உனக்கு கருணை காட்டுவானாக! கல்வி ஞானமுள்ளவர்கள் எப்போதும் ஜஹ்மிய்யா உடைய கூற்றுகளை மறுத்தே வந்துள்ளனர். இறுதியாக, இன்ன குடும்பத்தை சேர்ந்தவர்களில் ஆட்சி வந்தது. பொதுமக்களின் காரியங்களில் அற்பர்கள் பேச ஆரம்பித்தனர். ரஸூலுல்லாஹ் ﷺ உடைய ஹதீஸ்களில் குறை கூறினர். கியாசையும் சுய அறிவையும் உறுதியாக பற்றிக்கொண்டனர். தங்களுக்கு எதிராக கருத்து கூறுபவர்களை காஃபிர் என்று கூறினர். ஆகவே, அறியாதவர், விளக்கமற்றவர், கல்வி ஞானமில்லாதவர் இவர்களின் கூற்றுகளை நம்பினர். இறுதியாக, இவர்கள் அறியாமலேயே நிராகரிப்பில் சென்றுவிட்டனர்.

பல வழிகளில் இந்த உம்மத்தினர் அழிந்து நாசமாகிப் போனார்கள். இன்னும் பல வழிகளில் நிராகரிப்பில் சென்றனர். இன்னும் பல வழிகளில் நாத்திகர்களாக மாறிவிட்டனர். பல காரணங்களால் இவர்கள் வழிகேட்டில் சென்றுவிட்டனர்; இன்னும் பல காரணங்களால் இவர்கள் பல பிரிவுகளாக பிரிந்தனர், அனாச்சாரங்களை செய்தனர்.

إِلَّا مَنْ ثَبَتَ عَلَىٰ قَوْلِ رَسُولِ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ وَأَمْرِهِ وَأَمْرِ أَصْحَابِهِ وَلم يُخَطِّئْ أَحَدًا مِنْهُمْ وَلَمْ يُجَاوِزْ أَمْرَهُمْ وَوَسِعَهُ مَا وَسِعَهُمْ وَلَمْ يَرْغَبْ عَنْ طَرِيقَتِهِمْ وَمَذْهَبِهِمْ وَعَلِمَ أَنَّهُمْ كَانُوا عَلَى الْإِسْلَامِ الصَّحِيحِ وَالْإِيمَانِ الصَّحِيحِ فَقَلَّدَهُمْ دِينَهُ وَاسْتَرَاحَ وَعَلِمَ أَنَّ الدِّينَ إِنَّمَا هُوَ بالتَّقْلِيدِ وَالتَّقْلِيدُ لِأَصْحَابِ مُحَمَّدٍ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ

எனினும், ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களுடைய கூற்றின் மீதும் அவர்களின் கட்டளையின் மீதும் அவர்களின் தோழர்களின் கட்டளையின் மீதும் உறுதியாக இருந்தவர்களைத் தவிர. (இவர்கள்தான் நேர்வழியின் மீது இருந்தனர்.) இத்தகையவர்கள் நபித்தோழர்களில் யார் ஒருவரையும் தீயவர் என்றோ வழி தவறியவர் என்றோ கூறமாட்டார்கள். நபித்தோழர்களின் கட்டளையை அவர்கள் மீறமாட்டார்கள். அவர்களுக்கு எது விசாலமாக இருந்ததோ இவர்களுக்கும் விசாலமாக இருக்கும்.[15] நபித்தோழர்களின் வழிமுறையையும் அவர்கள் சென்ற பாதையையும் இவர்கள் வெறுக்க மாட்டார்கள். இன்னும் நிச்சயமாக நபித்தோழர்கள் சரியான இஸ்லாமிய மார்க்கத்திலும் சரியான ஈமானிலும் இருந்தார்கள் என்று இவர்கள் அறிந்துகொள்வார்கள். ஆகவே, தமது மார்க்கத்தில் நபித்தோழர்களை தக்லீது செய்து, பின்பற்றி நிம்மதியாக இருப்பார்கள்.

---

15. அந்த தோழர்கள் எது குறித்து பேசவில்லையோ அது குறித்து இவர்களும் வாய்மூடி மௌனமாக இருப்பார்கள். சுயகருத்தை தெரிவிக்க மாட்டார்கள்.

இன்னும் இவர்கள் அறிந்துகொள்வார்கள்: மார்க்கம் என்பது கேள்வி கேட்காமல் பின்பற்றுவதுதான். முஹம்மது அவர்களின் தோழர்களைத்தான் தக்லீது செய்யவேண்டும்.[16]

وَاعْلَمْ أَنَّ مَنْ قَالَ لَفْظِي بِالْقُرْآنِ مَخْلُوقٌ فَهُوَ مُبْتَدِعٌ وَمَنْ سَكَتَ فَلَمْ يَقُلْ مَخْلُوقٌ وَلَا غَيْرُ مَخْلُوقٍ فَهُوَ جَهْمِيٌّ هٰكَذَا قَالَ أَحْمَدُ بْنُ حَنْبَلٍ وَقَالَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ إِنَّهُ مَنْ يَعِشْ مِنْكُمْ بَعْدِي فَسَيَرَىٰ اخْتِلَافًا كَثِيرًا فَإِيَّاكُمْ وَمُحْدَثَاتِ الْأُمُورِ فَإِنَّهَا ضَلَالَةٌ وَعَلَيْكُمْ بِسُنَّتِي وَسُنَّةِ الْـخُلَفَاءِ الرَّاشِدِينَ الْـمَهْدِيِّينَ وَعَضُّوا عَلَيْهَا بِالنَّوَاجِذِ

98. அறிந்துகொள்! குர்ஆனை நான் உச்சரிப்பது (-நான் ஓதக்கூடிய குர்ஆன்) படைக்கப்பட்டது என்று யார் கூறுவாரோ அவர் பித்அத்வாதி ஆவார். குர்ஆன் படைக்கப்பட்டது என்றும் கூறாமல் அல்லது குர்ஆன் படைக்கப்படாதது என்றும் கூறாமல் மௌனமாக இருந்தாரோ அவர் ஜஹ்மி ஆவார். இவ்வாறுதான் இமாம் அஹ்மது இப்னு ஹன்பல் ﵀ தீர்ப்புக் கூறி இருக்கின்றார்கள். ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள்: "நிச்சயமாக உங்களில் யார் எனக்கு பின் வாழ்வாரோ அவர் அநேக கருத்து வேற்றுமைகளை காண்பார். புதிதாக உருவாக்கப்பட்ட காரியங்களை விட்டு நான் உங்களை எச்சரிக்கின்றேன். நிச்சயமாக அவை வழிகேடுகளாகும். எனது சுன்னத்தையும் நல்லறிவுள்ள நேர்வழி பெற்ற கலீஃபாக்களின் சுன்னத்தையும் நீங்கள் பற்றிப் பிடியுங்கள்! கடவாய் பற்களால்

16. மார்க்க விஷயங்களில் நபித்தோழர்கள் எதைக் கூறினார்களோ அதை அப்படியே நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். நம்முடைய அறிவை முன்னிருத்தி அதை மறுக்கக்கூடாது. நபித்தோழர்களின் விளக்கங்களை புறக்கணித்து நம்முடைய கருத்துகளுக்கு முன்னுரிமை கொடுக்கக்கூடாது.

அவற்றை உறுதியாக கவ்விப் பிடியுங்கள்!”[17]

وَاعْلَمْ أَنَّهُ إِنَّمَا جَاءَ هَلَاكُ الْـجَهْمِيَّةِ أَنَّهُمْ فَكَّرُوا فِي الرَّبِّ عَزَّ وَجَلَّ فَأَدْخَلُوا لِمَ وَكَيْفَ وَتَرَكُوا الْأَثَرَ وَوَضَعُوا الْقِيَاسَ وَقَاسُوا الدِّينَ عَلَىٰ رَأْيِهِمْ فَجَاءُوا بِالْكُفْرِ عِيَانًا لَا يَـخْفَىٰ أَنَّهُ كُفْرٌ وَكَفَّرُوا الْـخَلْقَ وَاضْطَرَّهُمُ الْأَمْرُ حَتَّىٰ قَالُوا بِالتَّعْطِيلِ

99. அறிந்துகொள்! நிச்சயமாக ஜஹ்மிய்யா உடைய அழிவு ஏற்பட்டதெல்லாம் அவர்கள் கண்ணியத்திற்கும் கம்பீரத்திற்கும் உரிய ரப்பு உடைய விஷயத்தில் சிந்திக்க ஆரம்பித்தார்கள். ஏன்? எப்படி? என்ற கேள்விகளை (மார்க்க ஆதாரங்களில்) உள்ளே நுழைத்தனர்! ஹதீஸ்களை விட்டுவிட்டனர். கியாசை (மார்க்கத்தில்) அமைத்தனர்.[18] மார்க்கத்தை தங்கள் அறிவின் மீது கியாஸ் செய்தனர். (அறிவை வைத்து மார்க்கத்தை முடிவு செய்தனர்.) ஆகவே, (மார்க்கத்தில்) வெளிப்படையாக குஃப்ரை -நிராகரிப்பை கொண்டு வந்தனர். நிச்சயமாக அவர்கள் கூறியது குஃப்ர்தான் என்பது எவருக்கும் மறைவான ஒன்றல்ல. ஆனால், அவர்களோ (சத்தியத்தை ஏற்ற) மக்களை காஃபிர்கள் என்று கூறினர். அவர்களின் இந்த காரியம்[19] அவர்களை நிர்ப்பந்தப்படுத்தி (அல்லாஹ்வின் தன்மைகளை) பொருளற்றதாக கூறும் அளவிற்கு ஆக்கிவிட்டது.

وَقَالَ بَعْضُ الْعُلَمَاءِ مِنْهُمْ أَحْمَدُ بْنُ حَنْبَلٍ رَضِيَ اللهُ عَنْهُ الْـجَهْمِيُّ

---

17. அறிவிப்பாளர் : இர்பாழ் இப்னு ஸாரியா ﵁, நூல் : திர்மிதி, எண் : 2676,

18. சுய சிந்தனையின்படி அமைத்துக் கொண்ட ஆய்வுகளை மார்க்கத்தில் ஆதாரமாக ஏற்படுத்திக் கொண்டார்கள்.

19. தங்களின் அறிவையும் தத்துவத்தையும் அவர்கள் எந்தளவு நம்பினார்கள் என்றால் அல்லாஹ்வுடைய தன்மைகள் இன்னும் பண்புகள் குறித்து கூறப்பட்ட மார்க்க ஆதாரங்களை பொருளற்றதாக ஆக்கிவிட்டார்கள். அதாவது அவற்றுக்கு பொருள் கூறுவது கூடாது என்றும் அல்லாஹ் தன்மைகள் அற்றவன் என்றும் கூறினர்.

كَافِرٌ لَيْسَ مِنْ أَهْلِ الْقِبْلَةِ حَلَالُ الدَّمِ لَا يَرِثُ وَلَا يُورَثُ لِأَنَّهُ قَالَ لَا جُمُعَةَ وَلَا جَمَاعَةَ وَلَا عِيدَيْنِ وَلَا صَدَقَةَ وَقَالُوا مَنْ لَمْ يَقُلْ الْقُرْآنَ مَخْلُوقًا فَهُوَ كَافِرٌ وَاسْتَحَلُّوا السَّيْفَ عَلَىٰ أُمَّةِ مُحَمَّدٍ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ وَخَالَفُوا مَنْ كَانَ قَبْلَهُمْ وَامْتَحَنُوا النَّاسَ بِشَيْءٍ لَمْ يَتَكَلَّمْ فِيهِ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ وَلَا أَحَدٌ مِنْ أَصْحَابِهِ وَأَرَادُوا تَعْطِيلَ الْمَسَاجِدِ وَالْجَوَامِعَ وَأَوْهَنُوا الْإِسْلَامَ وَعَطَّلُوا الْجِهَادَ وَعَمِلُوا فِي الْفُرْقَةِ وَخَالَفُوا الْآثَارَ وَتَكَلَّمُوا بِالْمَنْسُوخِ وَاحْتَجُّوا بِالْمُتَشَابِهِ فَشَكَّكُوا النَّاسَ فِي آرَائِهِمْ وَأَدْيَانِهِمْ وَاخْتَصَمُوا فِي رَبِّهِمْ

100. அஹ்மது இப்னு ஹன்பல் ﵀ உட்பட சில அறிஞர்கள் கூறுகின்றனர்: ஜஹ்மி(ய்யா கொள்கையை பின்பற்றுபவர்) காஃபிர் -இறை நிராகரிப்பாளர் ஆவார். அவர் அஹ்லுல் கிப்லா -கிப்லாவை பின்பற்றுபவர்களில் சேரமாட்டார். அவரின் இரத்தம் ஹலால்[20] ஆகும். முஸ்லிம்களில் எவருக்கும் அவர் வாரிசாக மாட்டார். அவரின் சொத்துக்கும் யாரும் வாரிசாக மாட்டார்கள். (அவரின் சொத்து இஸ்லாமிய அரசாங்கத்திற்கு உரியதாகும்.) ஏனெனில், ஜஹ்மியாக்கள் கூறுவதாவது: ஜுமுஆ தொழுகை இல்லை, ஜமாஅத்தாக தொழவேண்டிய அவசியமில்லை, இரு பெருநாள் தொழுகை இல்லை, தர்மம் செய்ய வேண்டியதில்லை, குர்ஆன் படைக்கப்பட்டது என்று கூறாதவர் காஃபிர் ஆவார். இன்னும் முஹம்மது ﷺ அவர்களுடைய உம்மத்திடம் யுத்தம் செய்வதை அவர்கள் ஆகுமாகக் கருதுகின்றனர். அவர்களுக்கு முன்னர்

20. போரில் அவரைக் கொல்வது ஆகுமானதாகும். அல்லது அவர் தனது கருத்தை மக்களுக்கு மத்தியில் பரப்பி அதன் பக்கம் மக்களை அழைத்தால் மன்னர் அவரை தண்டனையின் அடிப்படையில் கொல்வது ஆகுமாகும்.

வாழ்ந்தவர்களுக்கு -நபித்தோழர்களுக்கு மாற்றமாக நடக்கின்றனர். ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களும் அவர்களின் தோழர்களில் எவரும் பேசாத ஒரு விஷயத்தை கூறி அதை மக்கள் ஏற்க வேண்டும் என்று மக்களை இம்சிக்கின்றனர். ஐங்கால தொழுகை நடக்கும் மஸ்ஜிதுகளையும் ஜுமுஆ மஸ்ஜிதுகளையும் வீணாக்குவதற்கு விரும்புகின்றனர்.[21] இஸ்லாமை பலவீனப்படுத்தி விட்டனர். ஜிஹாதை வீணாக்கி விட்டனர். பிரிவினைக்கு வேலை செய்தனர். ஹதீஸ்களுக்கு மாற்றம் செய்தனர். மாற்றப்பட்ட வசனங்களையும் மாற்றப்பட்ட நபிமொழிகளையும் மக்களுக்கு மத்தியில் பரப்பினர்.[22] முதஷாபிஹ் வசனங்களைக் கொண்டு ஆதாரம் தேடினர். ஆகவே, மக்களை அவர்களுடைய சிந்தனைகளிலும் மார்க்கத்திலும் குழைப்பமடையச் செய்தனர். தங்கள் ரப்புடைய விஷயத்தில் விவாதித்தனர்.

وَقَالُوا لَيْسَ عَذَابُ قَبْرٍ وَلَا حَوْضٌ وَلَا شَفَاعَةٌ وَالْـجَنَّةُ وَالنَّارُ لَمْ تُـخْلَقَا وَأَنْكَرُوا كَثِيرًا مِمَّا قَالَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ فَاسْتَحَلَّ مَنْ اسْتَحَلَّ تَكْفِيرَهُمْ وَدِمَائَهُمْ مِنْ هٰذَا الْوَجْهِ لِأَنَّهُ مَنْ رَدَّ آيَةً مِنْ كِتَابِ اللهِ فَقَدْ رَدَّ الْكِتَابَ كُلَّهُ وَمَنْ رَدَّ أَثَرًا عَنْ رَسُولِ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ فَقَدْ رَدَّ الْأَثَرَ كُلَّهُ وَهُوَ كَافِرٌ بِاللهِ الْعَظِيمِ فَدَامَتْ لَهُمُ الْـمُدَّةُ وَوَجَدُوا مِنْ السُّلْطَانِ مَعُونَةً عَلَىٰ ذٰلِكَ وَوَضَعُوا السَّيْفَ وَالسَّوْطَ دُونَ ذٰلِكَ

21. ஜமாஅத்தாக தொழுவது அவசியமில்லை என்று கூறி மஸ்ஜித்களை வெறுமையாக்கி விட்டார்கள்.

22. منسوخ மன்சூக் அதாவது ஆரம்ப காலத்தில் அமலில் இருந்து பிறகு மாற்றப்பட்ட சட்டத்திற்கு மன்சூக் என்று கூறப்படும். புதிதாக வந்த சட்டத்திற்கு ناسخ நாஸிக் என்று கூறப்படும்.

அவர்கள் கூறுகின்றனர்: கப்ருடைய வேதனை இல்லை. நீர் தடாகம் இல்லை, சிபாரிசு இல்லை, சொர்க்கம் நரகம் படைக்கப்படவில்லை, ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறியவற்றில் அதிகமானதை மறுத்தனர். ஆகவே, இதன் காரணமாகத்தான் அவர்களை காஃபிர் என்று கூறுவதும் அவர்களை கொல்வதும் கூடும் என்றும் சிலர் கூறினர். ஏனெனில், யார் அல்லாஹ்வின் வேதத்திலிருந்து ஒரு வசனத்தை ஏற்காமல் மறுத்தாரோ அவர் வேதம் அனைத்தையும் மறுத்துவிட்டார். யார் ரஸூலுல்லாஹ் ﷺ உடைய ஹதீஸ்களில் ஒன்றை மறுப்பாரோ அவர் ஹதீஸ்கள் அனைத்தையும் மறுத்துவிட்டார். ஆகவே அவர் மகத்தான அல்லாஹ்வை நிராகரித்த காஃபிர் ஆவார். சில காலம் அவர்களுக்கு சாதகமாக இருந்தது. அரசரிடமிருந்து தங்கள் கொள்கைக்கு ஆதரவையும், உதவியையும் அடைந்தனர். இதற்கு ஆதரவாக வாளையும் சாட்டையையும் பயன்படுத்தினர்.

**فَدَرَسَ عِلْمُ السُّنَّةِ وَالْـجَمَاعَةِ وَأَوْهَنُوهُمَا وَصَارَتَا مَكْتُومَيْنِ لِإِظْهَارِ الْبِدَعِ وَالْكَلَامِ فِيهَا وَلِكَثْرَتِهِمْ وَاتَّـخَذُوا الْـمَجَالِسَ وَأَظْهَرُوا رَأْيَهُمْ وَوَضَعُوا فِيهِ الْكُتُبَ وَأَطْمَعُوا النَّاسَ وَطَلَبُوا لَهُمْ الرِّئَاسَةَ فَكَانَت فِتْنَةٌ عَظِيمَةٌ لَمْ يَنْجُ مِنْهَا إِلَّا مَنْ عَصَمَ اللّٰهُ**

ஸுன்னாவின் கல்வியும் நபித்தோழர்களின் கல்வியும் மங்கிவிட்டன. இந்த இரண்டு கல்விகளையும் அவர்கள் பலவீனப்படுத்தினர். அனாச்சாரங்களும் அவற்றில் பேசுவதும் பகிரங்கமாக ஆகிவிட்ட காரணத்தாலும் இவர்களின் கொள்கைவாதிகள் அதிகமாக ஆகிவிட்ட காரணத்தாலும் இந்த இரு கல்விகளும் மறைக்கப்பட்டவையாக ஆகிவிட்டன. தங்களுக்கு என்று சபைகளை ஏற்படுத்திக்கொண்டனர். தங்கள் கருத்துகளை (மக்கள் மத்தியில்) பகிரங்கப்படுத்தினர். இதற்காக புத்தகங்களை தொகுத்தனர். (தங்களது கொள்கையை ஏற்றுக் கொண்டால் பதவியும் பணமும் கிடைக்கும் என்று)

மக்களுக்கு நப்பாசைகளை ஊட்டினர். தங்களுக்கு பதவிகளையும் தலைமைத்துவத்தையும் விரும்பினர். ஆகவே, மிகப் பெரிய குழப்பம் ஏற்பட்டது. அல்லாஹ் பாதுகாத்தவர்களைத் தவிர வேறு யாரும் இந்த குழப்பத்திலிருந்து தப்பிக்கவில்லை.

فَأَدْنَىٰ مَا كَانَ يُصِيبُ الرَّجُلَ مِنْ مُـجَالَسَتِهِمْ أَنْ يَشُكَّ فِي دِينِهِ أَوْ يُتَابِعَهُمْ أَوْ يَرَىٰ رَأْيَهُمْ عَلَى الْـحَقِّ وَلَا يَدْرِي أَنَّهُ عَلَى الْـحَقِّ أَوْ عَلَى الْبَاطِلِ فَصَارَ شَاكًّا فَهَلَكَ الْـخَلْقُ

அவர்களிடம் அமர்வது, பேசுவதால் அந்த மனிதருக்கு ஏற்படக்கூடிய குழப்பத்தில் மிகக் குறைந்தது என்னவென்றால் தமது தீனில் அவர் சந்தேகப்படுகிறார். அல்லது அவர்களை பின்பற்ற ஆரம்பித்து விடுகின்றார். அல்லது அவர்களின் கருத்து, சத்தியத்தின் மீது இருக்கிறது என்று எண்ணுகின்றார். அல்லது தாம் சத்தியத்தில் இருக்கின்றோமா அல்லது தவறில் இருக்கின்றோமா என்று தெரியாமல் ஆகிவிடுகின்றார். எனவே, மார்க்கத்தில் சந்தேகிப்பவராக ஆகிவிடுகின்றார். இப்படியாக (இவர்களது குழப்பத்தில் சிக்கி) மக்கள் அழிந்தனர்.

حَتَّىٰ كَانَتْ أَيَّامُ جَعْفَرَ الَّذِي يُقَالُ لَهُ الْـمُتَوَكِّل فَأَطْفَأَ اللهُ بِهِ الْبِدَعَ وَأَظْهَرَ بِهِ الْـحَقَّ وَأَظْهَرَ بِهِ أَهْلَ السُّنَّةِ وَطَالَتْ أَلْسِنَتُهُمْ مَعَ قِلَّتِهِمْ وَكَثْرَةِ أَهْلِ الْبِدَعِ إِلَىٰ يَوْمِنَا هٰذَا وَالرَّسْمُ وَأَعْلَامُ الضَّلَالَةِ قَدْ بَقِيَ مِنْهُمْ قَوْمٌ يَعْمَلُونَ بِهَا وَيدْعُونَ إِلَيْهَا لَا مَانِعَ يَمْنَعُهُمْ وَلَا أَحَدٌ يَـحْجُزُهُمْ عَمَّا يَقُولُونَ وَيَعْمَلُونَ

இறுதியாக, அல்முதவக்கில் என்று கூறப்பட்ட மன்னர் ஜஃபர் உடைய ஆட்சிக் காலம் வந்தது. அவர் மூலமாக அல்லாஹ் பித்அத்துகளை அணைத்தான். அவர் மூலம் சத்தியத்தை பகிரங்கப்படுத்தினான். அவர் மூலம் அஹ்லுஸ் ஸுன்னாவை வெளிப்படுத்தினான். இன்றுவரை அஹ்லுஸ் ஸுன்னா குறைவாக இருந்தும், பித்அத்து செய்பவர்கள் அதிகமாக இருந்தும் அஹ்லுஸ் ஸுன்னா உடைய பிரச்சாரங்கள் வேகமாகவே இருக்கின்றன. (அந்த வழிகேட்டின்) மீதங்களும் வழிகேடர்களின் தலைவர்களில் சிலரும் மீதம் இருந்தனர். அவர்கள் அந்த பித்அத்களைத்தான் செயல்படுத்தினர். அதன் பக்கம் மக்களை அழைத்தனர். அவர்களை தடுப்பதற்கு யாரும் இருக்கவில்லை. அவர்கள் (பித்அத்துகளை) சொல்வதிலிருந்தும் செய்வதிலிருந்தும் அவர்களை தடுத்து நிறுத்துபவர் யாரும் இருக்கவில்லை.

## படிப்பினைகள்

*1. இந்த பாடம் மிகவும் நீண்டதாகும். இதில் ஆசிரியர் பல செய்திகளை நமக்கு விளக்குகிறார்கள். அவற்றை இங்கு சுருக்கமாக வரிசைப்படுத்துவோம்.*

*2. அறிஞர்களுக்கு வாய்ப்பும் ஆதரவும் இருந்த காலம் வரை அவர்கள் வழிகேடர்களாகிய ஜஹ்மிய்யாக்களுக்கு மறுப்பு தெரிவித்து வந்தனர்.*

*3. ஆட்சியாளர்களின் ஆதரவும் உதவியும் வழிகேடர்களுக்கு பிற்காலத்தில் கிடைத்ததால் அவர்கள் தங்கள் தவறான கொள்கையை மக்களுக்கு மத்தியில் இலகுவாக பரப்பினர்.*

*4. வழிகேடர்களின் முதல் வழிகேடு ஹதீஸை மறுப்பதும், ஹதீஸை விமர்சிப்பதும், ஹதீஸை குறை கூறுவதுமாக இருந்தது. பிறகு, தங்கள் கோணல் அறிவில் உதித்த தத்துவங்களையும் அனுமானங்களையும் அடிப்படையாக வைத்து மார்க்கத்தையும் அதன் கொள்கையையும் அவர்கள் வரையறுத்தனர்.*

5. தங்கள் கருத்துகளை ஏற்க மறுப்பவர்களை உடனடியாக குஃப்ர் - நிராகரிப்பின் பக்கம் சேர்ப்பது வழிகேடர்களின் தெளிவான அடையாளமாகும்.

6. வழிகேடுகள் சமுதாயத்தில் தோன்றுவதற்கு தெளிவான மார்க்க அடிப்படை கல்வி இல்லாமை மிக முக்கிய காரணமாகும்.

7. மார்க்கத்தில் புதுமையான அமல்களை செய்வது, புதுமையான கருத்துக்களை கூறுவது, முந்திய தலைமுறையினரிடம் அறியப்பட்ட கருத்துகளை மறுப்பது அல்லது அவற்றை திரித்து மாற்றம் செய்வது இவை அனைத்தும் ஆபத்தான வழிகேடுகளாகும்.

8. நபித்தோழர்களையும் அவர்களின் கருத்துகளையும் முழுமையாக சரிகண்டு அவற்றை ஏற்று நடப்பதுவே நம்மை ஃபித்னாவிலிருந்து பாதுகாக்கும்.

9. மார்க்க விஷயங்களில் நபித்தோழர்களை முன்னுதாரணமாகவும் முன்னோடிகளாகவும் எடுத்துக் கொள்ள வேண்டும்.

10. தக்லீதை ரஸூல் அவர்களுக்கும் நபித்தோழர்களுக்கும் தாபியீன்களுக்கும் நாம் கண்டிப்பாக செய்தாக வேண்டும். மார்க்க விஷயங்களில் அவர்களின் ஏகோபித்த கருத்திற்கு, அவர்களின் ஏகோபித்த நிலைப்பாட்டிற்கு மாற்றமாக நடப்பது மிகப் பெரிய வழிகேட்டில் கொண்டுபோய் சேர்த்துவிடும்.

11. மார்க்கத்தில் சரியான ஆதாரங்களை அவை எப்படி வந்துள்ளனவோ அப்படியே நம்புவதும் அவற்றை அப்படியே பின்பற்றுவதும் மட்டுமே நமது ஈடேற்றத்திற்கான பாதையாக அமையும்.

*12.* மார்க்கம் அல்லாஹ்விடமிருந்து வந்தது. அவன் மகா ஞானமும் அறிவும் உடையவன். நாம் அறியாததை அவன் அறிந்தவன். அவனிடம் உண்மையும் ஞானமும் நீதமும் அன்றி வேறில்லை. ஆகவே, நாம் அவனிடம் நமது குறைவான புத்தியை வைத்துக் கொண்டு அது ஏன், இது எப்படி என்று கேள்வி கேட்பது முற்றிலும் தவறும் ஷைத்தானிய சிந்தனையும் ஆகும்.

*13.* வழிகேடர்களின் மட்டமான அறிவுக்கு சான்று அவர்கள் ரப்பைப் பற்றி ரப்பு கூறியதை நம்பிக்கை கொள்ளாமல், ரப்புடைய தூதர் அவர்கள் கூறிய ஸஹீஹான செய்திகளை நம்பிக்கை கொள்ளாமல் கிரேக்கர்களின் தத்துவங்களையும் பாரசீக மஜூசிகளின் உளறல்களையும் இந்திய துறவிகளின் பிதற்றல்களையும் நம்பிக்கை கொள்வதும் அவற்றின் அடிப்படையில் அல்லாஹ்வை அறிய முற்படுவதும் ஆகும்.

*14.* அல்லாஹ்வை அறிய அல்லாஹ்வின் கூற்றை ஆதாராமாக ஆக்காமல் மேற்கூறப்பட்ட வழிகேடர்களின் கூற்றுகளை ஆதாரமாக ஆக்கிக் கொண்டார்கள். அல்லாஹ்வின் தன்மைகளையும் பண்புகளையும் இந்த வழிகேடர்கள் வகுத்த அடிப்படைகளுக்கு ஏற்ப மாற்றவும் திரிக்கவும் மறுக்கவும் செய்தனர். இணைவைப்போர் அல்லாஹ்வை கற்பனை செய்ததற்கும் இவர்கள் தங்களை முஸ்லிம்கள் என்று கூறிக்கொண்டு அல்லாஹ்வை கற்பனை செய்ததற்கும் ஒரு வித்தியாசமும் இல்லை.

அல்லாஹு தஆலா கூறுகிறான் :

﴿وَمِنَ النَّاسِ مَنْ يُّجَادِلُ فِى اللّٰهِ بِغَيْرِ عِلْمٍ
وَّيَـتَّبِعُ كُلَّ شَيْطٰنٍ مَّرِيْدٍ ۝﴾

*மனிதர்களில் பலர் ஏதும் அறியாமலிருந்துகொண்டே அல்லாஹ்வைப் பற்றித் தர்க்கித்து வரம்பு மீறும் ஷைத்தான்களையே பின்பற்றுகின்றனர். (அல்குர்ஆன் 22 :3)*

﴿وَمِنَ النَّاسِ مَنْ يُّجَادِلُ فِى اللّٰهِ بِغَيْرِ عِلْمٍ وَّلَا هُدًى وَلَا كِتٰبٍ مُّنِيْرٍ ۝﴾

*மனிதர்களில் பலர் (இருக்கின்றனர். அவர்கள்) யாதொரு கல்வியும், யாதொரு தர்க்கரீதியான ஆதாரமும், யாதொரு வேத நூலின் தெளிவான ஆதாரமும் இல்லாமலே அவர்கள் அல்லாஹ்வைப் பற்றித் தர்க்கம் செய்கின்றனர்.*

*(அல்குர்ஆன் 22 : 8)*

*15. ஷைத்தான்கள் இவ்வுலகில் இருக்கின்ற வரை வழிகேடர்களும் தங்கள் வழிகேடுகளை பரப்பிக்கொண்டு இருப்பார்கள். அவர்களை எதிர்கொள்வதற்கு அல்லாஹ் அறிஞர்களை உருவாக்குகிறான். சத்தியத்தை பரப்புவதும் அதன் பக்கம் மக்களை துணிந்து அழைப்பதும் அறிஞர்களின் கடமையாகும். இறுதி வெற்றி இஸ்லாமுக்கும் நேரான கொள்கைக்கும் கிடைக்கும். இதில் சந்தேகமில்லை.*

*16. வழிகேடர்களை விட்டு விலகி இருப்பதும் அவர்களின் கூற்றுகளுக்கு செவி சாய்க்காமல் இருப்பதும் மட்டுமே நாம் நமது மார்க்கத்தை பாதுகாத்துக் கொள்வதற்கான பாதுகாப்பான வழியாகும்.*

*17. வழிகேடர்களுடன் பழகும்போது உள்ளத்தில் இருக்கும் ஷைத்தானின் பங்கு அந்த வழிகேட்டை சீக்கிரம் உறிஞ்சி உள்ளத்தில் புகுத்தவும் அதில் தக்கவைக்கவும் முயற்சிக்கும்.*

*18. இதனை முன்னிட்டே நமது முன்னோர் வழிகேடர்களிடம் பழகுவது, பேசுவது, தர்க்கம் செய்வது, விவாதம் செய்வது என அனைத்தையும் வெறுத்தார்கள். இன்னும் கண்டித்தார்கள்.*

---------------------

# பாடம் 66

## வழிகேடுகளில் விழுபவர்கள் யார்?

وَاعْلَمْ أَنَّهُ لَمْ تَجِئْ بِدْعَةٌ قَطُّ إِلَّا مِنَ الْـهَمَجِ الرَّعَاعِ أَتْبَاعِ كُلِّ نَاعِقٍ يَمِيلُونَ مَعَ كُلِّ رِيحٍ فَمَنْ كَانَ هٰكَذَا فَلَا دِينَ لَهُ قَالَ اللهُ تَبَارَكَ وَتَعَالَىٰ: ﴿فَمَا اخْتَلَفُوا إِلَّا مِنْ بَعْدِ مَا جَاءَهُمْ الْعِلْمُ بَغْيًا بَيْنَهُمْ﴾وَقَالَ: ﴿وَمَا اخْتَلَفَ فِيهِ إِلَّا الَّذِينَ أُوتُوهُ مِنْ بَعْدِ مَا جَاءَتْهُمْ الْبَيِّنَاتُ بَغْيًا بَيْنَهُمْ﴾ وَهُمْ عُلَمَاءُ السُّوءِ أَصْحَابُ الطَّمْعِ وَالْبِدَعِ

101. அறிந்துகொள்! நிச்சயமாக, ஒழுங்கற்ற முட்டாள்களிடமிருந்தே தவிர எந்த ஒரு பித்ஆவும் வரவில்லை. அவர்கள் ஊளையிடுகின்ற ஒவ்வொருவரையும் பின்பற்றுகின்றவர்களாக இருந்தனர். அவர்கள் ஒவ்வொரு காற்றுடனும் (அது வீசுகின்ற பக்கம்) சாய்வார்கள். யார் இப்படி இருக்கின்றார்களோ அவர்களுக்கு அறவே மார்க்கம் என்பது எதுவும் இல்லை.

அருள் நிறைந்த, உயர்வுமிக்க அல்லாஹ் கூறுகின்றான்:

அவர்கள் கருத்துவேற்றுமை கொள்ளவில்லை, கல்வி அறிவு அவர்களிடம் வந்த பின்னரே தவிர. அதற்கு காரணம் அவர்களுக்கு மத்தியில் இருந்த பொறாமையே. (அல்குர்ஆன் 45 : 17)

இன்னும், அல்லாஹ் கூறுகின்றான்: அதில் (-வேதத்தில்) கருத்து வேறுபடவில்லை, அது கொடுக்கப்பட்டவர்களே தவிர. அவர்களுக்கு தெளிவான அத்தாட்சிகள் வந்த பின்னர் அவர்களுக்கு மத்தியில் ஏற்பட்ட பொறாமையின் காரணமாக அவர்கள் இவ்வாறு செய்தனர். (அல்குர்ஆன் 2 : 213)

இ(ந்த இரண்டு வசனங்களில் கூறப்பட்ட)வர்கள் கெட்ட அறிஞர்களும் உலக ஆசையும் அனாச்சாரமும் உடையவர்கள் ஆவார்கள்.

## படிப்பினைகள்

*1. இணைவைத்தல் இன்னும் இறை நிராகரிப்புக்கு பின்னர் அல்லாஹ்வின் மார்க்கத்தில் மிக ஆபத்தான ஒன்று பித்அத் ஆகும்.*

*2. கல்வி அறிவு இல்லாதவர்கள் அல்லது மார்க்க கல்வி அறிவு கிடைத்த பின்னர் அதில் தர்க்கம் செய்பவர்கள்தான் பெரும்பாலும் இந்த பித்அத்களில் விழுவார்கள்.*

*3. மார்க்கத்தில் புதுமைகளை யார் கூறினாலும் அவருக்கு பின்னால் செல்கிற கூட்டமும் இவர்களே!*

*4. இத்தகையவர்கள் பாமர மக்களிலும் இருப்பார்கள். கல்வியாளர்களின் போர்வையிலும் இருப்பார்கள்.*

*5. இவர்களின் நோக்கம் பொருளாசையும் பதவியாசையும் புகழாசையும் ஆகும்.*

*6. இவர்கள் மறுமையை விற்று உலகத்தை தேடுபவர்கள் ஆவார்கள்.*

---

# பாடம் 67

## அல்லாஹ்வின் நேர்வழிக்கு தகுதியானவர்கள் யார்?

وَاعْلَمْ أَنَّهُ لَا يَزَالُ النَّاسُ فِي عِصَابَةٍ مِنْ أَهْلِ الْـحَقِّ وَالسُّنَّةِ يَهْدِيهِمْ اللهُ وَيَهْدِي بِهِمْ غَيْرَهُمْ وَيُـحْيِي بِهِمْ السُّنَنَ فَهُمْ الَّذِينَ وَصَفَهُمْ اللهُ تَعَالَىٰ مَعَ قِلَّتِهِمْ عِنْدَ الْاِخْتِلَافِ فَقَالَ ﴿وَمَا اخْتَلَفَ فِيهِ إِلَّا الَّذِينَ أُوتُوهُ مِنْ بَعْدِ مَا جَاءَتْهُمْ الْبَيِّنَاتُ بَغْيًا بَيْنَهُمْ﴾ فَاسْتَثْنَاهُمْ فَقَالَ ﴿فَهَدَى اللهُ الَّذِينَ آمَنُوا لِمَا اخْتَلَفُوا فِيهِ مِنْ الْـحَقِّ بِإِذْنِهِ وَاللهُ يَهْدِي مَنْ يَشَاءُ إِلَىٰ صِرَاطٍ مُسْتَقِيمٍ﴾ وَقَالَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ لَا تَزَالُ عُصْبَةٌ مِنْ أُمَّتِي ظَاهِرِينَ عَلَى الْـحَقِّ لَا يَضُرُّهُمْ مَنْ خَذَلَهُمْ حَتَّى يَأْتِيَ أَمْرُ اللهِ وَهُمْ ظَاهِرُونَ

102. அறிந்துகொள்! எல்லாக் காலங்களிலும் அஹ்லுல் ஹக் -உண்மையாளர்கள், மற்றும் அஹ்லுஸ் ஸுன்னா உடைய ஒரு கூட்டத்துடன் மக்கள் இருந்து வருகிறார்கள். அந்த மக்களுக்கு அல்லாஹ் நல்வழி காட்டுகிறான். அவர்கள் மூலமாகவும் மற்றவர்களுக்கு நேர்வழி காட்டுகின்றான். அவர்கள் மூலமாக அல்லாஹ் நபியின் ஸுன்னாக்களை உயிர்ப்பிக்கின்றான். அவர்கள் குறைவாக இருந்தும் மக்கள் கருத்து வேற்றுமை செய்யும்போது அவர்களின் பண்பு எப்படி இருக்கும் என்பதை அல்லாஹ் வர்ணிக்கின்றான். அல்லாஹ் கூறுகின்றான்: “அதில் (-வேதத்தில்)

கருத்து வேறுபடவில்லை, அது கொடுக்கப்பட்டவர்களே தவிர. அவர்களுக்கு தெளிவான அத்தாட்சிகள் வந்த பின்னர் அவர்களுக்கு மத்தியில் ஏற்பட்ட பொறாமையின் காரணமாக அவர்கள் இவ்வாறு செய்தனர்."

பிறகு, அவர்களில் இருந்து அல்லாஹ் நல்லவர்களை விதிவிலக்கு செய்துவிடுகின்றான். அல்லாஹ் கூறுகின்றான்: அவர்கள் கருத்து வேற்றுமை செய்த சத்தியத்தின் பக்கம் அல்லாஹ் நம்பிக்கையாளர்களுக்கு நேர்வழி காட்டினான். அல்லாஹ் தான் நாடியவர்களுக்கு நேரான பாதையின் பக்கம் வழிகாட்டுகின்றான். (அல்குர்ஆன் 2:213)

ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள்: எனது உம்மத்தில் ஒரு கூட்டம் சத்திய கொள்கையில் ஓங்கியவர்களாக என்றும் இருப்பார்கள். அவர்களை கைவிட்டவர்கள் அவர்களுக்கு தீங்கு செய்துவிட முடியாது. இறுதியாக, அல்லாஹ்வுடைய கட்டளை (மறுமை நாள்) வரும்வரை அவர்கள் ஓங்கியவர்களாகவே (-உயர்ந்தவர்களாகவே) இருப்பார்கள்.[23]

## படிப்பினைகள்

*1. இஸ்லாம் அல்லாஹ்வின் மார்க்கமாகும். நேர்வழி அல்லாஹ்வின் நேர்வழியாகும். ஆகவே, அல்லாஹ் அதை பாதுகாப்பதற்கும் பரப்புவதற்கும் தான் விரும்பியவர்களை தேர்ந்தெடுக்கிறான்.*

*2. அவர்கள் தாங்களும் நேர்வழி பெற்று, பிறருக்கும் நேர்வழிகாட்டுகிறார்கள்.*

*3. பிற மதங்களில் இருந்து விடுபட்டு அல்லாஹ்வையும் நபி ﷺ அவர்களையும் நம்பிக்கை கொள்ளும்போது ஒருவர்*

23. அறிவிப்பாளர் : சவ்பான் ؓ நூல் : முஸ்லிம், எண் : 1920

இஸ்லாம் என்னும் நேர்வழியை பெறுகிறார். அவ்வாறே, நபி ﷺ அவர்களுக்கு முழுமையான பின்பற்றுதலை அவர் செய்யும்போது, மார்க்க ஆதாரங்களில் முரண்பாடு செய்யாமல் இருக்கும்போது அவர் நேர்வழியில் நீடித்தும் உறுதியாகவும் இருக்கிறார்.

*4.* சத்தியத்தை யார் கைவிட்டாலும் அதை பாதுகாக்கிற உண்மையான அடியார்கள் கண்டிப்பாக இருப்பார்கள். அவர்கள் அல்லாஹ்வின் பொருத்தத்தையும் மறுமை வெற்றியையும் தவிர எதையும் பொருட்படுத்த மாட்டார்கள்.

*5.* அவர்கள் தங்கள் உயிரைக் கொண்டும் செல்வத்தைக் கொண்டும் அல்லாஹ்வின் மார்க்கத்தை பாதுகாக்க போராடிக் கொண்டே இருப்பார்கள்.

*6.* இஸ்லாமை ஓங்க செய்வதற்காக ஜிஹாது செய்வது எந்தளவு சிறப்பு வாய்ந்த ஒரு அமலோ அவ்வாறே நேர்வழியை ஓங்க செய்வதற்காக முயற்சிப்பதும் மிக சிறந்த அமலாகும்.

*7.* உண்மையான இஸ்லாம் என்பது குழப்பங்களும் அனாச்சாரங்களும் சடங்குகளும் வழிகேடுகளும் நீங்கியதாகும்.

*8.* பித்அத் வாதிகளால் இஸ்லாமுக்கும் முஸ்லிம்களுக்கும் ஒருபோதும் நன்மை ஏற்பட்டது இல்லை.

*9.* பித்அத் வாதிகள் இந்த உம்மத்திற்கு பெரும் சோதனையாவார்கள். அவர்களால் முஸ்லிம்கள் தீன், துன்யா இரண்டிலும் காலம் காலமாக துன்பங்களையும் இடையூறுகளையும் சிரமங்களையும் நஷ்டங்களையும் மட்டுமே அனுபவித்து வருகிறார்கள்.

*10.* அவர்களால் இஸ்லாமும் பரவாது. முஸ்லிம்களும் தங்கள்

*மார்க்கத்தில் நிம்மதியாக இருக்க முடியாது. நாளொரு மேனி, பொழுதொரு வண்ணமாக புதுப் புது குழப்பங்களையும் சடங்குகளையும் அனாச்சாரங்களையும் மக்களுக்கு மத்தியில் பரப்பிக்கொண்டு இருப்பார்கள். மக்களின் மார்க்கத்தையும் உலக செல்வத்தையும் சூறையாடுவார்கள்.*

***11.** பித்அத் வாதிகளால் முஸ்லிம்களுக்கு தீன், துன்யா இரண்டிலும் நஷ்டத்தை தவிர வேறொன்றுமில்லை.*

---------------------

# பாடம் 68

## ஆலிம்கள் யார்?

وَاعْلَمْ رَحِمَكَ اللهُ أَنَّ الْعِلْمَ لَيْسَ بِكَثْرَةِ الرِّوَايَةِ وَالْكُتُبِ إِنَّمَا الْعَالِمُ مَنْ اتَّبَعَ الْعِلْمَ وَالسُّنَنَ وَإِنْ كَانَ قَلِيلَ الْعِلْمِ وَالْكُتُبِ وَمَنْ خَالَفَ الْكِتَابَ وَالسُّنَّةَ فَهُوَ صَاحِبُ بِدْعَةٍ وَإِنْ كَانَ كَثِيرَ الْعِلْمِ وَالْكُتُبِ

103. அறிந்துகொள்! அல்லாஹ் உனக்கு கருணைப் புரிவானாக! அதிகமான அறிவிப்புகளையும் அதிகமான நூல்களையும் அறிந்து வைத்திருப்பது கல்வி அல்ல. அறிஞர் யாரென்றால், யார் கற்ற கல்வியையும் ஸுன்னாக்களையும் பின்பற்றி நடக்கின்றாரோ அவர்தான். அவர் கல்வி அறிவிலும் புத்தகங்களிலும் குறைவானவராக இருந்தாலும் சரியே. யார் குர்ஆனுக்கும் ஸுன்னாவிற்கும் மாற்றமாக நடக்கின்றாரோ அவர் பித்அத்வாதி ஆவார். அவர் அதிகமான கல்விக்கும் நூல்களுக்கும் சொந்தக்காரராக இருந்தாலும் சரி.

### படிப்பினைகள்

*1. உண்மையான மார்க்க அறிஞர்கள் அல்லாஹ்வை அஞ்சுவார்கள்.*

*2. உண்மையான இறையச்சம் நம்பிக்கைக்கும் கீழ்ப்படிதலுக்கும் வழிகாட்டும், மலக்குகளுக்கு வழிகாட்டியது போன்று.*

*3. ஆகவே, நேர்வழிபெற்ற உண்மையான அறிஞர்கள் தாங்கள் கற்றதை பின்பற்றி நடப்பார்கள்.*

*4. அவர்கள் வேதத்தையும் ஸுன்னாவையும் மட்டும்*

மக்களுக்கு போதித்து, தாங்களும் அவற்றுக்கு மாறுபடாமல், முரண்படாமல் நடப்பார்கள்.

5. உண்மையான அறிஞர்கள் மார்க்கத்தில் தங்கள் சுய கருத்துகளை புகுத்துவதை அஞ்சுவார்கள்.

6. சுன்னத்துகளை விட்டுவிட்டு, மனம்போன போக்கில் மார்க்கத்தை பின்பற்றும் அறிஞர்கள் உண்மையில் அறிஞர்களே இல்லை. அவர்களின் உடை அறிஞர்களின் உடையாக இருந்தாலும் சரி, அவர்களிடம் நூல்களும் ஏடுகளும் டன் கணக்கில் இருப்பினும் சரி.

7. ஒருவர் எவ்வளவு தெரிந்திருக்கிறார் என்பதை விட அவர் எவ்வளவு ஸுன்னாவை பின்பற்றி நடக்கிறார் என்பதுதான் முக்கியம்.

8. ஒருவரிடம் எத்தனை நூல்கள் இருக்கின்றன என்பதை விட அவர் அந்த நூல்களில் உள்ளவற்றை எந்தளவு எடுத்து நடக்கிறார் என்பதுதான் முக்கியம்.

9. ஒருவரின் பேச்சை விட அவரின் அமல்கள்தான் மார்க்கப்பற்றுக்கான உண்மையான அடையாளமாகும்.

10. ஒருவரின் ஆடை, அவரிடம் இருக்கும் அதிகமான நூல்கள், அவரின் கவர்ச்சியான, ஆக்ரோஷமான பேச்சுகள் இன்னும் இவைப் போன்றவை அவர் ஸுன்னாவை சேர்ந்தவர் என்பதற்கு அடையாளம் இல்லை. உண்மையான அமல்களும் நேர்மையான நடத்தைகளும்தான் அவரின் கல்வி இன்னும் அவர் ஸுன்னாவை சேர்ந்தவர் என்பதற்கான அடையாளமாகும்.

11. உண்மையான கல்விமான்கள் குறைவாக பேசி அதிகமாக அமல் செய்வார்கள்.

12. பித்அத் வாதிகள் அதிகம் பேசுவார்கள், குறைவாக அமல் செய்வார்கள்.

13. அவர்களின் அமல்களும் ஸுன்னாவின் அடிப்படையில் இருக்காது.

14. அவர்கள் அமல் செய்தாலும் மன ஓர்மையோடு, உள்ளச்சத்தோடு அமல் செய்ய மாட்டார்கள்.

15. பித்அத்வாதிகள் தாங்கள் உருவாக்கிய சடங்குகளுக்கும் சம்பிரதாயங்களுக்கும் கொடுக்கும் கண்ணியம், முக்கியத்தவத்தை ஸுன்னாவிற்கு கொடுக்க மாட்டார்கள்.

16. பித்அத்வாதிகள் தங்கள் அறிஞர்களின் பேச்சுக்கு கொடுக்கும் கண்ணியத்தை ஹதீஸுக்கு கொடுக்க மாட்டார்கள். தங்கள் அறிவில் உதித்த தத்துவங்களுக்கு தரும் மதிப்பையும் முக்கியத்துவத்தையும் வஹ்யின் கல்விக்கு கொடுக்க மாட்டார்கள். இதுவே அவர்களின் வழிகேட்டுக்கும் நாசத்திற்கும் போதும்.

---------------------

# பாடம் 69

## மார்க்க விஷயத்தில் கவனம் தேவை!

وَاعْلَمْ رَحِمَكَ اللهُ أَنَّ مَنْ قَالَ فِي دِينِ اللهِ بِرَأْيِهِ وَقِيَاسِهِ وَتَأْوِيلِهِ مِنْ غَيْرِ حُجَّةٍ مِنْ السُّنَّةِ وَالْـجَمَاعَةِ فَقَدْ قَالَ عَلَى اللهِ مَا لَا يَعْلَمُ وَمَنْ قَالَ عَلَى اللهِ مَا لَا يَعْلَمُ فَهُوَ مِنْ الْـمُتَكَلِّفِينَ

104. அறிந்துகொள்! அல்லாஹ் உனக்கு கருணைப் புரிவானாக! நிச்சயமாக யார் அல்லாஹ் உடைய மார்க்கத்தில் ஸுன்னா மற்றும் ஸஹாபாக்களிடமிருந்து வந்த ஆதாரம் இல்லாமல் தனது அறிவைக் கொண்டும் கியாஸ் என்ற அனுமானத்தைக் கொண்டும் தனது சுய விளக்கத்தைக் கொண்டும் பேசுவாரோ (-ஒரு கருத்தை கூறுவாரோ) அவர் அல்லாஹ்வின் மீது தான் அறியாத ஒன்றை கூறிவிட்டார். யார் தான் அறியாததை (-தனக்கு கல்வி ஞானம் இல்லாத ஒன்றை) அல்லாஹ்வின் மீது கூறுவாரோ அவர் வெளிப் பகட்டுக்காரர்களில் உள்ளவர் ஆவார்.

### படிப்பினைகள்

*1. மார்க்கம் அல்லாஹ்விடமிருந்து வேதத்தின் வாயிலாகவும் தூதரின் வாயிலாகவும் நமக்கு கொடுக்கப்பட்டுள்ளது.*

*2. மார்க்கம் மிகவும் நுணுக்கமானதும் கூர்மையானதும் ஆகும்.*

*3. ஆகவே, வேத அறிவின்றி, ஸுன்னாவின் ஆதாரமின்றி யார் மார்க்கத்தில் பேசினாலும் அவர் தானும் வழிகெட்டு மக்களையும் வழிகெடுப்பார்.*

4. யார் மார்க்கத்தில் ஆதாரமின்றி பேசுகிறாரோ அவர் அல்லாஹ்வின் மீது பொய்யுரைக்கிறார்.

5. இணைவைப்பது, இன்னும் அல்லாஹ்வின் மார்க்கத்தில் அல்லாஹ்வும் அவனது தூதரும் கூறாததை கூறுவது மிகப் பெரிய பாவமாகும்.

அல்லாஹு தஆலா கூறுகிறான் :

﴿قُلْ إِنَّمَا حَرَّمَ رَبِّيَ الْفَوَاحِشَ مَا ظَهَرَ مِنْهَا وَمَا بَطَنَ
وَالْإِثْمَ وَالْبَغْيَ بِغَيْرِ الْحَقِّ وَأَنْ تُشْرِكُوا بِاللَّهِ مَا لَمْ يُنَزِّلْ
بِهِ سُلْطَانًا وَأَنْ تَقُولُوا عَلَى اللَّهِ مَا لَا تَعْلَمُونَ﴾

(நபியே!) நீங்கள் கூறுங்கள் : நிச்சயமாக என்னுடைய இறைவன் (ஆகாது என்று) தடுத்திருப்பதெல்லாம் பகிரங்கமாகவோ, இரகசியமாகவோ செய்யப்படும் மானக்கேடான காரியங்களையும், மற்ற பாவங்களையும், நியாயமின்றி ஒருவர் மீது (ஒருவர்) கொடுமை செய்வதையும், யாதொரு ஆதாரமும் இல்லாதிருக்கும் போதே அல்லாஹ்வுக்கு நீங்கள் இணைவைப்பதையும், நீங்கள் அறியாதவற்றை அல்லாஹ்வின் மீது (பொய்யாகக்) கூறுவதையும்தான். (அல்குர்ஆன் 7 : 33)

6. மார்க்கத்தில் அல்லாஹ் விரும்பாததை செய்வதும் ஆதாரமின்றி ஒன்றை கூறுவதும் தகல்லுஃப் - வீண் சிரமம் எடுப்பதாகும்.

அல்லாஹு தஆலா கூறுகிறான் :

﴿قُلْ مَا أَسْأَلُكُمْ عَلَيْهِ مِنْ أَجْرٍ وَمَا أَنَا مِنَ الْمُتَكَلِّفِينَ
إِنْ هُوَ إِلَّا ذِكْرٌ لِلْعَالَمِينَ﴾

*ஆகவே, (நபியே!) நீங்கள் கூறுங்கள்: (மனிதர்களே! இதனை ஓதிக் காண்பிப்பதற்காக) நான் உங்களிடத்தில் யாதொரு கூலியையும் கேட்கவில்லை. அன்றி, (நீங்கள் சுமக்கக்கூடாத யாதொரு சுமையை) நான் உங்கள் மீது சுமத்தவும் இல்லை. இவ்வேதத்தை நான் கற்பனையாக கட்டிக் கொள்ளவும் இல்லை. உலகத்தார் அனைவருக்குமே இது ஒரு நல்லுபதேசமே யன்றி வேறில்லை. (அல்குர்ஆன் 38 : 86, 87)*

*வ மா அன மினல் முதகல்லிஃபீன் என்ற வசனத்திற்கு இப்னு சைத் கூறுவதாக இமாம் தபரி இவ்வாறு விளக்கம் அளிக்கிறார்கள் :*

**وَمَا أَنَا مِنَ الْـمُتَكَلِّفِينَ أَتَـخَرَّصُ وَأَتَكَلَّفُ مَا لَمْ يَأْمُرْنِي اللّٰهُ بِهِ**

*அல்லாஹ் எனக்கு எதை ஏவவில்லையோ, அவன் எனக்கு எதை கட்டளையிடவில்லையோ அதை நானாக கற்பனை செய்து சிரமம் எடுத்து உங்களுக்கு கூற மாட்டேன்.*

---------------------

# பாடம் 70

## உண்மையை அறிவது எப்படி?

وَالْـحَقُّ مَا جَاءَ مِنْ عِنْدِ اللهِ عَزَّ وَجَلَّ وَالسُّنَّةُ سُنَّةُ رَسُولِ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ وَالْـجَمَاعَةُ مَا اجْتَمَعَ عَلَيْهِ أَصْحَابُ رَسُولِ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ فِي خِلَافَةِ أَبِي بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانَ

105. கண்ணியமும் கம்பீரமும் மிக்க அல்லாஹ்விடமிருந்து வந்ததுதான் சத்தியமும், உண்மையும் ஆகும். ஸுன்னா என்பது ரஸுலுல்லாஹ் ﷺ அவர்களுடைய ஸுன்னா ஆகும். ஜமாஆ என்றால் அபூ பக்ர், உமர், மற்றும் உஸ்மான் رضي الله عنهم உடைய ஆட்சி காலத்தில் ரஸுலுல்லாஹ் ﷺ உடைய தோழர்கள் எது விஷயத்தில் ஒருமித்த கருத்துடையவர்களாக இருந்தார்களோ அதுவாகும்.

### படிப்பினைகள்

*1. முதலில் அல்லாஹ்வை ரப்பு என்று அறிய வேண்டும். அவனது தன்மைகளையும் பண்புகளையும் அறிய வேண்டும்.*

*2. யார் அல்லாஹ்வை முறையாக அறிந்துகொள்வாரோ அவர் சத்தியத்தையும் சரியாக அறிந்து கொள்வார்.*

*3. அல்லாஹ்வின் பேச்சை மீறி ஒரு சத்தியமும் உண்மையும் இருக்க முடியாது.*

*4. யார் அல்லாஹ்விடமிருந்து வந்த வஹ்யை விட்டு விட்டு தத்துவங்களின் வாயிலாக அல்லாஹ்வை அறிய முயற்சிப்பாரோ அவர் நிச்சயம் வழிகேட்டில் சென்று விடுவார், அல்லாஹ்வின்*

மார்க்கத்தை விட்டு வெளியேறி விடுவார்.

*5.* அல்லாஹ் நமக்கு நாம் அவனது வேதத்தை பின்பற்ற வேண்டும் என்று கட்டளையிட்டிருப்பது போல் அவனது நபியின் ஸுன்னாவை நாம் பின்பற்ற வேண்டும் என்றும் கட்டளையிட்டிருக்கிறான்.

*6.* ஸுன்னாவை பின்பற்றுகிறவர் கண்டிப்பாக ஸஹாபாக்களை பின்பற்றியாக வேண்டும்.

*7.* அந்த தோழர்கள்தான் நமக்கு அல்லாஹ்வின் வேதத்தையும் ஸுன்னாவையும் சொல்லாலும் செயலாலும் கற்றுக் கொடுத்தவர்கள் ஆவார்கள்.

*8.* இஸ்லாமிய மார்க்கத்தில் உஸ்மான் அவர்கள் கொல்லப்படுகிற வரை எவ்வித குழப்பங்களும் பிரிவுகளும் தோன்றவில்லை.

*9.* ஆகவே, நபி ﷺ அவர்களுக்கு பின்னர் அது வரை எதில் ஸஹாபாக்களுக்கு மத்தியில் இஜ்மா ஏற்பட்டுவிட்டதோ அதில் நாம் மாறுபாடு செய்யக் கூடாது.

*10.* அவர்களுக்கு பின்னால் வருபவர்கள் யாராக இருப்பினும் அந்த முன்னோர் இந்த மார்க்கத்தை எப்படி பின்பற்றினார்களோ அப்படித்தான் பின்பற்ற வேண்டும்.

*11.* ஒருவர் ஸஹாபாக்களை அளவுகோலாக எடுக்காமல் தான் குர்ஆனையும் ஸுன்னாவையும் பின்பற்றுவேன் என்று கூறினால் அவர் குர்ஆனுக்கும் ஸுன்னாவுக்கும் சுய விளக்கம் கொடுக்க போகிறார், இன்னும் மார்க்கத்தில் நூதன கருத்துக்களை புகுத்தப் போகிறார் என்று நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

---------------------

# பாடம் 71

# நபியவர்களின் ஸுன்னாவும் நபித்தோழர்களின் வழிமுறையும் நமக்கு மார்க்கத்தில் போதுமானதாகும்.

وَمَنْ اقْتَصَرَ عَلَىٰ سُنَّةِ رَسُولِ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ وَمَا كَانَ عَلَيْهِ أَصْحَابُه وَالْـجَمَاعَةُ فَلَجَ عَلَىٰ أَهْلِ الْبِدْعَةِ كُلِّهِمْ وَاسْتَرَاحَ بَدَنُهُ وَسَلِمَ لَهُ دِينُهُ إِنْ شَاءَ اللهُ لِأَنَّ رَسُولَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ سَتَفْتَرِقُ أُمَّتِي وَبَيَّنَ لَنَا رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ الْفِرْقَةَ النَّاجِيَةَ مِنْهَا فَقَالَ مَا كُنْتُ أَنَا عَلَيْهِ الْيَوْمَ وَأَصْحَابِي

106. யார் ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களுடைய ஸுன்னா, இன்னும் நபித் தோழர்கள், மற்றும் ஜமாஆ எதன் மீது இருக்கின்றார்களோ அதன் மீது மட்டும் (தனது நிலைப்பாட்டை) சுருக்கிக் கொள்வாரோ அவர் பித்அத்வாதிகள் எல்லோரையும் தனது ஆதாரத்தால் வென்றுவிட்டார். (பித்அத்வாதிகளுக்கு இவரை எதிர்ப்பது மிக கடினமான ஒன்றாக இருக்கும்); அவருடைய உடல் நிம்மதி பெறும் (பித்அத்துகளை விட்டு நீங்கிவிடுவதால் வீணான, அர்த்தமற்ற சடங்குகள், சம்பிரதாயங்கள் அனைத்தையும் விட்டு விலகி நிம்மதியாக இருப்பார்.); அவருடைய மார்க்கமும் பாதுகாப்பாக ஆகிவிடும் இன் ஷா அல்லாஹ். ஏனெனில், ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள்: "எனது உம்மத் பல பிரிவுகளாக பிரியும்".

மேலும் அந்த பிரிவுகளில் இருந்து, "அல்ஃபிர்கத்துன் நாஜியா" (வெற்றிபெற்ற பிரிவு) யார் என்பதையும் நமக்கு ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் தெளிவுப்படுத்தினார்கள். நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: "இன்று நானும் எனது தோழர்களும் எதன் மீது (-எந்த கொள்கையின் மீது) இருக்கின்றோமோ அதுதான் வெற்றிபெற்றக் கூட்டம்".

**فَهٰذَا هُوَ الشِّفَاءُ وَالْبَيَانُ وَالْأَمْرُ الْوَاضِحُ وَالْـمَنَارُ الْـمُسْتَنِيرُ وَقَالَ رَسُولُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ إِيَّاكُمْ وَالتَّعَمُّقَ وَإِيَّاكُمْ وَالتَّنَطُّعَ وَعَلَيْكُمْ بِدِينِكُمْ الْعَتِيقِ**

இதுதான் (நபி ﷺ அவர்கள் மற்றும் அவர்களது தோழர்கள் சென்ற பாதைதான் நமக்கு உள்ள நோய்களுக்கு எல்லாம்) நிவாரணமும், (நமது கருத்து வேறுபாடுகளுக்கு எல்லாம்) முடிவான விளக்கமும் தரக்கூடியதாகும். (குழப்பங்களில் இருந்து விடுபட்டு) மிகத் தெளிவான காரியமாகவும், (நமக்கு வழிகாட்டுகின்ற) ஒளிவீசக்கூடிய கலங்கரை விளக்கமாகவும் இது இருக்கின்றது. ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள்: நீங்கள் (தேவையற்ற விஷயங்களில், உனக்கு கல்வியறிவு இல்லாத காரியங்களில்) ஆழமாக செல்வதை விட்டும் நான் உங்களை எச்சரிக்கின்றேன். (மார்க்கத்தில் வரம்பு மீறி அல்லாஹ் கடமையாக்காத காரியங்களைக் கொண்டு உங்கள் மீது) சிரமப்படுத்திக் கொள்வதை விட்டும் உங்களை எச்சரிக்கின்றேன். பழமையான உங்கள் மார்க்கத்தை நீங்கள் உறுதியாக பின்பற்றுங்கள்!"

**وَاعْلَمْ أَنَّ الدِّينَ الْعَتِيقَ مَا كَانَ مِنْ وَفَاةِ رَسُولِ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ إِلَىٰ قَتْلِ عُثْمَانَ بْنِ عَفَّانَ رَضِيَ اللّٰهُ عَنْهُ وَكَانَ قَتْلُهُ أَوَّلَ الْفِرْقَةِ وَأَوَّلَ الْاِخْتِلَافِ فَتَحَارَبَتْ الْأُمَّةُ وَتَفَرَّقَتْ وَاتَّبَعَتْ الطَّمَعَ**

وَالْأَهْوَاءَ وَالْـمَيْلَ إِلَى الدُّنْيَا فَلَيْسَ لِأَحَدٍ رُخْصَةٌ فِي شَيْءٍ أَحْدَثَهُ مِـمَّا لَمْ يَكُنْ عَلَيْهِ أَصْحَابُ رَسُولِ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ أَوْ يَكُونُ رَجُلٌ يَدْعُو إِلَىٰ شَيْءٍ أَحْدَثَهُ مَنْ قَبْلَهُ مِنْ أَهْلِ الْبِدَعِ فَهُوَ كَمَنْ أَحْدَثَهُ فَمَنْ زَعَمَ ذٰلِكَ أَوْ قَالَ بِهِ فَقَدْ رَدَّ السُّنَّةَ وَخَالَفَ الْـحَقَّ وَالْـجَمَاعَةَ وَأَبَاحَ الْبِدَعَ وَهُوَ أَضَرُّ عَلَىٰ هٰذِهِ الْأُمَّةِ مِنْ إِبْلِيسَ

107. அறிந்துகொள்! நிச்சயமாக நிலையான, பழமையான மார்க்கம் என்பது ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களின் மரண நேரத்திலிருந்து உஸ்மான் இப்னு அஃப்பான் رضي الله عنه அவர்கள் கொல்லப்படுகின்றவரை எது இருந்ததோ அது மட்டும்தான் ஆகும். உஸ்மான் رضي الله عنه அவர்கள் கொல்லப்பட்டது (உம்மத்துக்கு இடையில் ஏற்பட்ட) முதல் பிரிவினையாகவும் முதல் கருத்து முரண்பாடாகவும் ஆகிவிட்டது. ஆகவே, (அதற்கு பின்னர்) உம்மத்து (-முஸ்லிம் சமுதாயம்) தமக்குள் சண்டையிட்டுக் கொண்டது; (பல பிரிவுகளாக) பிரிந்துவிட்டது; ஆசையையும் மனவிருப்பங்களையும் உலகத்தின் பக்கம் நாட்டம் கொள்வதையும் பின்பற்றி சென்றது. ஆகவே, ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களுடைய தோழர்கள் எதன் மீது இல்லையோ அதை யார் ஒருவர் புதிதாக உருவாக்குவாரோ அவருக்கு அதில் எவ்வித சலுகையும் (-அனுமதியும்) இல்லை. (அதாவது, ஒருவர் எவ்வித காரணத்தையும் கூறி தான் செய்கின்ற பித்அத்தை நியாயப்படுத்த முடியாது.) அல்லது, ஒருவர் தனக்கு முன்னுள்ள பித்அத்வாதிகள் உருவாக்கிய ஒரு காரியத்தை செய்யும்படி மக்களை தூண்டினால் அவரும் அந்த பித்அத்தை உருவாக்கியவர் போன்றுதான். யார் பித்அத்தை (பரப்பும் விதமாக மக்களுக்கு மத்தியில்) அதைப் பற்றி பேசுவாரோ இன்னும் அதை சரி காணுவாரோ அவர் ஸுன்னாவை மறுத்துவிட்டார்; சத்தியத்திற்கும் நபித்தோழர்களுக்கும் முரண்பட்டு விட்டார்; பித்அத்துகளை ஆகுமாக்கி விட்டார். இவர் இந்த

உம்மத்திற்கு இப்லீஸை விட மிகவும் கெடுதி விளைவிப்பவர் ஆவார்.

وَمَنْ عَرَفَ مَا تَرَكَ أَصْحَابُ الْبِدَعِ مِنَ السُّنَّةِ وَمَا فَارَقُوا فِيهِ فَتَمَسَّكَ بِهِ فَهُوَ صَاحِبُ سُنَّةٍ وَصَاحِبُ جَمَاعَةٍ وَحَقِيقٌ أَنْ يُتَّبَعَ وَأَنْ يُعَانَ وَأَنْ يُحْفَظَ وَهُوَ مِمَّنْ أَوْصَىٰ بِهِ رَسُولُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ

108. பித்அத்காரர்கள் செய்யாமல் விட்ட சுன்னத்துகளையும் இன்னும் எதில் (ஸஹாபாக்களை விட்டு) அவர்கள் பிரிந்து சென்றார்களோ அதையும் அறிந்து அதை உறுதியாக பின்பற்றி யார் நடப்பாரோ அவர்தான் ஸுன்னா உடையவர், ஸஹாபாக்களை பின்பற்றுகின்றவர், இன்னும் அவர்களை சேர்ந்தவர் ஆவார். பின்பற்றப்படுவதற்கும் உதவி செய்யப்படுவதற்கும் பாதுகாக்கப்படுவதற்கும் அவர்தான் மிக தகுதியானவர் ஆவார். ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் நாம் யாரோடு இருக்க வேண்டும் என்று வஸிய்யத் செய்தார்களோ அவர்களை சேர்ந்தவர் அவர்தான்.

## படிப்பினைகள்

*__1.__ உண்மையில் நேர்வழியை தேடுபவர்களுக்கு நேர்வழி மிகத் தெளிவாக இருக்கிறது.*

*__2.__ அந்த நேர்வழி குர்ஆன் அங்கீகரித்த ஸுன்னாவும் ஜமாஆவும் ஆகும்.*

*__3.__ குர்ஆன் கூறும் நேர்வழியை தேடுபவர் ஸுன்னாவையும் ஸஹாபாக்களின் வழிமுறையையும் விட்டு ஒருபோதும் விலக மாட்டார்.*

*__4.__ பெயரளவில் குர்ஆனை முற்படுத்திவிட்டு மன இச்சையின்படி நடக்க விரும்புகிறவர் மட்டுமே ஸுன்னாவையும்*

ஸஹாபாக்களையும் புறக்கணிப்பார். அல்லது ஸஹாபாக்களை புறக்கணிப்பார்.

5. ஒருவர் குர்ஆன் இன்னும் ஸுன்னா மட்டும் போதும், ஸஹாபாக்களின் வழிமுறை தேவை இல்லை என்று கூறினால் அவர் இந்த மார்கத்தில் நூதன கருத்துக்களை புகுத்த வழிகளை உருவாக்குகிறார். அவர் கண்டிப்பாக தானும் வழிகெட்டு, தன்னை பின்பற்றுபவர்களையும் வழிகெடுக்கிறார்.

6. உம்மத்தை ஒன்றிணைக்க ஒருவர் விரும்பினால் அவர் தனது சுய கருத்தை தூர விட்டுவிட்டு ஸஹாபாக்களின் கருத்தை முன்னிலைப் படுத்துவார்.

7. கொள்கையில் ஸஹாபாக்களை பின்பற்றுகிறவர் மார்க்கத்தால் பாதுகாப்பு பெறுகிறார்.

8. வணக்க வழிபாட்டில் ஸஹாபாக்களை பின்பற்றுபவர் வழிகெட்ட ஸூஃபிகளின் உடலை வருத்தும் வீணான பயிற்சிகளையும் வழிபாடுகளையும் விட்டு நிம்மதி பெறுவார்.

9. மார்க்கத்தில் எந்த துறையிலும் ஸஹாபாக்களே நமக்கு முன்மாதிரிகள் ஆவார்கள். ஸஹாபாக்களை விட்டு பிரியும்போது அது பிரிவினை, குழப்பம், பிளவு ஆகிய அழிவின் படுகுழிகளில் தள்ளிவிடும்.

10. பகட்டு சடங்குகள், மயக்கும் வார்த்தைகள், இந்து துறவிகளின் பயிற்சிகள் இன்னும் மார்க்கம் கற்பிக்காத இது போன்ற பல விஷயங்களை விட்டு ஸஹாபாக்களிடம் இருந்த மார்க்கம் பாதுகாப்பாக இருந்தது.

11. கலகமும் கிலாபத்தை எதிர்த்து சண்டை செய்ததும் பிறகு கலீஃபா உஸ்மான் படுகொலை செய்யப்பட்டதும் ஃபித்னா - குழப்பத்தின் வாசலை திறந்துவிட்டன.

*12.* நபித்தோழர்களிடம் இல்லாத எதையும் மார்க்கத்தில் புகுத்துவதற்கு எத்தகைய அழகான காரணங்களை யார் கூறினாலும் அவரது செயலும் காரணமும் முற்றிலும் மறுக்கப்பட வேண்டியதாகும்.

*13.* அல்லாஹ்வின் கட்டளைக்கு கீழ்ப்படிய மறுத்த இப்லீசை விட கேடுகெட்டவர்கள் மார்க்கத்தில் புதுமைகளை செய்பவர்கள், இன்னும் புதுமைகளை சொல்பவர்கள்.

*14.* சிந்தனை ரீதியான, அல்லது அமல் ரீதியான பித்அத்துகளை செய்பவர் யாராக இருந்தாலும் அவர் ஸுன்னாவை மறுப்பவராகவும் ஜமாஆவை விட்டு வெளியேறியவராகவும் கருதப்படுவார்.

*15.* மார்க்கப்பற்றுள்ள முஸ்லிம் பித்அத்துகளை அறிந்து அவற்றை விட்டு விலகி இருப்பார். இன்னும் பித்அத் வாதிகள் செய்யாத ஸுன்னாக்களை தானும் செய்வதோடு மக்களுக்கும் அவற்றை கற்பிப்பார்.

*16.* அல்லாஹ்வின் மார்க்கத்திற்கு உதவ நினைப்பவர்கள் ஸுன்னாவை பின்பற்றுபவர்களுக்கும் அதை பரப்புபவர்களுக்கும் உதவட்டும்.

﴿وَالسّٰبِقُوْنَ الْاَوَّلُوْنَ مِنَ الْمُهٰجِرِيْنَ وَالْاَنْصَارِ وَالَّذِيْنَ اتَّبَعُوْهُمْ بِاِحْسَانٍ رَّضِيَ اللّٰهُ عَنْهُمْ وَرَضُوْا عَنْهُ وَاَعَدَّ لَهُمْ جَنّٰتٍ تَجْرِيْ تَحْتَهَا الْاَنْهٰرُ خٰلِدِيْنَ فِيْهَا اَبَدًا ذٰلِكَ الْفَوْزُ الْعَظِيْمُ ۝﴾

முஹாஜிர்களிலும் அன்ஸார்களிலும் எவர்கள் (இஸ்லாமில்) முதலாவதாக முந்திக் (கொண்டு நம்பிக்கை) கொண்டார்களோ அவர்களையும் நற்செயல்களில் (மெய்யாகவே) இவர்களைப்

*பின்பற்றியவர்களையும் பற்றி அல்லாஹ் திருப்தியடைகின்றான். இவர்களும் அல்லாஹ்வைப் பற்றி திருப்தியடைகின்றனர். அன்றி, தொடர்ந்து நீரருவிகள் ஓடிக்கொண்டிருக்கும் சுவனபதிகளை இவர்களுக்கென தயார்படுத்தி வைத்திருக்கின்றான். அவற்றிலேயே அவர்கள் என்றென்றும் தங்கிவிடுவார்கள். இதுதான் மகத்தான பெரும் வெற்றியாகும்.*

*(அல்குர்ஆன் 9 : 100)*

---------------------

# பாடம் 72

## பித்அத்துகளை விட்டு விலகி இருங்கள்!

وَاعْلَمُوا رَحِمَكُمُ اللهُ أَنَّ أُصُولَ الْبِدَعِ أَرْبَعَةُ أَبْوَابٍ انْشَعَبَ مِنْ هٰذِهِ الْأَرْبَعَةِ اثْنَانِ وَسَبْعُونَ هَوًى ثُمَّ يَصِيرُ كُلُّ وَاحِدٍ مِنَ الْبِدَعِ يَنْشَعِبُ حَتَّى تَصِيرَ كُلُّهَا إِلَى أَلْفَيْنِ وَثَمَانِ مِائَةِ قَالَةٍ وَكُلُّهَا ضَلَالَةٌ وَكُلُّهَا فِي النَّارِ إِلَّا وَاحِدَةً وَهُوَ مَنْ آمَنَ بِمَا فِي هٰذَا الْكِتَابِ وَاعْتَقَدَهُ مِنْ غَيْرِ رِيبَةٍ فِي قَلْبِهِ وَلَا شُكُوكٍ فَهُوَ صَاحِبُ سُنَّةٍ وَهُوَ النَّاجِي إِنْ شَاءَ اللهُ

109. அறிந்து கொள்ளுங்கள்! அல்லாஹ் உங்களுக்கு கருணை காட்டுவானாக! நிச்சயமாக பித்அத்துக்கள் உடைய அடிப்படைகள் நான்கு வாசல்களாகும். இந்த நான்கிலிருந்துதான் எழுபத்தி இரண்டு ஹவா -மனவிருப்பங்கள் (பித்அத்தான சிந்தனைகள்) உருவாகின. பிறகு, இந்த பித்அத்துகளில் இருந்து ஒவ்வொன்றும் பிரிந்து பிரிந்து, அவை எல்லாம் இரண்டாயிரத்தி எண்ணூறு கொள்கை (கூற்று)களாக ஆகிவிட்டன. அவை அனைத்தும் வழிகேடுகளாகும். அவை அனைத்தும் நரகத்தில்தான் கொண்டுபோய் சேர்க்கும், ஒன்றைத் தவிர. அந்த ஒரு கொள்கை உடையவர் யாரென்றால், யார் இந்த நூலில் உள்ளதை நம்பிக்கைக்கொண்டு, தனது உள்ளத்தில் அறவே சந்தேகம் இல்லாமல் அதை அப்படியே கொள்கையாக நம்பினாரோ அவர்தான் ஸுன்னாவை பின்பற்றுகின்றவர், ஸுன்னாவை

உடையவர் ஆவார். இன் ஷா அல்லாஹ் அவர்தான் வெற்றியாளர் ஆவார்.

وَاعْلَمْ رَحِمَكَ اللهُ لَوْ أَنَّ النَّاسَ وَقَفُوا عِنْدَ مُحْدَثَاتِ الْأُمُورِ وَلَمْ يَتَجَاوَزُوهَا بِشَيْءٍ وَلَمْ يُوَلِّدُوا كَلَامًا مِمَّا لَمْ يَجِيءْ فِيهِ أَثَرٌ عَنْ رَسُولِ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ وَلَا عَنْ أَصْحَابِهِ لَمْ تَكُنْ بِدْعَةٌ

110. அறிந்துகொள்! அல்லாஹ் உனக்கு கருணை புரிவானாக! புதிதாக உருவாக்கப்பட்ட பித்அத்துகளை மக்கள் செய்யாமல் நிதானித்திருந்தால், எதையும் காரணமாக கூறி அதை நியாயப்படுத்தாமல் இருந்திருந்தால், ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களிடமிருந்தும் அவர்களின் தோழர்களிடமிருந்தும் ஹதீஸ் ஏதும் வராத விஷயங்களில் புதிதாக எந்த தத்துவத்தையும் உருவாக்காமல் இருந்திருந்தால் பித்அத்கள் ஏதும் உருவாகி இருக்காது.

## படிப்பினைகள்

*__1.__ குழப்பமான பித்அத்துகளின் வகைகளை தேடி திரிவதை விட ஸுன்னாவை அறிவது நமக்கு போதுமானதாகும்.*

*__2.__ ஸுன்னாவில் இல்லாத அனைத்தும் பித்அத்துகள் ஆகும்.*

*__3.__ நபித்தோழர்கள் அறியாத கொள்கைகள், அமல்கள், வழிபாடுகள், ஆன்மிக பயிற்சிகள் இன்னும் இவையல்லாத மற்ற அனைத்தும் பித்அத்துகள் ஆகும்.*

*__4.__ நமக்கு முன் எந்த கருத்து முன்வைக்கப்பட்டாலும் அல்லது எந்த ஓர் அமல் கற்பிக்கப்பட்டாலும் அது நபித்தோழர்களிடம் இருந்ததா அல்லது இருக்கவில்லையா என்று கேள்வி கேட்க வேண்டும். இருந்தது என்று பதில் வந்தால் ஆதாரம் கேட்க*

வேண்டும். ஆதாரம் கொடுக்கப்பட்டால் அந்த ஆதாரம் ஸஹீஹ் - சரியானதா (நம்பத்தகுந்த அறிவிப்பாளர் வரிசையை கொண்டதா) என்று பார்க்க வேண்டும். அப்படி இருந்தால் உடனே அதற்கு கீழ்ப்படிந்து விட வேண்டும். அதை ஏற்றுக் கொள்ள வேண்டும். அதன் படி செயல்பட வேண்டும். ஆதாரம் இல்லை என்று பதில் வந்தால் அல்லது ஆதாரம் பலவீனமானதாக இருந்தால் அதை புறக்கணித்து விட வேண்டும். அதன் பக்கம் ஏறிட்டும் பார்க்க கூடாது. அதற்கு செவி சாய்க்கக் கூடாது.

---------------------

## பாடம் 73

# மார்க்கத்தில் இருப்பதை குறைப்பதும் இல்லாததை கூட்டுவதும் வழிகேடே!

وَاعْلَمْ رَحِمَكَ اللهُ أَنَّهُ لَيْسَ بَيْنَ الْعَبْدِ وَبَيْنَ أَنْ يَكُونَ مُؤْمِنًا حَتّٰى يَصِيرَ كَافِرًا إِلَّا أَنْ يَـجْحَدَ شَيْئًا مِمَّا أَنْزَلَهُ اللهُ تَعَالَىٰ أَوْ يَزِيدَ فِي كَلَامِ اللهِ أَوْ يَنْقُصَ أَوْ يُنْكِرَ شَيْئًا مِمَّا قَالَ اللهُ عَزَّ وَجَلَّ أَوْ شَيْئًا ممَّا تَكَلَّم بِهِ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ فَاتَّقِ اللهَ رَحِمَكَ اللهُ وَانْظُرْ لِنَفْسِكَ وَإِيَّاكَ وَالْغُلُوَّ فِي الدِّينِ فَإِنَّه لَيْسَ مِنْ طَرِيقِ الْـحَقِّ فِي شَيْءٍ

111. அறிந்துகொள்! அல்லாஹ் உனக்கு கருணை காட்டுவானாக! அடியானுக்கும் அவன் முஃமினாக இருந்து காஃபிராக ஆகிவிடுவதற்கும் இடையில் எதுவும் இல்லை, உயர்வுமிக்க அல்லாஹ் இறக்கியதில் சிலவற்றை மறுப்பதைத் தவிர; அல்லது அல்லாஹ்வுடைய கலாமில் -பேச்சில் எதையும் அதிகப்படுத்துவதைத் தவிர; அல்லது அதில் குறைப்பதைத் தவிர; அல்லது கண்ணியமும் கம்பீரமும் நிறைந்த அல்லாஹ் கூறியதில் அல்லது ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறியதில் எதையும் மறுப்பதைத் தவிர. ஆகவே, அல்லாஹ்வை அஞ்சிக்கொள்! அல்லாஹ் உனக்கு கருணை காட்டுவானாக! உன்னை நீ கவனித்துக்கொள்! உன்னை நீ பார்த்துக்கொள்! மார்க்கத்தில் வரம்பு மீறுவதை விட்டும் உன்னை நான் எச்சரிக்கின்றேன். மார்க்கத்தில் வரம்பு மீறுவது (-மார்க்கத்தில்

கூறப்பட்ட அளவை கடந்து அதிகமாக செய்வது) சத்தியப் பாதைக்கு எவ்விதத்திலும் சம்பந்தம் இல்லாததாகும்.

## படிப்பினைகள்

*1. மார்க்கத்தில் நாம் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.*

*2. ஷைத்தான் வழிகெடுப்பதை குறித்து மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.*

*3. நேர்வழியிலிருந்து தடுப்பது ஷைத்தானின் வேலையாகும்.*

*4. ஒருவர் நேர்வழியில் வந்த பின்னர் அந்த நேர்வழியை விட்டு அவரை பிசக செய்வதற்கு தான் தீவிர முயற்சி செய்வான்.*

*5. பாவங்களை விட பித்அத்துகள் ஷைத்தானுக்கு மிகவும் பிடித்தமானவை என்று நாம் அறிஞர்களின் வாயிலாக அறிய வருகிறோம்.*

*6. மார்க்கத்தை மீறுவது எந்த வகையில் இருந்தாலும் அது மனிதனை குஃப்ர் வரை கொண்டுபோய் சேர்த்துவிடும்.*

*7. மார்க்கத்தில் அறியப்பட்டதை மறுப்பது, அல்லது அல்லாஹ்வும் ரஸூலும் கூறாததை மார்க்கத்தில் அதிகப்படுத்துவது, அல்லது அல்லாஹ்வும் ரஸூலும் கூறியதில் தனது மன இச்சைக்கு ஏற்ப குறைப்பது இவை அனைத்தும் நிராகரிப்பின் பக்கம் சேர்க்கக் கூடிய வழிகேடுகளாகும்.*

*8. மார்க்கப் பற்று, பேணுதல், கூடுதல் தக்வா என்ற பெயரில் மார்க்கம் நிர்ணயித்த அளவுகளை மீறுவதும் மார்க்கத்தில் அதிகப்படுத்துவதும் கண்டிப்பாக வெறுக்கத்தக்க அசத்தியமான செயலாகும்.*

---------------------

# பாடம் 74

## உண்மையை உனக்கு கூறி இருக்கின்றேன்! ஏற்றுக்கொள்!

وَجَمِيعُ مَا وَصَفْتُ لَكَ فِي هٰذَا الْكِتَابِ فَهُوَ عَنْ اللهِ تَعَالَىٰ وَعَنْ رَسُولِ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ وَعَنْ أَصْحَابِه وَعَنْ التَّابِعِينَ وَعَنْ الْقَرْنِ الثَّالِثِ إِلَى الْقَرْنِ الرَّابِعِ فَاتَّقِ اللّٰهَ يَا عَبْدَ اللهِ وَعَلَيْكَ بِالتَّصْدِيقِ وَالتَّسْلِيمِ وَالتَّفْوِيضِ وَالرِّضَىٰ بِمَا فِي هٰذَا الْكِتَابِ وَلَا تَكْتُمْ هٰذَا الْكِتَابَ أَحَدًا مِنْ أَهْلِ الْقِبْلَةِ فَعَسَىٰ يَرُدُّ اللهُ بِهِ حَيْرَانًا عَنْ حَيْرَتِهِ أَوْ صَاحِبَ بِدْعَةٍ عَنْ بِدْعَتِهِ أَوْ ضَالًّا عَنْ ضَلَالَتِهِ فَيَنْجُو بِهِ

112. இந்த புத்தகத்தில் உனக்கு நான் விவரித்த அனைத்தும் உயர்வுமிக்க அல்லாஹ்வின் புறத்திலிருந்தும் ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களின் புறத்திலிருந்தும் அவர்களுடைய தோழர்களின் புறத்திலிருந்தும் தாபியீன்கள் புறத்திலிருந்தும் மூன்றாவது தலைமுறையிலிருந்து நான்காவது தலைமுறைவரை வாழ்ந்த சான்றோரிடமிருந்தும் பெறப்பட்ட விஷயங்களாகும். ஆகவே, அல்லாஹ்வின் அடியானே! அல்லாஹ்வை பயந்துகொள்! நீ தஸ்தீக் -மார்க்கத்தை உண்மையாக நம்பிக்கைகொள்! மார்க்கத்திற்கு முற்றிலுமாக கட்டுப்பட்டுவிடு! அல்லாஹ்வின் பக்கமும் தூதரின் பக்கமும் அனைத்து அறிவுகளையும் ஒப்படைத்துவிடு! இந்த நூலில் உள்ளதைப் பொருந்திக்கொள்! முஸ்லிம்களில் எவருக்கும் இந்த நூலை மறைத்துவிடாதே! திகைப்பில் இருப்பவருக்கு அவருடைய

திகைப்பில் இருந்து; அல்லது பித்அத்வாதிக்கு அவருடைய பித்அத்திலிருந்து; அல்லது வழிகேடருக்கு அவருடைய வழிகேட்டிலிருந்து இந்த நூலின் மூலம் அல்லாஹ் நேர்வழி காட்டுவான். ஆகவே, அவர்கள் இதன் மூலம் நஜாத் -ஈடேற்றம் பெறுவார்கள்.

فَاتَّقِ اللّٰهَ وَعَلَيْكَ بِالْأَمْرِ الْأَوَّلِ الْعَتِيقِ وَهُوَ مَا وَصَفْتُ لَكَ فِي هٰذَا الْكِتَابِ فَرَحِمَ اللّٰهُ عَبْدًا وَرَحِمَ وَالِدَيْهِ قَرَأَ هٰذَا الْكِتَابَ وَبَثَّهُ وَعَمِلَ بِهِ وَدعَا إِلَيْهِ وَاحْتَجَّ بِهِ فَإِنَّهُ دِينُ اللّٰهِ وَدِينُ رَسُولِ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ فَإِنَّه مَنْ اسْتَحَلَّ شَيْئًا خِلَافَ مَا فِي هٰذَا الْكِتَابِ فَإِنَّهُ لَيْسَ يَدِينُ لِلّٰهِ بِدِينٍ وَقَدْ رَدَّهُ كُلَّهُ كَمَا لَوْ أَنَّ عَبْدًا آمَنَ بِجَمِيعِ مَا قَالَ اللّٰهُ تَبَارَكَ وَتَعَالَىٰ إِلَّا أَنَّهُ شَكَّ فِي حَرْفٍ فَقَدْ رَدَّ جَمِيعَ مَا قَالَ اللّٰهُ تَعَالَىٰ وَهُوَ كَافِرٌ كَمَا أَنَّ شَهَادَةَ أَنْ لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ لَا تُقْبَلُ مِنْ صَاحِبِهَا إِلَّا بِصِدْقِ النِّيَّةِ وَإِخْلَاصِ الْيَقِينِ كَذٰلِكَ لَا يَقْبَلُ اللّٰهُ شَيْئًا مِنْ السُّنَّةِ فِي تَرْكِ بَعْضٍ وَمَنْ تَرَكَ مِنْ السُّنَّةِ شَيْئًا فَقَدْ تَرَكَ السُّنَّةَ كُلَّهَا فَعَلَيْكَ بِالْقَبُولِ وَدَعْ عَنْكَ الْـمَحْكَ وَاللَّجَاجَةَ فَإِنَّهُ لَيْسَ مِنْ دِينِ اللّٰهِ فِي شَيْءٍ وَزَمَانُكَ خَاصَّةً زَمَانُ سُوءٍ فَاتَّقِ اللّٰهَ

ஆகவே, அல்லாஹ்வை பயந்துகொள்! முதல் மற்றும் பழமையான காரியத்தைப் பற்றிப்பிடி! அதுதான் இந்த நூலில் நான் உனக்கு விளக்கிய விஷயங்களாகும். இந்த நூலை யார் தானும் வாசித்து, அதன்படி அமல் செய்து, அதை மக்கள் மத்தியில் பரப்பி, அதன்

பக்கம் அழைத்து, அதை ஆதாரமாக வைத்துக் கொண்டாரோ அவருக்கும் அவருடைய தாய் தந்தைக்கும் அல்லாஹ் கருணைப் புரிவானாக! ஏனெனில், நிச்சயமாக இதுதான் அல்லாஹ்வுடைய தீனாகும், ரஸூலுல்லாஹ் ﷺ உடைய தீனாகும். நிச்சயமாக யார் இந்த நூலில் உள்ளதற்கு மாற்றமானதை ஹலாலாக -அனுமதிக்கப்பட்டதாக எடுத்துக்கொள்வாரோ அவர் அல்லாஹ்வின் மார்க்கத்தின்படி வழி நடப்பவர் அல்ல. அவர் அல்லாஹ்வின் மார்க்கத்தை முற்றிலுமாக மறுத்துவிட்டார். இது எப்படி என்றால், ஒருவர் அருள் நிறைந்த, உயர்வுமிக்க அல்லாஹ் கூறிய அனைத்தையும் நம்பிக்கை கொண்டுவிட்டு, ஒரே ஓர் எழுத்தில் மட்டும் சந்தேகப்பட்டால் அவர் உயர்வுமிக்க அல்லாஹ் கூறிய அனைத்தையும் மறுத்தவராகி விடுவார். அவர் காஃபிர் ஆவார். இது எப்படி என்றால், ஒருவர் லா இலாஹ இல்லல்லாஹ் என்று உண்மையான நிய்யத் இல்லாமலும் நம்பிக்கையில் இக்லாஸ் - மனத்தூய்மை இல்லாமலும் சாட்சி கூறினால் அந்த சாட்சி எவ்வாறு ஏற்றுக்கொள்ளப் படாதோ அவ்வாறே ஆகும். மேலும், அவ்வாறே, ஸுன்னாவில் சிலவற்றை யார் (மறுத்து) விடுவாரோ அவரிடமிருந்து அல்லாஹ் ஸுன்னாவில் எதையும் அங்கீகரிக்க மாட்டான். யார் ஸுன்னாவில் சிலவற்றை (மறுத்து) விடுவாரோ அவர் ஸுன்னா அனைத்தையும் (மறுத்து) விட்டவர் ஆவார். ஆகவே, நீ ஸுன்னாவில் உள்ள எல்லாவற்றையும் அங்கீகரித்துக்கொள்! ஏற்றுக்கொள்! சந்தேகப்படுவதையும் தர்க்கம் செய்வதையும் விட்டுவிடு! இவற்றுக்கும் அல்லாஹ்வுடைய மார்க்கத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. நீ வாழக்கூடிய காலம் குறிப்பாக, தீயவர்களின் காலமாகும். ஆகவே, அல்லாஹ்வை பயந்துகொள்!

## படிப்பினைகள்

*1. அஹ்லுஸ் ஸுன்னாவின் கொள்கை, மற்றும் மன்ஹஜ் - வழிமுறையை விவரிக்கும் சிறந்த நூல்களில் இந்நூல் மிக*

முக்கியமானதாகும்.

2. இந்நூலை ஒவ்வொரு முஸ்லிமும் மீண்டும் மீண்டும் வாசித்துக் கொண்டே இருக்க வேண்டும்.

3. இந்நூலில் ஆசிரியர் கூறிய அனைத்தும் குர்ஆன், ஸுன்னா, இன்னும் ஸஹாபாக்களின் வழிகாட்டல்கள் அடிப்படையில் அமைந்தவை ஆகும்.

4. இந்நூலில் உள்ள சில விஷயங்கள் கடுமையாக தெரிந்தாலும் அவை அந்த பித்அத்துகளின் தன்மை, மற்றும் அதை பரப்பியவர்களின் வழிகேட்டுடன் ஒப்பிட்டு பார்க்கும்போது அந்த கடினம் அவசியம் என்பதை நாம் புரிந்து கொள்ளலாம்.

5. மார்க்கம் இலகுவாக, மென்மையாக இருப்பினும் சில நேரங்களில், சில மனிதர்களுடன் கடுமை காட்டுவதும் அல்லாஹ்வின் கட்டளைகளில் ஒன்றாகும்.

அல்லாஹு தஆலா கூறுகிறான் :

﴿يَا أَيُّهَا النَّبِيُّ جَاهِدِ الْكُفَّارَ وَالْمُنَافِقِينَ
وَاغْلُظْ عَلَيْهِمْ وَمَأْوَاهُمْ جَهَنَّمُ وَبِئْسَ الْمَصِيرُ۝﴾

நபியே! நிராகரிப்பவர்களுடனும் நயவஞ்சகர்களுடனும் நீங்கள் போர் செய்யுங்கள். அவர்களை (தாட்சண்யமின்றி) கண்டிப்பாக நடத்துங்கள். அவர்கள் தங்குமிடம் நரகம்தான். (அது) தங்குமிடங்களில் மிகக்கெட்டது. (அல்குர்ஆன் : 9 : 73)

6. ஆகவே, இடம், பொருள், ஏவலை கவனித்து மென்மை, கடுமையை அனுசரிக்க வேண்டும்.

7. எப்போதும் பொறுமை, இன்னும் சகிப்புத்தன்மை,

மன்னித்தலை கடைப்பிடிக்கும் நபி ﷺ அவர்கள் சில சமயம் கோபமும் பட்டுள்ளார்கள். கடுமையான வார்த்தைகளையும் பயன்படுத்தி இருக்கிறார்கள். அது எப்போது என்றால் அல்லாஹ்வின் மார்க்க சட்டத்தை மீறும்போது அல்லது அதை மாற்ற நினைக்கும்போது.

இதற்கு உதாரணமாக பின்வரும் நிகழ்வை கூறலாம்.

**عَنْ عَائِشَةَ زَوْجِ النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ أَنَّ قُرَيْشًا أَهَمَّهُمْ شَأْنُ الْمَرْأَةِ الَّتِي سَرَقَتْ فِي عَهْدِ النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ فِي غَزْوَةِ الْفَتْحِ فَقَالُوا مَنْ يُكَلِّمُ فِيهَا رَسُولَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ فَقَالُوا وَمَنْ يَجْتَرِئُ عَلَيْهِ إِلَّا أُسَامَةُ بْنُ زَيْدٍ حِبُّ رَسُولِ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ فَأُتِيَ بِهَا رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ فَكَلَّمَهُ فِيهَا أُسَامَةُ بْنُ زَيْدٍ فَتَلَوَّنَ وَجْهُ رَسُولِ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ فَقَالَ أَتَشْفَعُ فِي حَدٍّ مِنْ حُدُودِ اللهِ فَقَالَ لَهُ أُسَامَةُ اسْتَغْفِرْ لِي يَا رَسُولَ اللهِ**

நபி ﷺ அவர்களின் காலத்தில் மக்கா வெற்றியின் போது நடந்த போரில் ஒரு பெண் திருடிவிட அந்த பெண்ணுடைய காரியம் குறைஷிகளுக்கு மிகுந்த கவலையளித்தது. இவள் விஷயமாக ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களிடம் யார் பேசுவார் என்று அவர்கள் கூறினர். ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களுக்கு மிக விருப்பமான உசாமா இப்னு சைதை தவிர வேறு யார் நபியவர்களிடம் துணிவு கொள்ள முடியும் என்று பேசிக்கொண்டனர். அந்த பெண்ணை ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களிடம் அழைத்துவரப்பட்டது. உசாமா இப்னு சைத் அவர்கள் அவள் விஷயமாக நபியவர்களிடம் பேசினார்கள்.

*உடனே ரஸூலுல்லாஹ் உடைய முகம், நிறம் மாறிவிட்டது. (-சிவந்துவிட்டது.) இன்னும் கூறினார்கள் : அல்லாஹ்வுடைய தண்டனை சட்டங்களில் ஒரு சட்டத்திலா நீ சிபாரிசு செய்கிறாய்? அப்போது உசாமா அவர்கள் அல்லாஹ்வின் தூதரே நீங்கள் எனக்காக பாவமன்னிப்பு தேடுங்கள் என்று வேண்டினார்கள்.*

*அறிவிப்பாளர் : ஆயிஷா, நூல் : ஸஹீஹ் முஸ்லிம், எண் : 3197, இந்த ஹதீஸ் ஸஹீஹ் புகாரியிலும் பல அறிவிப்புகளில் அறிவிக்கப்பட்டுள்ளது.*

---------------------

# பாடம் 75

## குழப்பக் காலத்தில் நீ என்ன செய்ய வேண்டும்!

وإِذَا وَقَعَتْ الْفِتْنَةُ فَالْزَمْ جَوْفَ بَيْتِكَ وَفِرَّ مِنْ جِوَارِ الْفِتْنَةِ وَإِيَّاكَ وَالْعَصَبِيَّةَ وَكُلُّ مَا كَانَ مِنْ قِتَالٍ بَيْنَ الْـمُسْلِمِينَ عَلَى الدُّنْيَا فَهُوَ فِتْنَةٌ فَاتَّقِ اللهَ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَلَا تَـخْرُجْ فِيهَا وَلَا تُقَاتِلْ فِيهَا وَلَا تَهْوِ وَلَا تُشَايِعْ وَلَا تُمَايِلْ وَلَا تحِبَّ شَيْئًا مِنْ أُمُورِهِمْ فَإِنَّهُ يُقَالُ مَنْ أَحَبَّ فِعَالَ قَوْمٍ خَيْرًا كَانَ أَوْ شَرًّا كَانَ كَمَنْ عَمِلَهُ وَفَّقَنَا اللهُ وَإِيَّاكُمْ لِـمَرْضَاتِهِ وَجَنَّبَنَا وَإِيَّاكُمْ مَعَاصِيَهُ

113. குழப்பம் ஏற்பட்டால் நீ உனது வீட்டுக்குள் முடங்கிவிடு! குழப்பத்திற்கு அருகில் இருப்பதைவிட்டும் விரண்டு ஓடு! அஸபிய்யத்தை[24] விட்டு உன்னை எச்சரிக்கின்றேன். முஸ்லிம்களுக்கு மத்தியில் உலகத்திற்காக நடந்த (நடக்கின்ற) போர்கள் எல்லாம் ஃபித்னா - குழப்பம் ஆகும். ஆகவே, நீ தனக்கு இணையற்ற அல்லாஹ் ஒருவனை மட்டும் பயந்துகொள்! அந்த குழப்பத்தில் நீ வெளியே சென்றுவிடாதே! அதில் நீ யுத்தம் செய்யாதே! மன இச்சையின்படி நடக்காதே! குழுவாக பிரிந்துவிடாதே! அதில் யார் பக்கமும் சாய்ந்துவிடாதே! அவர்களின் காரியங்களில் எதையும் நீ பிரியப்பட்டு விடாதே! பழமொழியில் என்ன கூறப்படுகின்றது

24. ஆதாரமற்ற ஒரு கருத்தை ஏற்று அதில் முரட்டு பிடிவாதம் பிடிப்பதை அஸபிய்யத் என்று கூறப்படும்.

என்றால், யார் ஒருவர் ஒரு கூட்டத்தினரின் செயலை அந்த செயல் நன்மையா தீமையா என்று பார்க்காமல் விரும்புவாரோ அவரும் அந்த செயலை செய்தவர் போன்றுதான். அல்லாஹ் எங்களுக்கும் உங்களுக்கும் அவனுடைய பொருத்தத்திற்கு நல்வழி காட்டுவானாக! எங்களையும் உங்களையும் அவனுடைய பாவங்களை விட்டு அப்புறப்படுத்துவானாக!

## படிப்பினைகள்

*1. இந்த பாடத்தில் ஃபித்னா உடைய காலத்தில் நாம் பேண வேண்டிய ஒழுக்கங்களை ஆசிரியர் நமக்கு குறிப்பிடுகிறார்கள்.*

*2. முஸ்லிம்கள் பிளவுபட்டு தங்களுக்குள் போர் செய்துகொண்டால் அதை ஃபித்னா உடைய காலம் என்று சொல்லப்படும்.*

*3. அப்போது நாம் நமது வீட்டை விட்டு வெளியேறக் கூடாது.*

*4. இரு தரப்புகளில் யார் பக்கமும் சாய்ந்து விடக் கூடாது.*

*5. ஒருவருக்கு ஆதரவாக மற்றவரிடம் சண்டை செய்யக் கூடாது.*

*6. கண்மூடித்தனமாக ஆதரிப்பதும் எதிர்ப்பதும் இனவாதம், மொழிவாதம் பேசுவதும் அறவே கூடாது.*

*நபி ﷺ அவர்கள் கூறினார்கள் :*

عَنْ الْأَحْنَفِ بْنِ قَيْسٍ قَالَ ذَهَبْتُ لِأَنْصُرَ هٰذَا الرَّجُلَ فَلَقِيَنِي أَبُو بَكْرَةَ فَقَالَ أَيْنَ تُرِيدُ قُلْتُ أَنْصُرُ هٰذَا الرَّجُلَ قَالَ ارْجِعْ فَإِنِّي سَمِعْتُ رَسُولَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ يَقُولُ إِذَا الْتَقَى الْمُسْلِمَانِ بِسَيْفَيْهِمَا

فَالْقَاتِلُ وَالْمَقْتُولُ فِي النَّارِ فَقُلْتُ يَا رَسُولَ اللهِ هٰذَا الْقَاتِلُ فَمَا بَالُ الْمَقْتُولِ قَالَ إِنَّهُ كَانَ حَرِيصًا عَلَىٰ قَتْلِ صَاحِبِهِ

*அஹ்னஃப் இப்னு கைஸ் கூறுகிறார் : நான் இந்த நபருக்கு (அலீ ﵁ அவர்களுக்கு) உதவி செய்ய சென்றேன். என்னை (நபித்தோழர்) அபூ பக்ரா ﵁ சந்தித்து எங்கே செல்ல நாடுகிறாய் என்று கேட்டார். இந்த மனிதருக்கு உதவப் போகிறேன் என்று நான் கூறினேன். அவர் கூறினார் : நீ திரும்ப செல். ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூற நான் செவியுற்றேன், இரு முஸ்லிம்கள் தங்கள் வாள்களைக் கொண்டு யுத்தம் செய்யும்போது கொன்றவனும் கொல்லப்பட்டவனும் நரகத்தில் செல்வார்கள். அதற்கு நான் கேட்டேன், அல்லாஹ்வின் தூதரே! இவனோ கொன்றவன். கொல்லப்பட்டவனுடைய நிலைமை ஏன் இப்படி ஆகியது? நபி ﷺஅவர்கள் கூறினார்கள் : நிச்சயமாக அவனும் தனது சக தோழனை கொல்ல ஆசைப்பட்டவனாக இருந்தான்.*

*அறிவிப்பாளர் : அபூ பக்ரா, நூல் : புகாரி, எண் : 30*

عَنْ عَبْدِ اللهِ بْنُ عَمْرِو بْنِ الْعَاصِ قَالَ بَيْنَمَا نَحْنُ حَوْلَ رَسُولِ اللَّهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ إِذْ ذَكَرَ الْفِتْنَةَ فَقَالَ إِذَا رَأَيْتُمْ النَّاسَ قَدْ مَرِجَتْ عُهُودُهُمْ وَخَفَّتْ أَمَانَاتُهُمْ وَكَانُوا هَكَذَا وَشَبَّكَ بَيْنَ أَصَابِعِهِ قَالَ فَقُمْتُ إِلَيْهِ فَقُلْتُ كَيْفَ أَفْعَلُ عِنْدَ ذٰلِكَ جَعَلَنِيَ اللهُ فِدَاكَ قَالَ الْزَمْ بَيْتَكَ وَامْلِكْ عَلَيْكَ لِسَانَكَ وَخُذْ بِمَا تَعْرِفُ وَدَعْ مَا تُنْكِرُ وَعَلَيْكَ بِأَمْرِ خَاصَّةِ نَفْسِكَ وَدَعْ عَنْكَ أَمْرَ الْعَامَّةِ

*நாங்கள் ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களை சுற்றி இருந்தபோது ஃபித்னாவைப் பற்றி நினைவு கூர்ந்தார்கள். அப்போது கூறினார்கள் : நீங்கள் மக்களின் உடன்படிக்கைகள் சீர்குலைந்துவிட்டதாக, அவர்களின் அமானித நம்பிக்கைகள் மிகவும் இலகுவடைந்ததாக இன்னும், தங்கள் விரல்களை ஒன்றுக்குள் ஒன்று பிணைத்து காண்பித்து அவர்கள் இப்படி ஆகிவிட்டதாக நீங்கள் மக்களைப் பார்த்தால் (என்ன செய்வீர்கள்) என்று கேட்டார்கள். உடனே நான் நபி ﷺ அவர்களை நோக்கி எழுந்து சென்று அல்லாஹ் என்னை உங்களுக்கு அர்ப்பணமாக ஆக்கட்டும், அப்போது நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டேன். நபி ﷺ அவர்கள் கூறினார்கள் : உனது வீட்டில் தங்கி இரு! உனது நாவை அடக்கிக்கொள்! நீ அறிந்ததை எடுத்துகொள்! நீ அறியாததை விட்டுவிடு! உனது ஆன்மா சம்பந்தப்பட்ட, உனது தனிப்பட்ட காரியத்தை மட்டும் நீ பேணிக்கொள்! பொதுமக்களின் காரியத்தை உன்னை விட்டும் தூர விட்டுவிடு!*

*அறிவிப்பாளர் : அப்துல்லாஹ் இப்னு அம்ர் இப்னுல் ஆஸ், நூல் : அபூ தாவூத், எண் : 4343*

---------------------

# பாடம் 76

## நீ செய்ய வேண்டியதும் செய்யக் கூடாததும்!

وَأَقِلَّ مِنْ النَّظْرِ فِي النُّجُومِ إِلَّا مَا تَسْتَعِينُ بِهِ عَلَىٰ مَوَاقِيتِ الصَّلَاةِ وَآلِهِ عَمَّا سِوَىٰ ذٰلِكَ فَإِنَّه يَدْعُو إِلَىٰ الزَّنْدَقَةِ

114. நட்சத்திரங்களைப் பற்றி ஆராய்வதை குறைத்துக்கொள், தொழுகையின் நேரங்களை அறிவதற்கு உனக்கு உதவியாக இருக்கக்கூடிய அளவைத் தவிர. அந்தளவு நீ அறிந்துகொள்வதில் தவறில்லை. அது அல்லாத மற்ற அனைத்தையும் அலட்சியம் செய்துவிடு! ஏனெனில், அது **زندقة** ஸன்தகா விற்கு அழைத்து சென்றுவிடும்.[25]

وَإِيَّاكَ وَالنَّظْرَ فِي الْكَلَامِ وَالْـجُلُوسَ إِلَىٰ أَصْحَابِ الْكَلَامِ

115. கிரேக்க தத்துவங்களைப் பற்றி சிந்திப்பதையும் அந்த கிரேக்க தத்துவம் பேசுபவர்களிடம் அமர்வதையும் விட்டு நான் உன்னை எச்சரிக்கின்றேன்.[26]

---

25. மார்க்கத்தில் அறியப்பட்ட ஒரு கருத்தை மறுப்பது அல்லது கூடாது என்று மார்க்கம் கூறியதை ஆகுமாக்குவது. நிராகரிப்பான விஷயங்களை மார்க்கத்திற்குள் புகுத்துவது. மார்க்கம் உறுதிசெய்த அடிப்படைகளை மறுப்பது இதுபோன்ற செயல்களை ஸன்தகா என்று கூறப்படும்.

26. இஸ்லாமில் இரண்டாவது நூற்றாண்டில் கிரேக்க தத்துவங்களை அரபி மொழியில் மொழிபெயர்த்து பிறகு அதன் அடிப்படையில் இஸ்லாமிய மார்க்கக் கல்விகளை சிலர் அமைக்க முயற்சித்தனர். குறிப்பாக கிரேக்க தத்துவங்களில் இறைவன் பற்றி கூறப்பட்டிருந்த தத்துவங்களை அடிப்படையாக வைத்து குர்ஆன் ஸுன்னாவில் கூறப்பட்ட அல்லாஹ்வின் தன்மைகளையும் பெயர்களையும் விவாதித்தனர். தங்களது தத்துவங்களுக்கு ஒத்துவந்த அல்லாஹ்வின் தன்மைகளையும் பெயர்களையும் ஏற்றுக் கொண்டனர். தங்களின் தத்துவங்களுக்கு ஒத்துவராத அனைத்தையும் மறுத்தனர். அவற்றுக்கு மாற்றுக் கருத்து கூறினர். இப்படி இவர்கள் அமைத்த கல்விக்கு இல்முல்

وَعَلَيْكَ بِالْآثَارِ وَأَهْلِ الْآثَارِ وَإِيَّاهُمْ فَاسْأَلْ وَمَعَهُمْ فَاجْلِسْ وَمِنْهُمْ فَاقْتَبِسْ

116. ஹதீஸ்களை பற்றிப்பிடி! ஹதீஸ் அறிஞர்களை பற்றிப்பிடி! அவர்களிடம் உன் மார்க்க விளக்கங்களை கேள்! அவர்களுடன் அமர்ந்துகொள்! (அவர்களுடன் நட்புகொள்) அவர்களிடமிருந்து (மார்க்க அறிவை) கற்றுக்கொள்![27]

وَاعْلَمْ أَنَّهُ مَا عُبِدَ اللهُ بِمِثْلِ الْـخَوْفِ مِنْ اللهِ وَطِرِيقِ الْـخَوْفِ وَالْـحُزْنِ وَالشَّفَقَاتِ وَالْـحَيَاءِ مِنْ اللهِ تَبَارَكَ وَتَعَالَىٰ

117. அறிந்து கொள்! அல்லாஹ்வை பயப்படுவதைப் போன்று வேறு ஒன்றால் அல்லாஹ் வணங்கப்படுவதில்லை.[28] பயம், கவலை, (மறுமை குறித்த) அச்ச உணர்வுகள், அருள்நிறைந்த உயர்வுமிக்க அல்லாஹ்வின் முன் வெட்கப்படுவது இவை எல்லாம் அல்லாஹ்வை சிறப்பாக வணங்குவதற்குள்ள வழிகளாகும்.

وَاحْذَرْ أَنْ تَـجْلِسَ مَعَ مَنْ يَدْعُو إِلَى الشَّوْقِ وَالْـمَحَبَّةِ وَمَنْ يَـخْلُو مَعَ النِّسَاءِ وَطَرِيقِ الْـمَذْهَبِ فَإِنَّ هٰؤُلَاءِ كُلَّهُمْ عَلَى الضَّلَالَةِ

---

கலாம் என்று கூறப்படுகிறது. இன்று பெரும்பாலான மதரஸாக்களில் இன்னும் கல்வி நிறுவனங்களில் இந்தக் கல்வியும் இதன் அடிப்படையில் அமைந்த கொள்கையும் போதிக்கப்படுகின்றது. இவர்கள் தங்களை அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் என்று கூறுகின்றனர். இன்னும் நான்கு மத்ஹபுகளை பின்பற்றுகின்றவர்கள் என்று கூறுகின்றனர். ஆனால், நான்கு மத்ஹப்களுடைய இமாம்களும் அவர்களுடைய வழியில் வந்த மூத்த மார்க்க அறிஞர்களும் இந்த இல்முல் கலாமை கடுமையாக மறுத்துள்ளனர். இன்னும், அது குறித்து எச்சரிக்கை செய்திருக்கின்றார்கள்.

27. நபி ﷺ அவர்களுடைய சொல், செயல்களை **حديث** ஹதீஸ் மற்றும் **أثر** அஸர் என்று கூறப்படும். **حديث** ஹதீஸ் உடைய பன்மை **أحاديث** – அஹாதீஸ் **أثر** அஸர் உடைய பன்மை **آثار** ஆஸார். மேலும், ஸஹாபாக்களுடைய மற்றும் தாபியீன்களுடைய கூற்றுகளை தனிப்பட்ட முறையில் கூறும்போது அவற்றை அஸர் என்று கூறப்படும். பொதுவாக அஸர் என்று கூறப்பட்டால் அது நபி ﷺ அவர்களுடைய ஹதீஸ்களையும், ஸஹாபாக்கள் மற்றும் தாபியீன்களுடைய கூற்றுகளையும் எடுத்துக் கொள்ளும்.

28. (-அல்லாஹ்வை வணங்குவதில் மிக சிறந்த வணக்கம் அல்லாஹ்வை பயப்படுவதாகும்.)

118. இறை ஆசை, இறைக் காதல் (இப்படியாக ஸூஃபிக் கொள்கையின்) பக்கம் அழைப்பவர்களுடன் அமர்வதை விட்டு நீ எச்சரிக்கையாக இரு! இன்னும் பெண்களுடன் தனிமையில் இருப்பவர்களுடனும் தரீக்கா வாதிகளுடன் நீ அமர்வதைவிட்டும் நீ எச்சரிக்கையாக இரு! நிச்சயமாக இவர்கள் எல்லோரும் வழிகேட்டில் இருக்கின்றனர். (ஆகவே, இவர்களை விட்டு விலகி தூரமாக இரு!)

وَاعْلَمْ رَحِمَكَ اللهُ أَنَّ اللهَ تَبَارَكَ وَتَعَالَىٰ دَعَا الْـخَلْقَ كُلَّهُمْ إِلَىٰ عِبَادَتِهِ وَمَنَّ مِنْ بَعْدِ ذٰلِكَ عَلَىٰ مَنْ يَشَاءُ بِالْإِسْلَامِ تَفَضُّلا

119. அறிந்துகொள்! அல்லாஹ் உனக்கு கருணை காட்டுவானாக! அருள் நிறைந்த, உயர்வுமிக்க அல்லாஹ் படைப்புகள் எல்லோரையும் தன்னை வணங்குவதற்கு அழைத்தான். அதற்கு பின்னர் தான் விரும்பியவர்கள் மீது தனது மேல்மிச்சமான கிருபையால் இஸ்லாமைக் கொண்டு அருள்புரிந்தான்.

## படிப்பினைகள்

*1. நட்சத்திரங்கள் பற்றிய கல்வியை தொழுகையின் நேரங்களை இன்னும் கிப்லா திசையை அறிய முடியும் அளவிற்கு மட்டும் கற்பது தவறில்லை.*

*2. அதைத்தாண்டி அந்த கல்வியை கற்பது இணைவைத்தல் அல்லது இறை நிராகரிப்பின் பக்கம் சேர்த்து விடும்.*

*3. இறையியல், இன்னும் மறுமை தொடர்பான கிரேக்க தத்துவங்களை உள்ளடக்கிய இல்முல் கலாமை கற்பதும் ஈமான் விஷயத்தில் குழப்பத்தையும் வழிகேட்டையும் உண்டாக்கி விடும்.*

*4. ஹதீஸை கற்பதும் ஹதீஸ் கலை அறிஞர்களிடம் தொடர்பு வைப்பதும் நமது வெற்றி இன்னும் பாதுகாப்புக்குரிய வழியாகும்.*

*5. மார்க்கத்தில் அடியான் எப்போதும் அல்லாஹ்வின் பயத்தை*

*தனது உள்ளத்தில் வைத்திருக்க வேண்டும். அல்லாஹ்வின் மீது அன்பு இருப்பதோடு அச்சம் ஆழமாக இருக்க வேண்டும்.*

*6. இறையச்சம் பாவங்களை விட்டு நம்மை தடுத்து நன்மைகளை செய்ய நம்மை தூண்டும்.*

*7. சூஃபிசம் பேசுவோர், இறைக்காதல் பேசுவோர், அந்நியப் பெண்களை தனக்கு நெருக்கமாக வைத்திருப்போர், தரீக்காக்களை உடையோர் ஆகிய இவர்கள் எல்லோரை விட்டும் நீ விலகி தூரமாக இரு!*

*8. அல்லாஹ்வை அவன் கட்டளையிட்டபடி வணங்குவதை உனது வாழ்க்கையின் குறிக்கோளாக, நோக்கமாக ஆக்கிக் கொள்!*

*9. அல்லாஹ்வை வணங்குவதற்கும் இஸ்லாமிய மார்க்கத்தில் நீடித்து, நிலைத்திருப்பதற்கும் அல்லாஹ்வின் அருளை எப்போதும் அவனிடம் வேண்டியவனாக இரு!*

---------------------

# பாடம் 77

## நபித்தோழர்கள் விஷயத்தில் கவனமாக இரு!

وَالْكَفُّ عَنْ حَرْبِ عَـلِـيٍّ وَمُعَاوِيَةَ وَعَائِشَةَ وَطَلْحَةَ وَالزُّبَيْرِ رَحِمَهُمُ اللهُ أَجْمَعِينَ وَمَنْ كَانَ مَعَهُمْ وَلَا تُـخَاصِمْ فِيهِمْ وَكِلْ أَمْرَهُمْ إِلَى اللهِ تَبَارَكَ وَتَعَالَىٰ فَإِنَّ رَسُولَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ إِيَّاكُمْ وَذِكْرَ أَصْحَابِي وَأَصْهَارِي وَأَخْتَانِي وَقَوْلُهُ إِنَّ اللهَ تَبَارَكَ وَتَعَالَىٰ نَظَرَ إِلَىٰ أَهْلِ بَدْرٍ فَقَالَ اعْمَلُوا مَا شِئْتُمْ فَإِنِّي قَدْ غَفَرْتُ لَكُمْ

120. அலீ ﵁, முஆவியா ﵁, ஆயிஷா ﵂, தல்ஹா ﵁, ஸுபைர் ﵁ ஆகியோர் போர் செய்ததைப் பற்றி பேசாமல் இருக்க வேண்டும். இவர்கள் அனைவர் மீதும் இவர்களுடன் இருந்தவர்கள் மீதும் அல்லாஹ் கருணை புரிவானாக! இவர்கள் விஷயத்தில் நீ விவாதிக்காதே! அவர்களின் காரியத்தை அருள் நிறைந்த, உயர்வுமிக்க அல்லாஹ்விடம் ஒப்படைத்துவிடு! ஏனெனில், ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள்: எனது தோழர்களையும் எனது மனைவிகளின் குடும்பத்தார்களையும் எனது மருமகன்களையும் தவறாக பேசுவதைவிட்டும் நான் உங்களை எச்சரிக்கின்றேன். மேலும், நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: நிச்சயமாக அருள் நிறைந்த, உயர்வுமிக்க அல்லாஹ் பத்ரு வாசிகளை (-பத்ரு போரில் கலந்து கொண்ட ஸஹாபாக்களை) பார்த்தான். மேலும், கூறினான்: நீங்கள் விரும்பியதை செய்யுங்கள்! நிச்சயமாக நான் உங்களை மன்னித்துவிட்டேன்.

## படிப்பினைகள்

**1.** அல்லாஹு தஆலா தனது நபி ﷺ அவர்களுக்கு இந்த உம்மத்தில் சிறந்தவர்களை தோழர்களாக தேர்ந்தெடுத்தான்.

**2.** அந்த தோழர்களில் சிறப்புகளில் ஏற்ற தாழ்வு இருந்தாலும் அவர்கள் அனைவரும் இந்த உம்மத்தில் வந்த பின்னோரை விட மிகச் சிறந்தவர்களே.

**3.** அந்த தோழர்கள் மனிதர்கள் என்ற அடிப்படையில் அவர்களிடம் சில தவறுகள் நடந்திருக்கலாம்.

**4.** தவறுகளையும் குற்றங்களையும் விட்டு பாதுகாக்கப்பட்டவர்கள் நபிமார்கள் இன்னும் ரஸூல்மார்கள் மட்டுமே.

**5.** அந்த தோழர்கள் இந்த இஸ்லாமிய மார்க்கத்திற்காக செய்த தியாகங்கள், அர்ப்பணிப்புகள் இன்னும் அவர்கள் செய்த வணக்க வழிபாடுகளின் காரணமாக அல்லாஹ் அவர்களை மன்னிக்க போதுமானவன்.

**6.** அல்குர்ஆனின் பல வசனங்களில் தான் அவர்களை மன்னித்துவிட்டதாக அல்லாஹ் வாக்களித்துள்ளான்.

**7.** பொதுவாக உம்மத்தில் பாவம் செய்த பாவிகளையே அவர்களிடம் உள்ள நன்மையின் பொருட்டால் அல்லாஹ் மன்னிப்பான் என்றிருக்க இந்த உம்மத்திலேயே இந்த மார்க்கத்திற்காக உயிரையும் குடும்பத்தையும் செல்வத்தையும் அர்ப்பணம் செய்த, இன்னும் நல்லமல்களையும் ஏராளம் செய்த அந்த ஸஹாபாக்களின் பாவங்களை அல்லாஹ் எப்படி மன்னிக்காமல் இருப்பான்.

**8.** அந்த ஸஹாபாக்கள் வணக்கசாலிகள், உள்ளத்தால் அல்லாஹ்வை மட்டுமே நாடியவர்கள் என்று பல்வேறு

*வசனங்களில் அல்லாஹ் ஸஹாபாக்களுக்கு சான்று கூறி இருக்கிறான். பார்க்க : 48 : 29, 47 ; 2, 47 : 17, 19, 48 :3, 48 : 26,*

*9. நாம் ஸஹாபாக்களை குறைக் கூறக்கூடாது, அவர்களை விமர்சனம் செய்யக் கூடாது என்று நபி ﷺ அவர்கள் பல ஹதீஸ்களில் நம்மை எச்சரித்துள்ளார்கள்.*

*10. நபி ﷺ அவர்களின் காலத்தில் வாழ்ந்த முனாஃபிக்குகள் ஸஹாபாக்களை விமர்சித்தார்கள். அதை அல்லாஹ்வும் அல்லாஹ்வுடைய ரஸூலும் கண்டித்தார்கள்.*

*11. ஆகவே, யார் இன்று ஸஹாபாக்களை விமர்சிப்பார்களோ, அவர்களின் குறைகளை மக்களுக்கு மத்தியில் பகிரங்கப்படுத்தி குறை பேசுவார்களோ அவர்கள் அந்த முனாஃபிக்குகளை பின்பற்றுகிறவர்கள் ஆவார்கள்.*

*12. ஸஹாபாக்களின் நன்மையான செயல்களில் நாம் அவர்களை பின்பற்ற வேண்டும் என்று நமக்கு அல்லாஹ் வழிகாட்டி இருக்கிறான். பார்க்க 9 : 100. அவர்களின் குற்றங்களுக்காக நாம் அல்லாஹ்விடம் அவர்களுக்காக பாவமன்னிப்புத் தேட வேண்டும் என்று அல்லாஹ் நமக்கு வழிகாட்டி இருக்கிறான். பார்க்க : 59 : 10*

*13. ஆகவே, எந்த ஒரு காரணத்தை முன்னிட்டும், எந்த ஒரு சூழ்நிலையிலும் ஸஹாபாக்களைப் பற்றி தப்பெண்ணம் வைப்பதும், அவர்களைக் கேலி கிண்டல், பரிகாசம் செய்வதும், அவர்களை விமர்சனம் செய்வதும், அவர்களின் குறைகளை பகிரங்கப்படுத்தி பேசுவதும், அவர்களின் நன்மதிப்பை குறைக்கும் விதமாக மக்களுக்கு மத்தியில் பிரச்சாரம் பேசுவதும் இன்னும் இதுபோன்ற எந்த ஒரு சொல் செயலும் அறவே நம்மிடம் இருக்கக் கூடாது.*

14. நபித்தோழர்களின் உயர்வை பேசுவதாலும் பரப்புவதாலும் அவர்கள் மீது நேசம் வைப்பதாலும் அல்லாஹ் நமது மார்க்கப்பற்றை அதிகப்படுத்துகிறான், நமது ஈமானை அதிகப்படுத்துகிறான், அவர்களின் வழியில் நாமும் வழிநடக்க நமக்கு அருள் புரிகிறான்.

15. நபித்தோழர்களை விமர்சிப்பவர்களின் உள்ளங்கள் இறுகிவிடும், அவர்களின் மார்க்கப்பற்றில் பலவீனம் ஏற்பட்டுவிடும், அவர்கள் இந்த உம்மத்தில் குழப்பம் செய்பவர்களாகவும் இந்த உம்மத்தை அழிவில் தள்ளுபவர்களாகவும் இருப்பார்கள். அல்லாஹ் பாதுகாப்பானாக! ஆமீன்.

---------------------

# பாடம் 78

## பிறர் செல்வத்தை ஆசைப்படாதே!

وَاعْلَمْ رَحِمَكَ اللهُ أَنَّهُ لَا يَحِلُّ مَالُ امْرِئٍ مُسْلِمٍ إِلَّا بِطِيبَةٍ مِنْ نَفْسِهِ وَإِنْ كَانَ مَعَ رَجُلٍ مَالٌ حَرَامٌ فَقَدْ ضَمِنَهُ لَا يَحِلُّ لِأَحَدٍ أَنْ يَأْخُذَ مِنْهُ شَيْئًا إِلَّا بِإِذْنِهِ فَإِنَّهُ عَسَىٰ أَنْ يَتُوبَ هٰذَا فَيُرِيدُ أَنْ يَرُدَّهُ عَلَىٰ أَرْبَابِهِ فَأَخَذْتَ حَرَامًا

121. அறிந்துகொள்! அல்லாஹ் உனக்கு கருணை காட்டுவானாக! முஸ்லிமான மனிதருடைய செல்வம் அவர் மனவிருப்பம் இல்லாமல் உனக்கு ஆகுமாகாது. ஒருவரிடம் ஹராமான செல்வம் இருந்தாலும் அவர்தான் அதற்கு பொறுப்பாளர் ஆவார். வேறு ஒருவர் அவரிடமிருந்து அந்த ஹராமான செல்வத்திலிருந்து எதையும் எடுப்பது ஆகுமாகாது, அவருடைய அனுமதி இருந்தாலே தவிர. ஏனெனில், அவர் தவ்பா செய்திருக்கக்கூடும். அப்போது அந்த செல்வத்தை அதன் உரிமையாளர்களிடம் அவர் திரும்ப ஒப்படைக்க நாடலாம். ஆகவே, நீ ஹராமை (உனக்கு ஆகுமாகாத ஒன்றை) எடுத்தவனாக ஆகிவிடுவாய்.

### படிப்பினைகள்

***1.** அல்லாஹ்வின் மார்க்க சட்டம் நீதம் இன்னும் நேர்மை, சுத்தம், ஒழுக்கம், நேரிய பண்புகள், தனி மனித, இன்னும் சமூக நன்மைகள் மீது கட்டமைக்கப்பட்டதாகும்.*

***2.** யாரும் யார் மீது எல்லை மீறுவதற்கும் மார்க்கம் கூறாத காரணத்தை தனக்கு நியாமாக கூறிக் கொண்டு பிறர் உயிர் அல்லது பொருள், அல்லது உரிமை மீது எல்லை மீறுவதற்கும் அறவே அனுமதி இல்லை.*

*3.* அல்லாஹ்வும் ரஸூல் ﷺ அவர்களும் கூறாத எந்த ஒரு வழியைக் கொண்டும் பிறர் செல்வத்தை ஆகுமாக்க தேடுவது அனுமதிக்கப்பட்டதல்ல.

*4.* உலக வாழ்க்கையில் எல்லோரும் நிம்மதியாக பாதுகாப்பாக இருக்க வேண்டுமென்றால் யாரும் யார் மீது எந்த ஒரு உரிமையிலும் எல்லை மீறாமல் இருக்க வேண்டும். அப்படி மீறினால் மீறியவர் மீது அவரின் குற்றத்திற்கு ஏற்ப தண்டனை கொடுக்கப்பட வேண்டும்.

*5.* அல்லாஹ்வின் மார்க்கமாகிய இஸ்லாமில் மட்டுமே இத்தகைய பாதுகாப்பான சமூக அமைப்பும் குற்றவியல் தண்டனைகளும் உண்டு.

*6.* பிறர் ஒருவர் குற்றவாளி என்பதால் அவர் மீது நாம் குற்றம் செய்வதற்கும் அவரின் செல்வத்தில் நாம் எல்லை மீறுவதற்கும் நமக்கு அனுமதி இல்லை.

*7.* குற்றம் செய்தவர் நீதிபதி அல்லது ஆட்சியாளர் மூலம் கண்டிக்கவும் தண்டிக்கவும்படுவார். தனி நபர்கள் மூலம் அல்ல. தனி நபர்கள் குற்றங்களுக்கு தண்டனை கொடுத்தால் பூமியில் குழப்பங்கள் இன்னும் கலகங்கள் மட்டுமே ஏற்படும்.

---------------------

# பாடம் 79

## பிறரிடம் யாசிக்காதே! சுயமாக உழைத்து வாழ்!

والْـمَكَاسِبُ مُطْلَقَةٌ مَا بَانَ لَكَ صِحَّتُهُ فَهُوَ مُطْلَقٌ إِلَّا مَا ظَهَرَ فَسَادُهُ وَإِنْ كَانَ فَاسِدًا يَأْخُذْ مِنَ الْفَسَادِ مُـمْسِكَةً نَفْسَهُ وَلَا تَقُولُ أَتْرُكُ الْـمَكَاسِبَ وَآخُذُ مَا أَعْطَوْنِي لَمْ يَفْعَلْ هٰذَا الصَّحَابَةُ وَلَا الْعُلَمَاءُ إِلَىٰ زَمَانِنَا هٰذَا وَقَالَ عُمَرُ بْنُ الْـخَطَّابِ رَضِيَ اللّٰهُ عَنْهُ كَسَبٌ فِيهِ بَعْضُ الدَّنِيَّةِ خَيْرٌ مِنْ الْـحَاجَةِ إِلَى النَّاسِ

122. சம்பாத்தியங்கள் எல்லாம் பொதுவானவை ஆகும். அவற்றில் எது சரியான சம்பாத்தியம் என்று உனக்கு தெளிவாக தெரியுமோ அது பொதுவாக ஹலால் ஆகும். எது ஃபஸாத் -கெட்டது என்று வெளிப்படையாக தெரியுமோ அதை நீ தவிர்ந்துகொள்! கெட்ட சம்பாத்தியமாக இருந்தால் உயிரை பாதுகாக்கின்ற அளவிற்கு அதிலிருந்து அனுபவித்துக் கொள்வது குற்றமில்லை. நான் சம்பாத்தியங்களை விட்டுவிடுவேன், மக்கள் எனக்கு கொடுப்பதை நான் வாங்கி (வாழ்ந்து) கொள்வேன் என்று நீ கூறக்கூடாது. இவ்வாறு நபித்தோழர்களும் செய்யவில்லை; இன்றைய நமது காலம்வரை உள்ள அறிஞர்களும் (உண்மையான மார்க்க அறிஞர்களும்) செய்யவில்லை. உமர் இப்னுல் கத்தாப் ﵁ கூறுகிறார்கள்: கொஞ்சம் தாழ்ந்த (-மதிப்பு குறைவான) சம்பாத்தியம் மக்கள் பக்கம் தேவையாகுவதைவிட சிறந்ததாகும்.

### படிப்பினைகள்

*1. அல்லாஹ் உடைய மார்க்கம் நடுநிலையானதும்*

நேர்மையானதும் ஆகும்.

2. கொள்கை, வணக்க வழிபாடு, சமூக உறவுகள், வர்த்தக கொடுக்கல் வாங்கல் என அனைத்தும் தெளிவான வழிகாட்டல்கள், இன்னும் கட்டளைகளைக் கொண்டு கட்டமைக்கப்பட்டுள்ளன.

3. ஒருவர் மார்க்கத்தின் ஒரு பகுதிக்கு முக்கியத்துவம் அளித்து மற்றொரு பகுதியை பாழாக்குவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்.

4. சமூகத்தின் மீது எந்த ஒரு முஸ்லிமும் சுமையாக இருக்க கூடாது.

5. ஒவ்வொரு முஸ்லிமும் ஆக்கப்பூர்வமான பங்களிப்பை சமூகத்தில் அளிக்க வேண்டும்.

6. நான் வணக்க வழிபாட்டில் ஈடுபட போகிறேன், உலகத்தின் மீது எனக்கு ஆசை இல்லை என்று கூறி, திருமணம் முடிக்காமல் இருப்பதற்கோ, அல்லது அல்லாஹ் எனக்கு உணவளிப்பான், அவன் மீது நான் தவக்குல் வைத்துவிட்டேன் என்று கூறி தொழில் செய்யாமல் பிறர் உதவியை எதிர்பார்த்து இருப்பதற்கோ இஸ்லாமிய மார்க்கத்தில் யாருக்கும் அனுமதி இல்லை.

7. யாசிப்பது, கையேந்துவது, பிறரிடம் தனது தேவையை எதிர்பார்ப்பது என அனைத்தையும் மார்க்கம் தடை செய்துள்ளது.

8. உழைத்து சம்பாதிப்பதில் வெட்கப்படக் கூடாது. ஹலாலான உழைப்பு கண்ணியமான கையேந்துதலை விட சிறந்ததாகும்.

9. உண்மையான முஸ்லிம் உழைத்து தானும் உண்டு பிறருக்கும் தான தர்மம் செய்வார்.

---------------------

# பாடம் 80

## தொழுகை விஷயத்தில் வழிகாட்டுதல்

وَالصَّلَوَاتُ الْـخَمْسُ جَائِزَةٌ خَلْفَ مَنْ صَلَّيْتَ خَلْفَهُ إِلَّا أَنْ يَكُونَ جَهْمِيًّا فَإِنَّهُ مُعَطِّلٌ وَإِنْ صَلَّيْتَ خَلْفَهُ فَأَعِدْ صَلَاتَكَ وَإِنْ كَانَ إِمَامُكَ يَوْمَ الْـجُمُعَةِ جَهْمِيًّا وَهُوَ سُلْطَانٌ فَصَلِّ خَلْفَهُ وَأَعِدْ صَلَاتَكَ وَإِنْ كَانَ إِمَامُكَ مِنَ السُّلْطَانِ وَغَيْرِهِ صَاحِبَ سُنَّةٍ فَصَلِّ خَلْفَهُ وَلَا تُعِدْ صَلَاتَكَ

123. ஐந்து நேரத் தொழுகைகளை நீ யாருக்குப் பின்னால் தொழுதாலும் அவை கூடிவிடும். ஆனால், அவர் ஜஹ்மிய்யா கொள்கையை உடையவராக இருந்தாலே தவிர. அவர் அல்லாஹ்வின் தன்மைகளை பொருளற்றதாக நம்பக்கூடியவர் ஆவார். (அல்லாஹ்வை தன்மைகள் அற்றவனாக நம்புகிறார்.) அவருக்குப் பின்னால் நீ தொழுதால் உனது தொழுகையை நீ மீட்டுத் தொழுதுகொள்! (-திரும்பத் தொழுது கொள்!) வெள்ளிக்கிழமை ஜுமுஆ தொழவைக்கக் கூடிய உனது இமாம் மன்னராகவும் ஜஹ்மிய்யா கொள்கையுடையவராகவும் இருந்தால் அவருக்கு பின்னால் நீ தொழுது கொள்! பிறகு, உனது தொழுகையை நீ மீட்டுக்கொள்! உனக்கு தொழவைப்பவர் மன்னர் அல்லது வேறு ஒருவராக இருந்து, அவர் ஸுன்னாவை பின்பற்றுகின்றவராக இருந்தால் அவருக்குப் பின்னால் நீ தொழுதுகொள்! உனது தொழுகையை நீ மீட்க வேண்டாம்.

### படிப்பினைகள்

*1. தொழுகை மிக முக்கியமான அமலாக இருப்பதுடன் அது ஒரு கூட்டு வணக்கமாகவும் இருக்கிறது.*

*2. முஸ்லிமான ஆண்கள் ஐந்து நேர தொழுகைகளை ஜமாஅத்துடன் - கூட்டாக நிறைவேற்ற வேண்டும். இதுதான் பொதுவான விதியாகும். சில நிர்ப்பந்தமான சூழ்நிலைகளில் மட்டும் மார்க்கம் தனித்து தொழுவதற்கு அனுமதி அளித்துள்ளது.*

*3. தொழுகை நடத்துகிற இமாம் குஃப்ர் அல்லது ஷிர்க் உடைய காரியங்களில் ஒன்றை செய்பவராக இருந்தால் அவரை விட்டு பிரிந்து தனியாக தொழுவதில் தவறில்லை.*

*4. தான் யார் பின்னால் தொழுதோமோ அந்த இமாம் ஷிர்க் அல்லது குஃப்ரான கொள்கையில் உள்ளவர் என்று தெரிந்தால் அந்த தொழுகையை மீட்டித் தொழவேண்டும்.*

*5. ஷிர்க் அல்லது குஃப்ர் என்று அறிஞர்களால் முடிவு செய்யப்பட்ட செயல்கள் அல்லாத வேறு எந்த ஒரு பாவத்தை ஒருவர் செய்தாலும் அது அவருக்கு பின்னால் நாம் தொழுவதை விட்டும் நம்மை தடுக்காது.*

---------------------

# பாடம் 81

# நபியவர்களின் இரு மந்திரிகளை மறந்து விடாதே!

وَالْإِيمَانُ بِأَنَّ أَبَا بَكْرٍ وَعُمَرَ رَحْمَةُ اللهِ عَلَيْهِمَا فِي حُجْرَةِ عَائِشَةَ مَعَ رَسُولِ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَدْ دُفِنَا هُنَاكَ مَعَهُ فَإِذا أَتَيْتَ الْقَبْرَ فَالتَّسْلِيمُ عَلَيْهِمَا وَاجِبٌ بَعْدَ رَسُولِ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ

124. அபூ பக்ர் ﵁ மற்றும் உமர் ﵁ -அல்லாஹ்வின் கருணை அவர்கள் மீது இறங்கட்டும்- இவர்கள் இருவரும் ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களுடன் ஆயிஷா ﵂ அவர்களுடைய அறையில் அங்கு அடக்கம் செய்யப்பட்டுள்ளார்கள். ஆகவே, நபி ﷺ அவர்களுடைய கப்ருக்கு நீ வந்தால் ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களுக்கு ஸலாம் கூறிய பின்னர் அவ்விருவருக்கும் ஸலாம் கூறுவது கட்டாயமாகும்.

## படிப்பினைகள்

*1. குர்ஆனையும் ஸுன்னாவையும் சரிவர கற்றவர் இன்னும் அதை பின்பற்றுகிற ஒவ்வொரு முஸ்லிமும் இந்த மார்க்கத்தில் அபூ பக்ர் இன்னும் உமர் ஆகிய இருவரின் கண்ணியத்தையும் மதிப்பையும் கண்டிப்பாக அறிவார்.*

*2. இந்த இருவரையும் குறைகூறுபவர் வானத்தைப் பார்த்து ஊளையிடும் நாய்களைப்போல் ஆவார்.*

*3. அல்லாஹ் இந்த உம்மத்தை ஏனைய உம்மத்துகளைப் பார்க்கிலும் கண்ணியப்படுத்தி இருக்கிறான். இந்த உம்மத்தில் ஸஹாபாக்களை சிறப்பித்திருக்கிறான். ஸஹாபாக்களில்*

சொர்க்கம் வாக்களிக்கப்பட்ட பத்து தோழர்களை மேன்மைப்படுத்தி இருக்கிறான். அந்த பத்து தோழர்களில் நான்கு கலீஃபாக்களை சிறப்புகளாலும் உயர்வுகளாலும் அல்லாஹ் உயர்த்தியிருக்கிறான். அந்த நால்வரில் அபூ பக்ர் இன்னும் உமர் ஆகிய இருவரும் நபி ﷺ அவர்களுக்கும் அல்லாஹ்விற்கும் மிகவும் நெருக்கமானவர்கள். அந்த இருவரில் அபூ பக்ர் அவர்கள் அல்லாஹ்விடத்திலும் நபி ﷺ அவர்களிடத்திலும் அந்தஸ்த்தாலும் சிறப்பாலும் மிகவும் உயர்ந்தவர்கள். இதை இந்த உம்மத்தில் உள்ள கோணல் புத்தியற்ற எல்லோரும் ஏற்பார்கள்.

4. முனாஃபிக்குகளின் வாரிசாகவும் இப்லீஸுகளின் முகவர்களாகவும் இருக்கும் குதர்க்கவாதிகளும் இந்த உம்மத்தை பிரிக்க நினைக்கும் கலகவாதிகளும் ஸஹாபாக்களை குறை கூறுவார்கள். உண்மை முஃமின்கள் யாரும் அந்த தோழர்களை குறை கூற மாட்டார்கள். மாறாக, அவர்களின் சிறப்புகளையும் தியாகங்களையும் தாங்களும் அறிவதோடு தங்கள் வருங்கால தலைமுறைக்கும் எடுத்து சொல்வார்கள்.

5. ஹஜ்ஜுக்கும் உம்ராவிற்கும் செல்லும் புனிதப் பயணிகள் மஸ்ஜித் நபவி சென்று தொழுத பின்னர் நபி ﷺ அவர்களுக்கு ஸலாம் கூற செல்வார்கள். அப்போது அன்புடனும் பாசத்துடனும் மிகுந்த மரியாதையுடனும் அபூ பக்ர், உமர் ஆகிய இருவர் மீதும் ஸலாம் கூறி, அவ்விருவருக்கும் அல்லாஹ்விடம் துஆவும் கேட்பார்கள்.

6. அபூ பக்ர் இன்னும் உமர் ஆகிய இருவரும் எனது மந்திரிகள் என்று வருகிற நபிமொழிகள் அறிஞர்களின் கூற்றுப்படி பலவீனமானதாகும். இருப்பினும் நபித்தோழர்களுக்கு மத்தியில் அந்த இருவருக்கும் சமமாக யாரும் இருக்கவில்லை என்பது ஸஹீஹான ஹதீஸ்கள் மூலம் உறுதியான செய்தியாகும்.

**7.** அவ்வாறே, நானும் அபூ பக்ரும் உமரும் என்று தன்னுடன் அபூ பக்ர், உமர் ஆகிய இருவரையும் இணைத்து நபி ﷺ அவர்கள் கூறிய பல ஹதீஸ்கள் உள்ளன. அவையும் இவ்விருவரின் தனி சிறப்பை உறுதி செய்கின்றன.

---------------------

# பாடம் 82

## மார்க்கத்தின் கடமைகளை, ஒழுக்கங்களை விட்டுவிடாதே!

وَالْأَمْرُ بِالْـمَعْرُوفِ وَالنَّهْيُ عَنْ الْـمُنْكَرِ وَاجِبٌ إِلَّا مَنْ خِفْتَ سَيْفَهُ أَوْ عَصَاهُ

125. நன்மையை ஏவுவதும் தீமையை தடுப்பதும் கட்டாயமாகும். ஆனால், எவருடைய வாளை அல்லது பிரம்பை நீ பயந்தால் அவருக்கு முன் நீ இதை விடுவது குற்றமாகாது.[29]

وَالتَّسْلِيمُ عَلَىٰ عِبَادِ اللهِ أَجْمَعِينَ

126. அல்லாஹ்வின் அடியார்கள் அனைவருக்கும் நீ ஸலாம் கூற வேண்டும்.

وَمَنْ تَرَكَ صَلَاةَ الْـجُمُعَةِ وَالْـجَمَاعَةِ فِي الْـمَسْجِدِ مِنْ غَيْرِ عُذْرٍ فَهُوَ مُبْتَدِعٌ وَالْعُذْرُ كَمَرَضٍ لَا طَاقَةَ لَهُ بِالْـخُرُوجِ إِلَى الْـمَسْجِدِ أَوْ خَوْفٍ مِنْ سُلْطَانٍ ظَالِمٍ وَمَا سِوَىٰ ذٰلِكَ فَلَا عُذْرَ لَهُ

127. யார் ஜுமுஆ தொழுகையையும் மஸ்ஜிதில் ஜமாஅத்துடன் தொழுவதையும் தகுந்த காரணம் இன்றி விடுவாரோ அவர் **مبتدع**

---

29. மன்னர் அல்லது அதிகாரிக்கு நன்மையை ஏவி தீமையைத் தடுத்தால் அவர்கள் தன்னை கொலை செய்து விடுவார்கள் அல்லது அடித்து துன்புறுத்துவார்கள் என்று பயந்தால், அப்போது நன்மையை ஏவுவதையும் தீமையை தடுப்பதையும் விடுவது பாவமாகாது.

முப்தகிஃ -அனாச்சாரக்காரர் ஆவார். தகுந்த காரணம் என்பது நோய் ஆகும். அந்த நோயுடன் அவர் மஸ்ஜிதிற்கு செல்வதற்கு சக்திபெற மாட்டார். அல்லது அநியாயக்கார அரசனைப் பயப்படுவதாகும். இவற்றைத் தவிர வேறு ஏதும் அவருக்கு தகுந்த காரணமாக ஆகாது.

وَمَنْ صَلَّىٰ خَلْفَ إِمَامٍ فَلَمْ يَقْتَدِ بِهِ فَلَا صَلَاةَ لَهُ

128. யார் ஒருவர் ஓர் இமாமுக்கு பின்னால் தொழுது, அவரை பின்பற்றாமல் (தனியாக) தொழுவாரோ அவருக்கு அறவே தொழுகை சேராது.[30]

وَالْأَمْرُ بِالْـمَعْرُوفِ وَالنَّهْيُ عَنْ الْـمُنْكَرِ بِالْيَدِ وَاللِّسَانِ وَالْقَلْبِ بِلَا سَيْفٍ

129. நன்மையை ஏவுவதும் தீமையை தடுப்பதும் கரத்தாலும் நாவாலும் உள்ளத்தாலும் இருக்க வேண்டும். வாளால் இருக்கக்கூடாது.

وَالْـمَسْتُورُ مِنْ الْـمُسْلِمِينَ مَنْ لَمْ تَظْهَرْ لَهُ رِيبَةٌ

130. யாரைப் பற்றி (தவறான) சந்தேகம் வெளியாகவில்லையோ அவர்தான் முஸ்லிம்களில் مستور மஸ்தூர் -குறைகள் மறைக்கப்பட்டவர், குறைகள் வெளிப்படாதவர் ஆவார்.[31]

---

30. ஒருவர் மஸ்ஜிதில் முஸ்லிம்களுடன் ஓர் இமாமுக்குப் பின்னால் வரிசையில் நிற்கிறார். ஆனால், அந்த இமாம் தொழ வைக்கும்போது அவரைப் பின்பற்றாமல் அவன் தனியாக நிய்யத் செய்து தொழுகிறார். ருகூவு, ஸுஜூதுகளை அந்த இமாமுடன் சேர்ந்து வெளித்தோற்றத்திற்கு நிறைவேற்றுகின்றார். இப்படிப்பட்டவருடைய தொழுகை சேராது.
31. நம்முடைய வெளிப் பார்வைக்கு யார் நன்மைகள் செய்பவராகவும் பாவத்திலிருந்து விலகியவராகவும் இருக்கின்றாரோ அவரை அவர் நல்லவர் என்று நாம் எடுத்துக் கொள்வோம். மறைக்கப்பட்ட அவருடைய உள்ரங்கத்தைப் பற்றி நாம் தோண்டித் துருவி ஆராய மாட்டோம். யாருடைய குற்றம் குறைகள் நம்முடைய கண் பார்வைக்கு தெரிய வில்லையோ அவரை مستور மஸ்த்தூர் என்று அழைக்கப்படும்.

## படிப்பினைகள்

1. இந்த பாடத்தில் உண்மை முஸ்லிம் கடைப்பிடிக்க வேண்டிய பல ஒழுக்கங்களை ஆசிரியர் வரிசைப்படுத்துகிறார்கள்.

2. ஆபத்து ஏற்படும் என்ற சூழ்நிலையிலேயே தவிர மற்ற எல்லா நேரங்களிலும் அழகிய உபதேசங்களைக் கொண்டு ஒரு முஸ்லிம் நன்மையை மக்களுக்கு ஏவ வேண்டும். தீமையிலிருந்து மக்களை தடுக்க வேண்டும்.

3. அறிந்தவர், அறியாதவர், ஏழை, செல்வந்தர், உறவினர், அந்நியர், தலைவர், சக மனிதர், படித்தவர், பாமரர் என்ற எவ்வித பாகுபாட்டை காட்டாமல் எல்லோருக்கும் ஸலாம் முந்திக்கொண்டு சொல்ல வேண்டும். இதுவே நபி ﷺ அவர்கள் இன்னும் நபித்தோழர்களின் பழக்கமாக இருந்தது.

4. ஐந்து நேர தொழுகைகளையும் ஜுமுஆ தொழுகையையும் மஸ்ஜிதில் நிறைவேற்ற வேண்டும். ஏதாவது தகுந்த கரணம் இருந்தால் தவிர.

5. ஒரு இமாமை பின்பற்றி தொழும் போது அவருக்குப்பின் அவரை பின் தொடர்ந்து எல்லா ருக்னுகளையும் நிறைவேற்ற வேண்டும். அவரை முந்தி செய்வதோ அல்லது அவர் செய்த பின்னரும் அவருடன் அந்த ருக்னில் சேராமல் இருப்பதோ அவரின் தொழுகையை வீணாக்கிவிடும்.

6. பகிரங்கமாக, வெளிப்படையாக பாவங்களில் ஈடுபடாத எல்லோரையும் நாம் நல்லவர்களாகவே கருதுவோம். இத்தகையவர்களை مستور மஸ்த்தூர் என்று கூறப்படும்.

7. யாருடைய குற்றம் குறைகளையும் நாம் துருவித் துருவி ஆராயக் கூடாது. யாரையும் வீணாக சந்தேகப்படக் கூடாது.

--------------------

# பாடம் 83

## குர்ஆனும் ஸுன்னாவும் கூறுகின்ற கல்விதான் உண்மையாகும்.

وَكُلُّ عِلْمٍ ادَّعَاهُ الْعِبَادُ مِنْ عِلْمِ الْبَاطِنِ لَمْ يُوجَدْ فِي الْكِتَابِ وَلَا فِي السُّنَّةِ فَهُوَ بِدْعَةٌ وَضَلَالَةٌ وَلَا يَنْبَغِي لِأَحَدٍ أَنْ يَعْمَلَ لَهُ وَلَا يَدْعُوَ إِلَيْهِ

131. உள்ரங்கமான கல்வி என்று எந்த கல்விகளுக்கு எல்லாம் அடியார்கள் வக்காலத்து வாங்குவார்களோ அந்த கல்வி குர்ஆனிலும் ஸுன்னாவிலும் இல்லை என்றால் அது பித்அத்தும் வழிகேடும் ஆகும். அதன்படி அமல் செய்வது, மற்றும் அதன் பக்கம் மக்களை அழைப்பது யாருக்கும் தகுதியாகாது (-கூடாது).

### படிப்பினைகள்

*__1.__ அல்லாஹு தஆலா நமக்கு பயன் தரும் மார்க்க அறிவு ஞானங்களை அல்குர்ஆனில் கூறி இருக்கிறான். அதை நபி ﷺ ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் அவர்களுக்கு பின்னர் அவர்களின் தோழர்களும் நமக்கு தெளிவுப்படுத்தி இருக்கிறார்கள்.*

*__2.__ ஆன்மிகம் என்ற பெயரில் வீணான கற்பனைகளையும் யூகங்களையும் இந்த மார்க்கத்தில் பலர் புகுத்தி பாமர மக்களின் மார்க்கப் பற்றோடு விளையாடினர்.*

*__3.__ எங்களுக்கு மறுமை கண்ணுக்கு தெரியும், சொர்க்கத்தை, நரகத்தை நாங்கள் பார்ப்போம், ஒவ்வொரு மனிதனுக்கும் அல்லாஹ்விடம் என்ன தகுதி என்பதை நாங்கள் அறிவோம், இறந்தவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்பதை எங்கள் ஞான*

கண்களால் நாங்கள் காண்போம், உலகத்தில் நடக்கப்போகும் பல காரியங்கள் எங்களுக்கு தெரியும், நாங்கள் இப்படைப்புகளுக்கு கட்டளையிடுவோம் எங்களுக்கும் அல்லாஹ்விற்கும் இரகசிய தொடர்புகளும் நெருக்கமும் இருக்கிறது, நாங்கள் நபியவர்களின் ஆன்மாவோடு பேசுவோம், இப்படி எல்லாம் உளறி பாமர மக்களை ஆன்மிகம் என்ற பெயரில் ஏமாற்றும் பெரும் கூட்டம் இந்த உம்மத்தில் இருக்கிறது.

4. இஸ்லாமிய மார்க்கத்தில் தரீக்கா என்று பெயர் வைத்து, எங்கள் கல்விகள் ஏடுகளில் இருக்காது, இந்த கல்விகள் உள்ளத்திலிருந்து உள்ளத்திற்கு கிடைத்தவை என்று கதைவிடுவார்கள்.

5. அவர்களுக்குள் குதுப், குதுபுல் அக்தாப், கவுஸ், கவுஸ் அஃஸம், பீர், கலீஃபா, ஷைகுல் ஆரிஃபீன், நுகபா, நுஜபா, அப்தால் இப்படியாக அரசாங்க அதிகாரிகளுக்கு இருக்கும் கிரேடுகளைப் போல் மார்க்கத்தில் அல்லாஹ்வுக்கும் அவனது அடியார்களுக்கும் இடையில் இவர்கள் ஏற்படுத்திக் கொண்டு பாமர மக்களை மயக்கி வைத்துள்ளனர்.

6. சிறிதும் இறையச்சம் இல்லாமல் அல்லது மார்க்கத்தின் அடிப்படை அறிவு இல்லாமல் மார்க்கத்தின் பெயரால் மஜூசிய, இந்து மத துறவிகளின் சித்தாந்தங்களை இஸ்லாமின் பெயரால் பரப்பி தாங்களும் வழிகெட்டு மக்களையும் வழிகெடுக்கும் கூட்டம் இந்த சூஃபிகளின் கூட்டம்.

7. மூட நம்பிக்கைகளுக்கும் கற்பனைகளுக்கும் புராணங்களை விட கேடுகெட்ட கதைகளுக்கும் ஒட்டு மொத்த குத்தகை எடுத்தவர்கள் இந்த தரீக்கா கூட்டம்.

8. இவர்களால் முஸ்லிம்கள் கெட்டது கொஞ்ச நஞ்சமல்ல. இஸ்லாமுக்கு இவர்களால் ஏற்பட்ட அவமானம் வரலாற்றில் சொல்லி மாளாது. யூதர்கள் இன்னும் கிறித்துவர்களில் இருக்கும் போலி துறவிகளை விட மோசமானவர்கள் இவர்கள்.

*9. இவர்களில் சிலர் வெளிப்படையில் இக்லாஸ் இன்னும் அமல் உள்ளவர்கள் போல் தோன்றினாலும் இவர்களின் உள்ளங்களில் உள்ள கேடுகெட்ட கொள்கைகள் அல்லாஹ்வின் மார்க்கத்தின் வெளிச்சத்தில் மிகவும் மோசமானவை ஆகும்.*

*10. இந்த மார்க்கத்தில் கற்பனைகளுக்கும், மறைவானவை எனக்கு தெரியும் என்று சொல்வதற்கும் அறவே இடமில்லை.*

*11. எந்த கல்வி ஸஹாபாக்களிடமிருந்து நமக்கு கிடைக்க வில்லையோ அது கல்வி அல்ல. எந்த கல்வியை தாபியீன்கள் அறியவில்லையோ அது கல்வி அல்ல.*

*12. இந்த உம்மத்தில் கப்ரு வழிபாடுகளையும் உருவ வழிபாடுகளையும் ஷிர்க்கான சடங்குகளையும் குஃப்ரான கொள்கைகளையும் புகுத்தி இந்த உம்மத்தை கெடுத்த மொத்த குற்றமும் இந்த தரீக்கா வாதிகளையும் சூஃபி கொள்கை உடையவர்களையும் மட்டுமே சாரும்.*

*13. இந்த உம்மத்தில் ஷிர்கான சடங்குகளை உள்ளே நுழைக்க இப்லீஸ் இவர்களையே தனது ஏஜண்டாக வைத்திருக்கிறான்.*

*14. இந்த உம்மத்தில் பலர் மஸ்ஜிதை விட தர்காக்களை மதிப்பதற்கும் அவற்றின் மீது எல்லை மீறிய பக்தி கொண்டிருப்பதற்கும் இந்த சூஃபிகளே காரணம்.*

*15. இந்த உம்மத்தில் பலர் ஸஹாபாக்கள் இன்னும் தாபியீன்களை விட பின்னால் தோன்றிய பல மூடர்களை தங்கள் வழிகாட்டிகளாக எடுத்துக்கொண்டு அவர்களின் பொய் புகழ்ச்சிகளை செய்வதற்கும் அவர்களின் பெயரால் முரீது வியாபாரம் செய்வதற்கும் இந்த தரீக்காவாதிகளும் சூஃபிகளுமே முழு காரணம்.*

*16. கராமத் என்ற பெயரால் நபிமார்களின் முஃஜிஸாக்களை சிறுமைப் படுத்தும் அத்தனை பொய்யான கதைகளுக்கும் இந்த சூஃபிகளே மூல கர்த்தாக்கள் ஆவர்.*

*17.* இந்த ஸூஃபிகள் உம்மத்தில் பலருக்கு உண்மையான வணக்க வழிபாட்டின் மீதுண்டான அவர்களின் பற்றை பறித்துவிட்டனர்; இன்னும் இந்த தரீக்கா வாதிகள் கற்றுக்கொடுத்த மண்டையாட்டி தியானங்கள், இன்னும் திக்ருகள் என்ற பெயரில் செய்யும் மடத்தனமான அசைவுகள் மீது அளவிலா நம்பிக்கை ஊட்டினர்; இன்னும் இதன் மூலம் தொழுகை, நோன்பின் மூலம் அடைய முடியாத இறை நெருக்கத்தை அடையலாம் என்று இவர்களை பின்பற்றும் மடையர்களுக்கு பாடம் கற்பித்துள்ளனர்.

*18.* பாமர மக்களையும் இந்த ஸூஃபி உளறல்களையும் விட்டு விலகி இருக்கும் அறிஞர்களையும் இந்த ஸூஃபிகள் ஒரு பொருட்டாகவே மதிப்பதில்லை. அல்லாஹ்வின் சொர்க்கத்தை ஒட்டுமொத்தமாக இவர்கள் குத்தகைக்கு வாங்கி, அதை தங்கள் முரீதுகளுக்கு மட்டும் பங்கு வைத்துள்ளனர்.

*19.* ஞானம் என்ற பெயரில் இவர்கள் பேசுவதெல்லாம் சிலை வணங்கிகளின் புராணங்களை விட கேவலமாக இருக்கும்.

*20.* தத்துவம், உபதேசம், ஆன்மிக சொற்பொழிவு என்ற பெயரில் இவர்கள் கூறும் கதைகளும் உதாரணங்களும் மிகவும் அற்பமானவையாகும்.

*21.* சிலை வணங்கிகளின் கொள்கையான அத்துவைதம் - எல்லாம் கடவுள் என்பதை முஸ்லிம்களுக்கு ஆன்மிகத்தின் உச்சம் என்று கற்றுக்கொடுத்து பல முஸ்லிம்களை முஷ்ரிக்குகளாக ஆக்கியதே இந்த ஸூஃபிகளும் தரீக்கா வாதிகளும்தான்.

இவர்களை விட்டும் இவர்களின் வழிகேடுகளை விட்டும் அல்லாஹ் நம்மை பாதுகாப்பானாக! ஆமீன்.

--------------------

# பாடம் 84

## மார்க்க சட்டங்களை மீறாதே!

وَأَيُّمَا امْرَأَةٍ وَهَبَتْ نَفْسَهَا لِرَجُلٍ فَإِنَّهَا لَا تَحِلُّ لَهُ يُعَاقَبَانِ إِنْ نَالَ مِنْهَا شَيْئًا إِلَّا بِوَلِيٍّ وَشَاهِدَيْ عَدْلٍ وَصَدَاقٍ

132. எந்த பெண்ணாவது தன்னை ஓர் ஆணுக்கு அன்பளிப்பாக கொடுத்தால், அவள் அவனுக்கு ஆகுமாக மாட்டாள். அவன் அவளை அனுபவித்து விட்டால் அவ்விருவருக்கும் தண்டனை வழங்கப்படும். எந்த ஒரு பெண்ணை திருமணம் முடிப்பதும் அவனுடைய ஒரு (முஸ்லிமான) வலீ -பொறுப்பாளர், (முஸ்லிம்களில் இருந்து) இரண்டு நீதமான சாட்சிகள், மற்றும் மஹ்ர் இன்றி ஹலால் -ஆகுமானதாக ஆகாது.

### படிப்பினைகள்

*1. அல்லாஹ்வின் மார்க்கத்தில் எல்லா காரியங்களுக்கும் சட்டங்களும் வரைமுறைகளும் உள்ளன.*

*2. அவற்றை மீறுவது பெரும் குற்றமாக இந்த மார்க்கத்தில் கருதப்படும்.*

*3. அப்படியே திருமணம் செய்வதற்கும் ஒரு பெண்ணை தனக்கு ஹலால் - அனுமதிக்கப்பட்டவளாக ஆக்கிக் கொள்வதற்கும் சட்டங்கள் இன்னும் வழிமுறைகள் உள்ளன. அவை அனைத்தும் குர்ஆன் இன்னும் ஸுன்னாவில் விவரிக்கப்பட்டுள்ளன.*

*4. ஆகவே, அவற்றை மீறி எங்கள் சுய விருப்பம் என்று எந்த ஆணும் பெண்ணும் உறவு வைப்பது சட்டப்படி தண்டனைக்கு உரிய குற்றமாக மார்க்கத்தில் கருதப்படும்.*

---------------------

# பாடம் 85

## நபியின் தோழர்களைக் குறை கூறாதே!

وَإِذَا رَأَيْتَ الرَّجُلَ يَطْعَنُ عَلَىٰ أَحَدٍ مِنْ أَصْحَابِ رَسُولِ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ فَاعْلَمْ أَنَّهُ صَاحِبُ قَوْلٍ سُوءٍ وَهَوًى وَلِقَوْلِ رَسُولِ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ إِذَا ذُكِرَ أَصْحَابِي فَأَمْسِكُوا فَقَدْ عَلِمَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ مَا يَكُونُ مِنْهُمْ مِنَ الزَّلَلِ بَعْدَ مَوْتِهِ فَلَمْ يَقُلْ فِيهِمْ إِلَّا خَيْرًا وَقَوْلِهِ ذَرُوا أَصْحَابِي لَا تَقُولُوا فِيهِمْ إِلَّا خَيْرًا وَلَا تُحَدِّثْ بِشَيْءٍ مِنْ زَلَلِهِمْ وَلَا حَرْبِهِمْ وَلَا مَا غَابَ عَنْكَ عِلْمُهُ وَلَا تَسْمَعْهُ مِنْ أَحَدٍ يُحَدِّثُ بِهِ فَإِنَّه لَا يَسْلَمُ لَكَ قَلْبُكَ إِنْ سَمِعْتَ

133. ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களுடைய தோழர்களில் யார் ஒருவர் மீதும் ஒரு மனிதர் குறைகூறினால் அவர் தீய பேச்சையும் மன இச்சையும் உடையவர் என்று நீ அறிந்துகொள்! ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள்: என் தோழர்கள் விமர்சிக்கப்பட்டால் நீங்கள் வாய்மூடி இருந்து விடுங்கள்! நபி ﷺ அவர்கள் தமது மரணத்திற்கு பின்னர் தங்களது தோழர்களிடம் ஏற்படக்கூடிய தவறுகளை திட்டமாக அறிந்திருந்தார்கள். எனினும் அவர்கள் பற்றி நபி ﷺ அவர்கள் நல்லதைத் தவிர வேறு எதையும் கூறவில்லை. மேலும், நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: என் தோழர்களை குறைகூறாமல் விட்டுவிடுங்கள்! அவர்கள் விஷயத்தில் நல்லதைத் தவிர எதையும் கூறாதீர்கள்! அவர்களின் தவறுகளைப் பற்றியும் அவர்களின்

போரைப் பற்றியும் நீ பிரஸ்தாபிக்காதே! இன்னும் உனக்கு எதைப் பற்றி கல்வி அறிவு இல்லையோ அதைப் பற்றியும் பேசாதே! இதை யார் பேசினாலும் நீ அவருக்கு செவிகொடுக்காதே! ஏனெனில், நீ அதை செவியுற்று விட்டால் உனது உள்ளம் உன்னிடம் பாதுகாப்பாக இருக்காது.

## படிப்பினைகள்

*இந்த பாடத்திற்கான படிப்பினைகளை பாடம் 81 உடைய படிப்பினைகளில் பார்க்கவும்.*

---------------------

# பாடம் 86

## ஹதீஸ்களை ஏற்காதவரின் நிலை!

وَإِذَا سَمِعْتَ الرَّجُلَ يَطْعَنُ عَلَى الْآثَارِ أَوْ يَرُدُّ الْآثَارَ أَوْ يُرِيدُ غَيْرَ الْآثَارِ فَاتَّهِمْهُ عَلَى الْإِسْلَامِ وَلَا تَشُكَّ أَنَّهُ صَاحِبُ هَوًى مُبْتَدِعٌ

134. ஒரு மனிதர் ஹதீஸ்கள் மீது குறைகூறினால் அல்லது அவற்றை மறுத்தால் அல்லது ஹதீஸ்கள் அல்லாத வேறு ஒன்றை நாடினால் அவரை அவருடைய இஸ்லாமிய மார்க்கத்தில் சந்தேகித்துக்கொள்! அவர் மனஇச்சையை பின்பற்றுகின்ற அனாச்சாரக்காரர் என்பதில் நீ சந்தேகப்படாதே!

### படிப்பினைகள்

*1. அல்லாஹு தஆலா வேதத்தை இறக்கியதுடன் அதை நமக்கு விளக்கி கொடுப்பதற்கு தூதரையும் அனுப்பினான்.*

*அல்லாஹு தஆலா கூறுகிறான் :*

﴿وَأَنْزَلْنَا إِلَيْكَ الذِّكْرَ لِتُبَيِّنَ لِلنَّاسِ مَا نُزِّلَ إِلَيْهِمْ﴾

*(நபியே!) நாம் உமக்கு இந்த வேதத்தை இறக்கினோம், அவர்களுக்காக இறக்கப்பட்ட இதை நீர் அந்த மக்களுக்கு விளக்கி கூறுவதற்காக. (அல்குர்ஆன் 16 : 44)*

*2. ஆகவே, அல்குர்ஆனை புரிவதற்கு ஹதீஸ்கள் மிக அவசியம்.*

*3. ஒவ்வொரு ஹதீஸும் கண்டிப்பாக குர்ஆன் வசனங்களுக்குரிய விளக்கமாகவே இருக்கும். நாம் அதை அறியவில்லை என்றாலும் சரியே.*

*4. ஒருவர் ஹதீஸ்களை புறக்கணித்து குர்ஆன் மட்டும் போதும் என்று கூறினால் அவர் உண்மையில் குர்ஆனையும் மறுத்தவர் ஆகிவிடுவார். ஏனெனில், அல்குர்ஆனின் பல வசனங்களில் அல்லாஹ்விற்கு கீழ்ப்படிவதையும் நபிக்கு கீழ்ப்படிவதையும் அல்லாஹ் வலியுறுத்தி கூறுவதுடன் ரஸூலுக்கு கீழ்ப்படிந்தால் மட்டுமே அல்லாஹ்விற்கு கீழ்ப்படிந்ததாக ஆகும் என்று அல்லாஹ் அழுத்தமாக கூறுகிறான்.*

﴿مَنْ يُطِعِ الرَّسُولَ فَقَدْ أَطَاعَ اللَّهَ﴾

*எவர் (அல்லாஹ்வுடைய) தூதருக்கு (முற்றிலும்) கட்டுப்ப(ட்)டு (நடக்)கின்றாரோ அவர் நிச்சயமாக அல்லாஹ்வுக்கே கட்டுப்பட்டார் (அல்குர்ஆன் 4 : 80)*

﴿وَمَا أَرْسَلْنَا مِنْ رَسُولٍ إِلَّا لِيُطَاعَ بِإِذْنِ اللَّهِ﴾

*அல்லாஹ்வுடைய அனுமதிகொண்டு (மக்கள்) அவருக்கு கீழ்ப்படிந்து நடக்க வேண்டும் என்பதற்காகவே தவிர வேறு எதற்காகவும் நாம் எந்த தூதரையும் அனுப்பவில்லை. (அல்குர்ஆன் 4 : 64)*

﴿فَلَا وَرَبِّكَ لَا يُؤْمِنُونَ حَتَّىٰ يُحَكِّمُوكَ فِيمَا شَجَرَ بَيْنَهُمْ ثُمَّ لَا يَجِدُوا فِي أَنْفُسِهِمْ حَرَجًا مِمَّا قَضَيْتَ وَيُسَلِّمُوا تَسْلِيمًا﴾

*உங்கள் இறைவன் மீது சத்தியமாக! அவர்கள் தங்களுக்குள் ஏற்பட்ட சச்சரவில் உங்களை நீதிபதியாக நியமித்து நீங்கள் செய்யும் தீர்ப்பை தங்கள் மனதில் எத்தகைய அதிருப்தியுமின்றி முற்றிலும் ஏற்காத வரையில் அவர்கள் (உண்மை) நம்பிக்கையாளர்களாக ஆகமாட்டார்கள்.*

*(அல்குர்ஆன் 4 : 65)*

﴿قُلْ إِنْ كُنْتُمْ تُحِبُّونَ اللَّهَ فَاتَّبِعُونِي يُحْبِبْكُمُ اللَّهُ وَيَغْفِرْ لَكُمْ ذُنُوبَكُمْ وَاللَّهُ غَفُورٌ رَحِيمٌ ○ قُلْ أَطِيعُوا اللَّهَ وَالرَّسُولَ فَإِنْ تَوَلَّوْا فَإِنَّ اللَّهَ لَا يُحِبُّ الْكَافِرِينَ ○﴾

*(நபியே! மனிதர்களை நோக்கி) நீங்கள் கூறுங்கள்: நீங்கள் மெய்யாகவே அல்லாஹ்வை நேசிப்பவர்களாக இருந்தால் என்னைப் பின்பற்றுங்கள். உங்களை அல்லாஹ் நேசிப்பான். உங்கள் பாவங்களையும் அவன் மன்னித்து விடுவான். அல்லாஹ் மிக அதிகம் மன்னிப்பவனும், நிகரற்ற அன்புடையவனுமாக இருக்கின்றான். (நபியே! மேலும்) நீங்கள் கூறுங்கள்: அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் நீங்கள் கீழ்ப்படியுங்கள். அன்றி நீங்கள் புறக்கணித்தால் நிச்சயமாக அல்லாஹ் நிராகரிப்பவர்களை நேசிப்பதில்லை.*

*(அல்குர்ஆன் 3 : 31, 32)*

﴿وَمَا آتَاكُمُ الرَّسُولُ فَخُذُوهُ وَمَا نَهَاكُمْ عَنْهُ فَانْتَهُوا وَاتَّقُوا اللَّهَ إِنَّ اللَّهَ شَدِيدُ الْعِقَابِ ○﴾

*அவ்வூராரிடம் இருந்தவைகளில் அல்லாஹ் தன்னுடைய தூதருக்குக் கொடுத்தவைகள் அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும், அவருடைய உறவினர்களுக்கும், அனாதைகளுக்கும், ஏழைகளுக்கும், வழிப்போக்கர்களுக்கும் உரித்தானதாகும். செல்வம் உங்களிலுள்ள பணக்காரர்களுக்கிடையில் மட்டுமே சுற்றிக் கொண்டிருக்காமல் (மற்றவர்களுக்கும் கிடைக்கும் பொருட்டு, இவ்வாறு பொருளைப் பங்கிடும்படி கட்டளையிடுகின்றான்.) ஆகவே, நம்முடைய தூதர் உங்களுக்குக் கொடுத்ததை நீங்கள் (மனமுவந்து) எடுத்துக்கொள்ளுங்கள்.*

அவர் எதை விட்டும் உங்களை தடுத்தாரோ, அதைவிட்டு நீங்கள் விலகிக்கொள்ளுங்கள். (இவ்விஷயத்தில்) நீங்கள் அல்லாஹ்வுக்குப் பயந்து நடந்து கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் கடும் தண்டனை தருபவன். (அல்குர்ஆன் 59 : 7)

5. இன்னும் இதுபோன்று பல நூறு வசனங்கள் நபி ﷺ அவர்களுக்கு கீழ்ப்படிதலை வலியுறுத்துகின்றன. நமது காலத்தில் நபி ﷺ அவர்கள் உயிரோடு இல்லை. அப்படி என்றால் நமக்கு குர்ஆனை யார் விளக்குவது? நாம் யாருக்கு கீழ்ப்படிவது? இதற்கு தெளிவான பதிலாவது, நமக்கு குர்ஆனை ஹதீஸ் விரிவாக விளக்கும். நாம் நபி ﷺ அவர்களின் ஹதீஸுக்கு கீழ்ப்படிய வேண்டும். அதன் மூலம் நபி ﷺ அவர்களுக்கு நாம் கீழ்ப்படிந்தவர்களாக ஆகுவோம்.

6. ஹதீஸ்கள் குர்ஆனுக்கு பிறகு தொகுக்கப்பட்டதாக இருந்தாலும் குர்ஆன் உள்ளங்களில் பாதுகாக்கப்பட்டு இருந்ததைப் போல் ஹதீஸும் உள்ளங்களில் பாதுகாக்கப்பட்டு இருந்தது. ஹதீஸ்களில் சிலர் பொய்யான செய்திகளை உள்ளே நுழைக்க முயற்சி செய்தபோது அதை கலை எடுக்க தாபியீன்கள் இன்னும் தபவுத் தாபியீன்களில் ஒரு பெரிய கூட்டம் அல்லாஹ்வின் அருளால் உருவாகி அறிவிப்பாளர்களை அடையாளம் கண்டு அதன் மூலம் பலவீனமான இன்னும் பொய்யான ஹதீஸ்களை பிரித்தெடுத்தனர். அதற்கு பின்னர் வந்த ஹதீஸ்களை இமாம்களும் அறிவிப்பாளர்களை தரம் பிரிக்கும் பணியை சிறப்பாக செய்து அவற்றையும் நூல் வடிவில் பாதுகாத்து ஹதீஸ்களில் குழப்பம் ஏற்படாமல் காலங்காலமாக பாதுகாத்தனர்.

7. இதற்கு பின்னரும் ஒருவன் ஹதீஸ்களில் சந்தேகம் கொண்டால் அல்லது வீணான சந்தேகங்களை உருவாக்கினால், அல்லது ஹதீஸ்களை தனது அறிவை முன்னிறுத்தி பலவீனப்படுத்த

நினைத்தால் அவன் முஸ்லிமா என்பதுதான் இங்கு கேள்வியாக இருக்கும். அவனது சந்தேகங்களுக்கு நாம் பதில் கூற வேண்டிய அவசியமில்லை. அவனுடைய உள்ளத்தில் ஏற்பட்ட கோணலே அவனின் இந்த ஹதீஸ் மறுப்பு அல்லது ஹதீஸில் சந்தேகப்படுவது என்ற நிலைப்பாட்டுக்கு காரணமாகும்.

---------------------

# பாடம் 87

## மன்னர் மார்க்கத்தை மீறினாலும் நீ அவரை எதிர்க்காதே! நல்ல காரியத்தில் அவரை விட்டும் பிரியாதே!

وَاعْلَمْ أَنَّ جَوْرَ السُّلْطَانِ لَا يَنْقُصُ فَرِيضَةً مِنْ فَرَائِضِ اللهِ عَزَّ وَجَلَّ الَّتِي افْتَرَضَهَا عَلَىٰ لِسَانِ نَبِيِّهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ جَوْرُهُ عَلَىٰ نَفْسِهِ وَتَطَوُّعُكَ وَبِرُّكَ مَعَهُ تَامٌّ لَكَ إِنْ شَاءَ اللهُ تَعَالَىٰ يَعْنِي الْـجَمَاعَةَ وَالْـجُمُعَةَ مَعَهُمْ وَالْـجِهَادُ مَعَهُمْ وَكُلُّ شَيْءٍ مِنَ الطَّاعَاتِ فَشَارِكْهُمْ فِيهِ فَلَكَ نِيَّتُكَ

135. அறிந்துகொள்! அரசருடைய அநியாயம் அல்லாஹ் தனது நபியின் நாவின் வாயிலாக கடமையாக்கிய ஃபர்ழுகளில் எந்த ஒரு ஃபர்ழையும் குறைத்துவிடாது. அவருடைய அநியாயம் அவருக்குத்தான் கேடாக முடியும். நீ அவருக்கு பணிந்து நடப்பதும் அவருடன் நல்லமுறையில் நடந்துகொள்வதும் இன் ஷா அல்லாஹ் உனக்கு பரிபூரண நன்மையாக இருக்கும். அதாவது அவர்களுடன் ஜமாஅத்துடன் தொழுவது, ஜுமுஆவை நிறைவேற்றுவது, அவர்களுடன் சேர்ந்து எதிரிகளிடம் ஜிஹாது செய்வது, இன்னும் நல்லறங்கள் ஒவ்வொன்றிலும் அவர்களுடன் நீ இணைந்து செயல்படு! உனக்கு உனது நிய்யத்திற்கு ஏற்ப கூலி கிடைக்கும்.

وَإِذَارَأَيْتَ الرَّجُلَ يَدْعُو عَلَى السُّلْطَانِ فَاعْلَمْ أَنَّهُ صَاحِبُ هَوًى وَإِذا رَأَيْتَ الرَّجُلَ يَدْعُو لِلسُّلْطَانِ بِالصَّلَاحِ فَاعْلَمْ أَنَّهُ صَاحِبُ

سُنَّةٍ إِنْ شَاءَ اللهُ

136. ஒரு மனிதர் அரசருக்கு எதிராக துஆ செய்வதை நீ பார்த்தால் அவர் ஹவா -மனஇச்சை உடையவர் என்று நீ அறிந்துகொள்! ஒரு மனிதர் அரசருக்கு அவர் சீர்திருந்துவதற்காக துஆ செய்வதை நீ பார்த்தால் அவர் இன் ஷா அல்லாஹ் ஸுன்னாவை உடையவர் (மார்க்கத்தை முறையாக பின்பற்றுபவர்) என்று நீ அறிந்துகொள்!

يَقُولُ فُضَيْلُ بْنُ عِيَاضٍ لَوْ كَانَ لِي دَعْوَةٌ مَا جَعَلْتُهَا إِلَّا فِي السُّلْطَانِ

ஃபுழைல் இப்னு இயாழ் ﷺ கூறுகிறார்கள்: எனக்கு அல்லாஹ்விடம் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு துஆ இருந்தால் அதை நான் அரசர் விஷயத்தில்தான் ஆக்கியிருப்பேன்.[32]

أَخْبَرَنَا أَحْمَدُ بْنُ كَامِلٍ قَالَ حَدَّثَنَا الْـحُسَيْنُ بْنُ مُـحَمَّدٍ الطَّبَرِيُّ أَخْبَرَنَا مَرْدَوَيْهِ الصَّائِغُ قَالَ سَمِعْتُ فُضَيلًا يَقُولُ لَوْ أَنَّ لِي دَعْوَةً مُسْتَجَابَةً مَا جَعَلْتُهَا إِلَّا فِي السُّلْطَانِ قِيلَ لَهُ يَا أَبَا عَـلِـيٍّ فَسِّرْ لَنَا هٰذَا قَالَ إِذَا جَعَلْتُهَا فِي نَفْسِي لَم تَعْدُنِي وَإِذَا جَعَلْتُهَا فِي السُّلْطَانِ صَلَحَ فَصَلَحَ بِصَلَاحِهِ الْعِبَادُ وَالْبِلَادُ

எங்களுக்கு அஹ்மது இப்னு காமில் செய்தி அறிவித்தார், அவர் கூறினார்: எங்களுக்கு அல்ஹுசைன் இப்னு முஹம்மது அத்தபரி ﵀ அறிவித்தார், அவர் கூறினார், எங்களுக்கு மர்தவைஹ் அஸ்ஸாயிக் ﵀ அறிவித்தார். அவர் கூறினார், ஃபுழைல் கூற நான் செவியுற்றேன்: நிச்சயமாக எனக்கு ஏற்றுக்கொள்ளப்படுகின்ற ஒரு துஆ இருந்தால் அதை அரசர் விஷயத்தில் தவிர வேறு எதிலும் நான் பயன்படுத்தி

32. (அரசர் சீர்திருந்தி நல்லமுறையில் மக்களை வழிநடத்துவதற்காக அந்த துஆவை நான் கேட்டிருப்பேன்.)

இருக்க மாட்டேன். அவரிடம் கூறப்பட்டது: அபூ அலீ அவர்களே! இதை எங்களுக்கு விளக்குவீராக! அவர் கூறினார்: அந்த துஆவை நான் என் விஷயத்தில் பயன்படுத்தி இருந்தால் அது என்னைத்தவிர பிறருக்கு பலனாக அமைந்திருக்காது. நான் அதை மன்னர் விஷயத்தில் பயன்படுத்தினால் அவரும் சீர்திருந்துவார், அவர் சீர்திருந்துவதைக் கொண்டு மக்களும் ஊர்களும் சீராகிவிடும்!

## படிப்பினைகள்

*1. அல்லாஹ் தஆலா இந்த உலகத்தில் ஆட்சி அதிகாரத்தை தனது ஞானத்தின் படி யாருக்கு வழங்க வேண்டுமோ அவருக்கு வழங்குகிறான்.*

*2. இஸ்லாமிய மார்க்கத்தில் அரசர், இன்னும் அவரின் ஆளுநர், இன்னும் அரசு அதிகாரிகளுக்கு கீழ்ப்படிந்து நடப்பது மார்க்க கடமைகளில் உள்ளதாகும்.*

*3. அரசரோ அவரால் நியமிக்கப்பட்டவர்களோ தவறு செய்தால் அதற்கு நாம் பொறுப்பல்ல. நம்மீது கடமையாவது பாவமற்ற காரியங்களில் அவர்களுக்கு நாம் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும், அவர்களிடம் சண்டை செய்யக் கூடாது, அவர்களிடமிருந்து ஆட்சியை அல்லது அதிகாரத்தை பறிக்க சண்டை செய்யக் கூடாது.*

*4. அரசர் இன்னும் அதிகாரிகளின் நேர்மைக்கும் நன்மைக்கும் நாம் அதிகம் துஆ கேட்க வேண்டும். அவர்களை சபிக்கக் கூடாது.*

*5. அரசரை விட்டு விலகி செல்வதோ அவர் தப்பு செய்தால் அதற்காக அவரிடம் சண்டை செய்வதோ அல்லது அவரை ஆட்சியிலிருந்து நீக்க கலகம் செய்வதோ மிகப் பெரிய பாவமும் குற்றமும் ஆகும்.*

---------------------

# பாடம் 88

## அன்னையர்களை மதி!

وَلَا تَذْكُرْ أَحَدًا مِنْ أُمَّهَاتِ الْـمُؤْمِنِينَ إِلَّا بِـخَيْرٍ

137. நபி ﷺ அவர்களின் மனைவிமார்களில் -முஃமின்களின் தாய்மார்களில் எவரையும் நல்லதைக் கொண்டே தவிர நீ நினைவு கூராதே! (அவர்களைப் பற்றி நல்லதைத் தவிர வேறு எதையும் பேசாதே!)

### படிப்பினைகள்

***1.*** *அல்லாஹு தஆலா தனது நபி ﷺ அவர்களுக்கு பெண்களில் ஈமானாலும் ஒழுக்கத்தாலும் சிறந்தவர்களை மனைவிமார்களாக தேர்ந்தெடுத்தான்.*

***2.*** *நபி ﷺ அவர்களின் மனைவிமார்கள் கண்ணியத்தால் நமக்கு தாய்மார்கள் என்று அல்லாஹ் கூறினான்.*

﴿اَلنَّبِيُّ اَوْلٰى بِالْمُؤْمِنِيْنَ مِنْ اَنْفُسِهِمْ وَاَزْوَاجُهُ اُمَّهٰتُهُمْ﴾

*நம்பிக்கையாளர்களுக்கு அவர்களுடைய உயிர்களைவிட (நமது தூதரான) நபிதான் மிக்க பிரதானமானவர். அவருடைய மனைவிகளோ அந்நம்பிக்கையாளர்களுக்குத் தாய்மார்கள் ஆவார்கள். (அல்குர்ஆன் 33 : 6)*

***3.*** *இன்னும் அந்த பெண்களை அல்லாஹ் பரிசுத்தப்படுத்தி நபிக்கு தகுதியானவர்களாக கண்ணியமிக்கவர்களாக ஆக்கினான்.*

﴿وَقَرْنَ فِيْ بُيُوْتِكُنَّ وَلَا تَبَـرَّجْنَ تَبَرُّجَ الْجَاهِلِيَّةِ الْاُوْلٰى وَاَقِمْنَ الصَّلٰوةَ وَاٰتِيْنَ الزَّكٰوةَ وَاَطِعْنَ اللّٰهَ وَرَسُوْلَه اِنَّمَا يُرِيْدُ اللّٰهُ لِيُذْهِبَ عَنْكُمُ الرِّجْسَ اَهْلَ الْبَيْتِ وَيُطَهِّرَكُمْ تَطْهِيْرًا وَاذْكُرْنَ مَا يُتْلٰى فِيْ بُيُوْتِكُنَّ مِنْ اٰيٰتِ اللّٰهِ وَالْحِكْمَةِ اِنَّ اللّٰهَ كَانَ لَطِيْفًا خَبِيْرًا○﴾

*(நபியுடைய மனைவிகளே!) நீங்கள் உங்கள் (வீடுகளில் இருந்து வெளிச்சென்று திரியாது) வீடுகளுக்குள்ளாகவே தங்கி இருங்கள். முன்னிருந்த அறியாத மக்கள் (தங்களை அலங்கரித்துக் கொண்டு வெளியில் சென்று)திரிந்து கொண்டிருந்ததைப் போல் நீங்களும் திரியாதீர்கள். தொழுகையை நிலை நிறுத்துங்கள்; ஸகாத்தும் கொடுத்து வாருங்கள். அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் கட்டுப்பட்டு நடங்கள். (நபியுடைய) வீட்டார்களே! உங்களை விட்டு எல்லா அசுத்தங்களை நீக்கி, உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்கிவிடவே அல்லாஹ் விரும்புகின்றான். உங்கள் வீடுகளில் ஓதப்படும் அல்லாஹ்வுடைய வசனங்களையும், ஞான வாக்கியங்களையும் ஞாபகத்தில் வையுங்கள். (அவற்றைக் கொண்டு நல்லுணர்ச்சி பெறுங்கள்.) நிச்சயமாக அல்லாஹ் கிருபையுடையவனாகவும், அனைத்தையும் நன்கறிந்தவனாகவும் இருக்கின்றான். (அல்குர்ஆன் 33 : 33, 34)*

*4. இந்த வசனங்கள் நபி ﷺ அவர்களின் மனைவிமார்களை கண்ணியப்படுத்துவதுடன் அவர்களின் சிறப்பை நமக்கு விவரிக்கின்றன.*

---------------------

# பாடம் 89

## ஜமாஅத் தொழுகையை விட்டுவிடாதே!

وَإِذَا رَأَيْتَ الرَّجُلَ يَتَعَاهَدُ الْفَرَائِضَ فِي جَمَاعَةٍ مَعَ السُّلْطَانِ وَغَيْرِهِ فَاعْلَمْ أَنَّهُ صَاحِبُ سُنَّةٍ إِنْ شَاءَ اللهُ تَعَالَىٰ وَإِذَا رَأَيْتَ الرَّجُلَ يَتَهَاوَنُ بِالْفَرَائِضِ فِي جَمَاعَةٍ وَإِنْ كَانَ مَعَ السُّلْطَانِ فَاعْلَمْ أَنَّهُ صَاحِبُ هَوًى

138. ஒரு மனிதர் அரசருடன் அல்லது அவர் அல்லாத மற்றவருடன் ஜமாஅத்தாக ஐந்து நேர ஃபர்ழான தொழுகைகளை வழமையாக தொழுது வருவதை நீ பார்த்தால், இன் ஷா அல்லாஹ் நிச்சயமாக அவர் ஸுன்னாவை உடையவர், மார்க்கத்தை முறையாக பின்பற்றுபவர் என்று அறிந்துகொள். ஒருவர் ஐந்து நேர தொழுகைகளை ஜமாஅத்துடன் நிறைவேற்றுவதில் அலட்சியம் செய்வதை நீ பார்த்தால் அவர் அரசருக்கு ஆதரவாக இருந்தாலும் அவர் ஹவா -மன இச்சையுடையவர் (வழிகேடான சிந்தனை உள்ளவர்) என்று அறிந்துகொள்!

### படிப்பினைகள்

*__1.__ அல்லாஹ்வின் மார்க்கத்தை உறுதியாகவும் உண்மையாகவும் பின்பற்றி வருகிற முஸ்லிம் மார்க்கத்தின் ஒவ்வொரு கட்டளைக்கும் அதற்குரிய முக்கியத்துவத்தை தருவார்.*

*__2.__ மார்க்கத்தில் தனது ஆட்சியாளரை மதிப்பதும் அவருடன் சேர்ந்து வணக்க வழிபாடுகளை நிறைவேற்றுவதும் அவர் போருக்கு அழைக்கும்போது அவருடன் சேர்ந்து போருக்கு செல்வதும் மிக முக்கியமான அமலாகும்.*

3. ஆட்சியாளரிடம் குறைகள் இருந்தாலும் அவர் பின்னால் தொழுவதை தவிர்க்கக் கூடாது. அது பிரிவினையையும் குழப்பத்தையும் கலகத்தையும் உண்டாக்கி விடும்.

4. ஐங்கால தொழுகைகளை ஒவ்வொரு முஸ்லிமான ஆடவரும் ஜமாஅத்துடன் நிறைவேற்றுவதை வழக்கமாக ஆக்க வேண்டும். அப்படி செய்பவர்தான் உண்மையான அஹ்லுஸ் ஸுன்னா ஆவார்.

5. ஒருவர் வெளிப்படையில் ஆட்சியாளருடன் இருந்துகொண்டு, ஆனால் ஜமாஅத் தொழுகையை அலட்சியம் செய்தால் அவர் அஹ்லுல் பித்ஆ ஆவார்.

---------------------

# பாடம் 90

## ஹலாலும் ஹராமும் தெளிவானதாகும்

وَالْـحَلَالُ مَا شَهِدْتَ عَلَيْهِ وَحَلَفْتَ عَلَيْهِ أَنَّهُ حَلَالٌ وَكَذٰلِكَ الْـحَرَامُ
وَمَا حَاكَ فِي صَدْرِكَ فَهُوَ شُبْهَةٌ

139. ஹலால் என்று எதற்கு நீ சத்தியம் செய்து உறுதியாக சாட்சி கூறுவாயோ அது ஹலால் ஆகும். அவ்வாறுதான் ஹராமும். இன்னும் உனது நெஞ்சில் எது உறுத்துமோ அது சந்தேகமானதாகும்.[33]

وَالْـمَسْتُورُ مَنْ بَانَ سِتْرُهُ وَالْـمَهْتُوكُ مَنْ بَانَ هِتْكُهُ

140. மஸ்த்தூர் -திரையிடப்பட்டவர், நல்லவர் யாரென்றால் யாருடைய நன்மைகள் வெளிப்படையாக தெரிகிறதோ அவர் ஆவார். மஹ்த்தூக் -திரை அகற்றப்பட்டவர், பாவி யாரென்றால் யாருடைய குற்றம், பாவம் வெளிப்படையாக தெரிந்து விட்டதோ அவர் ஆவார்.

### படிப்பினைகள்

***1.*** *இந்த பாடத்தில் இரண்டு செய்திகளை ஆசிரியர் குறிப்பிடுகிறார்கள்.*

***2.*** *மார்க்கத்தில் எல்லாம் ஆதாரங்களை வைத்தே முடிவு செய்யப்படும்.*

***3.*** *அல்லாஹ்வுடைய மார்க்கத்தில் அதை கற்றவர்களுக்கு ஹலால் எது ஹராம் எது என்பது தெளிவாக தெரிந்த ஒன்றாகும்.*

---

33. குர்ஆன் ஹதீஸ் அடிப்படையில் எது ஹலால் என்று உனக்கு முழுமையாக தெரியுமோ அது உனக்கு ஹலால் ஆகும். எது ஹராம் என்று தெரியுமோ அது ஹராம் ஆகும். எது விஷயத்தில் உனக்கு சந்தேகம் இருக்குமோ அது குழப்பமானது ஆகும். ஆகவே, ஹராமை விட்டு விலகுவது போன்று குழப்பமான விஷயங்களை விட்டும் விலகி இருக்க வேண்டும்.

4. குர்ஆனும் ஸுன்னாவும் அவ்விரண்டையும் நமக்கு தெளிவுப்படுத்திவிட்டன.

5. ஆதாரங்களின் அடிப்படையில் உறுதியாக எதை ஹலால் என்று கூற முடியுமோ அதுவே ஹலாலாக இருக்கும். அவ்வாறுதான் ஹராமும்.

6. யூகங்கள், கற்பனைகள், வீண் சந்தேகங்களின் அடிப்படையில் மார்க்கத்தில் எந்த தீர்ப்பும் வழங்கப்படாது. அவற்றின் அடிப்படையில் ஒன்றை ஹராமாக ஆக்கவோ அல்லது ஒன்றை ஹலாலாக ஆக்கவோ முடியாது.

7. நம்மிடத்தில் தெளிவான ஆதாரம் இல்லாத போது ஒன்று ஹலாலாக இருக்குமோ அல்லது ஹராமாக இருக்குமோ என்று சந்தேகம், குழப்பம் வந்தால் அதை குழப்பமானது என்று நாம் ஒதுக்கிவிட வேண்டும்.

இது குறித்து தெளிவான நபிமொழியை நாம் பார்ப்போம்.

عن النُّعْمَانِ بْنِ بَشِيرٍ يَقُولُ سَمِعْتُ رَسُولَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ يَقُولُ الْحَلَالُ بَيِّنٌ وَالْحَرَامُ بَيِّنٌ وَبَيْنَهُمَا مُشَبَّهَاتٌ لَا يَعْلَمُهَا كَثِيرٌ مِنْ النَّاسِ فَمَنْ اتَّقَى الْمُشَبَّهَاتِ اسْتَبْرَأَ لِدِينِهِ وَعِرْضِهِ وَمَنْ وَقَعَ فِي الشُّبُهَاتِ كَرَاعٍ يَرْعَى حَوْلَ الْحِمَى يُوشِكُ أَنْ يُوَاقِعَهُ أَلَا وَإِنَّ لِكُلِّ مَلِكٍ حِمًى أَلَا إِنَّ حِمَى اللهِ فِي أَرْضِهِ مَحَارِمُهُ أَلَا وَإِنَّ فِي الْجَسَدِ مُضْغَةً إِذَا صَلَحَتْ صَلَحَ الْجَسَدُ كُلُّهُ وَإِذَا فَسَدَتْ فَسَدَ الْجَسَدُ كُلُّهُ أَلَا وَهِيَ الْقَلْبُ

ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூற நான் செவியுற்றேன் : ஹலால் - எது ஆகுமானதோ அது தெளிவாக இருக்கிறது. ஹராம் - எது கூடாதோ அதுவும் தெளிவாக இருக்கிறது. அவ்விரண்டுக்கும் இடையில் குழப்பமானவை இருக்கின்றன. மக்களில் பலர் அதை அறிய மாட்டார்கள். ஆகவே, யார் குழப்பமானவற்றை விட்டு விலகிவிடுவாரோ அவர் தனது மார்க்கத்தையும் கண்ணியத்தையும் பாதுகாத்துக் கொண்டார். யார் குழப்பங்களில் வீழ்வாரோ அவர் ஓர் இடையரைப் போல் ஆவார். அவர் எல்லையை ஒட்டி மேய்க்கிறார். அவர் விரைவில் அதில் விழுந்துவிடுவார். அறிந்து கொள்ளுங்கள்! நிச்சயமாக ஒவ்வொரு மன்னருக்கும் ஓர் எல்லை உண்டு. அறிந்து கொள்ளுங்கள்! அல்லாஹ்வின் எல்லை அவனது பூமியில் அவன் தடுத்த காரியங்கள் ஆகும். அறிந்து கொள்ளுங்கள்! நிச்சயமாக உடலில் ஒரு சதைத் துண்டு உள்ளது. அது சீராகிவிட்டால் உடல் முழுவதும் சீராகிவிடும். அது கெட்டுவிட்டால் உடல் முழுவதும் கெட்டுவிடும். அறிந்து கொள்ளுங்கள்! அதுதான் கல்ப் உள்ளமாகும்.

அறிவிப்பாளர் : நுஃமான் இப்னு பஷீர், நூல் : புகாரி, எண் : 50

8. இன்னும், முஸ்லிம்களில் யார் மீதும் சந்தேகப்படுவதும் பிறரின் குறைகளை துருவி துருவி ஆராய்வதும் பிறரின் தவறுகளை தேடி திரிவதும் கூடாது.

9. மனிதர்களின் வெளிப்படையான செயல்களை வைத்தே நாம் அவர்களின் தன்மைகளை முடிவு செய்வோம்.

10. நாம் யாரையும் அவர் நல்லவர் என்று புகழ்வது சரியல்ல. மாறாக அவரை மஸ்த்தூர் - திரையிடப்பட்டவர் என்று கூறுவோம். அதாவது எல்லோரிடமும் சில தவறுகள்

இருக்கலாம். நாம் அவற்றை அறிய மாட்டோம். அல்லாஹ் மிக அறிந்தவன். அவரின் தவறை அல்லாஹ் நமக்கு மறைத்துவிட்டான். ஆகவே, நாம் அவரின் குறைகளை ஆராயக் கூடாது.

***11.*** *ஒருவர் பயந்த நிலையில் பாவம் செய்துவிட்டால், அல்லது பாவம் செய்துவிட்டு அல்லாஹ்விடம் அதற்காக வருந்தி பாவமன்னிப்பு தேடிவிட்டால் அல்லாஹ் அவரை அவரின் பாவத்தை வெளிப்படுத்தி இழிவுப்படுத்தி விடமாட்டான். மாறாக, அவரின் குற்றத்தை அல்லாஹ் மறைத்துவிடுகிறான். அவர் உண்மையான உள்ளத்துடன் பாவமன்னிப்பு கேட்கும்போது அவரையும் மன்னித்து விடுகிறான்.*

***12.*** *ஒருவர் துணிவு கொண்டு பாவம் செய்யும்போது, அல்லது தனது பாவத்திற்காக வருந்தாமல் இருக்கும்போது, அல்லது அந்த பாவத்தை எல்லை மீறி தொடர்ந்து செய்யும்போது அல்லாஹ் அவர் மீது போட்டிருந்த திரையை நீக்கி அவரின் குற்றத்தை மக்கள் பார்க்கும்படியாக வெளிப்படுத்தி விடுகிறான். அப்போது அவரைப் பற்றி மக்களுக்கு நாம் என்ன எச்சரிக்கை செய்ய வேண்டுமோ அதை செய்வது நம்மீது குற்றமாகாது.*

*அல்லாஹ் நம்மை பாதுகாப்பானாக! அல்லாஹ் நம்மை மன்னிப்பானாக! ஆமீன்!*

--------------------

# பாடம் 91

# யார், எந்த கொள்கையை சேர்ந்தவர் என்பதை அவரின் வாதத்திலிருந்தே அறிந்துகொள்!

وَإِنْ سَمِعْتَ الرَّجُلَ يَقُولُ فُلَانٌ مُشَبِّهٌ وَفُلَانٌ يَتَكَلَّمُ فِي التَّشْبِيهِ فَاتَّهِمْهُ وَاعْلَمْ أَنَّهُ جَهْمِيٌّ وَإِذَا سَمِعْتَ الرَّجُلَ يَقُولُ فُلَانٌ نَاصِبِيٌّ فَاعْلَمْ أَنَّهُ رَافِضِيٌّ وَإِذَا سَمِعْتَ الرَّجُلَ يَقُولُ تَكَلَّمْ بِالتَّوْحِيدِ وَاشْرَحْ لِي التَّوْحِيدَ فَاعْلَمْ أَنَّهُ خَارِجِيٌّ مُعْتَزِلِيٌّ أَوْ يَقُولُ فُلَانٌ مُجْبِرٌ أَوْ يَتَكَلَّمُ بِالْإِجْبَارِ أَوْ تَكَلَّمَ بِالْعَدْلِ فَاعْلَمْ أَنَّهُ قَدَرِيٌّ لِأَنَّ هٰذِهِ الْأَسْمَاءَ مُحْدَثَةٌ أَحْدَثَهَا أَهْلُ الْأَهْوَاءِ

141. இன்னார் முஷப்பிஹ் என்று ஒரு மனிதர் கூறுவதை அல்லது இன்னார் தஷ்பீஹ் சம்பந்தமாக பேசுகிறார் என்று கூறுவதை நீ செவியுற்றால் அவரை நீ சந்தேகித்துக்கொள்! நிச்சயமாக அவர் ஜஹ்மி என்று நீ அறிந்துகொள்! இன்னார் நாஸிபி -முஆவியா அவர்களை நேசிப்பவர் என்று ஒருவர் கூறுவதை நீ செவியுற்றால் அவர் ராஃபிளி - அலீ ﵁ அவர்களை அளவு கடந்து புகழ்பவர் என்று அறிந்துகொள்! தவ்ஹீதை பேசு, தவ்ஹீதை எனக்கு விவரி என்று ஒருவர் கூறுவதை நீ செவியுற்றால் அவர் காரிஜி, முஃதஸிலி என்று அறிந்துகொள்! அல்லது இன்னார் ஜப்ர் கொள்கையை பேசுகிறார் என்று ஒருவர் கூறுவதை அல்லது நீதத்தைப் பற்றி பேசுகிறார் என்று கூறுவதை நீ செவியுற்றால் அவர் கதரி -விதியை மறுப்பவர் என்று அறிந்துகொள்! இந்த பெயர்கள் எல்லாம் ஹவா -மன இச்சையை

பின்பற்றுபவர்கள் ஏற்படுத்தியது என்று அறிந்துகொள்![34]

قَالَ عَبْدُ اللهِ بْنُ الْـمُبَارَكِ لَا تَأْخُذُوا عَنْ أَهْلِ الْكُوفَةِ فِي الرَّفْضِ شَيْئًا وَلَا عَنْ أَهْلِ الشَّامِ فِي السَّيْفِ شَيْئًا وَلَا عَنْ أَهْلِ الْبَصَرَةِ فِي الْقَدَرِ شَيْئًا وَلَا عَنْ أَهْلِ خُرَاسَانَ فِي الْإِرْجَاءِ شَيْئًا وَلَا عَنْ أَهْلِ مَكَّةَ فِي الصَّرْفِ وَلَا عَنْ أَهْلِ الْـمَدِينَةِ فِي الْغِنَاءِ لَا تَأْخُذُوا عَنْهُمْ فِي هٰذِهِ الْأَشْيَاءِ شَيْئًا

142. அப்துல்லாஹ் இப்னுல் முபாரக் ﵀ கூறுகிறார்கள்: ர∴ப்ழ்[35] உடைய விஷயத்தில் கூ∴பாவாசிகள் கூறுவதை நம்பாதீர்கள்.

---

34. முஷப்பிஹ்: அல்லாஹ்வின் தன்மைகளை படைப்புகளின் தன்மைகளுக்கு ஒப்பாக்கக்கூடியவர்.

ஜஹ்மி என்பவர் : "அல்லாஹ்வின் தன்மைகளை மறுப்பவர்" ஆவார்.

நாஸிபி என்பவர் : "முஆவியா ﵁ அவர்களை நேசித்து, அலீ ﵁ அவர்களை பகைத்துக் கொள்பவர்" ஆவார்.

காரிஜி என்பவர் : "மன்னர்களுக்கு எதிராக கிளர்ச்சி செய்பவர் இன்னும் பெரும் பாவம் செய்த முஸ்லிம் இஸ்லாமை விட்டு வெளியேறிவிட்டார்" என்று கூறுபவர் ஆவார்.

மு∴தஸிலி என்பவர் : "அல்லாஹ்வின் தன்மைகளை மறுப்பதுடன் குர்ஆன் படைக்கப்பட்டது என்றும் பெரும் பாவம் செய்தவர் மு∴மினுமல்ல கா∴பிருமல்ல" என்றும் கூறுபவர் ஆவார்.

ர∴பிளி என்பவர் : "அலீ ﵁ அவர்களை அளவுகடந்து நேசித்து அபூ பக்ர், உமர் ரலியல்லாஹு அன்ஹுமா அவர்களை வெறுப்பவர்" ஆவார்.

ஜப்ரி என்பவர் : "மனிதன் விதியினால் நிர்பந்திக்கப்பட்டவன், அவனுக்கு என்று எந்த தனி சுய விருப்பமும் இல்லை, அல்லாஹ்வின் விதியின் முன்னால் மனிதனும் எந்த உணர்வுமற்ற கல்லும் மனிதனும் சமம்தான்" என்று கூறுபவர் ஆவார்.

கதரி என்பவர் : "விதி என்று எதுவுமில்லை, ஒவ்வொன்றும் இவ்வுலகில் அவரவர் விருப்பப்படி அவரவர் சக்தியைக் கொண்டு அவரவர் நாட்டப்படி நடக்கின்றது, இதில் அல்லாஹ்விற்கு எவ்வித சம்பந்தமும் இல்லை, ஒரு செயல் நடப்பதற்கு முன்னால் அது நடக்குமா நடக்காதா என்பது பற்றி அல்லாஹ்விற்கு எதுவும் தெரியாது" என்று கூறுபவர் ஆவார்.

35. அலீ ﵁ அவர்களை அளவு கடந்து புகழ்வது.

(அலீ ﷺ அவர்களுக்கு எதிராக) யுத்தம் செய்வது சம்பந்தமான விஷயத்தில் சிரியா வாசிகளிடமிருந்து எந்த செய்தியையும் நம்பாதீர்கள்! விதி(யை மறுப்பது) விஷயத்தில் பஸ்ரா வாசிகளிடமிருந்து எதையும் எடுக்காதீர்கள். இர்ஜா[36] விஷயத்தில் குராஸான் வாசிகளிடமிருந்து எதையும் எடுக்காதீர்கள்! ஸர்ஃப்[37] விஷயத்தில் மக்கா வாசிகளிடமிருந்து எதையும் எடுக்காதீர்கள்! இசை விஷயத்தில் மதீனா வாசிகளிடமிருந்து எதையும் எடுக்காதீர்கள்! மேற்கூறப்பட்டவர்களிடமிருந்து எதையும் இந்த விஷயங்களில் நீங்கள் எடுக்காதீர்கள்! (அவர்கள் கூறுவதை நம்பாதீர்கள்!)

## படிப்பினைகள்

*1. குர்ஆனையும் ஸுன்னாவையும் அவற்றில் உள்ளபடி நம்பிக்கை கொண்டு ஏற்று அமல் செய்யும்போது இந்த உம்மத்தில் எவ்விதமான பிரிவினைக்கும் வழி இல்லை.*

*2. ஆனால், மக்கள் தங்கள் குறுகிய அறிவைக்கொண்டு தங்களுக்கு மத்தியில் உள்ள போட்டி பொறாமையின் காரணமாக அவற்றில் தர்க்கம் செய்தனர்; குதர்க்கம் செய்தனர்; வாதம் பிரதிவாதம் செய்தனர்.*

*3. அல்லாஹு தஆலா இப்லீசுக்கு நேரடியாக கட்டளை கொடுத்தபோதே அந்த இப்லீஸ் அல்லாஹ்வின் கட்டளையை நிராகரித்ததுடன் அல்லாஹ்விடம் எதிர்த்து மறுத்துப் பேசி தான் செய்தது சரி என்று ரப்பிடம் திமிரு பிடித்தான். அல்லாஹ் அவனை சபித்து பூமிக்கு விரட்டியபோது உனது அடியார்களை கண்டிப்பாக நான் வழிகெடுப்பேன், எனக்கு அவகாசம் கொடு என்று அல்லாஹ்விடம் அவகாசம் வாங்கிவிட்டு அவன் இந்த உலகத்திற்கு வந்திருக்கிறான்.*

---

36. ஈமான் என்பது சொல்லும் நம்பிக்கையும் மட்டும்தான். அமல் ஈமானில் சேராது என்று கூறுவதை இர்ஜா என்றும் அவ்வாறு கூறுபவரை முர்ஜி என்றும் கூறப்படும்.
37. ஸர்ஃப் என்றால் ஒரு வார்த்தையை அதனுடைய வெளிப்படையான அறியப்பட்ட அகராதிப் பொருளில் இருந்து வேறு ஒரு பொருளுக்கு திருப்புவதாகும்.

4. ஆகவே, அந்த இப்லீஸ் மக்களை ஈமானிலிருந்து வழிகெடுப்பது போலவே ஈமான் கொண்டவர்களை வழிகெடுப்பதற்காக அவன் பயன்படுத்தும் வழியாவது மார்க்கத்தில் புதிய சிந்தனைகளை அல்லது புதிய அமல்களை உண்டாக்குவதாகும்.

5. இன்னும் குர்ஆனையும் ஸுன்னாவையும் சரியாக நம்பிக்கை கொள்கிறோம், அல்லாஹ்வை அவனுடைய தகுதிக்கு தக்கவாறு வர்ணிக்கிறோம் என்று கூறிக்கொண்டு அல்லாஹ்வும் ரஸூலும் அல்லாஹ்விற்கு கூறிய தன்மைகளையும் பண்புகளையும் செயல்களையும் ஏற்க மறுப்பது, அவற்றில் மாற்றங்களை செய்வது, அவற்றை திரித்து அவற்றுக்கு வேறுபொருள் கூறுவது, இவை எல்லாம் ஷைத்தான் இந்த உம்மத்தை வழிகெடுக்க உருவாக்கிய வழிகளாகும். அல்லாஹ் யாரை பாதுகாத்தானோ அவர்களைத் தவிர மற்றவர்கள் இந்த வழியில் சென்று வழிகெட்டனர்.

6. அல்லாஹ்வின் மார்க்கத்தில் நம்பிக்கை கொள்ளுதல், ஏற்றுக் கொள்ளுதல், கீழ்ப்படிதல், கட்டுப்படுதல், என்ற அடிப்படைகளை மறுத்து விட்டு எதிர்த்துப் பேசுதல், குதர்க்கம் செய்தல், விதண்டாவாதம் செய்தல், அறிவுக்கு முரணாக மார்க்கம் இருக்குமா என்று கூறி மார்க்க ஆதாரங்களை தங்களுக்கு இப்லீஸ் கூறிய அறிவுக்கு ஏற்ப மறுத்தனர், மாற்றினர், புரட்டினர், பொருள் இல்லை என்று ஒதுக்கி வைத்தனர். இன்னும் அல்லாஹ்வின் வேதத்தையும் ஸுன்னாவையும் உள்ளது உள்ளபடி நம்பிக்கை கொள்வதை ஷிர்க் அல்லது குஃப்ர் அல்லது தஷ்பீஹ் - அல்லாஹ்வை படைப்புகளுக்கு ஒப்பாக்குவது என்று வாதம் செய்தனர். தங்கள் கொள்கையை ஏற்காதவர்களுக்கு பல புனைப் பெயர்களை கூறி விமர்சித்தனர்.

7. உண்மையான மார்க்கத்தை உண்மையாக பின்பற்றுகிற

நாமோ உம்மத்தை பிரிக்க நாடவில்லை, அவர்களை இந்த உம்மத்தை விட்டும் வெளியேற்றவும் நாடவில்லை. மாறாக, மார்க்கத்திலிருந்து பிரிந்து சென்று, ஸுன்னாவை ஏற்பதில் குழப்பம் செய்து, ஸஹாபாக்களின் நேரான பாதையிலிருந்து விலகி சென்று இஸ்லாமிய மார்க்கத்தில் புதிய கருத்துக்களையும் சிந்தனைகளையும் கொள்கைகளையும் நூதன அனுஷ்டானங்களையும் உருவாக்கியவர்கள் நம்மை நோக்கி வழிகேடர்கள் என்று கூறினர். இன்னும் நம்மை பல பெயர்களைக் கொண்டும் தன்மைகளைக் கொண்டும் வர்ணித்தனர்.

8. ஆகவே, நாம் நம்மை அடையாளப்படுத்துவதற்கும் வழிகேடர்களை அவர்களின் வழிகேட்டுக்கு ஏற்ப பிரித்து அடையாளப்படுத்துவதற்கும் நிர்ப்பந்திக்கப்பட்டோம். இந்த அடிப்படையில்தான் ஸஹாபாக்கள் உடைய வழிமுறையை விட்டு விலகி சென்று குர்ஆனையும் ஹதீஸையும் வழிகாட்டியாக ஆக்காமல், வழிகெட்ட சிந்தனைகளை கற்பித்த வழிகேடர்கள் பின்னால் சென்றார்களோ அப்போது நாம் அவர்கள் யார் பின்னால் சென்றார்களோ அவர்களின் பெயரைக் கொண்டு அவர்களை அடையாளப்படுத்தினோம். அல்லது அவர்களிடம் என்ன தன்மை இருந்ததோ, எந்த தன்மையினால், அல்லது கொள்கையினால் நேர்வழியை விட்டு விலகி சென்றார்களோ அந்த தன்மையைக் கொண்டு, அந்த கொள்கையைக் கொண்டு அவர்களை அடையாளப்படுத்தினோம்.

9. ஆகவே, நீ சத்தியத்தின் பக்கம் அழைக்கும்போது, குர்ஆன், ஸுன்னா இன்னும் ஸஹாபாக்களின் நேரான வழிமுறையின் பக்கம் மக்களை அழைக்கும்போது, பித்அத்துகளையும் அனாச்சாரங்களையும் நூதன அனுஷ்டானங்களையும் எதிர்க்கும் போது உன்னை மக்கள் எந்த பெயர் கூறி அழைத்தாலும் நீ அதை பொருட்படுத்தாதே! நீ உன்னை நான் ஒரு முஸ்லிம்,

நான் ஸுன்னாவையும் ஜமாஆவையும் ஏற்றுகொண்ட ஒருவன், நான் அல்லாஹ் அங்கீகரித்த நபித்தோழர்களின் வழியில் செல்பவன் என்று மட்டும் உன்னைப் பற்றி கூறு. எந்த ஒரு தனி நபரின் பக்கம் உன்னை இணைக்காதே! சென்றுவிட்ட நேர்வழிபெற்ற எல்லா இமாம்களையும் ஏற்றுக் கொள்! அஹ்லுஸ் ஸுன்னா உடைய அறிஞர்களின் ஏகோபித்த கருத்து என்ன என்பதை ஆதாரத்துடன் அறிந்து அந்த வழியில் செல்! ஆதாரத்தை அளவுகோலாக வை! அதே நேரம் அந்த ஆதாரத்தை உனது அறிவுக்கு ஏற்ப வளைக்க, திரிக்க, மாற்ற, மறுக்க முயற்சிக்காதே!

அல்லாஹ் உனக்கும் எனக்கும் நேர்வழியை காண்பித்து அதில் நம்மை உறுதிப்படுத்துவானாக! ஆமீன்!

---------------------

# பாடம் 92

## ஒருவர் யாரை நேசிக்கிறார் என்பதை கவனித்து அவரின் கொள்கையை முடிவு செய்!

وَإِذَا رَأَيْتَ الرَّجُلَ يُـحِبُّ أَبَا هُرَيْرَةَ وَأَنَسَ بْنَ مَالِكٍ وَأُسَيْدَ بْنَ حُضَيْرٍ فَاعْلَمْ أَنَّهُ صَاحِبُ سُنَّةٍ إِنْ شَاءَ اللّٰهُ وَإِذَا رَأَيْتَ الرَّجُلَ يُـحبُّ أَيُّوبَ وَابْنَ عَوْنٍ وَيُونُسَ بْنَ عُبَيْدٍ وَعَبْدَ اللّٰهِ بْنَ إِدْرِيسَ الْأَوْدِيَّ وَالشَّعْبِيَّ وَمَالِكَ بْنَ مِغْوَلٍ وَيَزِيدَ بْنَ زُرَيْعٍ وَمُعَاذَ بْنَ مُعَاذٍ وَوَهَبَ بْنَ جَرِيرٍ وَحَمَّادَ بْنَ سَلَمَةَ وَحَمَّادَ بْنَ زَيْدٍ وَمَالِكَ بْنَ أَنَسٍ وَالْأَوْزاعِيَّ وَزَائِدَةَ بنَ قُدَامَةَ فَاعْلَمْ أَنَّهُ صَاحِبُ سُنَّةٍ وَإِذَا رَأَيْتَ الرَّجُلَ يُـحِبُّ أَحْمَدَ بْنَ حَنْبَلٍ وَالْـحَجَّاجَ بْنَ الْـمِنْهَالِ وَأَحْمَدَ بْنَ نَصْرٍ وَذَكَرَهُمْ بِخَيْرٍ وَقَالَ بِقَوْلِهِمْ فَاعْلَمْ أَنَّهُ صَاحِبُ سُنَّةٍ

143. ஒருவர் அபூ ஹுரைரா, அனஸ் இப்னு மாலிக், உசைத் இப்னு ஹுழைர் (ரழியல்லாஹு அன்ஹும்) ஆகியோரை நேசிப்பதை நீ பார்த்தால் இன் ஷா அல்லாஹ் நிச்சயமாக அவர் ஸுன்னாவை உடையவர் (முறையாக மார்க்கத்தை பின்பற்றுபவர்) என்று அறிந்துகொள்! ஒருவர் அய்யூப் இப்னு அவ்ன், யூனுஸ் இப்னு உபைத், அப்துல்லாஹ் இப்னு இத்ரீஸ் அல்அவ்தி, ஷஅபி, மாலிக் இப்னு மிக்வல், யசீது இப்னு ஸுரைக், முஆத் இப்னு முஆத், வஹப் இப்னு ஜரீர், ஹம்மாத் இப்னு சலமா, ஹம்மாத் இப்னு சைத், மாலிக் இப்னு அனஸ், அவ்ஸாயி, ஸாயிதா

இப்னு குதாமா ﵏ ஆகியோரை நேசிப்பதை நீ பார்த்தால் அவர் ஸுன்னாவை உடையவர் என்று நீ அறிந்துகொள்! ஒருவர் அஹ்மது இப்னு ஹன்பல், அல்ஹஜ்ஜாஜ் இப்னு அல்மிஹால், அஹ்மது இப்னு நஸ்ர் ﵏ ஆகியோரை நேசிப்பவராகவும் அவர்களை நல்ல முறையில் நினைவு கூருபவராகவும் அவர்களின் கூற்றையே அவரும் கூறுவதை நீ பார்த்தால் நிச்சயமாக அவர் ஸுன்னாவை உடையவர் என்று அறிந்துகொள்!

**وَإِذَا رَأَيْتَ الرَّجُلَ جَالَسَ مَعَ رَجُلٍ مِنْ أَهْلِ الْأَهْوَاءِ فَحَذِّرْهُ وَعَرِّفْهُ فَإِنْ جَلَسَ مَعَهُ بَعْدَ مَا عَلِمَ فَاتَّقْهِ فَإِنَّهُ صَاحِبُ هَوًى**

144. ஹவா -மன இச்சையை பின்பற்றுவோரில் ஒருவருடன் ஒருவர் அமர்வதை நீ பார்த்தால் அவரை நீ எச்சரிக்கை செய்! (அவர் யாருடன் பழகுகின்றாரோ அவரைப் பற்றி) அவருக்கு அறிவித்து விடு! அவர் அவரைப் பற்றி அறிந்த பின்னரும் அவர் அவருடன் அமர்ந்தால் (பழகினால்) அவரைவிட்டு நீ தவிர்ந்துகொள்! நிச்சயமாக அவர் ஹவா -மன இச்சையை பின்பற்றுபவர் ஆவார்.

## படிப்பினைகள்

***1.** இந்த பாடத்தில் ஆசிரியர் அவர்கள் பல ஸஹாபாக்கள், இன்னும் இமாம்களின் பெயர்களை குறிப்பிடுகிறார்கள். அவர்களை நேசிப்பதையும் அவர்களைப் பற்றி உயர்வாக பேசுவதையும் ஸுன்னாவை பின்பற்றுவதின் அடையாளமாக ஆசிரியர் குறிப்பிடுகிறார்கள்.*

---------------------

# பாடம் 93

## இதுவும் நாத்திகம்தான்!

وَإِذَا سَمِعْتَ الرَّجُلَ تَأْتِيهِ بِالْأَثَرِ فَلَا يُرِيدُهُ وَيُرِيدُ الْقُرْآنَ فَلَا شَكَّ أَنَّهُ رَجُلٌ قَدْ احْتَوَىٰ عَلَى الزَّنْدَقَةِ فَقُمْ مِنْ عِنْدِهِ وَدَعْهُ

145. ஒரு மனிதரிடம் நீ ஹதீஸை கூறும்போது (அவர் அதை விட்டுவிட்டு) அவர் குர்ஆனை நாடுபவராக (குர்ஆனிலிருந்து ஆதாரம் கேட்பதாக) நீ செவியுற்றால் நிச்சயமாக அவர் நாத்திகத்தை உள்ளத்தில் வைத்திருக்கின்றார் என்பதில் அறவே சந்தேகமில்லை. ஆகவே, அவரிடமிருந்து நீ எழுந்துவிடு! அவரை விட்டு விலகிவிடு!

## படிப்பினைகள்

*1. அல்லாஹ் உடைய மார்க்கத்தை சரியாக புரிந்த முஸ்லிம் குர்ஆன் இன்னும் ஸுன்னாவை கண்ணியப்படுத்துவதிலும் மதிப்பதிலும் நேர் வழியைப் பின்பற்றுவார்.*

*2. இது விஷயத்தில் வழிகேடர்களுடைய பாதையை விட்டு விலகி இருப்பார்.*

*3. நேர்வழிபெற்ற உண்மை முஸ்லிம் அல்லாஹ்வின் பேச்சாகிய குர்ஆனுக்கு உள்ள கண்ணியத்தையும் நபி ﷺ அவர்களின் ஹதீஸுக்குள்ள கண்ணியத்தையும் தெளிவாக புரிந்திருப்பார்.*

*4. குர்ஆன் அகிலங்களை படைத்த ரப்பாகிய அல்லாஹ்வின் பேச்சாகும். அது அல்லாஹ்வின் தன்மையாகும். அது நமது தொழுகையில் நாம் அல்லாஹ்விற்கு முன்னிலையில் நாம் ஓதுகிற வேதமாகும். அது அல்லாஹ்விடமிருந்து வந்தது.*

*அல்லாஹ்வின் பக்கமே அது திரும்பும். அதன் சொல்லையும் பொருளையும் வானவத் தலைவர் நம்பிக்கைக்குரிய ஜிப்ரீல் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் நபி ﷺ அவர்களின் உள்ளத்தில் அல்லாஹ்வின் அனுமதி கொண்டு இறக்கி வைத்தார். அதன் சொல்லும் அர்த்தமும் அல்லாஹ்விடமிருந்து வந்தவை ஆகும். அதை தொழுகையிலும் தொழுகைக்கு வெளியிலும் ஓதுவது வணக்கமாகும். அதில் மனித கரங்கள் விளையாடுவதை விட்டும் அல்லாஹ் பாதுகாத்து இருக்கிறான். யாருடைய பேச்சும் அதற்கு சமமாக ஆக முடியாது.*

*5. ஹதீஸ் என்பது நபி ﷺ அவர்களின் பேச்சாகும். அதன் கருத்து அல்லாஹ்வின் புறத்திலிருந்து நபி ﷺ அவர்களுக்கு கற்பிக்கப்பட்டதாகும். மார்க்கத்தின் பக்கம் அழைப்பது எப்படி நபி ﷺ அவர்களின் கடமையாக இருந்ததோ அவ்வாறே அந்த மார்க்கத்தை மக்களுக்கு கற்பித்து கொடுப்பதும் நபி ﷺ அவர்களின் கடமையாக இருந்தது.*

*அல்லாஹு தஆலா கூறுகிறான் :*

﴿لَقَدْ مَنَّ اللّٰهُ عَلَى الْمُؤْمِنِينَ إِذْ بَعَثَ فِيهِمْ رَسُولًا مِنْ أَنْفُسِهِمْ يَتْلُوا عَلَيْهِمْ آيَاتِهِ وَيُزَكِّيهِمْ وَيُعَلِّمُهُمُ الْكِتَابَ وَالْحِكْمَةَ وَإِنْ كَانُوا مِنْ قَبْلُ لَفِي ضَلَالٍ مُبِينٍ۝﴾

*அல்லாஹ், நம்பிக்கையாளர்களின் மீது மெய்யாகவே அருள் புரிந்திருக்கின்றான். அவர்களுக்காக ஒரு தூதரை (அதுவும்) அவர்களில் இருந்தே அனுப்பினான். அவர் அவர்களுக்கு அல்லாஹ்வுடைய வசனங்களை ஓதிக் காண்பித்து, அவர்களை பரிசுத்தமாக்கியும் வைக்கின்றார். அன்றி, அவர்களுக்கு வேதத்தையும், ஞானத்தையும் கற்றுக்*

கொடுக்கின்றார். நிச்சயமாக அவர்கள் இதற்கு முன் பகிரங்கமான வழிகேட்டில்தான் இருந்தனர்.

(அல்குர்ஆன் 3 : 164)

6. அல்லாஹு தஆலா நபி ﷺ அவர்களுக்கு குர்ஆனை கொடுத்தது போன்றே அந்த குர்ஆனுடைய விளக்கத்தையும் கொடுத்தான். அதையே அல்லாஹ் ஞானம் என்று குர்ஆனில் குறிப்பிடுகிறான். நபி ﷺ அவர்களுக்கு குர்ஆன் மட்டும் கொடுக்கப்பட வில்லை. மாறாக அதனுடன் அதன் விளக்கமும் கொடுக்கப்பட்டது.

7. குர்ஆனில் கூறப்பட்ட வணக்க வழிபாட்டின் செயல் முறை விளக்கங்கள், இன்னும் குடும்பவியல், குற்றவியல், வர்த்தகவியல், சமூகவியல், அரசியல் என அனைத்து சட்டங்களுக்கும் உரிய விளக்கம் நபி ﷺ அவர்களுக்கு அல்லாஹ் ஜிப்ரீல் மூலம் கற்பித்தான். அந்த விளக்கத்தை அமானிதமாக நபி ﷺ அவர்கள் மக்களுக்கு கற்பித்து கொடுத்தார்கள். அவற்றை நபியின் தோழர்கள் பாதுகாத்து மனனம் செய்துகொண்டார்கள். பிறகு அடுத்த தலைமுறைக்கு பாதுகாப்பாக அதை எடுத்து வைத்தார்கள்; இன்னும் சேர்ப்பித்தார்கள்.

8. அல்லாஹ்வுடைய பேச்சாகிய குர்ஆனில் நபி ﷺ அவர்கள் எப்படி கூட்டவும் குறைக்கவும் முடியாதோ அவ்வாறே அல்லாஹ்வின் மார்க்கத்தில் நபி ﷺ அவர்கள் தங்கள் விருப்பத்திற்கு ஏற்ப எதையும் செய்ய முடியாது, செய்ய மாட்டார்கள். நாம் இப்போது குறிப்பிட்ட செய்திகளை பின் வரும் வசனங்கள் தெளிவுப்படுத்துகின்றன.

அல்லாஹு தஆலா கூறுகிறான் :

﴿وَأَنْزَلَ اللهُ عَلَيْكَ الْكِتَابَ وَالْحِكْمَةَ وَعَلَّمَكَ مَا لَمْ تَكُنْ تَعْلَمُ

﴿وَكَانَ فَضْلُ اللّٰهِ عَلَيْكَ عَظِيمًا﴾

*அல்லாஹ் இவ்வேதத்தையும், ஞானத்தையும் உங்கள்மீது அருட்செய்து நீங்கள் அறியாத அனைத்தையும் உங்களுக்குக் கற்பித்திருக்கின்றான். உங்கள் மீது அல்லாஹ்வுடைய அருள் மகத்தானதாகவே இருக்கின்றது. (அல்குர்ஆன் 4 : 113)*

*அல்லாஹு தஆலா கூறுகிறான் :*

﴿لَا تُحَرِّكْ بِهِ لِسَانَكَ لِتَعْجَلَ بِهِ ۝ إِنَّ عَلَيْنَا جَمْعَهُ وَقُرْآنَهُ ۝ فَإِذَا قَرَأْنَاهُ فَاتَّبِعْ قُرْآنَهُ ۝ ثُمَّ إِنَّ عَلَيْنَا بَيَانَهُ ۝﴾

*(நபியே!) இதை நீர் அவசரமாக (மனனம்) செய்வதற்காக இதற்கு (-இதை ஓதுவதற்கு) உமது நாவை அசைக்காதீர். நிச்சயமாக அதை (உமது உள்ளத்தில்) ஒன்று சேர்ப்பதும் அதை (உமது நாவினால்) ஓதவைப்பதும் நம்மீது கடமையாகும். இதை நாம் ஓதினால் அது ஓதப்படுவதை நீர் பின்தொடர்வீராக! (-செவிதாழ்த்தி கேட்ப்பீராக!) பிறகு, நிச்சயமாக அதை விவரிப்பது நம்மீது கடமையாகும். (அல்குர்ஆன் 75 : 16-19)*

*அல்லாஹு தஆலா கூறுகிறான் :*

﴿وَالنَّجْمِ إِذَا هَوَىٰ ۝ مَا ضَلَّ صَاحِبُكُمْ وَمَا غَوَىٰ ۝ وَمَا يَنْطِقُ عَنِ الْهَوَىٰ ۝ إِنْ هُوَ إِلَّا وَحْيٌ يُوحَىٰ ۝ عَلَّمَهُ شَدِيدُ الْقُوَىٰ ۝﴾

*விழுந்து மறையும் நட்சத்திரத்தின் மீது சத்தியமாக! (நம்முடைய தூதராகிய) உங்களுடைய தோழர் வழி தவறிவிடவுமில்லை; தவறான வழியில் செல்லவுமில்லை. அவர் தன் இஷ்டப்படி எதனையும் கூறுவதுமில்லை இது அவருக்கு வஹீ மூலம் அறிவிக்கப்பட்டதேயன்றி (வேறு) இல்லை. (ஜிப்ரீல் என்னும்)*

*வலுவான ஆற்றலுடையவர் இதனை அவருக்குக் கற்றுக் கொடுக்கின்றார். (அல்குர்ஆன் 53 : 1-5)*

*9. மார்க்கத்தை சரியாக புரிந்த முஸ்லிம், தூதருக்கு கீழ்ப்படிதல் என்பது நபி ﷺ அவர்களின் ஸஹீஹான ஹதீஸ்களை பின்பற்றுவது கொண்டுதான் முடியும் என்பதை நன்கு விளங்கி வைத்திருப்பார்.*

*10. ஆகவே, அல்குர்ஆனை அவர் எப்படி நம்புகிறாரோ அப்படியே ஹதீஸையும் நம்புவார். குர்ஆனில் உள்ளதை ஏற்றுக்கொள்வது போன்றே ஹதீஸில் உள்ளதையும் ஏற்றுக் கொள்வார். குர்ஆனில் உள்ளதைக் கொண்டு அமல் செய்வது போன்றே ஹதீஸில் உள்ளதைக் கொண்டும் அமல் செய்வார். ஏனெனில், வணக்க வழிபாட்டில் தனக்கு யாரையும் இணை வைக்கக் கூடாது, வணக்க வழிபாடுகளை தனக்கு மட்டுமே செய்ய வேண்டும் என்று அல்லாஹ் கட்டளை இட்டிருக்கிற அதே வேளையில்* **إطاعة** *இதாஆ கீழ்ப்படிதல் என்று வரும்போது அல்லாஹ்விற்கு கீழ்ப்படியுங்கள்! இன்னும் தூதருக்கு கீழ்ப்படியுங்கள்! அல்லாஹ்வுக்கும் தூதருக்கும் கீழ்ப்படியுங்கள் என்று தெளிவாக கட்டளை இடுகிறான். இதற்கு முன்னர் பல படிப்பினைகளில் நபி ﷺ அவர்களுக்கு கட்டுப்படுவது, கீழ்ப்படிவது, அவர்களை பின்பற்றுவது ஆகியவற்றில் நமது நிலைப்பாடு எப்படி இருக்க வேண்டும் என்பதை பல ஆதாரங்களுடன் நாம் தெளிவுப்படுத்தி இருக்கிறோம்.*

*இந்த பாடத்தில் ஒரு ஹதீஸை கூறி நாம் நிறைவு செய்கிறோம் :*

**عَنْ عُبَيْدِ اللهِ بْنِ أَبِي رَافِعٍ عَنْ أَبِيهِ عَنْ النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ لَا أُلْفِيَنَّ أَحَدَكُمْ مُتَّكِئًا عَلَى أَرِيكَتِهِ يَأْتِيهِ الْأَمْرُ مِنْ أَمْرِي**

مِمَّا أَمَرْتُ بِهِ أَوْ نَهَيْتُ عَنْهُ فَيَقُولُ لَا نَدْرِي مَا وَجَدْنَا فِي كِتَابِ اللهِ اتَّبَعْنَاهُ

*நபி ﷺ அவர்கள் கூறினார்கள் : உங்களில் யார் ஒருவரையும் நான் இப்படி காணக் கூடாது, அவர் தனது கட்டிலில் சாய்ந்திருக்க நான் ஏவிய எனது கட்டளைகளில் இருந்து ஒரு செய்தி அல்லது நான் தடுத்த காரியம் தொடர்பான ஒரு செய்தி அவரிடம் வர அவரோ கூறுகிறார், (இவற்றை) நாம் அறிய மாட்டோம், அல்லாஹ்வின் வேதத்தில் நாம் எதைக் கண்டோமோ அதை (மட்டுமே) பின்பற்றுவோம்.*

*அறிவிப்பாளர் : அபூ ராஃபி, நூல் : அபூ தாவூத், எண் : 3989*

*11.* நபி ﷺ அவர்களின் காலத்தில் முனாஃபிக்குகள் என்றொரு கூட்டத்தினர் இருந்தனர். அவர்கள் எப்போதும் நபி ﷺ அவர்களுக்கு தொந்தரவு தந்தனர். நபி ﷺ அவர்களிடம் எதிர்த்து பேசினார்கள். நபி ﷺ அவர்கள் போருக்கு அழைப்பார்கள். ஆனால், அவர்கள் அதை எதிர்ப்பார்கள். நபி ﷺ அவர்களோடு எல்லா விஷயங்களிலும் முரண்பட்ட நிலைப்பாட்டையே கடைப்பிடித்து வந்தனர். அவர்கள் தொழுது, நோன்பு வைத்து வந்தனர். இன்னும் சில அமல்களையும் செய்து வந்தனர். ஆனால், அவர்கள் முஸ்லிம் என்ற போர்வையில் உள்ள காஃபிர்கள். அதாவது, முனாஃபிக்குகள் - நயவஞ்சகக்காரர்கள் என்றும் அவர்கள் நரகத்தின் அடித்தளத்தில் நிரந்தரமாக இருப்பார்கள் என்றும் அல்லாஹ் கூறினான். அவர்கள் குறித்து தனி ஒரு அத்தியாயத்தையும் இருக்கிறான். இன்னும் பல அத்தியாயங்களில் அவர்களைப் பற்றி விரிவாக அல்லாஹ் கூறி இருக்கிறான்.

*12.* அன்று நபி ﷺ அவர்களை எதிர்த்து பேசிய முனாஃபிக்குகளைப்

போல் இன்று பலர் நபி ﷺ அவர்களின் ஹதீஸை நாம் அவர்களுக்கு கூறும்போது குர்ஆனில் இருக்கிறதா? காட்டுங்கள் என்று கூறுகிறார்கள். இதுவும் நயவஞ்சகம்தான். ஆக, ஹதீஸ்களை அவமரியாதை செய்வதும், ஹதீஸ்களை புறக்கணிப்பதும், ஹதீஸ்களை மறுத்து பேசுவதும், ஹதீஸ்களை உதாசீனப்படுத்துவதும் குறித்து ஆசிரியர் அவர்கள் ஸன்தகா - நாத்திகம் என்று கூறுகிறார்கள். அதாவது, இதுவும் ஒரு வகை இறைநிராகரிப்பு என்று கூறுகிறார்கள்.

﴿إِنَّ الْمُنَافِقِينَ فِي الدَّرْكِ الْأَسْفَلِ مِنَ النَّارِ وَلَنْ تَجِدَ لَهُمْ نَصِيرًا ○﴾

நிச்சயமாக முனாஃபிக்குகள் நரகத்தின் அடித்தளத்தில் இருப்பார்கள் என்று அல்லாஹ் கூறியதிலிருந்து இதை நாம் அறியலாம். (அல்குர்ஆன் 4 : 145)

---------------------

# பாடம் 94

## அனாச்சாரங்கள் அனைத்தும் அழிவில் தள்ளுபவையே!

وَاعْلَمْ أَنَّ الْأَهْوَاءَ كُلَّهَا رَدِيَّةٌ تَدْعُو كُلُّهَا إِلَى السَّيْفِ وَأَرْدَؤُهَا وَأَكْفَرُهَا الرَّوَافِضُ وَالْـمُعْتَزِلَةُ وَالْـجَهْمِيَّةُ فَإِنَّهُمْ يَرُدُّونَ النَّاسَ عَلَى التَّعْطِيلِ وَالزَّنْدَقَةِ

146. மன இச்சைகள் (மார்க்கத்தில் தோற்றுவிக்கப்பட்ட புதிய சிந்தனைகள்) எல்லாம் கெட்டவைதான். அவை வாளேந்துவதற்குத்தான் (-சண்டை சச்சரவுக்குத்தான்) வழிவகுக்கும். அந்த மன இச்சைகளை பின்பற்றுபவர்களில் மிகக் கெட்டவர்களும் மிகப் பெரிய நிராகரிப்புடையவர்களும் யாரென்றால் ராஃபிழாக்கள், முஃதஸிலாக்கள், ஜஹ்மிய்யாக்கள் ஆவார்கள். இவர்கள் மக்களை தஃத்தீல், ஸன்தகாவின்[38] பக்கம் தள்ளிவிடுவார்கள்.

### படிப்பினைகள்

*1. அஹ்வா என்பது ஹவா என்பதின் பன்மையாகும். ஹவா என்பது ஆசை, இச்சை என்று பொருளாகும்.*

*2. அதாவது, அல்லாஹ்வின் மார்க்கத்தில் இந்த வார்த்தை அதிகம் பயன்படுத்தப்படும். குர்ஆன், ஸுன்னாவிற்கு எதிரான, மாற்றமான ஒவ்வொரு கருத்தும் ஹவா என்று சொல்லப்படும். மார்க்கத்தில் சொல்லப்படாத ஒவ்வொரு அமலும் ஹவா என்றும் பித்அத் என்றும் சொல்லப்படும்.*

---

38. தஃத்தீல் என்றால் அல்லாஹ்வின் தன்மைகளை மறுப்பதாகும். ஸன்தகா இதன் விளக்கம் முன் சென்றுவிட்டது.

3. அடியார்கள், அல்லாஹ்வின் வேதத்தை விட்டும் ஸுன்னாவை விட்டும் விலகி சென்று தங்கள் விருப்பத்திற்கு ஏற்ப உருவாக்கிய புதிய சித்தாந்தங்கள் அனைத்தையும் அஹ்வா என்று சொல்லப்படும்.

4. மனிதர்கள் இந்த சித்தாந்தங்களை பின்பற்றி அதன் பக்கம் மக்களை அழைக்கும்போது அவர்களுக்கு மத்தியில் குழப்பமும் சண்டை சச்சரவும் உருவாகும்.

5. மன இச்சையை பின்பற்றும் வழிகெட்ட கூட்டங்களில் மிக மோசமானவர்கள் ராஃபிழாக்கள், முஃதஸிலாக்கள், ஜஹ்மிய்யாக்கள் ஆவார்கள்.

---

# பாடம் 95

## தோழர்களை விமர்சிப்பவரின் உள் நோக்கம்!

وَاعْلَمْ أَنَّهُ مَنْ تَنَاوَلَ أَحَدًا مِنْ أَصْحَابِ مُحَمَّدٍ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ فَاعْلَمْ أَنَّهُ إِنَّمَا أَرَادَ مُحَمَّدًا صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ وَقَدْ آذَاهُ فِي قَبْرِهِ

147. அறிந்துகொள்! நிச்சயமாக யார் ஒருவர் முஹம்மது ﷺ அவர்களுடைய தோழர்களில் ஒருவரை தவறாக பேசுவாரோ அறிந்துகொள்! அவர் பேச நாடியதெல்லாம் முஹம்மது ﷺ அவர்களைத்தான். அவர் நபி ﷺ அவர்களுக்கு அவர்களுடைய கப்ரில் தொந்தரவு தந்துவிட்டார்.

### படிப்பினைகள்

*1. அல்லாஹ்வை கண்ணியப்படுத்துபவர் அவனின் தூதரை கண்ணியப்படுத்துவார். யாருடைய உள்ளத்தில் நபி ﷺ அவர்களின் மதிப்பும் கண்ணியமும் இருக்குமோ அவர் கண்டிப்பாக நபி ﷺ அவர்களின் தோழர்களை மதித்து அவர்கள் மீது நேசம் வைப்பார்.*

*2. எந்த சமுதாயத்தை அல்லாஹ்வும் ரஸூல் ﷺ அவர்களும் பொருந்திக் கொண்டார்களோ அந்த சமுதாயத்தை யார் நேசிக்காமல் இருப்பார்!?*

*3. அப்படி அவர்களை ஒருவர் நேசிக்காமல் அவர்கள் மீது வெறுப்பு கொண்டு, அவர்களை தரக்குறைவாக பேசுகிறார் என்றால் உண்மையில் அவர் நபி ﷺ அவர்களை நேசிக்கவில்லை.*

அவர் நபி ﷺ அவர்களை வெறுக்கிறார். நபி ﷺ அவர்கள் அந்த ஸஹாபாக்களை சரியாக பண்படுத்தவில்லை என்று பழி சுமத்துகிறார் என்றுதான் பொருளாகும்.

*4.* மேலும், ஸஹாபாக்களை விமர்சனம் செய்வது நபி ﷺ அவர்களுக்கு மனவேதனை தரும் விஷயமாகும்.

இது குறித்து பல தெளிவான ஹதீஸ்கள் வந்திருப்பதை நாம் பார்க்கிறோம்.

عَنْ أَبِي سَعِيدٍ الْخُدْرِيِّ رَضِيَ اللّٰهُ عَنْهُ قَالَ قَالَ النَّبِيُّ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ لَا تَسُبُّوا أَصْحَابِي فَلَوْ أَنَّ أَحَدَكُمْ أَنْفَقَ مِثْلَ أُحُدٍ ذَهَبًا مَا بَلَغَ مُدَّ أَحَدِهِمْ وَلَا نَصِيفَهُ

நபி ﷺ அவர்கள் கூறினார்கள் : எனது தோழர்களை நீங்கள் ஏசாதீர்கள்! உங்களில் ஒருவர் உஹுது மலைப் போன்று தங்கத்தை தர்மம் செய்தாலும் அது அவர்களில் ஒருவர் ஒரு கையளவு அல்லது அதன் பாதியளவு செய்த தர்மத்தை எட்ட முடியாது.

அறிவிப்பாளர் : அபூ சயீது அல்குத்ரி, நூல் : புகாரி, எண் : *3397*

*5.* ஸஹாபாக்களைப் பற்றி சிறப்பித்து கூறும் பல நூறு வசனங்கள் அல்குர்ஆனில் உள்ளன.

*6.* இறையச்சமும் நேரிய அறிவும் மறுமை பயமும் உள்ள ஒவ்வொரு முஸ்லிமும் அந்த ஸஹாபாக்களை கண்டிப்பாக நேசிப்பார், அவர்களை உயர்வாக மதிப்பார், அவர்களுக்காக

அல்லாஹ்விடம் அல்லாஹ்வின் பொருத்தத்தை வேண்டி பிரார்த்திப்பார்.

7. உள்ளத்தில் நயவஞ்சகமும் நாத்திக சிந்தனையும் குடிகொண்டவர்கள் மட்டுமே ஸஹாபாக்களை விமர்சனம் செய்வார்கள்.

8. நபி ﷺ அவர்களை உண்மையாக நேசிப்பவர் கண்டிப்பாக நபி ﷺ அவர்கள் நேசித்த, இன்னும் நபியை நேசித்த அந்த ஸஹாபாக்களை நேசிப்பார்.

---------------------

# பாடம் 96

## பித்அத்வாதியை விட்டு முற்றிலும் விலகி இரு!

وَإِذَا ظَهَرَ لَكَ مِنْ إِنْسَانٍ شَيْءٌ مِنَ الْبِدَعِ فَاحْذَرْهُ فَإِنَّ الَّذِي أَخْفَىٰ عَنْكَ أَكْثَرُ مِمَّا أَظْهَرَ

148. ஒரு மனிதனிடமிருந்து ஏதாவது பித்ஆ -அனாச்சாரம், மார்க்கத்தில் கூறப்படாத புதிய சிந்தனை வெளிப்பட்டால் அவரிடம் எச்சரிக்கையாக இரு! ஏனெனில், நிச்சயமாக உன்னை விட்டு அவர் மறைத்தது அவர் வெளிப்படுத்தியதைவிட அதிகமாக இருக்கும்.

وَإِذَا رَأَيْتَ الرَّجُلَ رَدِيءَ الطَّرِيقِ وَالْـمَذْهَبِ فَاسِقًا فَاجِرًا صَاحِبَ مَعَاصٍ ضَالًّا وَهُوَ عَلَى السُّنَّةِ فَاصْحَبْهُ وَاجْلِسْ مَعَهُ فَإِنَّه لَيْسَ يَضُرُّكَ مَعْصِيَتُهُ وَإذا رَأَيْتَ الرَّجُلَ مُـجْتَهِدًا فِي الْعِبَادَةِ مُتَقَشِّفًا مُـحْتَرِقًا بِالْعِبَادَةِ صَاحِبَ هَوًى فَلَا تُجَالِسْهُ وَلَا تَقْعُدْ مَعَهُ وَلَا تَسْمَعْ كَلَامَهُ وَلَا تَمْشِ مَعَهُ فِي طَرِيقٍ فَإِنِّي لَا آمَنُ أَنْ تَسْتَحْلِيَ طَرِيقَتَهُ فَتَهْلِكَ مَعَهُ

149. ஒருவர் கெட்ட பழக்கம் உள்ளவராக, பாவியாக, குற்றவாளியாக, பாவங்களை செய்பவராக வழிதவறியவராக இருப்பதை நீ பார்க்கிறாய். ஆனால், அவரோ ஸுன்னாவை உடையவர். அப்படி இருந்தால் நீ அவருடன் பழகு! அவருடன் அமரு! ஏனெனில், அவர் செய்கின்ற

பாவம் உனக்கு பாதிப்பை உண்டாக்காது. ஒருவர் வணக்க வழிபாட்டில் முயற்சியுள்ளவராக, உலக வாழ்க்கையில் பற்றற்றவராக, வழிபாட்டில் தன்னை அர்ப்பணித்தவராக இருப்பதுடன் ஹவா, பித்ஆ செய்பவராக இருப்பதை நீ பார்த்தால் அவருடன் நட்பு வைக்காதே! அவருடன் உட்காராதே! அவரது பேச்சை செவியுறாதே! பாதையில் அவருடன் நடந்து செல்லாதே! ஏனெனில், நீ அவருடைய வழிமுறையை சரி காண ஆரம்பித்து விடுவாய், ஆகவே, அவருடன் சேர்ந்து அழிந்து விடுவாய் என்று நான் பயப்படுகிறேன்.[39]

**وَرَأَىٰ يُونُس بْنُ عُبَيدٍ ابْنَهُ وَقَدْ خَرَجَ مِنْ عِنْدِ صَاحِبِ هَوًى فَقَالَ يَا بُنَيَّ مِنْ أَيْنَ جِئْتَ؟ قَالَ مِنْ عِنْدِ فُلَانٍ قَالَ يَا بُنَيَّ لَأَنْ أَرَاكَ خَرَجْتَ مِنْ بَيْتِ خُنْثَىٰ أَحَبُّ إِلَيَّ مِنْ أَنْ أَرَاكَ تَـخْرُجُ مِنْ بَيْتِ فُلَانٍ وَفُلَانٍ وَلَأَنْ تَلْقَى اللهَ يَا بُنَيَّ زَانِيًا فَاسِقًا سَارِقًا خَائِنًا أَحَبُّ إِلَيَّ مِنْ أَنْ تَلْقَاهُ بِقَوْلِ فُلَانٍ وَفُلَانٍ**

யூனுஸ் இப்னு உபைத் அவர்கள் தமது மகன் ஹவா -மன இச்சையை உடைய (பித்அத்வாதி) ஒருவரிடமிருந்து வெளியே வருவதை பார்த்தார்கள். மகனே நீ எங்கிருந்து வருகிறாய்? என்று கேட்டார்கள். நான் இன்னவரிடமிருந்து வருகின்றேன் என்று அவர் கூறினார். அவர்கள் கூறினார்கள்: என்னருமை மகனே! நான்

---

39. ஒரு மனிதர் செயல்களில் பாவங்களைச் செய்தாலும் அவர் ஸுன்னாவை ஏற்றுக் கொள்பவராகவும் செயல் மற்றும் சிந்தனை ரீதியான பித்அத்களை விட்டு விலகியவராக இருந்தால் அவருடன் பழகுவது அவ்வளவு ஆபத்தானது அல்ல. ஏனெனில் அவர் செய்யக்கூடிய செயல் ரீதியான பாவங்களை பாவங்கள் என்றே வெளிப்படையாக நாம் அறிந்துகொள்ள முடியும். அவற்றை நியாயப்படுத்த மாட்டோம். ஆனால் யார் ஒரு மனிதர் செயல் அல்லது சிந்தனை ரீதியான பித்அத்களில் இருப்பாரோ அவர் பார்ப்பதற்கு வணக்கசாலியாக தெரிகிறார் என்று அவரிடம் ஒருவர் பழகும்போது அவர் அவருடைய பித்அத்களையும் சரிகாண ஆரம்பித்து விடுவார். ஏனெனில் பித்அத்களின் வெளித்தோற்றம் நல்லதாகத் தெரியும். ஆனால் பித்அத்களோ அல்லாஹ்விடத்தில் பெரும் பாவங்களைவிட மிகப் பயங்கரமானதாகும்.

உன்னை நீ ஓர் அரவாணியின் வீட்டிலிருந்து வெளியே வருவதை பார்ப்பது, (பித்அத்வாதிகளான) இன்னார், இன்னார், வீட்டிலிருந்து நீ வெளியே வருவதை நான் பார்ப்பதைவிட எனக்கு மிக விருப்பமானதாகும். இன்னும் மகனே! நீ விபச்சாரியாக, பாவியாக, திருடனாக, மோசடிக்காரனாக அல்லாஹ்வை சந்திப்பது இன்னார் இப்படி கூறினார், இன்னார் இப்படி கூறினார் என்று (பித்அத்தான சிந்தனைகளோடு) நீ அவனை சந்திப்பதைவிட எனக்கு மிக விருப்பமானதாகும்.

أَلَا تَرَىٰ أَنَّ يُونُسَ بْنَ عُبَيدٍ قَدْ عَلِمَ أَنَّ الْـخُنْثَىٰ لَا يُضِلُّ ابْنَهُ عَنْ دِينِهِ وَأَنَّ صَاحِبَ الْبِدْعَةِ يُضِلُّهُ حَتَّىٰ يُكَفِّرَهُ

நீ கவனிக்கவில்லையா? "நிச்சயமாக தனது மகனை அந்த அரவாணி அவருடைய மார்க்கத்திலிருந்து வழிகெடுக்க மாட்டார்; ஆனால், நிச்சயமாக பித்அத்வாதி தனது மகனை வழிகெடுத்து அவரை காஃபிராகவே ஆக்கிவிடுவார்" என்று யூனுஸ் இப்னு உபைத் திட்டமாக அறிந்திருந்தார்.

## படிப்பினைகள்

*1. அடியான் சொர்க்கத்தில் பிரவேசிக்கின்ற வரை அச்சத்துடன் இருக்க வேண்டும்.*

﴿ادْخُلُوهَا بِسَلَامٍ آمِنِينَ ۝﴾

*பயமற்றவர்களாக பாதுகாப்பு பெற்றவர்களாக நீங்கள் அ(ந்த சொர்க்கத்)தில் நுழையுங்கள்! (அல்குர்ஆன் 15 : 46)*

*என்று அடியானை நோக்கி கூறப்படுகிற வரை பல கட்டங்களை நாம் கடக்க வேண்டி இருக்கிறது.*

*2.* *இந்த உலகத்தில் நாம் ஒவ்வொருவரும் நமது ஈமானில் குழப்பம், சந்தேகம், தடுமாற்றம் இல்லாத நிலையில் மரணமடைய வேண்டும். அப்போதுதான் நமக்கு வெற்றி கிடைக்கும்.*

*அல்லாஹு தஆலா கூறுகிறான் :*

﴿وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنْتُمْ مُسْلِمُونَ۝﴾

*நீங்கள் முஸ்லிம்களாக இருந்தே தவிர மரணித்து விடாதீர்கள்!*
*(அல்குர்ஆன் 3 : 102)*

*3.* *முஸ்லிம் என்பவர் யார்? அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் முற்றிலும் கட்டுப்பட்டவர், கீழ்ப்படிந்தவர், தன்னை முற்றிலும் அல்லாஹ்விற்கு முன் சரணடைய செய்தவர், அல்லாஹ்வின் கட்டளைகளை முற்றிலும் ஏற்று நடப்பவர், நம்பவேண்டியவற்றை நம்பிக்கைக் கொண்டும், செய்ய வேண்டியவற்றை செய்வது கொண்டும், விலகி இருக்க வேண்டியவற்றை விட்டு விலகி இருப்பது கொண்டும் அல்லாஹ்விற்கு முற்றிலும் பணிந்தவர் முஸ்லிம் ஆவார். அவர் அல்லாஹ்வின் மார்க்கத்தில் ஏன், எப்படி என்று வீண் கேள்விகள் கேட்க மாட்டார். அவர் அறிந்ததெல்லாம், சமிஃனா வ அதஃனா செவியுற்றோம், கீழ்ப்படிந்தோம் என்பதை மட்டுமே!*

*4.* *நபி ﷺ அவர்கள் ஸஹாபாக்களை விட்டு பிரியும்போது எந்த நிலையில் அவர்களை விட்டுச் சென்றார்களோ அதுதான் மார்க்கமாகும். நபித்தோழர்கள் அறியாத கருத்தும் சிந்தனையும் இறையியல் தத்துவமும் உடல் சார்ந்த அமலும் கண்டிப்பாக இந்த மார்க்கத்தில் இருக்க முடியாது. அவை ஒருபோதும் மார்க்கமாக ஆக முடியாது.*

**5.** குர்ஆனும் ஸுன்னாவும் கற்பிக்காத எந்த ஒரு கொள்கையும் அமலும் அறவே மார்க்கமாக ஆக முடியாது.

**6.** ஆகவே, யார் ஒருவர் மார்க்கத்தில் தனது விருப்பத்தின்படி சுய கருத்தை புகுத்துகிறாரோ அவர் மிகவும் ஆபத்தானவர். அவரை விட்டு நாம் விலகி இருக்க வேண்டும். நமது சிந்தனையையும் அமலையும் அவரை விட்டு பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

**7.** கொள்கையாலும் அமலாலும் நேர்வழிபெற்ற நல்லோர் மட்டுமே நமது நட்புக்கு தகுதி உள்ளவர்கள். அவர்கள்தான் உண்மையில் தக்வா உள்ளவர்கள். அவர்கள்தான் உண்மையாளர்கள்.

அல்லாஹு தஆலா கூறுகிறான் :

﴿اِنَّمَا وَلِيُّكُمُ اللّٰهُ وَرَسُوْلُهٗ وَالَّذِيْنَ اٰمَنُوا الَّذِيْنَ
يُقِيْمُوْنَ الصَّلٰوةَ وَيُؤْتُوْنَ الزَّكٰوةَ وَهُمْ رَاكِعُوْنَ۝﴾

அல்லாஹ்வும், அவனுடைய தூதரும், இன்னும் எவர்கள் உண்மையாகவே நம்பிக்கை கொண்டு, தொழுகையைக் கடைப்பிடித்து, ஜகாத்தும் கொடுத்து, (அல்லாஹ்வின் கட்டளைக்கு எந்நேரமும்) தலைசாய்த்தும் வருகின்றனரோ அவர்களும்தான் நிச்சயமாக உங்களுடைய (உண்மையான) தோழர்களாகும். (அல்குர்ஆன் 5 : 55)

﴿يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللّٰهَ وَكُونُوا مَعَ الصَّادِقِينَ۝﴾

நம்பிக்கையாளர்களே! அல்லாஹ்வுக்கு பயந்துகொள்ளுங்கள் மேலும், (சொல்லிலும் செயலிலும்) உண்மையாளர்களுடன் இருங்கள். (அல்குர்ஆன் 9 : 119)

*8. இங்கு ஆசிரியர் கூறவருவதன் நோக்கமாவது, ஒருவன் வணக்க வழிபாட்டில் பார்க்க சிறந்தவனாக தெரிந்தாலும் அவனிடம் பித்அத்தான சிந்தனைகள், வழிகெட்டவர்களின் கொள்கைகள் இருந்தால் அவனிடம் நாம் நட்பும் பழக்கமும் வைக்கக் கூடாது. ஒருவர் அமலில் பாவம் செய்பவராக இருந்தாலும் கொள்கையால் நேர்வழிபெற்றவராக இருந்தால் அவர் அமலால் நல்லவராக இருந்து கொள்கையால் வழிகெட்டவராக இருப்பவரை விட மேலாவார். ஏனெனில், அல்லாஹ் அடியார்களின் பாவங்களை மன்னித்துவிடுகிறான். ஆனால், குஃப்ரையும் ஷிர்க்கையும் நயவஞ்சகத்தையும் மன்னிக்க மாட்டான். பித்அத்தான கொள்கைகள் கண்டிப்பாக ஒரு கட்டத்தில் இம்மூன்றில் ஒன்றை மனிதனுக்குள் புகுத்திவிடும். அவன் தன்னை அறியாமலேயே இஸ்லாமை விட்டு வெளியேறி விடுவான்.*

*9. இப்லீஸ் அல்லாஹ்விடம் மறுத்து பேசும்போது அல்லாஹ் தன்னை சபித்து வானத்தை விட்டு வெளியேற்றி விடுவான் என்று அறிந்திருக்க வில்லை. தான் விளங்கிய கருத்தை - அதாவது அல்லாஹ் கட்டளையிட்டாலும் நான் என்னை விட தகுதியில் குறைந்த ஒருவருக்கு சிரம் பணியமாட்டேன் என்பதை சரியான கருத்தாக அவன் எண்ணினான். அதையே அல்லாஹ்விடம் கூறவும் செய்தான். அல்லாஹ்வின் கட்டளைக்கு முன்னால் பணிந்து விடாமல் தான் புரிந்த கருத்தை சரி கண்டு தனது அறிவுக்குதான் அவன் கீழ்ப்படிந்தான். ஆகவே, அவன் அல்லாஹ்வை நிராகரித்தவனாக ஆகிவிட்டான் என்று அல்லாஹ் கூறினான்.*

*10. அந்த அடிப்படையில்தான் அல்லாஹ்வைப் பற்றி அல்லாஹ் கூறியதையும் அவனது ரஸூல் அவர்கள் கூறியதையும் ஏற்காமல் தங்களது தத்துவம், தங்களது அறிவு கூறுவதை யார்*

கூறுகிறார்களோ அவர்கள் நிச்சயம் ஒரு நாள் இஸ்லாமை விட்டு வெளியேறி விடலாம். அவர்கள் தவ்பா செய்து அல்லாஹ்வுக்கும் அவனது ரஸூல் அவர்களுக்கும் முற்றிலும் கட்டுப்பட்டாலே தவிர.

*11.* இதையே ஆசிரியர் அவர்கள் இங்கு கூற வருகிறார்கள். ஒருவன் கொள்கையால் சரியாக இருக்கிறான். ஆனால், பாவம் செய்கிறான். இவன் நமது நட்புக்கு மேலானவன் கொள்கையால் வழிகெட்டு, அமலால் நல்லவனாக இருப்பவனை விட.

*12.* இதற்கு பொருள் நாம் பாவத்தை சரி காணுகிறோம், அல்லது பாவத்தை இலேசாக எடுத்துக் கொண்டோம் என்பதல்ல. பித்அத் மிக ஆபத்தானதா அல்லது பாவமா என்றால் பித்அத் மிக ஆபத்தானது என்று கூறுகிறோம். பாவி திருந்த வாய்ப்பிருக்கிறது. அவன் பாவத்தை நன்மையாக, சரியானதாக நினைத்து செய்வதில்லை. மாறாக, பித்அத் வாதி தனது பித்அத்தான கொள்கையை, இன்னும் தனது பித்அத்தான அமலை சரி காணுகிறான். குர்ஆன், ஸுன்னாவில் உள்ள நேரடியான கருத்தை விட தனது கருத்து மிக உயர்ந்தது என்று எண்ணுகிறான். ஆகவே இது மிக மிக ஆபத்தான, அல்லாஹ்விற்கு மிகவும் கோபமூட்டும் செயலாகும். ஆதமுக்கு சஜ்தா செய்யும்படி அல்லாஹ் கட்டளையிட்ட போது, மாட்டேன் என்று மறுத்த இப்லீஸுடைய நிலைப்பாட்டுக்கு கொஞ்சமும் குறைந்த நிலைப்பாடு அல்ல இது.

*13.* ஆகவேதான் நமது அறிஞர்கள் பித்அத்தான கொள்கையை சார்ந்தவர்களை கண்டு ஓடி ஒளிந்தார்கள். அவர்களிடம் ஸலாம் கூற மறுத்தார்கள். அவர்களின் ஸலாமுக்கு பதில் கூற மறுத்தார்கள். அவர்களின் சபையில் அவர்களுடன் ஒன்றாக அமர மறுத்தார்கள். அவர்கள் நோயுற்றால் நலம் விசாரிக்க

செல்வதை மறுத்தார்கள். அவர்கள் இறந்து விட்டால் அவர்களின் ஜனாஸாவில் கலந்து கொள்ள மறுத்தார்கள். ஷைத்தானுடன் யாரும் நட்பு வைக்க விரும்புவார்களா? ஷைத்தான் ஸலாம் கூறினால் அவனுக்கு நாம் பதில் ஸலாம் சொல்ல முடியுமா? ஷைத்தான் நோயுற்றால் அவன் மீது கவலைக் கொண்டு அவனை நாம் நலம் விசாரிப்போமா? ஆகவே, யார் கீழ்ப்படிதல் இன்னும் கட்டுப்படுதலுக்கு மாற்றமாக பித்அத்தான சிந்தனையில் இருக்கிறார்களோ அவர்கள் ஷைத்தானிய சிந்தனையில் உள்ளவர்கள். ஆகவே, அவர்களோடு நாம் எப்படி பழக முடியும்?

---------------------

# பாடம் 97

## மிக கவனமாக இரு!

وَاحْذَرْ ثُمَّ احْذَرْ أَهْلَ زَمَانِكَ خَاصَّةً وَانْظُرْ مَنْ تُـجَالِسُ وَمِـمَّنْ تَسْمَعُ وَمَنْ تَصْحَبُ فَإِنَّ الْـخَلْقَ كَأَنَّهُمْ فِي رِدَّةٍ إِلَّا مَنْ عَصَمَهُ اللهُ مِنْهُمْ

150. குறிப்பாக, உனது காலத்தில் வசிப்பவர்களிடம் மிக உஷாராக இரு! மிக எச்சரிக்கையாக இரு! நீ யாரோடு பழகுகிறாய், யாரிடமிருந்து மார்க்கத்தை செவியுறுகிறாய், யாரோடு நட்பு வைக்கிறாய் என்பதை நன்கு பார்த்துக்கொள்! ஏனெனில், மக்களில் யாரை அல்லாஹ் பாதுகாத்தானோ அவர்களைத் தவிர மற்ற மக்கள் எல்லாம் رِدَّة ரித்தத் -மதமாற்றத்தில் இருக்கின்றார்கள் போலத்தான் தோன்றுகிறது.[40]

وانْظُرْ إِذَا سَمِعْتَ الرَّجُلَ يَذْكُرُ ابْنَ أَبِي دَاوُدَ وَبِشْرَ الْـمُرِيسِيَّ وَثُمَامَةَ أَوْ أَبَا الْـهُذَيْلِ أَوْ هِشَامَ الْفُوطِيَّ أَوْ وَاحِدًا مِنْ أَتْبَاعِهِمْ وَأَشْيَاعِهِمْ فَاحْذَرْهُ فَإِنَّهُ صَاحِبُ بِدْعَةٍ فَإِنَّ هٰؤُلَاءِ كَانُوا عَلَى الرِّدَّةِ وَاتْرُكْ هٰذَا الرَّجُلَ الَّذِي ذَكَرَهُمْ بِـخَيْرٍ وَمَنْ ذَكَرَ مِنْهُمْ

151. நன்கு கவனித்துக்கொள்! ஒரு மனிதர் (அஹ்மது) இப்னு அபீ தாவூத், பிஷ்ர் அல்முரீசி, ஸுமாமா அல்லது அபூ ஹுதைல், அல்லது

---

40. மார்க்கத்தில் சிலவற்றைப் பின்பற்றி சிலவற்றை முற்றிலுமாக விட்டுவிடுவது மார்க்கத்தின் சில கொள்கைகளை ஏற்றுக்கொண்டு சில கொள்கைகளை புறக்கணித்து விடுவது இஸ்லாமை விட காஃபிர்களின் கலாச்சாரத்தை அழகாக பார்ப்பது. இதுபோன்ற விஷயங்களை ரித்தத் என்று இமாம் அவர்கள் கூறுகின்றார்கள். அல்லாஹ் மிக அறிந்தவன்.

ஹிஷாம் அல்ஃபூத்தி அல்லது இவர்களை பின்பற்றுவோரில், இவர்களின் கூட்டத்தை சேர்ந்தவர்களில் யார் ஒருவரைப் பற்றியும் உயர்வாக பேசுவதை நீ செவியுற்றால் அவரிடம் நீ எச்சரிக்கையாக இரு! ஏனெனில், நிச்சயமாக அவர் பித்அத்வாதி ஆவார். (மேற்கூறப்பட்ட)இவர்கள் எல்லாம் மதம்மாறியவர்கள் (இஸ்லாமை விட்டு வெளியேறியவர்கள்) ஆவார்கள். இவர்களை உயர்வாக பேசிய இந்த மனிதரையும் அவர் யாரை உயர்வாக பேசினாரோ அவரையும் நீ விட்டு விலகிவிடு!

## படிப்பினைகள்

*1. ஆசிரியர் அவர்கள் இந்த பாடத்தில் பொதுவாகவும் குறிப்பாகவும் பல எச்சரிக்கைகளை நமக்கு தருகிறார்கள்.*

*2. நாம் யாரோடு நட்பு வைக்கிறோம், நமது நண்பர்கள் கொள்கை விஷயத்தில் எப்படிப்பட்டவர்கள் என்பதை நாம் கண்டிப்பாக கவனிக்க வேண்டும். பொதுவாக நண்பனின் கொள்கையை நண்பன் பின்பற்றுவான். இது குறித்து நபி ﷺ அவர்கள் கூறிய ஹதீஸை இங்கு நினைவு கூர்வோம் :*

الرَّجُلُ عَلَى دِينِ خَلِيلِهِ فَلْيَنْظُرْ أَحَدُكُمْ مَنْ يُخَالِلُ

*மனிதன் தனது உற்ற நண்பனின் மார்க்கத்தையே பின்பற்றி நடக்கிறான். ஆகவே, உங்களில் ஒருவர் அவர் யாருடன் உற்ற நட்பு வைக்கிறார் என்பதை நன்கு கவனித்து கொள்*

*அறிவிப்பாளர் : அபூ ஹுரைரா, நூல் : அபூ தாவூத், எண் : 4833*

*3. யாருடைய கொள்கை கெட்டதாகவும் குர்ஆன், ஸுன்னாவிற்கு முரணாகவும் அஹ்லுஸ் ஸுன்னாவிற்கு எதிராகவும் இருக்கிறதோ அவர்களுக்கு நாம் சத்திய*

கொள்கையை, உண்மையான நம்பிக்கையை எடுத்து சொல்ல வேண்டும். அவர்கள் ஏற்றுக்கொண்டால் அவர்களுடன் நாம் நட்பு பாராட்டுவோம். இல்லையென்றால் அவர்களை விட்டு அழகிய முறையில் விலகி விடுவோம்.

4. இதன் காரணமாவது நமது விருப்பும் வெறுப்பும் நட்பும் பகைமையும் அல்லாஹ் ஒருவனுக்காக மட்டும், அல்லாஹ்வின் மார்க்கத்திற்காக மட்டும் இருக்க வேண்டும் என்பதாகும்.

---------------------

## பாடம் 98

# யாரிடம் கல்வி கற்க போகிறாய் என்று நன்கு சோதித்து அறிந்து கொள்!

وَالْـمِحْنَةُ فِي الْإِسْلَامِ بِدْعَةٌ وَأَمَّا الْيَوْمَ فَيُمْتَحَنُ بِالسُّنَّةِ لِقَوْلِهِ إِنَّ هٰذَا الْعِلْمَ دِينٌ فَانْظُرُوا عَمَّنْ تَأْخُذُونَ دِينَكُمْ وَلَا تَقْبَلُوا الْـحَدِيثَ إِلَّا مِـمَّنْ تَقْبَلُونَ شَهَادَتَهُ فَتَنْظُرُ فَإِنْ كَانَ صَاحِبَ سُنَّةٍ لَهُ مَعْرِفَةٌ صَدُوقًا كَتَبْتَ عَنْهُ وَإِلَّا تَرَكْتَهُ

152. ஒருவரை சோதிப்பது என்பது இஸ்லாமில் பித்அத் ஆகும்! ஆனால் இன்றோ ஸுன்னாவைக் கொண்டு சோதிக்க வேண்டியது இருக்கின்றது. இந்த கல்வி மார்க்கமாகும். ஆகவே, உங்கள் மார்க்கத்தை நீங்கள் யாரிடமிருந்து கற்கின்றீர்கள் என்று கவனித்துக் கொள்ளுங்கள்! நீங்கள் யாரிடமிருந்து சாட்சியத்தை ஏற்றுக் கொள்வீர்களோ அவர்களிடமிருந்தே தவிர வேறு யாரிடமிருந்தும் ஹதீஸை ஏற்காதீர்கள்! ஆகவே, நீ கவனித்துப்பார்! ஸுன்னாவை உடையவராகவும் அறிவு ஞானம் உள்ளவராகவும் உண்மையாளராகவும் ஒருவர் இருந்தால் அவரிடமிருந்து ஹதீஸை நீ எழுதிக்கொள்! இல்லையென்றால் அவரை விட்டுவிடு!

### படிப்பினைகள்

*1. பொதுவாக யாரையும் நீ யார், உனது கொள்கை என்ன, நீ எப்படி என்று தோண்டி துருவி விசாரித்து பரிட்சை செய்வது இல்லை.*

2. இன்று குழப்பமான காலமாக இருப்பதால் யார் என்ன கொள்கையை சேர்ந்தவர் என்பதை அறிந்த பின்னரே அவரிடம் நாம் நட்பு வைக்க முடியும்.

3. ஆகவே, ஒருவர் ஸுன்னாவை பின்பற்றுகிறவரா, அஹ்லுஸ் ஸுன்னாவை சேர்ந்தவரா என்பதை அறிந்து கொள்வதற்கு கொள்கை சார்ந்த சில கேள்விகளை கேட்பது அவசியமாகிவிடுகிறது.

4. அவரின் பதில் சரியான வழிமுறையின் படி இருந்தால் நாம் அவருடன் அமருவோம், அவரிடம் கல்வி படிப்போம். இல்லையென்றால் அவரை விட்டு விலகி விடுவோம்.

---------------------

# பாடம் 99

## கிரேக்க தத்துவமும் தர்க்கமும் விவாதமும் வழிகேடுகளைத்தான் உருவாக்கும்!

وَإِذَا أَرَدْتَ الْاِسْتِقَامَةَ عَلَى الْـحَقِّ وَطَرِيقِ أَهْلِ السُّنَّةِ قَبْلَكَ فَاحْذَرْ الْكَلَامَ وَأَصْحَابَ الْكَلَامِ وَالْـجِدَالَ وَالْـمِرَاءَ وَالْقِيَاسَ وَالْـمُنَاظَرَةَ فِي الدِّينِ فَإِنَّ اسْتِمَاعَكَ مِنْهُمْ وَإِنْ لم تَقْبَلْ مِنْهُمْ يَقْدَحُ الشَّكَّ فِي الْقَلْبِ وَكَفَىٰ بِهِ قَبُولًا فَتَهْلِكَ وَمَا كَانَتْ زَنْدَقَةٌ قَطُّ وَلَا بِدْعَةٌ وَلَا هَوًى وَلَا ضَلَالَةٌ إِلَّا مِنَ الْكَلَامِ وَالْـجِدَالِ وَالْـمِرَاءِ وَالْقِيَاسِ وَهِيَ أَبْوَابُ الْبِدَعِ وَالشُّكُوكِ وَالزَّنْدَقَةِ

153. நீ உண்மையின் மீதும், உனக்கு முன்னர் சென்ற அஹ்லுஸ் ஸுன்னா உடைய பாதையின் மீதும் உறுதியாக நிலைத்திருக்க விரும்பினால் கிரேக்க தத்துவம் பேசுவதையும் அதை பேசுபவர்களையும் விட்டு விலகி எச்சரிக்கையாக இரு! தர்க்கம் செய்வதை, வாக்குவாதம் செய்வதை, கியாஸ் செய்வதை, மார்க்கத்தில் விவாதம் செய்வதை விட்டு எச்சரிக்கையாக இரு! நீ அவர்களிடமிருந்து எதையும் செவியுறுவது அதை நீ ஏற்றுக்கொள்ளவில்லை என்றாலும் அது உனது உள்ளத்தில் சந்தேகத்தை மூட்டிவிடும். அதுவே நீ அதை ஏற்றுக் கொள்வதற்கு போதுமாகிவிடும்! பிறகு, நீ அழிந்து நாசமாகி விடுவாய். நாத்திகம், மார்க்க உண்மைகளை நிராகரிப்பது, பித்அத், ஹவா -மன இச்சை, வழிகேடு, இவை எல்லாம் கிரேக்க

தத்துவங்களாலும், தர்க்க விவாதங்களாலும், கியாஸ் செய்வதாலும் தான் உருவாகின. இவை பித்அத்துகள், சந்தேகங்கள், மற்றும் நாத்திகத்தின் வாசல்களாகும்.

## படிப்பினைகள்

*1. மக்கள் எப்போது குர்ஆனையும் ஸுன்னாவையும் ஒதுக்கிவிட்டு வேறொன்றில் நேர்வழியை தேடினார்களோ அப்போது வழிகேட்டை விலைக்கு வாங்கினார்கள்.*

*2. அல்லாஹ் நேர்வழிக்காகவே குர்ஆனை அனுப்பினான், நபி ﷺ அவர்களை தூதராக அனுப்பினான். இது குறித்து பல வசனங்களை நாம் அல்குர்ஆனில் பார்க்கிறோம்.*

﴿شَهْرُ رَمَضَانَ الَّذِي أُنْزِلَ فِيهِ الْقُرْآنُ هُدًى لِلنَّاسِ وَبَيِّنَاتٍ مِنَ الْهُدَىٰ وَالْفُرْقَانِ﴾

*ரமழான் மாதம் எத்தகைய (மகத்துவமுடைய)தென்றால் அதில்தான் மனிதர்களுக்கு நேர்வழிகாட்டும் திருக்குர்ஆன் (என்னும் வேதம்) இறக்கப்பட்டது. அது (நன்மை, தீமையைப்) பிரித்தறிவித்து நேரான வழியைத் தெளிவாக்கக்கூடிய வசனங்களை உடையதாகவும் இருக்கிறது.*

*(அல்குர்ஆன் 2 : 185)*

﴿وَإِنَّكَ لَتَهْدِي إِلَىٰ صِرَاطٍ مُسْتَقِيمٍ ۝﴾

*(நபியே!) நிச்சயமாக நீங்கள் நேரான வழியைக் காண்பிக்கின்றீர்கள். (அல்குர்ஆன் 42 : 52)*

*3. எல்லாக் குழப்பங்களுக்கும் மூல காரணம் குர்ஆன், ஸுன்னாவை புறக்கணித்து அல்லது கிரேக்க தத்துவங்களுக்காக*

குர்ஆன், ஸுன்னாவில் உள்ளதை மாற்ற நினைத்ததாகும்.

4. ஆகவே, எதுவரை மக்கள் இந்த தர்க்கம், விவாதம், குதர்க்கம், தத்துவம் பேசுவதை எல்லாம் விட்டுவிட்டு செவியுற்றோம், கீழ்ப்படிந்தோம் என்று குர்ஆன், ஸுன்னாவின் பக்கம் வர மாட்டார்களோ அதுவரை அவர்கள் ஒருபோதும் நேர்வழியை அடைய முடியாது.

5. நேர்வழி என்பது அல்லாஹ் காட்டிய வழிமட்டுமே நேர்வழியாகும்.

அல்லாஹு தஆலா கூறுகிறான் :

﴿قُلْ إِنَّ هُدَى اللّٰهِ هُوَ الْهُدٰى﴾

அல்லாஹ்வின் நேர்வழி(யாகிய இஸ்லாம்) தான் நேரான வழி. (அதனையே பின்பற்றுவேன்) எனக் கூறுங்கள்.

(அல்குர்ஆன் 2 : 120)

﴿قُلْ إِنَّ الْهُدٰى هُدَى اللّٰهِ﴾

(நபியே!) நீங்கள் கூறுங்கள்: உண்மையான நேர்வழி அல்லாஹ்வின் நேர்வழிதான். (அல்குர்ஆன் 3 : 73)

6. இன்று பெரும்பாலான மதரஸாக்களில் குர்ஆன் ஸுன்னாவின் கல்விகள் கற்பிக்கப்படாமல், அல்லது மேலோட்டமாக கற்பிக்கப்பட்டு விட்டு எதற்கும் பயனற்ற தத்துவங்களை கிரேக்க ஃபல்சஃபாக்களை (Greek philosophy) அறிவு சார்ந்த கல்விகள் என்று படித்துக் கொடுத்து மாணவர்களின் ஈமானோடு விளையாடுகிறார்கள். நேரங்களையும் காலங்களையும் வீணடிப்பது மட்டுமல்லாமல் மார்க்கத்தையும் வீணடிக்கின்றனர்.

7. இன்று தங்களை அஹ்லுஸ் ஸுன்னா என்று சொல்லிக்கொண்டு

கிரேக்க தத்துவங்களை பின்பற்றி வருகிறவர்களும் நாமும் ஒருமித்து எந்த இமாம்களை ஏற்கிறோமோ அந்த இமாம்கள் எல்லோரும் இந்த கிரேக்க தத்துவ கல்வியையும் அதனடிப்படையில் அமைந்த இறையியல் கல்வியையும் கடுமையாக சாடினார்கள் என்பது இவர்களுக்கு தெரியும். அப்படி இருந்தும் இவர்கள் அந்த இமாம்களுக்கு பின்னால் வந்த சிலரின் கூற்றை நம்பி அந்த இமாம்களின் பாதையை விட்டு விலகி அஹ்லுஸ் ஸுன்னாவில் புதிய பாதையை அமைத்தனர். அவர்கள் அஹ்லுஸ் ஸுன்னாவில் முன்னோர் என்றும் தாங்கள் அஹ்லுஸ் ஸுன்னாவில் பின்னோர் என்றும்

طَرِيقَةُ السَّلَفِ أَسْلَمُ وَطَرِيقَةُ الْـخَلَفِ أَعْلَمُ وَأَحْكَمُ

தரீக்கத்துஸ் ஸலஃபி அஸ்லம், வ தரீக்கத்துல் கலஃபி அஃலம் வ அஹ்கம் - முன்னோரின் பாதை பாதுகாப்பானதாகும். பின்னோரின் பாதை கல்வி ரீதியானதும், ஞானமுடையதும், உறுதியானதுமாகும் என்றும் கூறி தங்கள் வழிகேட்டை நியாயப்படுத்தினர். (முக்தஸருல் உலுவ் - தஹபி ﵀)

8. இன்று பாமர மக்களை ஏமாற்ற இவர்கள் அலங்கரிக்கப்பட்ட ஆயிரம் வார்த்தைகளை பயன்படுத்தலாம். நாளை அல்லாஹ்விற்கு முன்னர் நிற்கும்போது இவர்கள் யாரை தங்கள் முன்னோடியாக முன் நிறுத்துவார்கள்!

﴿قُلْ إِنْ كُنْتُمْ تُحِبُّونَ اللَّهَ فَاتَّبِعُونِي يُحْبِبْكُمُ اللَّهُ
وَيَغْفِرْ لَكُمْ ذُنُوبَكُمْ وَاللَّهُ غَفُورٌ رَحِيمٌ۝﴾

(நபியே! மனிதர்களை நோக்கி) நீங்கள் கூறுங்கள்: "நீங்கள் மெய்யாகவே அல்லாஹ்வை நேசிப்பவர்களாக இருந்தால் என்னைப் பின்பற்றுங்கள். உங்களை அல்லாஹ் நேசிப்பான்.

*உங்கள் பாவங்களையும் அவன் மன்னித்து விடுவான். அல்லாஹ் மிக அதிகம் மன்னிப்பவனும், நிகரற்ற அன்புடையவனுமாக இருக்கின்றான். (அல்குர்ஆன் 3 : 31)*

*நான் இப்படி கூறி இருக்க கொள்கையிலும் அமலிலும் நீங்கள் யாரை பின்பற்றினீர்கள் என்று அல்லாஹ் கேட்டால் இவர்கள் என்ன பதில் சொல்வார்கள்.?*

*9. கிரேக்க தத்துவங்களை கற்று, அதனடிப்படையில் ஆயத்துகளுக்கு மாற்று அர்த்தங்களை கற்பித்துவிட்டு, அல்லாஹ்வின் தன்மைகளை மறுக்கிற இவர்கள் நாளை அல்லாஹ்வின் முன்னிலையில் எப்படி நிற்பார்கள்?*

*10. இணைவைப்பாளர்கள் அல்லாஹ்வின் பெயர்களில் விளையாண்டது போன்று அல்லாஹ்வின் பெயர்களில் இவர்கள் விளையாண்டு அல்லாஹ்வின் அழகிய பெயர்களில் சிலவற்றைத் தவிர பெரும்பாலான பெயர்களையும் அவை குறிக்கும் பொருள்களையும் இவர்கள் மறுக்க வில்லையா?*

*11. நான் எனது வேதத்தில் எனக்கு சூட்டிய பெயர்களையும் தன்மைகளையும் எப்படி நீங்கள் மறுத்தீர்கள் என்று அல்லாஹ் இவர்களிடம் கேட்டால் இவர்கள் என்ன பதில் சொல்வார்கள்?*

*12. அல்லாஹ்வே! நாங்கள் உன்னைப் பரிசுத்தப்படுத்த நினைத்தோம் என்று பதில் அளித்தால் அல்லாஹ் இப்படி கேள்வி கேட்க மாட்டானா?*

﴿أَأَنْتُمْ أَعْلَمُ أَمِ اللّٰهُ﴾

*நீங்கள் அதிகம் அறிந்தவர்களா அல்லது அல்லாஹ்வா? (அல்குர்ஆன் 2 : 140)*

*13. ஸலஃபுகளின் பாதைதான் பாதுகாப்பானது. இன்னும்*

*அதுவே அறிவுப் பூர்வமானது, ஞானமிக்கது, உறுதியானது.*

*14. அதற்கு முரண்பட்ட பின்னோரின் பாதை நாசத்தில் தள்ளக்கூடியது, முட்டாள்தனமானது, மிகவும் பலவீனமானது.*

*அல்லாஹ் நமக்கு உண்மையை புரியவைப்பானாக! ஆமீன்.*

---------------------

# பாடம் 100

## ஹதீஸ்களை பற்றிப்பிடி!

فَاللّٰهَ اللّٰهَ فِي نَفْسِكَ وَعَلَيْكَ بِالْأَثَرِ وَأَصْحَابِ الْأَثَرِ وَالتَّقْلِيدِ فَإِنَّ الدِّينَ إِنَّمَا هُوَ بِالتَّقْلِيدِ يَعْنِي لِلنَّبِيِّ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ وَأَصْحَابِهِ رِضْوَانُ اللّٰهِ عَلَيْهِمْ أَجْمَعِينَ وَمَنْ قَبْلَنَا لَمْ يَدَعُونَا فِي لُبْسٍ فَقَلِّدْهُمْ وَاسْتَرِحْ وَلَا تُـجَاوِزْ الْأَثَرَ وَأَهْلَ الْأَثَرِ

154. உன் விஷயத்தில் அல்லாஹ்வை பயந்துகொள்! அல்லாஹ்வை பயந்துகொள்! ஹதீஸை பற்றிப்பிடி! அஸ்ஹாபுல் அசரை [41] இன்னும் தக்லீதை[42] பற்றிப்பிடி! தீன் என்பதே தக்லீதுதான் -பின்பற்றி வாழ்வதுதான். அதாவது, நபி ﷺ அவர்களையும் அவர்களின் தோழர்களையும் பின்பற்றுவதாகும். அல்லாஹ்வின் பொருத்தம் அந்த தோழர்கள் அனைவருக்கும் கிடைக்கட்டும். நமக்கு முன் சென்ற அவர்கள் நம்மை குழப்பத்தில் விடவில்லை! ஆகவே! நீ அவர்களை பின்பற்று! ராஹத்தாக -நிம்மதியாக இரு! ஹதீஸையும் ஹதீஸை போதிப்பவர்களையும் மீறிவிடாதே!

وَقِفْ عِنْدَ الْـمُتَشَابِهِ وَلَا تَقِسْ شَيْئًا

155. முதஷாபிஹ் - (குர்ஆன், ஸுன்னாவில் விளக்கம் கூறப்படாத) மூடலான விஷயங்கள் வரும்போது (அதில் சுய கருத்துக் கூறாமல்)

---

41 அஸ்ஹாபுல் அசர் என்பவர்கள் - ஹதீஸை உடையவர்கள், ஹதீஸை கற்றவர்கள், ஹதீஸை பின்பற்றி நடப்பவர்கள், ஹதீஸை கற்பிப்பவர்கள் ஆவார்கள்.

42 தக்லீது என்றால் ஏன், எதற்கு, எப்படி என்று விளக்கம் கேட்காமல் அப்படியே நம்பி ஏற்றுக்கொள்வது, அமல் செய்வது ஆகும்.

நின்றுவிடு! அதில் எதையும் கியாஸ் செய்யாதே! (சுயமாக சிந்தித்து விளக்கம் கூறாதே!)

## படிப்பினைகள்

*1. ஆசிரியர் கூறும் அறிவுரை மிகவும் கவனிக்கத்தக்கதாகும்.*

*2. முதலில் ஓர் அடியான் தன் விஷயத்தில் அல்லாஹ்வை பயப்பட வேண்டும். அவன் செய்யக் கூடிய ஒவ்வொரு செயலும் ஒவ்வொரு சொல்லும் ஒவ்வொரு நம்பிக்கையும் ஒன்று அவனுக்கு சாதகமாக இருக்கும். அதாவது அவனை சொர்க்கத்திற்கு சேர்ப்பிக்கக் கூடியதாக இருக்கும். அல்லது அவனுக்கு பாதகமாக இருக்கும். அதாவது அவனை நரகத்தில் சேர்ப்பிக்கக் கூடியதாக இருக்கும்.*

*அல்லாஹு தஆலா கூறுகிறான் :*

﴿فَمَنْ يَعْمَلْ مِثْقَالَ ذَرَّةٍ خَيْرًا يَرَهُ ۝
وَمَنْ يَعْمَلْ مِثْقَالَ ذَرَّةٍ شَرًّا يَرَهُ ۝﴾

*ஆகவே, எவர் ஓர் அணுவளவு நன்மை செய்திருந்தாரோ அவர், (அங்கு) அதனையும் கண்டுகொள்வார். (அவ்வாறே) எவர் ஓர் அணுவளவு தீமை செய்திருந்தாரோ, அதனையும் (அங்கு) அவர் கண்டுகொள்வார். (அல்குர்ஆன் 99 : 7, 8)*

﴿وَكُلُّ شَيْءٍ فَعَلُوهُ فِي الزُّبُرِ ۝ وَكُلُّ صَغِيرٍ وَكَبِيرٍ مُسْتَطَرٌ ۝﴾

*இவர்கள் செய்கின்ற ஒவ்வொரு காரியமும் (அவர்களுடைய) பதிவுப் புத்தகத்தில் இருக்கின்றது. சிறிதோ, பெரிதோ அனைத்துமே அதில் எழுதப்பட்டிருக்கும்.*

*(அல்குர்ஆன் 54 : 52, 53)*

﴿مَا يَلْفِظُ مِنْ قَوْلٍ إِلَّا لَدَيْهِ رَقِيبٌ عَتِيدٌ ○﴾

(மனிதன்) எதைக் கூறியபோதிலும் அதனை எழுதக் காத்துக் கொண்டிருக்கும் ஒருவர் அவனிடம் இல்லாமலில்லை. (அவன் வாயிலிருந்து புறப்படும் ஒவ்வொரு வார்த்தையும் உடனுக்குடன் பதியப்படுகின்றது.) (அல்குர்ஆன் 50 : 18)

﴿يَوْمَ تَجِدُ كُلُّ نَفْسٍ مَا عَمِلَتْ مِنْ خَيْرٍ مُحْضَرًا وَمَا عَمِلَتْ مِنْ سُوءٍ تَوَدُّ لَوْ أَنَّ بَيْنَهَا وَبَيْنَهُ أَمَدًا بَعِيدًا وَيُحَذِّرُكُمُ اللَّهُ نَفْسَهُ وَاللَّهُ رَءُوفٌ بِالْعِبَادِ ○﴾

ஒவ்வொரு ஆத்மாவும் தான் செய்த நன்மைகளையும், தான் செய்த தீமைகளையும் தனக்கு முன் காணும் நாளில் (துக்கித்து) தனக்கும், தான் செய்த தீமைகளுக்கும் இடையில் நீண்ட தூரம் இருந்திருக்க வேண்டுமே? என்று விரும்பும். ஆகவே அல்லாஹ் உங்களுக்குத் தன்னைப்பற்றி (அச்சமூட்டி) எச்சரிக்கை செய்கின்றான். ஏனென்றால், அல்லாஹ் (தன்) அடியார்களிடம் மிகக் கருணையுடையவனாக இருக்கின்றான்.

(அல்குர்ஆன் 3 : 30)

﴿وَوُضِعَ الْكِتَابُ فَتَرَى الْمُجْرِمِينَ مُشْفِقِينَ مِمَّا فِيهِ وَيَقُولُونَ يَا وَيْلَتَنَا مَالِ هَٰذَا الْكِتَابِ لَا يُغَادِرُ صَغِيرَةً وَلَا كَبِيرَةً إِلَّا أَحْصَاهَا وَوَجَدُوا مَا عَمِلُوا حَاضِرًا وَلَا يَظْلِمُ رَبُّكَ أَحَدًا ○﴾

(அவர்களுடைய தினசரிக் குறிப்புப் புத்தகம் அவர்கள் முன் வைக்கப்பட்டால் குற்றவாளிகள் (தாங்கள் செய்த பாவங்கள் அனைத்தும் அதில் இருப்பதைக் கண்டு) பயந்து, எங்களுடைய

கேடே! இதென்ன புத்தகம்! (எங்களுடைய பாவங்கள்) சிறிதோ பெரிதோ ஒன்றையும்விடாது இதில் வரையப்பட்டிருக்கின்றதே என்று அவர்கள் (புலம்பிக்) கூறுவதை நீங்கள் காண்பீர்கள். (நன்மையோ தீமையோ) அவர்கள் செய்த அனைத்தும் (அதில்) இருக்கக் காண்பார்கள். உங்கள் இறைவன் எவனுக்கும் (அவனுடைய தண்டனையைக் கூட்டியோ, நன்மையைக் குறைத்தோ) அநியாயம் செய்ய மாட்டான்.

(அல்குர்ஆன் 18 : 49)

3. இந்த வசனங்களையும் இன்னும் இதுபோன்ற வசனங்களையும் நாம் கவனமாக படிக்க வேண்டும், சிந்திக்க வேண்டும்.

4. நமது கொள்கைகள், நமது செயல்கள், நமது சொல்கள் ஒன்று நமக்கு சொர்க்கத்தின் திறவுகோல்களாக இருக்கும். அல்லாஹ் அப்படியே ஆக்குவானாக! ஆமீன். அல்லது நரகத்தின் சாவிகளாக இருக்கும். அல்லாஹ் பாதுகாப்பானாக!

5. ஒருவருக்கு இஸ்லாம் கிடைக்க வேண்டும். அதுதான் அல்லாஹ்வின் மார்க்கம். அதுதான் அல்லாஹ்வின் பக்கம் அடியார்களை வழிகாட்டும் நேர்வழி.

அல்லாஹு தஆலா கூறுகிறான் :

﴿إِنَّ الدِّينَ عِنْدَ اللهِ الْإِسْلَامُ﴾

நிச்சயமாக அல்லாஹ்விடத்தில் (அங்கீகரிக்கப்பட்ட) மார்க்கம் இஸ்லாம்தான். (அல்குர்ஆன் 3 : 19)

﴿وَمَنْ يَبْتَغِ غَيْرَ الْإِسْلَامِ دِينًا فَلَنْ يُقْبَلَ مِنْهُ
وَهُوَ فِي الْآخِرَةِ مِنَ الْخَاسِرِينَ۝﴾

இஸ்லாமையன்றி (வேறொரு) மார்க்கத்தை எவரேனும் விரும்பினால் நிச்சயமாக அவரிடமிருந்து (அது) அங்கீகரிக்கப்பட மாட்டாது. மறுமையில் அவர் நஷ்டமடைந்தவராகவே இருப்பார். (அல்குர்ஆன் 3 : 85)

**6.** பிறகு இஸ்லாம் கிடைக்கப்பெற்ற பின்னர் அவர் நபி ﷺ அவர்கள் இன்னும் ஸஹாபாக்கள், தாபியீன்கள், இமாம்கள், நல்லோர் சென்ற சரியான பாதையை அடைய வேண்டும். இந்த பாதை அஹ்லுஸ் ஸுன்னா வல்ஜமாஆ உடைய பாதை ஆகும்.

**7.** இவர்கள் மட்டுமே அல்லாஹ்வின் உண்மையான நேர்வழியில் இருக்கிறார்கள். இவர்கள் மார்க்கத்தையும் தேர்ந்தெடுத்து, பிறகு அந்த மார்க்கத்தில் அளவு கடந்துவிடாமல், எந்த ஓரத்திற்கும் சென்றுவிடாமல், மார்க்கத்தில் மனோ இச்சையையும் சுய கருத்தையும் சேர்த்துவிடாமல் அல்லாஹ்வும் ரஸூல் அவர்களும் கூறியதோடு மற்றும் நின்று விடுவார்கள். குர்ஆனையும் ஸுன்னாவையும் புரிவதில், எடுத்து அமல் செய்வதில் ஸஹாபாக்களின் ஜமாஅத்தை முன்னுதாரணமாக ஆக்கிக் கொள்வார்கள். அவர்களை விட்டு பிரயமாட்டார்கள், விலக மாட்டார்கள். ஏனெனில், அல்லாஹ் கூறுகிறான் :

﴿وَالسَّابِقُونَ الْأَوَّلُونَ مِنَ الْمُهَاجِرِينَ وَالْأَنْصَارِ وَالَّذِينَ اتَّبَعُوهُمْ بِإِحْسَانٍ رَضِيَ اللَّهُ عَنْهُمْ وَرَضُوا عَنْهُ وَأَعَدَّ لَهُمْ جَنَّاتٍ تَجْرِي تَحْتَهَا الْأَنْهَارُ خَالِدِينَ فِيهَا أَبَدًا ذَٰلِكَ الْفَوْزُ الْعَظِيمُ﴾

முஹாஜிர்களிலும் அன்ஸார்களிலும் எவர்கள் (இஸ்லாமில்) முதலாவதாக முந்திக் (கொண்டு நம்பிக்கை) கொண்டார்களோ அவர்களையும் நற்செயல்களில் (மெய்யாகவே) இவர்களைப்

*பின்பற்றியவர்களையும் பற்றி அல்லாஹ் திருப்தியடைகின்றான். இவர்களும் அல்லாஹ்வைப் பற்றி திருப்தியடைகின்றனர். அன்றி, தொடர்ந்து நீரருவிகள் ஓடிக்கொண்டிருக்கும் சுவனபதிகளை இவர்களுக்கென தயார்படுத்தி வைத்திருக்கின்றான். அவற்றிலேயே அவர்கள் என்றென்றும் தங்கிவிடுவார்கள். இதுதான் மகத்தான பெரும் வெற்றியாகும்.*

*(அல்குர்ஆன் 9 : 100)*

﴿وَمَنْ يُشَاقِقِ الرَّسُولَ مِنْ بَعْدِ مَا تَبَيَّنَ لَهُ الْهُدَىٰ وَيَتَّبِعْ غَيْرَ سَبِيلِ الْمُؤْمِنِينَ نُوَلِّهِ مَا تَوَلَّىٰ وَنُصْلِهِ جَهَنَّمَ وَسَاءَتْ مَصِيرًا ۝﴾

*எவர் நேரான வழி இன்னதென்று தனக்குத் தெளிவானதன் பின்னரும் (அல்லாஹ்வுடைய) இத்தூதரை விட்டுப் பிரிந்து நம்பிக்கையாளர்களின் வழி அல்லாததில் செல்கின்றாரோ அவரை நாம் அவர் செல்லும் (தவறான) வழியிலேயே செல்லவிட்டு (பின்னர்) அவரை நரகத்தில் சேர்த்து விடுவோம். அது செல்லும் இடங்களில் மிகக் கெட்டது.*

*(அல்குர்ஆன் 4 : 115)*

*8. இந்த வசனத்தில் முஃமின்கள் என்று அல்லாஹ் கூறுவது நபி ﷺ அவர்களின் தோழர்களை ஆகும். இந்த வசனம் நயவஞ்சகர்களை எச்சரித்து அல்லாஹ் இறக்கியதாகும்.*

*மேலும் நயவஞ்சகர்களுக்கு அல்லாஹ் கூறுகிறான் :*

﴿فَإِنْ آمَنُوا بِمِثْلِ مَا آمَنْتُمْ بِهِ فَقَدِ اهْتَدَوْا وَإِنْ تَوَلَّوْا فَإِنَّمَا هُمْ فِي شِقَاقٍ﴾

*(நம்பிக்கையாளர்களே!) நீங்கள் நம்பிக்கை கொண்டவாறே*

அவர்களும் நம்பிக்கை கொண்டால் நிச்சயமாக அவர்கள் நேரான வழியை அடைந்து விடுவார்கள். அவர்கள் புறக்கணித்துவிட்டால் நிச்சயமாக வீண் பிடிவாதத்தில்தான் அவர்கள் இருக்கின்றனர். (அல்குர்ஆன் 2 : 137)

இந்த வசனத்தில் அவர்கள் என்பது நயவஞ்சகர்களையும் நீங்கள் என்பது ஸஹாபாக்களையும் குறிக்கிறது.

9. ஆகவே, அமல்களிலும் நம்பிக்கையிலும் ஸஹாபாக்களின் வழிமுறையை பின்பற்றி நமது மார்க்கத்தை பாதுகாத்து கொள்ள வேண்டும். ஸஹாபாக்களின் வழிமுறையை நாம் ஹதீஸ் நூல்களிலிருந்தும் ஹதீஸை நமக்கு பதிவு செய்த ஹதீஸ் கலை இமாம்களிடமிருந்தும் அறிய முடியும். ஆகவே, அந்த ஹதீஸ் கலை அறிஞர்களை அறிவதும் அவர்களின் வழியை அறிவதும் நமக்கு அவசியமாகும்.

10. இன்னும் குர்ஆன், ஸுன்னாவில் முஹ்கம் - உறுதியான, தெளிவான வசனங்கள் என்னவோ அதை நாம் அமலில் எடுத்துக் கொள்ள வேண்டும். முதஷாபிஹ் - என்று எது நமக்கு தெளிவில்லாமல், குழப்பமாக இருக்குமோ அதைப் பற்றி நாம் சர்ச்சை செய்யக் கூடாது. அதில் நமது அனுமானங்களை ஓட விடக் கூடாது. நமது கற்பனையின் படி நாம் அதற்கு விளக்கம் கூறக் கூடாது.

அல்லாஹு தஆலா கூறுகிறான் :

﴿هُوَ الَّذِي أَنْزَلَ عَلَيْكَ الْكِتَابَ مِنْهُ آيَاتٌ مُحْكَمَاتٌ هُنَّ أُمُّ الْكِتَابِ وَأُخَرُ مُتَشَابِهَاتٌ فَأَمَّا الَّذِينَ فِي قُلُوبِهِمْ زَيْغٌ فَيَتَّبِعُونَ مَا تَشَابَهَ مِنْهُ ابْتِغَاءَ الْفِتْنَةِ وَابْتِغَاءَ تَأْوِيلِهِ وَمَا يَعْلَمُ تَأْوِيلَهُ إِلَّا اللَّهُ وَالرَّاسِخُونَ

فِي الْعِلْمِ يَقُولُونَ آمَنَّا بِهِ كُلٌّ مِنْ عِنْدِ رَبِّنَا وَمَا يَذَّكَّرُ إِلَّا أُولُو الْأَلْبَابِ۝ رَبَّنَا لَا تُزِغْ قُلُوبَنَا بَعْدَ إِذْ هَدَيْتَنَا وَهَبْ لَنَا مِنْ لَدُنْكَ رَحْمَةً إِنَّكَ أَنْتَ الْوَهَّابُ۝ رَبَّنَا إِنَّكَ جَامِعُ النَّاسِ لِيَوْمٍ لَا رَيْبَ فِيهِ إِنَّ اللّٰهَ لَا يُخْلِفُ الْمِيعَادَ۝﴾

*(நபியே!) அவன்தான் (இவ்)வேதத்தை உம்மீது இறக்கியவன். அதில் பொருள் தெளிவான (முஹ்கம்) வசனங்கள் உள்ளன. அவைதான் வேதத்தின் அடிப்படையாகும். இன்னும், பொருள் தெரியமுடியாத வேறு (முதஷாபிஹ் வசனங்களு)ம் உள்ளன. ஆக, தங்கள் உள்ளங்களில் கோணல், (சந்தேகம்) உள்ளவர்கள் குழப்பத்தை தேடியும் (மறைக்கப்பட்ட) அதன் விளக்கத்தை தேடியும் அதில் பொருள் தெரிய(முடியாதவற்றைப் பின்பற்றுகிறார்கள். அதன் விளக்கத்தை அல்லாஹ்வைத் தவிர (யாரும்) அறியமாட்டார். கல்வியில் தேர்ச்சியடைந்தவர்கள், அதை நாங்கள் நம்பிக்கை கொண்டோம். (முஹ்கம், முதஷாபிஹ்) எல்லாம் எங்கள் இறைவனிடமிருந்துதான் (இறக்கப்பட்டவை) எனக் கூறுவார்கள். அறிவுடையவர்களைத் தவிர (மற்றவர்) நல்லறிவு பெறமாட்டார். எங்கள் இறைவா! நீ எங்களை நேர்வழி செலுத்திய பின்னர் எங்கள் உள்ளங்களை கோணலாக்கிவிடாதே! உன்னிடமிருந்து கருணையை எங்களுக்கு வழங்கு! நிச்சயமாக நீதான் வாரி வழங்குபவன்! எங்கள் இறைவா! நிச்சயமாக நீ ஒரு நாளில் மக்களை ஒன்று சேர்ப்பாய். அதில் சந்தேகம் அறவே இல்லை. நிச்சயமாக அல்லாஹ் (தன்) வாக்கை மாற்றமாட்டான்.*

*(அல்குர்ஆன் 3 : 7-9)*

*அல்லாஹ்வே! எங்களை நேர்வழியில் நிலைத்திருக்க செய்! வழிகேடுகளை விட்டு எங்களை பாதுகாத்துக் கொள்!*

---------------------

# பாடம் 101

## ஹதீஸுக்கு எதிராக பேசுவோரிடம் பதில் பேசாதே!

وَلَا تَطْلُبْ مِنْ عِنْدِكَ حِيلَةً تَرُدُّ بِهَا عَلَىٰ أَهْلِ الْبِدَعِ فَإِنَّكَ أُمِرْتَ بِالسُّكُوتِ عَنْهُمْ وَلَا تُمَكِّنْهُمْ مِنْ نَفْسِكَ

156. பித்அத்வாதிகளுக்கு மறுப்பு தெரிவிப்பதற்காக நீயாக ஒரு தந்திரத்தை தேடாதே! அவர்களிடம் நீ வாய்மூடி இருக்கவேண்டும் என்றுதான் நிச்சயமாக நீ கட்டளையிடப்பட்டிருக்கின்றாய். (அவர்களிடம் நீ பேசுவதின் மூலமாக) அவர்களுக்கு உன் மீது ஆதிக்கத்தை கொடுத்து விடாதே!

أَمَا عَلِمْتَ أَنَّ مُـحَمَّدَ بْنَ سِيرِينَ فِي فَضْلِهِ لَمْ يُجِبْ رَجُلًا مِنْ أَهْلِ الْبِدَعِ فِي مَسْأَلَةٍ وَاحِدَةٍ وَلَا سَمِعَ مِنْهُ آيَةً مِنْ كِتَابِ اللهِ عَزَّ وَجَلَّ فَقِيلَ لَهُ فَقَالَ أَخَافُ أَنْ يُـحَرِّفَهَا فَيَقَعُ فِي قَلْبِي شَيْءٌ

நிச்சயமாக முஹம்மது இப்னு சீரின் ﵀ எவ்வளவு பெரிய கல்வியாளர், சிறப்பானவர் என்பதை நீ அறியமாட்டாயா! அவ்வாறு இருந்தும் அவர், பித்அத்வாதிகளில் ஒருவருக்கும் ஒரு விஷயத்தில் கூட பதில் கொடுத்ததில்லை. கண்ணியத்திற்கும் கம்பீரத்திற்கும் உரிய அல்லாஹ்வின் வேதத்தில் இருந்து ஒரு வசனத்(தின் விளக்கத்)தைக்கூட பித்அத்வாதியிடம் முஹம்மது இப்னு சீரின் அவர்கள் செவியுற்றதில்லை. அப்போது அவரிடம் இது குறித்து விளக்கம் கேட்கப்பட்டது. அதற்கு அவர்கள் பதில் கூறினார்கள்:

அந்த வசனத்(தின் விளக்கத்)தை அவர் மாற்றிவிட்டால், (அதை நான் செவியுறும்போது) என் உள்ளத்தில் ஏதும் தவறானது தங்கிவிடும் என்று நான் பயப்படுகின்றேன் என்று கூறினார்கள்.

## படிப்பினைகள்

*1. நேர்வழியிலிருந்து விலகி வழிகேட்டை யார் தேர்ந்தெடுத்தார்களோ நாம் அவர்களை விட்டு விலகி இருக்கவே ஏவப்பட்டுள்ளோம்.*

*2. நம்மீது மார்க்கம் கடமையாக்கியிருப்பதாவது, நாம் நேர்வழியின் பக்கம் மக்களை அழைக்க வேண்டும், நேர்வழியை மக்களுக்கு எடுத்து சொல்ல வேண்டும், நேர்வழியை கற்பிக்க வேண்டும். அவ்வளவுதான். இதற்கு மேலாக, நேர்வழியை மறுப்பவர்களிடம் அல்லது மார்க்க ஆதாரங்களை திரித்து மார்க்கத்தில் விளையாடுகிற அஹ்லுல் பித்ஆவிடம் நாம் தர்க்கம், விவாதம் ஏதும் செய்யக் கூடாது. விவாதம் எவ்வித நன்மையையும் தராது.*

*3. குர்ஆன் வசனங்களை அவர்களுக்கு ஓதிக் காண்பிப்பதும் ஸஹீஹான ஹதீஸ்களை அவர்களுக்கு எடுத்து சொல்வதும் மட்டும் நாம் செய்ய வேண்டிய கடமையாகும். அவர்கள் ஒரு தத்துவத்தை கூறுவது போல் நாம் பதிலுக்கு ஒரு தத்துவத்தை கூறக் கூடாது. அவர்கள் லாஜிக் முன்வைத்தால் அதற்கு பதிலாக நாமும் ஒரு லாஜிக்கை முன் வைக்கக் கூடாது. மாறாக, அல்லாஹ்வின் வசனத்தை ஓதி காண்பித்துவிட்டு அவர்களை விட்டு பிரிந்து சென்று விட வேண்டும்.*

*4. நமது சிறப்பிற்குரிய முன்னோர் இப்படித்தான் நடந்துகொண்டிருக்கிறார்கள். அஹ்லுல் பித்ஆ ஸலஃப் அறிஞர்களிடம் பேசியது இன்னும் அவர்கள் அஹ்லுல் பித்ஆவிற்கு கூறிய பதில்கள் வரலாற்று நூல்களில்*

பதியப்பட்டுள்ளன. இமாம் ஹசன் பசரி, இமாம் இப்னு சீரீன் இன்னும் பலர் அஹ்லுல் பித்ஆவிடம் பேசுவதையும் அவர்களுக்கு பதில் கூறுவதையும் அவர்களுடன் விவாதம் செய்வதையும் வெறுத்தார்கள். அஹ்லுல் பித்ஆவுடன் எவ்விதமான சகவாசத்தையும் நமது சான்றோர் வைத்ததில்லை. அவர்களை விட்டு ஒதுங்கி இருந்ததுடன் தங்கள் சபைகளை விட்டும் அவர்களை ஒதுக்கி வைத்திருந்தார்கள்.

5. இன்று பலர் நாங்கள் அஹ்லுல் பித்ஆவிற்கு பதில் கூறப்போகிறோம், அவர்களின் முகத்தை தோலுரிக்கப் போகிறோம், அவர்களை வாயடைக்க வைக்கப் போகிறோம் என்று கூறி அஹ்லுல் பித்ஆவிடம் விவாதம் செய்ய சென்றனர். ஆனால், இறுதியில் இவர்கள் தங்கள் மார்க்கத்தை கெடுத்துக் கொண்டனர், பல வசனங்களை திரித்து வழிகெட்டனர், பல ஹதீஸ்களை மறுத்து வழிகெட்டனர். அல்லாஹ்தான் பாதுகாவலன்.

---------------------

## பாடம் 102

# தர்க்கம் செய்வதையும் விவாதம் செய்வதையும் விட்டுவிடு! ஹதீஸ்களை ஏற்பதில்தான் அல்லாஹ்வை கண்ணியப்படுத்துவது இருக்கின்றது!

وَإِذَا سَمِعْتَ الرَّجُلَ يَقُولُ إِنَّا نَحْنُ نُعَظِّمُ اللّٰهَ إِذَا سَمِعَ آثَارَ رَسُولِ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ فَاعْلَمْ أَنَّهُ جَهْمِيٌّ يُرِيدُ أَنْ يَرُدَّ أَثَرَ رَسُولِ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ وَيَدْفَعَهُ بِهٰذِهِ الْكَلِمَةِ وَهُوَ يَزْعَمُ أَنَّهُ يُعَظِّمُ اللّٰهَ وَيُنَزِّهُهُ إِذَا سَمِعَ حَدِيثَ الرُّؤْيَةِ وَحَدِيثَ النُّزُولِ وَغَيْرَهُ أَفَلَيْسَ يَرُدُّ أَثَرَ رَسُولِ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ وَإِذَا قَالَ إِنَّا نُعَظِّمُ اللّٰهَ أَنْ يَزُولَ مِنْ مَوْضِعٍ إِلَىٰ مَوْضِعٍ فَقَدْ زَعَمَ أَنَّهُ أَعْلَمُ بِاللّٰهِ مِنْ غَيْرِهِ فَاحْذَرْ هٰؤُلَاءِ فَإِنَّ جُمْهُورَ النَّاسِ مِنَ السُّوقَةِ وَغَيْرِهِمْ عَلَىٰ هٰذَا الْـحَالِ وَحَذِّرْ النَّاسَ مِنْهُمْ وَإِذَا سَأَلَكَ أَحَدٌ عَنْ مَسْأَلَةٍ فِي هٰذَا الْكِتَابِ وَهُوَ مُسْتَرْشِدٌ فَكَلِّمْهُ وَأَرْشِدْهُ وَإِذَا جَاءَكَ يُنَاظِرُكَ فَاحْذَرْهُ

157. ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களுடைய ஹதீஸ்களை ஒருவர் செவியுறும்போது, “நாங்கள் அல்லாஹ்வை மகிமைப்படுத்துகின்றோம்” என்று கூறுவதை நீ செவியுற்றால், “அவர் ஒரு ஜஹ்மி, இந்த

வார்த்தையைக்கொண்டு அவர் ரஸூலுல்லாஹ் ﷺ உடைய ஹதீஸை மறுப்பதற்கும் ஹதீஸை தட்டிக்கழிக்கவும் அவர் விரும்புகிறார் என்பதை நீ அறிந்துகொள்!

ருஃயா (அல்லாஹ்வை மறுமையில் பார்ப்பது சம்பந்தமான) ஹதீஸ், நுஸூல் (அல்லாஹ் முதல் வானத்திற்கு இறங்குகின்றான் என்ற) ஹதீஸ், இன்னும் இது அல்லாத வேறு ஹதீஸ்களை அவர் செவியுற்றால் (அவர் இந்த ஹதீஸ்களை ஏற்றுக் கொள்ளாமல்) தான் அல்லாஹ்வை மகிமைப்படுத்துவதாகவும் அவனை தூய்மைப்படுத்துவதாகவும் அவர் பிதற்றிக்கொண்டு இருக்கின்றார். இவருடைய இந்த செயலால் ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களுடைய ஹதீஸ்களை இவர் மறுக்கவில்லையா! அல்லாஹ் ஓர் இடத்திலிருந்து நீங்கி இன்னொரு இடத்திற்கு செல்வதைவிட்டும் அல்லாஹ்வை நாங்கள் கண்ணியப்படுத்துகின்றோம் என்று அவர் கூறினால் மற்றவர்களைவிட தான் அல்லாஹ்வை அதிகம் அறிந்தவர் என்று பிதற்றுகின்றார். இப்படிப்பட்டவர்களிடம் நீ எச்சரிக்கையாக இரு! பாமர மக்களில் அதிகமானவர்களும் மற்றவர்களும் இந்த நிலையில்தான் இருக்கின்றனர். ஆகவே, இவர்களை விட்டும் மக்களை நீ எச்சரிக்கைசெய்! இந்த புத்தகத்தில் உள்ள ஒரு விஷயத்தைப் பற்றி நேர்வழி தேடியவராக ஒருவர் வந்து உன்னிடம் கேட்டால் அவரிடம் நீ பேசு! அவருக்கு வழிகாட்டு! உன்னிடம் தர்க்கம் செய்பவராக வந்து கேட்டால் அவரிடம் நீ (பேசாமல்) எச்சரிக்கையாக இரு! அவரை தவிர்ந்துகொள்!

فَإِنَّ فِي الْـمُنَاظَرَةِ وَالْـمِرَاءِ وَالْـجِدَالِ الْـمُغَالَبَةَ وَالْـخُصُومَةَ وَالْغَضَبَ وَقَدْ نُهِيتَ عَنْ هٰذَا جِدًّا يُـخْرِجَانِ جَـمِيعًا مِنْ طَرِيقِ الْـحَقِّ وَلَمْ يَبْلُغْنَا عَنْ أَحَدٍ مِنْ فُقَهَائِنَا وَعُلَمَائِنَا أَنَّهُ جَادَلَ أَوْ نَاظَرَ أَوْ خَاصَمَ

ஏனெனில், நிச்சயமாக தர்க்கம் செய்வதில், விவாதம் செய்வதில் வாக்குவாதம் செய்வதில் ஒருவர் ஒருவரை மிகைக்க முயற்சிப்பதும் பொய்யாக பிடிவாதம் பிடிப்பதும் கோபப்படுவதும்தான் இருக்கின்றன. இவை அனைத்தையும்விட்டு நீ தடுக்கப்பட்டு இருக்கின்றாய். விவாதமும் தர்க்கமும் சத்தியப் பாதையிலிருந்து அடியானை வெளியேற்றிவிடும். நமது சட்ட அறிஞர்கள், மற்றும் கல்விமான்களில் எவரும் தர்க்கம் செய்தார், விவாதம் செய்தார், வாக்குவாதம் செய்தார் என்று நமக்கு செய்தி கிடைக்கவில்லை.

**قَالَ الْحَسَنُ الْبَصْرِيُّ الْحَكِيمُ لَا يُمَارِي وَلَا يُدَارِي فِي حِكْمَتِهِ أَنْ يَنْشُرَهَا إِنْ قُبِلَتْ حَمِدَ اللّٰهَ وَإِنْ رُدَّتْ حَمِدَ اللّٰهَ وَجَاءَ رَجُلٌ إِلَى الْحَسَنِ فَقَالَ أَنَا أُنَاظِرُكَ فِي الدِّينِ فَقَالَ الْحَسَنُ أَنَا عَرَفْتُ دِينِي فَإِنْ ضَلَّ دِينُكَ فَاذْهَبْ فَاطْلُبْهُ**

இமாம் அல்ஹஸன் பசரி ﵀ கூறுகிறார்கள் : ஞானவான் தனது ஞானத்தை பரப்பும்போது தனது ஞானத்தில் யாரிடமும் தர்க்கமும் விவாதமும் செய்ய மாட்டார். அந்த ஞானம் ஏற்றுக்கொள்ளப்பட்டால் அவர் அல்லாஹ்வை புகழ்வார். அது மறுக்கப்பட்டுவிட்டாலும் அவர் அல்லாஹ்வை புகழ்வார். ஒருவர் ஹசன் பசரி ﵀ அவர்களிடம் வந்தார். நான் உங்களிடம் மார்க்க விஷயத்தில் விவாதம் செய்ய விரும்புகிறேன் என்று கூறினார். அதற்கு ஹசன் பசரி ﵀ கூறினார்கள்: நான் எனது மார்க்கத்தை அறிந்து வைத்திருக்கின்றேன். உனது மார்க்கம் உனக்கு தெரியவில்லை என்றால் நீ சென்று அதைத் தேடி கற்றுக்கொள்!"

**وَسَمِعَ رَسُولُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ قَومًا عَلَى بَابِ حُجْرَتِهِ يَقُولُ**

أَحَدُهُمْ أَلَمْ يَقُلِ اللّٰهُ كَذَا وَقَالَ الْآخَرُ أَلَمْ يَقُلِ اللّٰهُ كَذَا فَخَرَجَ مُغْضِبًا فَقَالَ أَبِهٰذَا أُمِرْتُمْ أَمْ بِهٰذَا بُعِثْتُ إِلَيْكُمْ أَنْ تَضْرِبُوا كِتَابَ اللّٰهِ بَعْضَهُ بِبَعْضٍ فَنَهَىٰ عَنِ الْـجِدَالِ

சில மக்கள் தமது அறை வாசலில் பேசிக்கொள்வதை ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் செவியுற்றார்கள்: அவர்களில் ஒருவர் கூறினார்: அல்லாஹ் இப்படி கூறவில்லையா? மற்றவர் கூறினார்: அல்லாஹ் இப்படி கூறவில்லையா? இதனால் நபி ﷺ அவர்கள் கோபமுற்று அறையிலிருந்து வெளியேறி வந்து கூறினார்கள்: இதுதான் உங்களுக்கு கட்டளையிடப்பட்டதா? அல்லது இதைக் கொண்டுதான் அதாவது, அல்லாஹ்வின் வேதத்தை அதில் சிலதை சிலதைக்கொண்டு நீங்கள் எதிர்க்க வேண்டும் என்று நான் உங்களிடம் அனுப்பப்பட்டேனா? (நான் இதைத்தான் உங்களுக்கு கற்றுக் கொடுத்தேனா?) ஆகவே, நபி ﷺ அவர்கள் வாக்குவாதம் செய்வதிலிருந்து (நம்மைத்) தடுத்தார்கள்.

وَكَانَ ابْنُ عُمَرَ يَكْرَهُ الْـمُنَاظَرَةَ وَمَالِكُ بْنُ أَنَسٍ وَمَنْ فَوْقَهُ وَمَنْ دُونَهُ إِلَىٰ يَوْمِنَا هٰذَا وَقَوْلُ اللّٰهِ عَزَّ وَجَلَّ أَكْبَرُ مِنْ قَوْلِ الْـخَلْقِ قَالَ اللّٰهُ تَبَارَكَ وَتَعَالَىٰ ﴿مَا يُـجَادِلُ فِي آيَاتِ اللّٰهِ إِلَّا الَّذِينَ كَفَرُوا﴾

விவாதம் செய்வதை இப்னு உமர் رضي الله عنه அவர்கள் வெறுப்பவர்களாக இருந்தார்கள். மாலிக் இப்னு அனஸ் رحمه الله அவர்களும் அவர்களுக்கு முன்னிருந்தவர்களும் இன்று வரை அவர்களுக்குப் பின் வந்தவர்களும் விவாதம் செய்வதை வெறுப்பவர்களாக இருந்தார்கள்.

கண்ணியத்திற்கும் கம்பீரத்திற்கும் உரிய அல்லாஹ்வின் கூற்று படைப்புகளின் கூற்றைவிட மிக மிகப் பெரியதாகும்.

அருள் நிறைந்த, உயர்வுமிக்க அல்லாஹ் கூறுகிறான் :

﴿مَا يُجَادِلُ فِي آيَاتِ اللّٰهِ إِلَّا الَّذِينَ كَفَرُوا﴾

நிராகரிப்பவர்களைத் தவிர மற்றவர்கள் அல்லாஹ்வின் வசனங்களில் தர்க்கம் செய்ய மாட்டார்கள். (அல்குர்ஆன் 40 : 4)

وَسَأَلَ رَجُلٌ عُمَرَ بْنَ الْـخَطَّابِ فَقَالَ مَا النَّاشِطَاتُ نَشْطًا؟ فَقَالَ لَوْ كُنْتَ مَـحْلُوقًا لَضَرَبْتُ عُنُقَكَ

ஒரு மனிதர் உமர் இப்னுல் கத்தாப் ﷺ அவர்களிடம் (தர்க்கம் செய்யும் விதமாக) கேட்டார்: “அன்னாஷித்தாத் நஷ்த்தா” என்றால் என்ன? அவர்கள் கூறினார்கள்: நீ மட்டும் தலைமுடி சிரைக்கப்பட்டவனாக இருந்திருந்தால் உனது கழுத்தை நான் துண்டித்திருப்பேன்.[43]

وَقَالَ النَّبِيُّ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ الْـمُؤْمِنُ لَا يُمَارِي وَلَا أَشْفَعُ لِلْمُمَارِي يَوْمَ الْقِيَامَةِ فَدَعُوا الْـمِرَاءَ لِقِلَّةِ خَيْرِهِ

நபி ﷺ அவர்கள் கூறினார்கள் : முஃமின் தர்க்கம் செய்ய மாட்டான். தர்க்கம் செய்பவருக்கு நான் மறுமை நாளில் சிபாரிசு செய்ய மாட்டேன். ஆகவே, தர்க்கம் செய்வதில் நன்மை குறைவு என்பதால் தர்க்கம் செய்வதை விட்டுவிடுங்கள்!

وَلَا يَـحِلُّ لِرَجُلٍ مُسْلِمٍ أَنْ يَقُولَ فُلَانٌ صَاحِبُ سُنَّةٍ حَتّٰى يَعْلَمَ مِنْهُ أَنَّهُ قَدْ اجْتَمَعَتْ فِيهِ خِصَالُ السُّنَّةِ لَا يُقَالُ لَهُ صَاحِبُ سُنَّةٍ حَتّٰى تَـجْتَمِعَ فِيهِ السُّنَّةُ كُلُّهَا

43. தலைமுடியை சிரைத்திருப்பது காரிஜிய்யாக்களின் அடையாளங்களில் ஒன்றாக நபி ﷺ அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த காரிஜிய்யாக்களின் தலைவன்தான் நபி ﷺ அவர்கள் மீது ஆட்சேபனை செய்தான்.

157. “இன்னார் ஸுன்னாவை உடையவர் என்று” கூறுவது ஒரு முஸ்லிமான மனிதருக்கு ஆகுமாகாது, எதுவரை என்றால், நிச்சயமாக அந்த மனிதரிடம் ஸுன்னாவின் பண்புகள் எல்லாம் ஒன்று சேர்ந்து விட்டன என்று அவர் உறுதியாக அறிகின்றவரை. ஒரு மனிதரை ஸாஹிபுஸ் ஸுன்னா (-ஸுன்னா உடையவர்) என்று கூறிவிட முடியாது, அவரிடம் ஸுன்னா அனைத்தும் ஒன்று சேர்கின்றவரை.[44]

## படிப்பினைகள்

*இந்த பாடத்தின் விளக்கங்கள் முந்திய பாடங்களில் தெளிவாக கூறப்பட்டிருக்கின்றன.*

---------------------

44. ஸுன்னா உடைய பண்புகள் என்னவென்று அடுத்த குறிப்பில் இமாம் அவர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

# பாடம் 103

## வழிகேடுகளை விட்டு விலக இப்னுல் முபாரக்கின் அறிவுரையை ஏற்றுக் கொள்!

قَالَ عَبْدُ اللهِ بْنُ الْـمُبَارَكِ أَصْلُ اثْنَيْنِ وَسَبْعِينَ هَوًى أَرْبَعَةُ أَهْوَاءٍ فَمِنْ هٰذِهِ الْأَرْبَعَةِ أَهْوَاءٍ انْشَعَبَتْ هٰذِهِ الْاِثْنَانِ وَسَبْعُونَ هَوًى الْقَدَرِيَّةُ وَالْـمُرْجِئَةُ وَالشِّيعَةُ وَالْـخَوَارِجُ

159. அப்துல்லாஹ் இப்னுல் முபாரக் கூறுகிறார்கள்: எழுபத்தி இரண்டு மன இச்சைகளுடைய -பித்அத்துகளுடைய அடிப்படை நான்கு பித்அத்துகளாகும். இந்த நான்கு பித்அத்துகளில் இருந்து இந்த எழுபத்தி இரண்டு மன இச்சைகள் பித்அத்கள் கிளைகளாக உருவாகின. அந்த நான்கு: கதரிய்யா, முர்ஜிஆ, ஷீஆ, கவாரிஜ் ஆவார்கள்.

فَمَنْ قَدَّمَ أَبَا بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانَ وَعَلِيًّا عَلَىٰ أَصْحَابِ رَسُولِ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ وَلَمْ يَتَكَلَّمْ فِي الْبَاقِينَ إِلَّا بِـخَيْرٍ وَدَعَا لَهُمْ فَقَدْ خَرَجَ مِنَ التَّشَيُّعِ أَوَّلِهِ وَآخِرِهِ

ஆகவே, யார் அபூ பக்ர், உமர், உஸ்மான், அலீ رضي الله عنهم ஆகியோரை மற்ற தோழர்களைவிட (சிறப்பிலும் கிலாபத்திலும்) முற்படுத்தி, மீதமுள்ள மற்ற தோழர்கள் விஷயத்தில் நன்மையான முறையில் பேசி, அவர்களுக்காக துஆ செய்தாரோ அவர் ஷீஆ கொள்கையிலிருந்து முற்றிலுமாக வெளியேறி விட்டார்!

وَمَنْ قَالَ الْإِيمَانُ قَوْلٌ وَعَمَلٌ يَزِيدُ وَيَنْقُصُ فَقَدْ خَرَجَ مِنَ الْإِرْجَاءِ كُلِّهِ أَوَّلِهِ وَآخِرِهِ

ஈமான் என்பது சொல்லும் செயலும் சேர்ந்ததாகும்; அது கூடும், குறையும் என்று யார் கூறுவாரோ அவர் இர்ஜா -கொள்கையிலிருந்து முற்றிலுமாக வெளியேறிவிட்டார்.

وَمَنْ قَالَ الصَّلَاةُ خَلْفَ كُلِّ بِرٍّ وَفَاجِرٍ وَالْـجِهَادُ مَعَ كُلِّ خَلِيفَةٍ وَلَمْ يَرَ الْـخُرُوجَ عَلَى السُّلْطَانِ بِالسَّيْفِ وَدَعَا لَهُمْ بِالصَّلَاحِ فَقَدْ خَرَجَ مِنْ قَوْلِ الْـخَوَارِجِ أَوَّلِهِ وَآخِرِهِ

நல்லவர், கெட்டவர் ஒவ்வொருவருக்கு பின்னாலும் அவரைப் பின்பற்றி தொழவேண்டும் என்று யார் கூறுவாரோ, ஒவ்வொரு கலீஃபா உடன் சேர்ந்து ஜிஹாதை நிலை நிறுத்த வேண்டும் என்று கூறுவாரோ, மன்னருக்கு எதிராக வாளேந்துவதை சரியான செயலாக கருதவில்லையோ, அவர்களுக்காக அவர்களின் சீர்திருத்தம் வேண்டி துஆ செய்வாரோ அவர் கவாரிஜிகளுடைய கொள்கையிலிருந்து முற்றிலும் வெளியேறிவிட்டார்.

وَمَنْ قَالَ الْـمَقَادِيرُ كُلُّهَا مِنَ اللهِ عَزَّ وَجَلَّ خَيْرُهَا وَشَرُّهَا يُضِلُّ مَنْ يَشَاءُ وَيَهْدِي مَنْ يَشَاءُ فَقَدْ خَرَجَ مِنْ قَوْلِ الْقَدَرِيَّةِ أَوَّلِهِ وَآخِرِهِ وَهُوَ صَاحِبُ سُنَّةٍ

விதிகளெல்லாம் (நடக்கக்கூடிய செயல்கள் எல்லாம்) கண்ணியமும் கம்பீரமும் மிக்க அல்லாஹ்வின் புறத்திலிருந்தே ஆகும்; விதியிலுள்ள நன்மை தீமை அனைத்தும் அல்லாஹ்வின் புறத்திலிருந்தே ஆகும்; அவன் தான் நாடுகின்றவர்களை வழிகெடுக்கின்றான்; இன்னும் அவன் தான் நாடுகின்றவர்களை நேர்வழிப்படுத்துகின்றான் என்று

யார் கூறுவாரோ அவர் கதரிய்யாக்களுடைய கொள்கையிலிருந்து முற்றிலும் வெளியேறிவிட்டார். அவர் ஸுன்னாவை பின்பற்றியவர் ஆவார்.

## படிப்பினைகள்

*1. இமாம் இப்னுல் முபாரக்கின் கூற்று மிகத் தெளிவாக இருக்கிறது.*

*2. இப்னுல் முபாரக் அவர்கள் அஹ்லுஸ் ஸுன்னாவின் பெரிய இமாமாக விளங்கினார்கள். இமாம்களுக்கு இமாமாகவும் அறிஞர்களின் ஆசிரியராகவும் ஸலஃப்களின் சிறந்த முன்னுதாரணமாக விளங்கினார்கள். இவர் தாபியீன்களின் மாணவர் ஆவார். அவர்களின் பிறப்பு : ஹிஜ்ரி 118, அவர்களின் இறப்பு : ஹிஜ்ரி 181, மேற்கு ஈராக்கில் அன்பார் பகுதியில் அடக்கம் செய்யப்பட்டுள்ளார்கள்.*

*3. இப்னுல் முபாரக் அவர்களை பற்றி அறிஞர்கள் கூறி இருக்கும் புகழ்மாலைகளை இந்த இடத்தில் எழுதி முடிக்க முடியாது. எல்லாவிதமான நற்புகழ்ச்சியையும் அறிஞர்கள் இப்னுல் முபாரக் விஷயத்தில் கூறி இருக்கிறார்கள். அல்லாஹ்வின் அருளும் கருணையும் இப்னுல் முபாரக் அவர்கள் மீதும் நல்லோர் அனைவர் மீதும் நிலவட்டும்.*

---

# பாடம் 104

## இறந்தவர் யாரும் இவ்வுலகிற்கு மீண்டும் வரமாட்டார்!

وَبِدْعَةٌ ظَهَرَتْ هِيَ كُفْرٌ بِاللهِ الْعَظِيمِ وَمَنْ قَالَ بِهَا فَهُوَ كَافِرٌ بِاللهِ لَا شَكَّ فِيهِ مَنْ يُؤْمِنُ بِالرَّجْعَةِ وَيَقُولُ عَلِيُّ بْنُ أَبِي طَالِبٍ حَيٌّ وَسَيَرْجِعُ قَبْلَ يَوْمِ الْقِيَامَةِ وَمُحَمَّدُ بْنُ عَلِيٍّ وَجَعْفَرُ بْنُ مُحَمَّدٍ وَمُوسَىٰ بْنُ جَعْفَرَ وَتَكَلَّمُوا فِي الْإِمَامَةِ وَأَنَّهُمْ يَعْلَمُونَ الْغَيْبَ فَاحْذَرْهُمْ فَإِنَّهُمْ كُفَّارٌ بِاللهِ الْعَظِيمِ وَمَنْ قَالَ بِهٰذَا الْقَوْلِ

160. ஒரு பித்ஆ தோன்றி இருக்கின்றது. அது குஃப்ர் -மகத்தான அல்லாஹ்வை நிராகரிப்பதாகும். யார் அந்த பித்அத்தை நம்புவாரோ, அதை ஏற்றுக் கொண்டு கூறுவாரோ அவர் சந்தேகமில்லாமல் காஃபிர் -நிராகரிப்பாளர் ஆகிவிடுவார். அதாவது மறுபிறவி உண்டு என்றும், அலீ இப்னு அபீ தாலிப் ؓ உயிருடன் இருக்கின்றார்கள் என்றும் மறுமை நாளுக்கு முன்பாக அவர்கள் மீண்டும் வருவார்கள் என்றும் இந்த பித்அத்வாதிகள் கூறுகின்றனர். இன்னும் முஹம்மது இப்னு அலீ, ஜஃபர் இப்னு முஹம்மது, மூசா இப்னு ஜஃபர் ஆகியோரும் திரும்ப உயிர்பெற்று வருவார்கள் என்று இவர்கள் கூறுகிறார்கள். (மார்க்கத்தில் புதிதாக) இமாமத் என்று ஒரு விஷயத்தைப் பற்றி பேசுகிறார்கள்.[45] மேலும் நிச்சயமாக அவர்கள் அனைவரும் மறைவான விஷயங்களை அறிவார்கள் என்று நம்புகிறார்கள்.

---

45. (அலீ ؓ அவர்களையும் அவர்களின் சில வழித்தோன்றல்களையும் தங்களது இமாம்கள் -தலைவர்கள் என்று கூறுகின்றனர்.)

ஆகவே இவர்கள் விஷயத்தில் எச்சரிக்கையாக இரு. இவர்கள் எல்லோரும் மகத்தான அல்லாஹ்வை நிராகரித்த காஃபிர்கள் ஆவார்கள். இந்தக் கூற்றைக் கூறுபவர் யாராக இருந்தாலும் அவரும் காஃபிர் ஆவார்.

## படிப்பினைகள்

*1. இந்த பாடத்தில் ராஃபிழா - ஷீஆக்களிடம் இருக்கும் மிகத் தவறான கொள்கையை சுட்டிக்காட்டி அதற்கு மறுப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*2. யார் மரணித்து விட்டார்களோ அவர்களில் யாரும் இந்த உலகத்திற்கு திரும்ப வர முடியாது.*

*3. மறு பிறவி என்பதும் இல்லை.*

*4. ஈசா ﵇ அவர்கள் உயிருடன் வானத்திற்கு உயர்த்தப்பட்டார்கள். அவர்கள் வானத்தில் உயிருடன் இருக்கிறார்கள். மறுமை நிகழ்வதற்கு முன்னர் அல்லாஹ்வின் அனுமதி பெற்று அவர்கள் பூமிக்கு இறங்குவார்கள்.*

*5. வேறு எந்த நபியும், ரஸூலும் அல்லது இறைநேசர்களில் யாரும் இறந்த பின்னர் உடனேவோ அல்லது சில காலங்கள் கழித்தோ இந்த பூமிக்கு வர மாட்டார்கள். இவ்வாறு கூறுவது மிகப் பெரிய பொய்யும் இட்டுக்கட்டுவதும் ஆகும்.*

*ராஃபிழாக்கள் ஒருவரை வரம்பு மீறி நேசித்து, பிறகு அவரை அளவுகடந்து புகழ்வார்கள். அவர்களில் பலர் தங்கள் இமாம்களை நபி ﷺ அவர்களுக்கு சமமாக அல்லது அல்லாஹ்விற்கு சமமாக ஆக்கிவிடுவார்கள். அவர்களின் தீய கொள்கைகளில் இருந்து அல்லாஹ் நம்மை பாதுகாப்பானாக!! ஆமீன்!*

---------------------

# பாடம் 105

## பிந்திய இரண்டு கலீஃபாக்கள் விஷயத்தில் நேரான வழியை தேர்ந்தெடு!

قَالَ طُعْمَةُ بْنُ عُمَرَ وَسُفْيَانُ بْنُ عُيَيْنَةَ مَنْ وَقفَ عِنْدَ عُثْمَان وَعَلِـيّ فَهُوَ شِيَعِيٌّ لا يُعَدَّلُ وَلَا يُكَلَّمُ وَلَا يُـجَالَسُ وَمَنْ قَدَّمَ عَلِيًّا عَلَىٰ عُثْمَانَ فَهُوَ رَافِضِيٌّ قَدْ رَفَضَ أَثَرَ أَصْحَابِ رَسُولِ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ وَمَنْ قَدَّمَ الثَّلَاثَةَ عَلَىٰ جَمَاعَتِهِمْ وَتَرَحَّمَ عَلَى الْبَاقِينَ وَكَفَّ عَنْ زَلَلِهِم فَهُوَ عَلَىٰ طَرِيقِ الْاِسْتِقَامَةِ وَالْـهُدَىٰ فِي هٰذَا الْبَابِ

161. துஃமா இப்னு உமர், ஸுஃப்யான் இப்னு உயைனா ﵏ கூறுகிறார்கள்: உஸ்மான் மற்றும் அலீ ﵄ ஆகிய இருவருக்கும் மத்தியில் நான் மௌனம் காப்பேன் என்று யார் கூறுவாரோ அவர் ஷீஆ கொள்கை உடையவர் ஆவார். அவரை நம்பக்கூடாது; அவரிடம் பேசக் கூடாது; அவருடன் பழகக் கூடாது. யார் உஸ்மான் ﵁ அவர்களை விட அலி ﵁ அவர்களை சிறப்பில் முன்னிலைப்படுத்துவாரோ அவர் ராஃபிழி ஆவார். அவர் ரஸூலுல்லாஹ் ﷺ உடைய தோழர்களின் கூற்றுகளை தூக்கி எறிந்துவிட்டார். யார் அபூ பக்ர், உமர், உஸ்மான் ﵃ ஆகிய மூன்று நபர்களையும் மற்ற எல்லா ஸஹாபாக்களைவிட சிறப்பில் முன்னிலைப்படுத்தி பேசுவாரோ, மற்றவர்களுக்காக கருணைவேண்டி துஆ கேட்பாரோ, அவர்களின் தவறுகளைப் பற்றி பேசாமல், தன்னை தடுத்துக்கொள்வாரோ அவர் இந்த விஷயங்களில் நேரான, சரியான, நிலையான பாதையின் மீது இருக்கின்றார்.

## படிப்பினைகள்

*1. இந்த பாடத்தில் ஸஹாபாக்கள் இன்னும் கலீஃபாக்கள் விஷயத்தில் நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டும், அவர்களில் தகுதிகள் அடிப்படையில் யாரை முன்னிலைப் படுத்த வேண்டும் என்பதை ஆசிரியர் அவர்கள் விவரிக்கிறார்கள்.*

---------------------

# பாடம் 106

## நபி ﷺ சொர்க்கவாசி என்று வாழ்த்தியவர்களை நீயும் அப்படியே வாழ்த்து!

وَالسُّنَّةُ أَنْ تَشْهَدَ أَنَّ الْعَشَرَةَ الَّذِينَ شَهِدَ لَهُمْ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ بِالْـجَنَّةِ أَنَّهُم فِي الْـجَنَّةِ لَا شَكَّ فِيهِ

162. ஸுன்னா -நபிவழி என்னவென்றால் ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் சொர்க்கத்தைக் கொண்டு சாட்சி கூறிய பத்து நபித்தோழர்கள் சொர்க்க வாசிகள், அதில் எவ்வித சந்தேகமும் இல்லை என்று நீ சாட்சி கூறுவதாகும்.

وَلَا تُفْرِدْ بِالصَّلَاةِ عَلَىٰ أَحَدٍ إِلَّا لِرَسُولِ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ وعَلَىٰ آلِهِ فَقَطْ

163. ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் மீதும் அவர்களின் குடும்பத்தார் மீதும் தவிர மற்ற யார் ஒருவர் மீதும் தனிப்பட்ட முறையில் ஸலவாத் கூறாதே!

وَتَعْلَمُ أَنَّ عُثْمَانَ قُتِلَ مَظْلُومًا وَمَنْ قَتَلَهُ كَانَ ظَالِمًا

164. நிச்சயமாக உஸ்மான் رضي الله عنه அநீதி இழைக்கப்பட்டவராக கொல்லப் பட்டார், அவரைக் கொன்றவர் அநியாயக்காரராக இருந்தார் என்பதை நீ அறிந்து கொள்ள வேண்டும்.

# படிப்பினைகள்

இந்த பாடத்தில் ஆசிரியர் அவர்கள் ஸஹாபாக்கள் குறித்து நாம் பேணவேண்டிய ஒழுக்கங்களை விளக்கமாக கூறுகிறார்கள். இந்த பாடத்தின் பல விளக்கங்கள் முன் சென்ற பாடங்களில் கூறப்பட்டு இருக்கின்றன. உஸ்மான் ﵁ அவர்கள் கொல்லப்பட்ட வரலாறு குறித்து தனி ஒரு நூல் இன் ஷா அல்லாஹ் விரைவில் வர இருக்கிறது. அதை படித்து பயன் பெறவும்!

--------------------

# பாடம் 107

## இந்நூலின் முக்கியத்துவத்தை உணர்வாயாக!

فَمَنْ أَقَرَّ بِمَا فِي هٰذَا الْكِتَابِ وَآمَنَ بِهِ وَاتَّـخَذَهُ إِمَامًا وَلَمْ يَشُكَّ فِي حَرْفٍ مِنْهُ وَلَمْ يَـجْحَدْ حَرْفًا وَاحِدًا فَهُوَ صَاحِبُ سُنَّةٍ وَجَمَاعَةٍ كَامِلٍ قَدْ كَمُلَتْ فِيهِ السُّنَّةُ وَمَنْ جَحَدَ حَرْفًا مِمَّا فِي هٰذَا الْكِتَابِ أَوْ شَكَّ فِي حَرْفٍ مِنْهُ أَوْ شَكَّ أَوْ وَقَفَ فَهُوَ صَاحِبُ هُوًى

165. யார் இந்த புத்தகத்தில் உள்ளதை ஒப்புக்கொண்டாரோ, இதை நம்பிக்கைக் கொண்டாரோ, இதை வழிகாட்டியாக எடுத்துக் கொண்டாரோ இதில் உள்ள ஓர் எழுத்தில் கூட சந்தேகிக்க வில்லையோ, ஓர் எழுத்தைக்கூட மறுக்கவில்லையோ அவர்தான் ஸுன்னா, மற்றும் ஜமாஆவை உடையவர், நிறைவானவர் ஆவார். அவரிடம் ஸுன்னா முழுமை அடைந்துவிட்டது. யார் இந்த புத்தகத்தில் உள்ளவற்றில் இருந்து ஓர் எழுத்தை மறுப்பாரோ அல்லது அதில் ஓர் எழுத்தில் சந்தேகிப்பாரோ அல்லது மௌனம் காப்பாரோ அவர் ஹவா உடையவர் -பித்அத்வாதி ஆவார்.

وَمَنْ جَحَدَ أَوْ شَكَّ فِي حَرْفٍ مِنْ الْقُرْآنِ أَوْ فِي شَيْءٍ جَاءَ عَنْ رَسُولِ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ لَقِيَ اللّٰهَ تَعَالَىٰ مُكَذِّبًا فَاتَّقِ اللّٰهَ وَاحْذَرْ وَتَعَاهَدْ إِيمَانَكَ

166. யார் குர்ஆனில் ஓர் எழுத்தை மறுப்பாரோ, அல்லது அதில்

சந்தேகிப்பாரோ, அல்லது ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களிடமிருந்து வந்த ஒரு விஷயத்தில் சந்தேகிப்பாரோ அவர் பொய்பித்தவராகத்தான் உயர்வு மிக்க அல்லாஹ்வை சந்திப்பார். ஆகவே, எச்சரிக்கையாக இரு! உனது ஈமானை அவ்வப்போது கவனித்து பாதுகாத்துக்கொள்!

## படிப்பினைகள்

*1. உண்மையில் இந்த நூல் நமக்கு கிடைத்த பெரிய பாக்கியமாகும். குர்ஆனையும் ஸுன்னாவையும் நாம் புரிவதற்கும் அஹ்லுஸ் ஸுன்னாவின் வழிமுறைகளை நாம் தெளிவாக தெரிந்து கொள்வதற்கும் இந்த நூல் நமக்கு பெரிதும் உதவியாக இருந்தது என்றால் அது மிகையல்ல. இந்நூலை ஆசிரியர் அவர்கள் எழுதி எத்தனை நூறு ஆண்டுகள் உருண்டோடி விட்டன. இந்த நூலின் பக்கம் நமக்கு வழிகாட்டிய அல்லாஹ்விற்கே எல்லாப் புகழும்.*

*2. இந்த நூலில் உள்ள ஒவ்வொரு கருத்தும் அஹ்லுஸ் ஸுன்னாவின் இமாம்கள் வழிகாட்டிய செய்திகள் ஆகும்.*

*3. நல்லமல்களை தெரிந்துகொள்வது அவசியமாக இருப்பதைப் போன்று வழிகேட்டில் நம்மை அறியாமல் நாம் விழுந்துவிடாமல் இருக்க அந்த வழிகேட்டை அறிய வேண்டியது அவசியமாக இருக்கிறது. அந்த அடிப்படையில் ஒரு முஸ்லிமை நம்பிக்கை இன்னும் கொள்கையில் வழிதவற வைக்கும் அடிப்படை விஷயங்களை ஆசிரியர் அவர்கள் இந்த நூலில் பல இடங்களில் திரும்ப திரும்ப கூறி நமக்கு தெளிவுப் படுத்தி இருக்கிறார்கள்.*

*அல்லாஹ் ஆசிரியர் அவர்களின் கப்ரை பிரகாசமாக்குவானாக! அவர்களை நல்லோருடன் தங்க வைப்பானாக! ஆமீன்!*

---------------------

# பாடம் 108

## பாவத்தில் யாருக்கும் துணை நிற்காதே!

وَمِنْ السُّنَّةِ أَنْ لَا تُعِينَ أَحَدًا عَلَىٰ مَعْصِيَةِ اللّٰهِ وَلَا أُولِي الْـخَيْرِ وَلَا الْـخَلْقَ أَجْمَعِينَ وَلَا طَاعَةَ لِبَشَرٍ فِي مَعْصَيَةِ اللّٰهِ وَلَا تُـحِبَّ عَلَيْهِ أَحَدًا وَاكْرَهْ ذٰلِكَ كُلَّهُ لِلّٰهِ تَبَارَكَ وَتَعَالَىٰ

167. ஸுன்னாவை சேர்ந்த விஷயம் என்னவென்றால், அல்லாஹ்விற்கு மாறுபாடு செய்கின்ற காரியத்தில் நீ யாருக்கும் உதவக் கூடாது; செல்வந்தர்களுக்கும் சரி (-அதிகாரிகளுக்கும் சரி), படைப்புகள் எல்லோருக்கும் சரி பாவங்களில் யாருக்கும் நீ உதவக் கூடாது! அல்லாஹ்விற்கு மாறுபாடு செய்கின்ற விஷயத்தில் மனிதர்கள் எவருக்கும் கீழ்ப்படியக் கூடாது! பாவத்தில் யாரையும் நேசிக்காதே. இவை அனைத்தையும் அருள் நிறைந்த உயர்வுமிக்க அல்லாஹ்விற்காக வெறுத்துவிடு!

## படிப்பினைகள்

*1. அல்லாஹ்வின் மார்க்கத்தில் நமக்கு தெளிவாக வழிகாட்டப்பட்டுள்ளது என்னவென்றால் நாம் அல்லாஹ்வை மட்டுமே அஞ்சவேண்டும். படைப்புகளை அஞ்சக் கூடாது என்பதாகும்.*

*2. இன்னும் எந்த ஒரு செயலையும் அல்லாஹ்வின் கட்டளைக்கு ஏற்ப நபி ﷺ அவர்களின் ஸுன்னாவிற்கு ஏற்ப நாம் செய்ய வேண்டும்.*

3. ஆகவே, நாமும் பாவம் செய்யக் கூடாது. அவ்வாறே நாம் யாருக்கும் பாவத்தில் துணை போகக் கூடாது.

4. ஓர் அரசரின் ஆட்சி, ஒரு அதிகாரியின் அதிகாரம், ஒரு செல்வந்தரின் செல்வம் என எதுவும் நம்மை பாவத்திற்கு தூண்டிவிடக் கூடாது. அல்லது அவர்கள் செய்யும் பாவத்திற்கு நாம் துணை போகக் கூடாது.

5. நன்மைகளை மட்டும் நாம் நேசிக்க வேண்டும். நல்லவர்களை நேசிக்க வேண்டும். நல்லவர்களுடன் நட்பு கொள்ள வேண்டும். தீமையை அறவே நேசிக்கக் கூடாது. தீயவர்களின் தீமைக்கு நாம் துணை நிற்க கூடாது.

இது குறித்த ஆயத்தையும் ஹதீஸையும் பார்ப்போம் :

﴿وَتَعَاوَنُوا عَلَى الْبِرِّ وَالتَّقْوَىٰ وَلَا تَعَاوَنُوا عَلَى الْإِثْمِ وَالْعُدْوَانِ
وَاتَّقُوا اللَّهَ إِنَّ اللَّهَ شَدِيدُ الْعِقَابِ ۝﴾

அன்றி, நன்மைக்கும் (அல்லாஹ்வுடைய) இறை அச்சத்திற்கும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவியாக இருங்கள். பாவத்திற்கும் அத்துமீறுவதற்கும் (அநியாயத்திற்கும்) நீங்கள் ஒருவருக்கொருவர் உதவியாக இருக்க வேண்டாம். அல்லாஹ்வுக்கே நீங்கள் பயப்படுங்கள். ஏனென்றால், நிச்சயமாக அல்லாஹ், வேதனை செய்வதில் மிகக் கடுமையானவனாக இருக்கின்றான். (அல்குர்ஆன் 5 : 2)

நபி ﷺ அவர்கள் கூறினார்கள் :

لا طَاعَةَ في مَعْصِيَةٍ، إِنَّما الطَّاعَةُ في المَعْرُوفِ

பாவத்தில் கீழ்ப்படிதல் இல்லை. கீழ்ப்படிதல் என்பது நன்மையில் மட்டும்தான்.

*அறிவிப்பாளர்: அலீ, நூல் : புகாரி, எண் : 7257*

لَا طَاعَةَ لِمَخْلُوقٍ فِي مَعْصِيَةِ اللّٰهِ عَزَّ وَجَلَّ

*கண்ணியத்திற்கும் கம்பீரத்திற்கும் உரிய அல்லாஹ்விற்கு மாறுசெய்வதில் படைப்புகள் யாருக்கும் கீழ்ப்படிதல் கூடாது.*

*அறிவிப்பாளர் : அலீ, நூல் : அஹ்மது, எண் : 1041*

---------------------

# பாடம் 109

## தவ்பா செய்வதை நிறுத்தி விடாதே!

وَالْإِيمَانُ بِأَنَّ التَّوْبَةَ فَرِيضَةٌ عَلَى الْعِبَادِ أَنْ يَتُوبُوا إِلَى اللهِ عَزَّ وَجَلَّ مِنْ كَبِيرِ الْـمَعَاصِي وَصَغِيرِهَا

168. தவ்பா (-பாவங்களை விட்டு திருந்தி அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு தேடுவது) எல்லா அடியார்கள் மீது கட்டாயமாகும். பெரும்பாவங்கள் மற்றும் சிறுபாவங்கள் எல்லாவற்றிலிருந்தும் விலகி பாவமன்னிப்பு கேட்டு அல்லாஹ்வின் பக்கம் திரும்புவது எல்லா அடியார்கள் மீது கடமையாகும்!

### படிப்பினைகள்

*1. அல்லாஹ்வின் அடியார்களாகிய நாம் அறிந்தோ அறியாமலோ வேண்டுமென்றோ மறதியாகவோ பாவத்தில் வீழ்ந்து விடுகிறோம்.*

*2. நமது வாழ்க்கையே நமக்கும் நஃப்சுக்கும் ஷைத்தானுக்கும் இடையில் போராட்டமாக இருக்கிறது.*

*3. அல்லாஹ்வின் அச்சம், மறுமையின் நினைவு இன்றிருந்தால் நாளை இருப்பதில்லை. காலையில் இருந்தால் மாலையில் இருப்பதில்லை, பகலில் இருந்தால் இரவில் இருப்பதில்லை. சபையில் இருந்தால் தனிமையில் இருப்பதில்லை. இப்படி ஈமானிய பலவீனத்துடன் நாம் வாழ்கிறோம்.*

*4. ஆகவே, நமக்கு இருக்கக்கூடிய ஒரே ஆதரவு பாவமன்னிப்பு தேடுவதும், பாவத்திற்காக வருந்துவதும்தான்.*

5. எல்லா நபிமார்களும் ரஸூல்மார்களும் அல்லாஹ்விடம் எப்போதும் பாவமன்னிப்பு தேடுபவர்களாக இருந்தார்கள். இன்னும் தங்கள் சமுதாயத்தை நோக்கி நீங்கள் பாவமன்னிப்பு தேடுங்கள்! அல்லாஹ் உங்களை மன்னிப்பான் என்று அழைப்பை முன்வைத்தார்கள்.

6. இங்கு இரண்டு அமல்கள் உள்ளன. ஒன்று توبة தவ்பா. மற்றொன்று استغفار இஸ்திங்ஃபார்.

7. توبة தவ்பா என்பது பெரியதாகும். استغفار இஸ்திங்ஃபார் என்பது அதில் உள்ள ஒரு பகுதியாகும்.

8. தவ்பா என்றால் மீளுவது, திரும்புவது, வருந்துவது, என்று பொருள். அதாவது அடியான் தான் செய்த பாவத்தை நினைத்து வருந்தி, அதிலிருந்து விலகி, அல்லாஹ்விடம் மன்னிப்புக் கேட்டு, அல்லாஹ்வின் பக்கம் திரும்பிவிடுதல் இதை தவ்பா என்று கூறப்படும். அதாவது, தவ்பாவில் ஐந்து நிபந்தனைகள் இருக்க வேண்டும்.

1 பாவத்தை விட்டு விலகுதல்

2 பாவம் செய்ததை நினைத்து வருந்துதல்

3 அல்லாஹ்விடம் மன்னிப்பு கோருதல்

4 பாவம் அடியார்கள் சம்பந்தப்பட்டதாக இருந்தால் அவர்களிடமும் அதற்கான பரிகாரம் செய்துகொள்ளுதல்.

5 இனி பாவத்தின் பக்கம் திரும்ப மாட்டேன் என்று உறுதி எடுத்தல்.

9. அல்லாஹு தஆலா நம்மை தவ்பாவின் பக்கம் அதிகம் ஆர்வமூட்டுகிறான். பல வசனங்களில் நமக்கு அல்லாஹ் தவ்பாவைக் கொண்டு கட்டளையிடுகிறான்.

﴿يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا تُوبُوا إِلَى اللَّهِ تَوْبَةً نَصُوحًا
عَسَىٰ رَبُّكُمْ أَنْ يُكَفِّرَ عَنْكُمْ سَيِّئَاتِكُمْ﴾

நம்பிக்கையாளர்களே! நீங்கள் கலப்பற்ற மனதுடன் (பாவத்திலிருந்து விலகி) அல்லாஹ்வின் பக்கம் திரும்புங்கள். உங்கள் இறைவனோ உங்கள் பாவங்களுக்குப் பரிகாரமாக்கி, (மன்னித்து) சுவனபதியிலும் உங்களைப் புகுத்திவிடுவான். (அல்குர்ஆன் 66 : 8)

﴿وَتُوبُوا إِلَى اللَّهِ جَمِيعًا أَيُّهَ الْمُؤْمِنُونَ لَعَلَّكُمْ تُفْلِحُونَ۝﴾

(நம்பிக்கையாளர்களே!) நீங்கள் வெற்றிபெறும் பொருட்டு பாவ மன்னிப்பைக் கோரி அல்லாஹ்வின் பக்கமே திரும்புங்கள். (அல்குர்ஆன் 24 : 31)

10. பல வசனங்களில் தவ்பாவையும் இஸ்திஃபாரையும் இணைத்து அல்லாஹ் கூறுகிறான். முதலில் இஸ்திஃபாரை கூறி, பிறகு தவ்பாவை கூறுவான். அதாவது உங்கள் பாவத்திற்காக அல்லாஹ்விடம் மன்னிப்பு கேளுங்கள்! இன்னும் பாவத்தை விட்டு விலகி, நன்மைகள் செய்து அல்லாஹ்விடம் திரும்பி விடுங்கள் என்பது அதன் பொருளாகும்.

11. இதற்கு உதாரணமாக சில வசனங்களை பார்போம் :

﴿وَأَنِ اسْتَغْفِرُوا رَبَّكُمْ ثُمَّ تُوبُوا إِلَيْهِ﴾

நீங்கள் உங்கள் இறைவனிடத்தில் பாவ மன்னிப்பைக் கோரி (பாவங்களை விட்டு) அவன் பக்கம் திரும்புங்கள்.
(அல்குர்ஆன் 11 : 3)

﴿وَيَا قَوْمِ اسْتَغْفِرُوا رَبَّكُمْ ثُمَّ تُوبُوا إِلَيْهِ﴾

என்னுடைய மக்களே! நீங்கள் உங்கள் இறைவனிடம் பாவ மன்னிப்பைக் கோருங்கள்! பிறகு, (மனம் வருந்தி) அவன் பக்கமே திரும்புங்கள். (அல்குர்ஆன் 11 : 52)

﴿وَاسْتَغْفِرُوا رَبَّكُمْ ثُمَّ تُوبُوا إِلَيْهِ﴾

இன்னும் உங்கள் இறைவனிடம் நீங்கள் மன்னிப்புக் கோருங்கள். பிறகு, (உங்கள் பாவங்களை விட்டு மனம் வருந்தி) அவனிடமே நீங்கள் திரும்புங்கள். (அல்குர்ஆன் 11 : 90)

12. நாம் நமக்காகவும் எல்லா முஃமின்களுக்காகவும் அல்லாஹ்விடம் எப்போதும் இஸ்திஃபார் பாவமன்னிப்புத் தேடிக் கொண்டே இருக்க வேண்டும்.

13. அல்லாஹு தஆலா தனது நபி ﷺ அவர்களுக்கு இப்படி கட்டளை இடுகிறான் :

﴿وَاسْتَغْفِرْ لِذَنْبِكَ وَلِلْمُؤْمِنِينَ وَالْمُؤْمِنَاتِ﴾

இன்னும் (நபியே!) நீங்கள் உங்களுடைய தவறுகளை மன்னிக்கக் கோருவதுடன், நம்பிக்கை கொண்ட ஆண்களுக்கும், பெண்களுக்கும் மன்னிப்பு கோருங்கள்! (அல்குர்ஆன் 47 : 19)

14. மேலும் அல்லாஹ் நமக்கு இப்படி வழிகாட்டுகிறான் :

﴿وَالَّذِينَ جَاءُوا مِنْ بَعْدِهِمْ يَقُولُونَ رَبَّنَا اغْفِرْ لَنَا
وَلِإِخْوَانِنَا الَّذِينَ سَبَقُونَا بِالْإِيمَانِ وَلَا تَجْعَلْ فِي
قُلُوبِنَا غِلًّا لِلَّذِينَ آمَنُوا رَبَّنَا إِنَّكَ رَءُوفٌ رَحِيمٌ ○﴾

எவர்கள் இவர்களுக்குப் பின் வந்தார்களோ அவர்கள், எங்கள் இறைவனே! எங்களையும் நீ மன்னித்தருள்! எங்களுக்கு முன்

நம்பிக்கைக் கொண்ட எங்களுடைய சகோதரர்களையும் மன்னித்தருள்! நம்பிக்கைக் கொண்டவர்களைப் பற்றி எங்களுடைய உள்ளங்களில் குரோதங்களை உண்டு பண்ணாதே! எங்கள் இறைவனே! நிச்சயமாக நீ மிகக் கிருபையுடையவனும், இரக்கமுடையவனுமாக இருக்கின்றாய்! என்று பிரார்த்தனை செய்து கொண்டே இருக்கின்றனர். (அல்குர்ஆன் 59 : 10)

**15.** நபி ﷺ அவர்கள் ஒவ்வொரு நாளும் நூறு முறை இஸ்திஃபார் - பாவமன்னிப்பு கோருவார்கள். ஒரு சபையில் நூறு முறையாவது, அல்லாஹ்வே என்னை மன்னித்துவிடு என்று கூறுவார்கள். மேலும் பாவமன்னிப்பு தேடுவதின் சிறப்பை எடுத்துக் கூறி தமது உம்மத்தை எப்போதும் பாவமன்னிப்பு தேடுவதற்கு ஆர்வமூட்டிக் கொண்டே இருப்பார்கள். இது பற்றிய கூடுதல் விளக்கங்களை ஹதீஸ் நூல்களில் நாம் பார்க்கலாம்.

**16.** ஆசிரியர் அவர்கள் இந்த அமலை கொள்கைப் பாடத்தில் கூறுவதில் ஒரு முக்கிய கருத்து இருக்கலாம். அல்லாஹ் மிக அறிந்தவன். அதாவது, நாம் செயல்களில் உள்ள பாவங்களை அறிகிறோம். அவற்றுக்காக அல்லாஹ்விடம் தவ்பா செய்கிறோம், இஸ்திஃபார் பாவமன்னிப்பு தேடுகிறோம். ஆனால், நமது கொள்கை சார்ந்த, நம்பிக்கை சார்ந்த, ஈமான் சார்ந்த தவறுகளை மறந்துவிடுகிறோம். ஒருவர் நேர்வழி பெற்று வழிகேட்டிலிருந்து மீண்டுவரும்போது தான் வழிகேட்டில் இருந்ததை நினைத்து வருந்த வேண்டும். இனி அந்த வழிகேட்டின் பக்கம் செல்ல மாட்டேன் என்று உறுதி எடுக்க வேண்டும். இது மிக முக்கியமாகும். இன்னும் செயல் சார்ந்த பாவங்கள் ஒரு மனிதனின் ஈமானில் தாக்கத்தை ஏற்படுத்தும். பாவம் செய்வதால் ஈமான் பலவீனமாவதுடன் அது குறைந்துகொண்டே போகும். ஆகவே, அடியான் பாவங்களை விட்டு உடனுக்குடன் தவ்பா செய்து அல்லாஹ்விடம் மன்னிப்பு

கேட்டுவிட வேண்டும். இனி பாவத்தில் வீழ்ந்துவிடாமல் இருக்க அல்லாஹ்விடம் இஸ்திஃபார் - பாவமன்னிப்பு தேடிக்கொண்டே இருக்க வேண்டும். ஒரு முறை தவ்பா செய்துவிட்டாலும் தொடந்து இஸ்திஃபார் செய்துகொண்டே இருக்க வேண்டும். அல்லாஹ்விடம் மன்னிப்பு கோருவதை நிறுத்தி விடக்கூடாது. அல்லாஹ் மிக அறிந்தவன்.

*17.* தவ்பா உடைய வாசல் அல்லாஹ்விடம் எப்போதும் திறந்தே உள்ளது. ஓர் அடியானின் மூச்சு தொண்டைக்குழியை அடையும் வரை அல்லது சூரியன் மேற்கிலிருந்து உதிக்கும் வரை அல்லாஹ் அடியார்களுக்கு தவ்பாவின் வாசலை திறந்தே வைத்திருக்கிறான்.

அல்லாஹு தஅலா கூறுகிறான் :

﴿وَلَيْسَتِ التَّوْبَةُ لِلَّذِينَ يَعْمَلُونَ السَّيِّئَاتِ حَتَّىٰ إِذَا حَضَرَ أَحَدَهُمُ الْمَوْتُ قَالَ إِنِّي تُبْتُ الْآنَ وَلَا الَّذِينَ يَمُوتُونَ وَهُمْ كُفَّارٌ أُولَٰئِكَ أَعْتَدْنَا لَهُمْ عَذَابًا أَلِيمًا۝﴾

எவர்கள் பாவங்களைச் செய்துகொண்டேயிருந்து, அவர்களுக்கு மரணம் சமீபித்தபோது, இதோ நான் (என்) பாவங்களை விட்டுவிட்டேன் என்று கூறுகின்றார்களோ அவர்களுக்கும், எவர்கள் (நம்பிக்கை கொள்ளாது நிராகரித்து விட்டு) நிராகரித்த நிலையிலேயே இறந்தும் விடுகின்றார்களோ அவர்களுக்கும் பாவமன்னிப்புக் கிடையாது. இத்தகையவர் களுக்குத் துன்புறுத்தும் வேதனையைத்தான் நாம் தயார்படுத்தி வைத்திருக்கின்றோம். (அல்குர்ஆன் 4 : 18)

﴿يَوْمَ يَأْتِي بَعْضُ آيَاتِ رَبِّكَ لَا يَنْفَعُ نَفْسًا إِيمَانُهَا

لَمْ تَكُنْ آمَنَتْ مِنْ قَبْلُ أَوْ كَسَبَتْ فِي إِيمَانِهَا خَيْرًا﴾

*உம் இரட்சகனின் அத்தாட்சிகளில் சில அத்தாட்சி வரும் அந்நாளில் அதற்கு முன்னர் விசுவாசங்கொள்ளாதிருந்து அல்லது (விசுவாசங்கொண்டிருந்தும்) அதன் ஈமானில் எந்த ஒரு நன்மையையும் சம்பாதிக்காதிருந்த எந்த ஆத்மாவிற்கும் அது (அந்நாளில்) கொள்ளும் விசுவாசம் (அல்லது நன்மை) யாதொரு பலனையும் அளிக்காது. (அல்குர்ஆன் 6 : 158)*

عَنْ ابْنِ عُمَرَ عَنْ النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ إِنَّ اللهَ يَقْبَلُ تَوْبَةَ الْعَبْدِ مَا لَمْ يُغَرْغِرْ

*நபி ﷺ அவர்கள் கூறினார்கள் : நிச்சயமாக அல்லாஹ் அடியானின் தவ்பாவை அங்கீகரிக்கிறான் அவனது உயிர் தொண்டைக்குழியை அடையாத வரை.*

*அறிவிப்பாளர் : இப்னு உமர், நூல் : திர்மிதி, எண் : 3460*

عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ قَالَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ لَا تَقُومُ السَّاعَةُ حَتَّى تَطْلُعَ الشَّمْسُ مِنْ مَغْرِبِهَا فَإِذَا رَآهَا النَّاسُ آمَنَ مَنْ عَلَيْهَا فَذَاكَ حِينَ ﴿لَا يَنْفَعُ نَفْسًا إِيمَانُهَا لَمْ تَكُنْ آمَنَتْ مِنْ قَبْلُ﴾

*ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள் : மறுமை நிகழாது சூரியன் அதன் மேற்கு திசையிலிருந்து உதிக்கிற வரை. மக்கள் அப்போது அதை பார்த்துவிட்டால் பூமியில் உள்ளவர்கள் எல்லோரும் ஈமான் நம்பிக்கை கொள்வார்கள். ஆனால், அதற்கு*

*முன்னர் ஈமான் கொள்ளாமல் இருந்து அப்போது ஈமான் கொள்வது அந்த ஆன்மாவிற்கு பலன் தராதே (அல்குர்ஆன் 6 : 158) அந்த நேரமாகும் அது.*

*அறிவிப்பாளர் : அபூ ஹுரைரா, நூல் : புகாரி, எண் : 4270*

**عَنْ مُعَاوِيَةَ قَالَ سَمِعْتُ رَسُولَ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ يَقُولُ لَا تَنْقَطِعُ الْهِجْرَةُ حَتَّىٰ تَنْقَطِعَ التَّوْبَةُ وَلَا تَنْقَطِعُ التَّوْبَةُ حَتَّىٰ تَطْلُعَ الشَّمْسُ مِنْ مَغْرِبِهَا**

*ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூற நான் செவியுற்றேன் : ஹிஜ்ரா முடிவுறாது தவ்பா முடிவுறுகிற வரை. தவ்பா முடிவுறாது, சூரியன் அதன் மேற்கிலிருந்து உதிக்கிற வரை.*

*அறிவிப்பாளர் : முஆவியா, நூல் : அபூதாவூத், எண் : 2120*

---------------------

# பாடம் 110

## நபியின் நன்மாராயத்தை ஏற்காதவர் சந்தேகவாதியாவார்!

وَمَنْ لَمْ يَشْهَدْ لِـمَنْ شَهِدَ لَهُ رَسُولُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ بِالْـجَنَّةِ فَهُوَ صَاحِبُ بِدْعَةٍ وَضَلَالَةٍ شَاكٌّ فِيمَا قَالَ رَسُولُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ

169. ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் யாருக்கு சொர்க்கத்தைக் கொண்டு சாட்சி கூறினார்களோ அவர்களுக்கு சொர்க்கத்தைக் கொண்டு யார் சாட்சி கூறவில்லையோ அவர் பித்அத்வாதியும் வழிகேடரும் ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறியதில் சந்தேகிக்கின்றவரும் ஆவார்.

### படிப்பினைகள்

*__1.__ ஸஹாபாக்கள் மீது குரோதம் கொள்பவர்கள் அன்றும் இருந்தார்கள். இன்றும் இருக்கிறார்கள்.*

*__2.__ ஷிஆக்களின் கொள்கைகளில் ஒன்றாவது, ஸஹாபாக்கள் குறித்து வந்துள்ள நற்செய்திகள் அனைத்தும் நபி ﷺ அவர்களின் வாழ்நாளோடு முடிந்துவிட்டது. நபி ﷺ அவர்கள் தாங்கள் பார்த்ததை வைத்து கூறினார்கள். நபி ﷺ அவர்களின் மரணத்திற்கு பின்னர் ஸஹாபாக்கள், மார்க்கத்தை விட்டு வெளியேறி விட்டனர்; பலர், நிராகரிப்பில் சென்று விட்டனர்; பலர், பித்அத்துகள் செய்துவிட்டனர் என்பதாகும்.*

*__3.__ அல்லாஹ் பாதுகாப்பானாக! இது மிகப் பெரிய கேடுகெட்ட*

கொள்கையாகும். இன்று குர்ஆன் ஹதீஸை பேசும் பிஜேவும் அவரை சேர்ந்தவர்களும் இதே கருத்தை ஸஹாபாக்களை விமர்சிக்கும்போது கூறுகின்றனர்.

4. நபி ﷺ அவர்களுடன் ஹிஜ்ரத் செய்த முஹாஜிர்கள் என்று அறியப்பட்ட தோழர்கள் யாரும் மார்க்கத்தை விட்டு வெளியேறவில்லை. இன்னும், அன்சாரிகள் என்று அறியப்பட்ட தோழர்கள் யாரும் மார்க்கத்தை விட்டு வெளியேறவில்லை. நபி ﷺ அவர்களுடன் போரில் கலந்து ஜிஹாது செய்த தோழர்கள் யாரும் மார்க்கத்தை விட்டு வெளியேறவில்லை. நபி ﷺ அவர்களின் இறுதிகாலத்தில் இஸ்லாமை ஏற்ற கிராம அரபிகள் மட்டுமே இஸ்லாமை விட்டு வெளியேறினர். அவர்கள்தான் ஸகாத் கொடுக்க மாட்டோம் என்று மறுத்தனர். அத்தகைய மக்களிடம் சண்டையிட்டு இஸ்லாமை நிலை நிறுத்தியவர்கள் ஸஹாபாக்கள் ஆவார்கள். ஸஹாபாக்கள் எல்லோரும் ஈமானில், இஸ்லாமில் உறுதியாக இருந்தார்கள். குர்ஆனும் ஸுன்னாவும் கூறிய அனைத்து நற்செய்திகளும் அவர்களுக்கு இறுதி வரை உண்டு.

5. அவர்கள் பொதுவாக சொர்க்க வாசிகள் ஆவார்கள். இன்னும் அவர்களில் யாரின் பெயரை குறிப்பிட்டோ அல்லது தன்மையைக் குறிப்பிட்டோ நபி ﷺ அவர்கள் சொர்க்கத்தைக் கொண்டு அவர்களுக்கு நற்செய்தி கூறினார்களோ அவர்கள் எல்லோரும் சொர்க்க வாசிகள் என்று நாமும் சாட்சி சொல்ல வேண்டும். இது நபி ﷺ அவர்களையும் அவர்களின் வாக்கையும் நம்பிக்கைக் கொள்வதின் ஒரு பகுதியாகும். யார் அப்படி சான்று கூறவில்லையோ அவர் நபி ﷺ அவர்களின் கூற்றுகளில் சந்தேகப்படுகிறார் என்று பொருளாகும். ஆகவே,அவர் வழிகெட்டவர் ஆவார். அல்லாஹ் பாதுகாப்பானாக!

**6.** ஹதீஸ் கலை அறிஞர்கள் அனைவரும் தங்கள் ஹதீஸ் நூல்களில் இறுதி பகுதியில் மனாகிப் என்று ஒரு அத்தியாத்தை அமைத்திருப்பார்கள். அந்த அத்தியாத்தில் ஸஹாபாக்கள் குறித்து வந்துள்ள ஹதீஸ்களை விரிவாக தொகுத்திருக்கிறார்கள். கண்டிப்பாக ஒவ்வொரு முஸ்லிமும் அதைப் படித்து ஸஹாபாக்களின் சிறப்புகளை அறிய வேண்டும், அந்த சிறப்புகளுடனும் மேன்மைகளுடனும் நற்செய்திகளுடனும் ஸஹாபாக்களை ஏற்றுக் கொள்ள வேண்டும். இதுவே ஒரு உண்மை முஃமினுக்கு நேர்வழியாகும்.

---------------------

# பாடம் 111

## ஸுன்னாவையும் ஸஹாபாக்களையும் மதித்து நட!

قَالَ مَالِكُ بْنُ أَنَسٍ مَنْ لَزِمَ السُّنَّةَ وَسَلِمَ مِنْهُ أَصْحَابُ رَسُولِ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ ثُمَّ مَاتَ كَانَ مَعَ النَّبِيِّينَ وَالصِّدِّيقِينَ وَالشُّهَدَاءِ وَالصَّالِحِينَ وَإِنْ كَانَ لَهُ تَقْصِيرٌ فِي الْعَمَلِ

170. மாலிக் இப்னு அனஸ் ﵀ கூறுகிறார்கள் : யார் ஸுன்னாவை பற்றிப்பிடித்து, ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களுடைய தோழர்களை குறை பேசாமல் இருப்பாரோ, பிறகு அவர் மரணித்துவிட்டால் அவர் நபிமார்கள், சித்தீக்குகள், ஷஹீதுகள், ஸாலிஹ் -நல்லோருடன் இருப்பார், அவரிடம் அமல்களில் குறை இருந்தாலும் சரியே!

وَقَالَ بِشْرُ بْنُ الْحَارِثِ الْإِسْلَامُ هُوَ السُّنَّةُ وَالسُّنَّةُ هِيَ الْإِسْلَامُ

பிஷ்ர் இப்னுல் ஹாரிஸ் ﵀ கூறுகின்றார்: இஸ்லாம் என்பது ஸுன்னாதான், ஸுன்னாதான் இஸ்லாம் ஆகும்.

وَقَالَ فُضَيْلُ بْنُ عِيَاضٍ إِذَا رَأَيْتُ رَجُلًا مِنْ أَهْلِ السُّنَّةِ فَكَأَنَّمَا أَرَى رَجُلًا مِنْ أَصْحَابِ رَسُولِ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ وَإِذَا رَأَيْتُ رَجُلًا مِنْ أَهْلِ الْبِدَعِ فَكَأَنَّمَا أَرَى رَجُلًا مِنَ الْمُنَافِقِينَ

ஃபுழைல் இப்னு இயாழ் ﵀ கூறுகிறார்: அஹ்லுஸ் ஸுன்னாவை சேர்ந்த ஒருவரை நான் பார்த்தால் ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களுடைய

தோழர்களில் ஒருவரை நான் பார்ப்பது போன்று இருக்கின்றது! அஹ்லுல் பித்ஆ -பித்ஆவாதிகளில் ஒருவரை நான் பார்த்தால் முனாஃபிக் -நயவஞ்சகர்களில் ஒருவரை நான் பார்ப்பது போன்று இருக்கின்றது!

**وَقَالَ يُونُسُ بْنُ عُبَيْدٍ الْعَجَبُ مِـمَّنْ يَدْعُو الْيَوْمَ إِلَى السُّنَّةِ وَأَعْجَبُ مِنْهُ مَنْ يُـجِيبُ إِلَى السُّنَّةِ فَيَقْبَلُ**

யூனுஸ் இப்னு உபைத் ﵀ கூறுகிறார்: இன்று ஸுன்னாவின் பக்கம் அழைப்பவர்களை பார்ப்பது ஆச்சரியமாக இருக்கின்றது. ஸுன்னாவிற்கு பதிலளித்து அதை அங்கீகரிப்பவரை பார்ப்பது அதைவிட மிகவும் ஆச்சரியமாக உள்ளது.

**وَكَانَ ابْنُ عَوْنٍ يَقُولُ عِنْدَ الْـمَوْتِ السُّنَّةَ السُّنَّةَ وَإِيَّاكُمْ وَالْبِدَعَ حَتَّى مَاتَ**

இப்னு அவ்ன் ﵀ தமது மரணத்தருவாயில் இவ்வாறு கூறிக் கொண்டிருந்தார்கள்: ஸுன்னாவைப் பற்றிப் பிடியுங்கள்!, ஸுன்னாவைப் பற்றிப் பிடியுங்கள்! பித்அத்துகளை விட்டும் தவிர்ந்துகொள்ளுங்கள்! இறுதியில் இவ்வாறு கூறியவராகவே அவர் மரணித்தார்.

**وَقَالَ أَحْمَدُ بْنُ حَنْبَلٍ مَاتَ رَجُلٌ مِنْ أَصْحَابِي فَرُئِيَ فِي الْـمَنَامِ فَقَالَ قُولُوا لِأَبِي عَبْدِ اللهِ عَلَيْكَ بِالسُّنَّةِ فَإِنَّ أَوَّلَ مَا سَأَلَنِيَ اللهُ سَأَلَنِي عَنْ السُّنَّةِ**

அஹ்மது இப்னு ஹன்பல் ﵀ கூறுகிறார்: எனது தோழர்களில் ஒருவர் இறந்துவிட்டார். அவரை சிலர் கனவில் பார்த்தார்கள். அவர் கூறினார்: நீங்கள் அபூ அப்தில்லாஹ்விடம் கூறுங்கள்: நீர்

ஸுன்னாவை பற்றிப்பிடிப்பீராக! அல்லாஹ் என்னிடம் கேட்ட கேள்விகளில் முதலாவதாக அவன் ஸுன்னாவைப் பற்றிதான் கேட்டான்.

وَقَالَ أَبُو الْعَالِيَةِ مَنْ مَاتَ عَلَى السُّنَّةِ مَسْتُورًا فَهُوَ صِدِّيقٌ وَيُقَالُ الِاعْتِصَامُ بِالسُّنَّةِ نَـجَاةٌ

அபுல் ஆலியா ﵀ கூறுகிறார்: யார் மஸ்தூர்[46] ஆகவும் ஸுன்னாவில் இருந்த நிலையிலும் இறந்து விடுவாரோ அவர் சித்தீக் ஆவார். இன்னும் கூறப்படுகின்றது: ஸுன்னாவைப் பற்றிப்பிடிப்பதுதான் நஜாத் -பாதுகாப்பாகும்.

## படிப்பினைகள்

*1. இந்த பாடத்தில் நமது சான்றோர் ஸுன்னா குறித்தும் ஸுன்னாவை பின்பற்றுகிற நல்லோர் குறித்தும் கூறிய கருத்துகளை ஆசிரியர் பதிவு செய்திருக்கிறார்கள்.*

*2. அறிஞர்கள் இங்கு கூறிய கருத்துகள் அனைத்தும் குர்ஆன், ஸுன்னாவிலிருந்து அவர்களின் ஆழமான புரிதலாகும்.*

*3. ஒவ்வொரு கூற்றையும் படித்து, சிந்தித்து ஸுன்னாவில் நமது பற்றையும் பிடிப்பையும் உறுதியையும் நாம் அதிகப்படுத்துவோமாக!*

---------------------

46. மஸ்த்தூர் என்பதன் விளக்கம் முன்னர் சென்று விட்டது.

# பாடம் 112

## பித்அத் வாதியுடன் சகவாசம் வைக்காதே!

وَقَالَ سُفْيَانُ الثَّوْرِيُّ مَنْ أَصْغَىٰ بِأُذُنِهِ إِلَىٰ صَاحِبِ بِدْعَةٍ خَرَجَ مِنْ عِصْمَةِ اللّٰهِ وَوُكِلَ إِلَيْهَا يَعْنِي إِلَى الْبِدَعِ

ஸுஃப்யான் சவ்ரி ﵀ கூறுகிறார் : யார் பித்அத்வாதியின் பேச்சை கேட்பாரோ அவர் அல்லாஹ்வின் பாதுகாப்பிலிருந்து வெளியேறி விடுவார். அல்லாஹ் அவரை அந்த பித்அத்தின் பக்கமே சாட்டி விடுவான்.

وَقَالَ دَاوُدُ بْنُ أَبِي هِنْدٍ أَوْحَى اللّٰهُ تَبَارَكَ وَتَعَالَىٰ إِلَىٰ مُوسَىٰ بْنِ عِمْرَانَ لَا تُجَالِسْ أَهْلَ الْبِدَعِ فَإِنْ جَالَسْتَهُمْ فَحَاكَ فِي صَدْرِكَ شَيْءٌ مِمَّا يَقُولُونَ أَكْبَبْتُكَ فِي نَارِ جَهَنَّمَ

தாவூத் இப்னு அபீ ஹிந்து ﵀ கூறுகிறார்: அல்லாஹ், மூஸா இப்னு இம்ரானுக்கு வஹ்யி அறிவித்தான் : நீர் பித்அத் வாதிகளுடன் பழகாதீர்! அவர்களுடன் நீர் பழகி, அதன் காரணமாக அவர்கள் கூறுகின்ற பேச்சுகளில் இருந்து ஏதும் உமது உள்ளத்தில் ஊசலாடினால் நான் உம்மை நரக நெருப்பில் முகம் குப்புற தள்ளிவிடுவேன்.

وَقَالَ الْفُضَيْلُ بْنُ عِيَاضٍ مَنْ جَالَسَ صَاحِبَ بِدْعَةٍ لَمْ يُعْطَ الْحِكْمَةَ

ஃபுழைல் இப்னு இயாழ் ﵀ கூறுகிறார்: யார் பித்அத்வாதிகளிடம் பழகுவாரோ அவருக்கு ஹிக்மா -அறிவு ஞானம் கொடுக்கப்படாது.

وَقَالَ الْفُضَيْلُ بْنُ عِيَاضٍ لَا تَجْلِسْ مَعَ صَاحِبِ بِدْعَةٍ فَإِنِّي أَخَافُ

أَنْ تَنْزِلَ عَلَيْكَ اللَّعْنَةُ

ஃபுழைல் இப்னு இயாழ் ﷺ கூறுகிறார்: நீ பித்அத் வாதியுடன் அமராதே! ஏனெனில், நிச்சயமாக உன் மீது சாபம் இறங்குவதை நான் பயப்படுகின்றேன்.

وَقَالَ الفُضَيْلُ بْنُ عِيَاضٍ مَنْ أَحَبَّ صَاحِبَ بِدْعَةٍ أَحْبَطَ اللّٰهُ عَمَلَهُ وَأَخْرَجَ نُورَ الْإِسْلَامِ مِنْ قَلْبِهِ

ஃபுழைல் இப்னு இயாழ் ﷺ கூறுகிறார் : யார் பித்அத் வாதியை விரும்புவாரோ அல்லாஹ் அவருடைய அமலை நாசமாக்கி, அவருடைய உள்ளத்தில் இருந்து இஸ்லாமின் ஒளியை வெளியாக்கி விடுவான்.

وَقَالَ الفُضَيْلُ بْنُ عِيَاضٍ مَنْ جَلَسَ مَعَ صَاحِبِ بِدْعَةٍ فِي طَرِيقٍ فَجُزْ فِي طَرِيقٍ غَيْرِهِ

ஃபுழைல் இப்னு இயாழ் ﷺ கூறுகிறார்: யார் ஒரு பாதையில் பித்அத் வாதியுடன் சேர்ந்து செல்வாரோ நீ (அவர்களை தவிர்த்து) வேறு ஒரு பாதையில் சென்றுவிடு!

وَقَالَ الفُضَيْلُ بْنُ عِيَاضٍ مَنْ عَظَّمَ صَاحِبَ بِدْعَةٍ فَقَدْ أَعَانَ عَلَىٰ هَدْمِ الْإِسْلَامِ وَمَنْ تَبَسَّمَ فِي وَجْهِ مُبْتَدِعٍ فَقَدْ اسْتَخَفَّ بِمَا أَنْزَلَ اللّٰهُ عَزَّ وَجَلَّ عَلَىٰ مُحَمَّدٍ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ وَمَنْ زَوَّجَ كَرِيمَتَهُ مِنْ مُبْتَدِعٍ فَقَدْ قَطَعَ رَحِمَهَا وَمَنْ تَبِعَ جَنَازَةَ مُبْتَدِعٍ لَمْ يَزَلْ فِي سَخَطِ اللّٰهِ حَتّٰى يَرْجِعَ

ஃபுழைல் இப்னு இயாழ் ﷺ கூறுகிறார் : யார் பித்அத்வாதியை கண்ணியப்படுத்துவாரோ அவர் இஸ்லாமை தகர்ப்பதற்கு உதவி

செய்து விட்டார். யார் பித்அத் வாதியைப் பார்த்து புன்சிரிப்பு சிரிப்பாரோ அவர் முஹம்மது ﷺ அவர்கள் மீது அல்லாஹ் இறக்கியதை இலேசாக, குறைத்து மதித்துவிட்டார். யார் தனது மகளை ஒரு பித்அத்வாதிக்கு மணம் முடித்துத் தருவாரோ அவர் அவளுடன் உள்ள தனது இரத்த உறவை முறித்துவிட்டார். யார் பித்அத்வாதியின் ஜனாஸாவை பின்தொடர்ந்து செல்வாரோ அவர் திரும்ப வருகின்ற வரை அல்லாஹ்வின் அதிருப்தியில் இருப்பார்.

**وَقَالَ الفُضَيْلُ بْنُ عِيَاضٍ آكُلُ مَعَ يَهُودِيٍّ وَنَصْرَانِيٍّ وَلَا آكُلُ مَعَ مُبْتَدِعٍ وَأُحِبُّ أَنْ يَكُونَ بَيْنِي وَبَيْنَ صَاحِبِ بِدْعَةٍ حِصْنٌ مِنْ حَدِيدٍ**

ஃபுழைல் இப்னு இயாழ் ﵀ கூறுகிறார்: நான் ஒரு யஹூதியுடன், ஒரு கிறிஸ்தவனுடன் சாப்பிடுவேன். ஆனால், பித்அத் வாதியுடன் சாப்பிட மாட்டேன். எனக்கும் பித்அத்வாதிக்கும் இடையில் இரும்பு கோட்டை ஒன்று இருக்கவேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

**وَقَالَ الفُضَيْلُ بْنُ عِيَاضٍ إِذَا عَلِمَ اللّٰهُ عَزَّ وَجَلَّ مِنْ الرَّجُلِ أَنَّهُ مُبْغِضٌ لِصَاحِبِ بِدْعَةٍ غَفَرَ لَهُ وَإِنْ قَلَّ عَمَلُهُ وَلَا يَكُونُ صَاحِبُ سُنَّةٍ يُمَالِئُ صَاحِبَ بِدْعَةٍ إِلَّا نِفَاقًا وَمَنْ أَعْرَضَ بِوَجْهِهِ عَنْ صَاحِبِ بِدْعَةٍ مَلَأَ اللّٰهُ قَلْبَهُ إِيمَانًا وَمَنْ انْتَهَرَ صَاحِبَ بِدْعَةٍ آمَنَهُ اللّٰهُ يَوْمَ الفَزَعِ الْأَكْبَرِ وَمَنْ أَهَانَ صَاحِبَ بِدْعَةٍ رَفَعَهُ اللّٰهُ فِي الْـجَنَّةِ مِائَةَ دَرَجَةٍ فَلَا تَكُنْ صَاحِبَ بِدْعَةٍ فِي اللّٰهِ أَبَدًا**

ஃபுழைல் இப்னு இயாழ் ﵀ கூறுகிறார்: ஒருவர் பித்அத்வாதியை வெறுப்பவர் என்பதை அல்லாஹ் அறிந்துவிட்டால் அல்லாஹ் அவரை கண்டிப்பாக மன்னித்து விடுவான், அவருடைய அமல்கள் குறைவாக இருந்தாலும் சரி! ஸுன்னாவை பின்பற்றுபவர் பித்அத்வாதியுடன் ஒத்துப்போகவே மாட்டார். அப்படி

ஒத்துப்போனால் அது நயவஞ்சகமாகத்தான் இருக்கும். யார் பித்அத் வாதியைக் கண்டவுடன் தனது முகத்தை திருப்பிக் கொள்வாரோ அல்லாஹ் அவருடைய உள்ளத்தை ஈமானால் நிரப்பிவிடுவான். யார் ஒரு பித்அத்வாதியை அதட்டுவாரோ பெரும் திடுக்கத்துடைய நாளில் அல்லாஹ் அவரை பயமற்றவராக ஆக்கிவிடுவான். யார் பித்அத்வாதியை இழிவுபடுத்துவாரோ அல்லாஹ் அவரை சொர்க்கத்தில் நூறு படித்தரங்கள் உயர்த்தி விடுவான். ஆகவே, ஒரு போதும், அல்லாஹ்வின் விஷயத்தில் பித்அத்வாதியாக நீ ஆகிவிடாதே![47]

## படிப்பினைகள்

*1. இந்த பாடத்தில் நமது சான்றோர் பித்அத் குறித்தும் பித்ஆவை பின்பற்றுகிற, பரப்புகிற தீயோர் குறித்தும் கூறிய கருத்துகளை ஆசிரியர் பதிவு செய்திருக்கிறார்கள்.*

*2. அறிஞர்கள் இங்கு கூறிய கருத்துகள் அனைத்தும் குர்ஆன், ஸுன்னாவிலிருந்து அவர்களின் ஆழமான புரிதலாகும்.*

*3. ஒவ்வொரு கூற்றையும் படித்து, சிந்தித்து பித்அத்அத்லிருந்து நாம் நம்மை பாதுகாத்துக் கொள்வோமாக!*

*4. பித்அத் என்று இங்கு ஆசிரியர் அவர்கள் கூற வருவது பொதுவாக நமது சிந்தனைக்கு வரும் பித்அத்துகள் மட்டும் அல்ல.*

*5. மவ்லிது, மீலாது, கத்தம், பாத்திஹா ஓதுதல், தர்கா வழிபாடுகள் செய்வது மட்டும் இன்று மக்களின் பார்வையில் பித்அத்துகளாக பார்க்கப்படுகின்றன. மாறாக, பித்அத்துகள் என்பது அவற்றையும் தாண்டி இருக்கின்றன.*

---

47. பித்அத்வாதி என்று இங்கு யாரை குறிப்பிடப்படுகிறது என்றால் அஹ்லுஸ் ஸுன்னா உடைய கொள்கைக்கு மாற்றமான கொள்கைகளை ஏற்று நம்பிக்கை கொண்டு அவற்றின் பக்கம் மக்களை அழைக்கின்றவர் ஆவார்.

*6. இன்று குர்ஆன், ஹதீஸின் பெயரில் உருவான தவ்ஹீது ஜமாஅத் என்ற பிரிவும் இன்னும் அதிலிருந்து பிரிந்த எல்லா பிரிவுகளும் மிகப் பெரிய பித்அத்வாதிகள் ஆவார்கள். அவர்களிடம் இருக்கிற கொள்கை சார்ந்த சிந்தனைகள் பல வழிகேடுகளாகும்.*

*7. முற்காலத்தில் வாழ்ந்த வழிகெட்ட பிரிவுகள் ஒவ்வொன்றிலிருந்தும் பல வழிகெட்ட கொள்கைகளை குடித்து அதிலிருந்து உருவானவர்களே இந்த பிரிவினர் அனைவரும். இவர்களிடம் இருக்கும் சிந்தனை சார்ந்த, கொள்கை சார்ந்த பித்அத்துகள் எத்தனையோ அமல்சார்ந்த பித்அத்துகளை விட மார்க்கத்தில் மிக ஆபத்தானவை ஆகும்.*

*8. இவர்கள் எத்தனை நல்ல பெயர்களை தங்கள் பிரிவுக்கு வைத்துக் கொண்டாலும் இவர்கள் எல்லோரும் பித்அத் வாதிகள், வழிகேடர்கள் ஆவார்கள். இவர்கள் தங்களுக்கு ஜமாஅத் என்று பெயர் வைத்தாலும் இவர்கள் முஸ்லிம்களின் ஜமாஅத்தை விட்டு பிரிந்தவர்கள் ஆவார்கள்.*

*9. நாங்கள் குர்ஆன், ஹதீஸை மட்டும் மார்க்கமாக நம்புகிறோம் என்று சொல்வார்கள். ஆனால், பல ஸஹீஹான ஹதீஸ்களை ஹதீஸே இல்லை என்று கூறி அவை போதிக்கும் கருத்துகளை நம்ப மறுத்துவிடுவார்கள்.*

*10. இவர்கள் ஹதீஸை மறுப்பதற்கு முன் வைக்கும் தத்துவமாவது, ஹதீஸ் குர்ஆனுக்கு முரண்பட்டால், அறிவியலுக்கு முரண்பட்டால், எதார்த்தமான உண்மைக்கு முரண்பட்டால், நடைமுறைக்கு சாத்தியமாக இல்லை என்றால் அந்த ஹதீஸ்கள் எந்த உறுதியான நூலில் உறுதியான தொடருடன் இருந்தாலும் மறுக்கப்படவேண்டியவை என்று முடிவு செய்துவிடுவார்கள். பிறகு அவர்கள் கூறுவதாவது, இந்த அறிவிப்பாளர் தொடரில் யாரோ இதை நபி ﷺ அவர்களின் பெயரில் இட்டுக்கட்டி*

இருக்கலாம். நபி ﷺ அவர்கள் இப்படி சொல்லி இருக்க மாட்டார்கள். ஸஹீஹான ஹதீஸ்களை மறுக்க அவர்கள் கூறும் ஞான தத்துவம் (?) இதுதான்.

அல்லாஹ் நம்மை பாதுகாப்பானாக! ஆமீன்!!

**11.** இவர்களின் இந்த மடத்தனமான, நாத்திகத்தனமான கூற்றுகளை பக்தி பரவசத்துடன் நம்பிக்கை கொள்கிற முட்டாள்கள் கூட்டம் கூட்டமாக இவர்கள் பின்னால் செல்வதை பார்க்கிறோம்.

**12.** அதிகம் சமூக சேவை, பொது சேவை செய்பவர்கள், என்று தங்களை விளம்பரப் படுத்திக் கொண்டு, சமுதாயத்தின் பாதுகாவலர்கள், சமுதாய உரிமைகளை மீட்டெடுப்பவர்கள் என்று தங்களை பீத்திக் கொள்வார்கள். அப்பாவி மக்களை அதன் மூலம் கவர்ந்துவிட்டு, பிறகு தங்கள் விஷம கருத்துகளையும் வழிகெட்ட கொள்கைகளையும் அவர்களுக்கு தூய மார்க்கம் என்ற பெயரில் போதிப்பார்கள்.

**13.** நமது முன்னோர் சான்றோர் யாரும் மார்க்கத்தை சரியாக புரியவில்லை, பல விஷயங்களை அவர்கள் தவற விட்டுவிட்டனர், பல தவறுகளை செய்து விட்டனர், பல வசனங்களையும் ஹதீஸ்களையும் சரியாக புரியவே இல்லை என்று தங்கள் செம்மறி ஆட்டுக் கூட்டத்திற்கு பாடம் எடுப்பார்கள். எல்லா ஹதீஸ்கள் மீதும் சந்தேகத்தை கிளப்பி விடுவார்கள். இவர்களின் வாயிலாக கூறப்படும் ஹதீஸ்கள் மட்டுமே நம்பத்தகுந்தவை என்ற பிம்பத்தை தங்களது முரீதுகளுக்கு நம்ப வைத்து விடுவார்கள்.

**14.** யூதர்களின், கிறிஸ்தவர்களின் இணைய தளங்களை பார்த்துவிட்டு அவற்றில் அவர்கள் ஹதீஸ்கள் மீதுவைக்கும் விமர்சனங்களைக் கொண்டு இவர்கள் ஹதீஸ்களை உரச

ஆரம்பிப்பார்கள். பிறகு நாளுக்கொரு ஹதீஸாக ஹதீஸ்களை மறுக்கவும் கிண்டல் செய்யவும் ஆரம்பிப்பார்கள்.

அல்லாஹ் இவர்களை விட்டும் இவர்களின் வழிகேடுகளை விட்டும் நம்மை பாதுகாப்பானாக! ஆமீன்!!!

---------------------

# குறிப்புகள்

# குறிப்புகள்

# குறிப்புகள்

# DARUL HUDA

Quality Islamic Book Publishers

**மிகவும் நேர்த்தியான முறையில் அச்சடிக்கப்பட்ட குர்ஆன் பிரதிகள் மற்றும் ஆதாரப்பூர்வமான தரமிக்க இஸ்லாமிய நூல்கள்.**

**INDIAN BANK | DARUL HUDA** | A/C No: **6724227449**,
IFS Code : IDIB000M016, Branch : Mannady

## அல்குர்ஆன்

3. அல்குர்ஆன் அரபி (Executive Hard bound, Paper 40gsm, Size 14x21cm)
4. அல்குர்ஆன் அரபி (Executive Hard bound, Paper 60gsm, Size 18x24cm)

## அல்குர்ஆன் தமிழாக்கங்கள்

1. தர்ஜமதுல் குர்ஆன் பி அல்தஃபில் பயான் (Hard Bound 48 gsm)
2. தர்ஜமதுல் குர்ஆன் பி அல்தஃபில் பயான் (Hard Bound 60 gsm)
3. புகழ்மிகு குர்ஆன் போற்றத்தகு தமிழாக்கம் (Hard Bound)
4. மகத்துவமிகு குர்ஆன் மாண்புமிகு தமிழாக்கம் (Hard Bound)
5. தெளிவுமிகு குர்ஆன் தெவிட்டாத தமிழாக்கம் (HB 28 gsm, 18x12cm)
6. மேன்மைமிகு குர்ஆன் எளிமைமிகு தமிழாக்கம்
7. இறைவேதம் அல்குர்ஆன் தமிழாக்கம் (Soft Bound)
8. சங்கைமிகு குர்ஆன் சிறப்புமிகு தமிழாக்கம் (Hard bound)
9. கண்ணியமிகு குர்ஆன் இனிமைமிகு தமிழாக்கம் (Soft Bound)
10. உயர்வுமிகு குர்ஆன் உன்னத தமிழாக்கம் (Hard Bound 28 gsm)
11. அல்குர்ஆன் சொல்லுக்குச் சொல் தமிழாக்கம் - பாகம் 1
    (அல் பாதிஹா (01) முதல் அத் தவ்பா (9) வரை)
12. அல்குர்ஆன் சொல்லுக்குச் சொல் தமிழாக்கம் - பாகம் 2
    (சூரா யூனுஸ் (10) முதல் அல் அன்கபூத் (29) வரை)
13. அல்குர்ஆன் சொல்லுக்குச் சொல் தமிழாக்கம் பாகம் 3
    (சூரா அர்ரூம் (30) முதல் அந்நாஸ் (114) வரை)

14. அல்குர்ஆன் சொல்லுக்குச் சொல் தமிழாக்கம் (அம்ம ஜுஸ்வு)

15. அல்குர்ஆன் சொல்லுக்குச் சொல் தமிழாக்கம் (ஆலு இம்ரான்)

# தமிழ் புத்தகங்கள்

1. தொழுகை முறை
2. நோன்பு
3. ஹிஜாப் - முஸ்லிம் மங்கையரின் மேன்மை
4. அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ கொள்கைகள்
5. அழைப்புப்பணி - அழைப்பாளர்
6. திருமண வாழ்த்து, காலை மாலை திக்ருகள், இஸ்திகாரா துஆ
7. ஸகாத் - வழிமுறைகள், சட்டதிட்டங்கள்
8. இறுதிப் பேருரை (முழுத் தொகுப்பு)
9. இஸ்லாமியக் கொள்கை. வினா - விடைகள்
10. தடுக்கப்பட்டவை
11. இறைநெறி கூறும் இயற்கைக் கடமைகள்
12. அல்குர்ஆன் துஆக்கள்
13. குர்ஆன் ஹதீஸ் கூறும் பிரார்த்தனை
14. நம்பிக்கையின் அடிப்படைகள்
15. இல்லங்களை அச்சுறுத்தும் அபாயங்கள்
16. இஸ்லாமிய ஒளியில் குழந்தை வளர்ப்பு
17. மூன்று அடிப்படைகள்
18. அலட்சியமாகக் கருதப்படும் ஆபத்தான குற்றங்கள்
19. தஃலீமுல் குர்ஆன் (தஜ்வீது வழிகாட்டி)
20. அத்தவ்ஹீத்
21. அன்றாடம் கடைப்பிடிக்க 1000 சுன்னத்துகள்
22. வெற்றிக்கு வழி
23. அழைப்புப் பணி கேள்வி-பதில்
24. உம்ரா வழிகாட்டி (ஆர்ட் பேப்பர் 18x12 cm)
25. அழகிய துஆக்கள் மற்றும் ருக்யாக்கள் (10.5x14 cm)
26. முன்மாதிரி முஸ்லிம் குடும்பம்
27. இயற்கை மதம்
28. ஹிஸ்னுல் முஸ்லிம் (மஸ்னூன் துஆக்கள்)
29. இஸ்லாமின் இறைக்கோட்பாடு
30. மீளாப்பயணம் (ஜனாஸாவின் சட்டங்கள்)
31. இப்னு தைமிய்யா வாழ்க்கை வரலாறு
32. முன்மாதிரி முஸ்லிம்
33. ஹிஸ்னுல் முஸ்லிம் (21x14 cm)
34. ஹஜ். உம்ரா வழிகாட்டி

35. அழகிய துஆக்கள் மற்றும் ருக்யாக்கள் (21x14 cm Single Colour)
36. தப்சீர் முதல் ஜுஸ்வு
37. முன்மாதிரி முஸ்லிம் பெண்மணி
38. அர்ரஹீக் அல்மக்தூம் (18x24 cm)
39. அழகிய துஆக்கள் மற்றும் ருக்யாக்கள் (14x21 cm Full Colour)
40. இறைமார்க்கம் இறைவேதம் ஓர் அறிமுகம்
41. இஸ்லாம் நீங்கள் அறியவேண்டிய மார்க்கம்
42. சான்றோர்கள் பாடசாலை (பாகம் 1)
43. இறைவனுக்கு உருவம் கொடுக்க முடியுமா?
44. கவலைப்படாதே!
45. இயேசுவின் அழைப்பு
46. ஒரு தெய்வமா? பல தெய்வமா?
47. வஸிய்யத்தீ
48. ரஹ்மத்தான ரமழான்
49. இஸ்லாமிய சிறப்பு கல்வி வகுப்பு
50. உலக முடிவு
51. இறைத்தூதரின் தூய வரலாறு
52. அல்குர்ஆன் பாக்கியம் நிறைந்த வேதம்
53. தூய திருகலிமா
54. அத்தஹாரா - தூய்மை - ஃபிக்ஹ்
55. தொழுகை - ஃபிக்ஹ்
56. ஸகாத் - ஃபிக்ஹ்
57. ஹஜ் - ஃபிக்ஹ்
58. நோன்பு - ஃபிக்ஹ்
59. இல்முத் தஜ்வீத்
60. இஸ்லாமில் சொத்துரிமை சட்டங்கள்
61. நபியவர்களின் சரியான தொழுகை முறை
62. முஸ்லிம் பெண்மனியின் நற்குணங்கள் பகுதி 1
63. லும்அத்துல் இஃத்திகாத்
64. ஹதீஸ் கலை இமாம்களின் கொள்கை
65. ஷர்ஹுஸ் ஸுன்னா - பர்பஹாரி
66. உஸுலுஸ் ஸுன்னா - அஹமது இப்னு ஹன்பல்
67. அல் அகீததுல் வாஸிதிய்யா - இப்னு தைமிய்யா
68. அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ கொள்கை - உஸைமீன்
69. அல்குர்ஆன் விரிவுரையின் சில அடிப்படைகள் - உஸைமீன்
70. அல்மத்கல் - விரிவான கொள்கை விளக்க நூல்

# ENGLISH BOOKS


1. The Ideal Husband & The Ideal Wife
2. 33 Ways Developing Inner Fear
3. 40 Guidelines & Dangers That Threaten
4. Situations & Questions - Answers
5. Prohibited & Problems And Solutions
6. Aqeeda Attawheed
7. The True Message of Jesus Christ
8. Fortification of The Muslim
9. Funeral Rites In Islaam
10. Explanation of Aayat Alkursi
11. Gateway To Arabic, Starter Book, (1-5 Parts) each book
12. Search for Happiness
13. What Must Be Known About Islaam?
14. The Sunnah Out Spread Flags of...
15. The Book of Tawheed
16. The Ideal Muslim
17. Ideal Muslimah
18. Noble Quran in The English Language
19. Arraheeq Al Makhtoom
20. About Islam
21. Glorious Quran
22. Precious Invocations and Ruqyas (21x14 cm)
23. Dua and Ruqya from Quran and Sunnah (10.5x14 cm)
24. The Quran with English Meanings and Notes
25. English Meanings and Notes of The Quran

----------------------




அல்குர்ஆனை எளிதில் புரிந்து ஓதிட
மூன்று பாகங்களாக வெளிவந்து விட்டது

# ஞானமிகு குர்ஆன்
# சொல்லுக்குச் சொல்
# தமிழாக்கம்



﴿ اياتها ٧ ﴾ ﴿ (١) سُورَةُ الفَاتِحَةِ مَكِّيَّةٌ (٥) ﴾ ﴿ ركوعها ١ ﴾

1. அல்ஃபாதிஹா - தோற்றுவாய் (மக்கீ 5) வசனங்கள்: 7

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝

| | | | |
|---|---|---|---|
| الرَّحِيْمِ ۝ | الرَّحْمٰنِ | اللهِ | بِسْمِ |
| பேரன்பாளன் | பேரருளாளன் | அல்லாஹ்வின் | பெயரால் |

பேரருளாளன் பேரன்பாளன் அல்லாஹ்வின் பெயரால்..

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۝١ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝٢ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۝٣

| | | | |
|---|---|---|---|
| الْعٰلَمِيْنَ ۝١ | رَبِّ | لِلّٰهِ | اَلْحَمْدُ |
| அகிலத்தார்களின் | இறைவன் | அல்லாஹ்விற்கே | புகழ் |
| يَوْمِ الدِّيْنِ ۝٣ | مٰلِكِ | الرَّحِيْمِ ۝٢ | الرَّحْمٰنِ |
| நாளின்/கூலி | அதிபதி | பேரன்பாளன் | பேரருளாளன் |

1. 2. 3. புகழ் (அனைத்தும்) அகிலத்தார்களின் இறைவன், பேரருளாளன், பேரன்பாளன், கூலி நாளின் அதிபதியாகிய அல்லாஹ்விற்கே (உரியது)!

اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ۝٤

| | | | |
|---|---|---|---|
| نَسْتَعِيْنُ ۝٤ | وَاِيَّاكَ | نَعْبُدُ | اِيَّاكَ |
| உதவி தேடுவோம் | (இ) உன்னிடமே | வணங்குவோம் | உன்னையே |

4. உன்னையே வணங்குவோம், உன்னிடமே உதவி தேடுவோம்.

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۝٥

| | | | |
|---|---|---|---|
| الْمُسْتَقِيْمَ ۝٥ | الصِّرَاطَ | نَا | اِهْدِ |
| நேரான | பாதையில் | எங்களை | நேர்வழி நடத்து |

5. நேரான பாதையில் எங்களை நேர்வழி நடத்து!

பாகம் 1
அல்பாதிஹா (1)
- அத்தவ்பா (9)

பாகம் 2
யூனுஸ் (10) -
அல்அன்கபூத் (29)

பாகம் 3
அர்ரூம் (30) -
அந்நாஸ் (114)

வெளியீடு


## தாருல் ஹுதா

*தரமிக்க இஸ்லாமிய நூல் வெளியீட்டாளர்கள்*

போன்: **044 25247866, 98401 74121**
darulhuda.chennai@gmail.com www.darulhuda.net

புது எண்: 211 (102), முதல்மாடி, லிங்கித் தெரு, மண்ணடி, சென்னை 01.

# சான்றோர் பாடசாலை




- நமது சான்றோர் வாழ்வை நம் கண் முன் நிறுத்துகிறது.
- அல்லாஹ்விற்காக வாழ்ந்தவர்களின் வரலாற்றைப் படம் பிடித்துக் காட்டுகிறது.
- குர்ஆனும் சுன்னாவும் செய்த புரட்சியில் உருவான ஒரு சமுதாயத்தை நமக்கு அடையாளப்படுத்துகிறது.
- மறுமையை மறக்காத மகான்களின் வாழ்க்கையை எதார்த்தமாக நமக்கு வருணிக்கிறது.
- ஈமானிய உணர்வுகளையும் உள்ளச்சத்தையும் உலக பற்றின்மையையும் அதிகப்படுத்தி, மறுமைக்காக வாழவேண்டும் என்ற மன உறுதியை ஏற்படுத்துகிறது.
- அவசியம் படியுங்கள்! பரப்புங்கள்!

BUY NOW
RS. 100/-

Size
14x21.5 cm
Pages
304
Softbound

**இமாம் அஹ்மது இப்னு ஹன்பல் அறிவிக்கின்ற இமாம் ஹஸன் பசரி அவர்களின் கூற்றுகள்**

Published by:

**DARUL HUDA**
QUALITY ISLAMIC BOOK PUBLISHER
# 211(102), 1st Floor, Linghi Street, Mannady, Chennai-600001.
Phone : +91-44-25247866, | darulhuda.chennai@gmail.com
Mobile : +91-98401 74121 | www.darulhuda.net